[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]


T.D.R.C. NO. 1226

R.R. NO 1 / 3-1877

Q7w
M77

115039

1226
1/3-1877

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.
மஹாபெருமைபொருந்திய அரபிதேசத்தைச்சார்ந்த
எமன்நகரத்தை இராஜரீகஞ்செய்திருந்த
ஹாத்திம்-பின்-தை அவர்கள்
சரித்திரமாகிய

# ஆராயஷி மஹபில்

என்னும்

# ஹாத்திம்தையுடையகிஸ்ஸா.

இஃது,
தஞ்சைமாநகரத்தைச்சார்ந்த தோம்பே ண்டு
மிர்சா-சுல்த்தான் அப்துல்காதிர்சாகிபவர்கள்
பௌத்திரரும், மீராசாகிபவர்கள் புத்திரருமாகிய
ஹக்கீம்

## முஹம்மது இஸ்மாயீல்சாயபு

அவர்களால்
ஷை ஹிந்திகிதாபை சகலருமறிந்துணரும்படிக்கு
தமிழில்மொழிபெயர்த்து
மஹாகனம்பொருந்திய ம-ா-ா-ஸ்ரீ
பொலீஸ்கமிஷனர்

## இராமச்சந்திரராவ் அவர்களும்

மஹாகனம்பொருந்திய-ம-ா-ா-ஸ்ரீ. ரங்கோன்
முநிசெகூர்த்திசியாரவர்கள் சகோதரர்

## கிருஷ்ணசுவாமி முதலியார்

அவர்களும்
ஆகிய இவ்விருவர் சம்மதிப்படிக்கு
க-வெ-ஆயமுகமதுலெப்பாரான்-பரிசோதித்து
ஷை ஹக்கீம்முஹம்மது இஸ்மாயீல் சாகிபவர்களது
இஸ்லாமியாவிளக்கவச்சுக்கூடத்தில் பதிப்பித்தது
ஹிஜறத்து-க௨௯௪ ௵-றபியுல்ஆகிர்
இங்கிலீஷ்-க௮௭௭ ௵-மேயீ.
சென்னபட்டணம் மாதுல்கான் தெரு
அப்புமேஸ்திரிவீடு(நெ-௯௩)க்கிலச்சுக்கீடு.

REGISTERED COPY RIGHT

சட்டம்.

# இந்த ஆராய்ஷ்மஹபில் என்ற ஹராத்திம்மதையுடையகிஸ்ஸா.

இதை அச்சிற்பதிப்பித்த ஹக்கீம்-முகம்மதுஇஸ்மாயீல் சாஹெப்அவர்கள் அனுமதியின்றி அச்சிற் பதிப்பிக்கின்றவர்களும், அதைப் பதிப்பித்த அச்சுக்கூடத் தலைவர்களும், ௧௮௬௮-ஆல- ஜனவரி-௴-௨௰௨-யிற்பதிப்பித்த கனம்பொருந்திய கவரன்மெண்டு கெஜட் என்னும் பத்திரிகையில் ௧௮௬௭- ஆல-த்து-௨௰-வது. ஆக்டிற்கூறியபடியாரால்வழக்கிடப்படும்நஷ்டத்திற்கும் உத்தரவாதிகளாகக்கடவரென்றியாவரு மறிவீர்களாக.

## புத்தக அறிக்கை.

இதனால் சகலருக்கும் அறிவிப்பதியாதெனில் பொம்பாயிலிருந்து பாரிசுதேசத்தார் சென்னப்பட்டணம் கோட்டை மயிதானத்தில் விசாலமுள்ள பந்தல்போட்டு உபகாரியாகிய ஹாத்திமுடைய புண்ணியசரித்திரத்தை யாவரும் விநோதமாய்ப்பார்த்து சந்தோஷமடையும்படி வேஷம்போட்டு இரவு - க- க்கு-டிக்கட்டுகளுக்காக ரூபா-௧-௨-௩-௪-கொடுத்துப்பார்த்திருப்பார்கள் அச்சரித்திரத்தல் ஆயிரத்திலொருபாகமாவதுஆடியிரார்கள் ஆகையால் அநேகர் பார்த்திருந்தும் வரன்முறையாய் அறிந்திரார்கள் ஆகையால் இச்சரித்திரம் ஹிந்துஸ்தானியிலிருந்துதமிழில்ஆதியோடந்தமாயச்சிட்டிருப்பதால் அதை வாசிக்க விருப்பமுள்ளவர்கள் புத்தகம்-க-க்கு-ரூபாய்-௨-கொடுத்து வாங்கிபடிப்பார்களானால் அச்சரித்திரத்தால்அதிகமனமகிழ்ச்சியடைவார்களென்று நம்புகின்றேன் இச்சரித்திரம்தமிழ்மார்க்கத்திலில்லை நம அமார்க்கத்தில் மேன்மையான்சரித்திரமென றறியவும்.

இங்ஙனம்.
ஹக்கீம்
முஹம்மதுஇஸ்மாயீல்
சென்னப்பட்டணம் மாபூஸ்கான்
தேவடி அப்பு செட்டிதெருவு(நெ. ௩௰)
நம்பர்வீடு.

பிஸ்மில்லாஹிற்றஹ்மானிர்றஹீம்.

## கடவுள்வாழ்த்து.

வெண்பா.

சீராயுலகெங்குஞ் சிறந்தேகிநைந்தவனே
பேராற்பெரிய பெரும்புகழோய்- நேராய்
ஒப்புமையில்லா துற்றவனே ஹாத்திம்கதைத்
தப்பிலாதியுணாக்கத் தான்.

எழுசீரடி விருத்தம்.

ஆதியேயொளியே யனைத்துயிர்க்குயிரே யந்தமுமாதியுமில்லானே, மாதனமுழுது மற்றவையனைத்துமன்றுகொண்டதுபோல வமைத்து, நீதமுநெறியாயுலகினைப்பாலும் நிர்மலநிச்சயப்பொருளே, கோதிலாதவனே மறையினுக்கடங்காக்கொற்றவன் திருத்தாளைப் போற்றி. (க)

மதிப்பினுக்கடங்காப்பேரொளியாகியனைத்துமற்றதனுக்குமெட்டா, சிதைவிலாத்துறந்தோரிதையமீதிருக்குந்திருவினுந்திருவதாய்ச்சிறந்து, உதையமுமிக்காட்சிகள்பெருகிழப்பினுக்கிறவாமையில்லானே, விதவிதமாகவல்லுயிரனைத்தும்விரும்பியபொருளினைப்போற்றி. (உ)

இன்பமுந் துன்பமிறப்புடன் பிறப்புமிறில்லாப் பெருந்தவப் பொருளே, அன்புடனுலகிலவனுநினைத்துநிதமு மாசையற்றவர்களின்பொருளே, துன்புறுநர்கள்மனமிடை தவிர்க்குந்துய்யனே யேயலாதுளதோ, கன்மமற்றெவையு மகற்றியேகாக்கும் காரணக்காட்சியேபோற்றி. (௩)

மன்னர்க்குமன்னாய் மிசிலத்தரசாய் மனமுமைதரித்திடுமரசே, இன்னிலமீதில் யாவர்க்கு மமுதமிருக்கும் பெருந்தவப்பொருளே, வின்னமொன்றணுகாரவரவர்க்கிசைந்த மேன்மைத்தன்மையுமிதயாய், என்றிலாதழுந்தேயிருந்தினைப்பயனுமிந்திடு மிறைவனேபோற்றி.

கருவினிற்பிண்க ளனைத்தைபுங்காத்துக் காரணவுருவமதாகித், திருவருளதனால்வலகினிற்பிறக்கச்செய்தவனியலாதுளதோ, பெருவுடித்துயாவையுங்காத்துப் பேரின்பவழியினிற்றொடர, அருமையுற்றவுயிர்களினுக்குமுறுதினைமுன்னேயேபுகழ்வாம். (௪)

## [illegible]நபீநாயகம் இன் புகழ்ச்சி.

ஆதம் [illegible] நபி [illegible] லன்புற்றவாமிறைக் [illegible] கெப்ப, திலாதொளிவாய் [illegible] போற்றஜெகமீதில்தின்பயிர் விளங்க, [illegible] பொருளாம் மக்கமாநகரில் மணிமுடிதரித்தகல [illegible] வே, வேத நாயகமாய் நபிகள்மறவர்க்கு [illegible] விளங்கிய முஹம்மதே போற்றி. (க)

காரணக்கடலாய்மனுவுருவெடுத்துக்கண்கொளாக்காட்சிகள்பலதும், தரணிமுழுதும்குபிர்வினைக்கற்றித்தன் கலிமாவினைப் பூணி, சிருடன்தினைப்பயிர்செய்துவிளைந்து ஜெகமெலாம் [illegible] பெருக, அணைமாலேபுயமீதில்தரித்தஅஹமதுமுஹம்மதே போற்றி. (உ)

அவ் அஹ்மதுகளன்பியாவவுலியாவாலிம்களுலமாக்கள்தமையும், செம்மையாய்த்தீனைஇருந்திய பெரியோர்களுக்கு மஷாயிக்குகள்தமையும், உண்மையதான கவிவாணர்தமையுமுள்ளகத்தினில் போற்றி, இன்பமுமறிவ் [illegible] பன்மொழியறியாஇருமாமி [illegible] தன்மொழியே. (ங)

வசனம் - ஆதி.

சகலலோகத்தையும் படைத்த அருகின்ற ஆதியாகிய [illegible] ரக்குசுபஹானஹுவதஆலாவே உன்னுடைய அடிமைக்கு அடிமையான அடியானிய ஹக்கீம்முஹம்மதுஇஸ்மாயீல்ஹாத்திமுடையசரித்திரத்தை யெழுதுகிறபடியால்யாதொருகுற்றமும் [illegible] இங்கஹும் கேட்டு [illegible] ஆத்திக்கொண்டு இச்சரித்திரம் நிறைவேறும்படிக்கு உதவிசெய்வாயாகவும்.

## அவையடக்கம்.

மிகாகனம்பொருந்திய கவிவாணர்களும் மற்றதமிழ் [illegible] விவேகசாலிகளும் கற்றுணர்ந்த நல்லோர்பெரியோர்கள் [illegible] யாதொருகல்வியும்விவேகமில்லாத (ஹக்கீம் இஸ்மாயீல்) என்பவன் ஹாத்திமுடையசரித்திரத்தைஹிந்துஸ்தானியிலிருந்ததைத் தமிழ்மொழிபெயர்த்துதமிழ்ப்பாஷையறிந்தவான்கள்கேட்டுமிகுந்தசந்தோஷமு மகிழ்ச்சியும் பூரிப்புமடையும்படிக்கு வசனமாகயெழுதினபடியால் இதில்யாதொரு சொற்குற்றம் எழுத்திக்குற்றமிருக்குமாகில் இந்த அடியான்பேரில் மிகுந்த கிருபைவைத்து [illegible] திருத்திவைக்கும்படிக்குக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆமீன்.

[illegible]

பிஸ்மில்லா ஹிர்றஹுமா னிர்றஹீம்.

## சிறப்புப்பாயிரம்.

(நிலைமண்டில ஆசிரியப்பா.)

ஆரமினைச்சேர்ந்த ஆனையமன்தனில்
[illegible]பொருந்திய பிரபல்லியபாதுஷா
[illegible]யென்போன்ற சத்தியவிவேகன்
ஹாத்திமென்போர் அன்னியர்க்காக
வேதனைத்துன்பம் விதவிதமாகவும்
ஆதியினாருளா லவர்பட்டகோலம்
மேதினியோருவரால் விளம்பக்கூடுமோ
மாதவர்முன்னோன் மதத்துவத்தமை[illegible]
[illegible]பொதென்ற சார்க்கசேரத்தில்
[illegible]பெருமைபண்ணுனர்
[illegible]சவுள் [illegible]கொவைத்திருந்தனர்
[illegible]மொழி [illegible]
குறையில்லாமல் கூறுகிறதல்லு
எத்திசை [illegible] பிரபமதாக
போற்றியபுருஷ [illegible]
சத்தியமாகத் தான் [illegible]
உத்தமதாக [illegible]யிலே
பத்திரமொன்று பாகுடனெழுதி
கட்டினுள்வாசற் படியினிவ்விதம்
வீட்டின்முன்றலை [illegible]கவே
படமொன்றெழுதிப் பாகுடன்கட்டினுள்
திடமாகநாற்றிசைச் [illegible]மையிலுள்ளோர்
அம்மொழியறிந்து [illegible]
செம்மையதான தேசத்திலுள்ளவர்
ஹாதம் [illegible]
நிசத்தையறியாமல் [illegible]
மன் [illegible] மறுவெண்ணக்கூடுமோ
கண்டுறைநா [illegible] கண்டுமயங்கியே
[illegible]

## சிறப்புப்பாயிரம்.

திருடவிம்மொழி சிறப்பினையறிந்து
ராசமாதாவேனும் அழகினைக்கேட்டு
விசனமுடனே விகாரமடைந்து
ஓவியன்றனைக்கூவி ஓதுவானப்போ
பாவினையுள்ள ஹசன்பானுவின் ரூபத்தை
நீவிடுயெழுதிக் காட்டுவையாகில்
வேண்டியசொர்னம் விலாங்களிப்பேனென
அம்மொழிகேட்டு ஆனவோவியன்
செம்மையுடனே சென்றுஷாஆபாதினில்
பெண்ணாளைக்கண்டு பிரியத்துடனே
கண்ணால்பார்த்துக் காண்போர்வியப்புற
படமொன்றெழுதி பார்த்திபன்றனக்கு
திடமுடனெழுது சேர்ந்தயிந்தனன்
அசன்பானுவி னழகினைக்கண்டு
விசனமடைந்து பேச்சுருவாகி
தன்னைமறந்து தான்தடுமாறியே
அன்னஆகாரம் யாதொன்றுமருந்தாமல்
ஹசன்பானுவி னாசைபெருகியே
மோசமதாக முனீர்ஷாமியென்பவன்
தன்னகர்விட்டு ஷாஆபாதினில்
உண்மையதான ஊர்வந்துசேர்ந்து
ஹசன்பானுவி னருகினிற்சார்ந்து
திசைபெற்றசவாலின் சேதியையறிந்து
மறுமொழிகூறாமல் மன்னவரிருக்க
பெருங்கோபங்கொண்டு சிந்தையசன்பானு
முனீர்ஷாமியென்போன் மூடனிவனென
அன்னகர்விட்டு அப்புறமகற்றினன்
காடுவனங்களில் கதறிக்கதறியே
வாடியுருகி மண்ணிற்கிடந்தவன்
தேடித்தேடியே ஹசன்பானுவின்சிந்தையால்
பாடிப்புலம்பிப் பதைத்துத்திரிந்தவன்
எங்குந்திரிந்து எமன்காடுசென்றவன்
தங்கியோர்மரத்தின்கீழ் தான்சத்தமிட்டவன்
மண்ணினைவாரிச் சிரசினிற்போட்டு

## சிறப்புப்பாயிரம்.

வுண்ணிலாப்பெருமூச் சிட்டுஅலறி
சத்தம்போட்டு முனீர்ஷாமியென்பவன்
சித்தங்கலங்கித் திகைத்துப்புலம்பியே
கண்ணைத்திறவாமல் கடுங்கானமீதினில்
பெண்ணினாசையால் சத்தம்போட்டிருந்தனன்
காத்தின்வேகம்போல் கானகமீதினில்
ஹாத்திம்வேட்டை யாடிவருகையில்
சத்தத்தைக்கேட்டு தான்வந்தடுத்து
மத்துமவன்மொழி மன்னவரறிந்து
முனீர்ஷாமிமீதில் மூற்றுமிரக்கமாய்
இனியமுகாதீர் இறையவனருளால்
கொண்டகருத்தைக் குறையாமல்யானும்
சென்றுஹசன்பானுவை சேர்ப்பேனுனக்கென
பட்டணமென்ற ஷாஆபாதினில்சென்று
சட்டமாகஹசன் பானுவின்சவால்களை
ஹாத்திமானவர் அன்புடன்கேட்டு
சித்தமகிழ்வுடன் ஜெயம்பெற்றவன்தன்னை
ஹசன்பானுதம்மையுமனமுனீர்ஷாமிக்கு
நிசமாய்விவாக நேர்ப்படச்செய்ததால்
ஹாத்திமானவர் அரும்பாடுபட்டதை
யேத்திப்புகழ்ந்து எழுதுவளதோ
இவ்வுலகத்தினி லிருந்துபிறந்தவர்
செவ்வையதானேன் ஹாத்திம்கீர்த்திதான்
உலகுள்ளளவுமினு முத்தமன்கீர்த்தி
நிலைபெறவெங்கு நிறைந்திருக்கின்றதனை
அன்னியர்க்காக அவர்செய்ததன்றிபோல்
இன்னிலந்தன்னி லினிபிறப்பாருண்டோ
ஹாத்திம்சரித்திர மானதைக்கேட்டு
பாத்திரவான்கள் பண்புற்றுணர்ந்துதான்
தாழ்வானலோகம் தம்மையேநம்பி
வாழ்க்கைசதமென்று மண்ணிலிறந்தோர்கள்
எண்ணிடக்கூடுமோயிலக்கத்துக்கடங்குமோ
கண்ணாலபார்த்தால் காணுங்கனவென
அசைந்தடைந்து ஹாத்திமைப்போல

# அட்டவணை.


| சவால்களின் குறிப்பு. | பக்கம். |
|---|---|
| பேதாருக்கரத்தில் இருந்துவந்த பாத்துஷா வின்மகள் சொல்லுகின்ற மூன்று சவால் களின்பாபு | ௱௬ |
| மூன்றாவது சவால்.—ஹாத்திமென்பவர் புறப்பட்டுப்போய் அச்சங்கதியினுடைய செய்தியை அறிந்துவருகிறதாவது யாதாமொருவருக் நந்நன்மைசெய்தால் அதுவே அவனு க்குத் துடருமென்றவரலாற்றின்பாபு | ௱௫௰ |
| நான்காவது சவால்.—ஹாத்திமானவர் பிரயாணப்பட்டு மெய்சொல்லப்பட்டவனுக்கு எப்பொழுது ம்சவுக்கியங்கிடைக்குமென்பதை அறி ந்து வரும்படியானவரலாற்றின்பாபு | ௨௱௬ |
| ஐந்தாவது சவால்.—ஹாத்திமானவர் பிரயாணப்பட்டு (கோஹீனிதா) வுடையசெய்தி அறிந்து வருகின்றவரலாற்றின்பாபு | ௨௱௬௰ |
| ஆறாவது சவால்.—ஹாத்திமானவர் பிரயாணப்பட்டுகோழிமுட்டைப்பிரமாணமுள்ளமுத்தை கொண்டுவரும்படியான வரலாற்றின் பாபு | ௩௱௰௨ |
| ஏழாவது சவால்.—ஹாத்திமானவர் பிரயாணப்பட்டு ஹமாம்பாத்கருடையசெய்தியையறிந்து முனீர்ஷாமிக்கு ஹுசன்பானுவைவிவாகமுடித்து ஹாத்திமானவர் தம்முடையபட்டணம் போகின்ற வரலாற்றின்பாபு | ௩௱௭௰ |


# அட்டவணை.

முற்றிற்று.

---

பிசுமில்லா ஹிர்றஹுமா னிர்றஹீம்.

# ஹாத்திம்தையுடைய கிஸ்ஸா.

முற்காலத்தில் மகாபெருமை பொருந்திய அறபுதேசத்தில் எமன் என்னும் நகரத்தை இராசீகஞ்செய்திருந்த (ஹாத்திம்தை) உடைய கிஸ்ஸாவாகிய சரித்திரம் முதல் அறபுபாஷையால்செய்திருந்ததைப்பின்பு பாரிசுபாஷையால் தர்சுமா செய்திருந்ததை பின்பு டில்லியிலிருக்கும் சய்யது ஹைதர்பக்ஷென்பவர் ஹிந்துபாஷையால் தர்சுமாசெய்தார் அதுஇந்த தேசத்தில் சிலபேர்களுக்கு அறபு - பாரிசு - ஹிந்து முதலிய பாஷைகள் அதிகமாகவழக்கமில்லாமையால் சாதாரணமாய் வழங்கிவருகிற தமிழ்பாஷையால் இச்சரித்திரத்தைச்சகலரும் எளிதிலறியும் பொருட்டு வெளிப்படையாக சென்னைமாநகரத்தைச்சார்ந்த தேராம்பேட்டை-மீர்சா-சுல்தான் அப்துல்காதிறு சாகிபவர்கள் பௌத்திரரும், மீர்சா-அப்துற்றஹ்மான் குமாரருமாகிய- ஹக்கீம் - முகம்மது இசுமாயீல்சாகிபவர்களால் ஹிஜ்ரத்து-(௲௨௱௯௰) வது - (௫௰) - இங்கிலீஷ் - கவுளை (௲௮௱௭௰) க்கு சரியாய் தமிழ் தாது - (௵) - தர்சுமாசெய்யப்பட்டது.

முற்காலத்தில் அறபென்னும்தேசத்தைச்சார்ந்த எமன்என்னும் தேசத்திற்கு பாத்துஷாவாகிய (தை) என்பவர் தன்தேசத்திலுள்ள றய்யத்துகளாகிய குடிகளையும் தனதுபடைகளாகிய படைகளையும் தம்மைச்சார்ந்த - அமீர் - உமராக்களையும் தனதுசொந்தப்பிள்ளைகளைப்போல் பாதுகாத்து தம்முடைய படைமுதலியவர்களுக்கு மாதமாதம் தவறாமல் சம்பளமுங்கொடுத்து செலவுபோக அவருடைய கஜானாவில் அளவிடக்கூடாததிரவியமும் ஒன்பதுவகைரத்தினங்களும் நிறைந்து யாதொருகுறைவில்லாமல் அரசுசெலுத்திவருநாளையில் தனது பிரியதகப்பமுடையபெண்ணை விவாகஞ்செய்து நெடுநாளாய் புத்திரபாக்கியமில்லாமல் அதிகமனவருத்தமடைந்து அவர்செய்ததவத்தால் ஒரு ஆண்பிள்ளைபிறந்தது அப்பிள்ளையினுடைய அழகு சௌந்தரியம் பதினாலாம் பக்கத்துச்சந்திரனுக்கொப்பாயிருக்கும் அவ்வளவு அழகுள்ள குழந்தைபிறந்ததை (தை) என்னும்பாத்து

[illegible]னவர் கேட்டிருந்தசந்தோஷமடைந்து தங்கள்பந்துகளுக்கு
ம் [illegible]பாரிலுள்ள அமீர்-உமராக்கள் மற்றுமுள்ளபடைத்தலை
வர்களுக்கும் மனமகிழும்படிக்கு வேண்டியவெகுமதிகொடுத்து தன
து [illegible]த்திலுள்ள ஏழைமுதலியவர்களுக்கும் அன்னதானம் சொர்
ன [illegible]ங்கொடுத்து சர்க்கரை முதலியதும்வழங்கி அதிகசந்தோ
ஷத்தையடைந்து தனதுமந்திரியை அழைத்து நமதுபிள்ளைக்குசா
தகலட்சணம் பார்க்கவேண்டியபடியால் பிரபல்லியமுள்ள நுஜூம்களை
யும் சாஸ்திரப்பண்டிதர்களையும் ஹக்கீம்களையும் அழைத்துவரும்படி
உத்தரவுசெய்தார் அப்படியே அவர்களை அழைப்பித்தார்கள் அவர்க
ளை (தை)என்னும் பாத்துஷாவானவர் பார்த்துச்சொல்லுகிறார் உங்க
ளுடைய நுஜூம்கணக்கின்படிக்கும் சாஸ்திரவிதிப்படிக்கும் யாதொ
ருகுற்றமில்லாமல் பார்வையிட்டுபிள்ளைபிறந்த சாதகலட்சணக்குறிப்
பையறிந்து எனக்கறிவிக்கவேண்டுமென்று உத்தரவுசெய்தார் அப்
போது அவர்கள் அவ்வுத்தரவின்படி ஜாதகலட்சணத்தைப்பார்த்து
ச்சொல்லுகிறதாவது ஓ, [illegible]யே பாத்துஷாவாகிய (தை)என்பவரே இந்த
பிள்ளைபிறந்த ஜாதகலட்சணத்தைப்பார்த்தால் இதினுடையசெயலும்
சீரும் நடப்பும் எவ்விதமிருக்குதென்றால் பூரண ஆயிசாகவும் அஷ்
டதிக்கிலுள்ள தேசமுழுதும் தன்கைவசப்படுத்தி ஏகசக்கிராதிபதியா
ய் அரசுஞ்செலுத்திதன்னுயிர்முடிவில்லையில் ஆண்டவனுக்காக பரர்
களுக் குபகாரியாகவுமிருந்து அநேகதானதருமஞ் செய்து கொண்டி
ருக்கும் இதனுடைய நடக்கைகள்மையானதாயிருக்கும்இப்பிள்ளையி
னுடைய சகாவத்தென்னும்தான தருமங்களைப்போல் கியாமவரையில்
ஒருவரும் செய்ய மாட்டார்கள் அப்படிப்பட்டபெரும் கீர்த்தியுமி
ருக்குமென்று நுஜூம்களும்பண்டிதர்களுந்தெரிவித்தார்கள் அதைக்
கேட்ட(தை)என்னும் பாத்துஷாவானவர் மிகுந்தசந்தோஷத்தை ய
டைந்து ஆண்டவனிடமாய்சிசுதாசுகூர்செய்து அதிகமாய்த்துதிசெய்
து சாஸ்திரபண்டிதர்களுக்கும்நுஜூம்களுக்கும் ஹக்கீம்களுக்கும்வே
ண்டியசொர்ணம் நவரத்தினமிழைத்த பூஷணாதிகளும் அநேகவிசித்
திரமானஷால்வைகளைகொடுத்து அப்பிள்ளைக்கு(ஹாத்திம்என்று) நா
மகரணமிட்டார்கள்.

பின்பு (தை) என்னும் பாத்துஷாவானவர் தனது மந்திரிபிரதா
னிகளுக்கு கட்டளையிட்டதாவது எவ்விதமெனில் நம்முடைய அர
சாக்ஷிக்குட்பட்ட ஊர்களிலும்கிராமங்களிலும் பட்டணங்களிலும் நம



க்கு பிள்ளைபிறந்த நாளில்பிறந்த ஆண்பிள்ளைகளெல்லாம் அவரவர்
கள் தாய் தகப்பன்மார்கள் எடுத்துக்கொண்டு நம்முடைய அர
மனைவந்துசேரும்படி பிரசித்தஞ்செய்யும்படியாக உத்தரவுசெய்ததுந்தவி
ரன்றி சகலபிள்ளைகளுக்கும் அரண்மனையில்சம்பளங்கொடுக்கப்படு
மென்றும் அந்தப்பிள்ளைகளையெல்லாம்நம்முடைய அரண்மனையில்
வைத்து அதற்குவேண்டிய உண்பினை தின்பினை முதலிய சகலவஸ்
துக்களும் யாதொருகுறைவுமில்லாமல் கொடுக்கப்படுமென்றும் அந்
தப்பிள்ளைகளுடைய தாய் தகப்பன் மார்களுக்கு வேண்டியசௌக்கி
ய வுபசாரங்கள் செய்யப்படுமென்றும் உத்தரவுசெய்தார் அதுபோல்
விளம்பரமென்னும்பத்திரிகைகளை எழுதி தங்கள் ராஜ்ஜியத்திலும் அதைச்
சார்ந்த நாடுகள் தன்னோடும் அனுப்பிப் பிரசித்தஞ்செய்தார்கள்(ஹா
த்திம்) பிறந்த தினத்தில் எமனிலும் அதைச்சார்ந்த நாடு நகரங்களி
லும் பெண்பிள்ளைகள் தவிர (கூத) ஆண் குழந்தைகள் பிறந்திருந்த
து அப்படியிருக்க இந்தவிளம்பரப் பத்திரிகையின் [illegible]தெரிந்து அந்
த்தேசத்திற் பிறந்த ஆண்பிள்ளைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு
தங்கள் தங்கள் பிள்ளைகளோடு தாய் தகப்பன் மார்கள் (கூத)பிள்ளை
களோடு எமன் பாத்துஷாவினரண்மனைக்கு வந்துசேர்ந்தார்கள்உடனே
அப்பிள்ளைகளை(தை)என்னு பாத்துஷாவானவர் பார்த்துமிகுந்தசந்
தோஷமடைந்து இப்பிள்ளைகள் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருதாதியைப்பா
ல்கொடுக்க இட்டப்படுத்தி (கூத) சேர்த்துவைத்து அவர்களுக்கு உப
பாரங்களும் ஏற்படுத்தி ஒவ்வொரு தாதிக்கும் கொடுத்து (ஹாத்திமுக்
கும்) நாலுதாதிகளைப்பிரித்தார்கள்பின்பு(ஹாத்திமென்னும்) பிள்ளை
க்கு பால்கொடுக்கதாதிகள் ஸ்தனத்தை வாயில்வைத்தார்கள் அது
பால் குடிக்காமல் முகத்தைத்திருப்பி கண்ணைமூடிக்கொண்டது எவ்
விதத்திலாவது பிள்ளை பால்குடிக்குமென்று வேண்டிய பிரயத்தன
ஞ்செய்து பார்த்தார்கள் அவர்கள்எத்தனம் [illegible] நிறைவேறாமல்
போய் விட்டது அச்செய்தி (தை) என்னும் பாத்துஷாவுக்குத் தெரி
வித்தார்கள் அவர்கேட்டிருந்துவருத்தமடைந்து [illegible]மந்திரிபிர
தானிகளுக்கு உத்தரவுசெய்தார் வெகுசுருக்கில் நுஜூம்களையும்
பண்டிதர்களையும் ஹக்கீம்களையும் அழைப்பிக்கும்படி உத்தரவுச்செ
ய்தார் அப்படியே அவர்களை அழைத்து பாத்துஷாவின்சமுகத்தில
[illegible]கொண்டு வந்துவிட்டார்கள் அவர்களை (தை) என்னும்பாத்துஷாவ
னவர்பார்த்து நம்முடையபிள்ளை பால்குடிக்காமல் இருக்குஞ்சங்கதி
யை [illegible] எனக்கு தெரியப்படுத்தவேண்டுமென்று சொன்னார்.

டனேநுஜூமிகளும் பண்டிதர்களும் அக்கீம்களும் பிள்ளையினிடமாக
ப்போய் பார்வையிட்டு தாதிகளைக்கேட்டார்கள் அந்த என்னசபபி
னால் பிள்ளை பால்குடிக்காமலிருக்கின்றதென்றுகேட்க அப்போது
தாதிகள் சொல்வார்கள் எங்களுக்கு அதின்சபபுதெரியவில்லையென்
று சொல்ல அவர்கள்பிள்ளையினுடைய சரீரத்திலுள்ள முகக்குறிக
ளும் பார்த்தவிடத்தில் அதில்யாதொரு குணதோஷமில்லாமல் பிள்ளை
சிரித்துக்கொண்டிருப்பதைப்பார்த்து மிகுந்த ஆச்சரியப்பட்டு அதி
னுடையஜாதக லட்சணக்குறிப்பையறிந்து பாத்துஷாவின்சமுகத்தி
ல் சொன்னது ஓ பாத்துஷாவே பிள்ளையைப்போய்பார்த்தோம் அத
ற்கு யாதொருகுற்றமில்லை அதின் ஜாதகலட்சணத்தைக்கணக்கிட்டுப்
பார்க்குமளவில் அதினுடையசபபுதெரியவந்தது அது எவ்விதமென்
னில் இப்பிள்ளை தான்தனித்துப்பால்குடிக்கமாட்டாது மற்றபிள்ளை
களெல்லாம் பால்குடித்தால் அதற்குப்பின் பால்குடிக்கும் இந்தப்பி
ள்ளை ஆயுசுள்ளவரையிலும் தான்தனித்துயாதொருவஸ்துக்களையும்
சாப்பிடமாட்டாது தன்னிடத்திலிருக்கிற சினேகிதர்களுக் கெல்
லாம் முன்னேபகிர்ந்துகொடுத்து பின்புதான்புசியாநிற்கும் அப்படிஜாதகமிருப்
புகால் இந்தப்பிள்ளைகளெல்லாம பால்குடிக்குமானால் பின்புஇப்பிள்
ளை பால்குடிக்குமென்றுசொல்லி பிள்ளைகளுக்கெல்லாம் பால் கொ
டுக்கும்படி தாதிகளுக்கு உத்தரவுசெய்தார் அப்படியேபிள்ளைகளுக்
கெல்லாம் பால்கொடுத்து பின்பு (ஹாத்திமுக்கு) கொடுத்தார்கள்
பால்குடித்தது பின்பு (ஹாத்திமென்னும்பிள்ளை) பிறந்தநாள்முதல்
அவ்வாகாரம் தெரியும்வரையில் தனித்துயாதொருவஸ்துவையும் சா
ப்பிட்டதுமில்லை வீறிட்டழுததுமில்லை மிகுந்தநித்திரைசெய்ததுமில்
லை பின்பு (ஹாத்திமுக்கு)பால்கொடுப்பதைநிறுத்தினார்கள் அப்போ
து தன்னோடிருந்த (சூத) பிள்ளைகளோடு தின்பதும் உண்பதுமாயி
ருந்தது இவ்விதமாய் நன்னறிவு தனக்குவந்துபெரியபிள்ளையான பி
ன்புஏழையெளியோர்களையும் பிச்சைக்காரர்களையும்கல்வியிற்றேர்ந்தபண்
டிதர்களையும் பார்த்தால் அவரவர்களுக்குத்தகுந்த மரியாதையுடன்
வேண்டிய சகாவத்து தர்மம் செய்துகொண்டுவந்தார்கள் இவ்விதமா
க இரவென்றும் பகலென்றும்பாராமல் சயிறு சயிறுத்து என்னும் தர்
மம் செய்து கொண்டிருந்தார் வபாதுபதினனு ஆச்சுது பின்புதன்தகப்
பன் கஜானாவில்வேண்டியதிரவியங்களும் ரத்னாதிகளுஞ்சேர்த்துவை
த்திருந்ததையெல்லாம் ஆண்டவன்பேரால் செலவுசெய்து இல்லையெ
ன்னுமல் கொடுத்துக்கொண்டுவந்தார் பின்புமேட்டுடையவிருந்தாக



சகலஆயுதங்களுமெடுத்தணிந்துகொண்டு குதிரைசவாரியாகி காடுவ
னங்களுக்குப்போகிறதும் உயிருள்ள நாற்கால்மிருகசாதிகளைதன்வல்
லமையால்யாதொருஆயுதத்தால்சீவவதைசெய்யாமல் கைப்பிடியாகப்
பிடிக்கிறதும்அந்தமிருகஜாதிகளைகாட்டில்விட்டுவிடுகிறதுமிவ்வித
மாயிருப்பார் எப்போதும் யாவருக்கும் யாதொருகுற்றமும் வராத்த
மும்செய்யாமலும்தப்பிதமானவார்த்தைகள் பேசாமலும் ஆண்டவன்
கிருபையால் எப்போதும்நன்னடக்கையில் விருப்பங்கொண்டவரா
யிருப்பார் ஆண்பெண்களவரழகைக்காண்பாராகில் அவர்கள்பேரில் ஆ
னந்தமாகஆயிரம்உயிரைப்போல்ஆசைகொண்டுசந்தோஷமடைவார்க
ள் யாதாமொருவர் குதிரைசவாரியேறிக்கொண்டு வந்துதங்களுடைய
சங்கதியைக்குறித்துபிரியாதுசொல்வார்களானால் அவர்களுடையகுதி
ரைக்கருகிற்போய்லகானைத் தான்கீழிருந்துபிடித்துக்கொண்டு அவர்
கள்பிரியாதுகளைக்கேட்டுஉடனுக்குடன் தீர்ப்புசொல்லிஅனுப்பிவிடு
கிறது அவர்கள் தன்தீர்மானத்துக்குயாதாவதுமனவருத்தமடைவார்
களானால் அவர்களுக்கு திருப்திகரமாகும்படி மதுரமானமொழிகளைக்
கொண்டு அவர்களைச்சமாதானம்பண்ணியனுப்புகிறது எப்போதும்
ஒருவர் தம்முடையபக்துக்கள் அல்லது அன்னியர்களில் பெருங்குற்
றமான வேலைகளைச்செய்வார்களானால் தனதென்றும் அன்னியமென்
றும் வழக்கோரஞ்செய்யாமல் நீதியாக அவரவர்கள்குற்றத்துக்குத்
தகுந்த தண்டனைசெய்வார் இவ்விதமாக ஆண்டவனுக்கு உகப்பாகிய
நடத்தைகள்நடந்துவருகையில் ஹாத்திமென்பவருக்கு சிலநாள்சென்
று எவ்வளவானவாலிபமென்னும் பருவகாலம் வந்துசேர்ந்தது அ
ப்போது யாதாமொருவனைக்காண்பாராகில் அவர்களுக்கு நல்லறிவுக
ளைப்போதிப்பது எவ்விதமென்றால் ஆண்டவன் தன்னால் உண்டுபண்
ணினமனிதர்களுக்கு செய்திருக்கின்றபெருமையானநிகமத்தென்னு
ம்வல்லபத்தை பார்வையிட்டு பார்க்கவேண்டியது எவ்விதமெனில்
[illegible] குதறந்தென்றும் வல்லபத்தால் ஆண்டவன்நினைத்தால்
பதினெண்ணாயிரம் ஆலத்தைஉண்டுபண்ணினன் நம்மைதாயினுடை
யகெர்ப்பத்தில் நின்றும் யாதொருகுற்றங் குறைவில்லாமலும் பிறக்க
ச்செய்தார்.

பின்பு வாலிப பருவகாலவரையிலும் யாதொருநோயும் வரு
த்தமும் குற்றமும் [illegible] [illegible] [illegible]
[illegible] உண்டுபண்ணி [illegible]

களும் கொடுத்து காப்பாற்றி இரட்சிக்கும்படியான ஆண்டவனை எப்போதும் தம்முடைய உள்க்கருத்துகொண்டு வணங்கித் தொழவேண்டுமென்றும் அப்பேர்ப்பட்ட ஆண்டவனுடைய பாதையில் நாம் நம்முடையபொருளை நம்மால் கூடிய வஸ்துக்களையேழை யெளியோர்களுக்குத் தருமமென்னும் சகாவத்து கொடுத்துக்கொண்டுவரவேண்டியது அதனால்நமக்கு இருலோகத்திலும் பலன்கிடைக்குமென்று இவ்விதமாகப் பலருக்கும் போதனை செய்துகொண்டு எந்நேரமும் ஆண்டவனுடைய பயபக்திகொண்டு நமக்கு இந்தலோகமானது சதமல்லவென்கிற அறிவாகாரமென்பதை நிச்சயப் படுத்திக்கொண்டு நன்மார்க்கமான நன்மையென்பதை கணக்கில்லாமல்செய்துகொடுத்துக் கொண்டிருக்கவேண்டும் (ஹாத்திமென்பவர்) இவ்விதமான நன்னடக்கையின்செயலும்இவருடையபெருங்கீர்த்தியும்தேசங்கள்தோறும் பிரசங்கமாகத்தெரியவந்தது அப்போது தேசங்களிலுள்ளவர்களெல்லா மிகுந்த சந்தோஷத்துடனே மற்றுமுள்ளவரெல்லாரும்

வென்று(ஹாத்திமென்பவரை)வாழ்த்தி போற்றிப்புகழ்ந்துகொண்டார்கள் மற்றும் அந்தேசங்களிலுள்ள ஆண்பெண்கள் கூட்டங்கூட்டங்களாக அநேகர்வந்து கண்டுகொண்டு அவரைவாழ்த்திபுகழ்ந்துவிட்டு தங்கள்தங்கள் நாடுநகரங்களுக்கு போய்ப்விடுவார்கள் இப்படியிருக்க ஒருநாள் (ஹாத்திமென்பவர்) வேட்டைக்காகவேண்டி காட்டுக்குசகல ஆயுதங்களும் பூண்டுகொண்டு போகும்போது ஒரு பெரியோர் (ஹாத்திமை)கண்டுசகலசீவஜெந்துகளுக்கும் பாதைதெரியும்படியாகப்போதனைசெய்துபோய்விட்டார்போகும்போதுபதினாறடிவேங்கைமகா ஆக்கிரமத்தோடும் அதிக சத்தத்தோடும் எதிர்வர(ஹாத்திமென்பவர்) பார்த்து அப்போதுமனதிலெண்ணினார் இந்தப்புலியை நாம் ஆயுதத்தால் வெட்டினால் இந்தமிருகஜாதிவெட்டுண்டு இறந்துபோய்விடும் அப்படி அதை நான்வெட்டாமல் விடுவேனாகில் என்னுயிரை இழந்துபோக வேண்டியதாயிருக்கின்றதென்று எண்ணி உண்மையாக [illegible]நின்றுவிடுமென்றுமிகுந்தயோசனைசெய்துகொண்டு இவ்விதசங்கடத்தைக் குறித்து தன்புத்தியைத்திடப் படுத்திக்கொண்டு மனதிலெண்ணினார் ஓ, ஹாத்திமே நாம்என்றைக்கு இந்தலோகத்திற் பிறந்தோமோ இறப்பதேயல்லாமல் இருக்கவரவில்லை ஆகையால் இந்தப்புலியானது நம்முடைய மாமிஷத்தின்பேரில் இச்சைகொண்டுமிகுந்தயிளைப்பும்பசிதாகமுமாக வந்திருப்பதால் என்னுடையமாமிஷத்தைத்தின்றுபசியாறி வயிறுநிறைந்து திருப்தியடை[illegible]துமெத்



நலமாகவும் நன்மையாகவுமிருக்குமென்று தன்மனதைத்திடப்படுத்திக்கொண்டு அந்தப்புலியின்முன்பாகபோய்நின்றுகொண்டுசொல்லுகிறார் ஓ புலியே நீ மிகுந்த பசியாக வந்திருக்கிறது எனக்குத் தெரியவருகின்றது ஆகையால் நீ யாதொரு சந்தேகமில்லாமல் பசியாறிக்கொள்ள நானும் என்னுடைய குதிரையும்ஹாஜராயிருப்பதால் உன்மனதுக்குகந்த வஸ்துவை நீ சந்தோஷமாக அடித்துஉன்பசியை ஆற்றிக்கொண்டு போகலாமென்று தன்மதுரமானவாக்கினால் தெரிவித்தார்இந்தமொழிகளையெல்லாம்அந்தப்புலியானதுகேட்டுஹாத்திமென்பவரை தலையை உயர்த்திப்பார்த்துதன்னுடைய சிரசை தரையில்வைத்துசிசுதாசெய்துவிட்டுஹாத்திமுடையபாதத்தில்விழுந்துமுத்தமிட்டுக்கொண்டுபின்னிட்டுப்போகின்றது அப்போதுஹாத்திமென்பவர்மிகுந்தவருத்தமடைந்து தானேறிய குதிரையைச் சுருக்காக நடத்திபுலியின்முன்பாகப்போய்நின்றுகொண்டு (ஹாத்திமென்பவர்) சொல்லுகிறார் ஓ புலியே நீ பசியாகப்போவதுஎனக்குமிகுந்தமனவருத்தமாயிருக்கின்றது என்னுடைய சொல்லைக்கடவாமல்என்னிலேயாவது என் குதிரையின் மாமிசத்திலாவது கொஞ்சம்புசித்துப்போனால் எனது க்குச் சந்தோஷ மாகுமென்றுமிகுந்தமனஸ்தாபமாகக்கெஞ்சிக்கொண்டிருக்க நீ பசியோடு இளைப்பாகப்போவதுநலமல்லவென்று அனேகவிதமாய்ச் சொன்னபோதிலும் அம்மொழிகளையெல்லாம் [illegible] அப்புலியானது தலையை கீழ்போட்டுக்கொண்டுதானிருக்கும்படியானகாட்டுக்குப் போய்விட்டதுபின்பு(ஹாத்திமென்பவர்) மிகுந்த வருத்தத்துடனே தம்முடைய அரண்மனைக்கு வந்து சேர்ந்துவிட்டார் பின்புதம்முடைய வழக்கம்போல் நடத்தியசெய்கையைச்செய்துகொண்டுயாதொருகுறைவில்லாமல் நடத்திக்கொண்டிருந்தார்.

# ஹசன்பானுவின்கிஸ்ஸா.

௧

> முந்தினகிஸ்ஸாவாயியக்கதையாவது ஹசன்பானு பார்ஜக்கு ஸவுதாக ருடைய மகளாகிய குராசான் பட்டணத்திலிருந்து வெளிப்பட்டுப்போய் வதோ ஒருகாட்டில் ரத்தினாதிகளுடன் அநேகதிரவியங்கள் அவள்கையில் அகப்பட்டதும். முனீர்ஷாமிபாத்துஷாவின் குமாரன் இந்த ஹசன்பானுவென்னும் பெண்பேரில் இச்சைகொண்டு வருந்தழுதைவதை (ஹாதிமென்பவர்) பார்த்து அவனுக்கு உதவியொத்தாசைசெய்த விபரமெவ்விதமெனில் இக்கதைமிகுந்த ஆச்சரியமானபடியால் அறிவாளிகள் வேறுநினைவில்லாமற் கேட்கவும் பார்க்கவும் வேண்டியது.

குராசான் என்னும் தேசத்தில் ஒருபாத்துஷாவானவரிருந்தார் அவருக்கு வெகுசேனை தளங்கள் வன்னலட்சம் குதிரைகள் காலாட் சேவகாள் அனேகங்களும் சமுகத்தில் ஊழியங்கள்செய்யும்படியான வேலைக்காரர்களும் மந்திரிபிரதானிகளுடன் அநேகர்சூழ்ந்துகொண்டிருப்பார்கள். தேச தேசங்களிலுள்ள எல்லா ரய்யத்துகளுக்கு யாதொருகுறைவில்லாமல் மனமகிழ்ச்சியாகவும்நெறிநீதிகளில் யாதொரு குற்றமில்லாமல் அரசாட்சி செய்துகொண்டு தனதென்றும் வேறென்றும் நினைக்காமலும் ஆடும் புலியும் ஒரு துறையில்தாகந்தீர்க்கும் இவ்விதமாகவருநாளில் தம்முடையநகரத்தில் பர்சக்கென்னும்ஒரு பெரியஅயிசுவரியமுள்ள வர்த்தகரிருந்தார் அப்படியிருக்கையில் தன்னுடைய குமஸ்தாக்களிடமாக அநேகபட்டெயட்ட வளிகளும் பலவிதசரக்குகளும் மற்றதேசங்களிற்போய் வர்த்தகஞ்செய்துவரும்படியாகஅநேக ஓட்டைகளில் திறுசுகளை ஏற்றி அனுப்பிக்கொண்டிருப்பார் இவ்விதமாக அந்த நகரத்தில் அதிக சந்தோஷத்துடனேயிருப்பார் அந்நகரத்தின் பாத்துஷாவுடனே மிகுந்தபிரியமாகவும் பாத்துஷா இவர்பேரில் மிகுந்தபிரியமாகவும் இவ்விதமாக இருவரும்

## ஹசன்பானுவின்கிஸ்ஸா.

௨

இருக்குநாளில் இந்தபர்ஜக்கென்னும்வர்த்தகனுக்கு அந்தியகாலம்வந்துநேரிட்டது அப்போது தன்னுடைய ஆஸ்திக்காக ஒரு ஆண்குழந்தை இல்லாமையால் மிகுந்த மனஸ்தாபப்பட்டுக்கொண்டு தனக்கு பெண்குழந்தைபனிரண்டுவயதுள்ளதாயிருந்தது அப்பெண்வசமாக சகல ஆஸ்திகளையும் ஒப்புவித்து தன்னைச்சார்ந்த குமஸ்தாக்களுக்கெல்லாம் சொல்லும்படியான நடப்புகளெல்லாம் சொல்லிவிட்டு பின்பு இறந்துபோனார் அப்படியிருக்கஅந்நகரத்து பாத்துஷாவானவர் தன்னுடைய பிள்ளைகளைப்போல் இந்தஹசன்பானுவென்னும்பெண்ணை பாவித்து அவ்விதமாக நடந்துவருகையில் அந்த ஆஸ்திகளைக் குறித்து பாத்துஷாவானவர் யாதொரு வஸ்துவையும் இச்சியாமல் சகல வஸ்துவையும் அந்தப் பெண்வசமாயிருக்கும்படியாகவும் அதற்கு யாதொரு குற்றங்குறைவுவராமல் கெட்டிப்பத்திரப்படுத்த வேண்டிய சாக்கிரதைசெய்துகொண்டிருக்கையில் அந்தஹசன்பானுவென்னும் பெண்ணானவள் அதிவாகாரம்பொருந்தியிருந்துவாகிபெருந்தன்மையாகவு மிகுந்த செல்வத்துடனேயிருக்குநாளில் ஒருநாள்தன்னுடைய தாதியென்னும் பெரியமனுஷியை கூப்பிட்டுச் சொல்லுகிறாள் அது எவ்விதமெனில் என்னுடைய பிரியமான [illegible] என்னுடைய தாயே நீமிகுந்த கல்விசாலியானபடியால் நான் சொல்லும் விஷயங்களை நீ கேட்க வேண்டியதென்றுசொல்லி பின்னுஞ்சொல்லுகிறாள் ஹசன்பானுவென்னும் பெண்ணானவள் எவ்விதமெனில் இந்த லோகமானது [illegible]பேர்ப்பட்ட தண்ணீரின்மேற் குமிழிபோல் உள்ளதாயிருக்கின்றது இவ்வுலகத்தில் யார்யாவது நிலைபெற்று இதுவே சதமாகநிச்சயித்திருந்தவர்கள் ஒருவருமிராமல்இறந்துபோனார்களே தவிரவேறில்லை ஆகையால் நம்மிடத்தில் அளவற்ற திரவியங்களிருப்பதால் அதை எதுக்காக நாம் காப்பாற்றிக்கொண்டிருக்கவேண்டியது அதனால் நமக்கு என்னலாபங்கிடைக்கும் என்னுடையதகப்பன் எவ்வளவோ கஷ்டப்பட்டு அநேகதிரவியங்களைத்தேடி என்வசமாக ஒப்புவித்து இறந்துபோனாரல்லவா அதைப்போல் நாமும்பாதுகாத்து இருக்கிறவர்களுக்கு ஒப்புவித்துவிட்டு இறந்துபோவதால் அதனால்நமக்கென்ன பிரயோசனங்கிடைக்கும் ஆகையால் இத்திரவியங்களையெல்லாம் ஆண்டவன்பேரால் சகாவத்தென்னும் தருமத்தைச்செய்தால் அதனால் நமக்கு மிகுந்தபலன் கிடைக்குமென்றுசொல்லி பின்னுஞ்சொல்லுவாள் நான் எவ்விதத்திலும் நல்வழிதேடிக்கொண்டு ஆண்டவனிடமாகப்போகவேண்டியது இவ்வுலகத்தானென்பதை நான் நீக்கிவி

௰

## ஹுசன்பானுவின்கிஸ்ஸா

ட்டு ஆண்டவனுடைய நாட்டத்தின்பேரில் வணங்கி நல்வழிபெறவே
ண்டியதான எண்ணமும் தேட்டமுள்ளவளாயிருக்கிறே னென்றுஹு
சன்பானுவென்னும்பெண்ணானவள்சொன்னாள் இவ்விதமாகச்சொ
ல்லியவார்த்தையை மிகுந்தகல்வியுள்ள தாதியாகிய பெரியமனுஷிகே
ட்டுக்கொள்ளாப் பூரிப்புடனே முத்திகொடுத்து ஹுசன்பானு
வென்னும் பெண்ணுக்குச்சொல்லுகிறாள் பெண்களுக்கெல்லாம் நா
யகமுள்ளவளே உன்னுடையகல்விக்கும் ஒழுக்கத்துக்கும் நீசொன்
னமதுரியவாக்குக்கும் நான் என்னவிதமென்று பிரித்து உனக்கு
ஒப்பிட்டுரைப்பேன் மகளே நீ இப்போதுசொன்னவார்த்தைகளெல்
லாம் நான்கேட்டு மிகுந்தசந்தோஷப்பட்டேன் ஆனால்நீ அதிகவிவே
கசாலியானபடியால் நீகொண்டகருத்துக்கு நான்வேறுசொல்ல என்
னால் முடியாது உன்கருத்துபோல் நீநடக்கலாம் ஆனால்எனக்குஉல
கத்தாசைவேண்டியதில்லையென்றும் கலியாணமென்பதும் வேண்டிய
தில்லையென்றும் நீசொல்வாயானால்கேட்பவர்களுக்கு ஒரு சொல்லு
க்கிடமாகும் ஆகையால் நான் ஏழுசவால்கள் சொல்லுகிறேன் அச்
சவால்களைப்போல் ஒரு படத்திலெழுதி உன்வீட்டுக்குமுன்னேகட்
டினால் யாதொருவர் அந்தச்சவால்களின் உண்மையின்னதென்றறிந்துவந்துஎனக்
குத்தெரிவிப்பாராகில் அவர்களுக்குநான்பாரியாவேனென்றும்அச்சங்
கதிகளைக்கண்டுதெரிவிக்க ஒருவராலுமுடியாது அப்போதுநீ கொண்
டகருத்தைநிறைவேற்றிக்கொள்ளலாமென்னும்இவ்விதமாகத்தாதி யெ
ன்பவள்விவேகமுள்ளபுத்திகளைப்போதித்தாள் அச்சேதியைஹுசன்
பானுவென்பவள் கேட்டுமிகுந்தசந்தோஷப்பட்டு தாதிசொன்னது
போல் ஏழுசவால்களும் ஒருபடத்திலெழுதி வீட்டின்வெளிப்புறத்தி
ல் கட்டினாள்.

## ஏழுசவால்களின்விபரம்.

௧—முதற்சவாலாவது ஒருதடவைபார்த்ததை மறுதடவைபார்க்கவேண்டுமென்றுபிரியங்கொள்ளுது

௨—வது சவால் நன்மைசெய்து சமுத்திரத்தில் போடு.

௩—வதுசவால் யாதொருவருக்கும் தீமைசெய்யாதே செய்தால் அதுவே அவனுக்குநேரிடும்.

௪—வதுசவால் மெய்சொல்வானாகில் அவன் எப்போதும் சவுக்கியத்தையடைவான்

௫—வதுசவால்கோஹேநிதாமலையுடையசேதியின்னதென்று அறிந்துவரவேண்டியது.

௬—வதுசவால் கோழிமுட்டைப்பிரமாணம் ஆணிமுத்து என்னிடமிருக்கின்றது அதைப்போல் ஜோடுதேடிக்கொண்டுவரவேண்டியது.

௭—வதுசவால் ஹம்மாம்பாதுர்கர்துடைய குளத்தின் செய்தியை அறிந்துவரவேண்டியது.

இவ்விசனத்தை ஹுசன்பானுவென்பவள்கேள்விப்பட்டு தாதி
பேரில் மிகுந்தசந்தோஷமடைந்து தன்மனதிலெண்ணங்கொண்டதா
வது இவ்விதமானஏழுசவால்களின் சங்கதிகளைத்தெரிந்து வருபட்ட
மனிதன் எவனோவனவனிருப்பானென்று எண்ணிக்கொண்டுதாதிசொ
ல்லியவார்த்தைப்போல் ஏழுசவால்களும்படத்திலெழுதி தன்னுடைய
தேவடிக்குமுன்பாக கட்டிவிட்டு ஆண்டவன்பேரில் அதிகவிருப்பங்
கொண்டு எந்நேரமும் தொழுகை நோன்பு இபாதத்தின்பேரில் மிகு
ந்துமுற்று வணங்கிக்கொண்டிருந்தாள் இவ்விதமாயிருக்கும்வேளையில்
ஒருநாள் தம்முடைய மாளிகைமேலிருந்துகொண்டு தானும் தன்தோ
ழிகளுடன் கடையின்னும் பஜார்வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்

கையில் அவ்வழியாக ஒரு பக்கீரென்னும் தர்வேஷ் இருந்த அழகுள்ளவராகவும்பெருமைபெற்றவராகவும் முதிர்ந்தவயதுள்ளவராகவும்நாற்பது முரீதென்னும் சீஷப்பிள்ளைகளோடு அப்பாதையில்வரக்கண்டு [illegible] நிலத்தின்மேல் பட்டுபட்டாவளி விரித்துபொன் வெள்ளிக்கட்டிகளைபரப்பி அதின்மேல் அடிவைத்து நடந்துபோகின்றார் இவ்விதமான நடப்பை ஹசன்பானுவென்பவள் பார்த்துமிகுந்தசந்தோஷமடைந்து தன்னுடையதாதியினிடமாய்ச்சொல்வாள் எனது பிரியமும் அன்புமுள்ள தாய்க்கொப்பாகிய தாதியே யாரோ ஒருபக்கீர் அதிகமகிமையுள்ளவராகத்தெரிகிறதென்றும் அவருடைய நடப்பின்பெருமையைக்குறித்து கண்டவளாயிற்சொன்னாள்பின்பு அவ்வார்த்தையைதாதியானவள் கேட்டுச்சொல்வாள் ஓ பெண்களில் சிரோமணிக்கொப்பான என்னுடைய நாயகமின்னமகளே நீ இப்போதுசொன்ன பக்கீரென்பவர்யாரானால் நம்முடைய பாதுஷாவின் பிரதானமென்னும் குருவாயிருக்கும்இப்பெரியவர்வீட்டுக்கு நம்முடையபாதுஷாவானவர் ஒருமாதத்திற்கு நான்குதடவை போக்குவரவாயிருக்கிறார் அவர்எப்போதாவது ஒருவேளைபாதுஷாவின் சமுகத்துக்குவருவதும் போவதுமாயிருப்பார் அவரைப்போலொத்தபெருமையுள்ளவர் இந்துனியாவில் ஒருவராவது கிடைக்கமாட்டார்கள் இபாதத்தும்பக்தியுமுள்ளவர் ஆகையால் நீயுன்னுத்தரவுசெய்தால் அப்பெரியவரையழைத்து ஒரு விருந்துசெய்வித்தால் நன்மையுண்டாயிருக்குமென்று சொன்னாள் அவ்வார்த்தையை ஹசன்பானுவென்பவள்கேட்டுச்சொல்லுவாள்(உ) (ங) நாழிகை நமது வீட்டுக்குஅவரையழைத்து அவருக்குநாம்விருந்துசெய்வித்தால் இவ்வுலகிலும் மறுவுலகிலும்நன்மைகிடைக்குமென்றும் என்னுடைய கண்ணை அவருடையபாதத்தில்வைத்து முத்திகொள்ளலாமென்றுஞ்சொல்லதாதிகேட்டு என்னுடைய உயிர்க்குயிரானகண்மணியே இப்போதுநீசொல்லியவாக்கியத்தால் என்னுடையமனமானது பூரிசந்தோஷமடைந்தது பின்புதர்வேஷென்னும்பக்கீரிடமாக ஒருமனிதனையனுப்பி அழைத்துவரும்படியாகஉத்தரவுசெய்தார் பின்னும் அம்மனிதனுக்குச்சொன்னதாவது ஹஜரத்தவர்களுக்கு என்னுடைய அதாபு தசுலிமாத்துசொல்லிதங்களுக்கு எப்போதுசாவகாசப்படுகிறதோ அப்போதுதடையில்லாமல் அடியாள்வீட்டுக்கு தம்முடைய பாதத்தைக் கொண்டுவரும்படியாகஹசன்பானுவென்பவள்மிகுந்த பிரியமாயிருக்கிறாள் பின்னும் தங்களுடைய பாதமென்வீட்டுக்குவருமாகில் இவ்வுலகத்துக்கும் என்நலமென்றும் [illegible]



டைய கருமங்களும் சித்தியாகும் அந்த மனிதன் தர்வேஷினிடமாக மேற்கண்ட ஹசன்பானுவென்பவள் சொன்னமொழிகளெல்லாம் தெரியச்சொல்லி பின்புஞ்சொல்லுகிறான் பெரியோர்களுக்குத்தகுந்ததாவத்து விருந்துமிசுக்கீன்களாகிய ஏழைகளோபேரில் [illegible] அவர்களுடைய எண்ணங்களைநிறைவேற்றவேண்டியது [illegible] கச்சொன்னசொற்களைகபூல்செய்துகொண்டார் நல்லதுநீசொன்னபடிகானகத்தியம்விரைவில்வருவேன் அதெப்படியானால்பெரியோர்களின் சுன்னத்தாயிருக்கும்இச்சொற்களைஒருவர்மறுதலிப்பாராகில் அவர்கள் பாபவாளிகளாவார்கள்ஆனால் இன்றைக்கெனக்கு அதிகவேலையிருப்பதால்நான் நாளையதினம் உங்கள்சொல்லைக்கடவாமல் அகத்தியமாய் வருவேன் இவ்விதமாய் தர்வேஷென்பவர்சொன்னசொற்களை ஹசன்பானுவென்பவளுக்கு அந்தமனிதன் வந்துதெரிவித்தான்.

நாளையதினம் காலையில் வருவார்கள் தங்களுடைய (௪0) முரீதென்னும் சீஷப்பிள்ளைகளுடனேவருவாரென்றும் இவ்விதமான சொற்களைக் கேட்டவுடனே அந்தநிசாவியாமத்தென்னும் ஆச்சரியமான அன்னமுமாமிஷங்களும் பலபலவிதமான தின்பண்டமுதலியபல்வகையிலும் கனிவர்க்கங்களும்தயார்செய்து இன்னும்பக்கீரென்னும்தர்வேஷும் அவர்களுக்குகொடுக்கவதற்காகவேண்டி விலைமதிக்கவொண்ணாத விதவிதமானவைரதங்கரத்தினங்கள் தட்டுகளில்நிரப்பி அதின்மேல் விலைமதிக்க [illegible] போமென்னும்சரிகையினால்நெய்தபட்டாடையினால் போர்த்து செய்துஇந்தஇனுசுகளையெல்லாம் அப்பெரியோருக்குக்கொடுத்து அவருடைய பாதத்தின்மேல் என் சிரசைவைத்து முத்திகொடுத்து நான் எப்போதும்மனமகிழ்ந்துகொள்வேனென்று ஹசன்பானுவென்பவள்மனமகிழ்ச்சியோடிருக்குந்தருணத்தில் அன்றையதினம் பொழுது போய்அஸ்தமித்துப்போய்விட்டது அப்போது அந்ததர்வேஷென்னும் பக்கீர் நாற்பது முரீது என்னும் சீஷப் பிள்ளைகளுடனே தன் வழக்கம்போல பொன் வெள்ளி கட்டிகளின்மேல் நடந்துகொண்டு ஹசன்பானுவுடைய வீடுவரையில் வந்துசேர்ந்தார் அந்த தர்வேஷென்னும் பக்கீர் எப்பேர்ப்பட்ட நடத்தையுள்ளவரானால் பிரசித்தில் மகா பெரியவரைப்போலவும் உள்நடப்பு வேஷத்தாருடைய படிபோலுமுள்ளவன் பின்னும் அவன் எப்பேர்ப்பட்டவனானால் பழியாவங்களுக்கும் திருட்டுக்கும் வழிப்பட்டவனாயிருப்பான் அவனுடையசங்கதியைப்பின்னால் தெரிவிக்கிறோம்.

இந்தபக்கீர்வந்திறங்கி ஹசன்பானுவென்பவள்கேள்விப்பட்டு

டு தங்களுடையவாசற்படியில் நின்று மேல்வேத்தைநோக்கும் நடந்துவருநிலத்தில் விலைமதிக்காமின்றசரிகைவேலைசெய்த பட்டுவிரிப்புகள்விரித்திருந்தது அந்த விரிப்பின்மேல் நடந்துகொண்டு மசனதென்னும்ஆசனத்தின்மேல்போயிருந்தார் உடனேஇவருக்காகவைத்திருந்தசர்சாமான்களான்நவரத்தினம்நிறைந்ததபக்கென்னும்தட்டுகளெல்லாம்அவர்முன்பாகக்கொண்டுவந்துவைத்தார்கள் அவ்வஸ்துகளில்யாதொன்றும்பசந்துபடாமையால் இச்சிக்காமலும்சொன்னதாவதுஇவ்வஸ்துகள்யாதொன்றும் எனக்குவேண்டியதில்லை நான்லோகத்தைச்சார்ந்த சமுசார நடப்புள்ளவனல்ல நான் லோகத்தைவிட்டு ஆண்டவனுடைய பக்கமாக எப்போதும் நடப்புள்ளவனுக்கு இந்தமாணிக்கங்களெல்லாம் எனக்கு என்ன விசேஷத்துக்காகும் ஆகையால் எனக்கு யாதொன்றும் வேண்டியதில்லையென்று சொன்னதின் பேரில் பின்னும் ஹசன்பாேஹவென்பவள் விலைமதிக்காதின்றபோர்வையான பட்டுபட்டாவளிகளைதட்டில்வைத்துபக்கிருக்காக அனுப்பினாள் அதையும் அவர் விருப்பங்கொள்ளவில்லை பின்னும் வீட்டுக்குள்ளேபோய் இவர்களுக்காகவேண்டி தயார்செய்திருந்த நவீதமாய் தின்னும் படியதன பதார்த்தங்களையெல்லாம் நவரத்தினத்தாலிழைத்த விலைபெற்றதட்டுகளில்வைத்து அனுப்பினாள் அதை விநோதமான விரிப்பின்மேல் வைத்தார்கள்பின்பு விலைமதிக்காதின்ற சரிகை வேலைசெய்த விரிப்புகளும் விரித்திருந்தது பின்னும் சரிகைவேலைசெய்த படுதா சுற்றிலும் கட்டியிருக்கின்றது அதைப்போல் கயிறுகளும் கட்டப்பட்டிருந்ததுமன்றி அவ்விடத்திலுள்ள தூண்களில் விலைமதிக்காதின்ற ரத்தினங்களிழைத்திருந்தது அதினுடைய பிரகாசம் இன்னவிதமென்று சொல்லக்கூடாது இன்னம் பலபல விதமான சாமான்கள் விலைமதிக்காதின்ற வஸ்துக்களையெல்லாம் வீட்டில்நிறைப்பியிருந்தது பின்னும்வேலைக்காரர்கள்கோஜாவென்பவர்கள்சரிகையிழைத்தபட்டுபட்டாவளிகளுடைய உடுப்புகள் [illegible]கொண்டுவெகுதிறமுள்ள[illegible]கள்கையில்நவரத்தினதிகளிழைத்ததஸ்துசிலிம்சாக்களில்தண்ணீர்கொண்டுவந்துபக்கிரென்னுந்தர்வேஷுக்கும்அவர்கூடவந்தவர்களுக்கும்கைகளைக்கழுவித்தார்கள்பின்பு அந்த வேலைக்கார கோஜாக்கள் மிகுந்த வணக்கத்துடனே கைகட்டிக்கொண்டு அதபாக நின்றார்கள் எங்களுடைய பீபீயானவர் சொல்லுகிறார்கள் இவ்விதவிநோதமாயிருக்கிற பலாவுகளையும் மற்றவஸ்துக்க



ளையும் ஆண்டவன் பேரைக்கொண்டு போசிக்கும்படி உத்தரவுசெய்கிறாள் அம்மொழியை தர்வேஷென்பவர்கேட்டு [illegible]தாகவும் மனக்கசப்பாகவும் நினைந்துகொண்டு அவ்வஸ்துக்களைத்தின்பதற்கு துவக்கஞ்செய்தார்.

பின்பு இவன்ஒருபிடி அன்னத்தை வாயில்கொண்டு [illegible]னைநினைப்பான் இந்தபர்ஜக் சவுதாகர் மிகுந்த செல்வமுள்ள அயிசுவரியவானாகவும் பெருமையுள்ளவனாகவு மிருந்தான் அவன் பாதுஷாக்களிடத்தி லிருக்கும்படியான வஸ்துக்களையெல்லாம் வீட்டில் அனேகவிதமான நவரத்தினதிகள் விடுகொள்ளாமல் நிறைப்பிவைத்து இறந்துபோனான் ஆகையால் இந்த வஸ்துக்களையெல்லாம் இன்றையிராவில்நாம் எவ்விதத்திலும்வந்து கொள்ளைசெய்துநம்மிடவீட்டில்கொண்டுபோய்ச்சேர்க்கவேணுமென்னும் நாட்டங்கொண்டான் பின்புஇந்தமக்கர்ரென்னும்புரட்டன்இரண்டு மூன்றுவாய்சோறுதின்றுவிட்டுகையை எடுத்துக்கொண்டான் பின்பு விலைமதிக்காதின்ற அத்தர்களைக்கொண்டு நாடிகளிலும்தேகங்களிலும் உடுப்புகளிலும்மிகுதியாகப்பூசிதிர்ப்த்தி செய்தார்கள்பின்பு இந்ததர்வேஷானவர் அவ்விடம்விட்டெழுந்து யாதொன்றையும் இச்சியாமலும் எடுக்காமலும் நின்றுகொண்டு ஹசன்பாேஹவென்னும்பெண்ணை அதிகமாகவாழ்த்தி உத்தரவு பெற்றுக்கொண்டு தானும் [illegible]டைய முரீதுப்[illegible]ளுமாகத் தன்னுடைய இருப்பிடமாகியவீட்டுக்குப்போய்விட்டார்கள்பின்பு அன்றைக்கு இராவாகிவிட்டது அப்போது இந்தஹசன்பாேஹ வென்னும் பெண்ணும் அவளுடைய வேலைக்காரர்களும் இந்த தர்வேஷென்னும் பக்கிருக்குவிருந்தளித்தபடியால்அவரவர்கள் மிகுந்த வருத்தமானவேலைகள்செய்தார்கள் ஆகையால்இளைப்புடனே வெளிக்கதவுகளும் வீட்டுக்கதவுகளும் மூடாமல் மற்றசாமான்களை [illegible]ட்டு போட்டதுபோல் கிடக்க நித்திரையாகப் படுத்தார்கள் பின்பு அந்த பக்கிரென்னும் தர்வேஷ் வேஷங்கொண்டிருந்ததைப்பார்த்தா லவன்மனிதனைப்போலவும் அவனுடையநடப்பும் செய்கையும் ஷயித்தானுடையதாயிருக்கும் பின்பு அந்த இராவில்தன்னோடேயிருக்கின்ற(சயி)கள்ளர்களையும் சேர்த்துக்கொண்டுஹசன்பாேஹ வீட்டுக்கு வந்து பின்பு உள்ளே நுழைந்து பார்த்தான் அவ்விடத்திலுள்ள ஆண்பெண்களெல்லாம் மிகுந்தசோகத்துடனே நித்திரைசெய்துகொண்டிருப்பதைப் பார்வையிட்டு நாம் வந்தவேளை நல்லதென்றுசந்

தோஷங்கொண்டு அந்தவிட்டிலுள்ள நகைகள் ரத்தினங்கள் பொன்
வெள்ளிகள் சகலமான வஸ்துக்களை யெல்லாம் எடுத்து மூட்டை
கள் கட்டும்போது அந்த சத்தங்களைக்கேட்டு அதில் சிறிதுபேர் முழி
விழித்துக்கொண்டு யாரைவரென்று எழுந்து கேட்க அவர்களை அந்த
க்கள்ளர்கள்சிறிதுபேரைவெட்டினார்கள்சிறிதுபேரை உயிரோடேயிரு
க்கும்படிக்கு அண்டந்துண்டமாக்கிக்கொண்டிருக்கையில் ஹசன்பா
றே வென்பவள் தான்படுத்திருந்த அறைக்குள் ஜன்னல் வழியாக
இந்தக்கள்ளர்கள் செய்கின்ற பெருங்கேட்டுக்கொப்பான செயல்
களையும் எண்ணிஇவர்கள் ஆரென்றும் பார்க்கையில் நம்முடைய
வீட்டுக்கு காலையில் வந்து விருந்துண்டுபோன பக்கிரென்றறிந்து
ஆண்டவனே இவன் எப்பேர்ப்பட்ட கள்ளத்தனமுள்ள [illegible]
புள்ளவனென்று மிகுந்த மனவருத்தத்தோடு [illegible] கெரித்து இ
ந்தப் பாதகன் இப்பேர்ப் பட்ட கோலங்கள் செய்கிறானேயென்று ப
யந்து நடுநடுங்கிக்கொண்டு அறையில்யாதொரு கூச்சலும்போடாமல்
மகா துயரத்தோடே வருத்தமடைந்து கொண்டிருக்கையில் இக்
கத் திருடர்களெல்லாம் கொள்ளை கொண்ட சாமான் மூட்டைகளை
எடுத்துக் கொண்டு தன்னுடைய வீடுபோய்ச் சேர்ந்தான் அப்போ
து அன்றிரவானது நீங்கி தென்றிசையில் சூரியன் பிரகாசித்
துப் பொழுதுவிடிந்தது பின்பு வெட்டுண்டு உயிர்போனவர்களையும்
காயம் பட்டவர்களையும் டோலிகளில் போட்டுக்கொண்டு அவ்வூர்
பாத்துஷாவின் அரண்மனை வாசலில் கொண்டுபோய் வைக்கும்படி
க்கு ஹசன்பாறே வென்பவள் உத்தரவு செய்து தானும் கூட சவாரி
யாகிப்போய் பாத்துஷாவின் அரண்மனைவாசலருகே அவர்களை
த்துவிட்டு மிகுந்த வருத்தத்துடனே பிரியாது செய்துகொண்டாள்
உடனே அவ்விடத்திலுள்ளவர்கள் பாத்துஷாவுக்கு அச்சங்கதி
யைத் தெரியப்படுத்தினார்கள் உடனே ஹசன்பாறேவை சமூகத்
துக்கு கொண்டுவரும்படிக்கு பாத்துஷாவின் உத்தரவுஆச்சுது அந்
த உத்தரவின்படிக்கு ஹசன்பாறேவை சமுகத்தில் கொண்டுபோய்
நிறுத்தினார்கள் அப்போதுஹசன்பாறேபாத்துஷாவைக்கண்டுமிகுத
மாகவாழ்த்தி போற்றி அதபுடன்தான் நின்றுகொண்டிருக்கையில்பா
த்துஷா அவளைப்பார்த்து கேட்டார் இப்பேர்ப்பட்ட கொடுமையா
கோலங்கள்கொலைகள்செய்துஉன்வீட்டைகொள்ளைசெய்தவர்களியா
ரென்றுகேட்க அப்போது இந்த ஹசன்பாறேயென்பவள் நடந்தவ
ர்த்திரத்தை பாத்துஷாவுக்குச் சொல்லுகிறாள் பாத்துஷாக்களுக் கெ



ல்லாம் பாத்துஷாவாய் நெறிநீதியில் யாதொருகுறைவில்லாமல் இராச்
சியபாரஞ் செலுத்துகின்றவரே உம்முடைய ராசாங்கமும் உங்கள்
ஆயிசும் வளர்ந்தேறிபெருகிவரவேண்டுமென்று பலவிதமாய்வாழ்த்தி
போற்றி தங்களுடைய அடியாளானநானுனவன் நேற்றையதினம்பக்
கிரென்பவர்க்கு விருந்துசெய்தேன் அவனுனவன் இவ்விதமானகோ
லம் என்னைச்செய்தான் பின்பு அன்றிரவில் (சூல) சீஷர்களுடனேதா
னும் என்வீட்டில் வந்துநுழைந்து நாலுபேரைவெட்டி உயிர்வதை
செய்து நான்குபேரை காயப்படுத்தி பனிரண்டுலக்ஷ ரூபா யுடைய
பொன்வெள்ளி நகைகளும் நவரத்தினங்களும் அந்தபக்கிரென்பவன்
கொள்ளை யடித்துக்கொண்டு போனான்.

நான் தங்களுடைய அடியாளாகிய மிசுக்கீனுடைய பொருள்
களை கொள்ளை செய்ததுமல்லாமல் என்னுடைய வேலைக்காரர்களை
யும் இவ்விதமான பெருங்கோலம் செய்தானென்றுமகாவிசனத்தோடு
கண்ணீர் சொரிய அச்சங்கதிகளை தெரியச்சொன்னாள் அச்சொல்லை
பாத்துஷாவென்பவர் கேட்டு மிகுந்தஆத்திரத்துடனே கண்களிரண்
டும்நெருப்புத் தணல்போலபொரிபறக்கச் சொல்லுகிறான் ஓ, ஹசன்
பாறேவென்னும்பெண்ணே நீ நற்புத்தியுள்ளவளென்றும்நன்னடக்
கை யுள்ளவளென்றும் நானெண்ணியிருந்தேன் இப்போ நீசொன்
ன மொழிகளைப்பார்த்தால் உன்னுடையசெயலும் நடப்பும் குற்ற
மும் யாதொன்றுமிக்கும் ஆகாதகேடுகெட்டவளாகத்தோன்றுகெ
ன்றும்உன்னுடைய வயதுக்குமிகுந்த புத்தியேயல்லாமல் வேறில்லை
நீ அந்த பக்கிரென்கிற பெரிய ஒலியின்பேரில் இப்பேர்ப்பட்டபழு
லானமையான குற்றம் சாட்டினாய் அவர் எப்பேர்ப்பட்டவரானால் லோ
கத்தைவெறுத்து யாதொருவஸ்துவிலும் இச்சிக்காதமகாதவம்பெற்ற
வரென்றுஞ்சொல்லபின்புஹசன்பாறேசொல்லுகிறாள் ஓபாத்துஷா
வே அவனுடைய செயல்நடப்பின் சங்கதிகளைத்தெரிந்துசொல்லவே
ண்டியது அவனே கெட்ட கொடும்பாதகம் செய்யும்படியானசபர்
ஆனவனே நீங்கள் சொல்லுகின்றது மகாபெரிய ஒலியென்று அவன்
அக்கோலங்கொண்டவனல்ல சயித்தானுடையவேஷங்களைப் போட்
டுக்கொண்டு அவனுடைய குணமும் நடப்பு முள்ளவனே தவிர
வேறில்லையென்று இவள்சொல்ல அம்மொழிகளை பாத்துஷா கேட்
டு ஆக்கிரித்துச் சொல்லுகிறான் ஆரடா அங்கே நிற்கப்பட்டவர்க
ளென்று கூப்பிட்டுச் சொல்லுகிறான் இவளை இவ்விடம்விட்டுக்கொ

ண்டுபோய்ச் செயல்கெட்ட மகாபாதகமான செய்கைகள்களால்சங்
குவாறிசெய்து இவளைக்கொன்றுபோடும்படிக்கு உத்தரவு செய்து
பின்னும் சொல்லுகிறார் இந்தப்பெண்ணை இவ்விதமாகச்செய்தால்இ
ருக்கப்பட்டவர்களும் அந்தபெரியோரைக்குற்றமாகப்பேசாமல் பயமு
டைவார்களென்று சொன்னவுடனே பாத்துஷாவுடைய மந்திரிகளில்
ஒருவர் மிகுந்த இரக்கமும் தயாளமுமுள்ளவர் எழுந்து கைகட்டி
வாயை மூடிக்கொண்டு மிகுந்தவணக்கத்துடனே பாத்துஷாவுடைய
சிம்மாசனத்தை முத்திசெய்துகொண்டுபாத்துஷாவுக்குஅறிக்கைசெ
ய்கின்றார் எவ்விதமானால் குதாவந்து ஏழைகளை ரட்சிக்கப்பட்ட
வர் தாங்கள் பராஜக்கு சவுதாகர்பேரில் தங்களுடைய கிருபையும் தய
வும் எவ்வளவோ பெருமையாகவைத்து நடப்பித்துக் கொண்டிருந்
தீர்கள் அப்போது இந்த பெண்தங்களிடம் வந்தால் எவ்வளவோ
பிரியங்கொண்டு தங்களருகில் வைத்துக்கொண்டு அப்பெண்ணுக்கு
வேண்டிய வஸ்துக்களையெல்லாம் கொடுத்து நன்மையாக நடத்திவெ
கு பிரியமாயிருந்த பெண்ணை இப்போது சங்குவாறிசெய்து தங்கள்
கொல்லுபடிக்கு உத்தரவு செய்தீர்களல்லவா அப்படிக்கு இந்தப்
பெண்ணைக் கொன்றால் இந்த அடிமையினுடைய மனதில்குதாவந்து
டைய இரக்கமும் தயவும் அடிமைகளை இரட்சிக்கும்படியான தயாள
குணங்கள் தெரியவருகிறது அது எவ்விதமானால் எனக்கும் பின்
பு மென்னுடைய பிள்ளைகள்பேரிலும் இவ்விதமான உத்தரவுகளும் ஒ
ருவேளை செய்யப்படுமானால் இன்னமும் யாதாமொருவர் இவ்வித
மான சந்தேகத்தால் ஏழைகளை இரட்சிக்கும்படியான பாத்துஷாவே
நாங்கள் இறந்தபின்பு எங்களுடைய பிள்ளைகள்பேரிலும் இதைப்
போலவே நடக்கும்நீங்கள் உத்தரவுசெய்வீர்கள் இப்போது இந்தப்பெ
ண்ணை இவ்விதமாக இன்றைக்குச் செய்கின்றீர்கள் இச்சங்கதிகளை
ப்பார்த்துஅவரவர்கள் தங்கள்தங்கள்மனதில் வருத்தமெடுத்துக்கொ
ண்டு இதை விட்டு நாம் நீங்கவேணுமென்கிற எண்ணத்தை உறுதி
கொண்டு சமையம்பார்த்து தங்களைவிட்டுநீங்கித் தங்களுடையதுஸ்
மன்களிடமாகச் சேர்ந்துகொண்டு தங்களுக்குப் பகையாளிகளாவா
ர்கள் ஆகையால் இந்தவிசனங்களுக்குநான்சொல்லவேண்டியதிடமா
னதால்தங்களுக்குநான்இச்சங்கதிசொன்னேன் இனிதங்களுடையஇஷ்
டம்போல நடக்கலாமென்று மந்திரிசொன்னவுடனே அம்மொழியை
பாத்துஷாகேட்டுஎன்னுடைய பிரியமுள்ள அறிவானமந்திரியேநீசெ
ன்ன உபமானத்தினாலும்உன்பேரில்நான் மிகுந்த சந்தோஷமானேன்உ



னக்காகவேண்டிபராஜக்குசவுதாகருடைய காத்திரினாலும் அவருக்காக
வேண்டி இந்த ஹசன்பானுவென்னும் பெண்ணுடைய குற்றங்களைப்
பொறுத்து அவளுடைய உயிரையும் பக்ஷீஷ்செய்துவிட்டேன் ஆனா
ல் அவளுக்கு நன்மை கிடைக்க வேண்டுமானால் இன்றையதினமே
இந்தப் பட்டணத்தை விட்டு நீங்கிப் போகவேண்டியது அப்படிக்கு
போகாவிட்டால் நம்முடைய மனிதர்களைக்கொண்டு வெகுதுன்பப்ப
டுத்தி அறுத்தப்படுமென்று பாத்துஷா வென்பவர்சொல்ல அச்சொல்
லை ஹசன்பானு வென்பவள்கேட்டு மிகுந்த மனவருத்த மடைந்துக
ண்ணீர் சொரிய தன்னுடைய வீட்டின் வழிபோகாமல் தன்னுடைய
தாதியை அழைத்துக்கொண்டு நம்முடைய உயிர் தப்பினதே போ
து மென்று காடாகிய வனங்களுக்குப் போய்விட்டாள்

## ஹசன்பானுவென்பவள் தனது நகரத்தைவிட்டு வனாந்திரத்திற்போய் அதிகதுன்பமடைந்து அயிஸ்வரியம்பெற்றவாலாறு.

பின்பு இந்தப் பாத்துஷாவானவர் கள்ளராகிய பக்கீர்களை
யடித்துக்கொண்டுபோனது போதாதென்று அப்பெண் வீட்டிலுள்ள
ஜென்மப்பிராமணம் யாதொருவன் துணையும் விடாமலெடுத்துக் கஜானா
வில்சேர்க்கும்படிக்குபாத்துஷாவானவர் உத்தரவுசெய்தார் அப்படியே
அவள்வீட்டிலுள்ள வஸ்துக்களையெல்லா மெடுத்துக் கஜானாவில்
சேர்த்துவிட்டார்கள் இப்படியிருக்க ஹசன்பானு வென்பவள் தன்
னுடையதாதியோடு சேர்ந்து காடுகள்தோறும் அச்சமடைந்துகொண்

டு பயித்தியம் பிடித்தவள்போலழுது கண்ணீர்சொரிந்துபுலம்பிக்கொண்டு என்தலையில் இவ்விதமானவிதி யெழுதியிருந்ததோ நான்நன்மை செய்தாக்கால் இப்பேர்ப்பட்ட துன்பம் எனக்குவந்து நேரிட்டதென்று ஆண்டவனே உன்னையே நம்பினேனென்று சொல்லிக்கொண்டு திரிந்தாள்.

பின்பு வெகுவருத்தமடைந்து தன்னுடைய தாதியென்பவளைக ட்டிப்பிடித்துக்கொண்டு அழுது சொல்லுகிறாள் என்னுடையதாதியே அம்மா ஜான் இவ்விதமான குற்றம் என்னலேது செய்திருந்தேனோ யெனக்கு இவ்விதமான விதிவந்து நேரிட்டதென்றும் படாத துன்பம்படுகிறேனென்றும் சொல்லஅச்சொல்லைதாதியென்பவள்கேட்டு மிகுந்த மனஸ்தர்யமுடனே கண்ணீர்சொரிந்து தன்மனதைத்திடப்படுத்திக்கொண்டு ஹசன்பானு வென்னும் பெண்ணைக்கட்டித் தழுவிக்கொண்டு முகத்தோடு முகம்வைத்து முத்தங்கொடுத்து என்னுடையதாயே நீஇவ்விதமாய் விசனப்பட்டழுவதென்னமென்னதைதெரியப் படுத்தவேண்டிய காரியமாயிருப்பதால் இப்போது உனக்குவரும்விதிவந்து நேரிட்டது அவ்விதியை ஆண்டவன் நீக்கவேண்டியது நீ விசனப்படுவதால் யாதொருபிரயோசனமில்லை ஆகையால் இப்போது சபர்செய்து பொறுத்துக்கொண்டு ஆண்டவனை நினைத்து அவனிடமாக நம்முடைய வருத்தத்தை தெரிவித்தால் அப்போதுநமக்குநல்வழி காண்பிப்பானென்று பல்பலவிதமான ஆறுதல்சொல்லி தயிரியப்படுத்தினாள் பின்பு ஹசன்பானு வென்பவள் அச்சொல்லைக் கேட்டு தன்தாதியை அழைத்துக்கொண்டு அதிக துயரத்தோடு அழுதுகண்ணீர் சொரியகானல்வெளி களிலகப்பட்டு திரிந்தாள் அலைந்து அவ்விடத்தை விட்டுமற்றொரு காட்டுக்குப்போய்ச்சேர்ந்தார்கள் அவ்விடத்திலிருந்தநிழல்கொடுக்கும்படியான ஒருவிருட்சத்தின்கீழேபோய் மிகுந்தபசியு மிளைப்புடனேதாகங்கொண்டு ஆண்டவனைநினைத்துப்படுத்தாள் நீயே எனக்குத் துணையென்றெண்ணிமூன்று நாலுதினமாகப் பசியு மிளைப்புத் தாகமாக இருந்தபடியால் தன்சுத்துமாறிப்போய் நிலத்தில் படுத்து நித்திரைபோனாள் அப்போது ஒரு கனவுகாண்கிறாள் அது எவ்விதமெனில் ஒரு பெரியவயதுள்ளவர் மிகுந்த அருகும் வெண்மையுமான உடுப்புகள் உடுத்தி ஆசா கையில்பிடித்துக்கொண்டு காலில் மிதியடிபோட்டுக்கொண்டுகழுத்தில்தஸ்பீமணிகள் போட்டுக்கொண்டு தன்னுடைய தலைமாட்டில்நின்றுக்கொண்டு சொல்லுகிறார் மகளே நீ விசனமாக சந்தேகப்படாதே ஆண்டவன் உன்



பேரில் மிகுந்த கிருபையாக இருக்கிறான் அவனுக்கு இதுவொருபெரியவேலையல்ல நீபடும்படியான விதியிருந்ததால்நீபட்டாய்இப்போது உன்னைப் பிடித்தபீடை துலைந்துபோய் விட்டது நீ முன்னிருந்ததற்கும் அதிகமான செல்வத்தை யடையும்படிக்கு ஆண்டவன் கிருபை செய்வானென்றும் நீ படுத்திருக்கப்பட்ட மரத்தின்கீழே யேழுபாத்துஷாக்களுடைய தவுலத்தின் கஜானா நிறைந்திருக்கின்றது ஆண்டவன் உனக்காக வேண்டி இங்கே மறைத்துவைத் திருந்தான் அந்த கஜானாவை இப்போது எடுத்து உன்வசத்தில் வைத்துக்கொண்டு உனக்கு மனம்வந்தாப்போல்செலவுசெய்யலா மென்று அப்பெரியவர்இவ்விதமாகச்சொல்ல அதற்கு இந்தப்பெண் சொன்னாள் நீங்கள்சொன்னது எனக்குத்தெரியவந்தது நானேஇப்போதுவெகுபாடுபட்டயாதொரு பிலனில்லாதவளாகவும் இந்தமரத்தின் கீழிருக்கப்பட்ட கஜானாவைவெட்டியெடுக்க என்னிடமாக யாதொரு ஆயுதமும் இல்லையே நானதை யெவ்விதமாக வெட்டியெடுப்பே னென்று சொல்லஅதற்கு அந்தப்பெரியோர்சொன்னார்மகளே உனக்கு ஆயுதமில்லாவிட்டாலும் நல்லது ஆண்டவன்உதவி உனக்கிருப்பதால் நீ ஒருகோலை ஒடித்து நிலத்தைதங்கெல்லுவையானால்ஆண்டவனுடைய கிருபையால் அந்தகஜானாவை உன் வசமாக வந்துசேருது பாரென்று சொல்லிப்போய்விட்டார்இவ்விதமானகனவைஹசன்பானுகண்டுதிடுக்கிட்டெழுந்திருந்து தன்னுடைய தாதியிடமாக இந்தக் கனவின் சங்கதிகளைத்தெரிவித்தாள் இச்சேதியைக் கேட்டுமிகுந்த சந்தோஷத்துடனே யிருவருங்கூடி அம்மரத்தை அசைத்தார்கள் அப்போது அம்மரத்திலின்று ஒரு காய்ந்த கொம்புவிழுந்தது அக்கொம்பையெடுத்துக் கொண்டு நிலத்தில் குத்திக்குத்தி கிளறி கொஞ்ச மண்ணையெடுத்தார்கள் ஆண்டவன் கிருபையால் அவ்விடத்தில் பெரியவர் சொன்ன வாக்கைப்போல யேழுகினார் நிறைய அசறபி இருக்கக் கண்டார்கள் பின்னும் விதவிதமான பெட்டிகளில் நவரத்தினங்களும் நிறைந்தும் ஒருகோழிமுட்டைப்பிரமாணமுள்ள ஒரு ஆணிமுத்து மிருக்கக்கண்டார்கள் இவ்விதமான குதறத்துகளைஹசன்பானு பார்த்து வெகு மிகுந்த சந்தோஷமாய் ஆண்டவனிடமாக (௨) (௨) ரக்கா செய்து - ( ௨ ) ( ௨ ) சிஜ்தா செய்தாள் பின்பு தன்னுடைய தாதியுடனே சொல்லுகின்றாள் என்னுடைய அம்மாஜானே நீ இந்த சின்னம் பட்டணத்துக்குப்போய் நாம் இருக்கும்படியான இலுக்கன் காஞ்சம் வாங்கி ஒருவனிடம் கொடுத்து எடுத்துவரும்படியாகச்செ

ய்புமென்று ஹசன்பாஷா சொல்ல அம்மொழியைத் தாதிகேட்டு எ
ன்னுடைய உயிராகிய என்கண்மணியே நீ சொன்னதுபோல் நான்
போக யாதொரு தடங்கலில்லை யிந்த அத்வான காட்டில் உன்னைத்த
னித்துவைத்து நான் எவ்விதமாகப் போய் நீங்கள்சொன்ன சாமான்
களை வாங்கிவருவேன் ஆனால் உன்னிடமாக யாதாமொருவரிருந்
தால் நான் போய்வருவேன் இதனா லெனக்குப பயங்கரமா யிருக்கு
து எதாவது ஒரு கெடுதல் நேரிடுமானால் அதினால் மிகுந்தவருத்தம்
நேரிடுமென்று தாதிசொல்ல இவ்விதமாக இருக்கையில் இவளுடை
யசொந்த அடிமையானவேலைக்காரன் ஹசன்பாஷாவின் நசீபு இவ்வி
தமாகிவிட்டதேஎன்கிற விசனமடைந்துபக்கிருடையவேஷமெடுத்து
க்கொண்டு காடுமலைகள்தோறும் தேடிக்கொண்டு அன்றையத்தினம்
ஹசன்பாஷாவை வந்துபார்த்து காலில்கிடந்து புரண்டு அழுதுகொ
ண்டு இருப்பவனைக் கட்டித்தழுவிப்பிடித்து எடுத்துவைத்து ஹசன்
பாஷாசொல்லுகிறாள் நீ யேன்விசனப்படுகிறாய் எனக்குபடும்
விதியிருந்ததுநான்பட்டுதுலைத்தேன் இப்போது ஆண்டவனின்பேரி
ல்கிருபையிரங்கி இந்த வனாந்திரத்தில் தன்னுடைய குதரத்தாய என
க்குவேண்டி கஜானாவைக் கொடுத்திருப்பதால் நீ பாருமென்றுதான்
காண்பித்தாள் அந்த கஜானாவை அவன்பார்த்து மிகுந்தசந்தோஷப்ப
ட்டான் பின்பு அவனுக்கு உத்தரவுசெய்தாள்நீஇப்போதுகொஞ்சம்ப
ணத்தைக்கொண்டுபோய்நமக்கு இன்னும்படியான தினுசுகளும் வாங்
கிக்கொண்டு நம்மைச் சேர்ந்தவர்களுக்கும் என்சங்கதியைத் தெரி
யப்படுத்தி அவர்களையும் அழைத்துக் கொண்டு இன்னும் இ
வ்விடத்தில் வரப்பட்டவர்கள் யாவரையுஞ் சேர்த்துக் கொண்டு
இவ்விடத்தில் ஒருபெரியமஹல்கட்ட வேண்டியதற்காக நம்முடைய
பழையவேலைக்காரர்களையுந்தச்சர்களையும் கொல்லர்களையும் நல்லநல்
லவேலைக்காரர்களையும் அழைத்துக்கொண்டு வந்தால் நான் இவ்விட
த்தில் ஒருபெரியபட்டணமாகச்செய்விக்கவேண்டும் அந்தப்பட்டண
த்திற்குஷஹரே ஆபாதுஎன்றுபெயர்வைப்பேன் ஆனால் இச்சங்கதிக
ளைக்குறித்துவேறேயாதாமொருவருக்கும்பிரசங்கஞ்செய்யாதேயென்
அவனிடமாய் கொஞ்சம் அஷ்ரபிகளைக்கொடுத்தனுப்பினாள்பின்பு
இந்தகோகாயென்பவன் அந்தஅஷ்ரபிகளைவாங்கிக்கொண்டுமுன்னிரு
ந்தபட்டணம் போய்ச்சேர்ந்தான் அவ்விடம்போய்ஹசன்பாஷாவென்
பவளுடையபந்துசனங்களையும்வேலைக்காரர்களையுந் தேடிப்பார்த்தால்
அவர்கள் தங்கள்வீடுவாசல்களை இழந்து ஏழைகளாகி இருந்துநின்று



கொண்டிருப்பதையும்பார்த்து அவர்களையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து
இன்னும்படியான வஸ்துக்களை வாங்கிக்கொண்டுஹசன்பாஷாவென்
பவளிடத்தில்கொண்டுவந்துவிட்டான் அப்போது அவள் தன்னுடை
யவேலைக்காரர்களையும் பந்துக்களையும்பார்த்து மிகுந்தமனவருத்தப்ப
ட்டாள் பின்பு அவர்களும்ஹசன்பாஷாவைப்பார்த்து அதிக விசனம
டைந்தார்கள் அப்போது அவள் வந்தவர்களுக்கெல்லாம் மனத்தே
றுதல்சொல்லி தம்மிடத்தில்வைத்துக்கொண்டிருக்கையில்பின்புகோ
க்காயென்பவன் பட்டணம்போய் அவ்விடத்திலுள்ள தச்சன்கொல்
லன்கொத்தன் இவர்களுக்கெல்லாம் முதன்மையான பெரியமேஸ்திரி
யினிடமாகப் போய்சொன்னதாவது நீங்கள் தங்கள்தங்கள் வேலைக்கா
ரர்களை அழைத்துக்கொண்டு இன்னகாட்டுக்கு வருவீர்களானால் உங்
களால்நமக்குஒருவிஸ்தாரமானபெரிய பெரியவீடுகளும்பங்களாக்களு
ம்மெத்தைகளும்கட்டவேண்டியதென்று சொன்னசொல்லைக்கேட்டு
அதுபோலவே ஆட்களைச்சேர்த்துக்கொண்டு கொக்காயென்பவன்
கூடத்தொடர்ந்து வந்தார்கள் சகலரையும் ஹசன்பாஷாவென்ப
வளிடத்தில் கொண்டுபோய்விட்டான் பின்புவந்தவேலைக்காரர்களுக்
கு வேண்டியமரியாதைகள் செய்துவெகுமதிகளுங்கொடுத்து தான்
கொண்ட கருத்துபோல்மஹல்கள்மெத்தைகள்வீடுகள்கட்டும்படிக்கு
பிளான்கள் போட்டு இடங்களையுங் காண்பித்தாள் அதுபோலவே
லைசெய்யத்துவக்கஞ்செய்தார்கள் ஆகையால்தானெண்ணியபடி ஆறு
மாதத்துக்குள்ளாக விநோதவிசித்திரமானவீடுகள்கட்டிமுடிந்ததுபி
ன்பு வேலைக்காரமேஸ்திரிக்கு உத்தரவுஹசன்பாஷாசெய்தாள் ஆனால்
நீங்கள் நான்சொன்னதுபோல் கட்டிவேலையைமுடித்தீர்கள் அதற்கா
கநான் மிகுந்தசந்தோஷமடைந்தேனென்று அவ்வேலைக்காரர்களுக்கு
ம் மேஸ்திரிமார்களுக்கும் வேண்டியவெகுமதிகொடுத்து அவரவர்கள்
மனதைசந்தோஷப்படுத்தி சொன்னதாவது இவ்விடத்தில்நான் ஒருப
ட்டணங்கட்டி பெரியநகரமாகச்செய்யவேண்டியது அதற்காகநீங்கள்
என்னசொல்லுகிறீர்களென்று கேட்கஅப்போது அந்தவேலைக்கார
மேஸ்திரிகள் சொல்வார்கள் நீங்கள்சொன்னசங்கதியைக்குறித்துபெ
ரியபட்டணமாகக்கட்டவேணுமானால் நாங்கள்தங்கள் உத்தரவுப்படி
செய்வோம் ஆனால்நீங்கள்இத்தேசத்துபாத்துஷாவின் உத்தரவுபெற்று
க்கொண்டு தங்கள்மனம்போல் பட்டணங்கட்டினால்நலமாயிருக்கும்
அப்படி உத்தரவில்லாமல்கட்டுவீர்களானால் அதனால்பின்னுக்குபெரி
யகுற்றங்கள் வந்துநேரிடுமென்றுசொல்ல ஹசன்பாஷாவென்பவள்

கேட்டு இதுவும்நல்லதென்றெண்ணி ஆண்வேஷம்பூண்டு அதற்குத் தகுந்த லிபாசுகள் உடுப்புகள்தரித்துக்கொண்டு ஒருஅரபிக்குதிரையைச்சிங்கரித்து இரண்டு மூன்றுதட்டுகளில் முத்துகளும்நவரத்நாதிகளும் நிரம்பவெடுத்துக்கொண்டுதன்னோடு சிலகுதிரைகளுங்காலாள்களும் சேர்த்துதான் குதிரைமேலேறிக்கொண்டு ஒருகூட்டமாக அப்பட்டணம்போய்ச்சேர்ந்து பாத்துஷாவின் அரண்மனைவாசலின்முன்பாகநின்றுகொண்டு அவருக்குத்தெரிவிக்கும்படிக்கு அவ்விடத்திலுள்ளவர்களுக்குச்சொன்னதாவது நான்பாத்துஷாவைக்கண்டுதெரிவிக்கவந்திருப்பதால் என்னுடையசங்கதிகளைத்தெரியப்படுத்தவேண்டியதென்றுசொல்ல அப்படியேஅம்மனிதர்கள்சொல்லுவார்கள் ஓபாத்துஷாவே நம்முடைய அரண்மனைவாசல்முன்னே ஒரு சவுதாகருடையபிள்ளையானவன் அதிகசவுந்தரியமுள்ளவன்சிலஜனங்களோடுகுதிரைமேலேறிக்கொண்டு தங்கள்சமுகங்காணவேண்டிவந்திருப்பதால் தாங்கள் என்னவுத்தரவுசொல்லுகிறீரென்று கேட்க பாத்துஷாவானவர்சொன்னார் அப்பேர்ப்பட்ட சவுதாகருடைய மகனைநமது சமுகத்துக்கு மிகுந்த பெருமையாகவும் இச்சத்தாகவும் அழைத்துக்கொண்டு வரும்படிக்கு உத்தரவு செய்தார் அந்த உத்தரவுபோல வெகுபெருமையாகவும் அதபாகவும் . பாத்துஷாவின் சமுகத்தில் அழைத்துக்கொண்டு வந்து விட்டார்கள் அப்போது பாத்துஷாவைக்கண்டு மிகுந்த வணக்கத்துடனே தானும் தன்கூடவந்தவர்களும் தாஜிம்தஸ்லிமாத்துசெய்து வணக்கமாகநின்று தாங்கள்கொண்டுவந்தநவரத்தின தபக்குகளைப்பாத்துஷாவுக்குநஜராகவைத்து நிற்கையில் பாத்துஷாவானவர் அந்த நஜர்க்களான தபக்குகளைப்பார்த்து மிகுந்த சந்தோஷத்தை யடைந்தார்.

பின்பு மிகுந்த அருமையாக வந்த சங்கதிகளைக் குறித்துக்கேட்க நீர் எந்ததேசம் எந்தநகரத்திலுள்ளவர் என்ன சபபைக்குறித்து இவ்விடம்வந்தீர் என்றும் உம்முடைய பேர் என்னவென்றும் கேட்க இருகைகளையும் கட்டிக்கொண்டு மிகுந்த வணக்கத்துடனே சொல்லுகின்றதாவது நான் இன்னதேசம் இன்ன சவுதாகருடையமகன் என்னுடைய தாய் தகப்பன்வேண்டிய ஆஸ்திகளை யெனக்கு வைத்து விட்டு இறந்துபோனார்கள் என்னுடைய விதிவசத்தால் என் தேசத்தைவிட்டுப்புறப்பட்டுதேசங்கள்தோறும் சுற்றித்திரிந்துகொண்டு இவ்விடம் தங்களுடைய தேசம்வந்து சேர்ந்து நான்குடியிருக்கவுமெனக்கும் என் கூடவந்த சனங்களுக்கும் சவுக்கியமாயிருக்கப்பார்த்தேன் என்ம



னதுக்குதகுந்தபடிக்கு நானும் என்சனங்களும் இருக்க சவுக்கியமாக ஒரு இடம் தங்கள்நகரத்துக்கு அருகாமையில் இன்னநாட்டில் எனக்கு கொஞ்சம் இடங்கொடுத்தால் அந்தவிடத்தில் நானிருக்க ஹுஸேனே ஆபாது என்னும் ஒருபட்டணம் உண்டாக்கி நானிருக்கும் படியாக எண்ணங்கொண்டிருப்பதால் அவ்வெண்ணத்தை நிறைவேற்றும்படிக்கு தங்கள் உத்தரவு ஆகவேண்டியது இந்தச்சொல்லை பாத்துஷாகேட்டு மிகுந்த சந்தோஷத்தையடைந்து இன்னமும் அவருக்குத் தகுந்தபடி விலைமதிக்காதிருக்கிற கில்லத்தென்னும் உடுப்புகள் கொடுத்து பாத்துஷாசொல்லுகிறார் என்பிரியமான சாலியகானவாலிபனே உனக்குத் தாய்தந்தை யில்லாவிட்டால் இன்றையதினத்தில் நின்று அவரைப்போல் என்னைப்பாவித்துக்கொண்டு என்னுடையபிள்ளைகளில் நீயும் எனக்கு ஒருபிள்ளையாக இரு உனக்குஎங்கேயிருக்க இஷ்டமும் நாட்டமும் கொள்வியோ அவ்விடத்தில் உன் மனம்போல் செய்யவேண்டியது அதைக்குறித்து நீ சந்தேகப்படவேண்டியதில்லை உனக்கு என்னென்ன வேண்டுமோ அதுகளையெல்லாம் என்னிடமாய் வாங்கிக்கொள்ளலாமென்றுசொல்ல அப்போது ஹுசன்பானுவென்பவள் மிகுந்த வணக்கத்துடனே ஆதாபு தஸ்லிமாத்து செய்து சொல்லுகிறாள் என்னுடைய கூதாவந்து மேலாகராட்சகனே பாத்துஷாவே இந்த அடியானைத் தம்முடைய குமாரர்களில் என்னைச்சேர்த்தபடியால் இந்த மேன்மையான பெருமையாலெனக்கு ஒரு பேர் கொடுக்கவேண்டியது அதற்குத் சந்தோஷமடைய வேண்டுமென்றுசொல்ல அப்போது அம்மொழியைக் கேட்டு மாஹருஷாவென்று பெயர் கொடுத்துப் பின்னும் சொல்லுகிறார் என்னுடையபிரியமாகிய மகனே நீ சொன்னகாடானது வெகுதூரமாக இருப்பதால் இந்த பட்டணத்துக்கு அருகாமையில் உன்னுடையபேரால் எந்தவிடத்திலவேண்டுமோ அந்த இடத்தில் ஒரு பெரியபட்டணமாகக்கட்டிக்கொள்ள வேண்டியது அந்த இடத்தில் நீ மிகுந்தசவுக்கியத்தை அடைந்துகொண்டிருக்கலாமென்றும் இவ்விதமாக பாத்துஷா சொன்ன வுடனே ஹுசன்பானு கேட்டுக்கொண்டாள் எவ்விதமானால் என்னுடைய தகப்பனாரே பாத்துஷாவே நீங்கள்சொன்னது சரிதான் எனக்கும் அந்தநாடுதான் மிகுந்த சவுக்கியமாயிருக்கின்றது இதுவல்லாமல் தங்களருகாமையில் நான் ஒரு பட்டணம் கட்டினால் எனக்குசரியான அதபு அல்ல நான் எண்ணங்கொண்டது தங்களுடைய மிகுந்த கிருபைதயவுக்காக இந்த அடியானுக்கும் அந்தகாட்டில்தான் சுருக்காக தாங்களே

னக்கு பட்டணம் கட்டி அதைப்பெருமைபடுத்தி சனங்களைச்சேர்க்க
வேண்டியதனாலுனக்கு உத்தரவுசெய்யவேண்டியது அவ்விதமாக
பாத்துஷா உத்தரவுகொடுத்து தம்மிடத்தி லிருக்கப்பட்டவேலைக்கா
ர்களை அழைத்துச்சொன்னார்நீங்கள் இந்தப்பிள்ளையோடுபோய் இவ
சொல்லுகிறதுபோல் அவ்விடத்தில் பெரியபட்டணமாகக் கட்டி சீக்
கிரத்தில் விருத்திசெய்ய வேண்டியது என்று உத்தரவு செய்த
னுப்பினார் அதுவேலைக்காரர்களையும் கூட்டிக்கொண்டு அவ்வி
ம்விட்டு தன்னுடைய சாகைக்குவந்து சேர்ந்து தான்கொண்ட கருத்
தைப்போல் பட்டணமுண்டாக்க வேலைக்காரர்களுக்கு உத்தரவுசெய்
தாள் அதைப்போல் வேலைக்காரர்கள் வெகு சாக்கிறதையாக இரவு
வும் பகலுமாக இரண்டுவருஷத்தில் பெரியபட்டணமாக மாடங்களும்
மெத்தைகளும் வீடுகளும் கட்டிபட்டணத்தை பிரபல்லியமாக மனித
ர்களும் வந்து சேர்ந்துகொண் டிருக்கும்போது பெருமையான ப
ட்டணத்தை தயார் செய்து அந்தப் பட்டணத்துக்கு ஷஹரே ஆபா
து என்றும் பெயர்வைத்தார்கள் பின்பு அந்த வேலைக்காரர்களுக்கும்
எசமான்களுக்கும் அவரவர்களுக்குத் தகுந்தபடிக்கு வேண்டிய இ
னாம்கள் கொடுத்தனுப்பிவிட்டார் பின்பு ஹசன்பானு வென்பவ
ள பாத்துஷாவுடைய சமுகத்துக்கு போக்குவரத்தா யிருந்தாள் அ
ப்படியிருக்கையில் ஒருநாள் பாத்துஷாவுடைய சமுகத்துக்கு முஜா
செய்யவந்தாள் அப்போதுபாத்துஷாவானவர் தர்வேஷ்யென்கிற கள்
ளனைப்போய் காணுதற்குத்தயாரா யிருக்குஞ் சமயத்தில் ஹசன்
பானு வென்பவள் பாத்துஷாவைக்கண்டு தெரிசனம் செய்தாள்
அப்போது ஹசன்பானுவை பார்த்து மகனே நான் என்னுடைய பி
ரியமாகிய தர்வேஷினிடமாகப் போகும்படியால் நீயும் என்கூடவர
வேணுமென்றுசொல்ல அதுபோல் பாத்துஷாவுடன் கூடப்போனாள்
பின்னும் பாத்துஷா ஹசன்பானுவைப் பார்த்து மகனே இக்காலில்
இந்த ஜமானவில் இவரைப்போலொத்த பெரியோர்கள் கவுஸ்களை
ப்போல் பெருமைபெற்றவர் அவரைக்கண்டு தெரிசனை செய்து வந்தா
ல் நம்முடையபாவமெல்லாம் துலைந்துபோகுமென்றும்நமக்குமிகுந்த
நன்மை கிடைக்குமென்று சொன்னவுடனே ஹசன்பானுவென்பவள்
சொன்னாள் தாங்கள்சொன்ன சொற்களை அந்ததர்வேஷுடையபெ
ருமைக்குச்சரியல்ல அவர் துனியாவைவிட்டு அல்லாவுடையவஹதா
னியத்தெண்ட வழியில் உம்மைக்கொண்டுபோயிருப்பதால் அவனை எ
வ்விதமாகச்சொன்னபோதிலும் சரியாயிருக்குமென்று பாத்துஷாவு



க்கு மறுமொழி உத்தரவுசொல்லி தன்மனதில் அவர்செய்த செயல்
களையெல்லாம் எண்ணி மிகுந்த சந்தோஷத்துடன் பாத்துஷாகூட
ப்போனாள் அந்ததர்வேஷென்கிற பக்கிர்வீட்டுக்குப்போனார்கள்போ
னவுடனே பாத்துஷாவையும்ஹசன்பானுவென்னு மாஹருஷாவையு
ம் இருக்கும்படிக்கு வெகுமரியாதையாக உட்காரவைத்துஇருவர்களை
யும் மிச்சமாக துவாசெய்து சிரசில் கைவைத்து போற்றி வாழ்த்தி
பக்கீரும் அருகாமையில் உட்கார்ந்தார்.

பின்புபாத்துஷாவானவர் மாஹருஷாவைப்பார்த்துஇந்தஷயித்
தானான பக்கீருடைய பெருமைக்குதக்கது அவனுக்கு முன்பாகபாத்
துஷா மிச்சமாகப்புகழ்ந்துகொண் டிருக்கின்றார் இந்த மாஹருஷா
என்னும் ஹசன்பானு தன்தலையைக் கீழேகுனிந்துக்கொண்டுபாத்
துஷாசொன்ன மொழிகளையெல்லாம் கேட்டுபின்பு மனதில் எண்
ணுகின்றாள் எவ்விதமானால் எனக்கு சர்பருசியான கிருபைசெய்கி
ன்றதெல்லாம் இப்போ என்னிடமானவரத்தினத்தின்பெருமையால
ல்லவா முன்னாளில் ப்ரஜைக்கு சவுதாகருடைய மகளல்லவா என்
னுடைய வீடுவாசல் முதலாகிய சகிதங்களையெல்லாம் கொள்ளை
கொண்டு எனைக்காட்டில் அனுப்பிய பாத்துஷாவும் இந்த பக்கிரு
மல்லவா என்கிறதென்று மனதிலெண்ணிக் கொண் டிருக்கையில்
பாத்துஷாவானவர் பக்கீரிடமாக உத்திரவாங்கிக்கொண்டு போகஎ
ழுந்து நின்றார் அப்போது மாஹருஷா எழுந்து கைகட்டி மிகுந்தவ
ணக்கத்துடனே சொல்லுகின்றாள் ஆனால் இந்த பீர் முர்ஷதுடைய
மையாகிய அடியாள் வீட்டிற்கு தங்களுடைய பாதம் வந்துதானல்
என்னைப் பிடித்தபாவமும் பலாக்களும் நீங்கி எனக்கு தங்களால்
மிகுந்தபெருமை யடைவேன் ஆனால் பெரியோர்களுடைய துவா
யெனக்கு மிகுந்தபலனும் பெருமையும் கிடைக்குமென்றுசொல்ல
ள்ளானஷயித்தான் இப்படியும் இன்சானுடைய ரூபமுங்கொண்
டிருக்கப்பட்ட பக்கிர் என்னும் தர்வேஷ்சொன்னான் பாவா நீர் இவ்
விதமாகச்சொல்வதானால் அகத்தியமாய்த்தங்களுடைய வீட்டுக்குவ
ருவேனென்றுசொல்ல பின்னும்மாஹருஷாபாத்துஷாவின்கூட சொ
ல்லுகின்றாள் என்னுடைய தகப்பனே பாத்துஷாவே யென்னுடைய
வீடானது துலைவிலிருப்பதால் இந்தப்பெரியோராகிய தர்வேஷ்சாயபு
அவர்களுக்கு மிகுந்த வருத்தமாகும் ஆகையால் தம்முடையகரத்
தில்பர்ஜைக்கு சவுதாகருடையமஹலானது பாத்துஷாக்களுக்கு லாயக்

கான் வீட்டானபடியால்இப்போது அந்த மஹலானது குடித்தனமில்
லாமல் காலியாக இருப்பதைப் பாத்துஷா வாகிய என்னுடைய தகப்ப
னே - (உ௯)(௩) தினத்துக்காக அப்பெரியோருக்கு விருந்துசெய்ய என
க்கு உத்தரவுகிடைக்க வேணுமென்றுசொல்ல பாத்துஷாவானவர்
சொல்லுகின்றார் என்னுடைய பிரியமாகியமகளே அந்தவீடு காலியா
க இருப்பது உனக்கு எவ்விதமாகத்தெரியவந்தது என்று கேட்க அ
தற்கு இந்த நகரத்திலுள்ளவர் அந்த வீட்டின் பெருமைக் குறித்துமி
குதமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள் அதினாலெனக்குத் தெரியவந்தது
என்றுசொல்ல அப்போதுபாத்துஷாவானவர் சொல்லுகிறார் என்னு
டைய குமாரனாகிய மாஹருஷாவே அந்த வீட்டை உனக்கே இனாமாக
க்கொடுத்துவிட்டேன் அதில்நீமனங்கொண்டதுபோல் இருக்கலாமெ
ன்றுஉத்தரவுசெய்துவிட்டார் இந்தச்சொல்லைக்கேட்டவுடனே ஆதா
புதசலிமாத்து செய்து தன்னுடைய சனங்களைக் கூட்டிக்கொண்டு அ
ந்தமஹலுக்குவந்துசேர்ந்து பின்பு தன்னுடைய வீட்டைப்பார்த்துதூ
ண்களையும் வாசற்கால்களையும் கட்டிக்கொண்டு மிகுந்த மனவருத்
தமாய் கண்ணீர்சொரிய அழுது தன்மனிதர்களோடு சொல்லுகிறான்
இந்தவீட்டை பிராமத்துவெகுதுப்பறவுசெய்துஇன்னம்இந்தவீட்டை
நாலுபக்கங்களிலும் சுத்திசெய்துசிங்காரிக்கும்படிக்கு உத்தரசெய்து
விட்டுதன்னுடைய பட்டணத்துக்குப்போனான் ஒருமாதத்துக்குப் பி
ன்பு அத்திருட்னுக்கு விருந்துசெய்ய தகுந்த சாமான்கள் தயார்செ
ய்து தனது நகரத்திலுள்ள பழையவீட்டுக்கு அனுப்பி நவரத்தினங்கி
ளிழைத்த தட்டு முட்டுகளும் பொன்வெள்ளியால் செய்திருக்கப் ப
ட்ட பலபல சாமான்களும் சரிகையால் செய்திருக்கின்ற விதவிதமா
ன உடுப்புகள் முதலியதுமான சாமான்களையெல்லா மெடுத்துக்கொ
ண்டு தன்னுடைய வீட்டில்வந்து சகலசாமான்களையும் கட்டில்மெத்
தை நாற்காலிமுதலிய நவரத்தினமிழைத்த வஸ்துக்களையெல்லாம் எ
ந்தெந்த இடங்களில் வைக்கவேண்டுமோ அந்த இடங்களில்வைத்
துசிங்காரித்துவிட்டு பாத்துஷாவுடைய சமுகத்துக்குபோனான் உட
னே மிகுந்த வணக்கத்துடனே ஆதாபு தசலிமாத்து செய்து கை
கட்டிக்கொண்டு சொல்லுகின்றான் என்தகப்பனை ஏழைகளை
இரட்சகனேநான் பர்ஜக்கு சவுதாகருடைய வீட்டில் சிலநாளிருக்
க என்மனம் விருப்பங்கொண் டிருப்பதால்எனக்கு உத்தரவாகவே
ண்டியதென்று கேட்க பின்னுஞ் சொல்லுகிறான்தங்கள்சமுகத்திற்
கு எப்போதும்காலை மாலையில் வந்துகண்டுகொள்வேன்நாளையதின



த்தினத்தில் தங்களுடைய பிராகியநகவேந் என்பவருக்கு நான்விரு
ந்துகொடுக்க நாட்டங் கொண்டிருக்கிறேன் அதற்காகவும் எனக்கு
உத்தரவு ஆகவேண்டியது என்றுகேட்க பாத்துஷாகேள்விப்பட்டு
மிகுந்த சந்தோஷத்தையடைந்து நல்லது மகனே உன்மனம்போ
லேசெய்யலாமென்று உத்தரவுசெய்தார்பின்னும் மகனே என்னுடை
ய ராசாங்கத்துக்கு நீயே முக்தாராக இருப்பாயென்றுசொன்னார் இ
வ்விதமாக பாத்துஷாவின் மொழியைக்கேட்டு மிகுந்தசந்தோஷத்து
டனே மனம் பூரித்தெழுந்து தசலிமாத்துசெய்து சொல்லுகின்றான்
இந்த அடியான்பேரில் இவ்விதமான கிருபையிருப்பதால் எனக்குயா
தொரு குறைவுமில்லை எவ்விதத்திலும் அடியேன் தங்களுடைய உத்த
ரவுபெற்றவனா யிருக்கிறேனென்றுசொல்லி பாத்துஷாவுடைய உத்த
ரவுவாங்கிக்கொண்டு தன்தகப்பனார் வீட்டுக்குவந்து பக்கீருக்கு விரு
ந்துகொடுக்க தயார்செய்துவிட்டு ஒருவன்கூடசொல்லுகின்றதாவது
எவ்விதமானால் மக்காரனாகிய பக்கிரிடமாகப்போய் நீ என்னுடைய
சலாம் பந்தகி சொல்லி பின்பு தாங்கள் நாளையத்தினம் வீட்டுக்கு வி
ருந்துக்காக வரும்படியாகிய மாஹருஷாஉத்தரவு செய்திருப்பதால்
தாங்கள் இதற்காகஎன்ன உத்தரவுசொல்லுகிறீர்களென்று கேட்கஅ
ந்தப்பக்கீரான கள்ளன் தாங்கள்சொன்னதுபோல் நாளையத்தினம்
அகத்தியமாக வருகிறேனென்று சொல்லி இன்னும் என்னுடையது
வாமாஹருஷாவுக்குசொல்லவேண்டியதென்னுமிசமாகத்தங்களுக்கு
துவாசெய்தார்களென்றுசொல்ல வேண்டியது என்று சொல்லி அ
னுப்பினான் அதுபோல அந்தஆளிதன்வந்துசொன்னதின்பின்பு விரு
ந்துக்கு ஆகவேண்டியபலபலவிதமான பதார்த்தங்கள்சமைக்கும்படி
க்கு வேண்டியசாமான்களையெல்லாம்அழைப்பித்துதயார்செய்துகொ
ண்டிருந்தான் பின்பு தான்சொன்னதுபோல பக்கீர்என்பவன் மறுநா
ள் தன்னிடத்திலிருக்கப்பட்ட கள்ளர்கள்(௪0) பேரையும் அழைத்து
க்கொண்டு வழக்கம்போல வெள்ளிபொன்கட்டியின்மேல்நடந்துகொ
ண்டு மாஹருஷாவுடைய வீட்டுக்குவந்தார்கள் உடனே கீழிறங்
கிவேண்டியமரியாதையுடன் அழைத்துக்கொண்டுபோய் விலைமதிக்க
கிற மஸனதென்னும் ஆசனத்தின்பேரில் அனேகவிதமான நவ
ரத்தின மிழைத்த சரிகைப்பட்டினால் அந்த மஸனதென்னும் ஆசன
த்தில் இருந்து அதின்மேல் உட்காரவைத்து அவருக்கு ஐம்பது (௫)
(௰)நவரத்தின மிழைத்த தட்டுகளில்மாணிக்கம்இரத்தினம் பலபல
ஆபரணங்களை பக்கீருக்கு முன்பாகக்கொண்டு வந்து

வைத்தார்கள் அதைப்பார்த்தவுடனே இந்தபக்கீரானவன் மனதில்மி
ந்த சந்தோஷத்தையடைந்து நாமிந்த இந்தவீட்டில்கொள்
ளைசெய்து கொண்டுபோகவந்ததிலும் இப்போயிருக்கின்றதை
ப்பார்த்தால் மெத்த மேன்மையாயிருக்கின்றது இன்றிராத்திரிக்கு
நமக்கு நல்லகொள்ளைகிடைக்குமென்கிற நாட்டங்கொண்டு சொல்லு
கிறான் பாவாஇந்தவஸ்துக்களெல்லாம் தங்களுக்கேதகுந்தது நான்து
னியாவைவிட்ட பக்கிரென்பவனுக்கு இதுகளையென்னத்துக்காகவேண்
டுமென்று தட்டுகளைதன்கையால் நகர்த்திவிட்டான் பின்புதஸ்தர்கான்
என்னும்விரிப்பைகொண்டு வந்துவிரித்துமேன்மையானநவரத்தினமி
ழைத்த சிலிம்சாகொண்டுவரச்செய்து அவர்களுக்கு கை
கழுவபன்னீர்சொரிந்தார்கள்பக்கீரென்பவனோடு வந்தவர்களும் கரங்
களைக்கழுவிக்கொண்டார்கள் பின்புவிதவிதமான பலாவுகளும் பதா
ர்த்தங்களும் விதவிதமான மிட்டாய்மிதாயிகளும் விதவிதமானகனி
வர்க்கங்களும் எல்லாவஸ்துக்களும் கொண்டு விரிப்பின்மேல் பரப்
பிவைத்து மாஹருஹாமிருந்தவணக்கத்துடனே உபசரித்து நீங்கள்யா
தொன்றுமனதில் குறைவில்லாமல் சாப்பிடவேண்டியதென்று மிருத
மாகக்கெஞ்சி கேட்டுக்கொண்டாள்பின்பு நல்லதுபாவா உன்னுடைய
சொல்லைத்தட்டாமல் நான்வந்திருக்க சாப்பிடுகிறேனென்று சொ
ல்லி (உ) (௩)வாய்கொஞ்சமாயெடுத்துக்கொண்டு கையையெடுத்து
கொண்டான்மற்றவர்களெல்லாம் மனம்கொண்டதுபோல் சாப்பிட்
டார்கள் பின்பு ஹுசர்த்தே தாங்கள்மனப்பூரணமாக ஏன்சாப்பிடவி
ல்லையென்று மாஹருஹாகேட்கப்பக்கீர்சொல்வான் பாவாநான்எங்கே
யும் இபாபத்திலிருக்கக்கடவன் அதிகமாகச் சாப்பிட்டால் என்தி
பாபத்துக்குகுறைவுவரும்ஷபித்தான் என்னும்கடவுளென்னைக்கெடுத்து
விடும்ஆகையால்நான் தூநாளைக்கு(௩)(௪) பருக்கையெடுத்துக்கொள்
ளுகிறவழக்கம்இருப்பதால்தங்களுக்காகஎன்(௩)(௪)வாய்சாப்பிட்டே
னென்றுசொல்லி மனதில்நினைக்கின்றான் நாம்இந்தவஸ்துக்களையெல்
லாம் யாதொன்றுவிடாமல் ராத்திரிக்கு வந்து கொள்ளைசெய்து
போகலாமென்று சந்தோஷப்பட்டுபின்பு தர்வேஷும்மத்தபக்கீர்களு
ம் சாப்பிட்டுத்தீர்ந்தபின்பு உசத்தியான இஸ்தத்துபோல்கருன் அத்த
ர்களும் அத்தர்தானங்களில் கொண்டுவந்து பக்கீருக்கு மிருதமாய்
பூசிமற்றவர்களுக்கு அத்தர்களைபூசி தாம்பூல தட்டுகளும் கொண்டு
வந்து வைத்தார்கள் பின்பு அந்தத்தாம்பூலத்தைபக்கீரும் மற்றவர்க
ளும்கைகளில் எடுத்துக்கொண்டு மிருதமாய்மாஹருஹாவைவாழ்த்த



நிபோற்றி துவாசெய்துவிட்டு தம்முடையபக்கீர்கள் கூடயெழுந்தி
ருந்துக்கொண்டு தம்முடையசாகைக்குப்போய்விட்டான்பின்பு நீங்கள்
வீட்டுக்குப்போய் தம்மோடிருக்கும்(௪௰) கள்ளர்களுக்கும் சொ
ல்லுகிறான் இதுவரை நாம் போய்சாப்பிட்ட வஸ்துகளெல்லாம் நமக்
குஹலால்ஆச்சுது ஆனால்நாம் இன்றைய இரவிற்போய் யாதொருவஸ்
துகளையும் விடாமல்கொள்ளைசெய்து வரவேணுமென்றுசொன்னான்
இவ்விதமானபேச்சுகள்பேசிக்கொண்டிருக்கையில் இரவுவந்துவிட்
டது பின்பு அந்த தர்வேஷென்னும்பக்கீரானவன் தன்னோடிருக்கு
ம் (௪௰) கள்ளர்களை கூட்டிகாணுமக்களர்கள்போடும்படியான உடுப்
புகள்போட்டு ஆயுதங்களையெடுத்துக்கொண்டு ஆளுக்கொருவெங்கு
பைகளும் எடுத்துக்கொண்டு மாஹருஹாயென்னும் ஹுசன்பானோ
பெண்ணுடைய வீட்டுக்கு பாதிராவில் புறப்பட்டுப் போகிறான்
இதற்குமுன்பு இந்தக்கள்ளர்கள் நமதுவீட்டைக்கொள்ளை செய்
யவருகிறார்களென்றுதன்னுடையவேலைக்காரர்களுக்குச சொன்னாள்
நீங்கள்யாவரும் இன்றிரவில் நித்திரைசெய்யாமல் ஜாக்கிரதையாய்விழி
த்துக்கொண்டிருக்கவேண்டியது எந்தவஸ்து எவ்விடமிருக்குமோ
அந்தந்த இடங்களி லிருக்கவேண்டியது யாதொன்றையுமெடுத்துபத்
திரபடுத்தவேண்டியதில்லைகதவுகளெல்லாம்திறந்துவைக்கவேண்டி
யதென்று உத்தரவுசெய்து பின்பு அந்த நகரத்துகொத்துவாலுக்கு
ஒருகாகிதம் எழுதி அனுப்பினாள் எவ்விதமானால் இன்றையதினம்
இரவில் என்வீட்டைக்கொள்ளையடிக்கசிறிதுகள்ளர்கள்வருகிறதாக
நான் கேள்விப்பட்டிருப்பதால் நீங்கள் கொஞ்ச சனத்தைக்கூட்டிக்
கொண்டு என்னுடைய வீட்டில் ஒருபக்கத்தில் வந்திருக்கவேண்
டியது பின்புநீங்கள் என்வீட்டில்கள்ளர்கள்வந்து நுழைந்தவுடனே
சத்தங்களானால் உடனேநீங்கள்வந்து அந்ததிருடர்களைப்பிடித்துக்
கொண்டு போகவேண்டியது என்றுகாகிதமனுப்பினதுபோல்கொத்
துவால்(௨௱) சேவகர் ஆயுத ஜனத்துடனே ஹுசன்பானோவென்பவள்
வீட்டைச்சுற்றி பதுவிருந்தார்கள் பின்பு அந்தக்கள்ளர்கள்வந்துவீட்
டைப்பார்த்தார் வீடுகள்தோறும்போட்டதுபோல் வெளி
க்கதவு முதலியஎல்லாக்கதவுகளும் திறந்திருப்பதைப் பார்த்துசந்தோ
ஷமுற்று நுழைந்தார்கள் அங்குள்ள கொண்டுவந்தபைகளில்விலைபெற்
றபொன்வெள்ளிநகைகளும் நவரத்தினங்களுமெடுத்துக்கட்டிதலைக
ளில் தூக்கிக்கொண்டு வெளியிற்புறப்பட்டார்களப்போ
து திருடர்களைப்பிடிக்கும்படிக்கு காத்துக்கொண்டிருந்த கொத்தவால்

சேவகர்களும் நான்குதிக்கிலும் பதிவிருந்தவர்களெல்லாம் ஒரேகூட்
டமாகவந்துமிகுந்தசத்தத்தோடு இந்தபக்கிரோடு(௪௰)பேரையும்சேர்த்
துச்சேர்த்துப்பின்கட்டுமார்கட்டி அவரவர்கள் மூட்டைகளை அவரவர்
கள்தலையில்வைத்துபின்புஹசன்பானுவென்னும் மாஹ்ரூஷாவென்
பவனைகொத்துவால்நேட்டான்இந்தக்கள்ளர்களுக்குஎன்னஉத்தரவெ
ன்றுகேட்கவிடிந்தபின்பு பாத்துஷாவிடம்அனுப்புவேனென்றுசொல்
லிபொழுது விடிந்தபின்பு இந்தக்கள்ளர்களையெல்லாம் பாத்துஷாவின்
அரண்மனைக்குக்கொண்டுபோகும்படிக்கு உத்தரவுசெய்தான்பாத்து
ஷா இவர்களை என்னதண்டனைசெய்கிறரோ அதுபோல்நடத்தவேண்
டியதென்றுசொன்னான்பின்பு அந்தகொத்தவாலுக்கும்சேவகர்களுக்கு
ம்வேண்டியவெகுமதிகொடுத்தனுப்பிவிட்டு தான்போய் தன்னுடைய
கட்டிலின்மேல் படுத்துக்கொண்டான் பின்பு இந்தகொத்துவாலும்
விடிந்தபின்பு தன்னுடையசேவகர்களும் இக்கள்ளர்களைகயிதுசெய்
து பாத்துஷாவின் அரண்மனைவாசலிற்கொண்டுபோய் நிறுத்தினான்
அவருக்குஇச்சங்கதியைத்தெரியப்படுத்துமுன்னமே அவருடையதற்
பாரிலிருக்கும் மந்திரிபிரதானிகள் விசாரித்தார் இனறிரவில்
இன்னபக்கத்தில் மிகுந்த சத்தமும் யிரைச்சலுமாக கேள்விப்பட்ட
துஅதின்சபபு என்னவென்று கேட்கும்போது கொத்துவால் வந்து
இராத்திரிபர்ஜக்குசவுதாகர்வீட்டில்கொள்ளைசெய்த சங்கதிகளைத்தெ
ரிவித்தான் அச்சங்கதியைபாத்துஷாவுக்கறிவிக்கமிகுந்தமனவருத்தம
டைந்து சொன்னார்அந்த கள்ளர்கள் எங்கேயென்று கேட்க கொத்து
வால்சொன்னான் அந்தக்கள்ளர்களைப்பிடித்துபின்கட்டுமார்கட்டி அவ
ர்கள்கொள்ளைசெய்தஉடமைகளுடனே அவர்களைக்கொண்டுவந்திருக்
கிறேனென்றுசொல்லபின்பு அந்தக்கள்ளர்களைக்கொண்டுவரும்படிக்
குபாத்துஷா உத்தரவுசெய்தார் உடனே அந்தக் கள்ளர்களைகொத்து
வால் கயிறுடனே பாத்துஷாவின் சமுகத்தில் ஹாஜர் படுத்தினான்
அப்போது பாத்துஷாசொன்னார் யிவர்களை நான்பார்த்திருப்பதுபோ
ல் பார்வைக்குத் தோணுகிறதென்றும் என் சினேகிதர்களைப்போ
லவும்தோணுகிறதென்றும் சொல்லி கொண்டிருக்கும் தருணத்தி
ல்மாஹ்ரூஷாஎன்பவன் குதிரைசவாரியாகி அவ்விடமவந்தான்வந்து
பாத்துஷாவுக்கு ஆதாபதசலிமாத்துசெய்து மிகுந்தவணக்கத்துடனே
நிற்கையில் பாத்துஷாஉட்காரும்படிக் குத்தரவுசெய்ய ரத்தினமிழை
த்த நாற்காலியின்பேரில் உட்கார்ந்தான் பின்பு பாத்துஷாகேட்கி
ன்றார் மகனே இராத்திரி உன்வீட்டில் கள்ளர்கள்வந்து கொள்ளை



செய்தார்கள் என்று நான் கேள்விப்பட்டேன் அதின்சங்கதியென்ன
வென்று கேட்க சஹாட்டு அந்த கள்ளர்கள்அந்த வேளையில் கொத்து
வால் வராவிட்டால் என்வீட்டில் கொள்ளைசெய்தது மல்லாமல் எ
ன்னையும் என்வீட்டிலுள்ள ஜனங்களையெல்லாம் கொன்றுபோடுவா
ன் இந்த மொழிகளைக்கேட்டவுடனே பாத்துஷா கள்ளர்களை என்ன
ருகாமையில் கொண்டுவரும் படிக்கு உத்தரவுசெய்தார் அப்படியேஅ
ந்த கள்ளர்களை கண்டபடிக்கு கொண்டுவந்து அருகில் நிறுத்தி
னார்கள் பாத்துஷாவென்பவர் பார்த்து சிரித்துச் சொல்லுகிறார் என்
னுடைய மகனே இவனைப்பார்த்தால் நம்முடைய தர்வேஷாகியஷா
ஷா வென்பவனைப் போல் தோன்றுகிறதென்று சொல்லி இன்னமு
மவரருகில் கொண்டுவரும்படிசொல்ல அவர்களை அருகில்கொண்டுவ
ந்துவிட்டார்கள் அவர்களைப்பார்த்தவுடனே நன்றாகத் தெரிகின்றது
அந்தஷாஷாசாயபு அவருடையமூன்றுபிள்ளைகளையும் நன்றாகப்பா
ர்த்து கொத்துவாலுக்கு உத்தரவுசெய்தார் இவர்களுடைய மூட்டை
களை அவிழ்க்கச்சொன்னார் அப்படியே மூட்டைகளை அவிழ்த்து அ
திலுள்ள வஸ்துக்களை யெல்லாம் பாத்துஷாவுக்குமுன்பாக எடுத்து
வைத்தார்கள் பின்பு அவர்களை பரிசோதனை பண்ண அவர்கள் அ
ரையில் கழுத்துகளில் சுருக்குப் போடும்படியான கயிறுகளும் மயிரா
ல் செய்திருக்கப்பட்ட கயிறுகளும் அவரவர்கள் அரையில்கட்டி யி
ருந்ததையும்எடுத்துவைத்தார்கள் இதுகளையெல்லாம் பாத்துஷாபார்
த்து மிகுந்த ஆச்சரியப்பட்டு வருத்தமடைந்து என்னென்னதெல்லாம் எ
ண்ணி ஆங்காரத்துடனே இச்சமயமேஇந்த அல்லாவுடைய பகையான
லானத்துபெற்ற ஷைத்தான்களை கழுவில் லேற்றும்படிக்கு உத்தரவுசெ
ய்தார் அதுபோல் யாதாமொருவர் இவ்விதமான வேலைகள்செய்யாம
லென்றுசொல்லி வாய்மூடுவதற்கு முன்பாக இந்த பக்கிரென்னும் க
ள்ளனையும் அவனோடிருந்த (௪௰) கள்ளர்களையும் கழுவில்தூக்கி வி
ட்டார்கள் அப்போது ஹசன்பானுவென்பவள் நம்முடைய பகை
யாளிகளான ஷைத்தான்கள் இறந்துபோனார்கள என்று தானிருந்த
நாற்காலியிலிருந்து எழுந்திருந்து ஆதாபு தசலிமாத்துசெய்து நின்றுக
ொண்டு சொல்லுகிறாள் ஜஹாப்பனா என்னும் லோகரட்சகராகி
ய தம்முடைய அடியாள் யாரென்றால் பர்ஜக்கு சவுதாகருடைய பெ
ண்ணானவள் பாத்துஷாவானவர் தாங்கள் இந்தபக்கீராகிய பெரியோ
ருக்கு வேண்டி தம்முடைய அடியாளை ஊரைவிட்டு துரத்திவிட்டீர்
அப்போதும் தங்கள் அடியாள்பேரில் யாதொரு குற்றமுமில்லை ஆ

...ல் என்தகப்பனுருடைய ஆஸ்திகளும் இந்த பக்கீருடைய வீட்டிலிருக்கின்றது குதாவந்து இப்போது அவன்வீட்டை வெட்டிப் பார்ப்போமாகில் என்னுடைய பொய்மெய் யெல்லாம் தங்களுக்குதெரியவரும் தங்களுடைய கண்ணுல்பார்க்கலாம்பின்பு இச்சங்கதிகளை பாத்துஷா கேள்விப்பட்டு மிகுந்த விசனத்துடனேகைவிரலை வாயில் வைத்து கடித்துக்கொண்டு பின்பு பாத்துஷா அந்த பக்கீருடைய வீட்டை பரிசோதிக்கும் படிக்கு உத்தரவுசெய்தார் அப்படியே அவன் வீட்டை வெட்டிப் பார்க்கும்போது ஹசன்பானுவென்பவள் வீட்டில் கொள்ளைசெய்த சகல வஸ்துக்களு மிருந்தது அதுகளையெல்லாம் எடுத்துக் கொண்டுவந்து பாத்துஷாவின் முன்பாக வைத்தார்கள் அப்போது ஹசன்பானுவைப் பார்த்து அதிகவெட்கமடைந்து சொன்னதாவது தெரியவந்தது மகளே ஹசன்பானுவே என்னுல் தெரியாமல்நடந்த சங்கதியைக்குறித்து மனம்பொறுக்கவேண்டியதென்று மிகுந்த சந்தோஷமாக வாழ்த்திப்போற்றி நீ இப்போதுசெய்த நடப்புகளெல்லாம் என் மனதிற்கு சந்தோஷமாச்சுது உன்னைப்போல் கல்விசாலியும் நசீபுமுள்ளவர்கள் இச்செகத்தி லொருவரும் இல்லையார்களென்றுசொல்லி அதிக அருமைசெய்தார் அப்போதுஹசன்பானு வெழுந்து வணங்கிச்சொல்லுகிறாள் இந்த வஸ்துகளை தங்களுக்கு நஜர்செய்தேன் இன்னமும் தங்களுடைய அடியாளானவள் எண்ணங்கொண்டதாவது நான் இப்போதுகட்டிய ஷாரே ஆபாதுக்கு என்வீட்டிற்கு தங்களுடையபாதம்வரும்படிக்கு ஆசையுள்ளவளா யிருக்கிறேன் அவ்விடம் தாங்கள் வருவீர்களானால் என்னுடைய கஜானுக்களைக் காண்பித்து என்னுடைய ஹவால்களையெல்லாம் தங்களுக்குத் தெரியப்படுத்தி சகல வஸ்துக்களையும் தங்களுக்கு ஒப்பித்துவிடுவேனென்று பாத்துஷாவுக்குந் தெரிவித்து தன்னுடைய பட்டணம்போய்ச்சேர்ந்தாள் அச்சொல்லை பாத்துஷாகபுல்செய்து கொண்டார் பின்பு ஹசன்பானுவென்பவள் தன்னுடையபட்டணத்தையும் மஹால்களையும் சிங்காரிக்கும் படியாகவும் உத்தரவுஞ்செய்தாள் அப்படியேபட்டணத்தையும்மஹால்களையும்மதிப்புக்கடங்காத வஸ்துக்களைக்கொண்டு சிங்காரஞ்செய்து பாத்துஷா வந்திருக்க ஒரு சிம்மாசனமேடை அநேகவிதமான இரத்தினங்களால் சிங்காரித்து வைத்தார்கள் இப்படியிருக்க இரண்டு மூன்றுநாள் சென்றபின்பு பாத்துஷாவானவர் தன்னுடைய படைகள் பவுஜுகளுடனேஷாரே ஆபாது என்னும் பட்டண மாஹருஷா நகருக்கருகிற்போய்ச்சேர்ந்தார்கள் அச்செய்தியை



ஹசன்பானுவென்பவளறிந்து தன்னுடைய ஜனங்களுமாக வந்து பாத்துஷாவைவெகுவினோத வேடிக்கையாய் அரண்மனைக்கழைத்துக் கொண்டுபோய் சிம்மாசனத்தில் உட்காரவைத்து கைகட்டிக்கொண்டு நின்றாள்.

பின்பு பாத்துஷாவுக்காக நஜர்செய்ய ரத்தினதட்டுகளில் நவரத்தினங்களைநிரப்பி முன்னால் கொண்டுவந்து வைத்தாள் அதைப் பாத்துஷா பார்த்து மிகுந்த சந்தோஷத்தையடைந்தார் பின்பு இந்த ஹசன்பானுவென்பவள் பாத்துஷாவை அழைத்துக்கொண்டுபோய் தனக்கு கஜானு அகப்பட்டதையெல்லாம் திறந்து திறந்து காட்டினாள் பின்பு இந்த கஜானுவையெல்லாம் தாங்களெடுத்துக்கொண்டு தங்களுடையகஜானுவில் சேர்த்துக்கொள்ளவேண்டியதென்று சொன்னவுடனே பாத்துஷா மிகுந்த சந்தோஷமாகி தன்னுடைய மந்திரிகளுக்கு உத்தரவுசெய்தார் இந்தகஜானுவையெல்லாமெடுத்துக்கொண்டு நம்முடையகஜானுவில் சேர்க்கவேண்டுமென்று சொல்லஅப்படியேகஜானுவைஎடுக்கப்போய் அதைப்பார்த்தவுடனே பாம்புகள் தேள்கள்போல இவர்கள் கண்ணுக்குத் தோற்றியது அதைப்பார்த்தவுடனே பயந்து பாத்துஷாவுக்கு சங்கதிதெரிவித்தார்கள் அவர் மிகுந்த ஆச்சரியப்பட்டிருக்கையில்ஹசன்பானுவென்பவள் இச்சங்கதி கேள்விப்பட்டு அதிக மனவருத்தமடைந்து முகத்திலுடைய எவ்வர்னமான ரூபம் வேறுபட்டிருப்பதை பாத்துஷாவானவர்பார்த்துச் சொல்லுகிறார் எனது பிரியமுள்ள மகளே நீ யாதொன்றுக்கும் யோசிக்க வேண்டியதில்லை இந்த கஜானுவை அல்லாகுதஆலா உன்னுடைய ருக்காக கொடுத்திருப்பதால் அப்பொருள் களுக்கு நீயேமுக்தாரல்லாமல் வேறில்லை ஒருவரும் அதை எடுக்கமாட்டார்களென்று பலபலவிதமாக ஹசன்பானுவென்பவளுக்கு நல்விசனமாகச் சொல்ல அதைக்கேட்டு ஹசன்பானுவென்பவள் மிகுந்த சந்தோஷமடைந்து எழுந்து கைகட்டி ஆதாபு தசலீமாத்துசெய்து சொல்லுகின்றாள் அது எவ்விதமெனில் என் தகப்பனே இந்தகஜானுவையெல்லாம் ஆண்டவன்பேரால் செலவுசெய்ய தாங்களெனக்கு உத்தரவுசெய்ய வேண்டியதென்று கேட்க அவர்களச்சொல்லைக்கேட்டு மகளே உன்மனங் கொண்டதுபோல் நீ செய்யலாமென்று உத்தரவுகொடுத்துபின்பு பாத்துஷாவானவர்ஹசன்பானுவினிடமாக உத்தரவு பெற்றுக்கொண்டு தன்னுடைய சேவகரை அவள்வீட்டி

ல் கரவு விருக்கும்படிக்கு உத்தரவு கொடுத்துவிட்டு தன்னுடைய தளங்களுடனே தனதுநகரம்வந்து சேர்ந்தார்.

பின்பு ஹசன்பானுவென்பவள் அன்றுமுதல் ஆண்டவன்பேரால் சகாவத்தென்னும் தருமஞ்செய்ய ஒரு பெரிய முசாபர்கானவென்னும் ஒருசத்திரங்கட்டி யாதாமொருவருக்குமென்னென்ன ஹாஜத்துவேண்டியிருக்கிறதோ அதுகளைக்கொடுத்து ஏழை யெளியோர்களுக்கு அன்னதானம் சொர்ண்ணதான முதலிய சகாவத்தென்னும் தர்மஞ் செய்துக்கொண்டு இன்னம் இன்னம் ஏழையெளியோர்கள் சத்திரத்திலிருந்து அவர்கள் தங்கள் ஊருக்குப் போகும்போது அவர்களுக்கு வேண்டிய வஸ்துக்களைக்கொடுத்து மனுப்புவது மன்றிபின்னும் யாதாமொருவர் இவர் பேரைக்கேட்டு இந்த ஹசன்பானுவினிடமாக வந்து தனக்கு என்னஹாஜத்தாயிருக்கிறதோ அதைக் கேட்பார்கள் அப்படியே அதுகளையெல்லாம் அவர்களுக்கு கொடுத்து மனது சந்தோஷமாக்கி போகும்படியாக அனுப்புவதுமாயிருந்[illegible]ச்செம்சதிகள் தேச தேசங்கள்தோறும் இவளிடமாக வேண்டிய வஸ்துக்களைப்பெற்றுக் கொண்டுபோன முசாபர்கள் இவளுடைய சகாவத்தைக் குறித்து பிரசங்கஞ்செய்தார்கள் அது எவ்விதமெனில் ஷாறே ஆபாது என்னும்பட்டணத்தில் ஒரு பெண் பிறந்திருக்கிறாள் அவளுடையசகாவத்தும் நன்மையான நடப்பும் எவ்விதமாகச் செய்கின்றாள் அல்லாவுடைய பந்தகளுக்கு எசான்செய்வதில் தன்னுடையசிரசைச் சாய்ந்துக் கொள்ளுகிறாள் தன்னுடைய மதுரமான சொற்களால்யாதொருமனிதர்களையும் அடிமையாகச் செய்து கொள்ளுகிறாள்இவ்வி[illegible]குணமுள்ளபெண்ணை யாதாமொருவர் கண்ணாற்பார்த்ததுமில்லை காதாற் கேட்டதுமில்லை பின்னுமவளுடைய சேவகர்கள்மிகுந்த அமான்தார்கள் யாதொரு குற்றமுள்ளவர்களல்ல பின்பு யாதொரு ஏழை யெளியோர்களுக்கு ரூபாய்களினாலும் ஹாசறபிகளினாலும் சீமானாக்கி விடுகிறாள் இந்த ஜமானத்தில் அவளுடைய பேரும் கீர்த்தியும் சகாவத்தினாலும் சவிக்கத்தினாலும் சங்கிரிகுரியனில் நின்றும் இவ்வுலகத்தின்கண் பிரகாசிக்கின்றது.

இச்செய்தி கொஞ்சம் கொஞ்சமாக ஷாறேநார் ஜம்தேசத்தில் தெரியவந்தது அத்தேசத்துபாதுஷாவும் அநேகஞ்சீமைகளும் ராணுவங்களும் வைத்துக்கொண்டு செங்கோல்செலுத்தி வருகிறார் அந்தபாத்துஷாவுக்கு ஒரு ஆண்பிள்ளை முனீர்ஷாமி என்னும் பேருள்ளவன் அவன்- (மசா) (மஎ) வயதுள்ளவனாகவும் அவன் மிகுந்த அழகு சவுந்தரியமுள்ளவனாகவு மிருந்தான்.

## முனீர்ஷாமி என்பவன் ஹசன்பானுவின் அழகு சவுந்தரியத்தைக்கேட்டு தனதுநகரத்தைவிட்டுத் துன்பப்பட்ட கிஸ்ஸா.

அப்படியிருக்க அவன் இந்த ஹசனபானுவினுடைய சகாவத்தும் அவளுடைய அழகு சவுந்தரியமும் வெகுவாய்க் கேள்விப்பட்டு பிரமித்து அவளைக்கண்ணாற் பாராதிருந்தும் இவள் இப்பேர்ப்பட்ட பெண்ணோ வென்கிற எண்ணத்தால் அவள் பேரில் ஆசை கொண்டவனாய் பின்பு ஒரு படமெழுதப்பட்ட சித்திரக்காரனை அழைத்துச் சொல்லுகிறான் உனக்குவேண்டிய பொருள்தருகிறேன் நீ ஷாறே ஆபாது என்னும் பட்டணத்துக்குப்போய் ஹசன்பானுவென்னும் பெண்ணுடைய ரூபத்தைக்கண்டு நீ எவ்விதத்திலும் ஒரு படமெழுதிக்கொண்டு வரவேண்டியதென்று சொல்ல அவன் அப்படியே சிலநாள் கெடுவைப்பெற்றுக் கொண்டு தனக்குவேண்டிய பொருள்களும் வாங்கிக்கொண்டு சிலநாளைக்குப் பின்பு ஷாறே ஆபாது என்னும் பட்டணம்போய்ச் சேர்ந்தான்.

பின்பு ஹசன்பானுவின் சேவகாளின்வேலை எப்பேர்பட்டதென்றால்பிறதேசங்களிலிருந்து யாதாமொருவர் வந்தால்அவர்களை அழைத்துக்கொண்டுபோய அவர்களுக்கு வேண்டிய பதார்த்தத்துடனே அனேகவிதமான கறிதினுசுகளும் அன்னங்கொடுக்கும் படியான வேண்டிய சேவகாளை நியமித்திருப்பாள் பின்னும் முசாபர்களுக்கு இவ்விதமாக மனதிருத்தி யடையும்படிக்கு செய்து பின்பு ஹசன்பானுவின்சமுகத்தில் அவர்களைக்கொண்டுபோய் விடுகிறது பின்பு அவர்களுடைய செய்திகளை நன்றாய் விசாரித்து அவர்களுக்குவேண்டிய வஸ்துக்களைக்கொடுத்துஅனுப்பிவிடுவாள் அதுபோலவே இந்தசித்திரக்காரனையும் ஹசன்பானுவின்சமுகத்தில் கொண்டுபோய் விட்டார்கள் அப்போது ஹசன்பானுஒருபர்தாபோட்டு அவனுடைய செய்திகளைவிசாரித்தாள் அப்போதுஅவன்சொன்னான் நான் தங்களுடைய உகூரில்சாயவில் இருக்கும்படியான எண்ணங்கொண்டிருக்கிறேனென்றும் வயதுசென்றதுபோக மற்றவயதுள்ளளாவயில் தங்களுடைய ஆசரவில்நின்று என் ஆயிசு உள்ளவரையில் இருப்பேனென்று சொல்ல பின்பு ஹசன்பானுஅவனைக்கேட்டாள்நீ என்னதொழில்செய்யப்பட்டவனென்று கேட்க அப்போது அவன்சொன்னான்சித்திரவேலைசெய்யப்பட்டவன் எவர்களுடைய ரூபமானபோதிலும்யாதொருகுற்றமில்லாமல் எழுதப்பட்டவேலைக்காரனென்றுசொன்னான்அந்தச்சொல்லை ஹசன்பானுகேட்டுமிகுந்தசந்தோஷமாகி அவனைத்தம்மிடம் சேவகத்தில் வைத்துக்கொண்டாள் கொஞ்சநாளைக்குப்பின்புமனதிலெண்ணினாள் இவனுடையபொய்மெய்யை அறியலாமென்றுதன்னுடையரூபம்போலஎழுதவேணும்என்கிறஎண்ணங்கொண்டு அவனைக் கூப்பிட்டு ஹசன்பானுசொல்லுகின்றாள் ஓய்சித்திரனே நீ என்னைப் பார்க்காமல் என்னுடைய ரூபத்தை எழுதென்று சொல்லஅப்போது நான்தங்களைக்கண்ணாற்பார்க்காமல் எவ்விதமாக எழுதுவேன் நீங்கள் மாடியின்மேல்நின்றுகொண்டு ஒருபெரியபாத்திரத்தில்தண்ணீர்நிறையவிட்டு அந்தத்தண்ணீரை நீங்கள்மேலிருந்துபார்த்தால்உங்களுடையரூபம்அந்தத்தண்ணீரில்தோணும்அந்தரூபத்தைப்பார்த்து நான்எழுதுகிறேனென்றுசொன்னான்அதுபோலஹசன்பானு தன்னுடையமனிதர்களுக்கு உத்தரவுசெய்ய ஒருபாத்திரத்தில் நிரம்பதண்ணீர்வார்த்துக்கொண்டுபோய் வைத்தார்கள் அந்தத்தண்ணீரை ஹசன்பானு மேலேநின்றுபார்த்தாள் உடனே அந்தசித்திரக்காரன்அந்தநிழலைப்பார்வையிட்டு தன்னுடைய வீட்டுக்குப்போய்இரண்டு



தினத்தில் இரண்டுரூபமெழுதினான் அதில்ஒன்றுமிருந்த படத்தைதவைத்துக்கொண்டு ஒருபடத்தை ஹசன்பானுவிடத்தில் கொண்டுவந்தான் அந்தபடத்தைப்பார்த்துமிகுந்தசந்தோஷத்தையடைந்தாள் அவனுக்குவேண்டியவெகுமதிகள்கொடுத்து அனுப்பிவிட்டாள்பின்புஇவன் அந்தநகரத்தைவிட்டு பயணப்பட்டு கொஞ்சநாள் நடந்து தன்னுடைய பட்டணம்போய்ச்சேர்ந்து முனீர்ஷாமியிடத்தில்ஹசன்பானுவினுடைய ரூபமானபடத்தைக்கொடுத்து வேண்டிய இனாம்பெற்றுக்கொண்டான்பின்புஅந்த படத்தைப்பார்த்து சுத்துமாறிகீழேவிழுந்து கொஞ்சநேரம் சென்றபின்பு உசாராகிதன் மனதிலெண்ணினான் நாம்இவ்விடம் விட்டுப்புறப்பட்டால் நலமென்றெண்ணிதன்னுடைய தாய்தகப்பனிடமாகப்போய்இச்சங்கதிகளைத்தெரிவித்து உத்தரவுகேட்டான் அதற்கு அவர்கள் சம்மதப்படவில்லை பின்பு பாதிராவில் தன்னுடைய வேஷத்தைமாற்றிபக்கிருடையவேஷம்போட்டுக்கொண்டு தான் ஒண்டியாக தன்னுடைய நகரத்தைவிட்டு ஷாறே ஆபாதுஎன்னும்பட்டணத்தைநோக்கிப்போகையில்வெகுஅவஸ்தைகளெல்லாம் பாதையில்பட்டுக்கொண்டுசிறிதுநாளைக்குப்பின்புஷாறே ஆபாதென்னும் பட்டணம்போய்ச்சேர்ந்தான்பின்பு இவன்யாதொருவஸ்துவையுந் சாப்பிடமலும் உறங்காமலும்இவன்வெகுவிசனத்தையடைந்துகொண்டு ஓரிடத்திலிருக்குபோதுஅச்சங்கதிகளைப் பார்த்துஹசன்பானுவுக்கு அவனுடைய மனுஷாள்தெரிவித்தார்கள் எவ்விதமானால் ஒரு முனீஷா இந்தப்பட்டணத்தில் வந்திருக்கிறான் அவன் யாதொருவஸ்துவையும் தின்பதுமில்லை யாதொருவரோடும்பேசுகிறதுமில்லை என்று சொல்ல அச்சேதியைக்கேட்டுஹசன்பானு அந்தமனிதனை தம்மிடத்துக்கு அழைத்துக்கொண்டுவரும்படிக்கு உத்தரவுசெய்தாள் அதுபோலமுனீர்ஷாமி என்பவனைக்கொண்டுவந்து அவள்முன்பாக விட்டார்கள் அப்போது அவனைப்பார்த்து ஹசன்பானு கேட்டாள் ஓ மனிதனே நீ உண்ணாமலும் தின்னாமலும் ஒருவரோடு பேசாமலும் இருக்கின்ற சங்கதியென்னவென்றுகேட்கபின்னும் சொல்லுகின்றாள் உனக்குவேண்டியபொருள் தருகிறேன் அதைவாங்கிக்கொண்டு நீபோகலாம் உனக்கு ஆகவேண்டியவேலைகளுக்குஉபயோகமாகுமென்று சொல்லி இனாம்தருகுறேன் நீவாங்கிக்கொள்ளென்றுசொன்னாள்பின்பு முனீர்ஷாமி என்பவன் இந்த சொல்லைக்கேட்டு சொல்லுகிறான் பணமும்மற்றவஸ்துக்களுக்கும் வேண்டியவரவில்லைகுறைவுள்ளவனல்ல நானும் மிகுந்த அயிஸ்வரியமுள்ளவன் கார்ஜம் என்னும்தேசத்துபா

த்துஷாவுடைய சஜாதவாகிய குமாரனுயிருப்பேனென்றுசொல்லஹசன்பானு கேட்டாள் நீர் பாத்துஷாவுடைய குமாரனுயிருந்து நீங்களுடையவேஷம் எடுத்துக்கொண்ட சபபு என்னவென்று கேட்க அதற்கு முனீர்ஷாமி என்பவன்சொன்னான்நான்உன்னுடையரூபத்தின் படத்தைப்பார்வையிட்டுஅதின்மேல்நான்பயித்தியங்கொண்டு என்னுடைவேஷத்தை இழந்து நான் இக்கோலமாக இவ்விடம் வந்திருக்கின்றேன் என்றுசொல்லி வெளியில் உள்ள சங்கதியையை நான் உனக்கு தெரிவித்தேன் நீஎன்னையென்னசெய்யவேணுமோஅதைச்செய்யலாமென்றுசொன்னான் இவ்வார்த்தைகளைக்கேட்டவுடனெஹசன்பானு தன்தலையைக்கீழேசாய்த்துக்கொண்டாள் பின்புகொஞ்சநேரம்பொறுத்து தலையை உயர்த்தி அவனைப்பார்த்து சொல்லுகின்றாள் ஓவாலிபனே நீ யிப்போதுசொன்ன சொற்களை மனதில் நின்று நீக்கிவிடுஎன்றும் சொல்லி பின்னும் சொல்லுகின்றாள் நீ மண்ணோடு மண்ணாய்த்தூசியைப்போல்வான்லோகத்தில் காற்றுகளுடன் பறந்து போகிலும் என்னிடமாகச்சேரமாட்டாயென்று சொன்னாள்

பின்னும்சொல்லுகின்றாள் என்னுடைய-(எ) சவால்களையும் அறிந்து யாதாமொருவன் எனக்கு தெரியக்கண்டு வந்து சொல்வானாகில் அவனுக்கு நான் பாரியாள் ஆகுவேனே தவிர வேறில்லையென்று சொன்னாள் இம்மொழியை முனீஷாமியென்பவன் கேட்டு உன்னுடைய வாசற்படியில் என்னுடைய உயிரைவிட்டு விடுவேனென்று சொன்னான் அச்சொல்லை ஹசன்பானு கேட்டு தான் மெள்ளக் குஞ்சிரிப்புகொண்டு [illegible]டுகின்றது மெத்தவருத்தமில்லை யென்னிடமாக நீ சேருகின்றது வெகுவருத்தமாகும் என்று சொல்ல அச்சொல்லைக் கேட்டு சொல்லுகின்றான் உன்னுடைய பிரியமாகிய உயிரின்மேல் ஆணையாகயிருக்கும் நீசொல்லுகின்ற-(எ)சவால்களையும் எனக்கு தெரியும்படிக்கு சொல்லவேண்டியது என்று சொன்னான் அவ்விதமாக முனீர்ஷாமியென்பவன் சொன்னவுடனே ஹசன்பானு சொல்லுகின்றாள் எவ்விதமானால் (முதலாவது சவால்) ஒருதடவைபார்த்ததைமற்றொருதடவைபார்க்கஆசையாயிருக்கின்றதுஇதனுடைய ஜவாபு கொடுக்கவேண்டும் அதற்காகஅந்தவஸ்து எங்கேயிருக்கின்றது என்று கேட்டு இந்த சவாலாவது எப்பேர்ப்பட்ட சொல்லாகின்றது எங்கே யிருக்கின்றதென்றுகேழ்க்க அம்மொழியை ஹசன்பானுவென்பவள்கேட்டு குஞ்சிரிப்பாகச்சிரித்து பின்பு சொல்லுகின்றான் நல்லது அந்தவிசாரம் எனக்குத் தெரியுமானால்நா



ன் உன்னையேன் கேட்பேனென்று சொல்ல அச்சொல்லை முனீர்ஷாமியென்பவர் கேட்டு தன்தலையை கீழேசாய்த்துக்கொண்டு பின்பு மனதில் எண்ணினார் இதற்காக நாம் என்ன செய்யலாமென்று இவளை[illegible]கொண்ட ஆசை நிறைவேறாமல் எவ்விதமாக நம்முடைய நகரத்துக்குப்போகிறதென்று எண்ணங்கொண்டு மிகுந்தவிசனத்தையடைந்துகொண்டிருக்கின்ற சமையத்தில் ஹசன்பானுவென்பவள் சொன்னாள் ஓ, வாலிபனே நீஇவ்விதமான விசனத்தையடைவதில் என்னுடைய நினைவைஉன்மனதில் நின்றெடுத்துவிட்டால்நலமிருக்கும் வீணாக உயிரையும் தேகத்தையும் இழந்துபோகாமல் உனக்கு வேண்டியபொருள் செலவுக்குத் தருகிறேன் உன்மனதுக்குவந்தாப்போல் நீ எங்கேயாவது போகலாமென்று சொன்னாள் அதற்கு முனீர்ஷாமி சொல்லுகிறார் இவ்விடம்விட்டுமறுதேசம்போவதைப்பார்க்கிலும்உன்னைபார்த்துகொண்டுஉன்னுடையபட்டணத்திலிருந்துதிரிந்துகொண்டுஇவ்விடத்திலிறப்பதுஎனக்குமிகுந்தசந்தோஷமாகவும் நன்மையாகவு மிருக்குமென்றுசொல்லஅதற்கு ஹசன்பானுவென்பவள் சொல்லுகிறாள் இவ்விதமான யெண்ணமுள்ளவனே நம்முடைய பட்டணத்தில் நின்று துரத்திவிடப்படும் ஆனால் நீ நல்வழியாகப்போனால்நல்லது இல்லாவிட்டால் மானக் குறைவாய்ப்போகிறது நலமல்லவென்று சொல்ல அம்மொழிகளை முனீர்ஷாமி கேட்டு இவள் நமது நம்பிக்கையில் நின்று வேறுபட்டவளாய்ப்போனாளென்று தன்மனதி லெண்ணினான்நம்முடைய தேசத்துக்குப்போகாமல் இவ்விடங்களில் ஒரு வருஷவரையில்காடுமேடுகள் திரிந்து இவளுடைய ஆசை நீக்கவேணுமென்கிற நாட்டமாய் [illegible] மனதில் எண்ணிக்கொண்டு வெளியிற் புறப்பட்டான் அப்படி இருக்கும்போது அவன் தங்களுடைய தேசத்திலுள்ள சிலசவுதாகர்கள் இவனுடைய முகத்தைப் பார்த்து தன்னுடைய பொருள்களை இழந்து இவ்விதமான வருத்தமடைந்திருக்கிறானென்று மனதிலெண்ணி நீயார் எந்தநகரிலுள்ள மனிதனென்றுகேட்க அப்போது நான் முனீர்ஷாமி யென்றுசொல்ல அவர்கள் தங்களோடு வரும்படியாக கூப்பிட்டார்கள் நான்வரமாட்டேன் என்னுடைய மனங்கொண்டவஸ்து எனக்குக் கிடைத்தால் அப்போது நான் வந்து சேருவேனென்று சொல்லக்கேட்டு இவன் கையில் கொஞ்சம்பணங்களை செலவுக்காக கொடுத்துவிட்டு அவனைவிட்டுப் போய்விட்டார்கள் இந்த முனீர்ஷாமி என்பவன் காடுகள்வனாந்திரங்களில் இந்த ஹசன்பானுவென்னும்பெண்பேரைச்சொல்லிக்கூ

ப்பிட்டுக்கொண்டு இரவென்றும் பகலென்றும் தெரியாமல் அலைந்து அழுது புலம்பிக்கொண்டு மலைகளைக்கண்டால் தன்னுடைய தலையை அந்த மலைகளில் மோதிக்கொண்டு பலபலவிதமான துன்பப்பட்டு இவ்விதமாக காடுகளில் திரிந்து இருப்பிடமில்லாமல் அலைந்துகொண்டு ஹசன்பானுவின் படத்தை தன்னுடைய கழுக்கட்டியில் இடுக்கிக்கொண்டு கொக்கைப்போல் அலைந்துக்கொண்டு திரிகின்றான் அவன்கொண்ட கோலங்களைப்போல் ஹசன்பானுவென்பவள்பேரில் ஆசைகொண்டு அனேக பாத்துஷாக்களுடைய பிள்ளைகளும் அனேக அயிஸ்வரிய வான்களுடைய பிள்ளைகளும் காடு வனாந்தரங்களில் அலைந்துகொண்டு திரிகின்றவர்களும் அனேகர் இவ்விதமானதுன்பத்தில் அகப்பட்டு அனேகர் இறந்துபோயிருக்கின்றார்கள் ஒருவராவது இவளுடைய சவால்களை அறிந்து அவ்ளுக்கு ஜவாபு சொன்னவர்கள் ஒருவராவது இல்லை பின்பு இந்த முனிர்ஷாமி இவ்விதமாக காடுகள் வனாந்திரங்கள் திரிந்து அவன்கொண்ட எண்ணம் நிறைவேறாமல் அவன் இவ்விதமாக அலைந்து அலைந்துகொண்டு எமன்தேசத்து வனாந்திரமான காட்டில் போய்ச்சேர்ந்தான்.

பின்பு அவ்விடத்தில் ஒரு மரத்தின் கீழே இருந்துகொண்டு மிகுந்த துக்கத்துடனே அழுது புலம்பிக்கொண்டு இருந்தான் அப்படியிருக்க அத்தேசத்துபாத்துஷாவின்குமாரன்முன்கண்டஹாத்திமென்பவர் வனாந்திரத்தில் வேட்டைகள் ஆடிக்கொண்டு வருகையில் ஒரு சத்தமானது வெகு விசனமாக இவருடைய காதில் விழுந்தது பின்பு தன்னுடைய சேவகக்காரர்களுக்கு உத்தரவுசெய்தார் இந்த சத்தம் எங்கே இருந்து வருகிறது அங்கேபோய் அறிந்துவரும்படிக்கு உத்தரவுசெய்தார் பின்பு ஹாத்திமுடைய மனிதர்கள் தேட விதவிதமாகப்புலம்பி அலைகின்ற சத்தத்தைக்கேட்டுகொண்டுபோர்கள்சத்தம்வருகின்ற மூலையை நோக்கிப்பார்த்துக் கொண்டு போனார்கள் பின்பு அவன் அழுதுகொண்டு இருப்பதைப் பார்த்து அவனுடைய சங்கதிகளைக்கேளாமல் ஹாத்திம்இடமாகவந்துசொல்லுகின்றார்கள்ஓ, பாத்துஷாவே ஒருமரத்தின்கீழேஎவ்வர்ணமாகியவாலிபனைப்பார்த்தால்ராசாக்கள்பாத்துஷாவின்குமாரனைப்போல்தோணுகின்றது அவன் அழுகின்றதுயரத்தை இன்னவிதமென்று சொல்லக்கூடாது அவன் கண்ணைத்திறந்து ஒருவரையும் பார்க்கிறதுமில்லை ஒருவர்கூடவும் பேசுகிறதுமில்லை என்று இவ்விதமாக இவர்கள் சொல்லக்கேட்டு ஹாத்திமென்பவர் த



ன்னுடைய குதிரைமேலேறிக்கொண்டு ஒண்டியாய் அவனிருக்குமிடத்துக்கு வந்து கொஞ்சம் தூரமாக நின்றுகொண்டு இவனுடையகோலங்களையெல்லாம் பார்த்து அவனழுகின்ற துயரத்தினால் ஹாத்திமென்பவர்தாமும் மிகுந்த மனஸ்தாபப்பட்டு [illegible] தன்னுடையமனதில் எண்ணினார் ஆண்டவனே இந்த வாலிபனுக்கு இவ்விதமான விசனத்தின்சங்கதி இவன்பேரிலென்ன [illegible] நேரிட்டதென்று தன்குதிரையிலிருந்து கீழேயிறங்கி அவனருகில்வந்து நின்றுகொண்டு அவனைப்பார்த்து சொல்லுகிறார் ஓ வாலிபனே இப்பேர்ப்பட்ட விசனம் உனக்கு எந்தவஸ்துவால்நேரிட்டதென்று கேழ்க்க அம்மொழியை முனிர்ஷாமி என்பவர்கேட்டு தன்னுடைய தலையையுயர்த்திகண்ணைத்திறந்து பார்த்தார் அப்போது ஹாத்திமென்பவர் மிகுந்த வாலிபனும் சவுந்தரிய முள்ளவனுமாய் பாத்துஷாக்களுடைய உடுப்புகள் தரித்துக்கொண்டு நிற்கின்றதைப்பார்த்து தன்னுடைய வர்த்தமானங்களைச்சொல்லத்துடங்கினார் அது எவ்விதமெனில் என்னுடையசகோதரனே நானென்ன சொல்வேன் என்றால்முடியாத காரியமாயிருக்கின்றது இதுவல்லாமல் வேறொன்றுமில்லை என்னுடைய வருத்தமாகிய மனநோயைத் தீர்க்கும்படியான மனிதர்களுண்டானால் என்னுடைய சங்கதியைத்தெரியப் படுத்துவேனென்றுசொனார் அச்சொல்லைக்கேட்டு ஹாத்திமென்பவர் சொல்லுகிறார் எனதுபிரியமுள்ள தம்பியே நீ உன்னுடைய சங்கதியைக்குறித்து யாதொரு குறைவில்லாமற் சொல்வீராகில் நான் ஆண்டவனுடைய வழியில்நின்று பீடை இடுக்கங்களையும் சங்கடத்தையும் தவிர்க்க நான் இடுப்பு கட்டினவனாயிருக்கிறேனென்றுசொல்லி இனி உன்னுடைய வேலையைக்குறித்து நான் பின்னிடமாட்டேன் ஆனால் உனக்கு உன்னுடைய ஆசையிருக்குமானால் உனக்குவேண்டிய தவலத்தையும் உனக்கு சேனையும் திரவியமும் தருகிறேன் அல்லது உனக்கு யாதொருவர் பகையாளியிருந்து அவர்களை காண்பிப்பாயாகில் இப்பொழுதே அப்பகையாளிகளை நிர்த்தூளிசெய்து விடுகிறேன், அல்லது நான் அவர்களிடமாக என்னுயிரை இழந்துபோவேன் இதுவல்லாமல் யாதொரு பெண்பேரில் இச்சைப்பட்டவனாயிருந்தால் அதற்காகவேண்டிய பிரயத்தனஞ்செய்து முடிப்பேன் ஆனாலச்சங்கதியாயிருக்குமானால் ஜனுதியிலாக மாட்டாது ஆனால் ஆண்டவன் கிருபையால் உன்மனக்குறைவை எவ்விதமானாலும் நான் தீர்ப்பேன் நீ பெண்பேரில் இச்சைவைத்திருந்தால் நான்சேர்த்து வைப்பேன் நீ யாதொன்றுக்கும் சந்தேகப்படவேண்டாம் பின்

னும் யாதொருபகைவனிட தலைவேண்டுமாகில் இச்சணத்தில்கொண்
கொண்டுவந்து தருவேனென்றும் இவ்விதமான சொற்கள் ஹாத்தி
மென்பவர் சொல்ல முனீர்ஷாமி என்பவர் மிகுந்த சந்தோஷப்பட்டு
தன்னுடைய அழுகை நிறுத்தி ஆபிரீன் மர்ஹபா மர்ஹபா என்று
சொல்லி ஆண்டவனை மிகுதமாகப் புகழ்ந்து ஹாத்திமுக்கும் துவா
செய்து சொல்லுகின்றார் ஆ, என்னுடைய பிரியமாகிய வாலிபருள்
ள சாகிபே உபகாரியே நான் ஏழையாகிய அடியேனுக்கு இவ்விதமா
ன சொற்களைச் சொல்லி மனதிருப்தியடையும்படிக்கு செய்தாய்
சொன்ன யென்று துவாசெய்து தன்னுடைய கழுக்கட்டியிருந்த ஹ
சன்பானுவின் படத்தையெடுத்துக் காண்பித்துச் சொல்லுகிறார்
இவ்விதமானரூபத்தைக்காணுகிறவன் எவ்விதமாய் உயிர்வைத்திருப்பான்
நீர்தான் பார்த்துச்சொல்ல வேண்டியது இவ்விதமாயிருப்பதால் என்
னுடைய திரேகத்தை போக்கடிக்காமல் இருக்கக் கூடுமா வென்று
சொல்ல இவ்விதமான மொழிகளையும் படத்தையும் ஹாத்திமென்பவ
ர்பார்த்து தனது புத்தி தடுமாறி யாதொன்றும் பேசாமல் ஒரே நிலையா
க சற்றுநேரம் சென்றபின்பு சொல்லுகிறார் இனி நீர்இவ்விதமான வி
சனத்தை விட்டு உறுதிகொண்டு ஆண்டவன்பேரில் நாட்டமாய் நீர்
சபர்செய்ய வேண்டியது நானே உன்னுடைய வேலையில் யாதொருகு
றைவு செய்யமாட்டேன் ஆனால் நீ இச்சைகொண் டிருக்கும்படியான
பெண்ணை உன்னிடமாகச்சேர்க்கும்வரையில் உன்னைக்கைவிடமாட்
டேன் இவ்விதமாகத்தைரியப்படுத்தி முனீர்ஷாமி யென்பவரைத்தன
துசுகரமான வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் அவருக்குதலைமு
ழுக்காட்டி நல்ல உடுப்புகள் உடுத்தி விதவிதமான பதார்த்தங்களுட
னே சாப்பாடுசெய்வித்து ஆட்டங்கூடல்களும் இவ்விதமாய் (ச) (ரு)
நாள் செய்வித்து சந்தோஷப் படுத்திக்கொண் டிருக்கையில் ஒருநாள்
முனீர்ஷாமி என்பவர் மிகுந்தவிசனமாயிருப்பதைஹாத்திமென்பவ
ர்பார்த்து எனதுதோழனே நீ யேன் விசனப்படுகிறாய் நான் உனக்கு
ச்சொன்னசொல் நிறைவேற்றுமட்டும் மோசமாட்டேன் இனி உன்னுடை
ய வேலைக்காக்குறித்து நான் இதோ புகட்டி பிரயத்தனஞ் செய்கிறே
னென்றுசொல்ல முனீர்ஷாமி என்பவர் சொல்லுகிறார் நீர் எனக்
குவேண்டிய சவுக்கியத்தை யெல்லாம் கொடுத்திருக்கிறீர் அல்லாம
ல் எனதுவேலையை முன்பின்னறிந்துகொள்ளாமல்எனக்கு தைரியம்
சொல்லி வருகிறீரல்லாமல் வேறில்லை யென்றுசொல்ல ஹாத்திமென
பவர் சொல்லுகிறார் எனதருமையுள்ள தோழனே நீ சந்தேகப்பட



வேண்டிய தில்லை எவ்விதத்திலும் நான்சொன்னவாக்கில் தவறாமல்
உன்னுடைய வுயிருக்கு யாதொருகுற்றமில்லாம லிருக்குமானால் நீ
ஆசைகொண்ட பெண்ணை எவ்விதத்திலும் உன்னிடம் சேர்க்காமல்
விடமாட்டேனென்று சொன்னபின்பு தன்னுடைய மந்திரி பிரதானி
களெல்லாம் வரும்படி வுத்தரவுசெய்ய அப்படியே ஹாத்திமுடைய
தர்பாருக்கு வந்துசேர்ந்தார்கள்.

அப்போது மந்திரி பிரதானிகளில் அனேக அமீர் உமராக்களை
ப்பார்த்து சொல்லுகிறதாவது முசாபராக வந்தவர்களுக்கு இருக்கும்
படியாக வீடுகள் கொடுக்கவேண்டியது ஏழை எளியோர்களுக்கு
அன்னங்கொடுத்து பசியாறுதல் செய்யவேண்டியது உடையில்லாத
வர்களுக்கு வஸ்திரங்கள் கொடுக்கவேண்டியது செலவுக்கில்லாத
வர்களுக்கு பணங்கள்கொடுக்க வேண்டியது அது எவ்விதமெனி
ல் இப்போதுநான் எவ்விதமாகக் கொடுத்து வருகிறேனோ அதுபோ
ல நீங்கள் நானிவ்விடம்வந்து சேரும்வரையில் யாதொரு குறைவில்
லாமல் என்னுடைய நடப்பைப்போலே நடந்துவரவேண்டியது யா
தாமொருவர் ஹாத்திம் ஊரிலில்லை சகாவத்து சரியாகச் செய்கிற தி
ல்லை யென்கிறபேர் வராமல் சகாவத்தினுடைய விசாரணையை நீங்க
ள் வெகு ஜாக்கிறதையாக நடத்திவர வேண்டியது சகலபே
ருக்கும் சொல்லும்படியானசொற்களைச்சொல்லி ஜாக்கிறதைசெய்து
விட்டுமுனீர்ஷாமிஎன்பவரை அழைத்துக்கொண்டு ஷாஹேஆபாது
என்ற நகரத்தைநோக்கிப் பிரயாணப்பட்டுப்போனார்கள் அவர்கள் எ
த்தனையோ நாளாகநடந்து அப்பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள்.

பின்பு ஹசன்பானு வுடையமனிதர்முசாபர்களுக்கு உபகாரியா
களுக்காக நியமிக்கப்பட்டிருந்தது அப்போது அந்த வேலைக்காரர்க
ள் இந்த இரண்டுபேரையும் அழைத்துக்கொண்டு இவர்களுக்கு விதவி
தமான அன்னமுதலியபதார்த்தங்களும் கொண்டுவந்து உண்ணும்
படிக்கு கொடுத்தார்கள் பின்புகொஞ்சம் அஷறபிகளும் நகைகளும்
உடுப்பும் பலபல விதமானதுகளையும் அவர்கள் முன்பாகவைத்து நீங்கள்
சாப்பிட்டதின்பின்பு உங்களுக்கு என்னவேண்டுமோ அதுகளையெல்
லாம் நீங்கள் எடுத்துக்கொண்டுபோகலாமென்று சொன்னார்கள் நீங்
கள்யாதொருசந்தேகமில்லாமல் எடுத்துக்கொண்டு போகலாமென்று
சொன்னார்கள் அம்மொழிகளை ஹாத்திம்கேட்டுச்சொல்லுகின்றார்

வ்விதமெனில் இப்பெண்கள் சொல்லுகிறது தெரியவந்தது நான் இன்பதற்கும் நகைகள்பொருள் இல்லாமல் நான் இவ்விடம்வரவில்லை அல்லாசுபகானுத்தாலாயெனக்கு வேண்டிய தவுலத்துகளும்அனேக சிமைச்[illegible]பொருள்கள்திரவியங்களும் எனக்குகணக்கில்லாமல் கொடுத்திருக்கிறான் நான் ஒருதேசத்தின் பாத்துஷாவாக இருப்பேனென்றுசொல்லி பின்னுஞ் சொல்லுகிறார் என்னுடைய எண்ணமாவது, வெகுபெரிதானதாக இருக்கும் (எ) சவாலுக்குஜவாபுசொல்ல இவ்விதமானசொல் ஹாத்திம்சொல்லஅச்சொல்லை அந்தமனிதர்கள்ஹுசன்பானுவினிடமாகப்போய்தெரிவித்தார்கள் ஒருவாலிபர்ஹாத்திமென்று வந்திருக்கிறார் தங்களுடைய சவால்களுக்கு ஜவாபுசொல்லும்படியாகவும் முன் இவ்விடம் வந்துபோன முனீர்ஷாமி என்பவரும் அவர் கூட வந்திருக்கிறார். இவ்விதமான சொல்லை ஹுசன்பானு கேள்விப்பட்டு அவ்விருபேரையும் என்னிடம் அழைத்துக்கொண்டு வரும்படிக்கு உத்தரவு செய்தாள் அதுபோல இவர்களை அழைத்துக்கொண்டு வந்து முன்பாகவிட்டார்கள் அவர்களைஇருக்கும்படிக்குஉத்தரவுசெய்தாள் அதுபோலிருந்தார்கள்பின்புஹுசன்பானு அவர்களைக்கேட்டாள்நீங்கள் இவ்விடம்வந்தசங்கதி என்னவென்று கேட்க அதற்காக ஹாத்திமென்பவர் சொல்லுகிறார் பெண்கள்நாயகமே நான்வந்தசங்கதியைப்பின்னால்தெரியப்படுத்துவேன்நீங்கள்முதலாவது என்கூடவந்திருக்கின்ற முனீர்ஷாமி என்பவருக்கு தம்முடைய முகத்தைகாண்பித்திராதால்அவர்கொஞ்சமனச்சஞ்சலப்பட்டும் முதல் அவர்உடலில் உயிர் இருக்கட்டுமென்றுசொல்ல ஹுசன்பானு சொல்லுகின்றாள் அன்னியபுருஷன் முன்பாக நான் முகத்தை எவ்விதமாகக் காண்பிப்பேனென்றுசொன்னாள் என்னுடையயேழுசவால்களையார் அதாசெய்வார்களோ அவர்தான் எனக்குப்பிரியமாகி என்னுடன் [illegible]திருப்பாரல்லாமல் மற்ற பேர்களுக்கு என்னுடைய முகத்தைக்காண்பிக்கக்கூடாதுஎன்றுசொல்ல (ஹாத்திமென்பவர்) நல்லது உன்னுடையசவால்களை தம்முடையமதுரமான நாவினால் சொல்லவேண்டியது என்றுசொல்லி இன்னும் ஒருதவுல்கொடுக்கவேண்டியது எவ்விதமானால் உம்முடையசவால்களை நான்முழுதும் சரிப்படுத்தினதின்பின்பு நான் உன்னைமனங்கொண்டவர்களுக்குஒப்பிப்பேன் என்றுசொல்ல நல்லதுஅப்படியே ஆகட்டுமென்று ஹுசன்பானு ஒப்புக்கொண்டாள் பின்பு தஸ்தர்கானைவிரித்துவிதவிதமான பதார்த்தங்களுடனே அவர்களுக்குபசியாறவைத்துசிறிது அவு



றபிகளும் கொடுத்து அவர்களை அனுப்பும்போது சொல்லுகின்றதாவது ஓ ஹாத்திமென்பவரே சொல்லுகிறேன் [முதல்சவாலாகப்பட்டது] என்னவென்றால் ஒருதடவைபார்த்ததைமறுதடவைபார்க்க ஆசைகொண்டிருக்கின்றது அதினுடையசெய்தியை அறிந்துவரவேண்டியது அது ஆர் எவர் அது எங்கே யிருக்குதென்றும் அது என்னவென்று ஒரு தடவை பார்த்து மறுதடவை பார்க்க ஆசைகொள்வது முதல் இதைநீங்கள்கண்டுவந்துதெரிவிக்கவேண்டியதுபின்பு [இரண்டாவது]சவாலின்எத்தனம்பண்ணாலம்இவ்விதமானசாவலைஹாத்திம் கேட்டு முனீர்ஷாமி என்பவரை ஹுசன்பானுவினிடமாகஒப்பிவைத்து விட்டுசொல்லுகிறார்இவராகப்பட்டவர் என்னுடையதம்பியாக இருக்கும் ஆகையால் நான் இவ்விடம்வரும்வரையில்நீங்கள் இவரை தம்முடையவிருந்தாளியைப்போல் பாவித்து தங்களிடத்தில் வைத்து பின்னுமவருக்கு ஆகவேண்டியமரியாதைசெய்யவேண்டியதுஎன்று இவ்விதமாகச்சொல்லி ஹாத்திமென்பவர் அவ்விடத்திலிருந்து முனீர்ஷாமியை விருந்தாளியாகவிட்டு உத்தரவுபெற்றுக் கொண்டு போய்விட்டார்.

# முதலாவதுசவால்.

## ஹாத்திமென்பவர் முதல் ஷாத்தின் விர்க்கை நிறைவேற்றி வருகின்றவரலாறு.

அப்பட்டணத்தைவிட்டு ஹாத்திமானவர் கொஞ்சதூரம்போய பின்புதன்னுடையமனதில்எண்ணினார்இப்போதுநான்என்னசெய்வேன்இதையாருடன்சொல்வேன் நான் எப்போதும் பார்த்திராத இடம்

தேடிநான் எங்கெபோவேன் இதினுடையவிபரம் எப்படியறிவேன்
ஆனால் என்னுடைய ஆண்டவனுக்காக இந்தவருத்தத்தை நானெடு
த்துக்கொண்டேன் இதை ஆண்டவன்தான் நிறைவேற்றவேண்டி
யது என்றால் ஒன்று செய்யக்கூடாதென்றும் இவ்விதமாய் ஆண்ட
வன்பேரில் பாரத்தைப்போட்டுக்கொண்டு சொல்லிவிட்டுபின்புமுன
ால் நடந்துபோகின்றார் இப்படி யிருக்கபின்பு எதைப்பார்க்கிறாரா
னால் ஒரு லான்டுகாவென்ற பெருநரியானது ஒரு பெண்மானைப்பி
டித்து அதைக்கிழித்து தின்பதற்கு எத்தனம் பண்ணி கீழேதள்ளிக்
கொண்டிருக்கிறதை ஹாத்திமென்பவர் பார்த்துமிகுந்த இரக்கப்பட்
டு பெரும் சத்தமாகஒருசத்தம்போட்டுச் சொல்லுகிறார்ஒகெட்டசெ
யலுள்ள நடத்தையுள்ள கழுதையானவனே நீஎன்னவேலைசெய்கின்
றாய் பத்திரம் இந்த எளிய டெண்மானனது பிள்ளைகள் பெற்றது
போல் தோணவருகின்றது அதினுடையமார்பிலிருந்துபால்சுரந்துஓடு
கின்றதுஇவ்விதமானசொல்லைக்கேட்டு அந்தபெருநரியானதுபயங்கர
ப்பட்டு நின்று பின்புசொல்லுகின்றது ஆனால்உன்னைப்பார்த்தால்
ஹாத்திமைப்போல்தோணவருகின்றது இப்பேர்ப்படவேளையில் நீநடு
வில்வந்தாய் அப்படிசொல்ல ஹாத்திமென்பவர் எவ்விதமாகஎன்னை
அறிவாயென்றுகேட்க அப்போது அந்த பெருநரியானது சொல்லு
கின்றது உங்களுடையதாதுர்வத்தினாலும்வல்லமையையுங்கண்டுநான்
சொன்னேனென்றும் பின்னும் எல்லா சீமைதேசங்களிலும் பிரசங்க
மாயிருக்கின்றது ஹாத்திமெனபவர் யாதாமொருவர் உயிர்ப்பிரா
ணிகளுக்கு மிகுந்த இரக்கமாக ஏசான் செய்கின்றாரென்றும் ஆ
னால் நீர் இப்போது என்னுடைய கையி லகப்பட்ட வேட்டையை
ஏன் விடுதலைசெய்தீரென்று சொல்ல அப்போது ஹாத்திமென்பவ
ர் நல்லது நீ இப்போ உனக்கு ஆகவேண்டியதைக் கேளுமென்று
சொல்ல அப்போது அந்தப்பெருநரியானது சொல்லும் என்னுடைய
பசியை ஆற்றுகின்ற வஸ்து எதாயிருக்குமோ அது எனக்குக்கிடை
த்தாலதை நான் பொசிப்பேனென்றுசொல்ல நல்லது இப்போது
உன்பசியை யாற்றுவதற்கு என்னுடைய திரேகத்தில் சிந்தக்கறிவே
ண்டுமோ அதைநீகடித்துவயர்நிறைய தின்றுபசியையாற்றிக்கொண்டு
ப்போகலாமென்று ஹாத்திமென்பவர் சொல்லஆனால்என்வாய்க்குமே
துவாக உன்னுடையதுடையுமிருப்பிடத்தின்கறியைக்கொடுத்தால்நல
மாயிருக்குமென்றுசொல்லஅம்மொழியைக்கேட்டு ஹாத்திமென்பவர்
தன்னுடையவாளையுருவிஅது கேட்டதுபோல் துடையுமிருப்பிடத்தி



ன்கறியை அறுத்துக்கொடுத்தார் அந்தக்கறியைத்தின்று பசியாறிய
பின்பு அந்தப்பெருநரியானதுசொல்லுகின்றது ஓ,ஹாத்திமே உனக்கு
இவ்விதமான சங்கடம்வந்து நேரிட்டது நீ உன்னுடைய நகரமாகிய
எமனைவிட்டு இந்த காடுவனாந்திரத்தில் வருத்த மெடுத்துக்கொண்
டு திரிகின்றது எதுக்காக என்றுகேட்க அப்போது ஹாத்திமென்
பவர் சொல்லுகின்றார் முனீர்ஷாமியென்பவர் ஹசன்பானுவென்
னும்பெண்பேரில் ஆசைகொண் டிருக்கின்றார் அவளாகப்பட்டவள்
எழுசவால் சொல்லுகிறாள் யாதாமொருவன் அந்தச் சவால்களையெ
ல்லாம் சரியாகத் தெரிவிப்பாரானால் அவனுக்கு நான்பாரியாவேனெ
ன்று சொல்லுகிறாள் அதனால் நான் ஆண்டவனுக்காக ஏசான்செய்ய
வேணுமென்று இடுப்புகட்டியிருக்கிறேனென்றுசொல்ல அது எவ்
விதமெனில் (முதலாவது சவால்) அவளுடைய மொழியாயிருக்
கும் ஒருமனிதன் சொல்லுகிறான் ஒருதடவைபார்த்திருப்பதை ம
றுதடவைபார்க்க ஆசையாயிருக்குதென்ற சங்கதியை எப்போதுமறி
யேன் அந்த வீடு எங்கே யிருக்கின்றதோ அந்த மனிதன் யாராகயிரு
க்கும் அவ்விதமாக அவன் என்ன பார்த்திருப்பான் அவன் யாரைப்
பார்க்க இன்பங்கொண்டு பலமாகபெரியசத்த மிடுகிறான் அதை நான
றிய ஆண்டவனுடைய கிருபையால் போறேனென்று சொல்லி அ
தைப்பார்க்கலாமென்றால் எனக்கு அந்த இடத்தின் குறிப்பு தெரிய
வில்லையென்று ஹாத்திம்சொல்ல அப்போது அந்தப் பெருநரியானது
சொல்லுகின்றது.

ஹாஷ்பனே நானவ்விடத்தை யறிவேனறிவேன் அதாவது அவ்விதமெனில் பெரியோர்களுடைய வாக்கினால்நான் கேழ்விப்பட்டிருக்கி
றேன் அந்தவிடத்தை பேர் தஷ்தேஹுவெதாவாரதவிருக்குது அவ்விடத்
தில் போறவர்கள் பகல்முழுதும் திரிகிறார்கள் அவ்விடத்தி லிருவே
சத்தம் கேழ்க்கிறார்கள் அப்போது ஹாத்திமென்பவர் சொல்லுகிறார்
அந்த இடமானது எவ்விதமாயிருக்குமென்று கேட்க அப்போது
அந்த பேடியாரென்னும் பெருநரியானது சொல்லுகின்றது நீர் இவ்வி
டம்விட்டுகொஞ்சதூரம் போனால் அவ்விடத்தில் இரண்டுபாதையிருக்
கின்றது நீர் இடதுபக்கமான பாதையைவிட்டு வலதுபக்கமாகப்போ
னால் அவ்விடத்தில் நிச்சயமாய்ப் போவாய் உன்னுடைய எண்ணத்தை
நிறைவேற்றிக்கொள்வாயென்று சொல்லி அந்தப்பெருநரியானதுபோ
ய் விட்டது ஹாத்திமென்பவர் அவ்வுத்தரவு பெற்று தன்னுடைய

பாதையை பார்த்துக் கொண்டு போய்விட்டார் பின்பு இந்தப் பெருநரியும் பெண்மானானதும் ஹாத்திமுக்கு குனிந்து தலைசாய்த்து இவருடைய சகாவத்தின் பெருமை கண்டு சந்தோஷப் பட்டு ஆண்டவனிடமாக துவாசெய்துவிட்டு - (௪)(௫) அடிதூரம் போய்விட்டது பின்பு ஹாத்திமென்பவர் தனது வேதனை வருத்தம் பொறுக்க மாட்டாமல் அவ்விடம் விட்டுப்போனார் இரண்டுகால்களும் பின்னிக்கொண்டது நடக்கத் தன்னாற்கூடாமல் ஒரு மரத்தின் கீழேபோய் விழுந்துவிட்டார் வேதனை பொறுக்காமல் மிகுந்த வருத்தமாய் தரையிற் புரண்டு துடித்துக்கொண் டிருந்தார் ஹாத்திமென்பவருக்கு நாற்கால் மிருகங்கள் பறவைபக்ஷி ஜாலங்களின் பாஷை தெரிந்தவராகவு மிருப்பதாலேயப்படியிருக்க அந்தமரத்தடியில் இவ்விதமாக இருக்குநேரத்தில் அவ்விடத்தில் ஒரு குள்ளநரியினுடைய பொதும்பான வீடிருந்தது அதிலுள்ள நரிசோடு ஆண்பெண் இரண்டு தன்னுடைய இரைக்காகப்போயிருந்தது பின்பு இரண்டு மூன்று நாழிகைபொறுத்து இரைகள்பொசித்து தன்னுடைய வீடுதேடிவந்தது பின்பு ஹாத்திமென்பவர் நிலத்திற் புரண்டு துடித்துவேதனைப்படுவதைப் பார்த்து அப்பெண் ணரியானது ஆணைப்பார்த்துச் சொல்லுகின்றது அது எவ்விதமெனில் இவ்வனாந்திரத்தில் இந்த மனிதனெவன் இங்கே வந்திருக்கிறான்நாம் இப்போது இந்தவீட்டைவிட்டு மற்றோரிடம் பார்க்கவேண்டிய தென்றுசொல்ல அன்னியர்கள் கூடச்சேர்ந்து நாம் எப்படிகூடி யிருக்கலாம் மசலாக்கு[illegible]ங்கமாயிருக்கின்றது மனிதரோடேமிருகஜாதிக ளிருக்கக்கூடாதென்று சொல்ல அதற்கு ஆண்நரி சொல்லுகின்றது இப்போது சொன்னது சரிதான் ஆனால் அழகுள்ள வாலிபனிவன் இந்தமனிதன் யாரானால் எமன் தேசத்துபாத்துஷாவானஹாத்திமாகஇருக்கும் இவர் தஷ்தேஹவேதாவுக்கு போகநாடி அவ்விடத்தின்செய்தி அறியும்படிக்காக போகிறார் இப்போது தன்னுடைய வேதனையால் இவ்விடத்திலே வருந்தப்பட்டுக்கொண்டு உயிர்போகும்படியாய்க் கிடக்கிறார் நல்லது இந்தசங்கதிஉனக்குஎவ்விதமாகத்தெரியுமென்றுபெண்நரிகேட்கஅதற்குஅந்த ஆண்நரியானதுசொல்லும்அது எவ்விதமெனில்பெரியோர்கள்வாக்கினால்கேள்விப்பட்டிருக்கிறேன் அதாவதுஇன்னவருஷம் இன்னமாசம் இன்னதேதியில்இந்தயிடத்துக்குஹாத்திமென்பவர் வருவாரென்றும் இந்தமரத்தின்கீழே வந்துமிகுந்தவருத்த மடைவாரென்றும்இந்த நாளானது இன்றையதினமா யிருக்கிறது பின்னும் நீ இவரைஅறியமா



ட்டாய் இவர்கள் எமன்தேசத்தில்பாத்துஷாவாயிருக்கும்ஆனாலிவர்மிகுதமான சகாவத்துடையவரா யிருப்பார் இன்றையதினம் இன்னகாட்டில் ஒரு பெண்மானானது பிள்ளையுடையதுமேய்ந்துகொண்டு நிற்கையில் ஒரு பேடியாயென்ற பெருநரியானது வந்து அதைப்பிடித்துக்கொண்டது அந்தமானை விலக்கிவிட்டு அந்நரியின்பசியைத்தீர்க்க வேண்டி தன்னுடைய இருப்பிடத்துக்கறியுந்தொடையின்பக்கக்கறியையும் அரிந்துகொடுத்தார் ஆகையால் அதினுடையவேதனைபொறுக்காமல் வருத்தமடைகிறா ரென்றும் சொல்ல [illegible]நரி சொல்லுகின்றது இவ்விதமாக எப்போதாவது மனிதர்களில் இப்பேர்ப்பட்ட இரக்கமும் கிருபையுமுள்ளவர்கள் லோகத்தில் யாராவதிருக்கிறார்களா பின்னும் யாதாமொரு இடுக்கணி லகப்பட்டவர்களை இவ்விதமாக இரக்கங்கிருபை யடைவார்களா வென்றுசொல்ல அதற்கு ஆண்நரியானது சொல்லுகின்றது ஆண்டவனுக்காக நீ என்னசொல்லுகிறாய் மனிதர்களானவர்கள் நாற்கால்ஜந்துகள் பறவை பக்ஷிஜாலங்களிலின்னும் மிகுந்தபெருமை யடைந்தவர்களாயிருக்கும் அவர்களை அஷ்ரபுல் மகுலுகாத்து என்று பேர்பெற்றவர்கள் ஹாத்திமென்பவர் மிகுந்த வல்லமையும் வீரத்தனமும் கிருபையும் இரக்கமுமுள்ளவர் அருமையறியும்படியான விவேகமுள்ளவர் எப்போதும் ஆண்டவனை உண்மைகொண்டு வணங்கப்பட்டவர் இன்னம் சகாவத்து கொடுப்பது எவ்விதமெனில் தன்னுடைய தேகத்தின் கறியை அரிந்துகொடுத்து அந்நியபிராணியின் உயிரை தப்பவிட்டிருக்கிறார் இவ்விதமான நன்மைகளைக்கேள்விப்பட்டிருக்கிறது [illegible] கர்மத்தின் வருத்தத்தை எடுத்துக்கொண்டு இவர் அவ்வளவுதூரம் எப்படிப்போவாரென்று சொல்ல அப்போது அந்த ஆண்நரியானது சொல்லுகின்றது.

ஆனாலிப்போது இவருடைய காயம் ஆறவேணுமானால் பரீரோ என்று [illegible]ர் மிருக்கின்றது அதினுடைய தலையின் மூளையை எடுத்துத் தடவினால் இந்தக்காயமானது உடனேகாய்ந்துபோகுமென்று சொல்ல ஆனாலந்தபக்ஷிஜாலம் அகப்படுவது மிகுந்தவருத்தமாயிருக்கும் அது இருக்கு மிடமானது தஷ்தேமாடந்தருவென்றஇடம் அதினுடைய உடலானது மயிலுடல்போலவும் தலையானது மனிதரின் தலைபோலவும் யாதாமொருவன் அதினருகிற்போனால் கொஞ்சம் பானகங்குடிக்க க்கொடுக்கின்றது அதைக்குடித்தவுடனே அவன் மஸ்தாகி குதித்துக்கொண்டு மிகுந்த சந்தோஷமாக ஆடுகின்ற

வேடிக்கையைப் பார்த்துக்கொண்டுசிலபேர்கள் அதினுேடுசோபத்து
செய்கிருர்கள் அது எவ்விதமெனில் பெண்களோடு சோபத்துசெய்
வதுபோல் இவ்விதமான சொல்லைக்கேட்டு பெண்நரியானது சொல்
லும் இவ்விதமான வஸ்தை யாரால்கேட்டு அதின்தலையை அறுத்து
க்கொண்டு வரக்கூடு மென்றுசொல்லி இந்த ஹாத்திமென்பவரின் கா
யத்தை ஆற்றி அவருடைய வருத்தம் நீங்கும்படியாக அதற்காக அ
ந்த ஆண்நரி சொல்லும் நல்லது நீ இவ்விதமாகச் சொன்னுய் நீ ஏழு
நாள் வரைக்கும் [illegible] உண்பினை தின்பினையின்பேரில் பிரியமி
ல்லாமல்இரவென்றும்பகலென்றும்பாராமல்இந்தஹாத்திமென்பவரை
ஜாக்கிரதை[illegible]த்தி அவருக்குயாதொருகுறைவில்லாமல்நீ தற்காத்து
க்கொண் டிருப்பாயானல் நான் [illegible] அந்தப் பறவையின் தலை
யை அறுத்துக்கொண்டு வருவேனென்று சொல்ல நல்லது நீர் இந்த
இன்சானுக்கு ஹைவான் ஜாதிகள் வசான்செயதால்மிகுந்த சந்தோஷ
மும் பலனும் கிடைக்கும் நீர் எவ்விதமாகச்சொன்னீரோ அதுபோ
ல் நான் ஜாக்கிரதை ஹாத்திமை செய்துகொண் டிருக்கிறேனென்று
சொல்ல மிகுந்த சந்தோஷத்துடனே இருவரையும் விட்டு உத்தரவு
பெற்றுக்கொண்டு போகின்றது பின்பு அந்த இடமானதஷ்தேமாடன்
தருவென்னும் தலத்துக்குப்போய்ச்சேர்ந்து அப்பறவையைஒருமரத்
தின்மேலே படுத்திருக்கப்பார்த்து அதினருகிற்போய் அதினுடையசி
ரசை கெட்டியாகப்பிடித்து அறுத்துக்கொண்டு தன்னுடைய சொல்
லின் வாய்தாவைப்போல் வந்துசேர்ந்தது அந்தப் பெண் நரியானது
தான் [illegible] மல் ஹாத்திமை ஜாக்
கிரதை [illegible] ருந்தது பின்பு தன்னுடைய புருஷனுவ்
ருமளவும் தன் குஞ்சுகளை [illegible] வரவொட்டாமல் ஹாத்திமுடைய
தலைமாட்டில் இரவும் பகலுமாக விழித்துக்கொண் டிருந்தது ஹாத்தி
மானவர் இந்தப்பெண் நரியானது தனக்குச்செய்கின்ற [illegible]
பார்த்துக்கொண் டிருக்கையில் ஆண் நரியானது [illegible] வென்னும்
பட்சியினுடைய தலையைப்பெண் நரியின் [illegible] பாகக்கொண்டுவந்து
வைத்ததுஇந்தப் பெண் நரியானது அந்தப் பட்சியினுடையதலையைமு
றித்து அதனுடைய மூளையையெடுத்து ஹாத்திமுடைய காயத்தில்த
டவ உடனே வலிகளெல்லாம் தீர்ந்து காயமாறிப்போய் விட்டது பின்
பு ஹாத்திமென்பவர் எழுந்து அந்த நரிகள் முன்பாக ஓடி நின்றுக்
கொண்டு சொல்லுகிருர் [illegible] கால் மிருகமாகிய ஹைவான ஜாதியான
வர்களே என்பேரில் மிகுந்த [illegible] செய்தீர்கள் ஆனல் எனக்காக



வேண்டி ஒரு உயிர்ப்பிராணியைக் கொன்றுவிட்டீர்கள் அந்தப்பாவ
ம் என்பேரில் சுமந்தது ஆண்டவனுக்கு நான்எவ்விதமாகமுகம்கா
ட்டுவேன் இந்தச் சொல்லைக்கேட்டுஆண்நரியானது சொல்லும் இந்தப்
பாவமானது என்பேரில் சுமந்தது ஆகையால் நீர் இதைக்குறித்
து யோசிக்க வேண்டியதில்லை அது எவ்விதமெனில் நாங்களுமே ஆ
ண்டவனை அறிவோம் இவ்விதமான சொற்களை சொல்லிக்கொண்டு
பின்பு ஹாத்திமென்பவர் சொல்லுகிருர் ஆனல் நீங்கள் என்பே
ரிலேமிகுந்த கிருபையாக வசான்செய்தீர்கள் ஆனல் உங்களுக்கு
ஆகவேண்டிய சங்கதிகளை என்னிடமாகச் சொல்லவேண்டியது நா
னும் அச்சொல்லை நிறைவேற்றுவேன் அந்த வேலை எவ்விதத்திலும்
நான் சகாயம்செய்வேன் அந்த [illegible] நீர்சொல்லுகிறது
ஆ [illegible] வுடைய ராஜனே வாஸியுமே இந்த காட்டுக் கருதாமையில
கபூதாரேன்பென்று ஒரு துஷ்டமிருகமிருக்கின்றது அது என்னுடை
ய பிள்ளைகளை வருஷந்தோறும்வந்து தின்றுபோகின்றது அதையாகு
க்களெங்களால கூடாமைஇருப்பதால்எங்கள்பிள்ளைகளை தப்பிவைத்துக்
கொள்ள ஆகாமையால் அந்த மிருகத்தை வெட்டிவிட்டால் எங்க
ளுக்கு இடுககம் தீருமென்றுசொல்லி எங்களுடைய ஆபத்தை நீர் நீ
க்கவேண்டியது.

அப்போது எங்களுக்கு நீர்பெரியஉபகாரம் செய்தீரென்போம்
பின்னும் எங்களை நீங்கள் [illegible] இவ்விதமாகஇது
கள்சொல்ல ஹாத்திமென்பவர் நல்லது அந்தமிருகமிருக்கு மிடத்தை எனக்குக்காண்பிக்கவேண்டியது [illegible]
யவரையில் நான் யாதொரு தடங்கலில்லாமல் உங்களுடைய வேலை
யை நிறைவேற்றுவேனென்று சொல்ல அப்போது அந்தநரிகள் என்
[illegible] சொல்லுகின்றது அந்த துஷ்டமிருகமிருக்குமிடத்துக்
கும் இவ்விடத்துக்கும் இருகாதவழிதாரமாயிருக்குமென்று சொல்லி
ஹாத்திமென்பவரை அழைத்துக்கொண்டுபோய் அந்தஇடத்தை கா
ண்பித்துப்போட்டு தான் ஒருமரத்தின்பின்னல் ஒளிந்துக்கொண்டிரு
ந்தது அப்போதுஹாத்திம்அந்தமிருகத்தின் வீட்டை போய்பார்க்க
அவ்விடத்தில் அந்த மிருகம் இல்லாமலிருந்தது அப்படியிருக்கஅ
ந்தமிருகமானது தானும் தன்னுடைய ஜோடியாகியபெண்ணுமாகவந்து
தன்னுடையவீட்டை பார்க்கஅவ்விடத்தில்ஒருமனிதனிருக்க பார்த்
து [illegible] யாரென்று பார்க்கலாமென்றுயோசித்தது அது தன்னுடை

ய வீட்டுக்குமுன்பாகவந்து நின்றுகொண்டுசொல்லுகின்றது ஓமனி
தனே இந்த இடமானது உன்னதல்ல நீ இந்தவீட்டுக்குடையவனைப்
போலவும்ஒருஅதிகாரியைப்போலவும் ஒருஅச்சமும்பயமுமில்லாமல்
வந்திருக்கிறாய் ஆனால் உன்னுடைய உயிர்தப்பவேண்டால் நீ வந்தவ
ழியைப் பார்த்துக்கொண்டு போனால் நலமாயிருக்குமென்று சொல்
ல பின்புஹாத்திம் சொல்லுகின்றார் ஓ ஹைவானென மிருகசாதியோரா
ன் உனக்குஇடுக்கஞ்செய்யும்படியான துஷ்டனல்லநான்வேட்டைக்
காரனல்ல நீங்கள் என்னைக்கண்டு ஏன்பயப்படுகிறீர்கள் இந்தவீடு
உங்களுடையதாயிருக்குமானால் நீங்களே சந்தோஷமாயிருங்களெ
ன்று அ[illegible]ர்றேன் என்றமிருகங்களுக்குச்சொல்லபின்னும்சொல்
லும் மிருகசாதிகளுக்கும் மனிதர்களுக்கும்என்னசம்பந்தமிருக்கின்
றதுநீஎங்களை மோசப்படுத்தவந்திருக்கின்றாய் நல்லதனமாய்ப்போக
லாமென்றுசொல்லி பின்பு என்சொல்லைத்தட்டி இருப்பாயானால்நீமி
குந்தவருத்தப்படுவாய் நீஇறந்துபோவாய் என்றுசொல்லஅப்போது
அவ்விதமான சொற்களைஹாத்திமென்பவர்கேட்டுச்சொல்லுகின்றார்
ஓ ஹைவானசாதியே நீங்கள்உங்களுடைய உயிரைப்போல் மற்ற உ
யிர்களையும் அதுபோல எண்ணவேண்டியதுஆனால் நீங்கள்செய்கின்
ற நியாயத்துக்கு விரோதமானசெயல்செய்து கொண்டு வருவது உங்
களுக்குத்தகாது எவ்விதமானால் நீங்கள்கீடரென்ற நரியின்பிள்ளைக
ளை எப்போதும்போய்தின்பதும் தங்கள்பசியை ஆற்றுவதும்உங்களு
க்கு ஞாயமாவென்றுகேட்க ஓ வாலிபனே நீ அந்த கீடரென்றநரிக்கு
உதவியாக எங்கள்வீட்டுக்கு சண்டைசெய்ய வந்திருக்கிறாயோவெ
ன்று சொல்ல அப்போது ஹாத்திம் சொல்லுகின்றார்எவ்விதமானால் நீங்
கள் அவ்விதமாக என்னைச்சந்தேகமாக எண்ணவேண்டியதில்லை ஆ
ண்டவன் அறிய நான் அவர்களுக்காகி உங்களோடுயுத்தம் பண்ண
வரவில்லை ஞாயத்தைக்குறித்து நான் பேசவந்தேன் [illegible]
அந்த கீடர் என்ற நரியின்பிள்ளைகளைத் தின்கிறது இல்லையென்று
எனக்கு வாக்குத்தத்தம் கொடுக்கவேணுமென்று சொல்லுகின்
றார் ஆண்டவனுடைய கோபப்பார்வையில்நின்றும் தப்பித்துக்கொ
ள்ளுங்களென்றுசொல்ல அப்போது அந்த மிருகமானது சொல்லும்
ஓமனிதனே அந்தநரியைக்குறித்துநீ இவ்விதமாக ஏன்விசனப்படுகி
றாயென்றுபாரும்இன்னும் கொஞ்சநேரத்துக்குள்ளேயும் அந்த நரியின்
குட்டிகளைப்போல் ஆவாயென்றுசொல்லஅந்தச்சொல்லைஹாத்திமெ
ன்பவர்கேட்டுச்சொல்லுகின்றார் ஓ மிருகசாதியே நீங்கள்கீடருடைய



பிள்ளைகளைத்தின்பதற்குப்பதிலாயென்னையிப்போதுநீங்கள்தின்றால்
எனக்குநன்மைகிடைக்குமென்று அந்தப்பிள்ளைகளைச் சாப்பிடுகிற
தைவிடவேண்டியதென்றுசொல்ல அந்தமிருகமானதுசொல்லுகின்ற
து நீசொல்லுவது எனக்குச்சரியல்ல ஆனால் நீ அதிகப்பிரசங்கியாயி
ருப்பதால் நாங்கள் அந்தப்பிள்ளைகளைத்தின்பதும் விடமாட்டோம்
இப்பவும் உன்னையும் விடாமல் தின்னுவோமென்று சொல்லபின்னும்
ஹாத்திமென்பவர் ஆண்டவன்பேரில்ஆணையிட்டுச்சொல்லுகிறார் ஆ
ண்டவனானவன் லோகத்திலே பதினெண்ணாயிரஞ்சாதியுள்ள உயிர்
ப்பிராணிகளைஉண்டுபண்ணி அவர்களுக்குத் தகுந்தபடிக்கு ரிசக்கெ
ன்னுமாகாரம் கொடுத்துக்காப்பாற்றுகிறான் ஆகையால் அதுபோல்உ
ங்களுக்கும்ஆகாரம்கொடுக்க ஒரு ஆண்டவனிருப்பதால் நீங்கள் அ
ந்தகீடரின் பிள்ளைகளை எவ்விதத்திலாவது தின்னாமலிருந்தால் என
க்கு மிகுந்த நன்மைகிடைக்குமென்றுசொல்ல அதற்கு மறுமொ
ழி அந்தமிருகமானதுசொல்லும் நாங்கள் அதைத்தின்னாமல் ஒருபோ
தும்விடமாட்டோம்இப்போதுஉன்னையும் உயிரோடபோகும் படிக்கு
நாங்கள் விடோமென்றுசொல்ல அதை ஹாத்திமென்பவர் கேட்டுத
ன்மனதிலெண்ணினார் இந்தமூதேவிகள் மிகுந்தகடினமான இருதய
முள்ளதாயிருக்கின்றது இந்தக்கோரமானஷயித்தான்களை எவ்வி
தத்திலும் நாம்கொல்லாமல்விடக்கூடாதென்றுஎண்ணங்கொண்டுமி
குந்த ஆங்காரத்துடனே கோபங்கொண்டு தானிருந்த இடத்தைவிட்
டு ஒருகுதிப்பாகப்பாய்ந்து அந்தமிருகங்கள்இரண்டையும் பிடித்துகழு
த்தை நெருக்கி நிலத்தில் அடிக்கத்துணிந்து [illegible]
இந்த மிருகங்களை நாம் எவ்விதமாகச் சிட்சை செய்கிறதென்று
இன்றுவரையிலும் மாதொருசீவசெந்து என்கையாற்கொன்றதில்
லை யாதொருவருடைய மனதுக்குவருத்தமும்இடுக்கமும் நான்கொடு
த்ததில்லை ஆனால்இந்தமூதேவிகள் ஆண்டவனுடைய ஆணையை
க்கடந்துநடப்படி செய்திருக்கின்றது அப்படியிருக்க இந்த மிருக
சாதிகளை நாம்வெட்டி [illegible]னுடைய பழிபாவம்பேரில் சுமருமென்
று தன்மனதில் எண்ணிபின்பு அதைச் சீவவதைசெய்யாமல் இதற்
குத்தகுந்த சிட்சை செய்யவேண்டுமென்று என்ன மனதிலெண்
ணிக்கொண்டு தன்னுடைய இடுப்பிலிருந்த கத்தியை உருவிக்கொண்
டு இரண்டு மிருகங்களையும் தன்னுடைய கத்தியின்பிடியால் பற்களை
யெல்லாம் தட்டி அதினுடைய கையில் நகங்களையு மறுத்துவிட்டு ஆ
ண்டவனிடமாக அவர்கேட்டார் இதினுடைய வருத்தமான வேதனை

யைநீக்கவேண்டுமென்றும்கேட்க அதுபோல அந்தமிருகங்களின்வே
தனை நிவர்த்தியாகிவிட்டது பின்பு அந்தமிருகங்கள் அழுது அழுது
சொல்லுகின்றது நீர் எங்களை இவ்விதமானகோலம் செய்துவிட்டீர்
நமக்குஇரை எவ்விதமாக அகப்படுமென்று கேழ்க்க நாம்எவ்விதமா
கப்பிழைப் போமென்று சொல்ல ஹாத்திமென்பவர் சொல்லுகின்
றார் நீங்கள்யாதொன்றுக்கும் யோசிக்கவேண்டாம் ரிசக்குகொடுக்க
வல்லமையுள்ள ஆண்டவன் ஒருவனிருக்க அவன் எந்தவிதத்திலு
ம்குறைவில்லாமல்ரிசக்குகொடுப்பானென்று அவர்களுக்குவேண்டிய
அறிவுக்குப்மானங்களைச் சொல்லி அதினுடைய இடத்தைவிட்டு இப்
புறம் வந்தவுடனே கிடொன்ற நரியானது கிட்டேவந்து ஹாத்தி
மை மிகுதமாக வாழ்த்தி போற்றி சொல்லுகின்றது இந்த மிருகங்க
ளுக்கு எங்களுடைய உயிருள்ளவரையில் நான்அதுகளுக்கு இரைக
ள்கொண்டுவந்து பசியாற்றுகிறேனென்றுசொல்லி வேண்டியஉபசா
ரங்கள் செய்து ஹாத்திமுன்பாக கிடொன்ற நரிசொல்ல பின்புஹாத்
திமென்பவர் அவ்விடம்விட்டுப்புறப்பட்டுமுன்னால் தஷ்தேஹாவே
தாவுக்குப்போகையில்பெண் நரியானதுசொல்லுகின்றது எவ்விதமா
னால் ஹாத்திமானவர்நமக்குசெய்திருக்கின்ற உபகாரத்தை நீகொஞ்ச
மாவது நன்றியில்லாமல் அவரை தனித்துப்போக நீ பார்த்திருப்பது
எப்படி உனக்குமனதுவந்தது அவர்எவ்விதமாகஒண்டியாகதஷ்தேஹா
வேதாவுக்குப்போவார் ஆகையால்ஹாத்திமுக்கு நீ துணையாகப்போக
வேண்டியதென்று [illegible]ன்சொல்லைக்கேட்டுகிடொன்ற நரியானது பி
ன்தொடர்ந்து ஓடுகின்றது ஓய், ஹாத்திமே உனக்குத் துணையாக தஷ்தே
ஹாவேதாவுக்கு வருகிறேனென்று சொல்ல ஹாத்திம் சொல்லுகிறா
ர் ஓ மிருகசாதியான என் பிரியமுள்ள கிடேறே நீ செய்த உபகாரத்
தின் மூட்டையை நான் எடுக்கக் கூடாமலிருக்கின்றேன் பின்னு
ம் நீ எனக்கு உபகாரம் செய்தால் அந்த பின்னுள்ள சுமையை நான்
எவ்விதமாகச் சுமக்கக்கூடும் பின்னும் சொல்லுகிறார் எனக்காக நீ
உன்னுடைய [illegible] பின் [illegible]ட்டு நான் உன்னை அ
ழைத்துக்கொண்டு போகமாட்டேனென்றும் சொல்ல பின்னும்
சொல்லுகிறார் ஆண்டவனுக்காக நீ இந்த சொல்லை மறந்து விடு
என்று சொன்னார் பின்பும் இந்த சங்கதி உன்னை கூட்டிக்கொண்
டு போகின்றது சுத்தமாக என்னால் கூடாது ஆனால் நீ என்கூடவ
ருகிறதில் நின்று இப்போது நான் போகின்ற வெளியை எனக்கு
காண்பித்தால் போதுமானதா யிருக்கும் அதற்காக கிடேறென்ற



நரிசொல்லும் நீர் அருகான வழியில் நின்றும் அவசரமாகப் போக
வேண்டுமானால் அந்தப்பாதையில் மிகுந்த வருத்தங்களும் சங்கட
மும் நேரிடும் இரண்டாவது பாதை கொஞ்சம் சுத்தாகவும் தலை
வாகவு மிருக்கும் வெளியில் யாதொரு பயமும் அச்சமுமில்லை நான்
உன்கூடவர எண்ணங் கொண்டவனாக இருக்கிறேன் அந்த பாதை
யை நான் காண்பிக்கிறேனென்றுசொல்ல அதற்குஹாத்திம்சொல்லு
கின்றார் ஆண்டவன் எனக்கு நற்பாதையில் நின்று போக உதவிசெ
ய்வானென்று சொல்ல அப்போது கிடேறென்னும் குள்ளநரிசொல்லு
கின்றது ஓ, ஹாத்திமே உனக்கு ஆண்டவன் எவ்விதத்திலும் சந்தே
கமில்லாமல் உதவிசெய்வான் ஆனால்இவ்விடம்விட்டுப்போவீர்களா
னால் முன்னால் வரப்பட்ட பாதையானது அருகான வழியாக இருக்
கும் ஆனால் நீர் சலாமத்தாக இருப்பீரானால் எவ்விதத்திலும்தஷ்
தே ஹாவேதாவுக்குப்போவாயென்றுசொல்லநல்லது உன்சொல்லை
ப்போல் நடக்கிறேன் நீ போகலாமென்று உத்தரவு கொடுத்தனுப்பி
விட்டுதான் முன்நடக்கின்றார் அப்படிநடக்கையில் முந்தின அருகா
ன மார்க்கமுள்ள வழிவந்து நேரிட்டது அதைப்பார்த்து நாமெ
ன்ன யோசனைசெய்வது அந்தவழியில் ஹாத்திமென்பவர் இதைப்பா
ர்க்கலாமென்றுசிலதூரம் நடந்துபோகின்றார் அப்போது அவ்விடத்
தில் ஒரு பெரியவனாந்திரமான காடுவந்து முன்னால் நேரிட்டது.

# ஹாத்திமென்பவர் காடிகளுக்குப்பாத்துஷாவாகிய கிரஸ் என்பவனுடையமகளை விவாகஞ்செய்து வருத்தமடைந்தவரலாறு.

காட்டிலுள்ள கரடிகளுக்கெல்லாம்பாத்துஷாவான கிரஸ்யென்பவனிருந்தான் அப்படியிருக்கஒருநாள்(ஈ)(உஈ)கரடிகள்முகமுந்தேகம்மனிதருடையதாகவுமாக ஹாத்திம்எதிரில்கூட்டமாய் வரக்கண்டு அச்சப்பட்டார் அப்போது ஹாத்திமென்னும்வாலிபனை அந்தக்கரடிகள் கண்டு பிடித்துக்கொண்டுதம்முடையபாத்துஷாவுக்குமுன்பாகக்கொண்டுபோய்விட்டதுகள் அப்போது அந்த கிரஸ்என்னும்பாத்துஷா ஹாத்திமைப்பார்த்துமிகுந்த சந்தோஷத்தையடைந்துசொல்லுகின்றான் நீர்என்னிடமாகஇரும்நீர்வந்தசங்கதிகளை எனக்குசவிஸ்தாரமாகத்தெரிவிக்கவேண்டியதுநீர்யார்எவ்விடமிருந்துவந்தீர்உம்முடையபேர் என்னவென்றுகேட்டு பின்னும் அவன் சொல்லுகின்றான் உன்னைப்பார்த்தால் எமன்தேசத்து பாத்துஷா ஹாத்திமைப்போல்தோணவருகின்றது இம்மொழியைக்கேட்டு நீர் சொன்னது நிச்சயந்தானென்று சொன்னார் நான் ஹாத்திம்பின் தையாகயிருப்பேன் ஆண்டவனுக்காக நான் இந்த பயங்கிரமான காட்டுக்கு வரும்படியாக நேரிட்டதென்று சொல்ல நீர் இவ்விடம் வந்ததினால் நான் மிகுந்த சந்தோஷ



த்தையடைந்தேன் ஆனபடியால் என்னுடைய பெண்ணை நீர் கலியாணஞ்செய்து கொள்ளவேண்டியது எவ்விதமானால் இந்த காட்டில் என் பெண்ணுக்குத் தகுந்த புருஷனில்லை ஆனால் நீர் இவ்விடம் வந்தது என்னுடைய அதிஷ்டம் நலமானதென்று என்னுகிறேன் இவ்விதமான சொல்லை ஹாத்திமென்பவர் கேட்டு தன்சிரசை கீழே சாய்த்துக் கொண்டு இது என்னகாரணமென்று யோசனை செய்துகொண்டிருக்கையில் அந்த பாதுஷாவானவன் சொல்லுகிறான் நீ நான்சொன்ன மொழிக்கு ஜவாபுகொடாததினால் நீர்என்னயோசனைக்கு நான் தகுந்தவனல்லவென்றெண்ணுகிறீரென்றுசொல்ல அம்மொழியை ஹாத்திமென்பவர் மிகுந்தமனஸ்தாபத்துடனே சொல்லுகிறார்நீங்கள் வேறுவான் ஜாதிகள் நான் இன்சான்சாதியாயிருக்க இவ்விதமாக ஒன்றுபடுமென்று சொல்ல ஓ, ஹாத்திமே யோகத்தில் இன்சானும் ஹைவானும் ஒன்றாயிருக்கும் ஆகையால் அதைப்பற்றி நீர் யோசிக்கவேண்டியதில்லை எவ்விதத்திலும் என்பெண்ணை உனக்கே விவாகமுடிப்பேனென்று சொல்லி தன்னுடையவேலைக்காரர்களை அழைப்பித்துச்சொன்னதாவது என்னுடைய பெண்ணை கலியாணப் பெண்போல் சிங்காரித்து இன்னவீட்டில் கொண்டுவந்து வைக்கும்படி சாக்கிரதை செய்யவேண்டியதென்றுசொல்ல அப்படியே அப்பெண்ணை வெகுவாய்ச் சிங்காரிப்பு செய்து கொண்டுபோய் அவ்வீட்டிலே வைத்தார்கள் பின்பு ஹாத்திமென்பவரை கொண்டுவந்து வைத்தார்கள் அந்த சிங்காரிப்புள்ள பெண்ணைப்பார்த்து மிகுந்த ஆச்சரியப்பட்டு அந்தச் சபையில்வந்து சொல்லுகிறதாவது ஓயே பாதுஷா நானுகப்பட்டவன் பதினைப்போல் இருக்கிறேன் ஆனால் இந்தப் பெண்ணை பாத்துஷாவின் மகளை நான் பெண்சாதி யாக்கிக்கொள்வது அநியாயத்துக்கு விரோதமாயிருக்குமென்றுசொல்ல அப்போது அந்த பாதுஷாவானவன் சொல்லுகிறான் நீர் இப்பேர்ப்பட்ட சலாக்களைகுற்றமாகப் பேசவேண்டாம் நீரும் என்னுடைய மகளைத்தவிர வேறில்லை இவ்விதமாக பாட்சாசொல்ல மிகுந்தவருத்தமும் ஏண்ணமுங்கொண்டு மனதிலெண்ணுகிறார் ஆண்டவனே நான் என்னபலாவில்வந்து சிக்கிக்கொண்டேன் இனிநானென்னசெய்வேன் நானொரு வேலைக்காகனைவிட்டு படாதபாடுகளும் துன்பங்களும்பட்டு இந்த பாதையாகப்போக நாடினால் இவ்விடத்தில் எனக்கென்ன விதிவந்து நேரிட்டது இப்போது நான் கலியாணம் செய்துகொண்டு இவ்விடத்தில் சவுக்கியத்தை யடைந்திருந்தால் நான் வந்தவேலை எவ்விதமாக்முடியும் என

ன்னுடைய வழியைப்பார்த்துக்கொண்டு முனீர்ஷாமி என்பவனிருப்பானே அவனுடைய ஆசத்ஜத எவ்விதமாகக் கூடுதலைசெய்ய முடியுமென்றும் நான் போகாவிட்டால் என்னால் வீணாக இறந்துபோவானே நான் ஆண்டவனுக்கு என்ன ஜவாபு சொல்வேனென்று முழங்காலில் தலையை வைத்துக்கொண்டு என்னத்துமெண்ணி விசனமடைந்திருப்பதை அந்த பாட்சாவானவன் பார்த்துக் கேழ்க்கிறான் ஓ, வாலிபமான சௌந்தரியமுள்ளவனே என் சொல்லைக்கேழ்க்காவிட்டால் நீ இவ்விடம்விட்டு யாமவனாயிலும் போகமாட்டாய் இவ்விடத்தில் என்னுடையகாவலிலிருந்து இறந்துபோவாயென்று இவ்விதமான சொல்லுக்கும் யாதொரு ஜவாபும்கொடுக்கவுமில்லை குனிந்ததலைநிமிர்ந்துபார்க்கவுமில்லை அப்போது அந்த பாட்சாவானவன் மிகுந்த கோபமடைந்து தன்னுடைய இனத்தாரோடு சொல்லுகிறான் இவன் இன்னவிடத்திலுள்ள மலையின் பொதும்பான கெவியுனுள்ளே கொண்டுபோய்ப் போடும்படிசெய்து அதின்வாசற்படிக்கு ஒரு பெரியகல்லைக்கொண்டு மூடி வெகு ஜாக்கிரதையாகஇருக்கவேண்டியதென்றுபாத்துஷாசொல்ல அதுபோல ஹாத்திமைக்கொண்டுபோய் போட்டு அந்த கெவியின்மேல் ஒரு கல்லைக்கொண்டு மூடிவிட்டு பாட்சாவுக்கு வந்து சங்கதிதெரிவித்திருக்க பின்பு ஹாத்திமென்பவர் அந்தக்கெவியில் பசியாலும் தாகத்தாலும் மிகுந்த துன்பமடைந்து ஏழுநாளைக்குப்பின்பு காஸ்என்னும் பாட்சா ஹாத்திமென்பவனைக்கொண்டு வரும்படிக்கு உத்தரவுசெய்ய அப்படியேகொண்டுவந்து விட்டார்கள்.

அப்போதுஅந்தபாட்சா ஹாத்திமென்பவனை உட்காரும்படி அவருக்கு வேண்டிய உபசாரஞ்செய்து சொல்லுகிறார் ஓ, ஹாத்திமே நீர் என்னுடைய பெண்ணை ஒப்புக்கொண்டுகலியாணம் செய்துகொள்ளுமென்றுசொல்ல அதற்கு மறுமொழி கொடாமலும் அச்சொல்லை ஒப்புக் கொள்ளாமலும் தலையைக் கீழே சாய்த்துக்கொண்டிருக்க அப்போது ஒரு தட்டில் பழதினுசுகளைக் கொண்டுவந்து முன்னே வைத்தார்கள் அப்படியிருக்க ஹாத்திமென்பவர் ஏழுநாள்பட்டினியானதால் அக்கனிகளைத்தன்னால் கூடியவளவிலும் வயிறுநிறையச்சாப்பிட்டார் பின்பு அந்த பாத்துஷா சொல்லுகின்றான் எனதுபிரியமுள்ள வாலிபனே நீ என்பெண்ணை நிக்கா செய்துகொள்ளென்று சொல்ல அதற்கு ஹாத்திமென்பவர் சுத்தமாக என்னால் கூடாதென்றும் இன்சானுக்கும் ஹைவானுக்கும் எவ்விதமாகக் கூடுதலாகுமென்றுசொல்ல பின்பு உத்தரவுசெய்தான் முன்போட்ட புகாவென்னும் கெவியில் போடச்சொல்ல அப்படியே ஹாத்திமை கொண்டுபோய்ப் போட்டார்கள் அதில் சிலநாள் அன்னபானாகாரமில்லாமல் கைதிலிருந்தார் அப்படியிருக்கையில் ஒருநாள் நித்திரையில் ஒரு பெரியோரானவர் அவர் தலைமாட்டில் வந்துநின்றுகொண்டு சொல்லுகிறார் ஓ, ஹாத்திமே நீ இப்போது பாக்கியமுள்ளவனாயிருப்பதால் ஏன் உன்னுடைய வழியை இழந்து இதில் வீணாய்ப் போக்குகிறாய் நீ அறியவில்லையா என்ன வேலைக்கா வந்திருக்கிறாய் நீ எதுவரையில் அந்தப்பெண்ணை நிக்கா செய்யாவிட்டால் எதுவரையிலும்இத்துரவில் நின்று வெளிப்படமாட்டாயென்றுசொல்ல அதற்கு ஹாத்திம்சொல்லுவார் நல்லதுபெரியவரே நான் அந்தப்பெண்ணை நிக்கா செய்தால் அவள் என்னைகொஞ்சநேரமாவது வெளியில் சாவகாசமாய்விடமாட்டாளே நான் இவளுடைய அருவலிலிருந்தால் நான்வந்தவேலைக்கு எவ்விதமாய்ப் போவேனென்றுசொல்ல ஓ, ஹாத்திமே நீ வெளிப்படுவது இதுவல்லாமல் வேறில்லை நீ சந்தேகமில்லாமல் அந்தப்பெண்ணைநிக்காசெய்தால் நல்லது இல்லாவிட்டால் இந்தகெவியிலேயே உன்பிராணன் மரணமாகும் அப்படி நிக்காசெய்தால் அந்தப்பெண்ணே உன்னை சந்தோஷமாக அனுப்புமென்று இவ்விதமாகக்கனவுகண்டு விழித்து எழுந்திருக்கையில் கொஞ்சநாள் சென்றபின்பு அந்தகாஸ் என்னும் பாட்சாவானவன் ஹாத்திமை கொண்டுவரும்படிக்கு உத்தரவுசெய்தான் அப்படியே கொண்டுவந்துவிட்டார் பின்பு ஹாத்திமைப்பார்த்துச்சொல்லுகிறான் ஓ, ஹாத்திமே நீர் என்சொல்லைதட்டிக்கொண்டுவருவதால் நீ இன்னும் அதிக வருத்தப்படுகிறாய் என்சொல்லைத் தட்டாமல் என் பெண்ணைக் கட்டிக்கொண்டால் உனக்கு வேண்டியது கிடைக்குமென்றுசொல்ல அப்போது ஹாத்திம் சொல்லுகிறான் நல்லது தங்களுடையபெண்ணை நான் கட்டிக்கொண்டால் அப்போது யாதொரு கரடிகளும் நானிருக்குமிடத்துக்கு வரக்கூடாதென்றுசொல்ல பாத்துஷா சொல்லுகிறான் ஹாத்திமே யாருக்காவது குறுக்கே உண்டாகுமா உன்னிடமாக வரவும்போகவும் பின்பு தன்னுடைய தர்பாரிலுள்ள பெரியபெரியமந்திரி பிரதானிகளையும்மற்றும்பெரியோர்களையும் அழைத்து வைத்துக்கொண்டு பெரிய முஸ்தீபாகவும் அனேகவிதமான கலியாண ரசம்கள்செய்து விதவிதமானவிரிப்புகள்விரித்து அதில் பெண்ணும் மாப்பிள்ளையும் இருக்கும்படியாக ஒரு மணவறை செய்து அதில் ஹாத்திமையும் அப்பெண்ணையும் உட்காரவைத்துச

டங்குகள் செய்யும்படியான ஷர்த்துகளெல்லாஞ் செய்து பின்பு நிக்
காசெய்து ஹாத்திமுடைய கையில் பெண்ணுடைய கையைப்பிடி
த்துக் கொடுத்துவிட்டு அந்தயிடத்தைவிட்டு தாரும் தம்முடையம
ந்திரிபிரதானிகளும் பந்துசனங்களும் அவ்விடம்விட்டு வெளியில்வந்து
விட்டார்கள் பின்பு அந்தமனைவரையில் ஹாத்திமும் அந்தப்பெண்ணு
ம் ஒன்ருகக் கூடி வேண்டிய சந்தோஷமாகக் கலந்திருந்தார்கள்
இவ்விதமாக நித்தியகாலம் சந்தோஷத்தை யடைந்துகொண்டு இருந்
தார்கள் கனிவர்க்கங்களை விதவிதமானதை பொசித்துக்கொண்டு மிரு
ந்தார் அவ்விதமாகல் கனிகள்தின்று மனந்திருப்தி யடைந்துகொண்
டார் ஒருநாள் தன்னுடைய மாமனு ரிடமாகப்போய் மிகுந்த வணக்க
த்துடனே நின்றுகொண்டுசொல்லுகின்ருர் எவ்விதமாகல் நான்கனி
வர்க்கங்களைத்தின்று தின்றுநான் திகட்டிப்போனேன் ஆனல்தானியங்க
ளாலெனக்கு சாட்பிடமனங் கொண்டவனுக இருக்கிறேனென்று
சொல்லி அப்படி எனக்கு தாங்கள் கொடுத்தால் நான்சாப்பிடு
வேன் என்திரேகத்துக்கு ஒத்துக்கொள்ளும் என்மனதுக்குசந்தோஷ
மாக இருக்குமென்று ஹாத்திமென்பவர் சொல்ல தம்முடையகூட்ட
த்தார்களுக்கு உத்தரவுசெய்தான் நீங்கள்போய் நல்லநல்லவிதவிதமா
ன அரிசிகளும்நெய்சர்க்கரைகளுஞ் அந்தவஸ்துகளைச்சமைக்கவேண்டி
யநல்லபாத்திரமும் இந்தபட்டணத்திலேபட்டணவாசங்களில் சென்று
வாங்கிக்கொண்டு வரவேண்டியதென்று உத்தரவுசெய்ய அதுபோல
வே எல்லாவஸ்துக்களையும் வாங்கிக்கொண்டு வந்து முன்பாகவை
த்தார்கள் பின்பு அந்த வஸ்துக்களையெல்லாம் ஹாத்திம் எடுத்துக்கொ
ண்டுபோய் தனக்கு இஷ்டமான ஆகாரம் விதவிதமாகச்சமைத்துதா
னும் தன்பெண்சாதியுமாய் சந்தோஷமாகச் சாப்பிட்டார்கள் இவ்
விதமாய் நித்தியகாலம்சமைத்துசாப்பிட்டுக்கொண்டு மிகுந்த சந்தோ
ஷத்துடன் கூடிக் கலந்திருந்தார்கள் இவ்விதமாய்மூன்றுமாசமாகிவி
ட்டது ஒருநாள் தன்னுடைய பெண்சாதியுடனேசொல்லுகிருர் அது
எவ்விதமெனில் ஓ பெண்ணே நானொரு வேலைக்காகவேண்டி ஊரை
விட்டுப் புறப்பட்டுவந்தேன் உன்னுடைய தகப்பன் என்னைத்தொந்தர
வுசெய்து உன்னைக் கட்டிவைத்தான் இப்போது கொஞ்சநாளைக்காக
உன்தகப்பனிடத்தில் உத்தரவுவாங்கிக் கொடுத்தால் நீ எனக்கு மிகு
தமான ஒத்தாசை செய்த தாக இருக்கும் அப்போது நான்வந்
தவேலை முடித்துக்கொள்வேன் நானந்தவேலை முடிந்து உயிர்தப்பிவ
ருவேனுகில் பின்னும் உன்னிடமாக வருவேன் இச்சொல்லைக் கேட்



டவுடனே தன்னுடைய தகப்பனிடமாகப்போய் சொல்லுகிருள் என
தருமையுள்ள தகப்பனே என்புருஷனானவர் இவ்விதமாகச் சொல்லு
கிருர் தான்வந்தவேலையை முடித்துக்கொண்டு வரும்படிக்கு போகு
ம்படியாக கொஞ்சநாளைக்கு உத்தரவுகேட்கிருரென்றுசொல்ல மக
ளே நீ அவர்சொல்லுஞ் சொல்லுக்கு சம்மதமிருந்தால் நீ பெண்சாதி
அவர் உனக்கு புருஷனுகையால் உங்கள் சம்மதப்படி நடக்கலாமென்
றுசொல்ல அது சரிதான் அந்த மனிதரானவர் வெகு நீதியுள்ள நட
ப்புள்ளவரா யிருக்கிருர் அவர்சொல்லை யாறமாட்டார் எவ்விதத்திலும்
சொன்னதுபோல வருவார் அதற்கு யாதொருசந்தேகமில்லை ஆகை
யால் தாங்கள் அவருக்கு உத்தரவு கொடுக்கவேண்டியதென்றுசொ
ல்ல அப்படியே ஹாத்திமை அழைத்து சில நன்மொழிபேசிபோ
ய்வரும்படிக்கு உத்தரவுகொடுத்து தம்முடைய ஜனங்களை அழைத்து
நீங்கள் இவரோடு நம்முடைய எல்லைவரைக்கும் கொண்டுபோய் நன்
மையாய் விட்டுவாருங்களென்று சொல்ல அப்போது அந்த பாத்து
ஷாவின் மகள் ஹாத்திமுடைய பெண்சாதி யானவள் ஒருமோதிரமொ
ன்று மோதிரத்தை தன்னுடைய புருஷனுக்குக் காண்பித்து அவ
ருடைய தலைப்பாகையின்முன் தாணியில் அந்த மோதிரத்தை முடிந்
துவிட்டுசொல்லுகிருள் நீர் போகுமிடங்களில் உமக்கு யாதொரு
இடுக்கம் நேரிடுமாகில் இந்த மோதிரத்தை விரலில் போட்டுக்கொள்
ளுங்கள் அப்போது உங்களுடைய வருத்தத்தைநிவர்த்திசெய்யுமென்று
ம் பின்னும்வேண்டிய உபசாரஞ்செய்து உத்தரவுகொடுத் தனுப்பி
னுள் ஹாத்திமானவர் இருவர்கள் உத்தரவு பெற்றுக்கொண்டு அவ்
விடம்விட்டு முன்னல் நடந்தார் அப்போது சிரடிகள் கூடப்போய்த
ங்கள் எல்லைவரையில் கொண்டுபோய் விட்டது அப்படி சிலநாள்ந
டக்கையில் அவ்விடத்திலொரு அகோரமான மைதானமான இ
டம்வந்து சேர்ந்தது அவ்விடத்தில் யாதொருமனுஷர்மிருகஜெந்துக
ள் பறவை பக்ஷிஜாதங்களில்லாத பாலைநிலமாகவும் தாகத்துக்கும்பசி
க்கும் யாதொன்றுங் கிடைக்காத நிலமாகவு மிருந்தது அவ்விதமான
விடத்தில் அவர் வருத்தப்பட்டு பரிதாகமாய்ப்போகும்போதுசாயங்
கிரவேளை யாகிவிட்டது அப்போது ஒருவயதுசென்ற பெரியமனித
ன் தன்னுடைய முகத்தில் புருக்காவை போட்டுக்கொண்டு கையிலிர
ண்டுரொட்டியும்ஒருகூஜாதண்ணீரும்கொண்டுவந்து ஹாத்திமுடைய
கையில் கொடுத்துவிட்டுப் போனுர்.

7 பின்பு அதைவாங்கிப்பொசித்துவிட்டு முன்போல் நடந்து இரவுபகலாகப்போகையில் நித்தியமும் அந்தப்பெரியோர் இரண்டுரொட்டியும் கூஜாவில் தண்ணீரும் கொடுத்துக்கொண்டேவர அதைத்திருப்தியாகப்பொசித்துக்கொண்டு ஹாத்திமென்பவர் நடந்து இரவுபகலாகப்போகின்றார் அப்படிபோகையில் ஒருநாள் ஒருமலையைப்போல வெளியில் ஒருபாம்பானது கிடக்கக்கண்டார் அந்தப்பாம்பைக்கண்டுபயங்கரம்கொண்டு நடக்கக்கூடாமலிருக்கையில் வெகுசுருக்கில் நடந்து அந்தப்பாம்பினிடமாகப்போய்ச்சேர்ந்தார் அப்போது அந்தபாம்பானது மூச்சைவிட்டு இழுக்கையில் அந்தமூச்சில் ஹாத்திமென்பவர் அகப்பட்டுக்கொண்டார் தன்னால்கூடியமட்டும் அதில்நின்றுவெளிப்படப்பார்த்தார் கூட இல்லை அப்போது அந்தமலைப்பாம்பினுடைய மூச்சில்சிக்கிக்கொண்டிருக்க அந்தப் பாம்பானது விழுங்கிவிட்டது அப்போது ஹாத்திமென்பவர் பாம்பின்வயிற்றில் இருந்துகொண்டு ஆண்டவனை நினைந்து மிகுந்தசிஜ்தா ஷுக்கூர்செய்துக்கொண்டு சொல்லுகிறார் மகாபாவவாளியானவன் ஆண்டவன் உண்டாக்கிய இந்தப்பெரிய மலையைப்போலொத்த மலைப்பாம்பின்வயிற்றில் நான் அகப்பட்டது எனக்குநன்மையாக இருக்கும் இந்த பாவமாகிய திரேகமானது யாதொன்றுக்குமாகாமல்வீணாகப்போகாமல் ஆண்டவனென்பேரில் பட்சங்கொண்டு இந்தப்பாம்புக்கு பசிதீரும்படிக்கு உதவிசெய்தானென்றும் அதுவேயெனக்குப்போதும் என்கிற எண்ணங்கொண்டு பின்னும்சொல்லுகின்றார் மெய்யானது எவ்விதமானால் யாதாமொருவன் தன்னை ஆண்டவனுடைய பாதையில் நன்மைசெய்ய தன்னுடைய வீட்டையும்பொருள்களையும் ஆண்டவன்பேரால் செலவுசெய்து மிகுந்த துன்பத்தையடைந்து அவனைநாடி இருப்பார்களாகில் அவர்களுக்கு யாதொரு தாழ்வு குறைவுநேரிடாது எவ்விதமானால் அப்படிக்குசெய்கின்றவர்களுடைய ஆண்டவன் அவர்களைப்பரிசோதனைக்காக கொஞ்சம் வருத்தங்களை நேரிடும்படியாக செய்கிறதே தவிர வேறில்லை ஆனால் இவ்விதமான சங்கடங்களில் அகப்பட்டு உறுதியுள்ளவனாக இருப்பானாகில் அவன் எண்ணவேண்டியதுதாம் மிகுந்த சலக்கியத்தில் [illegible] மோமென்கிற எண்ணங்கொள்ளவேண்டியது என்று இவ்விதமாக தன்னுடைய ஆறுதல்சொல்லிக்கொண்டிருந்தார் பின்னும் அய்யூபு நபியினுடைய பாடுகளை நினைத்துக்கொண்டு எவ்விதத்திலும் அவருக்குவந்த இடுக்கங்களை நீக்கி சவுக்கியங்கொடுத்ததுபோல எனக்கும் ஆண்டவன் கிருபைசெய்வான் என்றுசொல்லிக்கொண்டு இவ்விதமாகப் பாம்பி



ன் வயிற்றில் மூன்றுநாள் வரையிலும் நாலுபக்கங்களிலும் ஓடிபாதையைப்பார்த்தார் ஒரு இடமாவது வெளியில்வரபாதையில்லாமலிருந்தது அந்தப்பாம்பினுடைய வயிற்றில் இருந்தவருத்தமடைந்துகொண்டிருந்தார் அந்தப்பாம்பினுடையவிஷமானது இவரையாதொன்றுஞ்செய்யவில்லை எவ்விதமானால் தன்னுடையபெண்சாதியானவள் தன்தலைப்பாகையில் மோருவென்ற ஒருமோதிரம் முடிந்து விட்டாள் அந்தமோதிரத்தினால் இந்தப்பாம்பினுடையவிஷமேறவில்லை இவருக்குயாதொருகெடுதலும் வரவில்லை அந்தமோதிரத்தின்குணம் அப்படிக்கொத்ததாக இருக்கும் இன்னம் அந்த மோதிரம் யாதாமொருவரிடமாக இருக்குமாகில் அவனைநெருப்புசுடாது தண்ணீரில்விழுந்தாலும் அவனுக்குயாதொருகுற்றம் வராது ஆகையால் இந்தப்பாம்பினுடையகொடூரமான விஷம் இவரையாதொன்றுஞ்செய்யவில்லை இவ்விதமாக அந்தப்பாம்பின்வயிற்றில் இருந்துகொண்டிருக்க மூன்றுநாளைக்குப்பின்பு அந்தமலைப்பாம்பின் வயிற்றில் ஹாத்திம் செரியாமல் ஓடிக்கொண்டிருப்பதால் அந்தப்பாம்பானது மிகுந்தவருத்தப்பட்டு அச்சமடைந்து இதென்னகாரணம் நான் என்னகெட்ட வஸ்துவைத்தின்றேனென்வயிற்றில் செரியாமல் ஓட்டம்ஓட்டமாக ஓடிக்கொண்டிருக்கின்றது என்று தன்னுடைய வயிறுமிகுந்தவலியாகி வேதனைப்பட்டுக்கொண்டிருந்தது அந்தப்பாம்பின்வயிற்றில்ஹாத்திமென்பவர் திக்குமுக்கு அடைந்துகொண்டு நான்குதிசைகளிலும ஓடிக்கொண்டிருக்கையில் அவனுடையகுடலானதுகாலைச்சுற்றிக்கொள்ளுகின்றது அந்த [illegible] காலில்நின்று உதறிவிட்டு ஓடிக்கொண்டிருக்கையில் அந்தப்பாம்பானது நம்முடையவயிற்றில் நின்று இந்த வஸ்துக்களெல்லாம்இப்போது வெளியில்வருவதைப்போலத்தோணுகின்றது மனதிலெண்ணிக்கொண்டு வாந்தியெடுத்தது அப்போது ஹாத்திமானவர் வெளிப்பட்டார் பின்பு அவ்விடம் விட்டு அப்புறம்போய் தன்னுடைய துணிமணிகளை வெயிலில் காயப்போட்டுக்கொண்டிருந்து காய்ந்தபின்பு அவ்விடத்தில்ஒருவெளிகாணப்பட்டுவெகுதூரம்போகையில்அவ்விடத்தில்ஒரு பெரிய[illegible] ஏரியைக்கண்டார் பின்பு வெகு சுருக்காக ஓடி அதினுடைய கரையில்போயிருந்து தன்னுடையதுணிகளை யெல்லாம் துவைத்துக்கொண்டிருக்கையில் அவ்விடத்தில் தண்ணீரில் நின்று ஒரு மீன்வெளிப்பட்டது அந்தமீனானதின் கீழேமீனுடையரூபமும் இடுப்புக்குமேல் தலைவரையிலும் மனிதனுடைய ரூபமாயிருந்தது அந்த மீனுடையரூபத்தைப்பார்த்துஆண்டவனிடமாகஷுக்கூர்செ

ய்து ஆண்டவனே மிகுதமாகப்போற்றிவந்திருக்கொண்டு கிறகை
ரின்வந்த மனித ரூபங்கொண்ட மீனைது வந்து ஹாத்திமுடைய
கையைப்பிடித்துக்கொண்டு தண்ணீர்க்குள்ளேகொண்டுபோய்விட்ட
து ஹாத்திமென்றால், ஒரு ஜின்னைகயிருக்கும்பின்பு அவ்விடத்தில்
மிகுந்த ஆச்சரியமான வேலைகள் செய்யப்பட்ட ஒரு மஹல்
இருந்தது அந்த மஹலில் ஆச்சரியமான ஒருவிரிப்பு விரித்துஇரு
ந்தது அதின்மேல் ஒருசிம்மாசனத்தைப்போல ஒருபீடமிருந்தது
அந்தப்பீடத்தில் ஹாத்திமை உட்காரவைத்து தான் எவ்வர்ணமான
அழகுபொருந்திய பனிரண்டுவயதுள்ள பெண்ணைப்போல ரூபமெடு
த்துக் கொண்டு வேண்டிய நவரத்தினநகைகளையும் பூட்டிக் கொண்டு
அதிக சிங்காரத்துடனே சிங்காரித்துக் கொண்டு ஹாத்திமுடைய
இடமாக வந்துநின்று அவரோடுபோகஞ் செய்யநாடி சரசம்பண்ணி
னள் ஹாத்திமானவர் அச்சங்கறிந்து சுத்தமாக உடன்படாமல் பின்
னுஞ்சொல்லுகிறார் நானொருவேலைக்காக என்னுடைய சரீரத்தைஇழ
ந்து இதுவரைக்கும் வந்து சேர்ந்திருக்கிறேன் நீ உன்னுடைய இன்
பத்துக்காக இவ்விடத்திலென்னை நிறுத்திக்கொள்ள எண்ணுகிறாய்
நான் உன்னிடமாக இன்பத்தில் சிக்கிக்கொண்டு நானுன்னோடுபோக
ஞ்செய்தால் நான்வந்தவேலை எனக்கு கூடுதலையாகாது ஆகையால்நா
ன்வந்த காரியத்தை நிறைவேற்றிக் கொண்டு பின்னால் உன்னிடத்தி
லிருந்து நீ கொண்ட ஆசையை நிறை வேற்றுவேன் நீ என்னை எங்
கேயிருந்தெடுத்துக்கொண்டு வந்தையோ அவ்விடத்தில் கொண்டு
போய் விட்டால் நலமென்று சொல்ல அப்படியே அவள் சம்மதப்ப
ட்டுச் சொல்வாள் நீ இப்போது என்னிடத்தில் மூன்றுநாளிருந்தால்
நான் பின்பு உன்னைவெளியில் கொண்டுபோய் விடுவேனென்றுசொ
ல்லஅப்படியே ஹாத்திமென்பவர் இஷ்டமுடைத்தாகமூன்றுநாளங்கிரு
ந்தபின்பு அவள்கையைப்பிடித்து முன்னாரிலிருந்துமுழுகி முன்னி
ருந்தவிடத்தில்கொண்டுவந்துவிட்டு பின்னுஞ்சொல்லுகிறாள் ஆ,என
துபிரியமுள்ள வாலிபனே என்னைவிட்டு எவ்விதமாகப்பிரிகின்றாய்,
அதற்குஹாத்திமென்பவர் சொல்லுகிறார்ஓ பெண்ணே எனக்கு ஒரு
வேலை மிகுந்த அவசரமா யிருப்பதால் நா னுன்னைவிட்டுப் பிரியேன்
மனங்கொண்டவனா யிருக்கிறேன் அப்படிக் கில்லாவிட்டால் உன்னை
விட்டு நான்பிரியமாட்டேன் இன்பத்தைவிட்டு துன்பத்திறகுடன்
படுவேனாஇவ்விதமாகஹாத்திமானவர்சொல்லஅவள் இவரைப் பிரயா
ணப் படுத்திவிட்டு தன்னுடைய ஜாகைக்குப்போய்விட்டாள் பின்பு





தன்னுடைய உடம்பிலுள்ளக் காயவைத்துக்கொண்டு முன்னால் நட
ந்தார் கொஞ்சநாள் நடந்து ஒரு மலையினிடமாகப் போய்ச்சேர்ந்தார்
அந்தமலையில்விதவிதமான மரங்களும் பச்சைநிறமுள்ளதாகவும் வித
விதமான கனிவர்க்கங்கள் கண்கண்ட தூரவரையில் பழுத்துச்சொரி
ந்துகொண் டிருந்தது அவ்விடத்தில் கணக்கில்லாத மஹல்கள்வீ
டுகள் பெருவிநோதமான வேலைகள் செய்திருக்கின்றது அவ்விடத்
தில் வாசம்பொருந்திய புட்பதினுசுகள் கணக்கில்லா திருக்கின்றது
அவ்விடத்தில் குளிர்ந்த வாடைகளும் வெகுசவுக்கியமா யிருந்தது அ
வ்விடத்தில் நான் போனவுடனே மிகுந்த துன்பப்பட்டு வந்தவனா
படியால் உட்கார்ந்த வுடனே என்னை யறியாமல்நித்திரை வந்து விட்
டது இவ்விதமாகநான் தன்னைமறந்து நித்திரை செய்துகொண் டிரு
க்கையில் அவ்விடத்திருந்த எஜமானனவர்வந்து தன்னைமறந்து நித்
திரை செய்வதைப்பார்த்து அவர் எண்ணுகிறார் இந்த வாலிபன்
மிகுந்த அழகும் சவுந்தரிய முள்ளவன் தன்னைமறந்து நித்திரைசெய்
கின்றானென்று அப்போது அவனருகாமையில் வந்து உட்கார்ந்
து கொண்டு பின்பு கொஞ்சநேரம் பொறுத்து ஹாத்திமென்பவர்
கண்ணைத்திறந்து நிமிர்ந்து பார்க்கையில் ஒருவர் அருகாமையில்இ
ருக்கக்கண்டு ஹாத்திமென்பவர் அச்சமடைந்து தானிருந்த விடத்தி
ல் நின்றெழுந்து குனிந்து குனிந்து சலாம்செய்தார் அப்போதந்த
மனிதர் கேட்டார் நீர்யார் எவ்விடம் போகப்பட்டவர் இந்த பயங்
கரமான காட்டில் நீ என்னவேலைக்காக வந்தாயென்று கேட்க ஹா
த்திமென்பவர்சொன்னார் நான் தஷ்தெ ஹவேதாவுக்குப்போகவேண்
டியதென்று சொல்லி பின்பு தன்னுடைய மிலாகத்துக்கு நான்யாத்
திர மானேன் பின்னால் ஆண்டவனுடைய செயல் எவ்விதமாக இருக்
கின்றதோவென்று ஹாத்திம்சொல்லஅப்போது அந்த மனிதனவர்
சொல்லுகிறார் ஓ, வாலிபனே நீர் அவ்விடத்துக்குப்போகின்றதினை வை
மனதில் நின்றுவிட்டுவிடுமென்று சொல்லி நீயேன் உன்னுடைய உ
யிரை இழந்துபோகிறாய்எனக்கு மிகுந்த மனவருத்தமாயிருக்கின்றது
உனக்கு ... நம்பினேகிதர்களுகில்லையா உன்னைப்போகவொ
ட்டாமல்செய்ய அதற்காக ஹாத்திமென்பவர் சொல்லுகிறார் நான்
என்னுடைய சொந்தவேலைக்காகவும்ஒருபிரார்த்தனைக்காகவும்வரவில்
லை ஆண்டவனுடைய பாதையில் நின்று நான் இடைப்புகட்டிதைரிய
மாகவேறே யொருவருக்காய்ஒருவேலைசெய்யப்போறேனென்றுசொ
ல்லி நானதை தேடிக்கொண்டு திரிகிறேன் ஆண்டவன் செயல் எவ்

கண்ணைத்திறந்து பார்க்கும்போது தானு மந்த பெண்ணுமாக ஒரு பெரியதோட்டத்தி லிருக்கக்கண்டார் அப்போதந்தப் பெண்ணானவள் ஹாத்திமுடைய கையை நிகலென்று விட்டுப்போட்டு எவ்விடமோ போய்விட்டாள் அப்போது ஹாத்திமென்பவர் நான்குதிக்கிலும் திரிந்து வேடிக்கை பார்த்துக்கொண் டிருக்கையில் ஒரு பக்கத்திலிருந்து பரிக்கூட்டங்கள் கணக்கில்லாமல் கைகளைக்கோர்த்துக்கொண்டு அனேகஆபரணங்கள்பூண்டுவிதவிதமான உடுப்புகளும்உடுத்திக்கொண்டு ஹாத்திமுடைய அருகில் வந்துகையைப்பிடித்து மிகுந்த வலுவாகவும் ஜபர்தஸ்திசெய்து தங்களிடம்வரும்படியாகவும்சேரும்படியாகவும் மிகுந்த தொந்தரவு செய்தார்கள் அப்போது ஹாத்திமென்பவர் ஒருவர்முகத்தையும் எதிட்டுப்பார்க்காமலும்இவர்களியாரென்றும் எவரென்றும் எங்கேயிருந்துவந்தார்களென்றும்என்னசெய்கிறார்களென்றும் தலையெடுத்துப்பார்க்கவில்லை அதெப்படியானால்முன்னால்அந்த மனிதன் சொன்னசொல் நினைவுவந்துதன்மனதில் சொல்லிக்கொண்டார் ஓ ஹாத்திமென்பவரே நீ ரெவ்விதத்திலும் இந்தப்பெண்களுடைய இச்சையில் நின்று நீ ஆசையில் ஹவா நபசுகொண்டு அவர்களுடைய பக்கவலையில் சிக்கிக்கொள்ளாதே யென்று [illegible] இப்போதுவேண்டியது ஜாக்கிரதையா யிருக்கவேண்டியது இந்த ஜாலமாத்திலுடைய சங்கதி இதுவாயிருக்குமென்று [illegible] தைத் திடப்படுத்திக்கொண் டிருக்கையில் அந்த பரிக்கூட்டமான பெண்களெல்லாம் அழகுபொருந்திய மஹாலுக்குள் ஹாத்திமை யழைத்துக்கொண்டு போனார்கள் அந்த மஹாலானது மாணிக்கம் பச்சை வைடூரியமுதலிய நவரத்தினங்களா லிழைத்து கட்டப்பட் டிருந்ததுமன்றிலட்சாலட்சம் விநோதவிநோதமான படங்கள் கட்டப்பட் டிருந்தது பின்னுமந்த மஹாலில் ஒரு தகத்தானது வெகுவிநோதமான வேலைப்பாடாக நவரத்தினங்களால் செய்யப்பட்டு அதில் சரிகை மக்மல் விரிப்பின்மேல் வைத்திருந்தது அந்த தகத்தினிடமாகப் போகையில் முன்னில் கட்டியிருந்த படங்களெல்லாம்சுவர்களாகி விட்டது அப்போதந்த சுவர்களின் நின்றும் அனேகம் பரிகள் வெளியில் வந்து [illegible] அப்போதந்த பரிஜாதிகளாகிய ஒவ்வொருத்தியைப் பார்த்து மனதி லச்சமடைந்து எண்ணிக் கொள்ளுவார் ஆண்டவனே இது என்னகாரணமான ஹிக்குமத்தா யிருக்கும் இவர்கள் எங்கேயிருந்துவந்தார்கள் இவர்கள் படமாயிருந்தவர்கள் சுவராகி அந்தச்சுவரில் நின்று இவர்கள் வெளிப்பட்டு வந்திருக்கிறார்கள் அப்போது தகத்தி னிடமாகப்போய் நின்று



தன்மனதி லெண்ணுகிறார் ஓ ஹாத்திமே நீ இவ்விடம் [illegible] சேர்ந்திருக்கிறாய் இப்போது இந்தச் சிம்மாசனத்தில் போயிருக்கலாமென் றெண்ணிக்கொண்டு அந்த சிம்மாசனத்தின்மேல் தன்னுடைய காலைவைத்தார் அதிலிருந்து ஒரு பயங்கரமான சப்தம்வந்தது அது எவ்விதமெனில் அந்தச் சிம்மாசனத்தின் கால்கள் முறிபட்டது போல் காணப்பட்டது கீழே குனிந்து பார்க்கையில் அதினுடைய கால்கள் பழுதில்லாமல் முன்னிருந்ததுபோ லிருக்கக்கண்டுசிம்மாசனத்தி லேறியிருந்தார்,

பின்பு முன்வந்தசப்தம்போலவந்தது அந்தசத்தத்துடனே ஒருபரியானவள் [illegible] ணைப்பட்டவளெப்பேர்ப்பட்டவளானால் அவ்விடத்தில் நிற்கின்ற பெண்களுக்கெல்லாம் மேன்மையான அழகுபொருந்திய பெண்ணாகவும் சகலர்பேரிலும் நின்று உயர்ந்தவளாகவும்ரெட்டையாகவும் ஹாத்திமுக்குமுன்பாக சிங்காரித்துக்கொண்டுவந்து நின்றாள் அப்போது அந்தசவுந்தரியமுள்ள பரியானவளுடைய ரூபத்தைப்பார்த்துவெறுநாகி மனஸ்தாபப்பட்டு விட்டார் அப்போதுதன்னுடைய மனதில் என்னுகிறார் எவ்விதமானாலும் [illegible] இவன் சுவரில்நின்றும்படத்திலிருந்து வந்தபரிகளைப் போலொத்தவளல்ல இவளை [illegible] யுடைய வல்லபத்தால் உண்டாக்கின பரியானவள் முகத்தில்புருக்காபோட்டுக்கொண்டு இப்போதுஎன்னிடமாகவந்து நிற்கின்றாளே என்றுமனதிலெண்ணிக்கொண்டால் கூடியமட்டும் அவளைப்பார்க்காமல் கொஞ்சம்கடைகண்ணால்பார்த்தவுடனே தன்னுடைய புத்தியானது சொரணைதப்பி அவளுடைய உடுமானத்தை அவிழ்த்து அவள் கூட சேரும்படியான எண்ணம்வந்துநேரிட்டது அப்போது அந்த பெரியவர்சொன்ன வாக்கைநினைந்து [illegible] அவள் கையைப்பிடித்து இவளோடுசேர்ந்தோமானால் நம்முடைய [illegible] யில் இந்தஸ்மாத்தில் வருத்தமடைந்து இவ்விடத்தில் நம்முடைய [illegible] யினைப்போக்கும்படியாகநேரிடுமென்றும் [illegible] ணிக்கொண்டிருக்கையில் [illegible] அரானவள் ஹாத்திமுடைய கையைப்பிடித்துக்கொண்டிருக்கையில் இப்போது இந்த சுல்மாத்தை விட்டு நான் வெளிப்படுவேனோ இல்லையோவென்று மூணுநாள்வரையிலுமந்த சிம்மாசனத்தில் உட்கார்ந்துக்கொண் டிருந்தார் அப்படியிருக்கையில் இரவுஆனவுடனே தன்னாலேதான் கர்ப்பூர ஜோதிகளின் வெளிச்சம் உண்டாக்கிக்கொண்டிருந்தது இன்னும் அவ்விடத்தில்

ஆடல்பாடல் மேளதாளங்களுடைய சப்தங்களும் வந்துகொண்டிருந்தது பின்னும் அந்த சுவரில் நின்று புறப்பட்டிருந்த பரிகளெல்லாம் ஆடல் பாடல் கூத்துகளுமாடிக் கொண்டிருந்தார்கள் முன்னால் புருக்காபோட்டுக்கொண்டிருந்தபெண்ணானவள் ஹாத்திமுடைய சிம்மாசனத்தின்முன்பாகநின்றுகொண்டுஹாத்திமைபார்த்துக்கொண்டு குஞ்சிரிப்பு சிரித்துக்கொண்டு விதவிதமான கனிவர்க்கங்களும் ஹாத்திமுக்கு முன்பாகக்கொண்டுவந்துவைத்தாள் அந்தக்கனிகளைமிகுதமாகத்தின்றுகொண்டிருந்தார் அப்படிக்குதின்றுவயிறுநிறைகிறதில்லை ஆண்டவனேநான் எவ்வளவோ கனிகளைகணக்கில்லாமல் தின்றும்என்வயிறுநிறைகிறதில்லைபசியும்தணிகிறதில்லை இந்தச்சங்கதிகள் எவ்விதமென்று தெரியவில்லை இவ்விதமாக மூணுநாள் சரித்திரம் நடந்து விட்டது (ச) நாள்ஹாத்திமுடையமனதிலெண்ணினார் ஆனால் என்வயசுள்ள வரையிலும் நான்இவ்விடமிருப்பேனாகில் இந்தக்கனிகளால் எனக்கு யாதொருபசியும் தீர்க்கமாட்டாது இந்தயிடத்திலநின்று நான்வெளிப்பட மாட்டேன் முனீர்ஷாமிக்கு நான் நம்பிக்கைகொடுத்துவந்திருக்கின்றேனே அவனுக்கேதாவது சங்கடம் நேரிடுமாகில் ஆண்டவனுக்கு [illegible] ஜவாபுசொல்வேனென்று எண்ணிமுன்னால் நின்றிருந்தபெண்ணுடைய கையைப்பிடித்தார் அப்போதுஅந்த சிம்மாசனத்தின் கீழேயிருந்து ஒரு பரியானவள் வெளியில் வந்து ஹாத்திமென்பவரை ஒரு உதை உதைத்தாள் அந்த உதைபட்டவுடனே ஹாத்திமென்பவர் எங்கேயோ ஓரிடத்திற்போய் விழுந்தார் அப்போது அவ்விடத்திலிருந்து தலையையெடுத்துப் பார்த்தார் தானிருந்தயிடமும் அந்தப்பெண்களின் கூட்டமும்யாதொன்றும் காணவில்லை பின்பு அவ்விடத்தில் நின்றும்பார்க்கும்போது ஒருவனுக்கு [illegible]ரமாகத்தோன்றினது வெகுகடினமானதாகவிருந்ததுஅப்போதுஹாத்திமென்பவருடைய அறிவு மாறித் தன்னைமறந்து கொஞ்சம்பொறுத்துஉஷாராகி மனதிலெண்ணிப்பார்த்தால் [illegible]சயாயிருக்குதென்று சொல்லப்பட்டவனித்த இடமானதுதன் [illegible] வேதாவாகத்தோன்றிவருகுதென்று நினைத்துக்கொண்டு [illegible] தேடிவருகையில் ஒருதரம்பார்த்ததை பின்னும்பார்க்க இவ்விடத்தில் தானிருப்பான்போலத்தோணுது அவனுடைய நிலைமை நினைத்து அவனை நான்எந்நிக்கிலும் தேடிக்கொண்டிருக்கையில்முன்காணவந்தசங்கதியானது ஒருபக்கத்திலிருந்து ஒருசத்தம் வந்தது எவ்விதமானால் ஒருதரம் பார்த்ததைதை மறுதடவைபார்க்க ஆசைகொண்டவனாக இருக்கிறேன் என்றும்



ஒருநாளைக்கு மூன்றுதடவை இவ்விதமான சப்தம் வந்துகொண்டிருக்கும் அப்படிக்கு ஏழுநாள்வரையில் கேட்டுக்கொண்டு பின்பு எட்டாநாளும் அதுபோல சத்தம்வந்தது அப்போது அந்தசத்தமானது வருகின்றஇடத்தைப்பார்த்துக்கொண்டு அவ்வழியைநோக்கிஓடிப்போனார் அங்கேபோய் பார்க்குமளவில் ஒரு பெரியவயதுசென்றபக்கீரானவர் நிலத்தில் இருக்கக்கண்டார் அப்போது ஹாத்திமென்பவர் அவர்முன்னால் போய் சலாம்செய்து நிற்க அப்போது அந்தப்பக்கிருசலாத்துக்குபிரிதிசொன்னார் பின்பு ஓ வாலிபமான சவுந்தரியமுள்ளமனிதனே நீர் எங்கேயிருந்து வந்திருக்கின்றீர் என்று இந்த வனாந்திரமான கடினமானகாட்டில் நீ என்னவேலைக்காக வந்தாயென்று பக்கிர் கேட்க அப்போது ஹாத்திமென்பவர்சொல்லுகின்றார் நான் ஒரு அலுவலைக் கொண்டு வந்திருக்கிறேன் நீர் இவ்விதமாக ஒருதடவை பார்த்ததை மறுதடவைபார்க்கஇன்பமுள்ளவனா யிருக்கிறேனென்று நீர் சத்தமிடுவது என்னத்தைக்குறித்து இவ்விதமானசத்தம்போடுகிறீர் என்று கேட்டு அப்பேர்ப்பட்டவன்து நீர் [illegible] இவ்விதமாகச் சத்தம் போடுகின்றீர் அதை ஆண்டவனுக்காக எனக்கு சொல்லவேண்டிய [illegible]கேட்க அப்போது அவர் சொல்லுகின்றார் [illegible] உட்காருமென்று சொல்ல அதுபோலஉட்கார்ந்தவுடனே இரவு ஆகிவிட்டது இரண்டுரொட்டியும் இரண்டு கூஜாத்தண்ணீரும் கைபாகவந்து இருந்தது அப்போது அந்த இரண்டு ரொட்டியில் தானொன்றை எடுத்துக்கொண்டு ஹாத்திமுக்கு ஒரு ரொட்டியும் ஒருகூஜாதண்ணீருங்கொடுத்து இருபேருமாகச்சாப்பிட்டார்கள் பின்பு ஹாத்திமென்பவர் அந்தபெரியமனிதனுடைய பக்கீரைக்கேட்டார்தம்முடைய வரலாற்றை தெரிவிக்கவேணுமென்று கேட்க அந்தப்பக்கிரானவர் சொல்லுகின்றார் நானுகப்பட்டவன் [illegible] வருத்[illegible] திரிந்துகொண் டிருக்கும் பொழுது அவ்விடத்தில் ஒரு தண்ணீரோடைக் [illegible] அதில் தண்ணீர்குடித்துக்கொண் டிருக்கையில் அந்த [illegible] ஒரு பெண்ணானவள் [illegible] கையைப்பிடித்து தண்ணீருக்குள்ளேகொண்டுபோனாள் அவ்விடத்தில் ஒரு பெரிய மதிலிருந்ததுஇன்னும் பலபலவிதமான ஆச்சரியமுள்ள தோட்டங்களாகவிருந்தது அவ்விடம்போனவுடனே அவ்விடத்திலுள்ளபரிகளெத்தனையோ பேர்கள் என்னைக்கொண்டுபோய்ஒருபெரிய மஜாலாகப்பட்டதில் அநேகவிதமான நவரத்தினங்களிழைத்த பெ

ரிய மஹாலில் ஒரு சிம்மாசன மிருந்தது அவ்விடத்தில் நான்போனவு
டனே அனேகம் பரிகள்வந்து என்னைச் சூழ்ந்துகொண் டிருந்தது க
ள் அப்படியிருக்கையில் நான் அந்தச் சிம்மாசனத்தின்மேலேறி உட்
கார்ந்தேன் என் முன்னால் ஒரு பரியானவள் வந்து முகத்தில்புருக்
கா என்னும்முக்காடு போட்டுக்கொண்டு அதிக சிங்காரமாக என்மு
ன்வந்து நின்று குஞ்சிரிப்பு சிரித்துக்கொண்டு நின்றாள் நான் மயங்
கும்படியாய் வெகு விநோதமுள்ள தன்னுடைய இன்பமான முகத்
தைக்காட்டுவதும் மூடுவதுமாயிருந்தாள் அப்போ தவளைப் பார்த்த
வுடனே என்சொரணை தப்பி அவள்மேலின்பங்கொண்டு அவளுடைய
கையைப் பிடித்தேன் உடனே அச்சிம்மாசனத்தின் கீழேயிருந்து ஒ
ரு பெண்ணானவள் வந்து என்னைக் காலால் ஒருதை உதைத்தாள் உ
டனேநான் இந்த அகோரமான காட்டில்வந்து விழுந்தேன் ஆகையா
ல் அப்பெண்ணானவள் என்னைவிட்டு நீங்கவில்லை நான் இரவும்
பகலாய் அவளை நினைத்துக்கொண்டு இந்த இடத்தில் அழுது புலம்பி
க்கொண்டு ஒருதடவை பார்த்ததை மறுதடவைபார்க்க இன்பங்கொ
ண்டிருக்கிறேனென்றும் சப்தம்போட்டு நான் திரிகிறே னென்றும்
இவ்விதமாக அந்தப் பக்கீரானவர் சொல்ல ஹாத்திமென்பவர் கே
ட்டு குஞ்சிரிப்புகொண்டு தன்மனதி லெண்ணுகிறார் அது எவ்வித
மெனில் நானுமகப்பட்டு வந்ததுபோல் இந்த மனிதனும் அகப்பட்டு
அந்தப் பெண்பேரில் இச்சைகொண்டு இவ்விதமாகத்திரிகிறானென்று
எண்ணிக்கொண்டு அப்பொழுது அந்த பக்கீருக்கு ஹாத்திம் சொல்லு
கிறார் அது எவ்விதமெனில் நல்லது நீர் இன்னமொருதடவை அந்
தப் பெண்ணையும் அந்த இடத்தையும் பார்க்கவேண்டுமென்று என்
னோடு வருவீரானால் நான் உன்னுடைய ஆசை நிறைவேறும்படிக்கு அ
ந்தப் பெண்ணையும் அவ்விடத்திலுள்ள ஆச்சரியங்களையும் மற்றொ
ருதடவை பார்க்கும்படிக்கு வெளிகாண்பிக்கிறேனென்று சொல்ல அ
ப்போ தந்த பெரியமனிதன் சம்மதமாகி இருவருமாகப் புறப்பட்டு வ
ருத்தங்களெல்லாம்பட்டு கொஞ்சநாளைக்குப் பின்பு அந்த ஏரியின
ருகிலிருக்கும் ஒரு விருக்ஷத்தின் கீழேபோய் இருவருமிருந்தார்கள் அப்
போதந்த பெரியவருக்கு ஹாத்திம் சொல்லுகின்றார் அது எவ்வித
மெனில் இந்த ஏரியில்நீர் இப்போதுபோய் தண்ணீர்மொண்டு குடிப்
பீராகில் முன்பு உன்னை கொண்டுபோன பெண்ணானவள் வந்து உன்
னை எடுத்துக்கொண்டுபோவாள் முன்னிருந்தபாவனையாய் பரிகளெல்
லாம் உன்னைச் சுற்றிக்கொண்டு முன்னிருந்தவிடத்துக்குக்கொண்டு



போவார்கள் அப்படியே நீர் அவ்விடம்போய் அந்தச் சிம்மாசனத்தி
லிருப்பீராகில் முன்பு உன்னிடமாக முக்காடு போட்டுக்கொண்டு அ
னேகவிதமான சிங்காரங்கள்செய்து முகத்தில்புருக்காபோட்டுக் கொ
ண்டு அனேகவிதமான நடினங்கள் செய்து காண்பிக்க அவளுடைய
நடினங்களையும் அவள்செய்கின்ற ஆடல்பாடல் முதலிய வேண்டிய
விநோதமான மயக்குகள் வரும்படிக்கு நீர் மோகங்கொள்ளும்படியா
னவித்தை யெல்லாம் அவள்செய்வாள் அதைக்கண்டு நீ அவள்பேரி
ல் இன்பங்கொள்ளாதிருப்பீராகில் உம்முடைய ஆயிசுவனாயினும் அ
வளையும் அவ்விடத்திலுள்ள பெண்களையும் மற்ற ஆச்சரியமான வே
டிக்கைகளைப் பார்த்துக்கொண் டிருப்பீர் அப்படி இராமல் என்சொ
ல்லைத்தட்டி அவள் செய்கின்ற நடினத்தின் பேரில் இச்சைப்பட்டு அ
வளைத்தொட்டுவாயாகில் இப்போதுபட்ட பாடுகளைப்போல்பின்னும் ப
டும்படியாக வேலைவந்து சம்பவிக்குமென்று அவருக்குவேண்டிய பு
த்திகளையும் தைரியமும் கொடுத்துவிட்டு அப்போது அவ்விடத்தில்
பின்னுஞ் சொல்லுகிறார் ஒரு பெரியோருடைய [illegible]
இதுவரையில் வந்து சேர்க்கவென்று சொல்லி வெளிப்பட்டுவர எ
ன்னைக்கொண் டிருக்கையில் அப்போதந்தப்பக்கீரானவர் ஹாத்திமுக்
கு முன்பாக தண்ணீர்க்கரையில் போய் தண்ணீரை எடுத்துக்குடித்து
க்கொண் டிருக்கும்போது முன்வந்து எடுத்துக்கொண்டு போன
பெண்ணானவள் வந்து கையைப்பிடித்து தண்ணீர்க்குள்ளே கொண்
டுபோய் விட்டாள் பின்பு ஹாத்திமென்பவர் மிகுந்த வருத்தங்களை எ
டுத்துக்கொண்டு முன்கண்ட பெரியவராகிய பக்கீருடைய இடமாகவந்
து தான்போய்வந்தசங்கதிகளையெல்லாம்விபரமாக அவருக்கு தெரிவித்
தார் அப்போதந்த பெரியவரானவர் ஹாத்திமுடைய தைரியமும் வல்
லமையும் அன்னியர்க்காக தான் வருத்தமடைந்ததையெல்லாம் கேட்
டு மிகுந்த சந்தோஷமடைந்து ஆண்டவனே ஹாத்திமுடைய காரிய
ங்களை நீரே நிறைவேற்றப் பட்டவரென்றும் மிகுதியாக ஆண்டவ
னைப்புகழ்ந்து போற்றி ஹாத்திமானவனையும்மிகுதியாக துவாசெய்து
உத்தாரங்கொடுத்தனுப்பினார் அப்போதவருடைய உத்தாரம்பெற்றுக்
கொண்டு அவ்விடத்தில் நின்று புறப்பட்டார் பின்பு கொஞ்சநாள்
வருத்தமுஞ்சங்கடமும்எடுத்துக்கொண்டு அந்தமினிடமாகவந்துசே
ர்ந்தார் பின்பு அந்த மின்றுபங்கொண்ட பரியினிடமாக ஒரு மாதவ
ளாயினும் இருந்து அவள்மனதைத் திருப்திசெய்து அவளிடமாக உத்
தரவு பெற்றுக்கொண்டு கொஞ்சநாள் வருத்தங்கள் எடுத்துக்கொண்

டு காடு வனாந்திரங்களெல்லாம் தாண்டி அந்த காடிருபங்கொண்டகாட்டில்வந்து சேர்ந்துதன்மாமனாரிடத்திலும்தன்பெண்சாதியிடத்திலும் போய் இரண்டுமாசமிருந்து அவர்களிடமாகஉத்தரவுபெற்றுக்கொண்டு கீடரென்ற நரியினிடமாகவந்து கண்டுகொண்டு பின்புகொஞ்சநாள் சென்றுஷாஹே ஆபாதென்னும்பட்டணம்போய்ச் சேர்ந்தார்.

அப்போது ஹசன்பானுவின் ஆள்கள்கண்டு உடனே இவர் கையைப் பிடித்துக்கொண்டு ஹசன்பானுவின் வீடுவரையில் கொண்டுபோய் அவளிடமாகத் தெரிவித்தார்கள் ஹாத்திமென்பவர் யாதொரு குற்றமில்லாமல் சலாமத்தாக வந்திருக்கிறாரென்றுஞ் சொன்னவுடனே ஹாத்திமென்பவரை அழைத்துவரும்படி உத்தரவுசெய்ய அப்படியே அழைத்துவந்தார்கள் அப்போதுஹசன்பானுவென்பவள் பர்தாவுக்குள்ளேவந்திருந்துகொண்டு கேழ்க்கிறாள் ஓ, ஹாத்திமான வாலிபரே நீர்போனசங்கதியைக்குறித்து என்னகொண்டுவந்தீரென்றுகேட்கஅப்போது ஹாத்திமென்பவர்நடந்தசங்கதிகளைச்சொல்லத்தொடங்கினார் அதுஎவ்விதமெனில் ஒருபெரிய மனிதன் ஜுவல்மாத்தென்னுமிடத்திலொருபெண்பேரி லிச்சைகொண்டு காடுவனாந்திரத்தில்வந்துகிடந்தார்பின்னுமவர்சத்தம் போட்டுக்கொண்டுசொன்னசொற்கள்ஒருதடவை பார்த்ததை மறுதடவைபார்க்க இன்பங்கொண்டவனாயிருக்கிறேனென்று சொல்லிக்கொண்டிருந்தவனை அவனையும் அவர்கொண்ட பெண்ணிடமாகச்சேர்த்துவிட்டேனென்றும்இப்போது அந்தக்காட்டில் அந்தச்சத்தமில்லாமல் நின்றிருக்கிறதென்றுசொல்லியபின்பு இவர்போன சங்கதிகளையெல்லாம் விபரமாகக்கேட்டு ஹசன்பானுவும் அவளுடையதாதியும் ஹாத்திமுடையவல்லமையும் பெலனும் தைரியமும் இரக்கமும்முகப்பத்தும் கேள்விப்பட்டு மிகுந்த சந்தோஷமாய் ஷாபாஷென்றுசொன்னார்கள்பின்பு ஹசன்பானுவைப்பார்த்து ஹாத்திமென்பவர் சொல்லுகிறார் இப்போது (இரண்டாவது சவாலின்) சங்கதியை எனக்குத் தெரியப்படுத்தினால் அதினுடையசங்கதியையும் விசாரணைசெய்துகொண்டு வருவேனென்றுசொல்ல அப்போது ஹசன்பானுவென்பவள் மிகுந்த இரக்கப்பட்டுச்சொல்லுகின்றாள் ஓ, ஹாத்திமே நீர்இவ்விடம்விட்டு வேண்டியவருத்தமும்சங்கடமும் எடுத்துக்கொண்டு நீர் வந்திருப்பதால் இவ்விடத்தில் கொஞ்சநாளிருந்து உடம்பையும் சவுக்கியப்படுத்திக் கொண்டு பின்பு போகலாமென்றுசொல்ல அப்போது ஹாத்திமென்பவர் சொல்லு



கின்றார் ஓ, ஹசன்பானுவே உன்னுடைய ஏழுசவால்களையும் கண்டு உனக்குத் தெரியப்படுத்தி பின்பு நான் சவுக்கியத்தைத் தேடுவேனேதவிர இப்போதுஎனக்குசவுக்கியம்வேண்டியதில்லையென்றுசொல்லி எழுந்து நின்றுகொண்டார் பின் காருவான் சராவென்னும் சத்திரத்தில் ஹாத்திமென்பவர் முனீர்ஷாமி யிடமாகப்போய் எட்டுநாள்வரையிலும் கூடியிருந்து தான்போய் பட்டபாடுகளையெல்லாம்தெரியப்படுத்தி அவரிடமாகஉத்தரவுபெற்றுக்கொண்டுஹசன்பானுவினிடம் போய்உன்னுடையஇரண்டாவதுசவாலின்சங்கதிகளை எனக்கு ஆண்டவனுக்காக சீக்கிரமாகச்சொல்லவேண்டியதென்றுகேட்டார்.

## இரண்டாவதுசவால்.

### ஹாத்திமென்பவர் அந்தமனிதனுடையவாசற்படியில் எழுதிக்கட்டிய நஸிஷ்தாவுண்டாய செய்தியைஅறிந்துவரப்போட்ட வரலாற்றின்பாடு.

ஹசன்பானுவென்பவள் சொல்லுகிறாள் (இரண்டாவது சவாலானது) எவ்விதமெனில்ஒரு மனிதனானவன் தன்னுடையவாசற்படியில் ஒருநஸிஷ்தாஎழுதி கட்டியிருக்கிறான் அதுஎவ்விதமெனில் நன்மைசெய்துசமுத்திரத்தில் போடென்றும் அதினுடையசங்கதி அவர

யிருக்கும்பின்பு அவன் அவ்விதமானஎன்ன நன்மைசெய்திருக்கிறான் அதினுடைய செய்தியை அறிந்துவரவேண்டியதுஎன்றுசொன்னமொழியை ஹாத்திமென்பவர் கேட்டு எழுந்து நின்றுகொண்டு பின்பு ஹசன்பானுவினிடத்தில் கேழ்க்கிறார் அந்த மனிதனானவன் யாராக இருக்கும் அவன் எந்த மூலையினிடமாக இருக்கிறானென்று கேழ்க்க அப்போது ஹசன்பானு சொல்லுகிறாள்நான் என்னுடைய தாதியினிடமாகக் கேழ்விப்பட்டிருக்கிறேன் அவனிருக்குமிடமானது வட்டமூலையாகவென்றும் சொன்ன விசனத்தை ஹாத்திமானவர் அறிந்துகொண்டு அல்லா உன்னுடைய தவக்கலென்றுசொல்லி அவ்விடம்விட்டு புறப்பட்டார் சிலநாளைக்குப்பின்பு பயங்கரமானஒருகாடுவந்துநேரிட்டது அக்காட்டில் சாயந்திரவேளையில் ஒரு மரத்தடியின் கீழே போய் சும்மாயிருந்தார் அப்படியிருக்கையில் ஒரு சத்தமானது மிகுந்த வருத்தமாகவும் துக்கமடைந்து அழுகின்ற பாவனையாகத்தன்காதில் கேட்டு தன்னுடைய கண்ணினின்றுநீர் தாரைதாரையாய்விழ ஈரல் எரியும்படியாக இன்ன விதமென்றும் தன்மனதி லெண்ணிக்கொண்டு சொல்லுகிறார் அது எவ்விதமெனில் ஓ, ஹாத்திமே இந்தச் சொல்லானது விரதத்துவக் காரர்களில் நின்று தூரமாகவிருக்கின்றது ஒரு மனிதன் ஆண்டவனுடைய படைப்பி லுள்ள பந்தாவானவனேதோ ஒரு சங்கடத்தில் அகப்பட்டு அழுதுகொண்டிருக்கின்ற சத்தத்தைக்கேட்டு அவனுக்கு உதவி யொத்தாசை செய்யாமலும் அவனுடைய சங்கதிகளை விசாரிக்காமலும் போவது சரியல்லவென்று தன்மனதி லெண்ணிக்கொண்டு எழுந்து அந்தவெளியைப்பார்த்து கொஞ்சதூரம் நடந்துபோகையில் அவ்விடத்திற்போய்ச்சேர்ந்தார் அழுகையினுடைய சத்தமானது அவ்விடத்தில் வரக்கண்டார் போய் பார்க்கையில் ஒரு வாலிபமான அழகுமிகுந்த வடிவுள்ளவன் நிலத்தில் உட்கார்ந்துகொண்டு இஷ்க்கென்ற மோக ஆசையாகிய நெருப்பி லகப்பட்ட புழுவைப்போல் தன்னை யறியாமல் மகா விசனமடைந்து கொண்டு துக்கத்துடனே சொல்லுகிறான் அது எவ்விதமெனில் என்னுடைய துன்பத்தை நான்யாருடன் சொல்வேன் நானெங்கேபோய் என்னுடைய துயரத்தைச்சொல்லி யாற்றுவேனென்று பலபலவிதமாகப் புலம்பிக்கொண்டிருக்கின்றவனிடமாக ஹாத்திமென்பவர்போய் ஓ, வாலிபனே உனக்கு இப்பேர்ப்பட்ட துன்பமான வருத்தம் உன்பேரில் என்னவிழுந்திருக்கின்றது நீ யேன் இவ்வளவு வருத்தமும் துன்பமு மெடுத்துக்கொண்



டு விசனப்படுகிறாயென்றுகேழ்க்க அப்போதந்த துக்கமுள்ளமனிதன்சொல்லுகிறான் அது எவ்விதமெனில் நீ வெளிப்பயணம்போகப்பட்ட மனிதன் என்னை என்கேள்க்கின்றாய் நல்லது என்னுடையதுன்பத்தை உன்னுடன்சொன்னால் நீ நிறைவேற்றஉன்னால்கூடுமாவென்றுகேழ்க்க அப்போது ஹாத்திமென்பவர் சொல்லுகிறார் நல்லது உன்னுடைய எண்ணத்தை ஆண்டவன் எவ்விதத்திலும் நிறைவேற்றுவான் உன்னுடைய துயரத்தைவிட்டு நீங்கி உள்ள சங்கதிகளை எனக்கு தெரிவிக்க வேண்டுமென்றுசொல்ல அப்போதந்த மனிதன் சொல்லுகிறான் ஓ, முசாபரே நானகைப்பட்டவன் சவுதாகனென்னும் வர்த்தகனா யிருக்கும் [illegible]த்தில் நின்று நாலுகாதவழி தூரத்தில் பிரபலமான ஒரு பெரிய பட்டண மிருக்கின்றது அதில் ஒரு சவுதாகர் ஹாரிஸ் என்னும் பேருள்ளவன் மிகுந்த ஐஸ்வரியமுள்ளவனாகவும் பெரும் கீர்த்தியு முள்ளவனாகவு மிருக்கிறான் அவனுக்கு சந்திரனுக்கொப்பான ஒரு பெண்ணிருக்கின்றது அப்படியிருக்க நான் ஒருநாள் வர்த்தகஞ்செய்ய அப்பட்டணத்தில் சாமான்களையெடுத்து பலவிடங்களிலும்போய் சுற்றிக்கொண்டுவெய்யிலினுடைய வெப்பத்தால் நான் மிகுந்த வருத்தமடைந்து அந்தஹாரிஸென்னும் சவுதாகர் வீட்டின் மஹாலின்கீழே போயிருந்து விட்டேன் அப்படியிருக்கையில் எவ்விதத்திலேலோ அந்த மஹாலினுடைய யிடுக்கின்னும் சன்னலைப்பார்த்தேன் அச்சன்னல்வழியில் ஒருபெண்ணானவள் வெகு அழகு சவுந்தரிய வடிவுள்ளவளாக நிற்க அவளைக்கண்டவுடனே என்னுடைய புத்தி தடுமாறி விட்டது பின்பு அக்கரத்திலுள்ளவர்களைக் கேட்டேன் இவள் யாரென்றும் இந்தவீடு ஆருடையதென்றும் கேழ்க்க அவர்கள் இந்தவீடானது ஹாரிஸென்னும் சவுதாகர் வீடென்றும் அறிவிருக்கப்பட்ட பெண்ணானவள் மிகுந்த செல்வமும் சிறப்புமுள்ளவளா யிருக்கின்றாளென்றுசொல்ல அவளுக்கு புருஷ னிருக்கிறானாவென்றுகேட்க அப்போது சொன்னார்கள் அவளுடையதகப்பன் அவளை கலியாணம்செய்யக்கூடாமல் கன்னிப்பெண்ணாகவைத்திருக்கிறான் அவளைக்கலியாணம்செய்துகொடுக்கவேணுமென்றுசொன்னால் அவள்வேண்டாமென்றுதான் இச்சைப்பட்டவனை விவாகஞ் செய்துகொள்வேனென் றிருக்கிறாளென்று சொன்னார்கள் பின்னுமவள் (மூனு சவால்கள்) வைத்திருக்கிறாள் அந்தச் சவால்களை யாராவதுகண்டு எனக்கு ஜவாபுசொல்லுவார்களோ அவர்களை கலியாணம் செய்துகொள்வே னென்று பிரதிக்கினை செய்திருக்கி

ளுள் இவ்விதமான சொல்லைக்கேட்ட வுடனே அவன் வீட்டின் வாச ற்படியிற் போனேன் அப்போது அவனுடைய மனிதர்கள் என்னை க்குறித்து அவனுக்குத் தெரியப்படுத்தினார்கள் உடனே என்னை உள் ளேவரச்சொல்லி அழைத்துக் கொண்டுபோய் ஒரு மேலான விரிப்பி ன்மே லிருக்கும்படிக்கு உத்தரவு செய்தாள் அதின்பேரில் உட்கார் ந்தேன் அப்போ தந்தப் பெண்ணானவள் சொல்லி யனுப்பினாள் என் னுடைய சவால்களை நீகேட்டு அதை உண்மைகொண்டு அந்தச்சவா ல்களெனக்குகண்டு வந்து சொல்லும்படியான தயிரியமிருக்குமா கில் அப்போது என்னுடைய சவால்களைச்சொல்வேனென்றாள் அ ப்போது நான் சொன்னேன் என்னுடைய மனமும் உயிரிலின்று ராஜியானேன் நல்லது உன்னுடையசவால்களைச்சொல்லவேண்டுமெ ன்றுசொல்ல அப்போது சொல்லுகிறாள் நீ என்னுடைய சவால்களை அறிந்து சொன்னால் உனக்கேநான் பாரியாவேனென்றாள்.

## ஹாரிஸ்பானுடையமகளானவள் சவுதாகருக்குமூன்றுசவால்களில் விபரஞ் சொல்லுகின்ற வாலாற்றின்பாபு.

அது எவ்விதமெனில் இந்தப்பட்டணத்துக்கு அருகாமையில் ஒருமலைச்சாரலில் ஒருகார் என்னும் ஆவுஇருக்கின்றது அதைஇன் றளவாயிலும் ஒருவராகிலும்அதினுடையஅஸ்திவாரம்எவ்வளவெ ன்றும்அதிலுள்ள அதிசயத்தைக்கண்டறிந்தவர்கள் ஒருவருமில்லை (உ வதுசவால்:) ன்றுவானல் வெள்ளிக்கிழமையிரவில் ஒருகாட்டில் நின்



று ஒருசத்தம்வருகின்றது அதுஎவ்விதமெனில் நானுகப் பட்டவன் அந்தவேலையைச்செய்யவில்லை இப்போது இன்றையத்தினமிரவுஎன க்கு அது சகாயமா யிருக்கும் (ஈ வது) அது எவ்விதமெனில் ஒரு மலைப்பாம்பின் வயிற்றில் ஒருமோறு யிருக்கின்றது அந்தமோறுவெ னக்கு கொண்டுவந்து கொடுக்க வேணும் இந்தமொழியைக்கேட்டவு டனே என்னுடைய புத்திமாறிப்போய் இந்தச்சவால்களுக்குஜவாபு எவ்விதமாகச் சொல்லக்கூடுமென்கிற எண்ணத்தைமனதிலெண்ணி மென்ன அவ்விடம்விட்டு வெளியில்வர ஜாடையாக பின்தாங்கி கா லைப்பின்வாங்கினேன் அப்போது ஜாலுமாக என்னுடைய நகைகளை யும் மற்ற அபுருபமான வஸ்துக்களையும் பொருள்களையும் பிடுங்கி க்கொண்டு என்னை அந்தப்பட்டணத்தி விராமல் அவ்விடத்தில் நின் று துரத்தி விட்டார்கள் ஆகையால் நான் வைசேதப் பட்டுக்கொ ண்டு இந்தக்காட்டில்வந்து விழுந்திருக்கிறேன் பின்பு என்னுடைய பொருள்களையும் கொடுத்துவிட்டுஎன்னுடைய இச்சையும்போய்வி ட்டது(ஈ)வது எனக்குஇச்சைதான அது ஆசையின் அன்பு என்னுடைய சால்களை யெல்லாம் துண்டு துண்டாக்கி விட்டது எனக்குத் துணையா யிருந்தவர்கள் என்னைவிட்டுப் பிரிந்து போனார்கள் நான் இப்போது பக்கீராகிவிட்டேனென்று இவ்விதமாகச் சொன்ன மொ ழிகளைஹாத்திமென்பவர்கேட்டு மிகுந்தமன வருத்தப் பட்டுச்சொல் லுகிறார் ஜவாபிபனே நல்லது நீயாதொன்றுக்கும் யோசிக்கவேண் டியதில்லை ஆனால் என்னை அந்தப்பட்டணத்துக் கழைத்துக் கொண் டுபோனால் உன்னுடைய பொருள்களையும்மற்றவஸ்துக்களையும் வா ங்கிக்கொடுக்கிறதுமன்றி நீ இன்பங்கொண்ட பெண்ணையும் உன் னோடே சேர்த்து வைக்கிறேனென்றுசொல்ல சவுதாகர்சொல்லுகி றார் என்னுடைய கர்மத்தை நீக்கிறீர் என்றசொல்லை யெனக்கு ப்போதும்ஆனால்நான் என்பொருளுக்குப் என்னுடைய நகைகள்சாமா ன்களுக்கும் நான் இச்சைப்பட்டவ ளல்ல நான் பார்த்தபெண்ணா னவள் முகத்தைப்பார்த்தால் அந்தநிலுவத்தெனக்குமிருதமாகப்போ துமென்று சொல்ல ஹாத்திமென்பவர் பெண்ணினுடைய இச்சை கொண்டு பவித்தியம்பிடித்தவரை அழைத்துக்கொண்டு அந்தப்பட்ட ணம்வந்து சேர்ந்தார் பின்புகாறுவான் சறுவென்ற சத்திரத்தில்வந் திறங்கினார்கள்.

பின்பு அந்தசவுதாகரானவனை அவ்விடத்தில் வைத்து விட்டு ஹாத்திமென்பவர் அந்தப்பெண்ணினுடைய வாசலருகிற்போனார் அப்

பேர்து அவனுடைய மனிதர்கள் கண்டு நீங்கள் யாரென்றுகேட்க
நான் இந்தப்பெண்ணைக்கலியாணஞ்செய்யவந்திருக்கிறேனென்றுசொ
ல்லஅச்சங்கதியை அவர்கள் கேட்டு உடனே அந்தப்பெண்ணருகில்
சென்று சொன்னார்கள் ஒருமனிதன் உன்னைக்கலியாணஞ்செய்யவந்
திருக்கின்றனென்றுதெரியப்படுத்தினார்கள் அப்போது அந்தப்பெண்
ணானவள் கேட்டு ஹாத்திமைவரும்படிக்கு உத்தரவுசெய்தாள் அப்
போது ஹாத்திமென்பவரை அழைத்துக்கொண்டு வந்தவுடனே
இருக்கும்படிக்குவிரிப்பைவிரித்துஉட்காரவைத்துச்சொல்லுகிறசவா
ல்களுக்குவாக்குத்தத்துவமெல்லாம் பேசித்தீர்ந்தபின்புஹாத்திமென்
பவர்சொல்லுகின்றார் எவ்விதமானாலும்பெண்ணே நீயாகப்பட்டவள்
ஹாரிஸ்சவுதாகருடையமகளாயிருப்பதால் இப்போதுநான் பேசினசங்
கதியைக்குறித்துநீயெனக்குக்கைபோட்டுக்கொடுத்துகரார்செய்தால்நா
ன்அந்தவேலையிலிடுப்புகட்டுவேனென்றுபின்னும் ஆண்டவன்கிருபை
யால் இந்தவேலையைமுடித்துவந்தபின்பு நான் உனக்கு எஜமானரு
வேன் ஆனால்நான் உன்னையென்னிஷ்டம்போலயாருக்குங்கொடுப்பே
னோஅவர்களுக்குக்கொடுப்பேனென்றுசொல்லநல்லதுநீர்சொன்னது
எனக்கு சம்மதியென்றாள்அப்போது ஹாத்திமென்பவர் உன்தகப்ப
னைஅழையுமென்றார்அப்படியே அழைக்க அவரும் சம்மதப்பட்டார்
நல்லதுஉன்னுடையசவால்களைச்சொல்லுமென்றார்அப்போதந்தப்பெ
ண்சொல்லுகின்றாள்இந்தப்பட்டணத்துக்கருகாமையில்ஒருமலையருகி
ல்ஒருதூரவென்ற புதாரிருக்கின்றதுஇவ்விடத்திலுள்ள ஆண்பெண்க
ளெல்லாம்அதையறிவார்கள் ஆகையால்அந்ததூரவின்சத்து இவ்வள
வென்றும் எவ்வளவுநீளமென்றும் அது எதுவரையிலுமிருக்கின்ற
தென்றும் அதிலென்ன இருக்குதென்றும் இதுகளை யறிந்துஎனக்கு
சொல்லவேண்டியதென்று சொன்னவுடனே ஹாத்திம் உத்தரவுபெற்
றுக்கொண்டு அவ்விடத்திலிருந்து புறப்பட்டுவருகையில் அந்தப்பட்
டணத்திலுள்ளவர்களுஞ்சிறிதுபேர்கள்கூடத்தொடர்ந்துவந்தார்கள்வ
ந்துஅந்தப்புதாறான தூரவைக்காண்பித்து அவர்கள்போய்விட்டார்கள்
பின்பு ஹாத்திமென்பவர் அந்தபுதாறென்னும்தூரவில்குதித்துஅவ்விட
த்தில் இரவுபகல் யாதொன்றுந்தெரியாமல் தடுமாறிக்கொண்டுதன்னு
டையஉயிரையெண்ணாமல்உயிரிழந்தவனைப்போல்புறண்டுபோகின்றா
ர் அப்போதுகொஞ்சநேரம்பொறுத்து ஒருவெளிச்சம் ஹாத்திமுக்கு
தோற்றியதுஅப்போது அந்தத்தூரவின்பிரமாணமுழுதும் ஆகிவிட்ட
துஆனால் இவ்விடத்திலிருந்துதிரும்பலாமென்கிற நினைவுவந்தது யா



தாமொருவர் இதினுடையவிபரமென்னவென்றுகேட்டால் அதற்குநா
மென்னசவாபுசொல்வேனென்று எண்ணிக்கொண்டு முன்னால்போ
னார் அப்படிக்குகொஞ்சதூரம்போகும்போதுஒருமயிதானமான்வெளி
தோற்றியது அவ்விடத்தில் ஒருஏரிவெகுசுத்தமாகவும்நல்லதண்ணீ
ர்நிறமாகவும்கண்டுஹாத்திமென்பவர்தன்னோடேஎப்போதும் ஒருகூஜா
வுங்கொஞ்சம்பாதமும்வைத்திருப்பார்அவர் எப்போதாவதுபசிவந்து
விட்டால் (௨) (௩) பாதமக்கொட்டையை யுடைத்துத்தின்கிறது
ஒன்றுஅரை முனைதண்ணீர்சாப்பிடுகிற வழக்கம்போல் தாம்பாதம
க்கொட்டை சாப்பிட்டு தண்ணீரு மருந்தி பசியாறி பின்பு ஒரு
கூஜாவில் தண்ணீர் நிரப்பிக்கொண்டு இரவும் பகலுமாக நடந்து
போகையில் எதிரே ஒரு சுவரானது காணப்பட்டது அந்தச்சு
வரை அண்ணாந்து தலையை யுயர்த்திப்பார்க்கையில் அதினுடையஉயர
ம் இவ்வளவென்று தெரியவில்லை ஒரு பக்ஷியானது பறந்து அதி
னுடையஉயரமுங்கனமும்யாமவரையில்பறந்து பார்த்தபோதிலும்
இவ்வளவென்றுகாணக்கூடாததாயிருக்கும்பின்னுமந்தச்சுவரருகில்வந்து
கிளர்ந்து பார்க்கும்போது அதில்ஒரு கதவுமூடியிருந்தது அதைத்தி
றந்துகொண்டு உள்ளே போனார் அவ்விடத்தில் ஒரு பட்டணம் தோ
ற்றியது அப்போதந்தப் பட்டணத்தி னருகாமையில் போனார் அவ்
விடத்தில் கணக்கில்லாதேவுகளானது இவரைக்கண்டுதுண்டந்துண்
டமாக அறுத்துத்தின்னலாமென்று எல்லாதேவுகளுங்கூடிவந்தது அ
ப்போதுஅதில் ஒரு தேவானது சொல்லும் ஓ, தேவுகளே இவனா
னால் மனிதனாக இருப்பதால் அவனைக் கொல்லவேண்டாமென்று இ
வனுடைய கறியானது மிகுந்த ருசிகரமாகயிருக்கும் ஆகையால் அ
ந்தமனிதனை நாம் தின்றால் இந்தச்செய்தியை யாதாமொருவன்நம்மு
டைய பாத்துஷாவுக்கு தெரிவித்தால் நம்முடைய கூட்டத்தையெல்
லாம் வெட்டி நாசம்பண்ணி விடுவான் ஆகையால் இவனைவிடாமல்
நம்முடைய பாத்துஷாவினிடமாகக்கொண்டுபோகலாமென்றுசொல்
ல அப்போது தேவுகள்சொல்லும் அப்படிக்கு பாத்துஷாவுக்கு தெ
ரிவிக்கப் பட்டவர் நம்மில்யார் பகையாளி யிருக்கின்றார் என்றுசொ
ல்ல அப்போது நமதுகூட்டத்தில் பகையாளோர் அநேக ரிருக்கிறார்
கள் ஆனால் என்னுடைய பேச்சு உங்களுக்கு நினைவாயிருக்கவே
ண்டியதென்று சொன்ன மொழியைக்கேட்டு தேவுகளெல்லாம்
அச்ச மடைந்துகொண்டுஹாத்திமென்பவரை விட்டுப்போய் தங்கள்
தங்கள் வீட்டுக்குப் போய்விட்டார் ஹாத்திமென்பவர் இந்தத்தேவுக

ன் ஓடிவந்ததையும் பின்னால் திரும்பிக்கொண்டதையும்பார்த்து மன தி லச்சமடைந்துகொண்டு அவ்விடம்விட்டு முன்னடந்து ஒருவெளியைப் பிடித்துக்கொண்டு போகையில் முன்னால் ஒரு பட்டணம் தோற்றியது அப்போது ஹாத்திமென்பவர் எண்ணினார் இந்த நகரத்தில் மனிதர்க ளிருப்பார்களென்று பலவிதமா யெண்ணி முன்னால் நடந்துபோகையில் கணக்கிலடங்காத தேவுகள் நான்குதிக்கிலுமிருந்து ஓடிவந்து சுற்றிக்கொண்டு ஹாத்திமென்பவரை தின்னும்படிக்கு எத்தனஞ் செய்தார்கள் அப்போது அத்தேவுகளில் நின்று ஒரு தேவானது சொல்லும் அவனை நீங்கள் தின்னாதீர்கள் அவனைப்பிடித்துக் கொண்டுபோய் நம்முடைய பாத்துஷாவி னிடமாகச் சேர்க்கவேண்டியது அது எவ்விதமெனில் அவருடைய மகள்மிகுந்த வியாதி யடைந்திருக்கிறாள் ஒருவேளை அப்பெண்ணின் வியாதி இவரால் தீர்ந்துபோகு மென்றுசொல்ல அப்போது அந்தத்தேவுகள் சொல்லும் முன்னால் இவ்வைப்பேர் லோகத்த மனிதர்களை எத்தனையோ கணக்கில்லாமற் கொண்டுபோய் விட்டோம் அவர்களால் தீராமல் நாம் வெட்கமடைந் திருக்கிறோம் அப்படி யிருக்க இப்போது நமக்கென்ன அவசிய மிருக்கிறது நான் இவனை அழைத்துக்கொண்டுபோகவும் ஆனாலிவன் நம்முடைய எல்லையில் இப்போது வந்திருப்பதால் எங்கே தப்பிப்போவான் ஆனால் நிச்சயமாக எவனாவது இவனை பாத்துஷாவினிடமாகச் சேர்ப்பானென்றுபோய்விட்டார்கள் அப்படியிருக்க ஹாத்திமென்பவர் அவ்விடம்விட்டுமுன்னால்நடக்கும்போது அவ்விடத்தி லுள்ளதேவுகள் ஓடிவந்து இவரைப்பிடித்துக்கொண்டுபோய் தம்முடைய சர்தாரிடமாக விட்டார் அப்போது அந்த சர்தாரானவனுடைய பெண்சாதிக்கு கண்நோயால் வலியெடுத்து கண்ணீரெந்நேரமுஞ் சொரிந்து கொண்டு மிகுந்த வருத்தமடைந்திருக்தாள் அதையால் பெண்சாதி படுக் காயர்த்தால் மிகுந்த விசனமடைந்து அவன் தலையைக் குனிந்துகொண் டிருந்தான் அப்படியிருக்க அவன் ஹாத்திமைக் கண்டவுடனே தலையை யுயர்த்திப்பார்த்துச் சொல்லுவான் ஓ, தேவுகளே நீங்கள் இந்த ஆதம்ஜாதத் தென்பவனை எங்கொண்டு வந்தீர்கள் அவனை யனுப்பிவிடுங்கள் என் முன்னால் நின்றும் அவன் மனதுக்கு வந்தவிடம் போகட்டுமென்று சொன்னான் அப்போது ஹாத்திம் அவனுடைய விசனத்தைப் பார்த்துச் சொல்லுகிறார் ஓ, தேவே உனக்கென்ன விசனம் நேரிட்டதென்று கேழ்க்க அப்போது தேவுசொல்லுகிறான் என் பிறவியாகிய ஆதம்ஜாதத்தேன



ன்பெண்சாதி கண்ணோயால் வருத்தப்பட் டிருக்கிறாள் அதுவே எனக்கு இரவும்பகலும் விசனமாக நித்திரையும் சவுக்கியமும் விட்டிருக்கிறே னென்றுசொல்ல அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் நீயாதொன்றுக்கும்விசனப்பட வேண்டியதில்லை ஆண்டவன் கிருபையால் உன்னுடைய பெண்சாதியின்கண்ணை சவுக்கியப்படுத்துவே னென்று அவர்சொல்லஉடனே அவனெழுந்து அவருடையகையைப்பிடித்துக் கொண்டுதன்னுடையவீட்டுக்கழைத்துப்போய்தன்பெண்சாதியினிடமாக உட்காரவைத்துச்சொல்லுகிறான் மனிதனே உன்னுடையமருந்தால்கண்ணோய்தீருமானால்எதுவரையில் என்னுடைய சீவன் உள்ளதோ அதுவரையில்நான் உனக்கு[illegible] உதவிசெய்வேன்நானும்உம்முடைய கிசுமத்து என்னால்கூடியவரையில் செய்வேன்இந்தமொழியை ஹாத்திம்கேட்டுச்சொல்லுகிறார்நல்லது நான்சொல்வதை நீ நிறைவேற்றினால் இப்போது உன்னுடைய பெண்சாதியின் கண்வியாதியை சவுக்கியப்படுத்துவேன் என்னை உம்முடைய பாத்துஷாவினிடமாகக்கொண்டுபோய் விட்டு என்னுடைய ஹிக்மத்தைக் காட்டப்பையும் நீ சொல்லவேண்டியது இப்போது உன்பெண்சாதிநோயைத் தீர்ப்பேனென்று சொல்ல அப்போது அந்த தேவானது [illegible] சுலைமான் அலைஹிஸ்ஸலாமுடைய பேரில்ஆணையிட்டுச்சொல்லுகின்றது நீஇப்போதுசொன்னதுபோல்செய்வேனென்றும் உன்னுடையபுத்தியினாலும்மருந்தாலும்என் பெண்சாதியின்நோய்தீர்த்தால் நீ சொன்னதுபோல் பாத்துஷாவுடைய தர்பாருக்குக்கொண்டுபோவேன் அவருடைய தயவு வரும்படிக்குச்செய்வேன் அப்போது கிரஜ்ஜன்னும்பாத்துஷாவின்மகள்கொடுத்த மோஹ்ருவென்பதைத் தன் பைப்பாகையிலிருந்து எடுத்துதண்ணீரில் உரைத்து அவருடைய பெண்சாதியின் கண்ணில் போட்டார் உடனே வலியும் கண் சிவப்பும் நீர்வடிகிறதும் எல்லாம் நீங்கிவிட்டது இதைப்பார்த்தவுடனே அந்தேவுடைய சர்தார் அதிக கிஸ்மத்துசெய்து தன்வீட்டில்வைத்திருந்தார்பின்புகொஞ்சநாள்பாத்துஷாவின் சமுகத்துக்கு அழைத்துப்போய் இவருடைய பெருமைகளை மிகுதியாகத் தாரிப்செய்து புகழ்ந்து பின்னுஞ் சொல்லுகிறான்என்னுடைய ஆண்டவனே இந்த மனிதனானவன் மிகுந்த கல்விசாலியும் அனேகமான இக்குமத்து உள்ளவராக இருக்கின்றார் அதெப்படியானால் என்பெண்சாதிகண்ணோயால் நெடுநாளாக வருத்தமெடுத்துக்கொண்டிருந்தாள் இப்போதுஒருநொடிக்குள்ளாகசவுக்கியம்செய்தார் இந்த மொழியை புர்து காசிமென்னும் பாத்துஷா கேட்டு

மிகுந்த சந்தோஷத்துடனே பூரிப்படைந்து சொல்லுகிறதாவது அ
யோக்கியமான மனிதனே எனக்குமிகுதமான வயிற்றின்வலியிருக்கின்
றதுஎன்னுடையஜாதியில்நின்றும்ஒருவராவது மருந்துகொடுத்துஎன்
னுடைய நோவைத்தீர்க்கவில்லை ஆனால் உன்கையால் என்னைத்திரு
மானால் உன்னுடைய ஏசானாகயிருக்கும் நானும் உனக்கு வேண்டிய
யேசான் செய்வேன் அவ்விதமாகச்சொன்னவுடனே ஹாத்திம்சொ
ல்லுகிறார் நீர் எந்தவேளை சாப்பிடுகிறீர்களோ அந்தவேளையில் உங்
களிடமாக உங்களுடைய மந்திரிபிரதானிகள் சிறியோர்கள் பெரியோ
ர்கள் கூட்டமாக வந்து சேருகிறார்கள் இன்றையதினம் நானும்
கூட இருக்கின்றேனென்று ஹாத்திம்சொல்ல அப்போது நல்லது
என்றுசொல்லி அந்தவேளையில் ஒருதஸ்தர்கானென்றவிரிப்புகொண்
டுவந்துவிரித்துவிதவிதமானபதார்த்தங்களும்போசனங்களும்கொண்
டுவந்துவைத்தார் அப்போதுபாத்துஷாவாகப்பட்டவர் அந்தவஸ்துக்
களைத்தின்னும்படியாகத்தன்னுடையகரத்தைநீட்டியெடுக்கப்போனக
யில் ஹாத்திம்சொல்லுகிறார்நீர்அதைப்பொசிக்காமல் கொஞ்சநேர
ம் இருக்கவேண்டுமென்றுசொல்ல அப்படி அவரிருக்க அப்போ
து அந்த வஸ்துக்களையெல்லாம் திறந்துவைத்து அவ்விடத்திலு
ள்ள வேலைக்காரர்களையும் மற்ற வர்களையும் அழைத்து இந்த
வஸ்துக்களைப் பார்க்கச்சொல்லி பின்பு இருந்ததுபோல் மூடிவிட்டு
கொஞ்சநேரமான பின்பு அந்த போர்வைகளை நீக்கிவிட்டு ஹாத்தி
மென்பவர் பாத்துஷாவைப் பார்க்கச்சொன்னார் அப்போதந்தபாத்திரங்க
ளிலுள்ள வஸ்தெல்லாம் புழுவாக நிறைந்திருந்தது பாத்துஷாஇந்த
ஆச்சரியத்தைப் பார்த்து மிகுந்த வருத்தமடைந்து சொல்லுகி
றார் இவ்விதமாக இருக்கின்றது என்ன சபபு என்று கேழ்க்க அப்
போது ஹாத்திமென்பவர்சொல்லுகிறார் ஓ பாத்துஷாவே இந்ததே
வுங்களுடைய கண்திஷ்டி என்றுசொன்னார் பின்னும் சொல்லுகிறார்
தங்களுக்குகந்தது இனிமேல் தாங்கள்நியாமத்தானபொசிப்புகள்தின்
னீராகில்தனித்துச் சாப்பிடவேண்டியது யாதாமொருவர்பார்க்காமல்
ஹாத்திம்சொல்லைப்போல்அன்றையதினம்தனித்துச்சாப்பிட்டார்யா
தொரு நோயில்லாமல் சவுக்கியமா யிருந்தது பின்பு முன்னால் இ
வ்விதமாக நடந்துவருந யாதொரு நோயில்லாமல் சுத்தமாகப்போ
ய்விட்டது அப்போதந்த பாத்துஷாஹாத்திமென்பவரை மார்போட
ணைத்துச்சொல்லுகிறார் என்னுடைய பிரியமாகியதோழனே என்
னிடமாக நீ என்ன கேழ்க்கிறாயோ அதைக்கேளென்றுசொல்ல



அப்போது ஹாத்திம் சொல்லுகிறார்நானவன் இன்சானாகயிருக்கி
றேன் ஆனால் என்னுடைய பிறவிகளாகிய இன்சான்கள் உன்னுடை
யகைதியிலிருப்பதால்அவர்களையெல்லாம் நீ விட்டுவிடவேண்டிய
தென்று நீ எனக்குவேண்டிய யேசான்செய்ததாக யிருக்கும் இவ்வித
மான சொல்லைக் கேட்டவுடனேபுர்துகாஷ்என்னும் பாத்துஷா அப்
போது அவர்களையெல்லா மழைத்து வேண்டிய இனாம்கொடுத்து
மேன்மையாக வழிச்செலவுக்குக்கொடுத்து அவர்களையெல்லா மனு
ப்பிவிட்டு ஹாத்திமிடமாகச் சொல்லுகிறார் ஆனால் நான் இப்போது
ஒரு சொல்சொல்லுகிறேன் அதை நீர் கபூல்செய்ய வேண்டியது அப்
போது ஹாத்திமென்பவர் நல்லது அம்மொழியைத்தாங்கள்சொல்ல
வேண்டுமென்றும் நான் தங்களுடைய மொழிக்கு பதில் சொல்லே
னென்றும் என்னுடைய உயிரோடு நான் ஆசராக இருக்கின்றேன்
என்றும்சொல்ல புர்துகாஷ் என்னும்பாத்துஷாஎன்பவர் சொல்லுகி
றார் என்னுடைய பெண்ணானவள் வெகுநாளாக வியாதி யஸ்தியாக
இருக்கிறாள் அவளை நீங்கள் பார்த்து சவுக்கியப் படுத்தினால்
நான் மிகவும் உம்முடைய ஏசானுக்கு கட்டுப்பட்டவனாவேனென்று
சொல்ல இம்மொழியைக்கேட்டவுடனே ஹாத்திமென்பவர்விரைவாய்
எழுந்து நின்றிருக்க பாத்துஷா ஹாத்திமுடைய கையைப்பிடித்துத
ன்னுடைய மஹாலுக்கு அழைத்துக்கொண்டுபோனார் அப்போதுஅ
வ்விடம்போய் மகளைக் காண்பித்தார் ஹாத்திமந்தப் பெண்ணைப்பார்
க்கையில் அதிகமாக இளைத்தும் நிறமாறியு மிருக்கின்றது ஆகையா
ல் இப்போது கொஞ்சம் ஷர்பத்து கொடுக்கவேண்டிய தென்று
சொல்ல அப்போது கொஞ்சம் ஷர்பத்துகொண்டுவந்தார்கள் அந்த
ஷர்பத்தை தான்வாங்கிக்கொண்டு அதில் தன்னிடமா யிருந்தமோ
ஹரைக் கொஞ்சம் உரைத்துக் கொடுத்தார் ஒரு நிமிஷத்துக்குப்
பின்புவயிற்றில் நின்று பேதிகள் துவக்கமாகி அன்றையதினம் சாயங்
கிரவரையிலு மொருபோலவே ஆகிக்கொண்டிருந்தது மன்றி வாந்தி
யும் அதிகரித்து பின்பு சத்துமாறி மயக்கமும் வந்து படுத்துக்கொ
ண்டாள்.

அப்போது புர்துகாஷ் என்னும்பாத்துஷாவென்பவர் சொல்லு
கின்றார் என்பிரியமானதோழனே இதென்ன இவ்விதமான ஹாலா
யிருக்கின்றது என்றுகேட்டு ஒருவேளை என் மகள் இறந்துபோகா
மல் நன்றாய்ப்பார்க்கவேண்டிய தென்றுசொல்லஅப்போதுஹாத்திம்

சொல்லுகின்றார் தாங்கள்யாதொன்றுக்கும் யோசனைபண்ணவேண்டிய தில்லை ஆண்டவன்எவ்விதத்திலும் நன்மைசெய்வான்பின்புஅன்றிரவெல்லாம் அதுபோலவேயிருந்தது பொழுது விடிந்த பின்புஉடனே அந்தப்பெண் உஷாராகியபசிக்கின்றதென்றுசொல்ல அப்போதுபசிக்குள்தாவது ஆகாரம்கொடுக்கும்படிக்குஉத்தரவுஹாத்திம்செய்ய அதுபோலவே கொடுத்தார்கள் பின்புகொஞ்சங்கொஞ்சமாக அந்தநோயானதுபதினைந்துநாளைக்குள் சவுக்கியமாய்விட்டது அப்போது அந்தப்பெண்ணுடைய தேகம் இருந்த அழகும்வடிவும்அந்தரூபமாகஇருந்தது அப்போது ஹாத்திமென்பவர்பாத்துஷாவைப்பார்த்துச்சொல்லுகின்றார் தங்களுடையபெண்ணுக்கு இந்தநோயெல்லாம் ஆண்டவன் கிருபையால் சவுக்கியமாய் விட்டது இனியென்ன தாங்கள்அனுப்ப வேண்டியதுநான்வந்தவேலைக்காகப்போகவேணுமென்று சொல்ல அப்போது பாத்துஷாவானவர் நவரத்தினங்களும் மோராக்களையும் தட்டுகளில்நிரப்பி அவர்முன்பாகக் கொண்டுவந்து வைத்துச் சொல்லுகின்றார் இந்தவஸ்துக்கள் தங்களுக்குத்தகாது ஆனால் நம்முடைய சந்தோஷ மெந்தவாறலும்இதைத்தாங்கள்எடுத்துக்கொள்ள வேண்டியது அப்போது ஹாத்திமென்பவர் சொல்லுகின்றார் நான் ஆண்டியாயிருப்பதால் எவ்விதமாகஇதையெடுத்துக்கொண்டுபோவேனென்றுசொல்ல அப்போது பாத்துஷா தேவுகளையழைத்துச்சொல்லுகின்றார்இந்ததட்டுகளிலுள்ள வஸ்துக்களையெல்லாமூட்டையாகக்கட்டி தலைகளிலெடுத்துக்கொண்டு இவரோடு போகவென்று உத்தரவுகொடுக்க பின்பு அவரிடமாக உத்தரவு ஹாத்திமென்பவர் பெற்றுக்கொண்டு அவ்விடம்விட்டு தேவுகளும் தாமும் ஒருமாசம் வரையில் நடந்து முன்குறித்ததுரவின் அருகாமையில் வந்தார்கள் அப்போது அந்த தேவுகள் தாங்கள் சுமந்த மூட்டைகளையும் ஹாத்திமென்பவரையும் அவ்விடத்திலிருந்துமேலே தூக்கிக்கொண்டுவந்துவிட்டுஹாத்திமிடமாக உத்தரவுபெற்றுக்கொண்டு தங்களுடையநகரத்துக்குவந்து பாத்துஷாவுக்கு சங்கதி தெரிவித் திருந்தார்கள் பின்புஅந்த கார் என்றபொதாரில் ஹாரிசுடையகாவற் காரர்கள் அவ்விடத்தி லிருந்தவர்கள்ஹாத்திமையும் தேவுகளையும் கண்டு பயந்து ஓடினார்கள் அப்போதுஹாத்திமென்பவர் ஓடுகின்றவர்களைப்பார்த்து பெரிதாகிய சத்தமாகக்கூப்பிட்டுச்சொல்லுகிறார் நீங்கள்பயங்கரங்கொண்டு ஓடவேண்டாம் நானானவன்இந்தத்துரவின்சங்கதியை அறியப்போனஹாத்திமாக இருக்குமென்று ஆண்டவன் கிருபையால் உயிர்தப்பிவந்



திருக்கிறேன் என்றுசொன்ன சத்தத்தையறிந்து அவர்கள் ஓடாமல்நின்ற அப்போது ஹாத்திமென்பவர் அவர்களை அழைத்து மூட்டைகளை அவர்கள் தலைமேல் வைத்துக்கொண்டு கார்வான் சருவென்றநகரத்துக்குவந்துதான் கொண்டுவந்தநவரத்தினங்களின்மூட்டைகளையும் மற்றவஸ்துக்களையும்முன் அவ்விடத்திலிருந்த சவுதாகருக்கு தான்கொண்டுவந்த வஸ்துக்களையெல்லாம்ஒப்புவித்துஅதையெல்லாம் உனக்கு இனாமாக இருக்குமென்று ஹாத்திமென்பவர்சவுதாகரின் காலில்விழ அப்போது ஹாத்திமை மார்போடணைத்துக்கொண்டு கழுத்துடன் சேர்த்துக்கொண்டு இவ்விதமா யிருக்க இச்சங்கதியெல்லாம் கூடவந்தவர்கள் ஹாரிசுடையமகளிடமாகப்போய் தெரியப்படுத்த அப்போது ஹாத்திமை அழைத்துக்கொண்டுவரும்படிக்கு உத்தரவுசெய்தாள் அதுபோலவே அழைத்துக்கொண்டுவந்துவிட அப்போது நீர் போனதுரவின்சங்கதியைக்குறித்துக்கேட்க அப்போது தான் போய்வந்த வரலாற்றையெல்லாம்பரிஷ்காரமாகச் சொல்லிபின்புஹாத்திம்சொல்லுகின்றார் அதோ இப்போதுசொன்னசவால் உனக்குத் தெரியப்படுத்தினேன் இனி இரண்டாவது சவாலின்சங்கதி எனக்கு தெரியப்படுத்தென்றுசொல்ல அப்போது அந்தப்பெண்ணானவள் இரண்டாவதுசவால் சொல்லுகின்றாள்.

# ஹாரிஸ்சவுதாகர்மகளானவள்
# சொல்லுகின்ற
# இரண்டாவதுசவாலாகிய
# வரலாற்றின்பாடு.

ஹாத்திமென்பவர் இரண்டாவதுசவால் எவ்விதமானால் ஒருகா
ட்டில் வெள்ளிக்கிழமை இரவில்ஒருசத்தம்வருகின்றது அதுஎவ்வித
மானால் நான் அந்தவேலைசெய்யவில்லை இன்றையராத்திரி எனக்கு
கூடுதலாகுமென்றுசொல்லான இன்சங்கதியை அறிந்துவந்துஎனக்கு
சொல்ல வேண்டியதென்றுசொல்லஅந்த சொல்லைக்கேட்டவுடனே
ஹாத்திம் அவ்விடம்விட்டு புறப்பட்டுநடந்தார்அப்படிநடந்துகொஞ்
சநாளைக்குப்பின்புநடக்கும்போது அந்த சத்தமானதுஹாத்திமுடைய
காதில் கேள்விப்பட்டு அதற்காக அவ்விடத்தில் இரவுபகலுமாக சுற்
றிக்கொண்டு திரிந்தார் அப்படியிருக்க அவ்விடத்தில் ஒரு ஊர்தெரி
யவந்தது அந்தஊருக்குப்போய் அவ்விடத்திலுள்ளமனிதர்களைவிசா
ரித்து அங்கேகூட்டமாககூடிக்கொண்டுஅழுதுக்கொண்டிருந்தார் அவ்
விடம்போய்அந்தமனிதர்களைக்கண்டுநீங்கள்சகலரும்கூடிஅழுதுகொ
ண்டிருக்கின்றதெப்படி என்னநீங்கள்வீண் அழுது உங்கள் உயிரைவிட்டுப்போக



குதிரையொன்று கேட்க அதில் நின்றும் ஒருவன் சொல்லுகிறான்
எழுநாளில் ஒரு நாள் வியாழக்கிழமையில் ஒருபெரியபலாவென்றபூ
தமானது எழுந்து ஒரு மனிதனைத்தின்றுபோகின்றது அதுவருகின்ற
வேளையில் இவ்விடம் ஒருவருமில்லாவிட்டால் இந்தஊரில்வந்து வி
ழுந்து சர்வசங்காரம் பண்ணி அனேகம்பேரை புசித்துப்போகின்றது
ஆனால் இன்றையத்தினம் இந்தமுறையிசென்னும் ராஜனுடையமகனின்
முறையானது ஆகையால் இவ்விடத்தில் உள்ளவர்களெல்லாம் மிகு
தமான விசனத்துடன் அழுதுகொண்டிருக்கின்றார்கள் இந்தமொழி
யை ஹாத்திமென்பவர்கேள்விப்பட்டு அந்தராஜனிடமாகப்போனார்பி
ன்பு அவ்வரசனுக்குவேண்டிய தயிரியப்படுத்திநீர்யாதொன்றுக்கும்ப
யப்படவேண்டியதில்லை ஆனால்உன்மகனுக்குபதிலாகநான்போறேனெ
ன்றுசொல்லு அந்த ராசன் மிகுதமாக ஹாத்திமுடைய தைரியத்து
க்கும் ஆண்மைத்தனத்தின்பேரில் மிகுந்த ஆச்சரியப்பட்டுச்சொல்லு
கிறான் ஆ, என்னுடையதோழனே வாலிபமுள்ள ரூபங்கொண்ட
வனே இன்னம் நாலுதினமிருக்கிறது அந்தப் பெருங்கேடான பூதம்
இவ்விடம் வருவதற்காக அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் அந்த
ப்பூதத்தினுடைய முகத்தை யாராவதுபார்த்திருந்தால் அதன்முகத்தி
ன்வரலாற்றை இன்னவிதமென்றுகேழ்ப்பேன்அப்போதந்த ராசனான
வன் சிலத்தில்அதைப்போலெழுதிக் காணபித்தான் அப்போது ஹா
த்திமென்பவர் சொல்லுகிறார் அந்தப்பூதத்தினுடையபேரானது ருவு
க்கிகன்னு நாமமுள்ளது அதாகப்பட்டது ஒருவர் கையாலும் இறக்
காது அடிபடமாட்டாது ஆனால் நான் சொல்லுகிறதை நீர் ஒத்துக்
கொள்வீராகில் உங்களுடைய இடுக்கத்தில்நின்று இந்த முதேவியை
எவ்விதத்திலும்நானதைக்கொன்றுபோடுவேன் இந்த மொழியைக்கே
ட்டவுடனே அந்த ராசன் மிகுந்த சந்தோஷமடைந்தான் பின்பு தா
ங்கள் எவ்விதமாகச் சொல்லுகிறீர்களோ அதுபோல நடப்பேனெ
ன்று சொல்ல அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் உம்முடைய ஊ
ரில் கண்ணாடி வார்க்கப்பட்டவா ளிருக்கிறார்களா வென்றுகேழ்க்க
அப்போது வேண்டியபேர்கள் இருக்கிறார்களென்று ராசன்சொல்ல
அப்போதந்த கண்ணாடி வார்க்கப்பட்டவர்களை அழைப்பித்து சொ
ல்லுகிறார் இன்றையதினமுதல் நாலுநாளைக்குள்ளாக -௨௱- கஜம்நீள
ம் அகலம் -௱- கஜமுள்ளதாக சுருக்கில் தயார்செய்துகொடுத்தால்
உங்களைப்பிடித்த பலாவென்னு முதேவி விலகிப்போகும் இல்லா
விட்டால் உங்களிலுள்ளவர்களை யெல்லாம் தின்றுநாசமாக்கிவிடும்

உடனே ராசன் அதற்குவேண்டியபெரியகண்ணாடிக்குத் தகுந்தபடிக்
குசாமான்கள் அழைப்பித்துக்கொடுத்தார்பின்பு இரவும்பகலுமாகமூ
ன்றுதினத்தில் வார்ப்பிடம்தயார்செய்துவிட்டார்பின்பு அச்சேதியை
ஹாத்திமுக்குத் தெரியப்படுத்தினார் அப்போதந்தப் பெரியோர்
சிறியோர்களும் இந்த ஊரிலிருக்கப் பட்டவர்களும் ஒரு கூட்ட
மாகக் கூடிக்கொண்டு கையோடு கையாக அந்தக்கண்ணாடியை எடு
த்துக்கொண்டுபோய் அந்த மூதேவி வருகிறவழியில் கொண்டுபோ
ய் நிறுத்தவேண்டுமென்றுசொல்ல அதுபோல்கொண்டுபோய்வைத்தா
ர்கள் அப்போது ஹாத்திம்சொல்லுகின்றார் இப்போது ஒருவெள்ளை
போர்வைகொண்டுவரவேண்டுமென்று சொல்லிபின்பு அதுபோலவெ
ள்ளைபோர்வைகொண்டுவந்தார்கள் அப்போது அந்தக்கண்ணாடியைப்
போர்வையால்மூடிவிட்டார்பின்புஹாத்திமென்பவர் அவர்களுக்குச்
சொல்லுகின்றார்என்னுடையதோழனானவர்களே நீங்கள் தங்கள் தங்க
ள் வீட்டுக்குப்போகலாமென்று பின்னுஞ்சொல்லுகின்றார் • உங்களு
க்கு மனதயிரியமிருக்குமாகில் பயப்படாமல் இவ்விடத்திலிருந்துவே
டிக்கைபார்க்க நாட்டமிருக்குமாகில்அவர்கள்என் கூடயிருக்கலாமெ
ன்றுசொல்ல ஒருவராவது அதற்கு பதில் ஜவாபுகொடுக்கவில்லைஅ
ப்போது அந்தராஜனுடைய மகனெனப் பட்டவன் நான் உங்கள்கூ
ட இருக்கிறேன் என்று சொல்ல அப்போது அந்த ராசன்சொல்லு
கிறான் என்னுடைய பிரிய மகனே நவமணியே நீ இந்தப்பொல்
லாங்கென்ற மூதேவியின் வேடிக்கையைப்பார்க்கிறேனென்றுசொல்
லுகிறது சரியல்ல உனக்காக நானெவ்வளவோ வருத்தமெடுத்துக்
கொண்டு வேண்டிய பொருள்கள்செலவுபண்ணி யிருக்கிறேனிப்போ
துநீயேன்அந்தமூதேவிமுன்பாகப்போகிறேனென்றுசொல்லுகிறாய்
அதுசரியல்லவென்றுசொல்ல அப்போதந்த ராசகுமாரன்சொல்லுகி
றான்என்னைமுன்னமேஅந்த பூதத்துக்கு இரையாக நேமித் திருந்தீர்
கள் அப்படி யிருக்கஇப்போதுஅவர்கூடநானிருந்தாலென்னவென்று
சொல்லிப் பின்னும் தங்களுடையஉத்தரவுஎனக்கெவ்விதமும்கொடு
க்கவேண்டியதென்றுகேழ்க்க நான் இந்த மனிதனிடமாகப் போவே
ன் அதெப்படியானால் இந்த வாலிபனை இரக்கமுள்ள மனிதன் இந்த
மூதேவியின் வாயில்நின்று என்னைவிலக்கி காப்பாற்றுகிறார் இந்த
டப்பு ஆச்சரியமாக இருக்கிறது ஆனால் இந்தமனிதன் நாமெல்லா
பேருக்கும் தம்முடையதிரேகத்தை அறிந்திருந்தும்உயிரையும்கொ
டுக்கத் துணிந்திருக்கிறது நீங்கள் அவரை ஒண்டியாக விடுவதும்



கல்மல்லவென்று தன்னுடைய தாய்தகப்பன் சொல்லை சத்தமாய்கே
ழ்க்காமல் மிகுந்த சந்தோஷமாக ஹாத்திம்கூட போகப்பிரியமா யிரு
க்க அன்றையதினம் பொழுதுபோய் இரவாகிவிட்டது வழக்கம்போ
ல் சத்தமானது இவர்கள்காதிற்கேழ்க்க சகலமானபேர்களும்அச்சம
டைந்தார்கள் அப்போதந்த உலுக்கென்ற பூதமானது எவ்விதமாகவ
ருகிறதென்றால் அதற்கு ஒன்பது முகமும் ஒன்பதுவாயும் ஒன்பது
கையும் ஒன்பதுகாலுமான திரேகத்தைக்கொண்ட பூதமானதுநிலத்
தில்புரண்டுகொண்டு ஒன்பதுவாயில் நின்று நெருப்பின் சுடர்களும்
புகைகளும் வெளியில் வீசும்படியாகவு மிகுந்த ஆங்காரத்துடன் வ
ருவதைக்கண்டு அந்த ஊரில் உள்ளசனங்கள் அடங்கலும் ஒரு காத
வழிக் கப்புறமாக ஓடிப்போய் பயந்துபார்த்துக்கொண்டு நின்றார்கள்
அப்படியிருக்க ஹாத்திமென்பவர் பார்த்தார் அந்த மூதேவியான பூத
ம்வந்தவுடனே அந்த கண்ணாடியில் போத்திருந்த போர்வையைச்சுரு
க்கில் எடுத்துவிட்டுதானும்அந்தக் கண்ணாடிக்குப்பின்னேமறைவாக
நின்றுகொண்டிருக்கையில்அந்தப்பூதமானதுவந்துமிகுந்த ஆங்காரத்
துடனேகண்ணாடியைப் பார்க்கும்போது தன்னைப்போல் வேறொரு
வன் வந்திருப்பதுபோல் எண்ணிக் கொண்டு நம்முடைய இரை
யை இதுவல்லோ தின்றுவிட்டு இருக்கிறதென்று அதைப்பார்த்து ஒ
ருசத்தமானது போட்டது அந்தச் சத்தத்தால் அவ்விடத்தி லுள்ள
நிலங்களும் காடு மலைகளெல்லாம் ஒரு தரம் கிடுகிடென்று அசைக்
துவெந்து உருகிவிட்டதுஎவ்வளவோ சனங்கள்பயந்து சத்துமாறிக்
கிடந்தார்கள்,

பின்பு அந்தப்பூதமானது நானிருக்கு மிடத்தில் நீ எவ்விதமாக
வந்திருக்கிறாயென்று ஆங்காரத்துடனே தன்னுடைய மூர்ச்சை ஒ
ருதரம் உன்னே இழுத்து அதை அடிக்கையை மேலெடுக்கையில்
அந்த மூர்ச்சினுடைய வலுவால் அதினுடைய வயிறு வெடித்துக்
கீழேவிழுந்திறந்து விட்டது அதினுடைய வயிற்றிலுள்ள குடலு
மற்றவஸ்தால் அந்தக்காடுகளெல்லாம் நிரம்பி அதில் நின்று நீர்பு
றப்பட்டு நீலாநதியைப்போல் ஓடுகிறது இவ்விதமான அந்தப்பூதமிற
ந்து கிடக்கின்றதை ஹாத்திமென்பவர் பார்த்து ஆச்சரியப்பட்டி
ருக்கையில் தூரமோடிப் போனவர்களுக்கு இச்சங்கதிகளை ஹாத்தி
ம்தெரியப்படுத்திய பின்பு சகலபேர்களும் கூட்டமாகவந்து அந்தப்
பூதத்தைப் பார்த்துபின்பு அந்தராசனும்மகனும் மற்றஊரிலுள்ளவர்

களும் ஹாத்திமுடைய காலில்விழுந்து அப்போது ராசனும் மகனும்
மற்றவர்களும் ஹாத்திமென்பவரை மிகுதமாகப் புகழ்ந்து வாழ்த்தி
போற்றி சொல்லுகிறார் பின்பு ராசன் கேழ்க்கிறான் என்னுடைய பி
ரியமான தோழனே யென்னையும் என்னுடைய நகரத்திலுள்ள அனே
வர்களுடைய இடுக்கங்களைத்தீர்த்த மகானுபாவனே உன்னுடைய பு
த்திக்கும்வல்லமைக்கும் இரக்கத்துக்கும் நான்யாரை உபமானங்கொ
டுப்பேன் உன்னைப்போ லொத்தவர்கள் இந்தலோகத்தில் பிறந் தி
ருக்க மாட்டார் இனி பிறக்கவுமாட்டார்க ளென்றுபுகழ்ந்து சொல்
லுகிறார் அது எவ்விதமானால் இந்த மூதேவியுடைய கையில் நின்று
தப்பி நீர் எவ்விதமாக இதைக்கொண்டாயென்றுகேழ்க்க அப்போது
ஹாத்திம் சொல்லுகிறார் அதெப்படியானால் இந்த மூதேவிபூதத்தின்
பேரானது உலுக்காவாக யிருக்கும் அதுவானது யாரிடத்திலாவது அக
ப்பட்டு தன்னுடைய உயிரைக்கொடுக்கமாட்டாது அதை ஒருவரும்
கொல்லமாட்டார் அப்பேர்ப்பட்ட மூதேவியாக இருக்கும் அப்படி
யிருக்க தன்னுடைய ரூபத்தைவந்து பார்த்தவுடனே யிருந்த ஆங்கா
ரத்துடனே தன்னுடைய மூர்ச்சை இழுத்தவுடனே அந்த மூச்சி
னால் அதினுடைய வயிறு நிரம்பி வெடித்திறந்து போய் விட்டது
இவ்விதமானமொழியைக்கேட்டவுடனேஅவ்வூராசனும்மற்ற வூரிலு
ள்ளவர்களும்தங்கள்தங்களுக்குத்தகுந்தபடிக்குவிதவிதமானநவரத்தி
னங்களும் உயர்ந்த நிலைகளும் கொண்டுவந்து முன்னால் வைத்தார்
பின்பு எல்லா ஜெனங்களும் கைகட்டி வாய்புதைத்து அதபுடன் நி
ன்றுகொண்டு சொல்லுகிறார் தாங்கள் எங்கள்மனம் சந்தோஷமடை
யும்படிக்கு இந்த வஸ்தை எடுத்துக்கொண்டு போங்களென்றுசொல்
ல அப்போது ஹாத்திமென்பவர் சொல்லுகிறார் நான் இந்த ரத்தின
ங்களுக்குமீற்றநகைகளுக்கும் பிரதானம்வாங்கிக்கொண்டுஇந்தவேலை
செய்யவுமில்லை ஆனால்நான் ஆண்டவனுக்காக உழைப்பெடுத்துக்கொ
ண்டு பாடுபட்டவனாயிருக்கிறான்இப்பேர்ப்பட்ட வேலைக்காக நெடுநா
ளாய் இடுப்புகட்டிக்கொண்டு திரிகின்றேனென்று சொல்ல அப்
போதவர்கள் அசறத்தாகிய தாங்கள் இவ்வளவுதூரம் வரும்
படியான சங்கதியென்ன வென்றுகேழ்க்க அப்போது ஹாத்திமென்ப
வர்சொல்லுகிறார்நான் ஒருசங்கதியைக்குறித்துவந்தேன்காட்டிலோர்
சத்தம் வெள்ளிக்கிழமை யிரவில் வருகிறது எவ்விதமானால் நானுக
ப்பட்டவன் அந்த வேலைசெய்ததுமில்லை இன்றையராத்திரி எ
ன் வேலைக்கு கூடுதலையாகுமென்று இவ்விதமான சத்தத்தைக்கே



ட்டு அதின்பயனை அறிந்துகொண்டு போகவந்தேனென்றுசொல்ல
அப்போதவ்வூர் அரசன்சொல்லுகிறான் வெகுநாளாக நீர்சொன்ன
துபோல் இவ்விடத்தில் சத்தம் இரவில்வருகிறது இன்ன யிடத்தி
லின்றும் இன்னார்சத்தம் போடுகிறாரென்றுந் தெரியவில்லை என்று
சொல்ல அன்றையத்தினை மவ்விடத்தில்கேட்டு பின்பு அந்த வூரில்
நின்று வெளிப்பட்டு ஹாத்திம் புறப்பட்டார் அந்த சத்தம்வருகின்ற
மூலையின்பக்கத்தைப் பார்த்துக்கொண்டு போகிறார் அப்படி நடந்து
கொஞ்சநாள் போகிறபாதையில் ஒரு சின்னமலையும் ஒருமயிதானமு
ந்தோற்றியது அவ்விடத்தில்சிலகாலாள்களும் குதிரையேறியசவாரி
களும் (௲)(௯௱) பேர்கள்முன்னால்காணப்பட்டதுபின்புஇவர்கள்யா
ரென்று உற்றுப்பார்க்குமளவில் அந்த குதிரையேறியசவாரிகளையும்
காலாள்களையும் காணவில்லை பார்த்தால் யபர்ஷத்தான்போல் தெரிய
வந்தது அப்போது ஹாத்திமென்பவர் தன்னுடைய மனதிலெண்ணி
னார் எவ்விதமானால் இந்த இடமானது பெரியோர்க ளடங்கிய இடம்
போல் தோற்றப்படுகிறது ஆனால்இந்த சத்தமானதுஇவ்விடத்திலி
ன்று வருகிறதைப்போலெண்ணி இவ்விடத்திலிருந்து பார்க்கவேண்
டியதென் றிருக்கையில் இரவுமாகிவிட்டது அப்போது ஹாத்திமெ
ன்பவர் ஆண்டவனுடைய வணக்கத்தில் மிகுதமா இபாபத்துசெய்
துகொண்டிருக்கும்போது ஒரு ஜாம ராத்திரிபோய் மறு சாமத்தில்
ஒவ்வொரு கபூரில்நின்றும் ஒவ்வொரு பெரியோர்களுடைய வடிவாக
வும் காந்திபொருந்திய மேலானவுடுப்புகளும் போட்டுக்கொண்டு மே
லான துப்பறவுள்ள விரிப்புகளும் விரித்துக்கொண்டு அதின்மேலி
ருக்க அப்படியிருக்கையில் ஒருவன் பழையவோட்டை கபூறில் நின்று
கிழிந்த பழைய துணிகளும் கோரமான வாசனையும் திரேகமெங்கும்
சேறும் மண்ணில் பிரண்டவனாகவும் பிறந்தமேனியாகவும் யிருந்தவ
ருத்தத்துடனே இரக்கமாகவு மழுதுகொண்டு மேற்கண்ட கபூரில் நி
ன்று வெளியில்வந்துமண்ணின்மேல் உட்கார்ந்தான் அவனை அவ்வி
டத்தி லிருக்கப்பட்டவர் ஒருவராவது திரும்பிப் பார்க்கவில்லை அ
ப்படியிருக்கையில் கைபாக ஆண்டவ னிடமாக மிகுதமான வாசனை
பொருந்திய நியாமத்தான பதார்த்தங்களும் மிட்டாய்தினுசுகளும் க
னிவர்க்கங்களும்புஷ்பத்து தினுசுகளும் தட்டுதட்டாக அவர்கள்முன்
பாகக் கொண்டுவந்திறக்கி அதைச் சகலரும் சந்தோஷத்தை யடை
ந்துகொண்டிருக்கிறார்களே தவிர இந்த துயரப்படுகிற மனிதனை ஒ
ருவராவது திரும்பிப்பார்க்கிறதுமில்லையாதொருவஸ்துவும்கொடுக்கா

மலிருக்கிறார் அப்போது அவன்முன்னால் ஒருகட்டுவந்து இறங்கிய
து அந்த கட்டில்கொரேமான விஷங்களாலும் நவபாஷாணத்தினாலு
ம் துர்வாசனையான கரிசமைத்து சோறும் மற்றவஸ்துக்களும்ஒருகூ
ஜாவில் நரகத்தினுடைய கள்ளிப்பாலும் சீயும் கொரேமான துர்வாச
னையாகவும் வந்தது இவ்விதமான வஸ்துகள் முன்னால் கொண்டுவந்
திருப்பதை அவன்பார்த்து சொல்லுகின்றான்.

அது எவ்விதமானால் ஒருசத்தமான்து மிகுந்த வருத்தம் துய
ரமாகவும் நிலத்தில் கையை அறைந்து அழுதுகொண்டு பெருஞ்சத்த
மாகக்கூப்பிட்டுச் சொல்லுகிறான் ஆ ஆ அந்தவேலை நான் செய்தி
ருந்தால்இப்போதுஇந்தயிரவில்எனக்குநன்மையானஎன்வேலைக்காரு
மேயென்றுசத்தம்போட்டுக்கொண்டிருக்கின்றான்அப்போதுஆத்திம்
தாம்தேடிவந்தவன் இவன்தானென்று எண்ணங்கொண்டிருக்கையில்
அப்போது அந்தபெரியோர்கள்பேசிக்கொண்டார்கள் இப்போது நம்
முடைய இடமாக ஒருமுசாபரானவன் வந்திருப்பதால் அவனுக்குப
சியாற்றவேணுமென்கிற எண்ணங்கொண்டு ஒருகட்டில் தங்கள்முன்
னிருந்தவஸ்துகளில்கொஞ்சங்கொஞ்சமெடுத்து ஒருகட்டில் வைத்
துஒருகூஜாதண்ணீரும் ஷர்பத்துங்கொண்டுவந்துகொடுத்தார்பின்பு
சகலபேரும்பொசித்துக்கொண்டிருக்கையில்ஹாத்திமும் சாப்பிட்டுக்
கொண்டிருக்கும்போது இந்த அடியான் பசியினாலும் தாகத்தாலும்
அந்தவஸ்துக் களைகையாலெடுத்துப்பார்க்காமலும் கண்ணால்பார்த்து
பார்த்து துயரப்பட்டு அழுகின்றவனைபார்த்துக்கொண்டேஹாத்திமா
னவரும் சாப்பிட்டு தீர்ந்தபின்பு ஹாத்திமென்பவர் மிகுந்தவணக்கத்
துடனே அந்தப்பெரியோர்களிடமாகப்போய் நின்றுகொண்டுகேட்டா
ர்ஹஜரத்துகளே இந்தஅடியான் இவ்விதமாயிருக்கின்றவிபரம் என்
னவென்றுகேட்க அப்போது அந்த பெரியோர் சொன்னார்கள் அந்த
அடியானைகேட்டால் அவன்சொல்லுவானென்றுசொல்ல பின்புஹா
த்திமென்பவர் அவ்வடியான் அருகாமையில்போய்கேட்கின்றார் ஓம
னிதனே நீ இவ்விதமானதுன்பத்துடனே இவ்வேஷமாக துயரப்படு
கின்ற செயலின்பயன் என்னவென்றுகேட்கஇவ்விதமானசொல்லைக்
கேட்ட வுடனேமுன்னிருந்த துயரத்திலுமதிகமான துயரத்துடனே
கண்ணீர்சொரிந்து அழுதுகொண்டுசொல்லுகின்றான் ஓ மிகுந்தஅழ
குபொருந்தியவாலிபனே நாசைப்பட்டவன் இப்போதுஇவ்விடத்திலி
ருக்கப் பட்டவர்களுடைய சர்தா ரானவனுமிருக்கும் என்பேர் ஈசபு



சவுதாகராக இருக்கும்என்னுடையவயதில் சின்னநான் மிகுந்த பகி
லாக இருப்பேன் பின்னொருவருக்கும் அனுப்பிர
மாணம் கொடேன் அப்படி யாரவது கொடுத்தால் அதைத்தடுப்பே
ன் பின்னும் தெரியாமல் என்மனிதர்கள் கொடுத்தால் அ
தைப்பார்த்து அடிப்பேன் அப்படியுமெனக்
குத்தெரியாமல்கொடுத்துக்கொண்டிருப்பார்கள் அப்போதுபின்னுஞ்
சொல்லுவேன் பக்கீர்களுக்குஎன்செலவுபண்ணுகிறீர்க
ளென்று சொல்வேன் அதற்காக அவர்கள் சொல்லுவார்கள்நாங்கள் இப்
போது தருமங்கள்செய்தால்நாளைக்கெங்களுக்கு உதவுமென்றுசொ
ல்லுவார்கள் அதைக்கேட்டு நான் சிரித்துக்கொண்டிருப்பேன் இவ்வி
தமானநசிகத்துகள்சொன்னால் அதை நான்காதுகொண்டும் கேட்கிற
தில்லை கொடுக்கப்பட்டசொல்லை நான் எப்போதும் கேட்கின்றதில்
லை இப்படியிருக்கையில்வர்த்தகம்செய்கிறதற்காகசாமான்கள்நகைக
ள் திருசுவரி புடவைபட்டுபட்டாவளிகளை இப்போர்க்கொத்தவஸ்து
க்களை ஒட்டைகளின் மேல் ஏற்றிக்கொண்டு என்கூட இவர்களையும்
அழைத்துச் சேர்த்துக்கொண்டு கர்ஜும்என்னும் தேசத்துக்குப்போ
கிறவேளையில் இப்பாதையாக இவ்விடம்வருகையில் கள்ளர்கள்வந்
தவிழுந்து எங்களுடைய சாமான் முதலாகிய வஸ்துகளையெல்லாம்
கொள்ளைசெய்து எடுத்துக்கொண்டு எங்களனைவரையும் வெட்டி இ
ந்தயிடத்தில் புதைத்துவிட்டு போய்விட்டார்க ளாகையால் இவர்க
ளுக்கு நான் எஜமானாக இருந்தும் அவர்கள்செய்த சகாவத்தினால் அ
வர்களுக்கு இவ்விதமான நியாமத்துகள்கிடைக்கிறது நான்
செய்தபகிலென்னும் ஈகையில்லாததாலும் பாவத்தாலும்நானிப்போர்ப்ப
ட்ட கொடுமையாகியசிறுமைப்படுகிறேன் இன்னம் என்னுடைய அவு
லாதுகளானபிள்ளைகுட்டிகள்ஒரு துண்டுபுடவைகளுக்கும்ஒருதுண்
டுரொட்டிக்கும்சிறுமைப்பட்டு அவர்கள் அலைந்துகொண்டிருக்கிறார்
கள்என்னுடையபொல்லாவிதியானது ஆகையால் ஆஸ்தியானதிரவிய
ங்கள் ரத்தினதிகளும் நகைகட்டு முட்டுகளும் எல்லாம் நானிருக்குமி
டமான வீட்டில் அண்டாக்களில் புதைத்திருக்கின்றது அப்படி யி
ருக்க என்னுடைய சேவகர்தனத்தி லிருந்தவர்களெல்லாம் அனேக
விதமான சந்துஷ்டியை யடைந்து நியாமத்தான வஸ்துகளைத் தின்று
ஷர்பத்து தண்ணீர்களும்குடித்துக்கொண்டுசிம்மாசனத்திலிருக்கிறா
ர்கள் பின்னும் உடுப்புகள் சொர்க்க லோகத்திலுள்ள ஆடைகள் உ
டுத்திக்கொண் டிருக்கிறார்கள் என்னுடைய விதிவசத்தினால் நான்

செய்வித்து ஒரு மஹால் தோற்றியது அந்த வழியைப்பார்த்து
தொடர்ந்து போனார் அப்போது அந்த முஸாபரான மனிதனை எ
டுத்துக்கொண்டு போய்விட்டதே என்கிற காட்டத்தை மனதிலெ
ண்ணிக்கொண்டு இந்த மஹாலானது எங்கேயிருந்து வந்ததென்று
இதுவே நினைவாக அந்த மஹாலுக்குள் போய்ச்சேர்ந்தார் அந்தமஹா
லானது எவ்விதமாய் சிங்காரித்திருக்குமென்றால் அது இன்ன வித
மென்று சொல்லிமுடியாது அதிலொருசிம்மாசனமானது பளிங்கினா
ல் செய்யப்பட்டு நடுவில்வைத்திருந்தது அதின் மேலே ஒருமனிதன்
ஒரு வஸ்திரத்தைப்போர்த்திக்கொண்டவன்படுத்துக்கொண்டிருக்கிறான் அதைப்
பார்த்து அவ்விடம்போய்பின்னுஞ்சொல்லுகிறார் என்னமென்றால் அவனு
அருகில் போய்ப்பார்க்கலாம்அவன்யாரென்றும் என்ன பேரென்றும் அ
வன் தலைப்பக்கமாக நின்றுகொண்டு தன்மனதிலேயெண்ணியிருக்கும் அப்
போது இவன்எழுந்திருப்பானானால் இவனுடையவாலாற்றலைக்கேட்க
லாமென்றுநிற்கையில் முன் அந்தமுசாபரைக்கொண்டுபோனபாம்பா
னது அந்தமனிதனைக்கொண்டுபோய் விட்டு விட்டு ஹாத்திமின்மே
லே விழவந்தது அப்போது முசாபரென்பவனைக்கொண்டு போன
மூதேவி இதுதானென்று தானெண்ணியிருந்த ஆங்காரங்கொண்டு
நெருப்புத்தணலாகி அப்போ தந்தப் பாம்பைப் பிடித்து தன்கை
யால் அமுத்தி அமுத்த மிகுந்தசத்தமாய்விரிட்டு ஒருசத்தம்போட்ட
து அப்போது அவ்விடத்திலிருக்கின்றதேவதைகளெல்லாம் ஓடிவந்தது
அங்கே படுத்திருந்த தேவானதுவிழித் தெழுந்துகொண்டு ஹாத்திமி
டமாகச் சொல்லுகின்றது ஓமனிதனே அந்தப்பாம்பைவிட்டு விடும்
அதானது என்னுடைய வேலைக்காரனாயிருக்குமென்றுசொல்ல அப்
போது ஹாத்திம்சொல்லுகிறார் அந்தமுசாபரான மனிதனை இப்போ
து என்முன்பு கொண்டுவந்துவிட்டால் நானிதைவிடுவேன் இல்லா
விட்டால் விடமாட்டேனென்று சொல்ல அப்போது அந்த தேவான
வன் சொல்லுகிறான் ஓதேவதைகளே நீங்கள்பத்திரமாயிருங்கள் இவனு
கப்பட்டவன் மிகுந்தவீரத்துவமுள்ளவனாயிருக்கிறான் நம்முடைய
வித்தையான மந்திரத்தின் பீடத்தையுடைத்து சிதறச்செய்து உன்னு
டைய வாயிலும் நுழைந்துபோவானென்றுசொன்னவுடனே அச்சொ
ல்லைஹாத்திம்கேள்விப்பட்டு அந்தப்பாம்பின்வயிற்றில் நுழைந்துபோ
கையில் ஒரு இருட்டிலிருக்கின்றார் அந்தப்பாம்பினுடையகோலமொ
ன்றும் தெரியவில்லை அது எங்கேயிருக்குதென்றுநாலுபக்கங்களிலு
ந்தேடிப்பார்க்கையில் ஒருசத்தமானதுவந்தது அது என்னவெனில்,



ஓ ஹாத்திமே நீ இந்த இருட்டறைக்குள்ளே உன்கையில் எந்த
வஸ்து அகப்படுகிறதோ அதை உன்னுடைய வாளினால் வெட்டி து
ண்டதுண்டமாக்கி விடென்கிற சத்தமும் பின்னும் நான்சொன்ன
துபோல் செய்யாவிட்டால் இயாவரையிலும் இவர்களுடைய இ
ஸ்மெயாத்தென்கிற மந்திரத்தில் அகப்பட்டுக்கொண்டு வெளிப்படாம
லிருப்பாயென்ற சொல்லைக்கேட்டு அப்போது ஒரு பக்கம் தன்னு
டைய கையைநீட்டித் தடவினார் அப்போது ஒருவஸ்தானது பசுவி
ன்முகமான ரூபம்போல் அவர்கையில் அகப்பட்டது அப்போதந்தப
சுவை தன்னுடைய வாளால் துண்டு துண்டாகவே வெட்டிவிட்டார்
உடனே அவ்விடத்தில் பின்னுமொரு பெரியவரியானதுகாணப்பட்டது
அதினுடைய அலைகளானது கடலினலையில் நின்றும் பெரிதாகயிருக்கி
றது அப்போதந்த அலையில் ஹாத்திமகப்பட்டு முழுகித் தடமாடிக்
கொண்டிருந்து தடவை முழுகிமுழுகி எழுந்தபின்பு இவருடை
ய காலானது நிலத்திற் பட்டது அப்போது தன்னுடைய கண்
ணைத்திறந்து பார்க்கும்போது அந்த புதிதானமான தோட்டங்களு
ம் மஹால்களும் அந்த தேவதைகளுமந்த சிம்மாசனமும் அவ்விடத்தி
லிருந்ததேயும் அந்தப்பாம்பானது அந்தப்பெரியசமுத்திரத்துக்கொ
ப்பான ஏரியும் அந்த அலைகளும் யாதொன்றுந்தெரியவில்லை ஒரு
பெரிய வனாந்திரமானகாடுதோணப்பட்டது அதினுருகாமையில்போய்
ப்பார்த்தால் அவ்விடத்திலெத்தனையோமனிதர்கள் நிற்கக்கண்டும் அ
னேகர் இறந்துபோய்க் காய்ந்துகிடப்பதும் அனேகர் பசிதாகப்பொ
றுக்க மாட்டாமல் புரண்டுகொண்டிருப்பதையும் இவ்விதமானசெ
யல்களைப் பார்த்துக்கொண்டு நிற்கையில் அவ்விடத்திலந்த முசாப
ரானவனும் நிற்கக்கண்டு அவனிடமாக ஹாத்திமென்பவர்போய்ஓ, எ
ன்னுடைய தோழனே என்பிறப்பே உன்னையிந்தவிடத்தில் யார்கொ
ண்டு வந்தாரென்றுகேழ்க்க என்னை ஒரு பாம்பானது கொண்டு வந்
து இவ்விடத்தில் போட்டுவிட்டுப்போய்விட்டதென்றும் பின்னால்
எங்கேபோய் விட்டதோ எனக்குத் தெரியாதென்றுஞ் சொல்லி
அவ்விடத்தி லுள்ளவர்கள் சொல்லுகிறார்கள் எங்களையும் அந்தபா
ம்பானதுதான்கொண்டுவந்துவிட்டுதென்றுசொல்லி இவ்விடத்துக்கு
நீங்களெல்லாம் எவ்விதமாக வந்தீர்களென்று கேழ்க்க அப்போதந்தஇஸ்
மாத்தென்ற மந்திரத்தால் தான்பட்டபாடுகளெல்லாமவர்களுக்குஞ்
சொன்னார் ஆனால் நீங்கள் சகலரும் உங்களுக்குரிய நாடுகளுக்கு
ப்போய்விடுங்கள் உங்களுடைய பகையான அந்த மஹாலையுமிடிப்ப

ஞவாக்கிப் போட்டேனென்று சொன்னவுடனே அவர்கள் சொல்லு
கிறார் எங்களுடைய மிடிமைகளையும் கைதியையும் விட்டு நீக்கியஎங்
களுடைய தகப்பனே ரட்சகனே இவ்விடத்திலெங்களைப்போல் கை
தியிலிருந்தவர்கள் பசியினாலும்நீசத்தினாலும் பொறுக்கமாட்டாமல்
இந்தயிடத்தில் அனேகமனிதர்கள் இறந்துபோனார்கள் இந்தவேளை
யிலெங்களை யெல்லாம் காப்பாற்ற வந்தீர் இனிமேலும் உங்களுக்கு ந
ன்மையும் நீடித்த ஆயிசும் எங்கேபோனாலும் உங்களுக்கு வெற்றியும்
மாறுயத்தைக்கொடுப்பானென்று சகலரும் ஹாத்திமென்பவரை போ
ற்றி வாழ்த்தி உங்களால் இந்த இடுக்கத்தில் நின்று விடுதலையா
னோமென்று ஹாத்திமிடமாக உத்தரவு பெற்றுக்கொண்டு சகலரும்
அவ்விடம்விட்டு புறப்படுகின்றவேளையில் அவர்களிடமாகஹாத்திம்
உத்தரவு பெற்றுக்கொண்டு சீனதேசத்தை நோக்கிக்கொண்டு ந
டந்து போகிறவேளையில் ஒரு பெரியபட்டணத்துடைய தலைவாசலி
ல்போய்ச்சேர்ந்து அதற்குள்ளேபோக எண்ணங்கொண்டு எழுந்தா
ர் அப்போதந்த வாசல் காக்கின்ற சேவகான் நீரெங்கே போகிறீர்க
ளென்று அவரைப் போகவொட்டாமல் அந்த நகரத்துபாத்துஷாவிட
மாகவரவேண்டுமென்று அவர்களிடமாகப்போய் அவர்சொல்லும்ப
டியானசவால்களுக்கும்ஜவாபுக்கும் உதாரணங்கொடுத்துவிட்டுபின்
புநீர் எங்கேபோக நாடுவீரோ அங்கே போகலாம் இவ்விதமானசொ
ற்களை ஹாத்திமென்பவர் கேட்டு ஓ, ரஷ்மிசவிகளே உங்களுடைய
நகரத்தினுடைய நடப்பு இதென்ன சங்கதியென்று பின்னுஞ் சொல்
லுகிறார் எந்ததேசத்திலும் [illegible] முசாபரானவர்கள் யாராகஇரு
ந்தபோதிலும் அவர்களுக்கு சவுக்கியமடையும்படியாய்வேண்டிய உ
பகாரம் செய்கிறார்கள் அப்படியிருக்க நீங்களிப்போர் பட்டவர்கள்
முசாபர்களுக்கு வருத்தம் கொடுக்கிறீர்கள் ஓ, முசாபரானவரே இந்
தபாதையில் நடக்கப்பட்டவர்கள் பாத்துஷா விடத்துக்கு கொண்டு
வரும்படியான உத்தரவிருப்பதால் இந்த பாத்துஷாவுடைய ஒரு
பெண்ணிருக்கிறாள் அவளிடமாக முசாபர்களைக் கொண்டு போ
றார்கள் அப்போது அந்தப்பெண்ணானவள் மூன்றுசவால் சொல்லுகி
றாள் அதற்கு சரியானஜவாபு கொடுக்காவிட்டால் அந்தநாள் விடி
யற்காலையில் அந்த மனிதனைத்தூக்கிப் போடுகிறார்கள் இதற்காகவே
ண்டி இந்தப் பட்டணத்திற்கு பேதாதென்னு நிறைவற்ற நகரமென்று
பேர்வைத் திருக்கிறது கேள்வியில்லாதபட்டணமென்றும்போராக இ
ருக்கும் அது எவ்விதமெனில் இவ்விடம் முசாபர்கள் வந்தால் உயிர்



தப்பிப் போறதில்லை பின்பு ஹாத்திம் மிகுந்த விசனமடைந்து அந்த
சேவகர்கள் கூடச்சேர்ந்துகொண்டு பாத்துஷாவின் சமுகத்திற்போனா
ர் அப்போது ஹாத்திம் மனதில் என்னுகிறார் பார்க்கலாம் இவள்
என்னசொல்லுகிறாளென்று எண்ணியிருக்கையில் பாத்துஷாவா
னவர் கேழ்க்கிறார் ஓ, வாலிபனே நீ யார் எவ்விட மிருந்து வ
ந்தாய் உன்பேர் என்னவென்று கேழ்க்க அப்போது ஹாத்திமென்ப
வர்சொல்லுகிறார் [illegible] யமாகஇருக்கும் நான் சீனதேசம்போ
க எண்ணங்கொண்டவனாக வந்திருக்கிறேனென்றுசொல்லி என்னு
டையபேரைப்பற்றி உங்களுக்கு ஆகவேண்டியதென்ன ஓ, பாத்து
ஷாவே துனியாவில் நீர் தவிர மற்றவர்கள் முசாபர்களுக்கு அவ
ர்வர்களுக்குத் தகுந்தபடிக்கு சவுக்கியம் வேணப்பட்ட விருந்துகள்
செய்கிறார்கள் அவர்களுடையபேர் பெயமனையில் சந்திரனுடை
ய பிரகாசம்போல் பிரசங்கமாகி யிருக்கின்றதென்று சொல்ல இவ்வி
தமான மொழியை பாத்துஷாகேட்டு கண்ணீர்விட்டு அழுது சொல்
லுகிறான் ஓ, வாலிபனே நான் என்னசெய்வேன் இந்த நகரத்தில் ஒ
ரு பொல்லாத பலாவந்து சேர்ந்திருக்கின்றது முன்னால் இந்தப்ப
ட்டணத்தின் பேர் நீதியுள்ளது என்று யிருந்தது இப்போ என்னுடை
ய ஒரு பொல்லாத மூதேவி என்வயிற்றில் பிறந்திருக்கின்ற
து அவளால் இப்போதுஇந்தப்பட்டணத்துக்குப் பேர்நீதியில்லாபே
தாது பட்டணமென்று பேராகி இருக்கின்றது இவ்விடத்தில் கெடு
நாளாக முசாபர்கள் வெட்டுண்டு போகின்றார்கள் அவர்களுடைய
கூனை பழிகளெல்லாம் என்தலையில் வந்து சேருகின்றது என்று
சொல்ல ஹாத்திமென்பவர் அப்பேர்ப்பட்ட பெண்ணை நீ வெட்
டாம லிருக்கின்றாயென்று சொல்ல அப்போது அந்த பாத்துஷா
சொல்லுவார் யாராவது லோகத்தில் பிள்ளைகளை வெட்டியிருக்கி
ர்களா நான் இந்தப்பெண்ணை வெட்ட இவ்விதமான மொழியைஹாத்
திம்கேட்டுச்சொல்லுகிறார் அதுல்இந்தபலாவை நீக்கஉன்னாலகூடவி
ல்லையென்றுசொல்லி ஆண்டவன் தன்னுடையவல்லபத்தால் இவ்வி
தமும் உன்பொல்லாங்கை நீக்கிவிடுவான் அப்படிபேசிமுடிவான பின்
பு அந்தஹாத்திமை ஒருமஹாலில் அழைத்துக்கொண்டுபோய்வைத்து
அந்தபெண்ணைசிங்காரித்துக்கொண்டுவந்து பக்கத்தில்வைத்தார்கள்
அப்போது அந்தப்பெண்ணைப்பார்த்தவுடனே ஹாத்திம்மனதிலெண்
ணுகிறார்இந்தபரியான பெண்ணைப்போல் இந்த லோகத்தில்அழகுநா
ன்பார்க்க வில்லையென்றும் எண்ணங்கொண் டிருக்கையில் அந்தப்

பெண்ணானவள் ஹாத்திமை பார்த்தவுடனே இவருடைய அழகையெ
ன்ற மோகத்தால் தன்னுடைய வெட்கத்தை விட்டுப்போட்டு ஹாத்
திமுடையதாளிரும்பணைக்கமுஞ்செய்து பின்பு நவமணியால் புனை
ந்திருந்த சிம்மாசனத்தில் ஹாத்திமை இருக்கச்செய்து தானும் ஒரு
சிம்மாசனத்தி லிருந்துகொண்டு தன்னுடையதாதி என்பவளைக் கூப்
பிட்டுச் சொல்லுகின்றாள் என்னுடைய ... தாதியே
நான் இன்றையதினம் இந்த முசாபரின்பேரில் மிகுந்த ஆவலாக இச்
சைப்பட்டிருக்கின்றேன் இவரைப்பார்த்தால் மேன்மைபெற்ற பா
த்துஷா வுடைய குமாரனைப்போல் தோன்றுகின்றது நான் மனஸ்
தாபமடைகின்றேன் நாளையத்தினம் காலையில் இந்த மலிதனைத்தாக்
கிப்போடுவாயென்றசொல்லை தாதியானவள்கேட்டு சொல்லுகின்றா
ள் ஓ என்னுடைய உயிராகிய ராசவதியானமகளே உன்னுடைய வி
தியின்பயன் கெட்டதாயிருக்கின்றது அதெவ்விதமானால் உன்னால்
இவ்விடத்தில் அனேகமான ஏழைகளும் அமீர் அமிருலியவான்களு
ம் ராஜ ராஜாக்களும் இறந்துபோயிருக்கிறார்கள் அவர்களுடைய
பழிகளெல்லாம் உன்னுடைய தலையில் சுற்றிக்கொண்டிருக்கின்றது
ஆனால் உன்னுடைய அதிஷ்டம் நன்மைகெட்டதாக இருக்குதெ
ன்றுசொல்லி பின்னுஞ் சொல்லுகின்றாள் உன் நசிபு நலமாயிருக்கு
மானால் ஒருவேளையில் இவரால் உன்னுடைய முசிபத்து நீங்குமா
னால் மெத்தநலமாக இருக்குமென்று சொல்ல அப்போது ஹாத்தி
மென்பவர் தாதியைக்கேட்டார் அப்பேர்ப்பட்ட வேலையென்னவென்
று அதினால் வேண்டிய முசாபர்கள் இறந்தசங்கதியையெனக்குத்தெரி
யப்படுத்த வேண்டுமென்று கேட்க அப்போது தாதி சொல்லுகின்
றாள் ஓ ராஜகுமாரனே இந்த பெண்ணாகிய குணங்கெட்டவள் இரு
ந்தாப்போலிருந்துஇரவானவுடனே பயித்தியம் பிடித்துப்போகிறாள்
அப்போதுதன்னைமறந்துபோசாதபேச்சுகள்பினத்துகிறாள் அப்போது
சவால்சொல்லுகிறாள் அந்தமுசாபர்கள் அதைக்கேட்டுஜவாபுசொல்
வதில்லை அதினால்தான்வெட்டிப்போடுகிறாள் அல்லதுதூக்குப்போடு
ம்படிக்குசெய்கின்றாள் அந்தவேளையில்யாதொருவரும்அவளிடமாகப்
போகக்கூடாது அவளுக்குத்தொழிலிதுவேயாக இருக்கின்றது இவ்
விதமானசொல்லைக்கேட்டுஹாத்திமென்பவர்என்னுகிறார் என்னை இ
வ்விடம்மவுத்தானதுகொண்டுவந்ததோ அல்லதுஹயாத்தாக சந்தோ
ஷ மடையும்படிக்கிருக்கிறதோவென்கிற யோசனைபண்ணும் வேளை
யில் இப்படியிருக்கதாதியானவள்பொபர்ச்சிகானாவிலிருந்து அன்னங்



கொண்டு வந்து வைத்துச் சொல்லுகின்றாள் ஓ முசாபரே நா
ளையதினம் இறக்கப்பட்டவரோகொஞ்சம் போசியுமென்று முன்னால்
வைத்தாள் அப்போதுஹாத்திம்சொல்லுகிறார் இப்போது இந்தப்பெ
ண்ணுடைய அந்தங்களையும்சவால்களையும் முடித்தபின்புதானிந்த
அன்னத்தைப்புசிப்பேனே தவிர இப்போதெனக்கு இந்தச்சாதமா
னது அருமையாயிருக்குமென்று பின்னுஞ் சொல்லுகிறார் அறிவுள்
ளவர்களுக்கும் வீரத்துவமுள்ளவர்களுக்கும் இந்த ஜீவனமான
து தூரமாயிருக்குமென்று சொன்னதை தாதிகேட்டுச் சொல்லுகி
றாள் ஆனால் ஓ வாலிபனே உன்னால் எவ்விதமும் இவளைசெயிக்கு
ம்படியான வீரதத்துவமுண்டாகும் நீ நீதியுள்ள நிமக்கு ஹலாலா
க இருக்குமென்று சொன்னாள் அப்படி யிருக்கையில் இரவு வந்து
விட்டது அப்போது அந்த மஹாலிலிருந்தவேலைக்காரிகளும் வேலை
க்காரர்களும் தாதியர்களும் பணிவிடை செய்யப்பட்டவர்கள் யாவ
ரும் வெளியில்வந்து கதவைப்பூட்டிக்கொண்டு போய்விட்டார்கள் அ
ப்போது பாதி ராத்திரியானபடியால் அப்பெண்ணானவள் பயித்தி
யம் பிடித்தவளைப்போல் வந்து நின்றுகொண்டு குதிக்கிறதும் நாவி
னாலே ஆகூணிப்பான வார்த்தைகளைப் பேசிக்கொண்டு ஹாத்திமிட
மாகவந்து சொல்லுகிறாள் ஓ வாலிபனே உன்மனதில் கொஞ்சமாகி
லும் அச்சமில்லையா நீ அன்னியனாயிருந்து இவ்விடம்வரலா
மா நல்லது நீ இவ்விடம் வந்திருப்பதால் என்னுடைய சவாலுக்கு
ஜவாபு சொல்லென்றாள் அப்போது நல்லது பெண்ணே உன்னு
டைய சவாலென்ன சொல்லுகின்றாய் சொல்லென்று கேட்க அப்
போது அவள் சொல்லுகின்றாள்.

# பேதாது நகரத்தில் நீதியில்லா பாத்துஷாவின்மகள் சொல்லுகின்ற மூன்றுசவால்களின் பாடு.

அவள்சொல்லுகின்றாள் முதலாவது என்னுடைய சவாலான தென்னவென்றால் இந்தலோகத்தில் உயிருள்ள துள்ளியானது பிறக்கின்றது எதுவாக யிருக்குமென்றுகேட்க அப்போது ஹாத்திமென்பவர் கொஞ்சநேரம்பொறுத்து ஜவாபு சொல்லுகின்றார் எப்படியென்றால் உன்னுடையசவாலானது சமுத்திரமென்றமனிதர்களின் பிறப்பானதுள்ளியானது விந்தாகயிருக்குமென்றுசொல்லிபின்புஹாத்திமென்பவர்இனிஇரண்டாவதுஉன்சவாலைச்சொல்லென்றுகேழ்க்க(உ) வது சவால்சொல்லுகின்றாள்இந்தலோகத்தில் எல்லாக்கனிகளிலும் மிருந்த மதுரமானகனியானதென்னவென்றுகேழ்க்க அப்போதுசொல்லுகின்றார் எல்லாக்கனிகளிலும்மின்றுமேலானமதுரமுள்ளகனியானது பிள்ளைக்கனியல்லாமல் வேறில்லையென்றுசொல்லி (௩) வது சவாலைச்சொல்லென்றுஹாத்திம்கேட்க அப்போதுசொல்லுகின்றாள் மனிதர் மற்ற வஸ்துக்கள் எல்லாத்துக்கும் காண்பித்து வருவது நிச்சயமானது அது யென்ன வஸ்தாக யிருக்குமென்று கேழ்க்க அப்போது ஹாத்திமென்பவர்சொன்னார் ஓபெண்ணே அதுவானது சகல பேருக்கும் காண்பித்துவரப்பட்ட நிசமானவஸ்து மவுத்தென்ற சாவாகயிருக்குமென்றுசொல்லி லோகத்தில் யாதாமொருவனை விட்டதில்லையென்றுஞ்சொல்லஇந்தமொழியைக்கேட்டவுடனே அந்



தப்பெண்ணானவள் தலையைக்கீழே சாய்த்துக்கொண்டாள் பின்புநடுநடுக்கங்கொண்டு தானிருந்த தகத்தைவிட்டுக்கீழே நிலத்தில்விழுந்து சுத்துமாறிக்கிடக்கின்றவேளையில் ஒரு கருநாகமான பாம்பானதுமிகுந்தஅச்சமடையும் படியாக அவ்விடத்தில் காணப்பட்டுமிருந்தஅங்காரத்துடனேநெருப்புப்பொறிபறக்கும்படியாகஆத்திமையார்க்கவருகின்றது அப்போது மனதிலெண்ணுகின்றார்அனால் இதை நாம் கொன்று போட்டால் நாம் பாவவாளியாகின்றோம் அதைநாம்கொல்லாவிட்டால் இந்தமூதேவி நம்மைவிடமாட்டாது என்கிற யெண்ணங்கொண்டு பிரஸ்பாத்துஷாவுடைய மகள்கொடுத்த மோருவென்ற மோதிரத்தை சுருக்கில் தன்னுடைய தலைப்பாகையி லிருந்ததை அவிழ்த் தெடுத்து வாயில் போட்டு கன்னத்தில் அடக்கிக்கொண்டார் பின்பு அந்த பாம்பானது இவரருகில் வந்தது அப்போது அதை தன்கையால் பிடித்து ஒரு பானையில் போட்டு மூடி கட்டிவைத்து தன்னுடைய இடுப்பிலிருந்த கத்தியையெடுத்துவாசலில் ஒருமனிதனளவு குழிவெட்டி அதில்புதைத்து விட்டார்பின்புதான்சிம்மாசனத்தில் போயிருக்கையில்அந்தப்பெண்ணானவள் மயக்கந்தீர்ந்து உசாராகி இரண்டாம் சாமத்தில் எழுந்திருந்து தன்னுடைய முகத்திலிருக்கின்ற புர்க்காவையெடுத்துப்போட்டு பின்புசொல்லுகின்றாள் ஓ, அன்னியமனிதனே நீயார் இந்த சிம்மாசனத்தி லிருக்கின்றாய் அப்போது ஹாத்திம்சொல்லுகின்றார் ஓ பேதையானவிவேகமில்லாதபெண்ணே நீ இவ்வளவு சுருக்கில் என்னைமறந்துவிட்டாயா நான் யாரானால் உன்னுடையதகப்பன்மனிதாள்ளன்னைகையோடுகையாகஇவ்விடங்கொண்டு வந்தவனல்லவா வென்றுசொல்ல அப்போதுஇந்தமொழியைக்கேட்ட வுடனே அந்தப்பெண்ணானவள் தன்னுடைய தாதியையும் மற்ற வேலைக்காரர்களையும் கூப்பிட்டுச்சொல்லுகிறாள் இந்த முசாபரானவர் இன்றையத்தினம் உயிர்தப்பி பிழைத்துக்கொண்டிருக்கின்றவிதமென்னவென்றுகேழ்க்க தாதியென்பவள்சொல்லுகின்றாள் ஆண்டவன் தன்னுடையகாவலின்பேரில் இவனை காத்துவைத்திருக்கின்றது நல்லது உன்னுடைய ரகசியத்தின் விபரமென்னவென்று கேழ்க்க எனக்கு எப்போதும்நிரேகம் கனத்துக்கொண்டிருப்பது இப்போது அந்த கனமில்லையென்றுஞ்சொல்ல பின்பு தாதியானவள் ஹாத்திமிடமாக கேழ்க்கின்றாள்ஜவாபினேநீஇவ்விடத்தில் நடந்தகாரணமென்ன நீ உயிர்தப்பி யெப்படியிருக்கின்றாயென்றுகேழ்க்க அப்போது ஹாத்திமென்பவர்சொல்லுகின்றார் நான் இந்தமொழியை சத்தமாக

உன்னிடஞ் சொல்லமாட்டேன் ஆனல் இந்தப்பெண்ணுடையதகப்
பனிடமாகச் சொல்வேனென்றுசொல்ல இவ்விதமாக இருக்கையில்
ஒளிவுபொருந்திய சூரியன்வெளிப்பட்டுபொழுதுவிடிந்தது அப்போ
து அந்த பாத்துஷாவானவர் வந்து ஹாத்திமென்பவனைப் பார்த்து
கேழ்க்கின்றார் ஓ முசாபரே நீர் எவ்விதமாக உயிர்தப்பி பிழைத்தா
யென்று கேழ்க்க அப்போது ஹாத்திமென்பவர் சொல்லுகின்றார்
எவ்விதமானல் ஓ பாத்துஷாவே தம்முடையபெண் முதல்சாமத்தில்
பயித்தியங் கொண்டு நாவினுல் அஷணியிபாணசொற்களையெல்லாம்
சொல்லிக்கொண்டிருந்தாள் பின்பு வாயில்நுரைகள் வரும்படியாக
என்னிடமாக ஓடிவந்து சொல்லுகின்றாள் ஓ, அன்னியபுருஷனே நீ
யென்னதயிரியங்கொண்டு நானிருக்கும்மஹாலுக்குள்கேழ்வி உத்தர
வில்லாமல் திடீலென்று எப்படிவந்தாய் அல்லது நீ இப்போது வந்தி
ருப்பதால் என்னுடைய சவால்களுக்கு ஜவாபு கொடுக்கவேண்டுமெ
ன்று என்னிடமாக மூன்றுசவால் கேட்டாள் அப்போது நான் அந்த
மூன்றுசவால்களுக்கும் ஆண்டவன்கிருபையால் அதற்குதக்கதஜவா
புசொன்னேன் அவள் இம்மொழியைக் கேட்டவுடனே நடுக்கமெடு
த்து தானிருந்த பீடமான குர்ச்சியை விட்டு கீழேவிழுந்து சுத்துமா
றிக் கிடக்கையில் இப்பெண்ணினுடைய விலாப்புறத்தி லிருந்து ஒரு
பாம்பானது புறப்பட்டு என் பக்கம் திரும்பி என்மேல் விழச்சீறிவ
ந்தது அப்போதுநான் அதைப்பிடித்துப்பானையில்மூடி இந்தவாசலில்
புதைத்துவைத்திருக்கிறேன் நீங்கள் பார்க்கவேண்டுமானல்காண்பிக்
கிறேனென்று அதைக் காண்பித்தார் அப்பெண்ணானவள் உசாராகி எ
ன்னைக்கண்டுவெழ்க்கமடைந்தாள் அப்போதுபாத்துஷாகேட்டார் ஓ.
வாலிபனான வீரதத்துவமுடையமனிதனே இதென்ன இவ்விதமான ஆ
ச்சரிய மென்று கேழ்க்க அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் ஓ. பா
த்துஷாவே ஒரு ஜின்னுகப்பட்டது இந்தப் பெண்பேரி லிச்சை
கொண்டு ஒரு பாம்பின் ரூப மெடுத்துக்கொண்டு வருகிற மு
சாபர்களையெல்லாம் உயிர்வதை செய்துகொண் டிருந்தது ஆண்டவ
ன்கிருபையால் இந்த பலாவானது தங்களையும் என்னையும் விட்டுநீ
ங்கிவிட்டதென்று சொன்னமொழியை பாத்துஷாகேட்டு மகுந்த ச
ந்தோஷமடைந்து சொல்லுகிறார்.

ஓ மனிதனே இந்தப்பெண்ணை நான் உனக்கே தந்துவிட்டேன்
என்னுடைய வாக்குத்தத்துவம் இந்த பெண்ணை யாராவது சவுக்கிய



படுத்தினல் அவருக்கே கட்டிக்கொடுப்பேனென்றுநான் ஷரத்துப
ண்ணி யிருக்கிறேன் ஆனல் நீரென்சொல்லைத் தட்டாமல் இந்தப்பெ
ண்ணைக் கட்டிக்கொள்ளவேண்டியது என்றுசொல்ல ஹாத்திம்சொ
ல்லுகிறார் நானொருஷரத்துக்காகவேண்டிப்போகவந்திருக்கின்றேன்
அந்தவேலையை முடித்துக்கொண்டு இவ்விடம்வந்து நீர் சொல்வது
போல் கேழ்க்கிறேன் என்றுசொல்ல அப்படிக்கு கூடாது நான்கொ
ண்ட எண்ணம்போல் நீர் செய்யவேண்டிய தென்றுசொல்ல ஹாத்தி
ம் ஒப்புக்கொண்டார் தங்களுடையமார்க்கப்படிக்குசமென்னுஞ்சட
ங்குகள்செய்து நிக்காகு முடித்துக்கொடுத்த பின்பு ஹாத்திமுடை
டைய கையில் தன்னுடைய பெண்ணையைப் பிடித்துக்கொடுத்தார்பி
ன்பு அவ்விடத்தில் மூன்றுமாத வரையில் அந்தப்பெண்ணிடமாயிரு
ந்து யிருந்த சந்தோஷமடைந்து இரவுதோறும் சம்போகஞ் செய்து
க்கொண்டிருக்கையில் அந்தப்பெண்ணானவள் கெர்ப்பஸ்திரீயானள்
அப்போது ஹாத்திமென்பவர் பெண்ணிடமாகச் சொல்லுகிறார்
இப்போதெனக்குத்தாவுகொடு என்னுடைய ஒருசொல்லைக்கேளு நா
னகப்பட்டவன் எமனில் இருக்குப்பட்டவன் நைமியினுடைய பின்
ளையாக இருப்பேன் என்பேர் ஹாத்திமாக இருக்கும் ஆனல் உன்க
ர்ப்பத்தி லிருக்கின்றது ஆண்பிள்ளையாக இருக்குமாகில் அதை ஏ
மனுக்கு வரும்படியாக செய்துவிடு பெண் பிள்ளையாக இருக்கு
மாகில் அதை தகுந்த இடமாகப்பார்த்து நிக்காகு செய்து கொடுக்க
வேண்டியதுநான் ஹயாத்தாக இருப்பேனனல் எவ்விதத்திலும் ஒரு
தடவை உன்னிடத்தில் அகத்தியமாகவருவேன் பின்பு அச்சவுக்கிய
த்தையும்உன்னுடையசெய்தியையும் எப்போதும்விசாரித்துக்கொண்
டிருப்பேன் சிறிதுமொழிகள் அந்தப்பெண்ணுக்குசொல்லிவிட்டுபாத்
துஷாவி னிடமாகவும் உத்தரவு பெற்றுக்கொண்டு அக்கரம் விட்டு
கொஞ்சதூரங்கடந்து பின்பு சீனதேசம போய்ச்சேர்ந்தார் அவ்விடத்தி
லிருக்கிறவர்களைக் கேட்டார் இந்தநகரத்தில் வர்த்தகனுடைய தெ
ருவு எவ்விடமிருக்கிறதென்று கேட்டுக்கொண்டுகடைசியில் அவ்விட
ம்போய்ச்சேர்ந்து ஈசுபுசவுதாகருடையவீடு எங்கேயிருக்குதென்றும்
அவருடைய பிள்ளைகள் பெண்சாதிகள் இருக்கின்றதாவென்றுகேழ்க்க
அம்மொழியைக் கேட்டுசொல்லுவார்கள் இவ்விடத்திலில்லுங்களென்
று ஒரு மனிதன் ஓட்டமாகஓடிஈசுபுசவுதாகருடையமகனிடமாகப்போ
ய்ச் சொன்னார்யாரோ ஒருமுசாபரானவரெங்கிருந்தோவந்திருக்கிறார்
அவர் உங்களைத்தேடுகிறாரென்று சொன்னமாத்திரத்தில் அவருடைய

ஹாத்திமிடமாகவந்தார் அப்போது அவனைப்பார்த்துச் சொல்லுகி
றார் உங்களுடைய தகப்பனார் ஒரு சங்கதிசொல்லி என்னை உ
ங்களிடமாக அனுப்பி யிருக்கிறாரென்று சொல்ல அப்போது அந்த
விசளத்தை அனைவருங்கேட்டு சிரித்துச்சொல்லுகிறார்கள் ஓ.முசாப
ரானவரே தெரியவந்தது நீயாகப்பட்டவன்பயித்தியக்காரனைப்போல்
தோற்றுகின்றது நீ வாயில்வந்தபடி பினத்துகிறாய் அவரிறந்துபோய்
நெடுநாளாச்சுது அப்படி யிருக்க அவர் உன்னிடமாக செய்தி எவ்வி
தமாக அனுப்பினா ரென்றுசொல்ல ஹாத்திம்சொல்லுகிறார் என்னு
டைய தோழமை யானவர்களே எனக்கு ஈசுபு சவுதாகருடைய வீடு
சீனுவில் இன்னதெருவில் இன்ன யிடத்தில் இருக்குதென்றும்எனக்
கெவ்விதமாகத்தெரியுமென்றும் சொல்லி பின்னுஞ்சொல்லுகிறார் இ
ன்னம் என்னிடமாக ஒருசங்கதி தெரியப்படுத் தியிருக்கிறார்அதெவ்
விதமென்று நீங்கள் கேழ்ப்பீர்களாகில் நான்சொல்லுவேன் அல்லது
நீர் அதைச் சொல்லென்று கேழ்க்க அப்போது ஹாத்திம் சொ
ல்லுகிறார் அவர் படுத்திருந்த முக்கியமான இடத்தில் இன்ன
மரத்தடியின் கீழே மிகுதமான திரவியங்களும் இன்னம் வேண்டி
யரத்தினங்களும் நகைகளும்வைத்துப் புதைத்திருக்கின்றது அச்சங்
கதியாருக்குந்தெரியாது.

ஆகையால் அந்தயிடத்தை வெட்டிப்பார்த்தால் அதில்நான்சொ
ன்னதுபோல் வேண்டியவஸ்துகள் இருக்குமென்றுசொல்லி பின்
னுஞ் சொல்லுகிறார் அந்த கஜானுக்களை எடுத்து நான்கு பங்குபோ
ட்டு ஒருபங்கை நீங்க ளெடுத்துக்கொண்டு மற்ற மூன்றுபங்கை ஆ
ண்டவன்பேரால் செலவுபண்ணிப் போடுங்களென்றும் நடந்த வர்த்
தமானங்களையும் தான்கண்ட காரணங்களையும் யாதொன்றுங் குறை
வில்லாமல் விபரமாய் ஆதிமுதல் அந்தவரையில் வெகுநன்மையாகத்
தெரியப்படுத்தி பின்னுஞ் சொல்லுகிறார் நான் இதற்காகவேண்டி ஒ
ரு காட்டுக்குப்போய் அவ்விடத்தில் ஒருவேடிக்கைபார்த்திருந்தேன்
இல்லாவிட்டால் எனக்கு என்னவேலை இருந்தது நான் அவ்விடம்வி
ட்டு இவ்வளவுதூரம்வர இன்னம் இப்படிசொல்ல அப்போ தவர்கள்
அந்தஊர் பாத்துஷாவுக்கு இச்சங்கதி தெரிவித்தார்கள் அப்போது
ஹாத்திமைக் கொண்டுவந்துவிட பாத்துஷா பார்த்துக் கேழ்க்கிறார்
ஓமனிதனே என்னபார்த் திருக்கிறாய் அதைச் சொல்லென்றுகேழ்
க்க அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் சகலருக்கு மிரங்கி இரட்சி



க்கும்படியானபாத்துஷாவே நான்ஈசுபுசவுதாகரை ஒருஇடத்தில் பார்
த்தேன் என்னிடமாகசிலசங்கதிசொல்லி என்னை அனுப்பியிருக்கிறார்
இந்த மொழியைக்கேட்ட பாத்துஷாவும் குஞ்சிரிப்புகொண்டு அல்ல
து உன்னுடைய ஊரில் இரத்தம் குத்தி எடுக்கப்பட்ட அம்பட்ட
னில்லையா அப்படிக்கு இரத்தம் குத்தி யெடுக்காமலல்லவா நீ
இவ்விடம்வந்தாய் இனி அசல்பயித்தியக்காரனாயிருக்கின்றாய் நீபோ
ய்இப்போதுஇரத்தங்குத்தி எடுத்துக்கொள்ளென்றான் அதெப்படியா
னால்ஈசுபுசவுதாகரிறந்துபோய் நாறுவருஷமாகிவிட்டது அப்படியி
ருக்க இறந்துபோனவரையத்து உன்னிடமாகஎப்படிகண்டு பேசினது
ஓ. அறிவில்லாதவனே உன்னிடமாக இச்சங்கதியை எவ்விதமாக
ச்சொல்லி யனுப்பினான் இந்த பயித்தியக்காரனைநகரத்தை விட்டுஅப்
புறந்துரத்திவிடுமென்று தன்னுடைய மனிதர்களுக்குஉத்தரவுசெய்ய
ஹாத்திம்சொல்லுகிறார்ஓ,பாத்துஷாவானவரே தெரியுள்ளவரே ஏழை
களுக்கிரங்கிஇரட்சிக்கும்படியானா இரட்சகனே நான் சொல்லுகிறது
ஆண்டவனுடைய கோலமாயிருக்கும் அந்தகோலமறிந்தவர்கள் இ
தின்பயனை விசாரிப்பார்கள் ஆனால் நீங்கள் அறியவில்லை கேழ்க்கவு
மில்லை வெட்டுண்டு தெரிந்தானவர்களே நித்தம் ஹயாத்தாகஇருக்கிறது
ஆனால் இந்த ஈசுபு சவுதாகரென்பவர் மிகுந்த பகீலாக இய்யாதவனா
க இருந்தான் ஆகையால் அவன் மிகுந்தவர்த்தமான முசீபத்தென்ற
அகப்பாட்டில் அகப்பட்டுக்கொண்டு வருத்தமடைகிறான் ஆகையால்
என்மொழியை நம்பவேண்டியது அந்த அடியான் கபூறின் அஜாபில்
நின்று விலக்க வல்லது இவ்விடம் அந்த சவுதாகருடைய விசேஷங்கதி
எனக்கெவ்விதமாகத் தெரியவரும் பாத்துஷாவானவர் இம்மொழியை
க்கேட்டு மிகுந்த ஆச்சரிய மடைந்து ஹாத்திமென்பவரை கூடகூட்
டிக்கொண்டு ஈசுபு சவுதாகருடைய வீட்டுக்குவந்து அவர் படுத்திரு
ந்த இடத்தை வெட்டச்சொன்னார் அவ்விடத்தில் பின்னுகணக்கில்
லாத திரவியங்கள் வெளிப்பட்டது அப்போது அந்த திரவியங்களை
நாலு பங்குசெய்து ஒருபங்கை அவனுடைய பிள்ளைகளுக்குகொடுத்தான்
மூன்றுபங்கையும் ஹாத்திமுடைய இடமாகஒப்பித்துச்சொல்லுகிறா
ர் நீ மிகுந்த சமானுள்ளவனாக இருப்பதால்இந்ததிரவியத்தை உன்
கையால் ஆண்டவன் பேரால் செலவுசெய்யென்று உத்தரவுகொடுக்க
அப்போது ஹாத்திமென்பவர் பகீர்களுக்குபசிதீர்ப்பது உடை
மானமில்லாதவர்களுக்கும்உடுப்புகள் கொடுப்பதுமிகுந்தசகாவத்து
கள்செய்து எல்லாத் திரவியத்தையும்செலவு செய்து அந்த பாத்து

ஷாவின் உத்தரவு பெற்றுக்கொண்டு ஷஹறே ஆதில் ஆபாதுஎன்ற
பட்டணம் வந்துசேர்ந்து தன்பெண்சாதியைக்கண்டு தனக்குப்பிறந்
தபிள்ளையையும் பார்த்துஅதிகசந்தோஷமடைந்துஅந்தப்பிள்ளைக்கு
ஸாலிம்என்றுபேர்வைத்துஅவ்விடத்தில்கொஞ்சநாளிருந்துஅவர்கள்
உத்தரவுபெற்றுக்கொண்டு அவ்விடம்விட்டுப்புறப்பட்டுகொடுவனாந்தி
ரவழி கடைக்கடந்து கொஞ்சநாள் நடந்து வெட்டென்டு ஷஹிதா
னவர்களுடைய கபர்ஸ்தானில் வந்து மூன்றுநாள் அவ்விடத்தி
லிருந்தார்.

பின்பு வெள்ளிக்கிழமை யிரவில் எப்போதும்போல் அவரவர்க
ள் தங்கள் தங்கள் கபூருகளிலிருந்து வழக்கம் போல் வெளியில்
வந் திருந்தார்கள் விரிப்பானது மிகுதமான ஒளிவுபொருந்தியதைவி
ரித்து அதின்மேல் இருந்தார்கள் எப்போதும் வழக்கம்போல் சொர்
க்கத்திலிருந்து வருகின்ற நியாமத்துகளைப் போசித்துக்கொண் டிரு
க்கையில் அப்போது ஈசுபுசவுதாகரானவர் அவர்கள்போல் சாப்பி
டவும் முன்னிருந்து சாப்பிட்டுக் கொண் டிருந்தது விலகிப்போ
யிருப்பதையும் பார்த்து ஹாத்திம் அவனைப்போய் காணமற்றுபாஜ
ஸ்லாக்கல்லாகூபித்தாரீன்வகைான் உன்கையில்உன்னுடையஇம்மத்
துவல்லிமைக்காக ஆண்டவன் வேண்டியநன்மையும்ஜவாபுங்கொடுப்
பானென்று ஹாத்திமை மிகுதமாக வாழ்த்திபோற்றிசொல்லுகிறார்
நீ மிகுந்த உண்மையும் உறுதியுள்ளவராகஇருக்கின்றாய் உன்னுடை
ய இம்மத்தினாலும்உன்னுடைய கிருபையினாலும்நான்இவ்விதமானசு
வுக்கியத்தை அடைகின்றேன் முன்னிருந்த பலாவில் நின்றும் இவர்
களுக்கு முன்னே நான் விசனத்தையடைந்துகொண்டிருந்தபலாவில்
நின்று விலகி சவுக்கியத்தை யடைகின்றேன் எனக்கும்ஷஹிதானவர்கள்
அவர்களுக்கு வருவதுபோல் எனக்கும்வருகிறது அதெவ்விதமானால்
அவர்கள் உயிரோடே யிருக்கும்போது தங்கள்கையால்காசிருகயிருத்
துசகாவத்து செய்திருந்தார்கள் நானுகப்பட்டவன் இறந்தபின்பு மி
குந்ததுன்பத்தையடைந்து உன்கையால் என்னுடைய திரவியத்தை
சகாவத்து செய்தபடியால் அந்தபலனதென்றவிரிப்பும் போர்வையு
முள்ளமேலானவைகிடைக்கவில்லை ஆண்டவன்கிருபையாலும் உன்
னாலும்எனக்குஇவ்வளவுசவுக்கியம்கிடைத்ததேபோதும்பாவாஎன்று
மிகுதமாக வாழ்த்தி பின்பு அவரிடம்உத்தரவுபெற்றுஹாத்திம்அவ்வி
டம்விட்டுகாலையில்புறப்பட்டு ஒருவனாந்திரமானகாட்டில்போய்ச்சேர்



ந்தார்அவ்விடத்தில் ஒருகிழவிபக்கிருடையவேஷம்போட்டுக்கொண்
டிருந்த வயதுள்ளவளாக பிச்சை கேட்டுக்கொண் டிருக்கிறாள்
அப்போது ஹாத்திம் அவளைப்பார்த்துதன்னுடைய கையில்போட்டி
ருந்த விலைமதிக்காதின்ற வைரமோதிரத்தைக் கழற்றி அவனுக்குக்
கொடுத்துவிட்டு தான் வழியைப்பார்த்துக்கொண்டு போகின்றார் அ
ப்போதந்தக்கிழவியானவள் மிகுந்தசத்தம்போட்டுக் கூப்பிட்டாள்உ
டனே ஏழுபேர் கள்ளர்கள் ஓடிவந்தார்கள் கைகளில் கத்திகளும்
ஆயுதங்களு மெடுத்துக்கொண்டு இடவலமாகவந்து சேர்ந்தார்கள் பி
ன்பு அந்தக்கிழவி நடந்த சங்கதியைச்சொல்ல அவர்கள் சுருக்காகப்
போய் ஹாத்திமண்டைச் சேர்ந்துகொண்டுபோகிறார்கள் அந்தக்கிழவி
யின்மக்களாக யிருக்கும் இந்த ஏழுகள்ளர் களும் இப்படியிரு
க்க ஹாத்திமை கொலைசெய்து அவரிடத்தி லிருக்கிற ஆயுதங்களையும்
உடுப்புகளையும் பொருள்களையும் பறித்துக்கொள்ளநாலுபக்கமும் சந்து
பார்த்துக்கொண்டு நடந்துபோகிறார்கள் பின்னும்ஹாத்திமுக்குசொ
ல்லுகிறார்கள் தங்களுடைய முந்தாசையால் நாங்களும் வந்துஒருபட்
டணம் போய்ச் சேருவோமென்று சொல்லிக்கொண்டு அந்தநகரத்
து பாத்துஷாவிடத்தில் சேவகமிருப்போமென்று சொல்லஅப்போ
துஹாத்திம் சொல்லுகிறார் நீங்கள் யாதொன்றுக்கும் வழிச்செலவு
க்கும் யோசிக்க வேண்டிய இல்லை நான் கொடுக்கிறேன் தருகின்றே
னென்று சொல்லிக்கொண்டுபோகையில் அப்போது அந்தக் கள்ளர்
கள்சமயம்பார்த்து ஹாத்திமுடையகழுத்தில்சுருக்குபோட்டுகீழே
தள்ளிகட்டிகத்தியால் காயப்படுத்திபாழுங்கிணற்றில் தள்ளிவிட்டா
ர்கள் பின்பு ஹாத்திமுடைய சாமான்கள் முதலானவஸ்துகளையெ
ல்லாம் கொள்ளைசெய்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் ஹா
த்திமுடைய தலைப்பாகையைக்கொண்டுகட்டி தள்ளினபடியால் அந்த
மோஹுரென்றபாத்திரை அந்தப் பாகையி லிருந்த படியால் தன்னை
மறந்து யாதொன்றுந் தெரியாமல் கொஞ்சவேளையில் அந்தக் கிண
ற்றில் (உ) (ரு) நாள்சென்றபின்பு ஒரு பக்கத்தில் காய்ந்த நிலங்
கண்டு அதிலிருந்துகொண்டு தன்னுடைய தலைப்பாகையி லிருந்த
மோஹுரென்றமோதிரத்தை அவிழ்த்துதன்வாய் நீரால் ஒரு கல்லி
ன்மேல் உரைத்து காயங்களில் தடவ உடனே காய்ந்துபோய் விட்
டது அப்போது ஹாத்திம் மனதிலெண்ணினார் அந்த ஆண்மை
த்தன மில்லாத கள்ளர்கள்நம்மைமோசம்செய்தார்களென்று என்
னைக்கொண்டுசொல்லுகிறார் அவர்களென்னை ஆண்டவன்போலகே

ட்பாராகில் நான்சந்தோஷமாகியென்னிடமிருப்பதைக்கொடுப்பேனெ
ன்றுசொல்லி ஆனால் இப்போதும் அவர்களிடைப்பாராகில் வேண்
டியதை அவர்களுக்குக்கொடுப்பேனென்றும்அவர்கள் ஆயிசுள்ளவரை
யிலும்சவுக்கியத்துடனே சந்தோஷமடையும்படியாக என்னைக்கொ
ண்டிருக்கையில் அப்போது ஹாத்திமுக்கு நித்திரைவந்து நேரிட்ட
துபின்பு ஒரு கனவுகாண்கிறார் அதெவ்விதமானால் ஒருமனிதன்தன்
னிடத்தில் வந்துநின்றுகொண்டு மிகுந்த சத்தமாகச் சொல்லுகிறார்
ஓ. ஹாத்திமே நீர் விசனப்பட்டதையும் ஆண்டவன் கரீம் றகீமான
வன் உனக்குத்துணையாக இருக்கிறான் உன்னைஇவ்விடம் கொண்டு
வந்துசேர்த்தான் இதுவும் அவனுடைய இக்குமத்தாகயிருக்கும்
இது நன்மையாகயிருக்கும் நீ அறியமாட்டாய் இவ்விடத்தில் வே
ண்டிய கஜானாவிருக்கின்றது ஆண்டவன் இந்த வஸ்த்தையெல்லாம்
உனக்காக மறைவாக வைத்திருக்கின்றான்.

இப்போது நீயெழுந்து அந்தகஜானாவையெல்லாம்எடுத்துக்கொ
ள்ளென்று சொல்லஅப்போது ஹாத்திம் சொன்னார் நான் ஒருவன்
ஒண்டியாக இருக்கிறேன் அதைநான் எப்படி எடுப்பேன் எவ்விடம்
கொண்டுபோவேனென்றுசொல்ல அப்போது அவர்சொல்லுகின்று
ர் ஓ ஹாத்திமே நாளையத்தினம் இந்த இடத்துக்கு இரண்டுபேர்
கள் வருவார்கள் அவர்கள் இந்த இருட்டுங் கிணற்றில் நின்று உன்
னைவெளிப்படுத்துவார்கள் ஆனால் அவர்களைக்கொண்டு இந்தவஸ்து
க்களெல்லாம் நீ யெடுப்பாயென்றுசொல்லி விட்டுப்போனார் பின்பு
அப்போது ஹாத்திம்மிகுந்தசந்தோஷப்பட்டு ஆண்டவனைநினைத்துத
லைசாய்த்து சிஜ்தாசெய்தார் பின்பு அப்போது ஒரு ஒளிவுபிரகாசமா
னவெளிச்சம் காணப்பட்டது கொஞ்சநேரம்பொறுத்துஇரண்டுபேர்
கள் அந்த கிணற்றின் அருகாமையில்வந்து சத்தம்போட்டுசொல்லுகி
ன்றார்கள் ஓ ஹாத்திமே நீ உயிர்தப்பி பிழைத்திருப்பாயாகில் உத்த
ரவு கொடு என்று சொல்ல அப்போது ஹாத்திம் சொல்லுகின்றார்
ஆண்டவன் கிருபையால்நான்இதுவரையிலும்உயிர்தப்பிக்கொண்டுஹ
யாத்தாக இருக்கின்றேனென்றுசொல்லிபின்புஅவர்கள்சொல்லுகின்
றார்நாம்கிணற்றில்கையைநீட்டுகிறோம்நீ அக்கையைபிடித்துக்கொண்
டுமேலேயேறிவரவேண்டுமென்றுசொல்லஅதுபோலஅவர்கையை நீ
ட்டஅதைப்பிடித்துக்கொண்டு மேலேயேறிவந்து அவர்களைக் கண்டு
சொல்லுகின்றார் இந்த தூரவில் மிகுந்ததிரவிய மிருப்பதால் நீங்கள்



எடுப்பீரானால் அந்தவஸ்துகைக்கு அகப்படுமில்லைநீர் இங்கேயில்லு
ம் நாங்கள் திரும்பிவருகின்றோமென்றுசொல்லிப்போய் கொஞ்சநே
ரம்பொறுத்துவந்து ஒருவர்கிணற்றில் இறங்கினார்ஒருவர்மேலேநின்று
பின்பு உள்ளேயிருந்தகஜானாக்களையெல்லாம் எடுத்துமேலே யெ
றிந்தார் மேலேநிற்கப்பட்டவர் அதெல்லாமெடுத்து பெரியகுப்பலா
கச்சேர்த்து பின்பு இவர்ஹாத்திமுடையவசத்தில் ஒப்பித்துவிட்டுஅ
வர்கள் எந்தபாதையை பிடித்துக்கொண்டுபோய்விட்டார்களோதெ
ரியாது அப்போது ஹாத்திம் அந்தகஜானாவைப்பார்த்து மனதில் எண்
ணிச்சொல்லுகின்றார் இந்தவேளை அந்த (எ) பேர்திருடர்கள் இருப்
பாராகில் இந்தகஜானாக்களையெல்லாம் அவர்கள் வசத்தில்கொடுத்து
விடுவேன் அவர்கள் தரித்திரவானாக இருக்கமாட்டார்கள்வழிப்போக்க
ளைதொந்தரவுசெய்து கொள்ளையடிக்கமாட்டார்களென்று எண்ணி
க்கொண்டு பின்பு அந்த கஜானாவில் உள்ள உயர்ந்தஉடுப்புகளையெடு
த்து உடுத்திக்கொண்டு கொஞ்சம் நகைகட்டுகளும்கொஞ்சபொருள்
களும் எடுத்துக்கொண்டுகள்ளர்களை தேடிக்கொண்டுதிரிந்து ஆண்ட
வனிடமாகதுவாகேட்டுக்கொண்டு ஆண்டவனே அந்தகிழவியைகாண
பிக்கவேண்டுமென்றுசொல்லி நடக்கும்போது அந்தக்கிழவியானவள்
முன்னிருந்ததுபோல வேஷம்போட்டு பிச்சைகேட்டுக்கொண்டு அவ்
விடத்திலிருந்தாள் எவ்விதமானால் நான் மிகுந்த பிசகீன் ஏதா
வது உங்கள் உபில் உள்ளதை கொடுங்களென் றிருக்கையில்ஹாத்
திமென்பவர் அந்தகிழவியைப்பார்த்துமிகுந்த சந்தோஷமடைந்து த
ன்னுடைய அங்காக்காவிலிருக்கின்றஜோபியிலிருந்துகொஞ்சம் அஷ
ரபியையெடுத்து அவள் கையில் கொடுத்துவிட்டுபின்னால் திரும்பிக்
கொண்டுபோகின்றார் அப்போது அந்தகிழவியானவள் வழக்கம்
போல தன்னுடையமகன்களைசத்தமிட்டுக்கூப்பிட்டாள் உடனேசத்த
ங்கேட்டு அந்தயேழுகள்ளர்களும் இடமேலென்று இவ்விடத்தில்வந்து
கேழ்க்க அப்போதுசொன்னாள் ஒருவன் என்கையில் நிறைய அஷர
பியைக் கொடுத்துவிட்டு போகிறானென்று சொன்னவுடனே அவ்
வேழுபேரும் சுருக்காகநடந்து ஹாத்திம் கிட்டேபோய்ச்சேர்ந்து இல
வாலிபனே நீ எங்கேபோகிறாயென்றுகேழ்க்க அப்போது ஹாத்தி
மவர்களை பார்த்துசொல்லுகிறார் ஓ பிரியமாகிய என்னுடையவர்களே
உங்களிடமாக நான் ஒருவார்த்தை கேழ்க்கிறேன் நீங்கள் அதை ஒப்புக்
கொள்வீராகில் நான் அதைச் சொல்லுகிறேன் நல்லதுநீங்களென்ன
சொல்லுகிறீர்களோ சொல்லுமென்றுகேழ்க்க அப்போதுஹாத்திம்

சொல்லுகிறார் இனிமேல்நீங்கள்கொலைபாதகம்செய்யும்படியானதொழில்களைவிட்டுதோபாசெய்துகெட்டதொழிலைவிடுவீராகில் உங்களுக்கிப்போதுஏழுதலைமுறைவரையிலும்யாதொருகுறைவில்லாமல் சாப்பிட்டுவரும்படியாக வேண்டிய கஜானாவும் ரத்தினாதிகளும் நகைகளும் தருகிறேனென்றுசொல்ல அப்போதுஅந்தக்கள்ளர்கள் சொல்லுகிறார்கள் எங்களுடையவயிற்றின்கொடுமையால்நாங்கள்இவ்விதமான ஜுலும்கள் மனிதருக்கு கொடுக்கிறோம்ஆனால் நீங்கள் சொல்லுகிறதுபோல் எங்களுக்கு கிடைக்குமாகில் நாங்கள் அந்த வேலையைச்செய்யபயித்தியக்காரர்களாவென்றும்இன்றைத்தொடர்ந்து எங்களுடைய ஆயிசுள்ளவரையிலும்நாங்கள்விட்டுவிடுகிறோம்ஆண்டவனுக்குராஜியில்லாதவேலையை இனிநாங்கள்செய்யமாட்டோமென்றுசொல்ல அப்போது ஹாத்திம்சொல்லுகிறார்நீங்கள்ஆண்டவன்பக்கந்திரும்பி எனக்கு சத்தியம்பண்ணி கவுல்கொடுப்பீராகில் நான் உங்களுக்கு எப்பேர்ப்பட்ட கஜானாவும் வேண்டிய ரத்னாதிகளும்கணக்கில்லாமல் கொடுப்பேன் நீங்கள் ஐஸ்வரியவானாகிப்போவீர்கள்.

இம்மொழியை அவர்கள்கேட்டுசொல்லுகிறார்கள் நல்லது நீங்கள் அதை முதல் எங்களுக்குகாண்பிக்கவேண்டும்பின்புநாங்கள்தோபாசெய்கின்றோமென்றுசொல்ல ஹாத்திமென்பவர் அவர்கள் கையைப் பிடித்துக்கொண்டு அந்த பாழுங்கிணற்றண்டை கொண்டுவந்து அங்கேயிருந்த கஜானாவை காண்பித்தார் இதையெல்லாம் நீங்களெடுத்துக்கொள்ளுங்கள் என்னுடையசொல்லை நிறைவேற்ற வேண்டியதென்று சொல்ல அப்போது அந்த கஜானாவைப் பார்த்தவுடனே மிகுந்த சந்தோஷத்தை யடைந்து அப்போது சகலரும் கைகட்டிக்கொண்டு சொல்லுகிறார்கள்நீங்கள்என்னசொன்னீர்களோ அதைநாங்கள் செய்கிறோமென்றார்கள் ஹாத்திம் நீங்கள் சகலரும் இவ்விதமாக சத்தியம் செய்யவேண்டியது ஆண்டவன் ஆசர் நாசராகயிருக்கிறான் அபுருபியாக எல்லா இன்சான்களுடைய நடப்பும் செயலும் மனதில் எண்ணப்பட்டதை யெல்லாம் அறியப்பட்டவனாகவிருக்கிறானென்றும் இன்றுதொடர்ந்து நீங்கள்யாதொருவரைதொந்தரவுசெய்யாமலும் திருடாமலும் இருக்கவேண்டியது அப்படிக்கு நீங்கள் திருடுவீர்களானால்ஆண்டவனுடையகஹார்என்றகோபத்தில்அகப்பட்டு பெரும்பாடு படுவீர்களென்று ஹாத்திமானவர் சொல்ல அப்போதக்கள்ளர்களெல்லாம்சத்தியம்பண்ணி திருட்டில் நின்று தோபாசெய்



தார்கள் பின்பு அந்த கஜானாவையெல்லாம் அவர்கள்வசத்தில் ஒப்பித்துவிட்டு அவர்களிடமாய் ஹாத்திம் உத்தரவுபெற்றுக்கொண்டு அவ்விடத்தில் நின்றும் காட்டின்வழியைப்பார்த்துக்கொண்டு நடக்கையில் ஒரு நாயானது நாவைவெளியில் நீட்டிக்கொண்டு மிகுந்த வேகமாக முன்னால் ஓடிவருவதைப்பார்த்து ஹாத்திமென்பவர் எண்ணுகிறார் இவ்விடத்தில் கார்வான்வெளிப்போக்கார் இறங்கியிருக்கிறது போல தோணுதென்றும் இந்த நாயானது அவ்விடத்திலிருந்து ஓடிவ[illegible]கிறதென்றும் எண்ணி ஹாத்திம் அந்தநாயை தம்முடைய மடியிலதாகயெடுத்துக்கொண்டு அந்தநாய்க்காகவேண்டி தண்ணீர் அகப்படாமல் காட்டில் நான்கு பக்கங்களிலும்தேடுகிறவேளையில் தன் மனதிலெண்ணுகிறார் இவ்விடத்தில் ஒரு குளமிருக்குமாகில் இதனுடையதாகம்தீர்க்கலாமென்றுநடக்கையில்முன்னால்ஒருஊர்காணப்பட்டது அந்தஊரைப்பார்த்துக்கொண்டு அதற்குள்ளேபோனார் அப்போது அந்த ஊரில்உள்ளவர்கள்முசாபர்களுக்குகோதுமைரொட்டிகளும் மெதுவானகறிவஸ்துகளும் கொடுத்துக்கொண்டிருந்தார்கள் அப்போது அவ்விதமாக ஹாத்திமுக்கு கொடுத்தார்கள் அதை வாங்கி அந்த நாய்க்குமுன்பாக வைத்தார்அந்த நாயானது வயிறுநிறையத்தின்றது பின்பு ஹாத்திமென்பவர் அந்நாயைப்பார்த்துதன்னுள் எண்ணுகிறார் இந்நாயினுடைய ரூபமும் அழகும் லட்சணமும்மிகுந்த அழகாக இருக்குதென்று மனதிலெண்ணிக்கொண்டிருக்கையில் நாயானது ஆண்டவனுடைய சுக்கூர்செய்துகொண்டுமுன்னாலிருந்தது அப்போது ஹாத்திமென்பவர் மிகுந்த இரக்கமாக அதின்தலையில் கையைக்கொண்டு தடவி ஆண்டவனை மனதிலெண்ணிக் கொண்டு சொல்லுகிறார் இதானது உன்னுடைய குதரத்தாக இருக்கும்பதினெண்ணாயிரம் ஆலத்தையும்படைத்தாய் ஒருவரொருவருடைய ரூபத்தைப்போல் படைக்கவில்லையென்றுசொல்லிதலையைதடவிக்கொண்டிருக்கையில் அந்த நாயினுடைய தலையில்நின்று கெட்டியான ஒரு இரும்பு முளையிருக்கக் கண்டு அதை தன்கையால் பிடுங்கினார் அப்போது அந்த நாயானது வாலிபமுள்ள ரூபமாக ஒரு மனிதன் உருவாகி நின்றான் அப்போது ஹாத்திமும் மிகுந்த ஆச்சரியப்பட்டுச்சொல்லுகிறார்ஓஆண்டவனுடையபந்தாவாகியமனிதனே இதென்ன காரணமென்று கேட்டு முன்னால் நீ நாயினுடைய ரூபத்தாகவிருந்தாய் இப்போது உன்தலையிலிருந்த இரும்பு முளையை பிடுங்கினவுடனே இவ்விதமாக இன்சானுடைய ரூபத்தாய் விட்டாயென்று

ஹாத்திம்கேழ்க்க அந்த ரூபங்கொண்ட மனிதனானவன் என்னுகிறுன் இவர் நமக்குவேண்டிய சகாயஞ்செய்து இருப்பதால்இவருக்கு நம்முடைய சங்கதிகளைக்குறித்து ஒளிக்காமல்சொல்லவேணுமென்கிற எண்ணங்கொண்டு ஹாத்திமுடைய காலில்விழுந்து சொல்லுகிறார் அது எவ்விதமானல்ஐ, பெரிய ஆண்மையும்இரக்கமுமுள்ளபெரியவரே நான் மனிதப்பிறவியாயிருக்கும் உன்னுடைய கிருபையாலும் நீங்கள்செய்தஉபகாரத்தினாலும் என்னுடையநாய்ரூபம்போய்மனிதருடைய ரூபங்கொண்டேனென்றுசொல்ல அது என்ன சங்கதியென் நீ இவ்விதமாக நாய்ரூபமாக எழுந்ததுயென்றுகேழ்க்க அந்தமனிதன் சொல்லுகிறான் கேளுங்களென்விதியை நான் ஒரு சவுதாகருடைய மகனாயிருக்கும் என்னுடையதகப்பன் வேண்டியதினுசுகளும் விதவிதமான வஸ்துகளுமெடுத்துக்கொண்டு சீனதேசத்துக்குப் போயிருந்தார் அந்தவஸ்துக்களை அவ்விடத்தில்விற்று அங்குள்ள தினுசுகளை வாங்கிக் கொண்டு கத்தாவென்ற ஊருக்கு வந்து அவ்விடத்திலும் அந்த சாமான்களை விற்றார் அதில் மிகுந்த லாபங்கிடைத்தது அதனாலெனக்கு வேண்டிய திரவியங்கள் செலவுபண்ணி மிகுந்த பெருமையாகவும் கலியாணஞ்செய்தார்கள்.

பின்பு என்தகப்பன் கொஞ்சநாளிருந்து இறந்து போனார் அந்த ஆஸ்திகள் கைகட்டு முட்டுகள் ரத்தினங்களெல்லாம் என்வசமாக இருந்தது அப்படியிருக்கவிகொஞ்சநாளைக்குள்ளே அந்தஆஸ்த்திகளை விற்றுவிற்று செலவுபண்ணிக் கொண்டு பெண்களுடையமாயைகையில் அகப்பட்டு இராதிகேளிக்கையாக இருந்ததில் அந்த ஆஸ்திகளில் அதிகஞ்செலவாகிப்போய் பின்பு கத்தாவென்றநகரிலுள்ள சகளைவாங்கிக்கொண்டு சீனாவுக்குப் போய் அவ்விடத்தில் அந்த சாக்குகளை விற்று பதில் தினுசுகளையும் வாங்கிக்கொண்டு எங்களுடையவூர்வந்து சேர்ந்தேன் நான்வீட்டு வெளியே வர்த்தகத்துக்குப்போனபின்பு என்னுடைய பெண்சாதியானவள் ஒரு அடிமையென்ற வேலைக்காரனை வைத்துக்கொண் டிருந்தாள் அவளாகப்பட்டவள் சூனியக்காரனிடமாக இரும்பாணியை மந்திரத்தால் உருப்படுத்தி தன்னிடத்தில் வைத்துக்கொண் டிருந்தாள் அப்படி யிருக்கையில்நான் என் பதிவந்து சேர்ந்த பின்பு ஒருநாள் சத்துமாறி நித்திரை செய்துகொண் டிருக்கையில் அவள் அந்தவேளை பார்த்து என்தலையில் இரும்பாணியை அடித்து விட்டாள் உடனே நான் நாயுருவாகிப்



போய் விட்டேன் என்னை அந்த வீட்டிலிருந்து வெளியில் துரத்திவிட்டாள் நான் காதுகளையடித்துதலையைக் கீழேபோட்டுக்கொண்டு கடைவீதிபக்கமாக வந்தேன் அவ்விடத்திலுள்ள நாய்கள்வேறேயிடத்திலுள்ள புதுநாயென்று என்னை குலைத்து கடிக்கவந்ததுகள் அதற்காகப்பயந்து நான் ஓடி எத்தனையோ நாய்கள் பின்றுடர்ந்து துரத்துவதினலேஅதினுடைய பயங்கரத்தால் என்னுடைய பதியைவிட்டு இந்தக்காட்டுக்கு வந்து மூன்றுநாளாகிவிட்டது இந்த காட்டில் பசிதாகத்தால் மிகுந்த வருத்த மடைந்து ஓடிக்கொண்டு நாலு இடங்களிலும் திரிந்திருக்கையில் ஆண்டவன் தன் கிருபையால் தங்களை இவ்விடத்துக்கு அனுப்பினான் நீர் என்னுடைய பசியையும் தாகத்தையும் தீர்த்துஎன்னுயிரையும் காப்பாற்றி என்னையும் மனுஷரூபமாக்கினீரென்றுசொல்லஇச்சொல்லை ஹாத்திம்கேட்டுமிகுந்த மனவருத்த மடைந்து தலையை முழங்காலில் வைத்துக் கவிழ்ந்துகொண்டு பின்பு தலையை உயர்த்திப்பார்த்து கேழ்க்கிறார் ஐ, என்னுடைய பிரியமானதோழனே உன்னுடைய வீடெந்த நகரத்திலிருக்கிறதென்று கேழ்க்க இந்த காட்டுக்கு மூன்றுநாள்பயணதூரமிருக்கின்றது அந்த பதியின்பேர் சூறத்துநகரமென்றுஞ் சொல்லப்படும் அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் அந்தப் பட்டணத்தில் ஹாரிஸ் சவுதாகர் இருக்கிறார் அவனுடைய மகளானவள் (மூன்றுசவால்வைத்திருக்கிறாள்) அந்தப்பெண்ணானவள் என்னையொரு சங்கதிக்காக அனுப்பினாள் நான் அதற்காகப்போயிருந்தேன் அதென்னவென்றால் நானந்தவேலை செய்யவில்லை இன்றையராத்திரிக்கு என்வேலைக்காகும் இந்தசொல் ஹாத்திம்சொல்ல என்னுடைய இடுக்கத்தைத்தீர்த்த என்னுடைய தகப்பனே நீங்கள்சொன்னது சரிதானென்றுசொல்லி நானந்த பட்டணத்தி லுள்ளவன்தானென்று சொல்ல அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் ஐ, என்னுடைய தோழனே நீ அந்த இரும்புமுளையை உன்கையில் பத்திரமாகவைத்துக்கொள்ளுமென்றுசொல்லிஉன்னை அவள்செய்ததற்காகஅவளைபதில்செய்யவேணுமென்கிற எண்ண மிருக்குமாகில் கொஞ்சம்பொறுத்து சமையம்பார்த்து உன் பெண்சாதிதலையில் இந்த முளையை அடித்துவிட்டால் அவள்நாயாகிப்போய்விடுவாளென்றும் இவ்விதமான மொழிகளைப்பேசிக்கொண்டுஇவர்களிருவரும் அக்காட்டைவிட்டுபுறப்பட்டு மூன்றுதினத்தில் அந்தபட்டணம்வந்து சேர்ந்தார்கள் அப்போது அந்தமனிதன் ஹாத்திமையக்கூட அழைத்துக்கொண்டு தங்கள்வீட்டு நடையில் வட்டார

வைத்து தன்வீட்டுக்குப் போனான் அப்போது தன்னுடையவேலைக்
காரர்களும் அடிமையானவர்களும் தம்முடைய எஜமானைப்பார்த்தவு
டனே கண்ணீர்விட்டுக்காலில்விழுந்துபுரண்டழுதார்கள் தன்னுடை
யபெண்சாதியானவள் தன்னுடைய சப்பிரமஞ்சத்தின்மேலே ஒரு
வேலைக்காரனோடு கட்டி யணைத்துக்கொண்டு சுத்துமாறி இருவரும்
குறட்டைவிட்டுக்கொண்டுநித்திரைபோகிறதைப்பார்த்துதன்னுடை
யகத்தியை உறையில் நின்றும் உருவி அந்தவேலைக்காரனுடையகழுத்
தை யறுத்துவிட்டு தன்னுடைய பெண்சாதியின்நாசியில் அந்தமூலி
யை வைத்து ஓரே அடியில் இருக்கிவிட்டான் பின்பு அவள்நாயாகி
ப்போய்விட்டாள் அப்போது அந்தநாயை கயிற்றினால்கட்டிவெளியி
ல்வந்தான் பின்பு ஹாத்திமுடைய கையைப் பிடித்துக்கொண்டு உள்
ளே அழைத்துக்கொண்டுபோய் அவ்விடத்தில் உயர்ந்தபட்டு போ
ர் வையான விரிப்புவிரித்து அதின்மேல் உட்காரவைத்து அந்
தநாயைக் காண்பித்தான் இவளென்ன மந்திரத்தால் நாயாக்கி
மக்கற்செய்த மூதேவி இவளாகயிருக்குமென்று காண்பித்தான் இந்
தபுழுக்கையான அபுசி நம்மக்கு அருமையாகயிருக்கும் இவன்தான் இ
வள்கூட சேர்ந்தவனாக இருப்பானென்று இவ்விதமான சங்கதிகளை
ஹாத்திம்பார்த்து மிகுந்த ஆச்சரியமடைந்து சொல்லுகிறார் ஓ,என்
தோழனே நீ அவனையேன் உயிர்வதைசெய்தா என்றுகேழ்க்க இது
அவன்செய்த குற்றத்துக்குதகுந்ததண்டனையாயிருக்கும் அவன்செய்
தது அவன்தலையில்வந்து சேரிட்டதென்றும் நான்செய்தபயத்தால் இ
னியாதாமொருவரும் இவ்விதமானவேலை செய்யமாட்டார் இந்தஅது
வலை செய்யப்பட்டவர்களும் அதைவிட்டு விலகிப்போவார்கள் நானி
ந்தவேலை எவருக்கும்அச்சம்வரும்படிக்கு செய்திருக்கிறேனென்று
சொல்லி அவனைதன்னுடைய கொல்லையில் குழிவெட்டி புதைத்துப்
போட்டான்.

பின்னும் தன்னுடைய பாந்திகுலாமுகளுக்குவேண்டியவெகும
திகள்கொடுத்து சந்தோஷப்படுத்திநாயைவெளியில்துரத்திவிட்டு அ
ன்றைய இரவெல்லாம் ஹாத்திமுக்குவிருந்துசெய்துவேண்டிய சந்
தோஷப்படுத்தினான் அதில்மிகுந்தசந்தோஷத்தையடைந்துவெகுசவு
க்கியமாகஅன்றிரவெல்லாம்அவ்விடத்திலிருந்துபொழுதுவிடிந்த பி
ன்பு ஹாத்திம்அவனிடமாகஉத்தரவுபெற்றுக்கொண்டுகாறுவான்சறு
வில்இருக்கின்றசவுதாகருடைய மகனிடமாகவந்துகேழ்க்கின்றார் நீர்



என்னசெய்திதீரென்றுகேழ்க்கஅப்போதுசவுதாகருடையமகன்சொ
ல்லுகின்றான் தங்களுடைய ஹயாத்தும்திரேகமுடையசவுக்கியத்தை
யுங்குறித்துஆண்டவனிடமாகதுவாகேட்டுக்கொண்டிருக்கிறேன் மு
ன்றால் சுத்தம்வந்துகொண்டிருக்குதேநீங்கள்புறப்பட்டுப்போனபின்
பு அச்சுத்தமானது நின்றுபோயிருக்கின்றதுஅதற்காகஆரிஸ்சவுதாக
ருடைய மகன் நீங்கள் வருகின்றவழியைப் பார்த்துக் கொண்டிருக்கி
றான் அப்போதுஹாத்திமென்பவர் சொன்னார் அதற்குச்சந்தேகமில்
லைஆண்டவன் கிருபையால் அந்தசேதியை அறிந்துகொண்டு வந்தி
ருக்கின்றேன் என்றுசொல்லி விட்டுஆரிசுடையமகன் வீட்டுவாசற்ப
டியினருகிற்போய் நிற்க அப்போது வாசல் காக்கின்ற சேவகான்
ஹாத்திம்வந்த சங்கதியைப்போய் தெரிவித்தார்கள் அப்போது வீட்
டுக்குள் சர்க்காரில்பார்த்தபோடச்சொல்லிதான் உள்ளேயிருந்துகொ
ண்டு தன்னுடைய மனிதரிடமாய் அவரை யழைத்துக் கொண்டு
வரும்படியாய் சொல்ல அதுபோல ஹாத்திமையழைத்துக்கொண்டு
வர அப்போதுபர்தாவின்கிட்டே ஹாத்திம்வந்துநின்றார் அவருக்குஒ
ருநாற்காலிகொண்டுவந்து போடச்சொல்லிஅதிலிருக்கும்படிக்குஉத்
தரவு செய்துபின்பு எனதுடைய வர்த்தமானத்தைக்கேட்டான்அப்
போதுநான் இவ்விடம்விட்டு புறப்பட்டபின் நடந்தவர்த்தமான மு
ழுதும் ஆதிமுதல் அந்தவரையில் நடந்தசெய்திகளையும் தன்பேரில்
வந்ததுன்பங்களையும் தான்பார்த்த ஆச்சரியங்களையும்சவிஸ்தாரமாக
த்தெரிவித்தார் அதற்குப்பின்பு சொல்லுகின்றான் ஓ வாலிபமானவரே
நீர்சொன்னதெல்லாம் சரியாயிருக்கின்றதுமுழுவந்தசத்தம் இப்போ
துவருகிறதில்லையென்றுஞ்சொல்லி இப்போதுசருக்காகப்போய் மா
ஹேறுப்பரி பாத்துஷாவுடைய மோருவைக்கொண்டு வாவென்
றான் அப்போது ஹாத்திம் அவனுடைய உத்தரவுபெற்றுக் கொண்
டு அந்தசவுதாகருடைய மகனிடமாகப்போய் அவனிடம் சொல்லுகி
ன்றார் நீயாதொன்றுக்கும் யோசிக்க வேண்டியதில்லை இப்போது
நான் மாஹேறுப்பரி பாத்துஷாவுடைய மோருவை வாங்கிக்
கொண்டு வரப்போகிறேன் ஆனால் அவனுடைய மூன்று சவால்
களையும் தெரியப்படுத்தி பின்பு உன்னுடைய மாருக்கென்ற பெ
ண்ணோடுசேர்த்துவைக்கிறேனென்று இம்மொழியைசொன்னபின்பு
அவனிடமாக உத்தரவுபெற்றுக்கொண்டு அவ்விடத்திலின்று புறப்
பட்டு கொஞ்சதூரம் காடுவனாந்திரத்திற்போய் மிகுந்த இளைப்புபசி
தாகத்துடனே ஒரு மரத்தின் கீழ்போயிருந்து மிகுந்த விசனத்தை

யடைந்துகொண்டு என்னுகின்றார் எவ்விதமானால் நமஇப்போது
நலமாவதற்கு தேவுகளுடையபாத்துஷாவினிடம்போய் கண்டு அவ
ரால் மாஹெருப்பரிபாத்துஷாவுடையவீட்டுக்குப்போகலாம்அவர்
சரியாகஅவன் வீட்டைகாண்பிப்பாரென்றுமனதிலெண்ணிக் கொண்
டுமுன்னிறங்கிய காடென்றதுரவில்இறங்கினர்.

பின்பு கொஞ்சநாளைக்குமுன்புபோனகாடுவனாந்திரம்தோற்றிய
துஅவ்விடத்துக்குநடந்து போய்பார்த்துமுன்போன, ஊரில்போய்ச்
சேர அவ்விடத்திலுள்ளதேவுகள் நாலு பக்கங்களிலு மிருந்துவந்து
பார்த்து ஹாத்திமை அவர்களறிந்து தங்கள் ஊருக்கு அழைத்
துக் கொண்டு போய் மஸனதென்ற பீடத்தி லிருத்தி விதவித
மான பதார்த்தங்களால் விருந்தளித்தார்கள் அவ்விதமாக அவ்வி
டத்திலுள்ளவர்கள் தங்கள் தங்கள் ஊருக்கு அழைத்துக் கொண்
டு போய் விருந்துகள் செய்துக் கொண்டுபோய் விடுவார்கள் இவ்வி
தமாக ஊர்கள் தோறும் விருந்துகள் செய்துக்கொண்டு கடசியில்
புர்துகாஷ் உடைய அரண்மனைவாயில்கொண்டுபோய்ச்சேர்த்தார்
கள் பின்பு அந்தபாத்துஷாவானவர் எதிர்வந்து அழைத்துக்கொண்
போய் தம்முடைய சிம்மாசனத்தில் உட்காரவைத்து மிகுந்த மரியா
திகளெல்லாஞ்செய்து கலியாணஞ்செய்கின்றகோலமாக தன்னுடை
ய மந்திரிபிரதானிகள்மற்றுமுண்டாகிய சனங்களையெல்லாஞ்சேர்த்
துபெரிய கூட்டமாகவைத்துக்கொண்டு ஹாத்திமைகேட்டார் இப்
போது நீர் இவ்விடம்வந்த விபர மென்னவென்றுகேழ்க்க அப்போ
து ஹாத்திம்சொல்லுகின்றார் ஓபாத்துஷாவானவரேமாஹெருப்பரி
பாத்துஷாவுடைய இடமாகயிருக்கின்றமோருவைவாங்கப் போறே
னென்றுசொல்லஅப்போதுபாத்துஷாசொல்லுகின்றார்ஓஹாத்திமே
அவனிடமாக யிருக்கின்றமோருவைவாங்களவராலும்கூடாதுசனங்
களுடையதாகத்துமில்லை அவனிடமாகப்போகவும்பின்னுமவ்விடம்
போனால்சலாமத்தாகதிரும்பிவருகின்றதுமில்லைமிகுந்தகடினமாக இ
ருக்கின்றதுபின்புஅவன்சமர்கந்தாவென்றஇடத்திலிருக்கிறான் அப்
போது ஹாத்திம்சொல்லுகிறார் அதினால் நீங்கள் யோசிக்கவேண்டி
யதில்லை என்னை இதுவரையில் கொண்டுவந்துசேர்த்த ஆண்டவன்
அவனிடமாகவும் கொண்டுபோய்ச் சேர்ப்பான் ஆனால்தாங்களுதவி
செய்யவேண்டியது எனக்கு வழிகாண்பிக்கும்படிக்கு தங்களுடைய
மனிதனையென்னோடனுப்பவேண்டியதென்றுகேழ்க்க அப்போது



புர்துகாஷ் என்னும் பாத்துஷாசொல்லுகிறார் ஓ, என்னுடையதோ
ழனே நீர் இந்தச்சொல்லை விட்டுவிடு நீ சொல்லுகிறவேலை நலமல்ல
வென்றுசொல்லஅப்போதுஹாத்திம்சொல்லுகிறார்ஓ,பாத்துஷாவே
நீங்கள் சொல்லுகிறது என்றால்கூடாது எவ்விதமானால் இவ்விதமா
க ஒரு பெண்பேரில் இச்சைகொண்டு பாதி உயிர் இழந்தவனாக ஒரு
வனிருக்கிறான் அவனுக்கு நான் நம்பிக்கை கொடுத்துவந்திருக்கிறே
ன் அவன் நான்வருகிறவழியைப் பார்த்துக்கொண் டிருப்பான் நான்
அவனுக்கு சொன்னசொல் நிறைவேற்றாமற் போனால் வீணாக அவ
னிறந்துபோவான் அந்தப்பழி என்தலையில்சுமரும் நான்என்னுடைய
சவுக்கியத்தையும் உயிரையும் பாராட்டிக்கொண் டிருப்பேனானால்
நாளைக்கு ஆண்டவனுக்கெவ்விதமாக முகத்தைக்காட்டுவேனென்று
சொல்ல புர்துகாஷ் என்னும்பாத்துஷா அதற்கு ஒன்றுஞ்சொல்லா
மல் ஹாத்திம் கூட சில தேவுகளைக் கூட்டி அத்தேவுகளுக்குச் சொ
ல்லுகிறார்இவரைநீங்கள்மாஹெருப்பரி பாத்துஷாவினுடைய எல்
லையில்கொண்டுபோய்விட்டு நீங்கள்ஹாத்திம்வருமளவும்அங்கேயி
ருக்க வேண்டியதென்று உத்தரவுகொடுத்து சிறிதுதேவுகளைகூட அ
னுப்பினர் அப்போது ஹாத்திம் உத்தரவு பெற்றுக்கொண்டு தேவுக
ளையும் கூட்டிக்கொண்டு ஒருமாசஞ்சென்றபின்புமாஹெருப்பரி
பாத்துஷா வுடையஎல்லையில் போய் சேர்ந்தார்கள்.

அப்போது கூடப்போனதேவுகள் ஹாத்திமிடமாகச் சொல்லு
கிறார்கள் இந்தமலையிலிருந்து அவர்களுடையஎல்லைஅதிகாரமாயிரு
க்கும் இனிமேல்தங்களோடுவரஎங்களால் கூடாது முன்னால் நடக்க
அவர்களுடையஎல்லைக்குப்போனவர்கள்உயிரோடே இவ்விடம்வரு
வதுமில்லைஉயிரோடவர்களைவிடுவதுமில்லைஆனால் ஒருவேளை அங்கி
ருந்தால்எப்படியோ தெரியாதென்றுசொல்ல ஹாத்திம் அவர்களிட
மாக உத்தரவுபெற்றுக்கொண்டு அவர்களுடைய அதிகாரத்திலிருக்
கிற இடத்துக்குப்போனார் பின்புகொஞ்சநாள் நடந்துபோகிறவேளை
யில் எதிரில் ஒருமலை தோணப்பட்டது எப்பேர்ப்பட்ட மலையானால்
வானத்தைத்தொட்டு உலாவிக்கொண்டு அதோடு பேசியிருக்கிறது
போல் தோண பின்பு அந்தமலையில் மரங்கள் பலபல கிளைகளான
நல்லநல்ல விருட்சங்களும் கனிவர்க்கங்களு மதின்மேல்மிகுதமாகஇ
ருக்கும்படியாகத்தோற்றியது அப்போது அதைப்பார்க்க நடந்துபோ
கிறார்அப்போது அந்தமலையி னருகாமையில்போக அவ்விடத்தில்

நாலுபக்கங்களிலுமிருந்து பரிசாதிகள்வந்து சூழ்ந்துகொண்டு சொ
ல்லுகிறது இவன் மனிதனாகயிருக்கிறான் இவனை உயிரோடே நாம்
விடக்கூடாது ஆனாலிவன் இந்த மலையின்மேலேறவந்திருப்பவனைப்
போல்தோற்றுகிறது அப்படியிருக்கையில் மலையிலிருந்துகிறிதுபரிக
ள்வந்திறங்கி ஹாத்திமுடைய கையைப் பிடித்துக்கொண்டு மேலே
போனார்கள் போனவுடனேதோகுஜஞ்சியென்றவிடத்துக்குப்போட்டார்க
ள்அதுகால்கைகழுத்துக்கு ஒன்றாகப்போகிற்சங்கிலியால்அப்பேர்ப்
பட்டவிலங்கு போட்டு ஹாத்திமைகேட்கிறார்களேநீ யாராகுருள்ளவ
ன் என்னத்துக்காகஇவ்விடம் வந்தாய்உன்னையிவ்விடம்கொண்டுவந்
துவிட்டவர்கள் யார் நீமெய்யாகச்சொல்லென்றுகேழ்க்க அப்போது
ஹாத்திம் சொல்லுகிறார் என்னை இவ்விடம் கொண்டுவந்துவிட்டது
ஆண்டவனாகயிருக்கும் ஷாதேருமந்தென்ற நகரத்திலிருந்து வந்திரு
க்கிறேன் இம்மொழியைக் கேட்டவுடனே சொல்லுகிறார் இவன் மா
ஹெரிருப்பரிபாத்துஷாவுடைய ஷாஹேந்மாரானைவரால்வந்திருக்
கிறார் எப்படியானால் மெய்யானதுபொய்யாவென்று ஹாத்திமைக்கே
ழ்க்க அப்போதுதன்மனதி லெண்ணுகிறார் நல்லது நான் நிசத்தைச்
சொன்னால் நம்மைஇவர்கள் உயிரோடே விடமாட்டார்கள் அல்லது
பொய்சொன்னால்அப்போதுபொய்யாகிவிடுகிறேன் ஆனால் இப்போது
யாதொன்றும் சொல்லாமலிருந்தால் நலமென்றெண்ணி மௌனமே
ஷமெடுத்துக் கொண்டார் அவர்களுக்கு யாதொருஜவாபுஞ் சொல்
லவில்லை அப்போது பரிகளானவர்கள் தாங்கள் தானே யோசனைப
ண்ணிக் கொண்டார்கள் இவனை நெருப்பில் போடவேண்டியதென்
று எவ்வளவோ சமதிக்குகள் கொண்டுவந்துபோட்டு நெருப்புவா
னத்தையளாவிக்கொண்டிருக்க அவரைக்கொண்டுவரச்சொல்லி அந்
தநெருப்பில் போட்டுவிட்டு அவன் வெந்துபோனானென்று பரிகள்
போய் விட அந்த நெருப்பில் மூன்றுநாள் வரையிலிருந்து வெளிப்ப
டுகையில் அவனுடைய உடுப்பில் ஒருஇழையாவது வேகவில்லை அ
வ்விடத்திலிருந்து போகையில் பரிசாதிகள்நாலுபக்கங்களிலுமிருந்
துவந்து ஹாத்திமைசூழ்ந்துகொண்டு கேட்கிறார்கள்.

ஓ, மனிதனே உன்னுடைய ரூபம்போல் ஒருமனிதன்(சு) நாளை
க்கு முன்னால் இவ்விடம்வந்திருந்தான் அவனைநாங்கள் நெருப்பில்
போட்டுஎரித்துக்கரியும்சாம்பலாக்கிவிட்டோம் இப்போது நீவந்தி
ருக்கின்றாய் அவனைப்போல நானுமென்றது நீ அவன் தானே நிசத



தைச்சொல்லுமென்று கேழ்க்க அப்போது ஹாத்திம் சொல்லுகின்றா
ர் ஓ, விவேகமற்ற பரிசாத்துகளே நெருப்பில்போட்டெரித்துபோன
வன் திரும்பியப்படிஉயிர்தப்பிவருவானென்றுஞ்சொல்ல பின்பு ஹா
த்திமையொரு பெரியகல்லின் கீழேபோட்டு மேலொருபெரியபாரமான
கல்லைவைத்து அமிழ்த்திவிட்டு மூன்றுநாள்சென்றநாலாநாள்ஹாத்
திம் உயிரோடே யிருப்பதைப் பார்த்து வெளியிலிழுத்து ஒருகா
லைப்பிடித்து இரண்டு மூன்று சுத்துசுற்றி எறியபதினெட்டுகோசு
தூரமாகதவழ்ந்துவெள்ளசமுத்திரத்தில் போய்விழுந்தார் அப்போது
ஒருகாவென்றமுதலையானதுஹாத்திமைவிழுங்கிவிட்டது அப்போ
து அவர் தன்னையறியாமல் கத்துமறந்திருந்து பின்பு உணர்வுவந்து
கண்ணைத்திறந்து பார்த்துச்சொல்லுகிறார் நான் எங்கேயிருந்தேன்
இப்போது எங்கேவந்திருக்கிறேனென்று மிகுந்த வருத்தமடைந்து
பயந்து அச்சப்பட்டு நான்குபக்கமும் ஓடிசால் குடல்களையும் பிதி
த்துக்கொண்டு இப்போது அந்த முதலையின் வயிற்றிலிருந்த
நோய்போலவும் செரிக்காமலும் காணப்பட்டு பயந்து அதிலே
இருண்ணீரை விட்டுக் கரையோரமாகவந்து வாந்திசெய்துகொண்டி
ருக்கின்றவேளையில் அதிலிருந்தும் ஹாத்திமைவெளியில் கக்கிவிட்
டது அப்போது முதலைவாயில் நின்று வெளிப்பட்டு அவ்விடத்தி
லிருந்த பிலயீனமாகப்பசியும் தாகத்தினால் தடுமாறிஞாபகத்தை
ப்பார்த்துக்கொண்டு போகிறவேளையில் நடக்கக்கூடாமையால் நில
த்தில் விழுந்து நாலுதிக்கிலும் பார்த்துக்கொண்டு கிடக்கையில்
அப்போது ஒரு பரிசாத்துடைய கூட்டம்வந்து ஹாத்திம்கிடப்ப
தைப்பார்த்து தாங்கள் அப்போதுசொல்லுகிறார்கள் இந்த ஹாதம்
ஜாத்தான மனிதன் இவன்யாராக இருக்கும் இவ்விடம்சுவிதமாகவந்
திருக்கிறார் இவனை யிங்கே யார்கொண்டு வந்து விட்டிருப்பார்கள்
என்றும் பேசிக்கொண்டு அதில் ஒருவன் அருகாமையில் வந்துஹா
த்திமைகேட்கிறான் ஓ, மனிதனே உன்னை இவ்விடம் யார்கொண்
டுவந்து விட்டார்கள் சுருக்காச் சொல்லென்றும் அவரைக் கா
ட்டென்றும் கேழ்க்கும்போது ஹாத்திம் ஜவாபுசொல்லுகிறார் என்
னை இவ்விடம் கொண்டுவந்து விட்டவன் துனியாவையும் உன்னை
யுமென்னையும்உண்டாக்கிய ஆண்டவனிருக்கையுள்ளவன் தானென்று
சொல்லியென்னைசமுத்திரத்திலுள்ள முதலைவயிற்றில்நின்றுவெளி
ப்படுத்தி இவ்விடம் கொண்டுவந்துசேர்த்திருக்கிறான் உனக்கிந்த அ
ண்டவன்கொடுத்திருந்தால்இப்போதுஎன்பரிதாபகதிர எனைக்காய

து ஒசிவனங்கொடுத்தால் நலமென்றுசொல்ல அம்மொழியைக்கே
ட்டுஉனக்குநாங்கள்பசிதாகம் தீர்க்கஎவ்விதமாகக்கொடுப்போம்எங்
களுடையபாத்துஷாவுடைய உத்தரவுயாதொருமனிதர்களைக்கண்டவு
டனேஉயிர்வதைசெய்யும்படியாகஇருக்கிறதுஇப்போதுஉன்னைநாங்க
ள்உயிர்வதைசெய்யாமல்நாங்கள்உனக்கு அன்னஆங்காரங்கொடுத்து
பசியாற்றினல் அச்சேதியையெங்கள்பாத்துஷாவுக்குதெரியுமாகில் அ
வருடைய ஆக்கினைக்குட்பட்டுகுற்றவாளியாகிஅவரிட்டதெண்டனை
க்குள் பட வேண்டியதென்று சொல்ல அப்போதவர்களில் நின்று
ஒருவன் சொல்லுகிறான் ஓ, தோழன்மார்களேநீங்கள்ஆண்டவனுடை
ய அச்சத்தைக்கொண்டுபயப்படுங்கள்நல்லது நம்முடையபாத்துஷா
எங்கேயிருக்கிறார் நாம் எங்கே இருக்கிறோம் நீங்கள் சொல்லுகிற
மொழிகள் நலமல்லஎவ்விதமானால்இந்தமனிதன்தானாக இவ்விடம்வ
ரவில்லைஆண்டவனுடையகிருபையால்முதலையானதுவிழுங்கிஎங்கே
யிருந்தோஇவ்விடத்தில்கொண்டுவந்துவிட்டிருக்கிறதுஅவனுடைய ஆ
யுசு இன்னம் கொஞ்சநாள் லோகத்திலிருக்கும்படி யிருந்தபடியா
ல் முதலையின்வயிற்றில்நின்று வெளிப்பட்டிருக்கிறான்மனிதர்களா
னவர்கள் நம்மில்நின்று மிகுந்தபெருமையும் மேன்மையுமாக ஆண்
டவன் அவர்களை உண்டாக்கியிருக்கிறான்ஆகையால்நமக்குநன்மைகி
டைக்கும்படியாய் இந்தமனிதனைநமதுவீட்டுக்குள்கொண்டுபோய்கா
ப்பாற்ற வேண்டியதென்று சொல்ல பின்புஅவர்கள்சொல்லுகிறார்க
ள் நல்லது நீ சொன்னதுபோல்நாம் அந்தமனிதனுக்கு அன்னங்கொ
டுத்து ஒத்தாசைசெய்கிறதை நம்முடைய பாத்துஷா கேள்விப்பட்
டால் நம்மை என்னசெய்வார் நம்முடைய உயிர்களெல்லாம் வீணாக
இழக்கும்படிக்கு வந்துநேரிடுமென்று சொன்னசொல்லை ஹாத்திம்
கேள்விப்பட்டுச் சொல்லுகிறார்.

ஓ, என்னுடைய தோழன்மார்களே என்னால் உங்களுடையஉயி
ரைவீணாக இழக்கவேண்டியதில்லை என்னை நீங்கள் உயிர்வதைசெய்
துவிட்டால் உங்களுக்கு நலமாகும் ஒரு குற்றமும்வரமாட்டாதென்
று ஹாத்திம் சொன்னவுடனே இந்த மொழியைக்கேட்டு சகலரும்
யோசனை பண்ணுகிறார் எவ்விதமானால் இவ்விடத்தில்நின்று ஏழு
நாள் பயணத்தில் நம்முடைய பாத்துஷாயிருக்கிறார் நம்மையட
ல்லாமல்பின்னை இவ்விடத்தில் யாரிருக்கிறார் நம்முடையபாத்து
ஷாவுக்கு இச்சங்கதியை தெரிவிக்கவேண்டிய தென்று யோசனைப



ண்ணி சகலரும் ஒத்துக்கொண்டு ஹாத்திமென்பவரை தங்கள்வீட்
டுக்கு அழைத்துக்கொண்டு போய் பின்பு பலபல விதமானக
னிகளும் பலபலவிதமான ஒசிவனங்களும் அவர்முன்பாகக்கொண்டு
வந்து வைத்தார்கள் அப்போது ஹாத்திமானவர் ஆண்டவனைப்புகழ்
ந்து போற்றி தன்பசியாறும்படிக்கு அந்தவஸ்துக்களை தின்றுதண்ணீ
ர் குடித்து இளைப்பாறி சந்தோஷ மடைந்திருக்கையில் அப்போது
பரிசாதிகூட்டங்கள் ஹாத்திமைசூழ்ந்துஅவருடையஅழகும்வடிவும்
பார்த்து சிலநாள் அப்படியிருக்கையில்ஹாத்திமென்பவர் அவர்களைப்
பார்த்து சொல்லுகிறார் என்னுடைய தோழமார்களேநான்போக எ
னக்கு உத்தரவுகொடுங்க ளென்றுகேட்டு நான் எந்தவேலைக்காகவந்
திருக்கிறேன் அந்த வேலையை நிறைவேற்றுங்கள் அதற்காக நல்
லது நீவந்தகாரியம் என்னவென்று கேட்டு உன்னையிவ்விடம் யார்
கொண்டுவந்து விட்டார்களென்று கேட்க்க அப்போது ஹாத்திம்
சொல்லுகிறார் புர்துகாஷ் என்னும் பாத்துஷாவுடைய மனிதனாகிய
நீங்கள் மாஹேரூப் பரிபாத்துஷாவுடைய எல்லையில்கொண்டு
வந்து விட்டார்கள் பின்பு அவ்விடத்தில் நின்றும் வருகின்ற பாதை
யில் உங்களுடைய பிறவிகளாகிய கூட்டத்தார்கள் என்னை மூன்று
நாள்வரையில் நெருப்பில் போட்டு எரித்தார்கள்.

பின்பு அதில் நின்றும் ஆண்டவன் என்னைக் காப்பாற்றிக்கொ
ண்டார் (ரு) (ள) நாள் சென்றபின்பு அவ்விடம் விட்டுவெளியில்வ
ரும்போது என்னைப்பிடித்துஒருபெரியகல்லின்கீழேவைத்துகல்லைக்
கொண்டுமூடிமூன்றுநாள்வைத்தார்கள் நான் உயிர்தப்பியிருக்கஅவர்
கள்என்னையெடுத்துஎன்காலைப்பிடித்துசுற்றியெறிந்தார்கள்நான்சமு
த்திரத்தில்வந்துவிழுந்தேன் அப்போதுஒருபெரியமுதலையானதுஎன்
னை விழுங்கிவிட்டது அப்போது அதுசெரியாமல்மிகுந்தவருத்தமடை
ந்து என்னைக்கரையில்கொண்டுவந்துவாந்திபண்ணிவிட்டுப் போய்வி
ட்டது அப்படியிருக்க உங்களுடையபிலாகத்து எனக்கு ஆனது
அப்போது தங்களுடைய உதவிஒத்தாசையால் என்னைத் தங்கள்வீ
ட்டுக்குகொண்டுவந்து எனக்குவேண்டியவஸ்துகள் கொடுத்துரட்சி
த்துகாப்பாற்றினீர்கள் இந்தமொழிகளைக்கேட்டு அவர் சொல்லுகிறா
ர்கள் ஓ, வாலிபமுள்ள அழகனே இவ்விதமானவேலையெப்போப்பட்
டதாக இருக்குமென்று கேழ்க்க அதற்காக நீ யிவ்வளவு வருத்தமு
ம் சங்கடமுமெடுத்துக்கொண்டாய் என்றுகேழ்க்க அப்போது ஹாத

திம்சொல்லுகின்றார் மாஹேரேருப்பரிபாத்துஷாவினிடமாக கொண்டு போகவேண்டியிருக்கின்றது என்றுசொல்ல அவர்கள் கேட்டு சொல்லுகின்றார் ஓ அறிவில்லாதமோடாந்தரமானவனே நீ மாஹேரேருப்பரிபாத்துஷாவுடைய பேரையெடுக்காதே நாங்கள்சகலபேரும்அவருடையசேவகாளாயிருக்கும்அந்த பாத்துஷாவுடைய எல்கை வரையிலும் இவ்விதமாக பாரா சவுக்கிகள் வைத்திருக்கின்றார்கள் அவருடைய உத்தரவு எவ்விதமானால் இவ்விடத்துக்கு தேவரும் மனிதர்களும் வரக் கூடாது என்று இருக்க நீ யெங்களிடமாக யிருக்கின்றதை எங்கள் பாத்துஷா அறிவாராகில் எங்களையும் உன்னையும் ஒரு போதிலும் உயிர் தப்பி யிருக்கும்படிக்கி விடமாட்டார்கள் என்று சொல்ல ஹாத்திம்சொல்லுகின்றார் ஓ என்னுடையதோழர்களே என்னுடையஆயிசு நீடித்திருக்குமாகில் என்னையொருவரும் உயிர்வதை செய்ய மாட்டார்கள் ஆனால் இவ்விதமாக நீங்கள் அச்சமடைவதால் என்னைக் கட்டிக்கொண்டு உங்களுடையபாத்துஷாவின்முன்பாகக் கொண்டு போய்விடுவீர்களாகில் ஆண்டவன்வேண்டிய படிசெய்வான் அப்போது அவர்கள் சொல்லுகிறார்கள்எங்களால் அவ்விதம்செய்யக்கூடாதுநாங்கள்உன்னைகாப்பாற்றிகெரிக்கிருந்தும்நாங்கள்அவரிடமாகஉன்னைஉயிர்வதைசெய்ய ஒப்பிக்க மாட்டோமென்று சொல்ல ஹாத்திம்சொல்லுகின்றார் என் உயிருக்காகநீங்கள்வருத்தப்படவேண்டியதில்லைஎன்னையெவ்விதத்திலும் மாஹேரேருப்பரிபாத்துஷாவின்சமுகத்தில் கொண்டுபோய விடுங்கள்அவர்என்னையென்னசெய்ய வேண்டுமோஅதுசெய்யட்டுமென்றுசொல்ல அச்சொல்லைகேட்டு மிகுந்தமனவருத்தமடைந்து பின்பு தாங்கள் தானேயோசனை பண்ணுகிறார்கள் ஆனால் நாமிவனை யிவ்விடத்தில் வைத்துக்கொண் டிருப்பதைக்குறித்து பாத்துஷாவுக்கு தெரியும்படி ஒரு அர்ஜி யெழுதி அனுப்பவேண்டியது அதற்காக பாத்துஷாவின்உத்தரவுபோல நாம் நடக்கவேண்டிய தென்றுயோசனைசெய்து ஒரு அர்ஜி தயார் செய்கின்றார்

அதின்விபர மெவ்விதமானால் எங்களையும் எங்கள் தேசத்தார்களையும் இடுக்கமில்லாமல் இரட்சிக்கும் படியான பாத்துஷாவே ஒரு மனிதனானவன் இந்தச முத்திரமாகிய கலசமீது இருந்து கனாவழியாக வந்து கொண்டிருந்தவனை நாங்கள் பிடித்து கைது செய்து வைத் திருக்கின்றோம் தங்களுடைய உத்தரவானால் நாங்கள் தங்கள் சமுகத்துக்கு கைது செய்து அனுப்புகிறோமென்று இவ்விதமாக அர்ஜி தயார்செய்து ஒருவனிடமாகக் கொடுத்து அனுப்பினார்கள் அவன் அவ்விடம்விட்டு புறப்பட்டு ஒருவாரத்தில் அங்கே போய்பாத்துஷாவின் அரண்மனைக்குப் போய்ச்சேர்ந்து உசூரிலிருக்கும்படியான அறஷ்பேக்கு என்பவனிடமாகத்தெரிவித்தான் அது போலவன் அந்தசங்கதியை பாத்துஷாவுக்குத் தெரிவித்தான் எவ்விதமானால் சமுத்திரமென்ற கலசத்திலிருக்கும் சவுக்கிதார்களிலிருந்து ஒரு பரியானவன் இவ்விடம் சர்தாரினுடைய அர்ஜிகொண்டுவந்து ஆஜராகி யிருக்கிறான் அவனுக்கு என்ன உத்தரவென்றுகேட்க அவனை அழைத்துக்கொண்டு வரும்படிக்கு உத்தரவாச்சுது அதுபோலவனைக்கொண்டுவந்து விட்டார்கள் அவன்மிகுந்தவணக்கத்துடனே கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு சலாம் பந்தகி செய்து அர்ஜியை கொடுத்து சங்கதியை யறிவித்தான் ஷாஹேரேருப்பரி பாத்துஷாவும் அந்த அர்ஜியை வாங்கிப்பார்த்துபடித்துக்கொண்டுஉத்தரவு உடனே செய்தார் அந்த மனிதனை வெகுஜாக்கிரதையாக நம்முடைய உசூரில் கொண்டு வரும் படிக்கு காக்கிதமெழுதி அவனிடமாகக் கொடுத்தனுப்பிக்க பின்னர் அவன் அவ்விடம்விட்டு புறப்பட்டு தம்முடைய எஜமானிடமாக காகிதத்தைக்கொடுத்து சங்கதியை தெரிவித்தான் எவ்விதமானால் அந்த மனிதனை சீக்கிரத்தில் நம்முடைய உசூரில் கொண்டு வரும்படிக்கு உத்தரவு செய்திருக்கிறாரென்று அந்த காகிதத்தையும் கொடுக்க அச்சங்கிலிகளையும் அவிழ்த்துக்கொண்டு தானும் சில பரிவாரங்களை சேர்த்துக்கொண்டு ஹாத்திமை மிகுந்த ஜாக்கிரதையாக சூழ்ந்துக்கொண்டுபோகிறார் இச்சங்கதியானது அந்ததேசமுழுதும் பிரசங்கமாகிவிட்டது எவ்விதமானால் ஒரு மனிதனானவன் எங்கேயோவருத்தமடைந்தவனைமாஹேரேருப்பரிபாத்துஷா சமுகத்துக்கு கொண்டு போகிறார்களென்று அம்மொழியைக் கேட்டு மேஹேருப்பரிசாவுடைய பெண்ணானவள் கேள்விப் பட்டு தன்னோ டிருக்கப்பட்ட தோழிகளுடனே யோசனை பண்ணினாள் நமதுபாத்துஷா வுடைய சீமையில் ஒரு மனிதன் வாலிபமான மிகுந்த அழகு பொருந்தியவனைப் பிடித்துக் கொண்டு வருகிறார்களாம் அவனை நாம் போய்பார்க்கலாம் அவன் எப்பேர்ப்பட்டவன் எவ்விதமான அழகுள்ளவனென்று சொல்லசகலரும் நல்லதென்று உறுதிப்பட்டார்கள் நாம் அவனைவெளியில் கொண்டுபோகின்றவேளையில் பார்க்கலாமே யல்லது அவனை பாத்துஷாவின் சமுகம்போனால் பார்

க்கம்மால் கூடாதென்று சொல்ல அம்மொழியைக்கேட்டு தன்னு
டைய தாயாரிடமாகப் போய் தோட்டத்துக்குப் போகவேண்டுமெ
ன்றுசொல்லி உத்தரவு பெற்றுக்கொண்டு அந்த ஊரில்வழக்கம்யா
தாமொருவர் தோட்டத்துக்குப்போனால் நாற்பதுநாளிருந்து வரு
கிறதாக யிருக்கும் பின்னர் அவ்விடத்தில் நின்று புறப்பட்டு தன்
னுடைய தோழிகளுடனே கொஞ்சதூரம் போய் கேட்டாள் அந்த
மனிதனை நாம் எவ்விதமாகப் பார்க்கலாமென்றுகேழ்க்க அதிலொரு
பரியானவள் சொல்லுகிறாள் கலசமென்ற சமுத்திரத்தின் சவுக்கி
தாரான காவற்காரர்கள் இன்னபாதையில்நின்று அந்தமனிதனைக்
கொண்டுவருவார்கள் நாம் அவ்விடத்தில் போய் பார்ப்போமானால
மெத்த நலமாயிருக்கும் அம்மொழியைக்கேட்டு சகலரும் அந்த வழி
யைநோக்கிப் போய் பார்த்தார்கள் அப்படியிருக்க வெகுதூலையில்
மிகுந்த படைகள் வருகிறதைப்பார்த்தார் அப்போது அசனுப்பரியெ
ன்பவள் தன்னிடத்திலிருக்கிற ஒரு பரியானவளை யழைத்து சொல்
லுகிறாள் நீ அவர்களிடமாகப் போய் கேள் நீங்களார் எங்கேயிருந்து
வருகிறீர்களென்று அவர்களை விசாரித்துக்கொண்டு சறுதியில்இவ்வி
டம்வந்துசேரவேணுமென்றுசொல்லியனுப்ப அதுபோல்போய் அவர்
களைக்கேழ்க்கிறாள் நீங்களார்எங்கேயிருந்துவருகிறீர்களென்று கே
ழ்க்க அப்போதவர்கள் சொல்லுகிறார்கள்நாங்கள்கலசமென்றசமுத்
திரத்தி னருகிலிருக்கும்சவுக்கி காவற்காரர்களாகஇருப்போம் ஒரும
னிதன் மிகுந்த வருத்த மடைந்தவனை பாதுஷாவுடைய சமுகத்
துக்கு கொண்டுபோகிறோமென்று சொல்ல நல்லது அந்தமனிதனை
நான் கொஞ்சம்பார்க்க வேணுமென்று சொல்ல அதுபேரில்ஹா
த்திமை காண்பிக்க உடனே அவள்ஓடிப்போய்தன்னுடையஎசமா
னியஹசனுப்பரிஎன்பவளிடமாகச்சொல்லுகிறாள்ஒருவாலிபனெப்
பேர்ப்பட்டவனானால்அவன்அழகிலும் ரூபத்திலும் பிரகாசிக்கும் படி
யான மத்தாப்புடைய வெளிச்சம் போலவும்தோன்றிஅவன் கயிதுட
னே காவலில் முகம்வாடி செந்தாமரை மலர்போலவு மிருக்கக்கண்டு
ஹாத்திமுடைய சரித்திரத்தைக்குறித்துதெரிவித்தாள்அம்மொழியை
அசனுப்பரி யென்பவள்கேட்டு மிகுந்த ஆவலாக இன்பங்கொண்டு நா
ன்பார்ப்பதற்கு பிரியமாய் தன்னுடைய தோழிமார்களாகிய பரி
களுடனே சொல்லுகிறாள் இவ்விதமாயிருப்பதால்நான் அவரை எவ்
விதமாய்ப்பார்ப்பேனென்று சொல்ல அப்போது சொல்லுகிறார்கள்
பரிகளுக்கு நாயகமான அசனுப்பரியே நீ சகலபேருக்கு முன்பா



கப்போய் பார்க்கிறது உனக்கு தகாது ஆனால் இராத்திரிவேளையில்
அந்த வாலிபனைக்கொண்டுஒரு இடத்தில் தங்கி சகலகாவலோடுவந்
தவர்கள் சகலரும் நித்திரை போகிறவேளை பார்த்து அம்மனிதனைத்
தூக்கிக்கொண்டு வருகிறோம் அப்போது அந்த மனிதனை நீ கண்டு
கொள்ளலாமென்று சொல்லிக்கொண்டிருக்கையில் பொழுது போ
ய் இராக்காலம் வந்துவிட்டது அப்போது அசனுப்பரியின் கூட்டமா
னது ஹாத்திமைக் கொண்டுவந்திருக்கும் லஸ்க்கரென்னுங்கூட்டமிட
மாகப்போய்பறந்துபார்த்தார்கள்சகலரும்தன்னைமறந்துஉசாரில்லாம
ல் நித்திரைபோகிறதையும் ஹாத்திம் தன்னை மறந்து நித்திரைசெ
ய்வதையும் அவருடைய அழகுசவுந்தரியத்தையும் பார்த்துஹா
த்திமைமெள்ள தூக்கிக்கொண்டுஅசனுப்பரியுடைய தோட்டத்தில்
கொண்டுவந்துவிட்டார்கள் அப்போதுபரிசாதிகள்சகலரும்அசனுப்ப
ரியிடத்திற்போய்சொல்லுகிறார்கள்தங்களுடைய தோட்டத்தில்கொண்
டுவந்து ஆகாசஜாத்தானமனிதனைவைத்திருக்கிறோம் அந்தமொழியை
க்கேட்டவுடனே தன்னுடையதோட்டத்துக்குப் போனாள் பின்னர்
ஒருமனிதனானவன் மிகுந்த அழகுசவுந்தரிய முள்ளவாலிபன் தன்
னைமறந்து நித்திரை செய்கிறதைப்பார்த்து அவன்பேரில் ஆயிரம்உ
ல்லாசமுடன் மோகவெள்ளம்பெருகி ஹாத்திமென்பவரைமெள்
ள எழுப்பினாள் அப்போது ஹாத்திம் உசாராகி கண்ணைத்திறந்து
பார்க்கையில் ஒரு பரியானவள் சூரியப்பிரகாசமாக தன்னுடையதலை
மாட்டில் நிற்கிறதைப் பார்த்து திடுக்கிட்டு புத்திமாறி ஹாத்திம்
சொல்லுகிறார் ஓ பெண்ணானவளே நீயார் இவ்விடம் என்னை
கொண்டு வந்தது என்று கேழ்க்க அப்போது அசனுப்பரி
மிகுந்த அன்பு ஆசாரத்துடனே குஞ்சிரிப்புகொண்டு சொல்லுகிறா
ள்நீர் அச்சப்பட வேண்டியதில்லை இந்த தோட்டமானது என்னுடை
யதாக யிருக்கும் உன்னுடையதல்ல இப்போதுஇந்த தோட்டமும்நா
னும் உன்னுதாக இருக்கும் ஏனதல்லவென்று சொல்ல அப்போது
ஹாத்திம் தன்மனதில் கிலேசப்பட்டு என்னுகிறார் இந்தப்பெண்ணா
னவள் பரியாக இருக்கிறாள் நாம்பரியான ஆண்பிள்ளைகளுடைய ப
டையின் கையில் இருந்தோமென்று மிகுந்த காபராவாகவும் அச்ச
மடைந்துசொல்லுகிறார்நீஇப்போதுஎன்னிசத்தைச்சொல்லவே
ணும் நான் இவ்விடம் எவ்விதமாக வந்தேன் எனக்கு யாதொன்றுந்
தெரியவில்லையென்று ஹாத்திம்கேழ்க்க அப்போது அசனுப்பரி பி
ன்னுஞ் சொல்லுகிறாள் ஓ, வாலிபனே இந்த தோட்டமானது பிற

ப்பரியுடையது நானனவள் அசனுப்பரியாகவும் அவளுடையமகளாகவுமிருக்கும் நீ கயிதில் நின்று வரப்பட்ட செய்தியானது இவ்விடத்தில் பட்டணமெங்கும் பிரசங்கமாகியிருந்தது அப்படியிருக்க உன்னை நான் பார்க்கவேண்டுமென்று மிகுந்த அன்புள்ளவளாகி இருந்தேன் ஆகையால் என்னுடைய பரிகளானவர்கள் எனக்குகாண்பிக்க உன்னைத்தூக்கி இவ்விடம் கொண்டுவந்தார்களென்று அசனுப்பரி சொல்ல ஹாத்திம் குஞ்சிரிப்பு கொண்டுசொல்லுகிற தெவ்விதமெனில் என்னை யிவ்விடங் கொண்டுவந்த சப்பு என்னவென்றுகேட்டு விருதாவாக என்னுடைய வேலையில் குற்றம் நேரிட்டதென்றுசொல்ல அப்போது அசனுப்பரியானவள் கேழ்க்கிறாள் நல்லது அப்பேர்ப்பட்ட வேலை உனக்கென்னஅச்சங்கதியை எனக்கு தெரிவிக்கவேண்டுமென்றும் அதற்காக அச்சமடைகின்றீரென்றுகேழ்க்க அப்போதுஹாத்திம் சொல்லுகிறார்.

நான் மாஹேருப்பரி பாத்துஷா வுடையமோருவைவாங்கவந்திருக்கின்றேனென்றுசொல்ல ஹசனுப்பரிகுஞ்சிரிப்புகொண்டு சொல்லுகின்றாள் ஓ,வாலிபமுள்ளஎன்னுடையபிரியமானவனே மோரு வென்பதை அவரிடத்தில் நின்றுவாங்குகின்றது நீ செய்யுமென்று எண்ணுகிறீர் மிகுந்த வருத்தமானவேலையா யிருக்கும் எவ்விதமானாலும் அவ்விடத்திற்கு போக மலக்குகளாலும் கூடாது மனிதர்கள் எவ்விதமாகப்போவார்கள் ஆனால் உன்னுடைய அதிஷ்டத்தால் அந்தவஸ்து உன்கையிலகப்பட்டால் அகப்படும்கல்லாது அதற்காகநானும் உனக்கு உதவியாகயிருப்பேன் இம்மொழியைஹாத்திம்கேட்டுமிகுந்தசந்தோஷமடைந்து பின்பு இருவரும் மிகுந்த இன்பத்துடனே மோகமென்னுங்கடலில்மூழ்கியிருவரும்இணைபிரியாமலிருக்கின்றவேளையில் பின்பு ஹாத்திமை கயிதுசெய்து கொண்டு வந்தபடைத் தலைவரானவரும் சேவர்களும் நித்திரையில் நின்றுதெளிந்து ஹாத்திமை பார்க்கும்போது அவ்விடத்தி லில்லா திருப்பதைப் பார்த்தார்கள் பின்பு அவர்கள்பயந்து அச்சமடைந்து காபராவாகச்சொல்லிக்கொண்டார்கள் யாரோ பரிசாதிகள் அவர்பேரில் இச்சைப் பட்டு திருடிக்கொண்டு போயிருக்கின்றார்களென்று பேசிக் கொண்டார்கள் பின்பு இம்மொழியைநம்முடையபாத்துஷா அறிவாராகில் நம்மை சும்மாவிடமாட்டார் இத்தனைபேருக்கும் உயிர்ச்சேதம்நேரிடுமென்று



சொல்லிக்கொண்டு நாமனைவரும் ஒருபக்கமறைவாயிருந்துதேடவேண்டும் அவனகப்பட்டால் பாத்துஷாவின் சமூகத்துக்கு கொண்டுபோகலாமென்று ஒரு பக்கத்தில்மறைவாயிருந்து இராவானவுடனே சகலரும் நான்குதிக்கிலுந்தேடுகிறவனாயிவ் தேட வேண்டுமென்று அச்சொல்லை உறுதிப்படுத்திக்கொண்டு ஒருபக்கத்தில் மறைவாயிருக்க அப்போது பொழுதுபோய் இராவானது வந்துவிட்டது பின்புசகலரும் நான்குதிக்கிலும் இராவெல்லாம் திரிந்துபார்த்து பொழுதுவிடிகிறவரையிலும் ஒரு பக்கமாய்வந்துஒளிந்துகொண்டிருந்தார்கள் அப்படி சிலநாள் தேடிக்கொண்டிருக்கையில் ஒரு நாள் மாஹேருப்பரி பாத்துஷா வென்பவர் தன்னிடத்தி லிருக்கிறவர்களை கூப்பிட்டு சொல்லுகின்றார் இதுவரையில்அந்தமனிதனையேன்கொண்டுவரவில்லையென்று கேட்டு ஒருபரியானவனுக்கு உத்தரவுகொடுத்தார் நீ அதின்சங்கதியை ஜல்தியில் அறிந்துகொண்டு வரவேண்டியது என்று உத்தரவுகொடுத்து அனுப்பினார் உடனே அவருத்தரவுபெற்றுக்கொண்டு அந்தபரியானதுகண்மூடுவதற்குள்ளேபறந்துஅந்தபடைக்கூட்டத்தில்வந்து சேர்ந்து பின்பு அவர்களுக்கு சொல்லுகின்றான் நீங்கள் அந்தமனிதனைக்கொண்டுவருவீர்களென்றுவழிபார்த்துக்கொண்டு நம்முடையபாத்துஷாவிருக்கின்றார் அந்தமனிதன் என்இதுவரையில் வரவில்லையென்று இவ்விதமாகவந்தவன்சொல்ல அவனுக்குநடந்த சங்கதியைத் தெரிவிக்க அவன் பாத்துஷாவிடத்திற்போய் சங்கதிகளையெல்லாம் விபாமாகத் தெரிவிக்க பாத்துஷா மிகுந்த ஆக்ரோஷத்துடனே ஒரு சர்தாரையழைத்து உத்தரவுசெய்தார் நீ உன்னுடைய ராணுவத்துடனேபோய் அந்த மனிதனை யார்கொண்டு போயிருக்கிறார்கள் அதை விசாரித்து அந்தத்திருடர்களைக் கண்டு பிடித்துக் கொண்டு வரும்படிஉத்தரவு செய்ய அவ்வுத்தரவுபெற்றுதனதுராணுவங்களைச் சேர்த்துக் கொண்டு அவ்விடம் போய் தன்னுடையபரிகளைக்கொண்டுதேட உத்தரவுபண்ண அப்போதுஹாத்திமைத் திருடிக்கொண்டுவந்தவர்களில் ஒருவன் அவர்கள் கையில் அகப்பட்டான் அவனைப்பிடித்துக் கட்டிக்கொண்டுவந்துமாஹேருப்பரி பாத்துஷாவின் சமூகத்திற் கொண்டுவந்து விட்டார்கள் அப்போது பாத்துஷாவானவர் அவனைக்கண்டு மிகுதமாகக் கோபங்கொண்டு கேழ்க்கிறார் நீ நிசத்தைச் சொல்லு அந்த மனிதனையெங்கேயென்றுகேழ்க்க அப்போது அவன்சொல்லுகிறான் ஆண்டவனே நீர் என்னுடைய உயிர்தப்பி விடுவீராகில் நான் நடந்த சங்கதிகளைச் சொ

ல்லுகிறே னென்றுசொல்ல நல்லது நீ சொன்னதுபோல் உன்னுயி
ரை தப்பிவிடுவேன் சங்கதிகளை சுருக்கில் சொல்லென்று கேழ்க்க
அப்போதவன் கைகட்டி வாய்புதைத்துக் கொண்டு சொல்லுகிறு
ன் ஓ, பாத்துஷாவே நாங்கள் சகலரும் அந்த மனிதனைக் கூட்டிக்
கொண்டு வெகுஜாக்கிறதையாக வந்து இன்ன வீட்டில் இரவா
இப்போனபடியால் சகலரும் நித்திரைசெய்து கொண்டிருந்தோம
அப்போது அந்தமனிதனையாரோதிருடிக்கொண்டுபோய்விட்டார்கள்
அந்த மனிதன் தனித்துப் போகப்பட்டவனல்ல மிகுந்தநம்பிக்கைக
யாயுள்ள விவேகமுள்ளவன் தங்களுடைய சமூகங்காண மிகுந்தஆ
சையுள்ளவனாகஇருந்தான் ஆகையால் தங்களுடைய அடிமைகளுக்கு
இதினுலிவ்விதமான அச்சமும்பயமுமிருக்கிறதென்றுபின்னுஞ்சொல்
லுகிறுன் நாங்கள்சகலரும் விடிந்தபின்பு அவனைப்பார்த்தோம்காணா
மலிருப்பதால் நாங்கள் சகலரும் தங்களுடைய ஆக்கினைக்காக பய
முடைந்து பகலில் சகலரும்ஒளிந்துக்கொண்டும்இரவெல்லாம் அவ
னைத்தேடிக்கொண்டும் இவ்விதமாகத்திரிந்துகொண்டிருக்கிறோமெ
ன்று சொல்ல அம்மொழியைபாத்துஷாகேட்டு அந்தபரியானவனைக்கய்
தில் வைக்கும்படிக்கு உத்தரவு செய்தார் அதுபோலவனை கய்தில்
வைத்தார்கள் பின்பு பாத்துஷாவானர் (ஜிந்) (அஜ்) பரிசாதி
களை யழைத்துச் சொல்லுகிறார் அந்த மனிதனையும் அவனைக்கொண்
டுபோனவனையும்எங்கேகண்டபோதிலு மவனைக்கொண்டுவரும்படிக்
குஉத்தரவுசெய்தார்கள்அந்தபரிசாதிகள்சகலரும்நான்குதிசையிலும்
போய்த் தேடவெளிப் பட்டார்கள்.

அப்படி தேடிக்கொண்டு வருகையில் ஒரு பரியானவன் மீனுப்
பரியுடைய தோட்டப்பக்கமாகப்போய் உள்ளே நுழைந்து ஒருபக்க
மபதிவாயிருந்துபார்க்கும்போது ஒருபக்கத்தில் மறைவாகஒருஅரண்
மனையின் அறையில் ஹாத்திமுடைய கழுத்தில் அசனுப்பரி கையை
போட்டுதழுவிக்கொண்டு விளையாடுகிறதைப்பார்த்தான் அப்போது
அவன்வெளியில்வந்து ஹாத்திமையடித்து அசனுப்பரியைப்பார்த்து
சொல்லுகிறுன் ஓதிருடியானமோசக்காரியேஇந்தமனிதனைநம்முடைய
பாத்துஷாவானவர்பார்க்கமிகுந்தநாட்டங்கொண்டிருந்ததால்நாங்கள்
இந்தமனிதனை எவ்வளவோ பத்திரமாகக் கொண்டுவருகையில் நாங்
கள்நித்திரைபோகிற சமையம்பார்த்து நீங்கள்இம்மனிதனை திருட்டுத்
தனமாகஎடுத்துக்கொண்டு வந்திருக்கிறாய்இப்பவும் நீ உன்னுடைய



ஆஸ்தியும்உன்னுயிரும் தப்பவேண்டுமானல் இந்த மனிதனை யென்வ
சத்தில் ஒப்பித்து விட்டால் நான் பாத்துஷாவின்சமூகத்திற்கொண்
டுபோய்விடுவே னென்றுஞ்சொல்ல அப்போது அசனுப்பரியென்ப
வள் மதுபானக்காளைப் பொசித்து கத்துமாறி யிருந்தாள் அப்போது
தன்னுடைய வேலைக்காரராகிய பரிகளையழைத்துச் சொல்லுகிறுள்
ஐ, பரிகளே யாரோ ஒருவன் அச்சமும் பயமுமில்லாமல் நுள்ளான் அ
திவான் கெட்டுப்போன்றன் விசேஷமானமொழிகளைப்பினத்திக்கொ
ண்டு நம்முடைய தோட்டத்தில் நிற்கிருன் அவனைப் பிடித்து அடி
யுங்களென்று உத்தரவுகொடுக்க உடனே அவனைப்பிடிக்கப்போனார்
கள் அப்போது அவன்பயந்து மிகுந்த ஓட்டமாக ஓடி தம்முடையப
ட்டணமண்டையிசேர்ந்து மிகுந்த விசனமடைந்துபாத்துஷாவின்சமூ
கத்திற்போய்பிரியாதுசெய்தான் அப்போது பாத்துஷா தம்முடைய
மந்திரியை யழைத்துச்சொல்லுகிறார் இந்தபரியானவளை இம்சைசெய்து
வருத்தப்படுத்தினவர் யாரென்றுந்தெரியவில்லை அவனை என்முன்பா
கக்கொண்டுவாருமென்று உத்தரவுசெய்ய அவ்விதமாக அவனைசிம்மா
சனத்தின்முன்புகொண்டுவைத்திருந்த அப்போது அவன்கைகட்டி
வாய்புதைத்து மிகுந்த வணக்கத்துடன் அதாபுபந்திசெய்துசொல்லு
சொல்லுகிறுன் ஆண்டவனே நான்மைனுப்பரியுடையமகள் அசனுப்
பரியின்பேரில் பிரியாதுக்காக வந்திருக்கிறேன் தங்கள் உத்தரவின்ப
டிக்கு தங்கள் சமூகத்துக்கு அம்மனிதனைக் கொண்டுவந்த படையி
லுள்ளவனாக யிருக்கிறேன் நாங்கள்சகலரும்அம்மனிதனைக்கொண்டு
வந்து ஒரு முகாமிலே வந்திறங்கி யிருக்கின்ற வேளையில் இராத்தி
ரிகாலத்தில் சகலரும் கத்துமாறி நித்திரை போகிறவேளையில் சமை
யம்பார்த்து அசனுப்பரியுடைய மனிதர்கள்வந்து திருடிக்கொண்டு
அந்த மனிதனை அவர்களுடைய தோட்டத்தில் வைத்திருக்கிறார்கள்
நான் நாலாபக்கங் களிலும்போய் தேடிக்கொண்டு அசனுப்பரியுடை
ய தோட்டத்திற் போய் பார்க்கலாமென்று போய் பார்க்கிறவேளை
யில் அசனுப்பரியென்பவளும் அந்தமனிதனும்கூட இருந்துகொண்டு வி
ளையாட்டு சிரிப்புடனே வெகுவேடிக்கை விநோதமாக அனுபோகம்
செய்துகொண்டிருக்கிறுள் அப்போது நான் மிகுந்த மனவருத்தம
டைந்து கோபத்துடனே அவளை வசைப் பேசினேன் பின்னர் இ
ம்மனிதனை பாத்துஷாவானவர் பார்க்கவேண்டுமென்று நாடியிருப்ப
தால் நீ இந்த மனிதனை என்வசத்தில் கொடுவென்று கேட்டதற்கு த
ன்னுடைய பரிசாதிகளைக்கொண்டு என்னை யடிக்கும்படிக்கு உத்த

ரவுசெய்ய உடனே என்னை சகலரும் வந்து அடிக்கும்படியாக ஓடிவந்தார்கள் அப்போது நான் இவர்கள்கூட மல்லாடுவதற்குப் பயந்து ஓடிவந்து தங்களுடைய சமுகத்தில் இச்சங்கதியைத் தெரியப்படுத்தினேனென்று சொன்னான் அம்மொழியைக் கேட்டுபாத்துஷாமிகுந்தகோபமாகி கண்களிரண்டும் நெருப்புப் பொறி பறக்கும்படியாக இருபதாயிரம் பரிசாரிகளுக்கு உத்தரவுசெய்தார் அது எவ்விதமானால் மேனுப்பரியுடைய பெண்சாதி பிள்ளைகளையு மவனுடையமனிதர்களையும் அவனையும் கட்டிக்கொண்டு சீக்கிரத்தில் நம்முடைய சமுகத்துக்குகொண்டுவர வேண்டியதென்றும் சொன்ன உத்தரவை பெற்றுக்கொண்டு சகலரும் அவர்களுடைய கரத்தைநோக்கி மாவேகமுளவேகமாய்ப் போய்அவனுடையவீட்டை சூழ்ந்துகொண்டார்கள் அப்போது மேனுப்பரியென்பவனுக்கு இச்சங்கதியாதொன்றுந் தெரியாதபடியால் இவர்களைக்கண்டு மிகுந்த அச்சமும் பயமுமடைந்து இதென்ன காரணமென்று மனந்திமாறிக்கொண்டு அவர்களைக்கேட்டான் என்னசப்பு நீங்கள் என்வீட்டை வந்துசூழ்ந்துகொண்டிருக்கிறீர்கள் அதின்பயன் எனக்குத்தெரியப்படுத்த வேண்டியதென்று கேழ்க்க அப்போது சொல்லுகிறார்கள் உன்னுடைய பெண்ணான அசனுப்பரியென்பவள் பாத்துஷாவுடைய கையிலிருந்த ஒருமனிதனைத் திருடிக்கொண்டுவந்து தன்னுடைய தோட்டத்தில் வைத்து அவனோடு அனுபோகம் செய்து கொண்டு இருக்கிறா ளென்றும் சொன்ன மொழியைக்கேட்டுமிகுந்தபயமடைந்து தன்னுடையதோட்டத்துக்கு வந்துபார்த்தான் அப்போது தன்மகளாகிய அசனுப்பரியென்பவள் ஒரு மனிதன்கூட கலந்து சரசமாடிவிளையாடிக்கொண்டிருக்கக்கண்டான் பின்னர் மிகுந்த கோபத்துடனே ஒரு சத்தம்போட்டு சொல்லுகிறான் ஓ, என்மகளானவளே நீ என்னபெருங்கேடான கெட்டசெயல் செய்தாய் தாய் தகப்பனுடைய பேரைநீ கெடுத்துஎங்கள்முகத்தில் கரியைத் தடவச்செய்தா யென்றுசொல்லிநம்முடைய பாத்துஷாவின் ராணுவங்கள் உன்னைப்பிடிக்கவேண்டிவந்திருக்கிறார்களென்ற சொல்லைக் கேட்ட வுடனே பயந்து நடுநடுங்கிமுகம் வேறுப்பட்டுப்போய் கண்ணீர்சொரிந்துகண்ணைப்பிசைந்து நிற்கிறாள் அவ்வேளையில் பாத்துஷாவுடைய ராணுவங்கள்வந்து சுத்திக்கொண்டு அசனுப்பரியையும் அவளுடைய ஜனங்களையும் தாய்தகப்பன்முதலாகிய ஜனங்களையும் ஹாத்திமென்பவரையும்கைதிசெய்துகொண்டு பாத்துஷாவின் சமுகத்தில் ராணுவத்தலைவன்வந்து தெ



ரியப் படுத்துகிறதாவது ஆண்டவனே இந்த மைனுப்பரியானவன் எங்களுத்தரவுமிதி யாதொன்றும் பேசாமல் நாங்கள் கூப்பிட்ட வுடனே யாதொரு குறைவு குற்றங்கள் பேசாமலும்தானும்தன்னுடையபெண்சாதிபிள்ளைகள் மற்றவர்களும் கைகட்டிக்கொண்டு எங்கள் கூடவந்திருக்கின்றா னென்றுசொல்ல அப்போது பாத்துஷா மைனுப்பரியென்பவனை சமுகத்தில்கொண்டு வரும்படிக்கு உத்தரவாச்சுது அதுபோல் கொண்டுவந்து விட்டார் உடனே மைனுப்பரி யென்பவன் பாத்துஷாவின் சமுகத்திலிருந்தவணக்கத்துடனேபாதம்பணிந்து கைகட்டி நின்றுகொண்டு சொல்லுகிறான் என் ஆண்டவனே தங்களுடைய அடிமையானவனுக்கு இச்சங்கதிகள் யாதொன்றுந் தெரியாது எவ்விதத்திலும் இந்த அடிமையான தங்களுத்தரவுபோல் நடக்கிறவனாக இருக்குமென்றுசொல்ல உடனே பாத்துஷாவுக்குகிருபையுவந்து நல்லது உன்னையும் உன்மகள்செய்த குற்றத்தையும்நான்பொறுத்துக் கொண்டேனென்று சொல்லி அந்தமனிதனைக்கொண்டுவரும்படிக்கு உத்தரவுசெய்ய அப்போது ஹாத்திமை பாத்துஷாவின் சமுகத்தில் கொண்டுவந்து நிறுத்தினார்கள் அப்போதுபாத்துஷாவானவர் மிகுந்த அழகும் வடிவுமான ரூபமாகயிருக் கிறதைப்பார்த்து மிகுந்த கிருபையாகி தன்னருகாமையில் உட்காரவைத்துக்கொண்டு பின்பு சிலமொழிகள் பேசிகேழ்க்கிறார் ஓ, வாலிபமான மனிதனே நீமனிதருடைய ஜாதியாகயிருந்துஎன்னுடையபட்டணத்துக்கு நீ எவ்விதமாக வந்தாய் அப்படிக்கொத்தவேலை உனக்கென்னயிருக்கிறது அதற்காகவேண்டி இவ்வளவு பிரயாசைபெடுத்துக்கொண்டிருக்கிறாயென்று கேழ்க்க அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் ஓ, லோகத்தை இரட்சிக்கும்படியான பாத்துஷாவே தங்களுடைய பாத தரிசனைக்காக புறோகாஷ் பாத்துஷாவுடையசமுகத்தில்வந்து நடந்த சங்கதியும் பின்பு தன்னுடைய சரித்திரமும் யாதொன்றுங் குறைவில்லாமல் பரிஷ்காரமாகத் தெரிவிக்க அவரிடமாக என்னுடைய சொற்களும் பெருமையும் நம்பிக்கையும் மிகுதமாயிருந்தது அவரால் தங்களுடைய சமுகங்காணும்படி எனக்கு நேரிட்டது அப்போது பாத்துஷா சொல்லுகிறார், நம்முடைய அதிகாரத்தில் உன்னையார் கொண்டுவந்து விட்டார்களென்று கேழ்க்க புறோகாஷ்பாத்துஷாவுடையதேவானதுகள்என்னைக்கொண்டுவந்துதங்கள் எல்லையில்விட்டதென்று தன்பாடுகளைத்தெரிவிக்கஅவர் அச்சங்கதிக ளெல்லாம்கேட்டுமனவருத்தமடைந்துஹாத்திமைகேழு

ம்அ

க்கிறார் ஓ, மனிதனே உங்களில்யாராவதுமிகுந்தவிவேகமுள்ள வயித்தியர்கள் இருக்கிறார்களாவென்றுகேழ்க்கஅம்மொழியைஹாத்திம் கேட்டுமிகுந்தவணக்கத்துடனேதஸ்லிமாத்துசெய்துகேழ்க்கிறார் ஓ, பாத்துஷாவே வயித்தியர்களைக் கொண்டும் தமக்கென்னவேலையிருக்கிறது தங்களுடைய ஆள்கையான தேசங்களில் வயித்தியர்களில்லையா அப்போது பாத்துஷா சொல்லுகிறார் எங்களுடைய சாதியிலுள்ள வயித்தியனால் எனக்கு கூடுதலையில்லாம லிருக்கிறது ஆனால் மிகுதமான ஹக்கீம்களால் வேண்டிய சிகிட்சைகள்செய்து பார்த்தும் நெடுநாளாக என்னுடையமகனுக்குகண்பார்வை குறைந்துதெரியாமலிருக்கிறது அவன்மிகுந்த அழகும்வடிவமுள்ள பிள்ளையானவன் ஒருவன் தவிர வேறில்லை அவனுக்கு இருகண்ணும் பார்வையில்லாமலிருக்கின்றது பின்னும் எந்நேரமும் கண்குத்தலும் வலியும் நீர்ப்பாய்ச்சலும் இவ்விதமாக மிகுந்தவருத்தத்தையுமடைந்துகொண்டுவேதனைப் படுகிறானென்றமொழியைக்கேட்டு அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் ஓ, பாத்துஷாவே தம்முடைய பிள்ளையின் கண்சவுக்கியப்பட்டு கண்வெளிச்சமுமாகி கண்ணிலுள்ளநோயெல்லாம் நீங்கிவிடுமாகில் எனக்கென்னகொடுப்பீர்களென்று கேட்க அதற்கு பாத்துஷாசொல்லுகிறார் நீ என்னகேழ்க்கிறையோ அதுகளெல்லாம் யாதொருதடங்கலில்லாமல்கொடுக்கப்படுமென்றுசொல்லஅப்போதுஹாத்திம்சொல்லுவார்தாங்கள்சொன்னதுசரியே அதுபோலெனக்கு எக்கார்செய்துகொடுப்பீராகில் நான்அந்தநோயைத்தீர்ப்பேனென்றுசொல்லஅப்போதுபாத்துஷாமிகுந்த சந்தோஷத்துடனேகவுல்கறார்செய்து கொடுத்தார்.

பின்பு ஹாத்திம் மறுநாள் காலையில் தன்னுடைய தலைப்பாகையிலிருக்கும் மோருவை யெடுத்து தண்ணீரி லுரைத்து அந்தப் பிள்ளையின் கண்ணில் தடவினார் பின்பு பொழுதுசாய்ந்து சாய்ந்திரமானவுடனே கண்ணினுடைய சிவப்புமாறிப்போய் குத்தல்வலி சவுக்கியமாகி விட்டது அப்போது பாத்துஷா சொல்லுகிறார் ஓ, வாலிபனேபார்த்தால்வெளிக்குகண்ணு முன்னில்நின்று நன்றாகயிருக்கிறதுபார்வையும்சுத்தமாய இருக்கின்றது ஆனால்கொஞ்சம்பார்வைமந்தமாயிருக்கிறதென்று சொல்லஹாத்திம்சொல்லுகிறார்பர்தேஜஸல்மாத்தென்றயிடத்தில்ஒருமரமிருக்கிறது அதின்பேர்நூர்ரேஷ தாகஇருக்கும்ஆனால்மரத்திலுடைய ஜலம்இரண்டுமூன்றுதுளி கொண்டுவந்



து கண்ணில்விட்டால் கண்ணிலுள்ள வியாதிமுழுதும் சவுக்கியமாகிப்போய்விடுமென்றுசொல்ல அம்மொழியைக் கேட்டவுடனே மாஹேறுப்பரி பாத்துஷாவானவர் சொல்லுகிறார் ஓ, பரிசாதிகளே நீங்கள் நிசமாகச்சொல்லுங்கள் உங்களில் யாராவது அவ்விடத்தில் போகிறவர்கள்யார் அந்தமரத்திலுடையஜலத்தைக்கொண்டு வரப்பட்டவர்கள்யார் அம்மொழியைக்கேட்டவுடனேஎல்லாப்பரிகளும் யாதொருவுத்தரவுசொல்லாமல்காதைகையால்பொத்திக்கொண்டிருந்தார்கள் பின்புபரிகள்தலையைச்சாய்த்துமிகுந்தவணக்கத்துடனேசொல்லுகிறார்கள் ஓ பாத்துஷாவே அந்தஜஸல்மாத்தென்ற இடத்துக்குப் போகிறதுமிகுந்த கடினமாயிருக்கும் அதில் மிகுதமாகத்தேவுகளும் பூதங்களுமுள்ளஇடமாயிருக்கும் ஆகையாலந்தயிடத்துக்குநமதுபரிசாதிகளில் ஒருவரும்போகக்கூடாது அந்தமூதேவிகள் மிகுந்த துஷ்டர்களும்பலசாலிகளுமாகயிருக்கிறார்கள் அப்படிக்குநாம்போனால் நம்முடைய உயிர்தப்பி விடமாட்டார்கள் இவ்விதமாக இருப்பதால் தங்கள் உத்தரவுபோல் நடக்கிறோமென்று சொல்ல இவ்விதமான மொழிகள் பேசிக்கொண்டிருக்கிறவேளையில் ஹசனுப்பரியென்பவள் கைகட்டிக்கொண்டு எழுந்து நின்று சொல்லுகிறாள் ஓ, பாத்துஷாவாகிய ஆண்டவனே என்னுடையகுற்றங்களைப்பொறுத்து மாப்பு செய்து இந்தமனிதனை எனக்கு இனாமாகக் கொடுப்பீராகில் நான் போவேனென்று சொல்ல அப்போது பாத்துஷா வென்பவர்சொல்லுவார் நீசெய்தகுற்றத்தைநான்மன்னிப்புசெய்தேன் நீங்களிருக்கிற வரை உன்னுடைய தகப்பனுக்கு இனாம்கொடுக்கப்படும் இந்தமனிதனையும்நான்கொடுப்பேன் அவர் உன்பேரில் பிரியமானால் அவரிஷ்டம் போல் செய்வேன் அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் ஓ, பெண்ணாகிய ஹசனுப்பரியே நீ என்னை வேண்டினையானால் என் னுயிருள்ளவரையிலும் நான் உன்னிடமாக இருக்கமாட்டேன் என்னிஷ்டம்போல் கொஞ்சநாள் இருப்பேன் பின்பு நான் என்தேசத்துக்குப் போய்விடுவேன் அப்படிக்குகறார்செய்து நீஇஷ்டப்பட்டால்நீசொன்னதுபோல்நடக்குமென்றுசொல்லஅப்போதுஹசனுப்பரிசொல்லுகிறாள்ஓ, என்னுடையபிரியமான வாலிபனே உன்னைக்கொண்டு நெடுநாள் வைத்திருக்க எனக்கு வேண்டியதில்லை ஆனால் கொஞ்சநாள் உன்னுடைய சுகத்தில் நின்று என்னுடைய ஆசையை நிறைவேற்றிக்கொண்டுஎன்னுடைய இன்பமென்றமோகமான இருக்கின்னும் தோட்டத்திலிருந்து கேளிக்கை விலாசமாய் சுற்றிக்கொண்

டிருப்பேன் பின்பு உன்னுடைய இஷ்டம்போல் ஆகவேண்டியது நீ எங்கேவேண்டுமோ அங்கேபோகலாம் அதைதடைபண்ணமாட்டேன் இவ்விதமான மொழியைக்கேட்டுநீ இப்போதுசொன்னகவுல்போல் நடந்தேயானால்நலமாகயிருக்கும் நான் என்மனம்போல் ராஜியாகினேனென்று ஹாத்திம்சொல்லஹசனுப்பரியென்பவள் மிகுந்த சந்தோஷத்தையடைந்து தன்கூடசிறிதுபரிகளைச்சேர்த்துக்கொண்டுநாற்பது நாளைக்குப் பின்புஜஉல்மாத்தென்றஇடத்துக்குப்போய்ச்சேர்ந்தாள் அவ்விடத்தில் போய்ப்பார்க்கும்போது ஒருபெரிய விருட்சமானமரம் வானத்தையளாவிக்கொண்டிருக்கின்றது அதிலின்று தண்ணீர்சொட்டுகள்விழுகின்றது அப்போது ஹசனுப்பரி அந்தமரத்தின் அருகாமையில் சென்று ஒரு சீஷாவை வைத்தாள்.

பின்பு கொஞ்சநேரத்துக்குள்ளாக அந்தசீஷாதண்ணீரால்நிறைந்துவிட்டது அப்போதந்தசீஷாவின்வாய் மூடிக்கட்டியெடுத்துக்கொண்டு அவ்விடம்விட்டுதானும்தன்கூடவந்தபரிகளுடனே பறந்துவருகையில் அந்தமரத்துக்குகாவலாயிருக்கின்றதேவுகள் ஆயிரம்பேர்களும் அவர்கள் எஜமான் குல்பாஷ் என்பவனும் அம்மரத்தருகில் வந்து அவள்போவதைப்பார்த்துதுரத்த அவர்கள் கையிலகப்படாமல் இந்தஹசனுப் பரியென்பவளிடத்தில் மிகுந்ததந்திரவித்தையும் வல்லமையு மிருந்தபடியால் நாற்பது நாளைக்குள்ளாக அந்த தேவுகள் கையில் கூட அகப்படாமல் பறந்து வந்து பாத்துஷாவின் சமுகத்தில் அந்த சீஷாவை கீழேவைத்துமிகுந்த வணக்கத்துடனே கைகட்டி அதாபு தஸ்லீ மாத்துசெய்து நின்றுகொண்டுசொல்லுகின்றுள் ஓ, பாத்துஷாவே தம்முடைய அடிமையானநான் தங்களுடைய உத்தரவுபடிக்கு அந்தஜஉல்மாத்துக்குப்போய் அந்ததேவுகள்கையில் அகப்படாமல்என்னுடையஉயிரைதப்பிக்கொண்டு அந்தமரத்தின் தண்ணீரைக் கொண்டுவந்தேனென்றுசங்கதிகளை யெல்லாம் தெரியப்படுத்திய பின்பு அந்தசீஷாவையெடுத்துபாத்துஷாவி னருகிற் கொண்டுபோய் வைத்தாள் அப்போது பாத்துஷாவானவர் இவள்போய்வந்தசங்கதிகளை கேட்டுமிகுந்த ஆச்சரியமடைந்து ஹசனுப்பரியை அழைத்து கட்டித் தழுவி முத்தம் கொடுத்து அந்தசீஷாவை ஹாத்திமுடைய வசத்தில் கொடுத்தார் அப்போது தம்மிடத்திலிருக்கின்றமோருவை யெடுத்துஅந்த தண்ணீரிலுரைத்துஅபாத்துஷாவின் குமாரனுடையகண்ணிலிட்டுஅதின்மேல்பட்டிகட்





டினுர் அவ்விதமாகப்பட்டியை ஏழுநாள் சென்றபின்பு எட்டா நாள் கட்டை அவிழ்த்தார் உடனே தாய்வயிற்றில் நின்று பிறந்த பாலனையாக தகப்பன்தாயுடைய முகத்தைப்பார்த்துமிகுந்தசந்தோஷத்தை யடைந்து ஹாத்திமுடைய காலில் விழுந்தான் பின்பு ஹாத்திமானவர் பாத்துஷாவின்குமாரனை மார்போடணைத்து முத்தமிட்டுக்கொண்டு ஆண்டவனைமிகுதமாகப் புகழ்ந்தார் அப்போது மாஹேருப்பரி பாத்துஷாவானவர் மனம் பூரிப்படைந்து மட்டுக்கடங்காத நவரத்தினங்களை தட்டுகளில் நிரப்பி ஹாத்திமுக்கு முன்பாக வைத்தார் பின்னர் ஹாத்திம் சொல்லுகிறுர் ஜஹான்பனுபாத்துஷாவே லோகரட்சகனே இவ்வளவு ரத்தினங்களை நான் ஒண்டியானவன் என்னசெய்வேன் எங்கே கொண்டுபோவேன் ஆனல் உங்களுடைய பரிகளிடமாகக் கொடுத்து புரோகாஷ் பாத்துஷா விடமாகச்சேர்த்து விடுவீர்களாகில் உண்மைப்படி இந்தவஸ்துகளெல்லாம் என்னுடைய எல்கையில் சேர்த்துவிடுவார் அம்மொழியைக் கேட்டவுடனே பாத்துஷாவானவர் தம்முடைய பரிசாரிகளை கூப்பிட்டுச்சொல்லுகிறுர் இந்த மனிதனுகப்பட்டவர் தங்களுடையதேசத்துக்கு போகும்படியாய் இந்த வஸ்துக்களை யெல்லா மெடுத்துக்கொண்டு அவர்கூட போகும்படிக்கு உத்தரவுசெய்தார்பின்னர்ஹாத்திமென்பவர் சொல்லுகிறுர் ஓ, பாத்துஷாவே இப்போதுநாங்கள்கொடுத்த பிறுங்கள் இவ்வளவென்று சொல்லக்கூடாது ஆனல் நானொரு சங்கதியைக்குறித்துமிகுந்த ஆவல்கொண்டவனாக இருக்கிறேன் அந்தவஸ்தை எனக்கு தாங்கள் தயவுசெய்து கொடுக்க வேண்டியது நல்லது நீர் யோசிக்க வேண்டியதில்லை என்ன கேழ்க்கிறு அதைக் கேழ்க்கவேண்டுமென்றுசொல்ல அப்போதுஹாத்திம் சொல்லுகிறுர்இப்போது தங்களுடையகையில்போட்டிருக்கிறமோருவென்றமோதிரத்தைஎனக்குகொடுத்தால் நான் சந்தோஷ மடைந்து தங்கள் கவுலும் நிறைவேறு மென்று சொல்ல அப்போது பாத்துஷாகேட்டு தன்தலையை கீழே சாய்த்துக்கொண்டு சற்றுநேரம் சென்றபின்பு தன்தலையையுயர்த்திசொல்லுகிறுர் இப்போது நீர் கேழ்க்கப்பட்டமோருவானது ஹாரிஸ்சவுதாகருடைய மகள் உங்களிடமாகக்கேட்டுஅனுப்பியிருக்கிறுளல்லவா நல்லது நானுங்களிடமாக நீர் கேழ்க்கப்பட்ட வஸ்தை நான் தருகிறேனென்று கரார்செய்திருப்பதால் மறுமொழிசொல்வது எனக்கு லாயக்கும் தகாதல்லவென்று தன்னுடைய கையிலிருந்த மோருவென்ற மோதிரத்தை ஹாத்திமிட மாகக்கொடுத்து பா

த்துஷா சொல்லுகிறார் ஓ, ஹாத்திமே இந்த மோஹ்றவென்ற மோதிரத்தை அவளிடமாக நீர் கொண்டுபோய் கொடுத்போதிலும் அதை நான் எவ்விதத்திலும் என்மனுஷாளைக் கொண்டு அழைப்பித்துக்கொள்வேனென்று சொன்னவுடனே ஹாத்திமெழுந்து நின்றுகொண்டு சொல்லுகிறார்.

ஓ, பாத்துஷாவே தாங்கள் எவ்விதத்திலும் என்னுடைய சவாலை நிறைவேற்றும்படிக்கு தவுல்மாறும்மல் மோஹ்றாவை. என்னிடம் கொடுத்தீர்களோ அதுவே எனக்குறிருக்க சந்தோஷமாச்சுது பின்பு தங்களிஷ்டம்போல்செய்யலாமென்றுசொல்ல அப்போது பாத்துஷா சொல்லுகிறார் இந்தமோதிரத்தைநீர் உமது வலதுகையில்காவீதுவென்றகுளிசம்போல்கட்டிக்கொள்ளவும் இந்தவஸ்து யாரிடமிருந்தபோதிலும் பூமியிலடங்கிய கஜானாக்கள் முதலியதிரவியங்களெல்லாம் தோற்றுகிறது அப்போது ஹாத்திம் மனதிலெண்ணுகிறார் ஹாரிஸ்சவுதாகருடைய மகளானவள் இவ்விதமானவஸ்தை நம்மிடமாக வேண்டினாளென்றெண்ணிக்கொண்டு பாத்துஷாவினிடமாக உத்தரவு பெற்றுக்கொண்டு அவ்விடத்தில் நின்று வெளிப்பட்டு நிற்கிறவேளையில் பாத்துஷாவானவர் தம்முடைய மனிதர்களை யழைத்துச் சொல்லுகிறார் அந்த ஹாரிஸ் சவுதாகருடைய மகளுக்கு கலியாணமானவுடனே நீங்கள் இந்தமோஹ்றாவை எவ்விதத்திலும் சமையம்பார்த்து அவளிடத்திலிருந்து எடுத்துக்கொண்டு நம்மிடம்சேர்க்கவேண்டியதென்று வெகுஜாக்கிரதையாக சொல்லி ஹாத்திம்கூட அனுப்பினார் அப்போது ஹாத்திமானவர் அவ்விடம் விட்டு ஹுசனுப்பரியுடைய வீட்டுக்கு வந்து அவளிஷ்டம் போல் கொஞ்சகாலிருந்து ஹுசனுப்பரியிடமாக வுத்தரவு பெற்றுக்கொண்டு ரத்தினதிகளைசுமந்திருக்கிற பாத்துஷாவின் பரிசாரிகளையும் கூடகூட்டிக்கொண்டு புறேகாஷ் பாத்துஷாவுடைய எல்லைவரையில் ஹாத்திமைக் கொண்டுவந்துவிட்டு உத்தரவுபெற்றுக்கொண்டு போய்விட்டதுகள் அப்போது முன்னால் ஹாத்திமைக்கொண்டுவந்துவிட்டதேவுகள் இவரைக்கண்டவுடனே ஓட்டமாக வோடிவந்து ஹாத்திம் கொண்டுவந்த ரத்தினதிகளையும் ஹாத்திமென்பவரையும் ஒரு சிம்மாசனத்தில் தூக்கிவைத்துக்கொண்டு கொஞ்சநாளைக்குப் பின்பு புறேகாஷ் என்னும் பாத்துஷாவின் சமுகத்திற் கொண்டுவந்துவிட்டு நின்றார்கள் அப்போது பாத்துஷாவானவர் ஹாத்திமைக் கட்டித்தழுவிக்கொ



ண்டு மிகுதமாக இவருடைய வல்லபத்தையும் தைரியத்தின்பேரில் புகழ்ந்து தன்னருகாமையில்வைத்துக்கொள்ள ஹாத்திம்போய்வந்தசங்கதிகள் முழுதும் ஆதிமுதலந்தவரையில் நடந்தசரித்திரமெல்லாம் விபரமாகச்சொன்னார் பின்பு அச்செதிகளைக்கேட்டு மிகுந்தஆச்சரியமுடைந்து பாத்துஷாவானவரும்தேவுகளும்வேண்டிய மரியாதைசெய்து விருந்தளித்தார்கள் அவ்விதமாக அவ்விடத்தில் ஏழெட்டுநாளிருந்து பின்பு பாத்துஷாவுடன் உத்தரவு பெற்றுக்கொண்டு தண்டுதளங்களோடு தேவுகளை யழைத்துக்கொண்டு முன்னால் ஹாத்திமென்பவர் கிணற்றில்குதித்த இடமாகவந்துமேலேறியபின்புதேவுகளைப்பார்த்துச் சொல்லுகிறார்நீங்களெனக்காகமுன்னேயும்இப்பவும் வேண்டியவருத்த மெடுத்துக் கொண்டீர்கள் ஆகையால் நீங்கள் சுமந்து வந்த ரத்தினதிகள் உங்களுக்கேதந்துவிட்டேன் அதையெடுத்துக்கொண்டு போய்விடுங்களென்று அவர்களையனுப்பியபின் ஹாத்திமென்பவர்தான் ஒண்டியாக ஹாரிஸ் சவுதாகருடைய வீடுவந்துசேர்ந்தார் பின்னர் அந்த மோஹ்றாவை அவளிடமாகக் கொடுத்தார் அதைப் பார்த்தவுடனே மிகுதமாக மனக்களிப்பு கொண்டு ஒரு புஜபுயி குபுஜமாகிரந்தோஷமாகச் சொல்லுகிறாள் ஓ, வாலிபமானசவுந்தரிய முள்ள அழகுள்ளவனே இப்போது நான் உன்னுடைய வசமாகினேன் இனி உன்னிஷ்டம் நீர் எண்ணியபடி செய்யலாமென்று சொல்ல அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் ஓ, அறிவினமான பெண்ணே உன்னிடத்தில் நான் எண்ணியபடிக்கு நடக்க எனக்கு அதிகாரமில்லை ஆனால் கெடுகானாக உன்பேரில் இச்சைகொண்டிருக்கிற வனுடைய இச்சையை நான் நிறைவேற்றுவேனேதவிர வேறில்லை என்று சொல்லி நீ கடப்செய்ய வேண்டியது அப்போது ஹாரிஸ் சவுதாகருடைய மகள் சொல்லுகிறாள் நான் உன்னுடையவசமாகிவிட்டேன் நீ உன்னிஷ்டம் போல் செய்யலாம் அதுபோல் நடக்க நான் ஆஜராயிருக்கிறேனென்றுசொல்ல உடனே ஹாத்திமென்பவர் அவனுடைய தகப்பனை அழைப்பித்து வைத்துக்கொண்டு சவுதாகருடைய குமாரன்கையைப்பிடித்து அவன்தகப்பன்கையிற் கொடுத்துச்சொல்லுகிறதாவது நீர் இவனை உன்னுடைய குமாரனைப்போல் எண்ணவேண்டியதென்றுசொல்லி உடனே கலியாணத்தின் சாமான்கள் தயார்செய்து தங்களுடைய வழக்கம்போல் செய்யவேண்டிய சடங்கு முடித்து அந்தப் பெண்ணை சவுதாகர்மகனுக்குகலியாணமும் செய்து கொடுத்தார் அப்படிக்குபெண்ணும் புருஷனுமாகதான்கொண்டமன

ம்போல் மோகமென்ற சமுத்திரத்திலமுழ்கி யிருந்தஅன்புடன் இவ்விதமாக பத்துநா ளிருக்கும்போது அவளுடைய கையிலிருந்தமோருவென்றமோதிரத்தைப்பார்க்கையில்லையாகப்போய்விட்டது அவள்மிகுந்த மனவருத்தமடைந்துகண்ணீர்சொரியஅழுதுகொண்டு இருக்கிறவேளையில்ஹாத்திமென்பவர் அவளுக்குவேண்டிய தைரியமான விசளங்களைச்சொல்லி பின்னுஞ்சொல்லுகிறார் ஓ,பெண்ணே நீ ஏன் விசனமடைகின்றாய் உன்னுடைய புருஷனானவனுக்கு ஏழேழுதலைமுறை வைத்துக்கொண்டு செலவுசெய்யும்படியாக அனேக சம்பத்துகளான திரவியங்களும் ரத்தினாதிகளும் நான் கொடுத்திருக்கின்றேன்.

நீ எதுக்காக விசனப் படுகின்றாயென்று இவ்விதமாக அனேக முகாந்திரங்கள்சொல்லி அவளை சம்ஜாஷ் என்னுமனத்திருப்திசெய்து அவளையும்சந்தோஷப்படுத்தி உத்தரவுபெற்றுக்கொண்டு அவ்விடம் விட்டுஹசன்பானுவென்பவளுடையசவாலுக்காகவேண்டி புறப்பட்டுமிகுந்தமனவருத்தமடைந்துகொண்டுகொஞ்சநாள் நடந்துபோயமிகுந்தவருத்தங்களெல்லா மெடுத்துக்கொண்டுபோகும்வேளையிலஎதிரில்சமுத்திரம் வந்துநேரிட்டது அவ்விடத்தில்போய்பார்க்கின்றபோதுமிகுந்தபெருமைபொருந்திய பாதுஷாக்களுடைய மஹாலான வீட்டைப்போலிருக்கக் கண்டு அந்த வீட்டைப் பார்க்கலா மென்றுநடந்து அந்த மஹாலின்வாசற்படியருகில் போய் நின்றுகொண்டிருக்கையில்அதின்மேலேயெழுதியிருக்கக்கண்டார் எவ்விதமானுல்நன்மை செய்து சமுத்திரத்தில் போடுங்களென் றெழுதிய மொழிகளைவாசித்துப் பார்த்து மிகுந்தசந்தோஷத்தை யடைந்து ஆண்டவனைமிகுதமாகப்புகழ்ந்து ஷூக்குருஇரண்டுரெக்காயத்துதொழுது அல்கம்துலில்லாஹி இப்போது என்னுடையநாட்டம்நிறைவேறிவிட்டதென்றுமனக்களிப்புகொண்டுபின்புஅந்தமஹாலுக்குள்ளே நுழைந்து போகின்ற வேளையில் எதிராக ஊழியம் செய்கின்ற வேலைக்காரர்களைப்போல் பத்துபேர்கள் வரக்கண்டார் அவர்ஹாத்திமுடைய கையைப் பிடித்து உள்ளே யழைத்துக்கொண்டு போனார்கள் அப்போது அவ்விடம்போய் பார்க்கின்றபோதில் நூறு வயதுள்ள ஒரு விர்த்தாப்பிய மானவர் ஒளிவுபொருந்தி விலைமதிக்கா தின்ற போர்வையான உடுப்புகள் உடுத்திக்கொண்டு வெகு ஆப்பரவுடனும் மிகுந்த சாலிகானவருமாய் ஒரு சிம்மாசனத்தின் மேலி



ருக்கின்றார் ஹாத்திமைப்பார்த்தவுடனே அந்தமனிதன்கட்டியணைத்துக்கொண்டு முகத்தில் முத்தமிட்டுக்கொண்டு தானிருக்கின்ற சிம்மாசனத்தின்மேல் தன்னோடு வைத்துக்கொண்டு வித விதமானபதார்த்தங்களும் விதவிதமான கனிவர்க்கங்களும் கொண்டுவந்து வைத்தார்கள் அப்போதுஹாத்திம் மனப்பூரணமாக அந்தவஸ்துக்களைச்சாப்பிட்டு தாகந்தீர்ந்து முடிவான பின்பு ஹாத்திமென்பவர் கேழ்க்கிறார் ஓ, பெரியவராகிய பெருமைபெற்றவரே தம்முடைய வாசற்படி மேலே இவ்விதமாக யேனெழுதியிருக்கிறதென்றுகேழ்க்க அப்போது பெரியவர் சொல்லுகிறார் நானுகப்பட்டவன் இரவுகாலத்தில்வெளிப்போக்கரையடித்து அவர்கள்பொருளைக்கொள்ளைசெய்து என்காலைக்கழித்துக்கொண்டிருந்தேன்பின்புபொழுதுவிடிந்தால்நல்ல மனிதனைப்போலிருந்துஅன்றையதினம்இரண்டுரொட்டிசுட்டு அதற்குசர்க்கரையும்கூடவிசமுத்திரத்தில்போட்டுக்கொண்டிருந்தேன் அல்லாவுக்காகவென்று இவ்விதமாகநெடுநாள்செய்துக்கொண்டிருக்கையில்எனக்குதேகத்துக்குசங்கடம்வந்துமிகுந்த வருத்தமடைந்துகொண்டு வியாதியஸ்தனுகிவிட்டேன் அப்போதெனக்கு உயிர்போகிறவேளைவந்துநேரிட்டது அப்படியிருக்கஒருநாளென்குஅறிவாகாரமதப்பிப்போய்சத்துமாறிகிடக்கிறவேளையிலஎன்னுடைய உயிரானது என்னுடலில் நின்று வெளிப்பட்டுவிட்டது அப்போது நானென்ன பார்க்கிறேனென்றால்ஒருமனிதனானவன் என்கையைப்பிடித்துக்கொண்டுநரகத்தைக்காண்பிக்கிறான் ஓமனிதனே உன்னுடையயிடம்இதுவாயிருக்குமென்றுசொல்லி நரகத்தில் கொண்டுபோய் போடப்போகிறவேளையிலிரண்டுபேர் மனித ரூபங்கொண்டு என்னருகில்வந்து என்தோளைப்பிடித்துக்கொண்டு சொல்லுகிறார்கள் இவனைநாம்நரகத்துக்குகொண்டு போகும்படிக்கு நாங்கள்விடமாட்டோம் அவனுடையயிடம் நரகமல்ல இவன்சொர்க்கத்துக்குப் போகப்பட்டவனென்றுசொல்லிஎன்னைசொர்க்கத்தினிடமாகஇழுத்துக்கொண்டுபோனார்கள்அவ்விடத்தில் ஒருபெரியோரெழுந்து நின்றுகொண்டுசொல்லுகிறார்இவனை ஏன்கொண்டுவந்தீர்கள்இவனுடையவயது இன்னமிகுதாறுவருஷம்பாக்கியாகயிருக்கின்றது இன்னான் இன்னபேருடையவனுயிருக்கிறான் அவனைக் கொண்டுவாருங்களென்று சொன்னசொல்லைக்கேட்டு அவ்விருவரும் என்னை இவ்விடங்கொண்டு வந்து விட்டு பின்பு அவர்கள் சொல்லுகிறார்கள் ஓ, மனிதனே நீ நித்தியம் இரண்டு ரொட்டி சமுத்திரத்திற் போட்டுக்கொண் டிருந்தாயே அந்த ரொட்டிகளு

ன்தான்நாங்கள்நீஆண்டவனுக்காகப் போட்டபடியால் அந்தரொட்டி
நாங்கள்தானென்று சொல்லிப்போய்விட்டார்கள் பின்பு எனக்குகொ
ஞ்சம்உயிர்வந்தது நானெழுந்திருந்து ஆண்டவனிடமாகமுனாஜாத்து
செய்தேன்ஆண்டவனே நீ எல்லாருடைய பாவத்தையும் பொறுக்கப்
பட்டவன்நான்மிகுந்தபாவவாளியா யிருக்கிறேன் என்பிழையையும்நீ
பொறுக்கவேண்டியது நான்இனிகுற்றமானபாவஞ்செய்கிறதில்லை நா
ன்தோபாசெய்கிறேன்எவ்விதத்திலும் எனக்குரிஜ்ஜக்குஉன்னுடைய
பக்கத்தில்நின்று கைபாக அனுப்பிவிப்பாயென்று உறுதிகொண்டுபின்
புகாலையில் எழுந்துவழக்கம்போல்சமுத்திரத்தில் ரொட்டியைப்போ
டப்போனேன்அப்போது சமுத்திரத்திலிருந்து நூறு தீனார் ஒருபை
யில்போட்டுகட்டி வெளியில்வந்துவிழுந்திருக்கக்கண்டு அதைநானெ
டுத்தவிழ்த்துப்பார்க்கஅதில்நூறுதீனார்சரியாயிருந்தது அதையெடுத்
துக்கொண்டுவந்து பட்டணங்களில்பறை யறையும்படியாகவும் செய்
தேன்எவ்விதமானால்யாருடையசொத்துக்களாவது சமுத்திரத்தில்வி
ழுந்திருக்குமாகில் அவர்கள் என்னிடமாகவந்துஇவ்வளவென்று என
க்குத்தெரியப்படுத்திவாங்கிக்கொள்ள வேண்டியதென்று தமுக்குப்
போடும்படிசெய்ய அதற்காகவேண்டி ஒருவராவதுவந்துகேழ்க்கவில்
லைபின்புவழக்கம்போல் மறுநாள் சமுத்திரத்துக்கு ரொட்டிபோடப்
போகையில்முன்வந்து கிடந்ததுபோல்ஒருபைவந்துவிழுந்திருக்கக்க
ண்டு அதையும் எடுத்துகொண்டுவந்துஎண்ணிப்பார்க்கசரியாகநூறு
தீனாரிருந்ததுபின்புநிதம்அவ்விதமாகவந்துகொண்டிருந்தது அதையெ
டுத்துக்கொண் டிருக்கிறேன் அப்படியிருக்க ஒருராத்திரிஒருமனிதன்
என்கினவில்வந்து சொல்லுகிறான் எவ்விதமானால் ஓ, மனிதனே ஆ
ண்டவன்படைத்த பந்தாவே நீபோடுகிறரொட்டியானது உனக்குதவி
யொத்தாசையாக யிருக்கும் ஆண்டவன் உத்தரவு செய்திருக்கிறான்
உனக்கு நித்தியம்நூறு தீனார் அனுப்பும்படியிருக்கிறதைத அதில்நின்
று ஆண்டவனுக்காக கொஞ்சம் செலவுபண்ணும் மற்ற மிகுதியான
தை உன்னுடையசெலவுக்கு வைத்துக்கொள்ளுமென்றுசொல்ல அ
தின்பின்பு நான்விழித்துக்கொண்டேன் உடனே ஆண்டவனைமிகுத
மாகவாழ்த்திபோற்றி ஷுக்குருதொழுதேன்பின்புஇந்தமஹால்க
ளும்மற்றவஸ்துகளும்தயார்செய்துபின்பு என்வீட்டின்கதவின்மேல்
இவ்விதமாக யெழுதிவைத் திருக்கிறே னென்றுசொல்லி நாளதுவ
ரையில்வழக்கம்போல் நூறுதினார்வந்துகொண்டிருக்கிறதுமுசாபர்க
ள்எழையெளியோர்களுக்குகயிறுகயிறுத்துகொடுத்துக் கொண்டிரு



க்கிறேன்எந்நேரமும் ஆண்டவனுடையவெளியிலெப்போதும்தொழு
துவணங்கிக்கொண் டிருக்கிறேன்இன்னம் எனக்குநூறுவயதுபாக்கி
யாகயிருக்கிறதுஇந்தமஹாலானதுகட்டி நூறுவருஷமாகின்றதுஐஎன்
னுடையதோஸ்தானவரோஎனக்கு எகினென்னும் உறுதியாகிவிட்டது
ஆண்டவன் என்னுடையபாவங்கள்மன்னித்துஇந்தவைபது கொடுத்
திருக்கிறானென்றுஎனக்குயாதொருஜப்பில்லாமல் ரிஜ்ஜக்கும்சதாகா
லம்கொடுத்துக்கொண்டுவருகிறான்நான்மிகுந்தசந்தோஷத்தையடை
ந்துசவுக்கியத்துடனிருக்கின்றேன்.

பின்பு எப்பேர்ப்பட்டஎண்ணங்களும்எண்ணமிருக்கிறேன்இ
வ்விதமானசெயல் ஆண்டவன்எல்லா இன்சான் களும்நன்மையடை
யும்படிக்குஎழுதிக்கட்டியிருக்கிறேன் அம்மொழியைஹாத்திம்கேழ்
விப்பட்டுஆண்டவனிடமாக உண்மைகொண்டுநாடிப்புகழ்ந்து ரிஜ்தா
னக்குருதொழுதார் பின்புஅவரிடத்தில்மூன்றுநாள்வரையிலுமி
ருந்து நாலாநாள் அந்தபெரியவரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு
ஷாஹே ஆபாதென்ற நகரத்தைநோக்கிவருகிறார் கொஞ்சநாளைக்குப்
பின்புஒருவனாந்திரமான காட்டில்வந்துசேர்ந்தார் அவ்விடத்திலென்
னபார்க்கிறாராகில் ஒருகருநாகமானபாம்புவேறேயொருஅழகுள்ளந
ல்லபாம்புகூட ஒருமரத்தின்கீழேஇரண்டும்சண்டைபோட்டுஇன்னம்
கொஞ்சநேரத்துக்குள்ளே அதற்குகருநாகமானபாம்பு நல்லபாம்பை
உயிர்வதைசெய்வதுபோல் தெரிந்துஹாத்திமென்பவர்மிகுந்த வேகத்
துடனேஓடிஆங்காரத்துடனேசத்தம்போட்டுச்சொல்லுகிறார்ஓழுமித
மியான ஷைத்தானேபத்திரம் நீ என்னவேலை செய்கிறாய் அச்சத்த
த்தைக் கேள்விப்பட்டு அந்த கரும்பாம்பானதுபயந்து அந்தப்பாம்பை
விட்டுவிலகிஓடிப்போய்விட்டதுபின்புஇந்த அழகுள்ளநல்லபாம்பா
னதுஓடச்சக்தியில்லாமல் காயப்பட்டுஅந்தமரத்தின் கீழேநின்றுவி
ட்டதுபின்பு நான்குபக்கங்களிலும்பயந்துபார்த்துக்கொண்டிருக்கிற
து அப்போது ஹாத்திமானவர் அதினருகில்வந்து சொல்லுகின்றார்
ஓ, பாம்பேநீபயப்படவேண்டாம் நீசவுக்கியமாகிவெளிப்பட்டுப்போ
கும்வரையில் நான் உனக்குதவியாகவும் துணையாகவும் உன்னிடத்தி
லிருப்பே னென்றும் உன்னைத்தனித்துவிட்டு நான் எவ்விடத்திலும்
போகமாட்டேனென்றுஞ் சொல்லியிருக்க அரைநாழிகைக்குப்பின் அத
ற்குகொஞ்சம்தெளிவும்சவுக்கியமுமாகி அந்தமரத்தின்மேலேறிமனித
ருபங்கொண்டு ஹாத்திமானவருக்கு குனிந்து குனிந்து சலாம்செ
ய்கிறது இவ்விதத்தைப்பார்த்து ஹாத்திம் மிகுந்த ஆச்சரியப்பட்டு எ

ன்னுகிறார் இதுவென்ன காரணமாகயிருக்கிற தென்றென்னுகிற வேளையில் அந்தமரத்தி லேறியபாம்பான மனிதன் கீழேயிறங்கி மி ந்த வணக்கத்துடன் நின்றுகொண்டு சொல்லுகிறான் ஓ, என்னோ ட்சித்து என்னுயிரைக் காப்பாற்றிய என் தோழனே நீரென்ன ஆ ச்சரிய மடைகிறீர் நானானவன் ஜின்னுத்துடைய சாதியிலுள்ளவன் இந்தபட்டணத்தினுடைய பாத்துஷாவானவன் என்தகப்பனுடைய கு ாமானவன் என்னோடு சண்டைசெய்தவன் அப்பேர்ப்பட்ட புழுக் கையானவன் அவன்என்னைக் கொல்ல தேடுகொளாகதுஷ்மனியென் ப்பகையாக யிருந்தான் இன்றையதினம் நான் தனித்து பாம்பின் ரூ பமெடுத்துக் கொண்டு சந்தோஷமாகக் காற்றுவாடை வாங்கிக் கொ ண்டு வரலாமென்கிற யெண்ணங் கொண்டு இவனுடைய ஞாபக மில்லாமல் அவனுடைய சீமைக்கு வந்து விட்டேன் இந்தப்பா தகனுக்கு எவ்விதத்திலோ தெரியவந்துதானும்பாம்பின் ரூபமெடுத் துக்கொண்டு என்னைக் கொல்ல இது நல்லசமையமென் றெண்ணி அவன்என்னைக்கொல்லப்போற சமையத்தில் என்னுயிரைக் காப்பாற் றும்படிக்கு தங்களை ஆண்டவன் இவ்விடக்கொண்டுவந்துவிட்டானெ ன்றுசொல்ல அம்மொழியை ஹாத்திம்கேட்டுச் சொல்லுகிறார் நல் லதுநீ எவ்விடம்போகவேண்டுமோ அவ்விடம் போகலாமென்றுபின் னுஞ்சொல்லுகிறார்நான் வழிப்பயணம் போகிறவனானபடியால்இவ்வி டத்தில்தங்கக்கூடாதென்றுசொல்லஅதற்குஅவன்சொல்லுகிறான்எ ன்னுயிரைக் காப்பாற்றிவைத்தஇரட்சகனே நான்தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன் என்மொழியை தாங்கள்தள்ளாமல் கேழ்க்கவேண் டியதென்று மிகுதமாக கெஞ்சுதலாகக் கெஞ்சிசொல்லுகிறான் இப் போதென்பேரில் கிருபைவைத்து தாங்களென்கூட தயவு செய்துவ ரவேண்டியது என்னுடையவீடானது அருகாமையி லிருக்கிறதென் றுசொல்ல அப்போது ஹாத்திமானவர் அவன்சொல்லைத் தட்டாம ல் அவன் கூடத்தொடர்ந்துபோகிறார் அப்போது வெகுகூட்டமாக எ திரில்படைகள் வருகிறது இதென்னவென்று கேழ்க்கும்போது அப் போது அந்த ஜின்னுபாத்துஷாவின் மகன்சொல்லுகிறான் இந்தப டைகள் என்னுடையது நான்வரதாமிஷப்பட்டபடியால்என்னைத்தே டிக்கொண்டுவருகிறவர்களாக இருக்குமென்றுசொல்லஅதுபோல்அ ந்தபடைகள்வந்து இவர்களை சூழ்ந்துகொண்டது ஹாத்திமையும்அ ழைத்துக்கொண்டுதம்முடைய அரண்மனைக்குப்போய்தனதுசிம்மாச னத்தில்உட்காரவைத்துவேண்டிய மரியாதையுடனேவிருந்து செய்து



கவரத்தினதிகளைதட்டில்நிரப்பிஜவாகஹாத்திமுக்கு முன்பாகவைத் து அன்றையதினமிரவெல்லாம்கேளிக்கை ஆடல்பாடல்மிகுதமாகவே டிக்கைகள்செய்வித்து முடிவாகிபொழுதுவிடிந்தபின் அந்தமூதேவி யானகுலாமென்பவனை பிடித்துவரச்சொல்லி அவனைவெட்டிவிட்டார்

பின்பு ஹாத்திம் அவரிடமாக உத்தரவு பெற்றுக் கொண்டுசொ ல்லுகிறார் இப்போது எனக்கு நீர் ஜவாகவைத்தனைகளும் ரத்தின திகளும் தங்களிடத்தில் தானேயிருக்கவேண்டுமென்று நீர் இனிதனி த்து வெளியே புறப்படுவைத்த நீக்கி விடுமென்று வேண்டிய அறிவு கள்போதனை செய்துவிட்டு உத்தரவு பெற்றுக்கொண்டுஅவ்விடத்தி ல்நின்றுபுறப்பட்டுஹாத்திமானவர் இரண்டரைவருஷமும்பதினைந்து நாளுமுடிவாகிடத்துஷாஹேஆபாதென்றபட்டணம்போய்ச்சேர்ந்து காருவான்சராவில்போயிறங்கி முனீர்ஷாமியிடத்தில்மிளகத்தாகிப் போய்வந்தசங்கதிகளைக்குறித்து பேசிக்கொண்டிருக்கும்வேளையில்இ ச்செய்தியைஹூசன்பானுவுக்குதெரிவித்துஉடனேஹாத்திமையழை க்கவிட்டாள்அதுபோலழைத்துக்கொண்டுவந்துதன்னுடைய அரண் மனையில்மென்மைபொருந்தியவிரிப்பின்மேல்ஒருஜவரத்தினமிழைத்த நாற்காலியைக் கொண்டு வந்து போட்டு உட்காரவைத்து அவ் விடத்தில் பர்தாவென்ற திரைபோட்டு தானொரு புர்க்காபோட்டுக் கொண்டு உட்கார்ந்து ஹாத்திமைக் கேழ்க்கிறாள், ஓவாலிப னே தைரியவானே வல்லமையுடையவரே நீர்இப்போது வெகு நாள்சென்றுவந்தீர் என்னசெய்தி கொண்டுவந்தீரென்றுகேழ்க்கஅப் போதுநடந்தசங்கதிகளும்பெரியமனிதனானவருடைய மொழிகளையும் விபரமாகத்தெரிவித்துபின்னும் சொல்லுகிறார்அதுசென்றபெரியவ ரானவர்இச் சேதிக்காகவேண்டிதன்னுடையவீட்டின் கதவின்மேலே ழுதியிருந்தார்இம்மொழிகளையெல்லாம்ஹூசன்பானு கேள்விப்பட்டு மிகுந்தசந்தோஷத்துடனே பூரிப்படைந்துஹாத்திமுடைய தைரியத் தின்பேரில் வெகு ஆச்சரியப்பட்டு ஓ, வாலிபனே நீஇந்தமொழியைக் கொண்டு வந்தாய் ஒருவராலும் கொண்டுவரக் கூடா தென்று சொல்லி புகழ்ந்தாள் பின்பு ஹாத்திம் முனீர்ஷாமி இருக்கிற யிடத் துக்கு உத்தரவுவாங்கிக்கொண்டுபோயிருக்கையில்ஹூசன்பானு அ நேகவிதமானபதார்த்தங்களும்மிட்டாய்தினுசுகளும்ஷர்பத்துதினு சுகளும் கனிவர்க்கங்களும் தட்டுகளில்நிரப்பி ஹாத்திமுக்குஅனுப்பி வித்தாள் பின்னர் அந்த வஸ்துகளெல்லாம் தானும் முனீர்ஷாமியு ம் இருவர்களும் மனச்சந்தோஷமாகப்பசியாறினார்கள் ஆண்டவனைப்

புகழ்ந்து துதிசெய்தார்கள் பின்பு ஹாத்திம்சொல்லுகிறார் என்தோழனே நீயாதொன்றுக்கும் அச்சமடையாதேஇன்னம்கொஞ்சகாலத்துக்குள்ளாகஆண்டவன் கிருபையால்உன்னுடைய ஆசைநிறைவேறும்படிக்கும்நீஇச்சைப்பட்டவளைஉன்னோடுசேர்த்துவைப்பேனென்றும் வெகுவிநோதமாக தயிரியப்படுத்திய பின்பு ஹசன்பானுவிடமாக ஹாத்திம் போய்ச் சொல்லுகிறார் ஓ, பெண்ணாகிய ஹசன்பானுவே இப்போது என்னசவால்சொல்லுகிறாய் அதற்காக பிரயத்தினம்செய்யப்போவதற்காகவும் (மூன்றாவதுசவால்) என்னவென்றால் ஒருமனிதன் காட்டில்நின்றுகொண்டு சொல்லுகிறான் எவ்விதமெனில் யாருக்கும் தீமைசெய்யாதேஅப்படிதீமைசெய்வானாகில்அத்தீமையானது அவனை வந்து தொடரும் ஆகையால் அவன் சொல்லுகிற சங்கதியை அறிந்து வரவேண்டியது.

## மூன்றாவதுசவால்

### ஹாத்திமென்பவர்புறப்பட்டுப்போய் அச்சங்கதியினுடைய செய்தியை அறிந்துவருகிறதாவது யாதாமொருவருக்குத் தீமைசெய்தால் அதுவே அவனுக்குத் தொடருமென்ற வரலாற்றின்பாபு.

இம்மொழியைக் கேட்டவுடனே அவ்விடம் விட்டுப்புறப்பட்டு ஆண்டவனை நினைத்துபுகழ்ந்து கொண்டுகாடு வனாந்திரத்தை நோக்கிப்போகிறார் அவ்விதமாகநடந்து ஒரு மாசமானதின் பின்பு ஒரு மலையானது எதிரில்கண்டார் அம்மலையானது வானத்தை



அளாவிக்கொண்டு நிற்கின்றது அப்போது அந்த மலையினருகாமையிற்போனார் ஒரு சத்தமானதுமிகுந்த துயரமாக வருவதைக்கேட்டார் அப்போது தலையையுயர்த்தி நான்குதிசைகளிலும் பார்க்கயாதொன்றுங் காணவில்லைபின்னையும் அருகில்முடுகிப் போய்ப்பார்க்கிறபோது என்ன பார்க்கிறாரானால் ஒருபெரிய விருட்சமான நிழலுள்ள மரத்தின்கீழே ஒரு நான்கு சதுரமுள்ள சங்கே மர்மரென்னுங் கல்லானது இருக்கக்கண்டு அதன்மேலே ஒருவாலிபனானவன்மிகுந்தஅழகு வடிவு பொருந்திய சந்திரனையொத்தப்பாகவும் வியாதியஸ்தன் போலவும் தேகம் அதிகமெலிந்து இளைத்தவனாகவும் அந்தமரத்தினுடைய கொம்பை பிடித்து இரு கண்ணையு மூடிக்கொண்டுநிற்கிறான் மூச்சுக்கொரு தடவை சத்தம் போடுகின்றான் எவ்விதமானால் ஓ, என்னுடைய உயிரேமதியே நான்உன்னைவிழுந்துவேறுபட்டிருக்கிறது என்றால் சகிக்கக்கூட வில்லையேயென்று இவ்விதமானசத்தம்போட்டு அழுதுகொண்டு நிற்பவனை ஹாத்திம் கண்டு மிகுந்தமனவருத்தமடைந்து இதுவென்ன ஆச்சரியமாகயிருக்கிறது என்று கிட்டே முடுகியவனைக் கேட்கிறார் ஓ, வாலிபனே இவ்விதமாக நீ வன் துயரப்படுகிறாய் உன்னுடைய துயரத்தின்சங்கதியை என்பேரில் தயவுசெய்துசொல்வீராகில் நலமென்றுகேட்க அப்போது அச்சொல்லைக் கேட்டு கண்ணை மூடிக்கொண்டு தன்னுடைய அழுகையை அழுதுகொண்டு பதில்ஜவாபுசொல்லாமல்நிற்கின்றான்பினனுமிரண்டுதடவை கூப்பிட்டார்அதற்கு மவன்ஜவாபு கொடுக்கவில்லை பின்பு மூன்றாந்தடவை யிவ்விதமாகச் சொல்லுகிறார்ஓ, வாலிபனேநான் மூன்றுதடவை கூப்பிட்டபோதிலும் நீ ஜவாபுகொடாததால்ஊமையோ அல்லதுகாதுகேழ்க்காதசெவிடனோவென்றுபலமானசத்தமாகக்கூப்பிட்டார் இம்மொழியைக் கேட்டவுடனே கண்ணைத் திறந்துபார்த்து சொல்லுகிறான்ஓ,மனிதனே நீயார்என்னிடமாக உனக்கென்னவேலையிருக்கின்றது நீ எங்கிருந்து வந்தவனென்று கேழ்க்க ஹாத்திம் சொல்லுகிறார் ஆண்டவனுடையபடைப்பில்நின்றுநானுமொருமனிதனாகயிருக்கும் நானுமிந்த காடு வனாந்திரமெல்லாம் திரிந்துகொண்டிவ்விடம்வந்து சேர்ந்தேனாகையால் உன்னுடைய சரித்திரத்தைச்சொல்லவேண்டுமென்று நீ அழுகின்றபயனையும் துயரமாகச்சொல்லுகின்றமொழியையும்எனக்குத்தெரிவிக்கவேணுமென்றுமிகுந்தவணக்கமாகக்கேட்க அதற்கவன்சொல்லுகிறான் ஓ,வழிப்பயணம் போகிறவனே உன்னைப்போல் வெகுபேர்கள் இந்த வழியில் வந்து அவர்களும்

என்னுடைய சங்கதியைப்பற்றி யாராவது என்னுடைய நோய்க்கு மருந்துகொடுத்தவர்கள் ஒருவருமில்லை ஆகையால் என்னுடைய சங்கதியை நீ ஏன்கேட்கிறீர் அதனால்யாதொரு பிரயோசனமு மில்லை நீர் வந்தவழியைபார்த்துக்கொண்டுபோகலாம்நீவன் என்னைவருத்தப்படுத்துகிறாயென்னை யின்னமும்விசன மடையும்படிக்குச் செய்கிறாயென்றுசொல்ல அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் ஓ, துக்கமுள்ளவாலிபனே நீ உன்னுடைய சங்கதியை வெகுபேருக்குச் சொல்லியிருப்பாயென்று தெரியவருகிறது ஆனால் நீர் ஆண்டவனுக்காக உன்சங்கதியை எனக்கு சொல்லவேண்டியது என்னுடைய மனதிலும் இந்த ஆசையிருக்காமல் போகவேண்டு மென்றுசொல்ல அப்போது அவன்சொல்வான் நல்லது நீர்கேட்கவேணுமாகில் இப்போதுஎன்னருகில்உட்காருமென்றுசொல்லிஎன்புத்தியெனக்குஸ்திரமானால் அப்போது என்னுடையவாலான சங்கதிகளைவிபரமாகச்சொல்வேனென்றான் அதுபோல்ஹாத்திம் அந்தமரத்தின்கீழே உட்கார்ந்தார் அப்போதந்த துயரமுள்ளவாலிபன்சொல்லுகிறான் ஓ, வாலிபனே நானகப்பட்டவன்மிகுந்தவருத்தமடைந்திருக்கிறதாவது நான்வர்த்தகரானசவுதாகரிகுவரும்என்னுடையகூட்டமானவர்சிலசிலதினுசுவாரிப்பட்டுபட்டாவளிகளும் கைகட்டுகளும் (ரு)(உ௱)ஒட்டைகளின்பேரில்சுமையேற்றிக்கொண்டுவெகுதிரளாகக்கூடிக்கொண்டுவர்த்தகஞ்செய்யநான் ரூமூக்குபோகும்படிக்கு வருகிறபோது இதுவரைக்கும்என் கூட்டத்தோடுவந்தேன் பின்பு விடியற்காலையாகியிருக்கிற வேளையிலெனக்கு ஹாஜத்துதென்னு மலவாதைக்குப்போகும்படிக்குநேரிட்டது அப்போதுஎன்னுடையகூட்டத்தைவிட்டுவிலகி இந்தமலையான அருகாமையில்பேய்ஹாஜத்தில்நின்றுபருகத்தாகிதுப்பாவுசெய்து கொண்டுபார்க்கும்போதுவழிதப்பிப்போகையில்நாலுநான்குதிசைகளிலும்ஓடிப்பார்க்கையில் அந்தக்கூட்டங்கள் போனவழிதெரியாமல் வெய்யிலும்கானலிலும்அலைந்துதடுமாறிபசிதாகத்தால்மயக்கம்போலெனக்கு நேரிட்டது அப்போதுநானிந்தமரத்தின்கீழேவந்துபடுத்துக் கொண்டேன்.

பின்பு கொஞ்சநேரம் பொறுத்து கண்களைத்திறந்து எழுந்துபார்க்கும்போது என்முன்னாலே ஒரு பெண்ணான பரியானவள் வந்து நின்றாள் அவளுடைய அழகையும்வடிவையும்லட்சணத்தையும்நான் கண்டுமயங்கி என்னுடைய அறிவானதுகுன்னியாதொன்றுந்தெரியாமல் மயக்கங்கொண்டு கீழேவிழுந்து சொரணைதப்பிக் கிடந்தேன் அப்படியிருக்க அந்தப்பரியானவள் என்னுடையதலையை தன்னுடைய



துடையின்மேல் எடுத்துக்கொண்டு பன்னீரால் என்முகத்தில் தெளிக்க நான் உஷாராகி விழித்து பார்க்கும்போது என்னுடைய தலை யவளுடைய தொடையிலிருக்கக் கண்டு நான் மிகுந்த சந்தோஷமடைந்து ஆயிரமாயிரமாலும் அதிகமோகமயக்கங் கொண்டு பின்பு நானெழுந்து நின்று அந்த பரியான பெண்ணைக் கேட்டேன் ஓ, பெண்ணாகிய என்னுடைய அருமையான இன்பமுள்ளவளே நீ யாராகயிருக்கிறாய்இந்த வனாந்திரமானமனிதசஞ்சாரமில்லாத இடத்தில் நீ எங்கேவந்தாய் என்னசெய்யப்பட்டவ ளென்றுகேழ்க்க அப்போது அவள்சொல்லுகிறாள் நான் பரியினுடைய சாதியாயிருக்கும்இந்தமலையும்அதின்மேலிருக்கும்கோட்டையும்என்னுடையவீடாகயிருக்கும்இப்போதுநான் மனிதன்பேரில்இச்சைபட்டுக்கொண்டிருந்தேன் இன்றையதினம் உன்னைஆண்டவன் இப்போதுஎன்னிடத்தில் சேர்த்தானென்றுபலவிதமாசருசிகரமான மொழிகளைச்சொல்லநானவ்விதமானபயித்தியங்கொண்டவனாகிவிட்டேன்என்னுடைய ஆஸ்திகளும் பொருள்களும் கொண்டுபோனகூட்டத்தை சுத்தமாக மறந்துவிட்டேன் இவ்விதமாக அந்தப்பெண்ணென்பவள் என்னோடுமிலகான்மிகுந்த ஆசையன்புடன் என்னுடையஉயிராகியவோளினைதன்னுடையஆனதுபன்றுகூந்தலின்மயிரால்மயக்கிவிட்டபின் நாவனனோடு ஆசையென்றசாகரத்தில் மூழ்கி(ரு)மாதம் இரவும்பகலும்ராகிகேளிக்கையாக அநுபோகஞ்செய்துகொண்டு இவ்விதமாகஇருக்கிறவேளையிலொருநாள்நான் அவளிடமாகச்சொன்னேன் ஓ பரிசாத்தாகியபெண்ணழகியே இந்தவனாந்திரமான மனிதர்கள்சஞ்சாரமில்லாதஇடத்திலிருப்பதில் உனக்கென்னபாயிதாயிருக்கிறது நாம் பட்டணங்களில்போயிருந்தால்சவுக்கியமாகவு மிகுந்த சந்தோஷமாகவும் இருக்கலாமென்றுசொல்ல நல்லது உன்மனதுக்கு அப்படியிருக்குமாகில்மெத்தநலந்தான் போகலாமென்று நான் கூப்பிட என்னுடையவீடு அதிக அருகாமையி லிருக்கிறது ஆகையால் என்னுடைய இனத்தார்களைக்கண்டு பிரியாகூறி அவர்களிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு வருகிறேன் ஆறுல்பத்திரமாகநீ, நான்வருமளவும்இவ்விடம்விட்டுப்போகவேண்டாமென்று அவள்சொல்ல அதற்கு நல்லது உன்மனங்கொண்டபடிபோய்வரலாம்ஆனால் நீ நிச்சயமாகஎப்போதுவருவாயென்றுகேழ்க்க அவள் ஏழுநாளையில் வருவேன் நான் வருமளவில் இவ்விடம்விட்டு போவாயாகில் நீ மிகுந்த விசனமடைவா யென்று என்கூட இக்கரார்செய்து கொண்டுபோனவள்(எ) வருஷமாகியும் இந்நா

ள்வரையிலு மிவ்விடம்வரவில்லை அவள்வாக்கு மாறிப்போயிருக்கிறுள் அப்படியிருப்பதால் நான் அவளை எங்கும்போய் விசாரிக்கலாமென்றாலும் எனக்குகூடவில்லை ஒருவேளை இவ்விட மவள்வந்து என்னைக் காணவிட்டால் ஆண்டவ னறிவான் அவளென் பேரில் என்ன குற்றஞ் சொல்லுவாளோ நான் வெளியேபோய் தேட எனக் குதவாது பலனுமில்லை எனக்கு ஜீவனமானது இந்த மரத்தில் நின்று வெளிப்பட்ட இலைகளாகயிருக்கும் தாகத்துக்கு இந்த குளத்திலுடைய தண்ணீராகயிருக்கிறது ஆனால் பூமியானதுகெட்டியாகவும் வானமானது ஆலவாக யிருப்பதால்நானென்ன செய்வேன் இருக்கயிடமுமில்லை நடக்கஎனக்குதாகத்துமில்லைஇவ்விதமானசொல்லை ஹாத்திம்கேட்டு மிகுந்த மனவருத்தமடைந்து கண்ணீர்சொரிந்து சொல்லுகிறார்.

ஓ, பெண்ணாசைகொண்ட பேதையானபிரியனே அந்தப் பெண்ணானவளெதாவது தன்னுடைய வீட்டின் அடையாளம்சொல்லியிருக்கின்றாளா அல்லதுதன்பேர்சொல்லியிருக்கின்றாளாதெரிந்தாலதையெனக்கு சொல்லுமென்றுகேழ்க்கனனக்கு இவ்வளவேதெரியும் அவள் இனத்தார்கள்கோஹேஅல்காவிலிருக்கிறவர்களென்றும் பரிசாதியென்றும்அவளெங்கேபோயிருக்கின்றாளோஎனக்குத்தெரியாதுநல்லதுவாலிபனே அவள் உன்னிடமாக உத்தரவுபெற்றுக்கொண்டுபோகும்போதுஎந்தமுகமாய்ப்போனாள்அப்போதுசொல்லுவான்என்முன்னுகஎன்னிடதுபக்கமாக(௰) (௰௨) அடிபோனாள்பின்புதெரியவில்லைஎங்கேயாகிபோய்விட்டாளோவென்றுசொல்லஅப்போதுஹாத்திம்சொல்லுகின்றார்நல்லதுநீ அவளுடைய ஆஷக்குள்ளாகயிருந்துஎன்னோடுகோஹேஅல்காவுக்குவந்தால் அவளைஆண்டவனுதவியால் எவ்விதத்திலும்நான்தேடிப்பிடிக்கிறேனென்றுசொல்ல அப்போது அந்தவாலிபன்சொல்லுகிறான் நீர்சொல்வதுநிசந்தான் ஒருவேளையென்னுடையமாஷூக்கானவள் இவ்விடம்வந்துபார்க்கும்போது என்னையவள் காணதிருப்பாளேயாகில் அதினால் எனக்குஎன்னநேரிடுமோ அதுவும் கெட்டுப்போனால்அப்போது நான்என்னசெய்வேன் ஆகையாலவள் வந்தால் நலமாச்சுது இல்லாவிட்டால் அவளுடைய தேட்டத்தின்பேரில் இவ்விடத்தில் நானிறந்துபோவேனென் றுசொல்லதைக்கேட்டுஹாத்திம்மிகுந்தவருத்தமடைந்துகண்ணீர்சொரிந்து சொல்லுகின்றார் ஓ யென்பிரியனே நீ யொன்றுக்கும் யோசியாதே



போனார்கள்அப்போது ஒரு இடத்தில்சேர்ந்துபரியானவர்கள்சொல்லுகிறார்கள்இனியிவ்விடத்தில்நின்றுநாங்கள்முன்னடிவைக்கக்கூடாது எவ்விதமானால் இவ்விடத்திலின்று எங்களுடைய எல்லைமுடிவாகி விட்டதென்று அவ்விடத்தில் நின்றுகொண்டு ஹாத்திமுக்குச் சொல்லுகிறார்கள்எவ்விதமானால் நீரிந்த வழியைப்பார்த்துக்கொண்டு ஒருபக்கமுந் திரும்பாமல் சரியாகநடந்துபோனால் ஆண்டவன் கிருபையால் இன்னமும் கொஞ்ச நாளைக்குள்ளாக அல்காமலைக்கு நிச்சயமாகப் போய்ச்சேருவா யென்று சொல்ல ஹாத்திம் அவர்களுடைய உத்தரவு பெற்றுக்கொண்டு முன்னால் நடக்கிறார் அவ்விதமாக நடக்கையில் ஒரு மாசத்துக்குப்பின்பு அவ்விடம்போய்ச்சேர்ந்து பார்க்கிறபோது நாலுநாழிகை இராவாகிவிட்டது.

அவ்விடத்தில் தன்கண்ணுக்கு ஒரு ஊர்போல் தோற்றியது அதில் நின்று மிகுந்த துயரமாக ஒரு அழுகை சப்தமானது வருகின்றதுஇவர்காதில்விழ அப்போது அவ்விடத்தில் நின்றுகொண்டு உற்றுக் கேழ்க்கும் போது ஹாத்திம் என்னுகிறார் நீ ஆண்டவன்பாதையில் இடுப்புகட்டி யிருக்கிறாய் இவ்விதமான துக்கத்தின் சத்தம் கேட்டு நீ அப்புறம்போனால் நாளைக்கு ஆண்டவனுக்கு எவ்விதமாக ஜவாபுசொல்வாய் உன்னுடையபேர் துனியாவில் எவ்விதமாக நிலைநிற்கும் நீ மண்ணுக்குப் போய்விடுவா யல்லவா ஆனால் இது நலமாகயிருக்கும் உன்னுடைய சவுக்கியத்தைப் பாராட்டாதே அவசரியப்படாதே இந்த முசீபத்தால் சங்கதியின் சேதியையறி உன்னையால் கூடிய மட்டும் வருத்த மெடுத்துக்கொண்டு நன்மைசெய்வாயானால் அதனால் உனக்கு மிகுந்த பலன்கிடைக்கும் சந்தேகப்படாதே இவ்விதமான எண்ணங்களெண்ணி தைரியப் படுத்திக்கொண்டு அவ்விடத்தில் நின்றுவழிப்பட்டு இராவெல்லாந்திரிந்து நான்கு பக்கங்களிலும் தேடிக்கொண்டு திரிகையில் பொழுதுவிடிந்ததுஅவ்விடத்தில்நின்று சத்தம்வந்ததோ அவ்வழியைப் பார்த்துக்கொண்டு போகிறார் அவ்விதமாகப்போய் பார்க்கிறபோது ஒரு வாலிபன் மிகுந்த அழகும் வடிவுமுள்ளவனாக யிருந்துகொண்டு மிகுந்த துயரத்தோடே தேம்பிக்கொண்டு மிகுந்த துக்கமாக சத்தம் போட்டுக்கொண் டிருப்பதை ஹாத்திம்பார்த்து ஓ, மனிதனே ஆண்டவனுடைய பக்தாவே நீ இவ்விதமாக மிகுந்த துக்கத்தோடு சத்தத்துடனே ஏன அழுகிறாய் இப்பேர்ப்பட்ட துக்கமுஞ் சிரமமும் உனக்கு வரும்படி

ய்ாகச் செய்தவர்யார் அம்மொழியை எனக்கறிவிக்கவேண்டு மென்று
கேழ்க்க அப்போது ஆறுதலானசொல்லை அந்தமனிதன்கேட்டு பின்
ன்னேயுமிந்த துயரத்துடனே அழுது பின்னுஞ் சொல்லுகிறான் கா
ணகப்பட்டவன் சிபாயியாகயிருக்கும் எனக்குசேவையில்லாமல் என்
னுடைய ஊரை விட்டுப் புறப்பட்டுவழிதெரியாமல் இந்த தேசத்தில்
வந்துசேர்ந்தேன் பின்பு அந்தஊரிலுள்ளவர்களைக்கண்டு இந்தபட்ட
ணத்துடையபாத்துஷாவின்பேர் என்னவென்றுகேட்டேன் அதற்கவ
ர்கள் சொன்னது இந்தபாத்துஷாவானவர் மஸ்ரூ என்னும் பரியாசக்
கார குனியஞ்செய்யப்பட்டவனாக யிருக்கிறானென்று சொல்லக்கே
ட்டுநான்பயந்து அவ்விடம்விட்டுஒருகாட்டின்வழியைப்பிடித்துக்கொ
ண்டு ஓடிப்போனேன் அப்போது அவ்விடத்தில் ஒருஅழகானதோட்
டமும் மதில்சூழக்கட்டியதாகவும்பலபல கனிவர்க்கமரங்களும் பூவி
ன்சோலைகளும் குளிர்ந்தவாடையுள்ளதாக இருக்கக்கண்டு அதினுள்
ளேபோய் பார்க்கவேண்டு மென்றெண்ணி அதினருகாமையில் போ
ய் குதிரையை விட்டு கீழேயிறங்கி பின்பு மனதிலச்சங் கொண்டு
காலைத்தடி யுள்ளே போனேன் உடனே அவ்விடத்தில் நின்று ஒரு
கூட்டம்பரிகள் அனேகவிதமான சிங்காரத்துடனே நிரேகங் கொண்
ணாதுராத்திஜூஷைகைகள்பூண்டுகொண்டு இவ்விதமான உடுப்புகளு
டுத்திக்கொண்டு சூரியப்பிரகாசமானஒளிவுபொருந்தி யபெண்கூட்ட
ங்கள்மிகுந்த வேடிக்கையாகச்சிரித்துவிளையாடிக்கொண்டு இருப்பதை
க்கண்டு நான் எண்ணினேன் இந்தப்பெண்களாரோஒரு பாத்துஷாவு
டையவீட்டுப்பெண்கள் பெண்சாதிகள் வந்திருக்கிறார்கள் தோட்ட
த்தைச்சுத்திப் பார்க்க வேண்டுமென்று இப்பெண்கள் சுத்துகிறது
போல் தோணுதென்று அன்னியப்பெண்களைகெட்டபார்வையால்கா
ம் பார்க்கக் கூடாதென்று மனதில் அச்சங் கொண்டு அவ்விடம்
விட்டுபின்னால் திரும்பினேன் அப்போது அந்தப்பெண்கள்என்னை
க்கண்டோடி தன்னுடைய பீவியாகிய எஜமானவளிடமாகப்போ
ய்சொன்னார்கள் அவளாகப்பட்டவள் அந்தபட்டணத்துக்கு பாத்
துஷாவான பரியாசக்கார குனியக்காரனுமாக யிருக்கிறவனுடைய
பெண்ணானவள் இவர்கள் சொன்னவுடனே அவள் தன்னுடை
யமசனதிலிருந்து எழுந்தென்னைப் பார்த்து அந்தப்பெண்களுக்குஉ
த்தரவு செய்தாள் நீங்கள் அந்த மனிதனை சீக்கிரமாகப் போயழைத்
துவாருங்களென்றுசொல்ல அதுபோலென்னைகூட்டிக்கொண்டுபோ
ய்விட்டார்கள் அப்போதென்னை ஒருபெரியசிங்காரமான அழகுபொரு



அவனுடையபேரென்னவென்று கேழ்க்கஅக்கன்பரிஎன்றுசொல்ல
அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் ஓ எனதன்பனே அஞ்சாதே
ஆண்டவன் கிருபையால்கோறை அல்காவுக்குப்போய் எவ்விதத்
திலும் உன்னுடையமாஷூக்கானவளை தேடி உன்னிடமாச்சேர்த்து
வைப்பேன் அல்லது உன்னை அவளிடமாகக்கொண்டுபோவேன் அவ
ளுடையவீட்டை இன்னயிடமென்றுதேடிநிச்சயிப்படுத்தி உன்னிட
மாகநான்வருவேனென்று பலவிதமானதயிரியஞ்சொல்ல அப்போது
அவன்சொல்லுவான் ஓ என்னுடையதோழனேஇக்காள் வனையில்
உன்னைப்போல் ஒருவருமெனக்கு இவ்விதமாகதயிரியஞ்சொன்ன
வர்கள்ஒருவருமில்லை தன்னுடைய சொந்தவேலையைவிட்டுப்போட்டு
பிறத்தியாருடைய வேலையில் இடுப்புகட்டி நின்றவர் ஒருவருமில்
லை ஆகையால்உன்னுடையவேலையைப்பார்த்து சினேகிதமான பிரி
யனே என்னை நீ மென்மையபாடாகப் பேசவேண்டாம் நான்பிறந்
த நாள்முதல் இருந்தவரையில் அன்னியர்க்காக வேண்டி என்னு
டைய சிரசை ஆண்டவன் பேரால் உள்ளங்கைநெல்லிக்கனிபோல்
வைத்துக்கொண்டு திரிகின்றேன் இவ்விதமாக என்னுயிருள்ளவ
ரையிலதிரிவேன் யாருக்குஎன்னவேண்டுமோ அதை அவர்களுக்கு
கொடுக்கவும்சேர்க்கவும் இவ்விதமானமொழிகள்(ஐ)(ரு)விதமாகபே
சிவிட்டு அவனிடமாகஉத்தரவுபெற்றுக்கொண்டு அந்தப்பரியானவன்
போனவழியைப்பார்த்துக்கொண்டுபோனார் அவ்வழியை நோக்கிபுற
ப்பட்டு சிலநாள்நடந்து மலையினருகில்போய்ச்சேர்ந்து அந்தமலையின்
மேலேறிப்பார்த்தார் அதில் அனேகவிருட்சங்கள்கனிவர்க்கமுள்ளது
களும்பூச்சோலைகளும் வண்டுகள்மதுவருந்திதேப்பாடுகின்றது இவ்
விதமாக இருப்பதைஹாத்திம் பார்த்துக்கொண்டுபோகையில் அவ்
விடத்தில் ஒருஇடமானது மிகுந்த துப்பரவுள்ளதாகவும் சாபாக
தெரிகின்றது அவ்விடத்தில் (ஐ) மரம் குளிர்ந்தநிழலுள்ளதாகவும்வா
டை வருகின்றது மன்றி அதிலொரு அழகுபொருந்திய மறைவிரு
க்கின்றது அதை ஹாத்திபார்த்து அவ்விடத்திற் போனார் அங்
கே போனவுடனே உட்கார்ந்து படுத்து தன்னை யறியாமல் நித்
திரைவந்து கேட்டது நான் படுத்துவிட்டேன் சாயந்திரவேளையில்
காவுபரிகள்வந்து விரிப்புகள் விரித்து கட்டில் மெத்தைகள் போ
ட்டு அதின் மேலிருந்து கொண்டு என்னைப் பார்த்து இந்தா
வரு பேர்களும்பேசிக்கொள்ளுகின்றார்கள்இவன்யார் இவ்விடத்து
க்கு எவ்விதமாக வந்தான் இவனைநாம்கேழ்க்க வேண்டு மென்று

யோசனைசெய்து என்னருகில்வந்துஎன்னை முனிப்பாட்டி ஓ, மனுஷ ஜாதியே நீ, இவ்விடத்துக்குள்எந்தவிதமாய் என்ன சங்கதியைக் குறித்து வந்தாயென்று கேழ்க்க உடனே ஹாத்திம் வெகுஜல்தியில் எழுந்திருந்து இவ்விட மவ்விடமாகப் பார்க்கும் போது நாலுபரிகள் நவரத்தினாதிக ளிழைத்த உடுப்புகளால் நகை கள் பொருந்திய தேகம்தெரியாமலிருக்கின்றது தன்னுடைய தலைமாட்டிலிருந்தார்கள் அவர்களைப் பார்த்தவுடனே ஹாத்திம் எழுந்து நின்றுகொண்டு சொல்லுகிறார் என்னை ஆண்டவன் கொண்டு வந்து விட்டான் அல்கா என்னும் மலைக்குப்போய் அல்கன்பரியென்பவளை பார்க்கப்போகின்றேன் அது எவ்விதமெனில் ஒரு மனிதனிடமாக எழுநாள் வாயிதாசெய்து விட்டுப்போனாள் எழுவருஷமாகியும் அவள்வரவில்லை ஆகையா லந்தமனிதன் ஒரு மாத்தின் கீழே இருந்துகொண்டு அவளுடைய வியாபகத்தால் இரவும் பகலும் துக்கத்தினுடைய சாகரத்தில் மூழ்கி அவனுயிர் உதட்டில்வந்துபோயிருக்கிறது நானிதற்காக அவளை சமாதானஞ்செய்யப்போகிறேன் ஆனால் ஒருவருக்கு வாய்தாசெய்து அதுபோல் நடக்காவிட்டால் அதானது நன்மையானதல்லநற்குணமுள்ளவர்களின் செய்கையல்ல இம்மொழியைக்கேட்டு குஞ்சிரிப்புகொண்டுசொல்லுகிறார்கள் ஓ, மனிதனே அவளானவள் அல்கன்பரி அல்கா மலையின்ஷாஜாதியாகயிருக்கும் அவளுக்கு அப்படிக் கென்ன அகத்திய மிருந்தது யாரோ ஒருமனிதனிடமாகச்சேருவதற்குவாய்தாசெய்ததாக தெரியவந்தது நீயானவன் அந்த மலைக்குப்போய் அவளைக்காண வேண்டுமென்றுநாடுகிறாய் அவ்விடம்போவதுதப்பிதம் அப்படி நீபோவாயானால் எவ்விதமாக உயிர்தப்பிவருவாய் அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் அது எவ்வித மிருந்தபோதிலு மிருக்கட்டும் எவ்விதத்திலும் அவ்விடம் நான்போகாமல் இருக்கமாட்டே னென்றுசொல்ல அப்பரிகள் சொல்லுகிறார்கள் நல்லதுநீஎங்களோடுஇன்றையதினம் சேர்ந்திருப்பாயாகில் நாளையதினம் நாங்கள் அல்காமலைக்குப்போகும்படியாக வழி காண்பிப்போம் அம்மொழியைஹாத்திம் கேட்டு மெத்தநலமென்று சம்மதித்தார் எவ்விதத்திலும் என்னவேலையானாலும் நலமென்றெண்ணி அவள்வீட்டில் விருந்தாளியைப்போலிருந்து அன்றிரவில் அவர்களோடுகூடிக்கலந்துவேண்டிய அனுபோகஞ் செய்துபொழுதுவிடிந்த பின்பு ஹாத்திம் அல்கா மலைக்குப்போகஎழுந்து போகையில் அவர்களும் ஹாத்திம்கூட நடந்து எழுநாள்வரையில்



ந்தியமஹாலுக்குள்ளழைத்து ஒருமனையின்மேலிருக்கச்சொல்லிதானுமிருந்து என்னோடு சரசம் பண்ணிக் கொண்டு அவ்விதமாகயிருக்கையில் அவளுடையதகப்பன் அந்த தோட்டத்துக்கு வந்தான் முன்னால் என்னுடைய குதிரையைப்பார்த்து அவ்விடத்திலுள்ளவளை விசாரித்தான் இந்தகுதிரையானது யாருடையதென்றும் கேழ்க்க சகலரும் அச்சமடைந்து ஜவாபுசொல்லாமலிருந்துவிட்டார்கள் முன்னால்நடந்துதன் மகளிடமாக ஒருவரிருப்பதைக்கண்டுநெருப்பாகிப்போய் கொன்றுபோடவேணுமென்று கிட்டே முடுகினான் அப்போது அவனுடையமகள்பயந்து சத்தம் போடுகிறாள் எவ்விதமானுல் நான்பேசுகுறைவென்ற குற்றவாளியல்லஎன்னுடையகுற்றத்தை ஆண்டவனுக்காக முதற் குற்றத்தை சாபித்துசெய்து பின்பு நீரெங்ளை என்னசெய்யவேண்டுமோ அதைச் செய்யலாமென்று சொல்லக் கேட்டு அவன் நிற்கையில் அந்தப் பெண்ணின் தாதியானவள் வந்து சொல்லுகிறாள் ஓ, குதாவந்தே இப்போது தம்முடையமகள் பெரியமனுஷியாக யிருக்கிறாள் ஆகையால் அந்தப்பட்டணத்தில் தங்களுக்குத்தகுந்த மருமகன் லாயக்கானவன் ஒருவனும் சரியானவனில்லை தற்றினாலெஒருவன் மிகுந்தலாயக்கானவனாகவும்மிகுந்தஅழகுடைய வடிவுமுள்ளவனாகவும் பெரியமனிதருடைய பிள்ளையைப்போல் தோனுகிறது அவன் மிகுந்த வெழுக்கமுடையவன் நம்முடைய பெண்ணின்முகத்தைதலையெடுத்துப்பார்த்தவனல்ல இதுவரையில் ஒருபேச்சும் பேசினவனல்ல நம்முடையபெண்ணுக்குத் தகுந்தசோடாக இருக்கிறான் ஆகையாலவனுக்கு கலியாணம்முடித்துக்கொடுத்தால்நலமாகயிருக்கும் ஆனால் இவர்களில் ஒன்று யாதொரு குற்ற மில்லை அப்படியிருக்க நீர் அவர்கள்பேரில் சந்தேகப்பட்டு இவர்களைகொன்று செய்வீராகில் நமது தேசத்திலுள்ள ஜனங்களுக்கு ஒரு [illegible]மாக யிருக்கும் பின்புகியாமநாளையில்இவர்களுடையபழி உங்கள்பேரில் சுமரும் ஆண்டவனுக்கு நீர் என்னஜவாபு சொல்லுவீர் அப்போது அவன் தன்னுடைய மகளிடமாகக்கேட்டான் ஓ, மகளே உன்னுடைய எண்ணம் எவ்விதமாக இருக்கின்றது அப்போது அந்தப்பெண்சொல்லுகிறாள் என்தகப்பனே நான் இன்றுள்வரையிலும் அந்நியமனிதனுடைய முகத்தைப்பார்த்ததில்லை முதலாவது இந்தமனிதனை [illegible] எனக்குலாயக்கானவனை இருப்ப [illegible] பசந்துபண்ணி [illegible]செய்து இருக்கிறேன் நல் [illegible] முபாறக்காகட்டும் ஆனால்

இவன்என்னுடையகவுல்(௩ம்) சரியாகச்செய்யவேண்டியது அம்மொழியைக்கேட்டு நான் தாங்களென்னசொல்லுகிறீர்களோ அதை நான் செய்வேன் அப்போது அவன்சொல்வதாவது ஓ, மனிதனே மூன்று சவால்களில் (முதலாவது சவால்—பரீரோ மிருகஜாதியின் ஜோடு—க, கொண்டுவரவேண்டியது) இரண்டாவது சவால்—சருக் என்ற கரும்பாம்பின் மோருகொண்டு வரவேண்டியது (மூன்றாவது) (சவால்) ஒரு இரும்புகடாயில் நெய்யைவிட்டு அடுப்பில்வைத்து அந்தநெய்யானது கொதியிட்டு வருகின்றவேளையில் அதில் முழுகிவரவேண்டியது இந்த மூன்றுசவால்களை நீ அதா செய்வையேயானால் என்னுடையபெண்ணை உனக்குக்கட்டி கொடுப்பேனென்றுசொன்னான்இவ்விதமானசவால்களை நான்கேட்டுஅச்சமடைந்து அப்போது நான் இந்த பெண்ணைக்கொண்டுசெவுக்கியத்தை யடைகிறதைப்பார்க்கிலும் நமதுதேசம் போகலாமென்று வெளிப்பட்டு வந்தேன் அப்படியிருக்க இவளுடைய ஆசையானது என்னை எட்டி யடிவைக்ககூடாமல் இந்த அந்தரமானகாட்டில் அன்ன ஆகாரமில்லாமலும் இவனுடையசவால்களைநாம் எப்போதீர்க்கப்போரோம் அந்தப்பெண்ணைஎப்போதுகட்டிநம்முடையஆசையைநிறைவேற்றப்போரோமென்றுஎண்ணிக்கொண்டுஇரண்டுவருஷகாலமாகமண்ணைவாரித்தலைமேலேபோட்டுக்கொண்டுநான்குபக்கங்களிலும்கொக்கைப்போல் நீளிக்காகத் திரிந்து பக்ஷாரம் போல் பறந்துக்கொண்டு அழுது திரிகிறேனென்று தன்னுடைய சங்கதிகளை ஹாத்திமுக்குசொன்னவுடனே அவர் மிகுந்தவிசனமடைந்து சொல்லுகிறார்ஓ, மனிதனேஆண்டவன்கிருபையால் உன்னுடையஷறத்துகளை நான் தீர்த்து உன்னாசையுள்ள பெண்ணோடு உன்னைக்கூட்டிவைப்பேன் என்னுடையசொல்லை நீ நினைவுவைக்கவேண்டியதெவ்விதமானால் ஆண்டவனென்னை இதற்காகவேண்டி உண்டாக்கியிருக்கிறான்யாதொருவருக்குசங்கடமானவேளையில்உதவிஒத்தாசைசெய்துஅவர்களுக்கு கொடுக்கும்படியாகப்பின்னும் பரீரோவென்றஜான்வருடைய மூளையையெடுக்ககிடரும்நானும்கஷ்டமடந்தான் என்றகாட்டுக்குப் போனேனமல்லவா ஆகையால்இப்போதுநமக்குபோகவேண்டிய அகத்தியம் விழுந்ததென்றெண்ணி அந்தசிபாயிக்குவேண்டியதயிரியஞ்சொல்லி விட்டு அவ்விடத்திலின்று அவர் உத்தரவுபெற்றுக் கொண்டு போய் விட்டார் பின்பு அதைப்பார்த்துக் கொஞ்ச தூரம் நடந்து போகிற வேளையில் அவ்விடத்தில்



பார்க்கும் போது ஒரு கோட்டையின் அகழின்கீழே ஒரு பெரிய கும்பலாகவிருகுகுவிக்குமெருபேர்கள் கூட்டமாக நின்றுகொண்டு நெருப்பு வைத்துக்கொளுத்த யெத்தனமாக யிருக்கிறார்கள் அதை ஹாத்திமானவர்பார்த்து இதென்ன ஆச்சரியமென்று யோசனைசெய்து மனவருத்தமடைந்து நின்றுகொண்டு இவர்கள் நெருப்பிருல் கொளுத்த வேண்டியசங்கதி இன்னதென்று தெரியவில்லையென்று அவ்விடத்திலுள்ளவர்களைகேழ்க்க அவர்கள்சொல்லுகிறார்களவ்விதமாறஞ்சுருபெரியமிருகமானதுமிகுந்தபயங்கரமாய்வந்து(௩)(௪)மனிதனை அடித்துதின்றுபோகிறது இவ்விதமாகஇந்தமிருகமானதுதின்றுவருவதால் இன்னங்கொஞ்சநாளைக்குள் இந்தபட்டணம் பாழாகிப்போகுமென்றுசொன்னார்கள் அம்மொழியைஹாத்திம்கேட்டுமிகுந்தவிசனமடைந்து சொல்லுகிறார் எவ்விதத்திலும் இந்தயேழைகளுடையபலாவியெழுப்பத்தை நாம் விலக்கவேண்டுமென்கிற நாட்டங்கொண்டு ஒரு சத்திரத்தில் போயிருந்து கொண்டு அந்த ஊரிலுள்ளவர்களை அழைத்து ஹாத்திம் சொல்லுகிறார் ஓ, மனிதர்களே நீங்கள் நான் சொல்வதுபோல் கேழ்ப்பீரானால் அந்தமிருகமானது வந்துஉங்களுரைச் சேதம் செய்யாமல் நான் செய்கிறேன் நான்சொல்வதுபோல் அந்த மிருகம்வருகிற பாதையில் ஒரு பெரிய பள்ளம் வெட்டி அதுகிரைய மறிறகை நிரப்புங்கள் நான் அதில் மறைவாக ஒதுங்கி பொதும்பியிருந்து அந்த மிருகம் வருகின்றபோது நானதைச் சேதப்படுத்திவிடுவேன் நீங்கள் அப்படிசெய்வீர்களானால் உங்கள் ஊரைவந்து அந்த மிருகம்சேதப்படுத்தாமல்செய்வேனென்று ஹாத்திம் சொல்லக்கேட்டு அந்த ஊரிலுள்ளவர்கள் சகலரும் கூடிக்கொண்டு ஹாத்திம்சொன்னதுபோல் பெரியகுழிவெட்டி அதுநிறைய காய்ந்தவிறகை நிரப்பி விட்டார்கள்.

பின்பு ஹாத்திமானவர் மறுநாள் அந்தப்பள்ளப்பொதும்பில்போய்மறைந்துகொண்டிருந்தார் அப்போதுபாதி ராத்திரியில் அந்தமிருகமானதுவருவதை ஹாத்திம் பார்த்தார் அது ஒரு மலையைப்போல் வருகின்றது பின்பு அது அருகில் நெருங்கிவந்ததை அவர் பார்த்து இந்த மிருகமானது மூலம்மன் என்னும் பேருள்ளதென் றறிந்து அதற்கு கால் எட்டுதலையேழு அதில்கடித்ததலையைப் பார்த்தால் யானைத்தலைபோலிருக்கின்றது மற்ற ஆறுதலையும் புலியின் முகம்போலிருக்கின்றது உடலில் யானைத்தலைபோ லிருக்கின்றதலைக்கு கண்கள்

ஒன்ப திருக்கின்றது அதில் நடுவிலிருக்கின்ற கண்ணுமத்தாப்பு போல் மிகுந்த பிரகாசம் பொருந்தி தோற்றுகின்றது ஆகையால் இதின்கண்ணை சேதப்படுத்தினால் இவ்விடம் வரமாட்டா தென்றெண்ணங் கொண்டு இதின் கோலத்தை யெல்லா மறிந்துதன்னுடைய வில்லையெடுத்து அம்பை தொடுத்துகுறியிட்டு அந்த ஒளிவானகண்ணைப்பார்த்துஅம்பை யெய்தால் அப்போது அந்தஅம்பானதுபோய் நடுக்கண்ணில்தைத்து உருவிப்போய்விடுமென்றுயோசனை செய்துக்கொண்டிருக்கையில் அந்தமிருகமானது வாயைத்திறந்து விரித்துக் கொண்டு பட்டணத்தைப்பார்க்க அருகில் மூடுமேவர் அம்மனிதர்கள் மூன்றிரப்பியவிறகுகளை கொளுத்திவிட்டார்கள் அந்த நெருப்பினுடையசுடராலும்புகையாலும் அந்தமிருகத்துக்குகோட்டையு மதைச்சேர்ந்த வீடுகளும் தெரியாமல் தடுமாறிக்கொண்டு போக பாதைதெரியாமலலைந்து நிற்கையில் அந்தடுமெத்திய மானஆனைத்தலையில் நின்று ஆங்காரத்துடனே ஒருசத்தமானதுவர அச்சத்தத்தைக்கேட்டவுடனே அங்கிருள்ளவர்க ளெல்லாம் பயந்து நடுநடுங்கி அவ்விடத்திலுள்ள நிலங்க ளெல்லா மதிர்ந்தது பின் அந்தமிருகமானதுஅன்னிதியினால் ஒருபாச்சல்பாய்ந்து ஹாத்திமவைவாக இருக்குமிடத்தில்போய் நின்றது அப்போது ஹாத்திமானவர்தன்னுடையவில்லையெடுத்துஅம்பை பூட்டிநிதானித்துஅந்தநடுக்கண்ணைப் பார்த்துஎய்தார்அப்போது அந்த அம்பானது நடுக்கண்ணைபொத்துக் கொண்டு அப்புறம் உருவிப்போய்விட்டது அந்தமிருகமானது கண்ணிலடிப்பட்ட வுடனே நிலத்தில் விழுந்துபுரண்டு ஒருசத்தம்போட்டது அவ்விடத்திலுள்ளகுடிமலைகளெல்லாம்இடிந்திடென்று அசைந்தது அப்படியிருக்க அந்த மிருகமானது எழுந்துதலையைக் கீழேகவிழ்ந்துகொண்டு வந்தவெளியைப் பார்த்து திரும்பிப்பார்க்காமல் ஓடுகின்றது அப்போது ஹாத்திமானவர்அந்தப்பொதும்பைவிட்டுவெளியில் வந்து மற்ற இரவைப்போக்கிவிட்டு விடிந்தபின்பு அந்த ஊரிலுள்ளவர்கள் வந்து ஹாத்திமைகேட்கின்றார்கள்.

ஓ, மனிதனே அந்த மிருகத்தைப்பார்த்து நீ எவ்விதமாக உயிர் தப்பியிருக்கிறாய் அதற்குஹாத்திம் சொல்லுகிறார்என்சிரசின்பேரில் ஆண்டவன் காவலாகயிருப்பதா லவனென்னை தற்காத்துக் கொண்



டான் அந்தமிருகத்தின்பேர்முழைம்மனைகயிருக்கும் ஆண்டவன் கிருபையால் அந்தமூதேவியின்நடுக்கண்ணைச் சேதப்படுத்திவிட்டேன்உங்களையும்உங்களூரையும்விட்டுஅந்தபலாத்கிக்கிவிட்டது அதற்குஅவர்கள் சொல்லுகிறார்கள்நீர்சொல்வதை நாங்களெவ்விதமாகநம்புவோம் அப்போது ஹாத்திம் சொல்லுகிறார்இன்றையராத்திரிக்கு நீங்கள்சகலரும் கூடிகோட்டையின்மேலேறிக்கொண்டுமுழித்துப்பார்த்திருக்கள்இன்றையராத்திரி அந்தமிருகம்வருமாகில் என்னைப்பொய்யனென்றுசொல்லுங்களென்றுசொல்லக்கேட்டுசகலருங்கூடிகோட்டையின்மேலிருந்தெல்லாம்விழித்துக்கொண்டிருந்தார்கள் அந்தமிருகமானதுவிடியவரையிலும்அவ்விடம்வரவில்லை அப்போதுசகலருங்கூடிவந்துஹாத்திமுடைய காலில்விழுந்தார்கள் பின்பு வேண்டிய இலட்சரூபாய்களும் இரத்தினங்களும் தட்டுகளில்நிரப்பி மூன்றுல் கொண்டுவந்து வைத்தார்கள் அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் நானொண்டியாக முசாபரானபடியால் இந்த வஸ்துக்களைவாங்கி நானென்ன செய்வேன் ஆதலால் நலமாகயிருக்கும் ஆண்டவன்பேரால் ஏழை எளியோர்க்கு கொடுத்தால் துனியாவிலும்ஆகிரத்திலும் நலமாகயிருக்கு மிகுந்த பலன் கிடைக்குமென்று அவர்களுக்குச்சொல்லிபின்பு அவர்களுத்தரவுபெற்று அவ்விடம்விட்டுப்புறப்பட்டுபாதையைப்பிடித்துக்கொண்டு ஒருநாள்பயணம் போனபின்பின்பு அவ்விடத்திலே பார்த்தால் ஒருநல்லபாம்பும் கீரிப்பிள்ளையும் சண்டைபோடுவதைப்பார்த்து இன்னுங்கொஞ்சநேரத்தில் இரண்டில் ஒன்றிறந்து போவதைப்போல் தோற்றி ஒரு சத்தம்போட்டு கூடிச்சொல்லுகிறார் ஓ, ஜெவான்களே உங்களுக்கு இப்பேர்ப்பட்டபகையென்ன இவ்விதமாகச்சண்டைசெய்கிறீர்கள் வீணாக உயிரிழந்து போவீர்களென்று ஹாத்திம் சொல்ல அப்போது அந்தப்பாம்பானதுசொல்லுகின்றது இவனென்னுடைய பக்கப்பனைக்கொன்றிருக்கிறான் ஆகையால் நானிவனைக் கொன்று போடுவேனென்றுசொல்ல அப்போது அந்தக் கீரிப்பிள்ளையானது சொல்லும் என்னுடைய இரையானதா லிதையடித்தானன்றுவிட்டேன் இப்போதிதையும்நான்கொன்றுதின்றுவிடுவேனென்றுசொல்ல அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் ஓ, கீரியேஉனக்குதீவேண்டுமாகில் எனக்குசொல்லு நான் என்னுடைய சிரீரத்தில் நின்றுகறி அறுத்துத்தருகிறேன்பின்பு அந்தப்பாம்புக்குஹாத்திம்சொல்லுகிறார் உன்தகப்பனுடையஉயிருக்குபதில்வாங்கவேண்டுமாகில் என்னைக்கொன்றுவிடுங்கொடுவாக ஆண்டவன்பாதையில்என்னுடைய தலையை

க்கொடுத்திருக்கிறேனென்றுசொல்ல அம்மொழியைக்கேட்டு இவ்விர
ண்டும்சண்டையில் நின்றுவிலகி யிருந்தது,

பின்பு கீரியானதுசொல்லும் ஓ, மனிதனே நீ எனக்கு வாய்தா
செய்திருந்தாய் உன்னுடைய இரேகத்தின்சதியைதரும்படியாக இப்
போது நீர் கொடுத்தால் நான் பசியாறி என்னுடைய வீட்டுக்குப்
போய்விடுவேனென்றுசொல்ல அப்போது ஹாத்திம்சொல்லுகிறார்
நல்லது உனக்குவேண்டியசதியை என்னுடம்பில் எவ்விடத்திலுள்
ளதுவேண்டுமோ அதைக்கேள் அப்போது சொல்லும் உன்னு
டையமுகத்தின்சதியைத்தரவேண்டுமென்றுகேழ்க்க அப்போதுஹா
த்திம்தன்னுடையஇடுப்பில் நின்றுகத்தியை அவிழ்த்துதன்னுடைய
முகத்தின்சதியையறுத்துக்கொடுக்கத்தியைமுகத்தில்வைக்கப்போ
கிறபோது கீரியானது மிருதுமாக சத்தமிட்டுச் சொல்லுகிறது ஓ,
இரக்கமுள்ள வல்லமைசாலியே நீர் கொஞ்சம் தாமதப்படுத்துமெ
ன்று நான் உன்னுடைய மனதை யறியலாமென்று சொன்னே
னே யல்லாமல் வேறில்லை யென்று சொல்லி உனக்கும் உ
ன்னைப்பெற்ற தாய்தகப்பனுக்கும்ஆண்டவன்கிருபை உண்டென்று
மிருதுமாக வாழ்த்தி கொஞ்சநேரத்துக் குள்ளாக இவர்களிருவரும்
மனிதருடையரூபமெடுத்துக்கொண்டுநிற்கஹாத்திம்பார்த்துசொல்லு
கிறார் ஓ, என்னுடைய பிரியமானவர்களே இதென்ன சபுபாக யிருக்
கின்றது இப்போது நீங்கள் ஜீவனுடைய கோலமாக யிருந்து
இன்சானுகி விட்டீர்கள் அப்போது சொல்லுகின்றது நாங்களிரு
வரும் ஜின்னுக்குடையகூட்டமாகயிருக்கும் இவனுடைய தகப்பனை
நான் கொன்றது எதினாலேயானால் அவனுடைய மகள்பேரில் நான்
ஆசைக்காகி அப்பெண்ணை யெனக்கு கலியாணம் செய்து கொடுக்க
வேண்டுமென்றுகேழ்க்கஎனக்கு அப்பெண்ணை கட்டிக்கொடாதறி
னால் இவன் அந்தப்பெண்ணுடைய தமையனாகயிருக்கும் இவனுமந்
தப்பெண்ணை யெனக்குக்கொடுக்கமாட்டேனென்று சொல்லுகிறான்
ஆகையால்இவனைக்கொன்றுபோடுவேனென்றுசொல்லஅப்போதுஅ
ம்மொழியை ஹாத்திம்கேட்டு சொல்லுகின்றார்ஓ, வாலிபனே நீ இன்
னம் கலியாணஞ்செய்யவில்லையாவென்றுகேழ்க்கஅப்போது அந்தப்
பாம்பாயிருந்தவன் சொல்லுகிறான் இவனுடைய தங்கையின்பேரி
ல் நான் ஆசையாயிருக்கிறேன் எனக்கு அந்தப்பெண்ணை இவன்
கட்டிக்கொடுக்க மாட்டேனென்று சொல்லுகிறான் ஆகையால் அ



வன் ராஜியாகிகட்டிக்கொடுப்பானாகில் நான் என்தங்கையைக் கட்
டிக்கொடுப்பே னென்றுசொல்ல, அப்போது அந்தக்கீரியானரூபமு
ள்ளவன்சொல்லுகிறான்என்னுடையதகப்பனுமவர்உயிரோடேயிருக்
கிறார் அவர் ராஜியாகிறதில்லைநான்என்னசெய்வேன் அப்போது ஹா
த்திம்சொல்லுகிறார் நல்லது என்னை உன்தகப்பனிடமாகக்கொண்டு
போவேயாகில் நான் அவரை ராஜிசெய்கிறேன் அப்போது இரண்
டு பேர்களுடன்ஹாத்திம் அவ்விடம்விட்டுகொஞ்சதூரம்போனபின்
பின்பு கீரியானசின்னனதுசொல்லும் என்தோழனே நான் என்னு
டைய அரண்மனைக்குப் போகிறேன் நீர் என் பட்டணத்துக்குப்
பின்னால் வாருங்கள் அப்படிக்கு நீங்கள் வந்தால் அவ்விடத்தி
லுள்ளவர்கள் முதன்மையாக உங்களைப் பிடித்து என் தகப்
பனிடமாகக்கொண்டு வருவார்கள் அப்போது அவரிடத்தில் நீர்
என்விதமாகப்பேசவேணுமோ அதுபோல் பேசலாமென்று சொல்லிப்
போய்விட்டார் அப்போது ஹாத்திம் அவர் சொல்லைப்போல் தே
ட்டு அப் பட்டணம்போய்ச்சேர சிலர்அவர்களைப்பிடித்துக் கொ
ண்டுபாத்துஷாவின்சமுகத்தில் கொண்டுபோய் விட்டார்கள் அந்த
பாத்துஷாவுடையபேர்ஹயூன் என்பதாம்அப்போ தந்தப்பாத்துஷா
சொல்லுகிறார் ஓ, ஆதம்ஜாத்தே நீ என்னுடைய பட்டணத்
தில் எவ்விதமாக வந்தாயென்றுகேழ்க்க அப்போது ஹாத்திம்
சொல்லுகிறார் ஓ, பாத்துஷாவே நான் ஆண்டவனுடைய பந்தவ
னை அடியனாகயிருக்கும் நானிவ்விடம்வந்தது உனக்குநன்மைசெய்ய
வந்தே னென்றுசொல்ல ஓ, மனிதனே நீ என்னுடைய ஜாதிக்கு ந
ன்மை எவ்விதமாகச்செய்வாயென்றுகேழ்க்கஅப்போதுஹாத்திம்சொ
ல்லுகிறார் நல்லது பாத்துஷாவே உன்மகன் பேரில் கிருபையும்
இரக்கமுமில்லா திருக்கிறீர்கள் என்றுசொல்ல அப்போது பாத்
துஷா இந்த மனிதன் என்ன சொல்லுகிறா னென்றெண்ணிக்
கேழ்க்கின்றார் ஓ, மனிதனே என்ன சொல்லுகிறாய் நீ சொன்
னசங்கதி எனக்கு தெரியவில்லையே எனக்கிவ்வளவுவயதாகி ஒரேபி
ள்ளை எனக்கிருக்கின்றது அந்தப் பிள்ளை என்னுடைய உயிரில்நி
ன்று பெருமையாக வைத்திருக்கின்றேனென்று சொல்ல அப்போது
ஹாத்திம் சொல்லுகிறார் உன்னுடைய பிள்ளையின் பேரில் பிரிய
மும் அதிக இன்பமு மிருக்குமாகில் நான சொல்லுகிறதை
க்கேழ்க்கவேண்டு மில்லாவிட்டால் அவன்இன்றைநாளைக்குள்ளாக

வெட்டுண்டு உயிர்ச்சேதம் வந்து விடுமென்றுசொல்ல அப்போது பாத்துஷா அச்சொல்லைக்கேட்டுமனங்கலங்கிச்சொல்லுகிறார் ஓ,என்னுடையதோழனே நீ சொன்னது எனக்குமிகுந்த உபகாரம் போல் தோனுகின்றது ஆண்டவன் உனக்குத்தகுந்த சவாபு கொடுப்பான் இதினுடையச்சங்கதியை எனக்கு தெரியும்படிக்கு விபரமாகச்சொல்ல வேண்டியது அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் ஓ, பாத்துஷாவே உன்னுடைய குமாரன் ஒரு வனுடைய தகப்பனை உயிர்வதை செய்திருக்கிறான் அவனுடையமகன் உன்மகனைக்கொல்லஎத்தனஞ்செய்துக்கொண் டிருந்து இவர்களிருவரும் ஒருகாட்டில் சண்டை போட்டுக்கொண் டிருந்தார்கள் கொஞ்சநேரத்தில் உன்மகனிறந்து போகும் படியான நேரமாயிருந்தது அப்போது நான்பார்த்துமிகுந்த சத்தத்துடனே ஓடி அவ்விடத்தில்நின்று உன்மகனைத்தப்பிவிலக்கி விட்டேன் ஆகையாலிவர்களிருவரில் ஒருவர்ஒருநாள்விறைக இறந்து போவார்கள்எவ்விதமானாலவனுடைய தங்கையின்பேரில்இவன்ஆசைக்காகியிருக்கிறான்இவன்தங்கையின்பேரில்அவன் ஆசைக்காகியிருக்கிறான் ஆகையாலிவர்க ளிவ்விதமாகயிருப்பதால் நீங்கள்இருவருடையமனம்போல் கலியாண முடித்துவிட்டால் நலமாயிருக்கு மென்றுசொல்ல அப்போதிருவர்களும் ஓர் மைப்பாடாககலாவாகிப்போவார்கள் ஹாத்திம்சொல்ல அம்மொழியைபாத்துஷாகேட்டு தன்னுடையமகனுக்கு அவனுடைய தங்கையைவிவாகஞ்செய்து தன்னுடைய மகளை அவனுக்கு கொடுத்து இருவருக்கும் கலியாண முடித்து விட்டார்கள்.

பின்பு அந்தப்பெண்கள்தங்கள்தங்கள்புருஷனிடமாகப்போய்தங்கள்மனத்திருப்தியடைந்தார்கள் அப்போது ஹுஸ்ன்பாத்துஷாவின் உத்தரவுபெற்றுக்கொண்டுஹாத்திமானவர்போகிறவேளையில்பாத்துஷாசொல்லுகிறார் ஓ,என்பிரியமானவரே நீ எனக்குமிகுந்தஉபகாரம் செய்தாய் அதற்காகஉனக்கிரும்நகைகள்நவரத்தினங்கள் நான்தருகிறேன் நீர்வாங்கிக்கொண்டு போகலா மென்றுசொல்ல அப்போதுஹாத்திம் சொல்லுகிறார் ஓ, பாத்துஷாவே அப்படிக்குநான் உபகாரம் செய்து அதற்காகபதில் வாங்குகிறவழக்கமில்லை அப்போதுஅந்தபாத்துஷாவானவர்பின்புசொல்லுகிறார்ஓ,என்னுடையபிரியமாகியதோழனேயொன்றும்வேண்டாமென்பதுஎனக்குமிகுந்தமனவருத்தமாகயிருக்கின்றது ஆனால் என்சொல்லைத் தட்டாமல்என்னுடையஅ



டையாளம் உனக்கு ஒருஆலாவென்றஒருதடிதருகிறேன் அதையாவது நீர் வாங்கிக்கொள்ள வேண்டிய தென்றும் ஒரு ஆலாவானதை கையில் பிடித்துக்கொள்ளு மென்றுசொல்லி அதினுடைய கிரிகைகளைச் சொல்லுகிறேன் எவ்விதமென்றால் அதில் அனேகமான குணங்க ளுள்ளது பாம்புகள் தேள்கள் கடித்தால் விஷமேற மாட்டாது நெருப்பில் நின்றாலும் சுடமாட்டாது அதின் கீழே எத்தவஸ்த்து இருந்தபோதிலும் எரிந்துபோகாது ஒருவன்குனியஞ்செய்வானாகில் அது அவனையொன்றுஞ் செய்யமாட்டாது செய்தவனைப் பின்தொடரும் பின்னும்சமுத்திரத்திலகப்பலேறிப்போகவேண்டுமாகில் அத்தடியைதண்ணீரில் போட்டாலதுவே கப்பலாகிவிடும் அவ்விடத்தில் நின்று நினைத்தயிடம் கொண்டுபோய்விடும் இதுவல்லாமல்ஒருமோராவும்தருகிறேன் அதையும்நீர்வைத்துக்கொள்ளும் அதின்குண மென்னவென்றால் நீர் போகிற பாதைகளில் வெள்ளை சிவப்பு கறுப்புநிறங்க ளுள்ளபாம்புகளிருக்கின்றனவாகில் இந்த மோராவை வாயில்போட்டு அடைக்கிக்கொண்டுபோனால்உங்களருகில்வரமாட்டாது அப்படி ஒருவேளை நீர்ஜாக்கிரதை யில்லாமலிருக்கும் வேளையில் வந்து கடிக்குமாகில் விஷமேற மாட்டாது இவ்விதமான குணங்களை பாத்துஷாசொல்லி அந்ததடியையும் மோராவையும் கொடுக்கஹாத்திமானவருத்தரவுபெற்றுக்கொண்டு அவ்விடத்திலின்று புறப்பட்டு இரவும்பகலும் நடந்துசிலநாள் போகின்றவேளையில் ஏதோ ஒரு பெரியசமுத்திரம் எதிர்ப்பட்டது அதினுடைய அலையானது வானத்தை யளாவிக்கொண்டு அடிக்கின்றது அதைப்பார்த்து மனவருத்தமடைந்துநான்கு பக்கமும் பார்க்கின்றார் அவ்விடத்தில் வருகிறவர்போகிறவர்கள் ஒருவராவது காணவில்லை அப்படிக்கு பார்த்து சிந்தித்து நிற்கிறவேளையில் தன்கையி லிருக்கிற ஆலாவின் நினைவுவந்தது உடனே அந்த ஆலாவை சமுத்திரத்தில் போட்டார்.

அப்போதந்தத்தடியானதுகப்பலைப்போலாகிவிட்டது அதின்மேலேறிக்கொண்டுபோகிறார்நடுமத்தியில்போகிற வேளையில் ஒரு முதலையானது அக்கப்பலை இருகாதவழியில் இழுத்துக் கொண்டு ஒரு பக்கத்திலாவது இளைப்பாறாமல் அந்தமுதலை தண்ணீருக்குள் இழுத்துக்கொண்டு போய் நின்றது அப்போது நான் கண்ணைத்திறந்து பார்க்குபோது ஒரு முதலையானது மலையைப்போல் நிற்கக்கண்டு

அதைப்பார்த்து மிகுந்த அச்சமடைந்து அப்போது அந்த முதலை
யானதுஎன்னிடத்திலிபிரியாது செய்கின்றதுபோல் கெஞ்சி கெஞ்சி
சொல்லுகின்றது அவ்விதமானால் ஓ, வாலிபனே இந்த வீடான
து என்னதாகயிருக்கும் ஒருநண்டானது ஜபர்தஸ்தியினால் என்வீ
ட்டைப் பிடுங்கிக்கொண்டிருக்கின்றது ஆகையால்இந்தவீட்டை நீஎ
னக்கு வாங்கித்தருவாயென்று நிச்சயப்படுத்தி உன்னைஙானிவ்விடம்
இழுத்துக்கொண்டு வந்தேனென்றுசொல்ல அப்போது ஹாத்திம்
சொல்லுகிறார்ஓ,முதலையே அதுஉன்னில்நின்றுஜபர்தஸ்தென்றபல
சாலியைப்போல்தோணுகின்றதுநீ அதில்நின்றுபலசாலியல்லபோலவு
ம்தெரிகிற தப்போதுமுதலைசொல்லுகின்றது அந்தக்கொடுமையைநா
னென்னசொல்வேன் இப்போது நீர் பார்ப்பீராகில் அதன்கோலம்
தெரியலாம் மெய்யாகஇப்போது அந்த நண்டானது இருக்குமாகில்
அதினுடைய விரலென்றகொடுக்கை நீட்டிவிசிரினால் உன்னையுமெ
ன்னையும் இரண்டு துண்டு,செய்துவிடும் இப்போது அந்த மூதே
வி இரை தேடிக்கொண்டுபோயிருக்கின்றது இவ்விடத்தில் அது
இருக்குமாகில் நீர் பார்க்கலாமென்று இம்மொழிகளைச் சொல்லிக்
கொண் டிருக்கையில் அந்த நண்டானது வாயைப் பிளந்துக்கொண்
டு வருகின்றதை இந்த முதலையானது பார்த்து ஹாத்திமுக்கு பி
ன்னால் பயந்துவந்துநின்றது அப்போது அந்தநண்டை ஹாத்திமான
வர் நோக்கிப்பார்க்க ஒரு பெரிய கோட்டையைப் போல்
வந்து வளைந்தது அதினுடைய கொடுக்குகள் இரண்டும் கண்
ணுக்கெட்டாத தூரவரையில் தோணப்படுகின்றது இப்படிக்கிருக்
க நண்டினுடைய பார்வை முதலையின் பேரில்விழுந்து ஒரு சத்தம்
போட்டது அச்சத்தத்தை முதலைகேட்டுபயந்து நடுநடுங்கி தடுமாறி
க்கொண்டு நிற்க அப்போதுஅந்தநண்டை ஹாத்திம் பார்த்து
ஆண்டவனே இந்த பலவான மூதேவி வாயில் நின்று நீ
என்னைக் காப்பாற்ற வேண்டியதென்று மனதி லச்சமடைந்
து இதில் நின்றும் நாம் எவ்விதமாகத்தப்பி வெளிப்படுவோ
மென்று எண்ணுதுகளை எண்ணிக்கொண் டிருக்கையில் அந்த
ஜின்னுடைய பாத்துஷா கொடுத்த ஆஸாவை கையிலெடுத்து
க்கொண்டுஎழுந்துநிற்கஅந்தநண்டானதுபார்த்தவுடனேஎங்கேயின்ற
தோ அவ்விடத்திலே நின்று விட்டது அப்போது ஹாத்திமானவர்
நண்டைப்பார்த்துபயமடையாமல் தைரியத்துடனே ஆங்காரமாகச்
சத்தம்போட்டு சொல்லுகிறார் ஓ, ஆண்டவனுடைய படைப்பிலுள்



ளவனே உனக்கு கொஞ்சமாவது ஆண்டவனுடைய அச்ச
மும் பயமு மில்லாமல் ஒருவரை வருத்தப் படுத்துவது நல
மல்ல அப்படிஉனக்கு வலு விருக்குதென்று ஒருவரை கெ
டுதலைசெய்வையானால் அக்கேடு உனக்கே கூடரு மென்றுசொ
ல்லி பின்னும் ஹாத்திம் சொல்லுகிறார் நீ இந்த எளியவனுடைய
வீட்டை ஜுலும் செய்து எனெடுத்துக் கொண்டாய் இவனுடை
ய வீடுதவிர வேறேயிடம் உனக்கில்லாமல் போய்விட்டுதா
அப்போது அந்நண்டானதுசொல்லும் ஓ, மனிதனே நாங்க
ளிருவரும் இவ்விடத்தி லிருக்கப் பட்டவர்கள்எவ்விதத்திலும்
நாங்கள் சமர்தானம் செய்துக் கொள்வோம் நீ எ
ங்களைக்கொண்டு என் நடுவில் வந்து நியாயம் பேசவந்தாய் உ
னக்கு ஆகவேண்டியதென்ன வென்றுசொல்ல அப்போதுஹாத்திம்
சொல்லுகிறார் ஓ, நண்டே நீ சொன்னது எனக்கு தெரியவந்தது
ஆனால் ஆண்டவன் இந்த லோகத்தையுண்டாக்கிப் பதினெண்ணாயிரம்
படைப்புகளைப் படைத்து சிறி[illegible] லத்திலும் சிறிதுபேர்
களை தண்ணீரில்வைத்து அ[illegible] ந்தருந்தபடிக்குநன்மையாகவே
ண்டிய ரிஜ்ஜக்குகளும் இருக்கிடமுங்கொடுத்து வேண்டிய சவுக்கி
யத்தையடையும்படிக்கு கொடுத்து காப்பாற்றிக்கொண்டு வருகின்
றார் ஆகையால்ஒருவரையொருவர்கெடுப்பதுஆண்டவனுக்குசம்மதி
யானதல்ல அப்படிக்கிருக்க நீசெய்கின்றது கொடிய பாவமாகயிருக்
கின்றதென்று இவ்விதமானசொற்களைச் சொன்னவுடனே நண்டான
து சொல்லும்நல்லது நீ இவ்விதமாக அவனுக்கு உதவி நித்தாசை
யாகச்சொல்லுவதால்அவனுடையவீட்டில்நான் இனியிருக்கமாட்டே
ன்இப்போதுநான்கொடுத்துவிடுகிறேன்.

பின்பு இந்த முதலையானது நீ போன பின்பு உன்னை இவ்
விடங்கொண்டுவர இதனால் கூடுமா நல்லது நீயுவும்நானும் இந்தச
முத்திரத்தி லிருப்போமேதவிர வேறிடம்போகமாட்டோம்அப்போ
து இவனிந்தவீட்டிலிருப்பதைநான்பார்த்துக்கொள்வேனென்றுசொ
ல்ல அப்போது ஹாத்திம் அவனுடையமொழிகளை யறிந்துசொல்லு
கிறார் ஓ, மூதேவி காபிரானபடைப்பை உனக்குகொஞ்சமாவது ஆ
ண்டவனுடைய அச்சமும்பயமுமில்லை ஒருவருக்கு இரங்கப்பட்டவ
னுமல்லதன்னுடையசவுக்கியத்துக்குஉடன்படும்படியானகொடுமை
யான மூதேவியாக யிருக்கிறதென்று எண்ணிச் சொல்லுகிறார்-

நல்லது இப்போது இந்த முதலைக்கு இடஞ்சலாக வருத்தப்படுத்
துகின்றாய்ஆகையால் இக்ஷணத்தில் இந்தவீட்டைஅவனுக்குஒப்பி
த்து இவ்விடம் விட்டு நீங்கிப்போகிறையா இல்லையா இல்லாவி
ட்டால் இப்போது உன்னைநான்கொஞ்சத்தில்விட்டுப்போகமாட்டே
ன் தவிடுபொடியாக்கிப் போடுவேனென்று ஹாத்திம் ஆங்காரத்துட
னே சொல்ல அப்போது நண்டானது இவனைநாம்துண்டுதுண்டுசெய்
யவேண்டு மென்கிற எண்ணங்கொண்டு சிரித்துச்சொல்லுகின்றது
நல்லது நீயெவ்வளவுமனிதன் உனக்குத்தகுந்தபடிக்குப்பேசாமலும்
அச்சமில்லாமலும்என்னோடு தர்க்கிக்கின்றாய் இப்போதுஉன்னையும்
அந்தமுதலையையும்நான்எவ்விதத்திலும்எனக்குஇரையாகும்படிக்கு
செய்கிறேன்பாருமென்றுதன்னுடையகொடுக்குகளை உயர்த்திதுண்
டுதுண்டாக்கிவிடவேணுமென்று தலையுயர்த்தி விசையாகக் கொடுக்
கை நீட்டினவுடனே ஹாத்திமாகிய வர் ஹயூஸ் பாத்துஷா கொடுத்த
ஆஸாவை வீசி அடித்தார் அப்போது அந்த ஆஸாவானது
நண்டினுடைய இரண்டு கொடுக்கிலும் போய்தைத்து இரண்டுது
ண்டாய் காயம்பட்டு [illegible] நாம் இவனை வெல்வ
துகடினமென்று எண்ணி பின் தங்கி ஓடுகின்றபோது இந்
த முதலையானது அதை துரத்திக்கொண்டு பின்னால் ஓடுகிற
தை ஹாத்திம் பார்த்து சொல்லுகிறார் ஓ அறிவுகெட்ட முண்ட
மே நீஆண்மையுள்ளவனல்லபயந்து ஓடுகிறதைப்போய்நீ ஏன் தொ
ந்தரவுசெய்கின்றாய்நீஇப்போது அதையேதாவதுமோசமாகச்சதிசெ
வாயாகில் உன்னை வெட்டி உயிர்வதை செய்வேனென்று சொல்
ல அம்முதலைபயந்து அச்சமடைந்து பின்பு அதினுடையவீட்டிலே
தையிருக்கச்சொல்லிவிட்டு அவ்விடத்தில் நின்றுஹாத்திமென்பவர்
கண்ணைமூடிக்கொண்டு தன்னுடைய ஆஸாவைதண்ணீரில்போட்டு
அதின் மேலேறிக்கொண்டு போகிறவேளையில் கரையோரத்தில்
கொண்டுபோய்விட்டது பின்பு மாடந்தாரனென்றகாட்டைநோக்கிப்
போகின்றார்அப்போது அதினருகாமையில்போய்சேர்ந்தபின்பு அவ்
விடத்தில்ஒருஆலவிருட்சமான நிழலுள்ளமரமாயிருக்கின்றதைப்பார்
த்துஅதின்கீழேயிருந்துகொண்டுஎண்ணுகின்றார்நான் ஆண்டவனுடை
யகிருபையாலு மவனுடைய உதவியாலும் இதுவரையிலும் வந்துசேர்ந்
தேன் அந்தமிருக ஜாதியுடைய ஜோடை தேடவேண்டியதெ
ன்று அது எங்கே யிருக்கின்றதோ வென்று எண்ணிக் கொண்டிரு
க்கின்ற வேளையில் இரவாகி விட்டது அப்போது அந்த மிரு



கங்கள் மேச்சலுக்குப்போயிருந்ததுதிரும்பிவந்துஒருமரத்தின்மேலி
ருந்து கொண்டு தங்களில் தானே பேசிக் கொண் டிருக்கின்றது
எவ்விதமானால் இன்றையராத்திரி ஆண்டவனுக்குஉகப்பானமனித
ன் ஏழைகளைக் காப்பாற்றுகிறவர் அன்னியர்க்காக தன்பேரில்வரு
த்தமெடுத்துக்கொண்டு இதுவரையில்வந் திருக்கிறார் அவர் ஆராலு
ல்லதையுடைய மகன்ஹாத்திமாக யிருக்குமென்றுபெரியோர்களுடை
யவாக்கினால்கேழ்விப்பட்டிருக்கிறோம் இப்போது நாமவரைக் காண
வேண்டியதுஆண்டவனுடைய பெருமைபெற்ற அடியானாகயிருக்கும்
நம்முடைய பிலாகத்துக்காகவந்திருக்கின்றதுபோல்தோணுதென்று
சகலரும்யோசனைசெய்துசியமித்துக்கொண்டதுகள்.

அப்பால் பொழுதுவிடிந்த பின்பு சகலமிருகஜாதிகளும்வந்து
ஹாத்திமுடைய காலில்விழ அப்போ நந்த ஜான்வர்களுடைய ரு
பத்தைப்பார்த்து மிருந்த ஆச்சரியமடைந்து அதினுடைய முக
மானது மனிதருடைய முகமும் [illegible] தேகத்தையும் பார்
த்தால்தாவூஸ் என்றமயில் [illegible] யிருக்கின்றதுபாரிகளானவர்கள்
பார்த்தால் அவர்களும் ஆசைப்படுவார்கள் அந்தஜான்வரானஜாதிகள்
யாதொரு தடங்கலில்லாமல் சாபாகப்பேசுகின்றதுஎவ்விதமானால் ஓ
ஹாத்திமே உன்னுடைய வல்லமைக்கும் இரக்கத்துக்கும் நீயே யல்
லாமல் ஒருவரால் கூடாது உனக்கேதகும் அன்னியர்க்காக நீவருத்
தமெடுத்துக்கொண்டுதிரிகின்றாய் இப்பவும்ஒருவன்பரியாசக்காரபா
த்துஷா பெண்பேரில் ஆசைக்காரனாயிருக்கின்றான் ஆகையாலவன்எங்க
ளுடைய சாதியானஜோடி கேட்டிருக்கிறானல்லவா அதற்காகவே
ண்டி நீர் இவ்விடம் வந்திருக்கிறீரல்லவா அப்போது ஹாத்திம்
சொல்லுகிறார்நீங்கள்சொன்னதுசரியாகயிருக்கும்இப்போதுஉங்களி
லிருந்து ஒருஜோடுபறவை தருவீரானால் நீங்களென்னை விலையில்லா
மலடிமைகொண்டுவிட்டீர்கள்நான் துனியாவிலே உயிரோடேயிருக்கும்
வரையில்உங்களுடையயோசான் என்றஉபகாரம் என்கழுத்தில் விலங்
கைப்போல் சுமையைச் சுமந்தவனாகயிருப்பேன் அவனெண்ணத்தை
நிறைவேற்றுவேன் உங்களுடையதுவாபரக்கத்தாலென்றும்ஹாத்திம்
சொல்ல அம்மொழியைக்கேட்டு தங்களில்தானேயோசனைசெய்கின்
றார்கள் அதுஎவ்விதமானால் ஆண்டவனுக்காக தங்களுடையபிள்ளை
களில் ஒருஜோடுபோராவதுதரவேண்டியது இந்தமனிதனிடமாக அது
மிருந்தநன்மையாகயிருக்குமென்றுசொல்ல இம்மொழியைக்கேட்டவு

டனே அதிலின்று ஒருபறவையெழுந்துநின்று நான்கொடுக்கிறேனென்றுதன்னுடையபிள்ளையிலின்று ஒருஜோடுஹாத்திமுடைய கையில்கொடுத்துச்சொல்லுகின்றது இப்பிள்ளைகள் உன்னுடையதாயிருக்கும்நீர் வேண்டும்படிசெய்யலாம்நீரெவ்விடம் கொண்டுபோகிறீரோ அவ்விடம்தடங்கலில்லாமல் கொண்டுபோகலாம்ஹாத்திமானவர் அந்தஇரண்டுபிள்ளைகளையுமெடுத்துக்கொண்டு அவர்களிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு பரியாசகுளியக்காரனுடையபட்டணத்தைநோக்கி நடக்கின்றார் அப்படிசிலநாள்நடந்துபாதையைத்தொலைத்துக்கொண்டு அந்த சிப்பாயினிடம் வந்துசேர்ந்துபார்க்க அவன் விசனத்துடனே தலையைக் கீழேபோட்டுக்கொண்டிருக்க அவனுடன்மிலாகத்தாகி ஓ, வாலிபனே நீ துக்கத்தைவிட்டு சந்தோஷத்தையடைய உன்னுடையயெண்ணம்நிறைவேறிவிட்டது அவனிந்தஜோடை பார்த்தவுடனே ஹாத்திமுடைய காலை கெட்டியாகப் பிடித்து முத்திசெய்ய ஹாத்திமவனை யெடுத்துமார்போடும் கழுத்தோடும் அணைத்துக் கொண்டார்.

பின்பு தான்போனபாதையின்சங்கதிகளையும்வரலாற்றையும் எல்லாம் தெரியச்சொல்லி பின்னுஞ் சொல்லுகிறார் நீ அந்தபரியாசகுளியக்காரனிடமாகச்சொல்லவேண்டியது எவ்விதமானால் இந்தபறவைஜோடு நான்கொண்டுவந்தேனென்றுசொல்லும்அதுபோல்சிப்பாய் அந்தஜோடையெடுத்துக்கொண்டு அவனிடமாகப்போய்க்கொடுத்தான் அதைப் பார்த்தவுடனே அந்த பரியாசக்காரன் மனதில் சந்தோஷமடைந்து சொல்லுகிறான் இந்தவேலை நீ செய்ததல்ல யாராவது ஒருவர்செய்தவேலையாயிருக்குமென்றுசொல்லில்லைதுகொண்டு வந்தது நிச்சயமாகில் அவ்விடத்திலுள்ள இடங்களும் பாதையில் நடந்த விபரங்களெல்லாம் எனக்கு தெரிவிக்கவேண்டுமென்று கேழ்க்க நீ சரியாகச்சொன்னால் என்மனதுக்கு நிச்சயப்படுமென்றுசொல்ல அப்போது ஹாத்திமிடமாக கேட்டிருந்தபடி சங்கதிகளை யெல்லாம் விபரமாக அறிவிக்க பின்பு அ[illegible]கவன் சொல்லுகிறான் நீ சொன்ன அடையாளங்களெல்லாம் சரியாயிருக்கின்றது நீ செம்பாம்பினுடைய மோறு கொண்டுவாவென்று சொல்ல அப்போது சிப்பாய் சொல்லுகின்றான் நல்லது நான் மோறுகொண்டுவருவேன் இப்போது நான் ஆஷக்கான பெண்ணின்முகம்பார்த்துப்போனால் எனக்குமிகுந்தபின்னுதவியுமுண்டா



கும் இம்மொழியைக்கேட்டுதன்னுடையபெண்ணினிடமாகப்போய் சொல்லுகின்றான் என்மகளே நீ இப்போது உன்னுடைய ரூபமான லாவண்யத்தைக்கொடுக்கின்றதென்னவின் வழியாக உன்னுடையஆஷக்கானமனிதனுக்கு காண்பிக்கவேண்டுமென்று சொல்லஅதுபோல அப்பெண்தன்முகத்தைக்காண்பித்தாள் பின்பு அன்றையதினமுழுதும் அவனுடைய முகத்தினழகைப் பார்த்துக் கொண்டிருந்து மறுநாள்சிப்பாய்சொல்லுகிறான் இனிசெவப்பு பாம்பினுடைய மோறுவை கொண்டுவருகிறேனென்று இன்னம் எனக்கு அதினுடைய இடத்தைதெரிவிக்கவேண்டுமென்றுகேழ்க்க அப்போதுபரியாசக்காரன்சொல்லுகிறான் நானெங்களுடையபெரியோர்களிடமாகக்கேள்விப்பட்டிருக்கிறேன் அதுகோகாப்பென் மலையினருகாமையிலிருக்கிறதென்று சொல்லதன்னுடைய மாமனிடமாக உத்தரவுபெற்றுக் கொண்டு ஹாத்திம் இடமாக வந்து சொல்லுகின்றான் அவன் கேட்ட கேள்விக்குதான் [illegible] தன்னுடைய ஆஷக்கான பெண்ணை பார்த்ததும் [illegible]பாம்பினுடைய மோறுவை கொண்டுவரச்சொன்னதெல்லாம் [illegible]போலறிவிக்க அப்போது ஹாத்திம்கேட்டுமிகுந்தசந்தோஷமடைந்துசொல்லுகின்றார்நல்லதுநீ அந்த பாம்பினிருப்பிடம் இன்னபக்கத்திலிருக்கின்றதென்றுஅவனிடமாய் கேட்டு வந்தயா வென்றுகேழ்க்க அப்போது அந்தசிப்பாய் தான் கேள்விப்பட்டதைப்போல் ஹாத்திமுக்கறிவிக்க அதைக் கேட்டு ஹாத்திம்சொல்லுகின்றார் ஓ, என்னுடையதோழனே இனி நீர் விசனமடையாதீர் நான் உன்னுடைய வேலையில்பாதொருகுற்றமில்லாமல்நான்னுயிராலும் என் மனதாலும் தேகத்தினாலும் வருத்தமெடுத்துக்கொண்டுஎவ்விதத்திலும்உன்னுடைய வேலைநிறைவேற்றுவேன்ஆண்டவன் உதவியினால்வெகுசுருக்கில்வந்துசேருவேனென்று அவனுக்குவேண்டிய தைரியஞ் சொல்லி அவ்விடமாய் உத்தரவு பெற்றுக்கொண்டுகோகாப்பென்னுமலையைத் தேடிக்கொண்டு போகின்றார் சிலநாள் நடந்துபோகிறபோது ஒருநாள் காலையில் தரைக்குவதிநொந்த ஹாஜத்துக்குப் போய் அவ்விடத்தில்கால்கைகள் சுத்தி செய்துகொண்டிருக்கின்றபோது ஒரு தேளானது ஏழு வாணமுன்னதாகவும் குலங்கென்ற காரையைப்போல் எதிரில் போகிறதை ஹாத்திம்பார்த்து அச்சப்பட்டுமனதிலெண்ணுகின்றார் என்னுடைய வயதிலும்இப்பேர்ப்பட்ட தேளைப்பார்த்ததில்லைஆனா

டவனுக்கே இதின் சங்கதிதெரியுமென்று அவ்விடத்தில் ஒரு பக்க
மறைவாக விருந்து அன்றையதினமுழுதும் இதின் சங்கதியைய
றியலாமென்று தடவைதடவையாகச்சொல்லுகின்றார் நல்லது இது
இனிவெளியே இரவில்வந்துஎன்னசெய்கின்றதோ அதை பார்க்கலா
மென்றிருந்துபார்க்கும்போது அந்த காட்டினருகாமையில் ஒரு சின்
ன ஊரிருக்கக்கண்டு அவ்விடம்போய் அவ்வூரிலுள்ளமனிதர்கள் இந்
தமுசாபரானஹாத்திமைபார்த்துமிகுந்தஆசையாக அழைத்துக்கொ
ண்டுபோய்பசியாற்றிவைத்தார்கள் ஹாத்திமானவர்பசியாறின பின்பு
வந்து ஒருமரத்தின் கீழேயிருந்து இபாதத்திலிருக்கின்றார் அப்ப
டியிருக்கின்றவேளையில் அவ்விடத்தி லொருபெரிய மயிதானமான
இடமிருந்தது அதில் அவ் வூரிலுள்ள மாடுகளும் குதிரைகளும்
அதிகமாகச்சேர்த்துகூட்டமாயிருக்கது அதின்காவலுக்காகமூன்று
நான்குபேர்படுத்திருந்தார்கள் அப்போது இரவாகிவிட்ட பின்பு பாதியி
ரவில் அத்தேளானது ஒருமூலையின் பெருங்கல்லின்கீழேயிருந்துபுறப்ப
ட்டு அவ்வூரைநோக்கிப்போகின்றது அவ்விடத்திலிருந்த ஒருபசுவைப்
பார்த்து ஒரு பாச்சலாயெழும்பி அதினுடையதலையில் தன்னுடைய
கொடுக்கால் ஒருகொட்டுகொட்டிவிட்டது அப்போது அந்தப்பசுவா
னது நடுநடுங்கிகீழேவிழுந்து இறந்துவிட்டது அப்படியே அவ்விடத்
திலுள்ளபசுமாடுகளையெல்லாங்கொன்றுபோட்டு குதிரைகள் நிற்கி
ன்ற இடத்தில்போய் அந்தகுதிரைகளையும்காவல் காரர்களையும் கொ
ட்டி கொன்றுவிட்டு பின்பு தானிருந்த கல்லின்கீழே போய்நுழை
ந்துமறைவாயிருந்தது அப்போது பொழுதுவிடிந்த பின் அந்தவூ
ரிலுள்ளவர்கள் அந்த காட்டில் வந்துபார்க்க அந்த காவற்
காரர்களும் பசுக்களும் குதிரைகளும் இறந்துபோய் கிடப்பதை
ப்பார்த்து திகைத்து நின்றுகொண்டிருக்கின்றார்கள் அவர்களின்வா
[illegible]லவில்லாமான தண்ணீர்வடிந்து கொண்டிருக்கின்றது அப்
போதவர்கள் ஹாத்திமை அவ்விடம்கண்டுகேட்டார்கள் ஓமுசாபரே நீ
ரிவ்விடத்தில் உயிர்தப்பி எவ்விதமாகயிருக்கின்றீர் என்றுகேட்
கும்போது ஹாத்திம்சொல்லுகின்றார் ஓ, என்பிரியமானவர்களே நா
ன் ஒருவேடிக்கை பார்த்தேன் என்னுடைய ஆயிசு வரையிலு
ம்பார்த்த தில்லை நிசமாகவும் சொல்லுகின்றேன் ஒரு தேளானது
எழுவன முள்ளது ஒரு பெரியகுலங்கென்ற பெருநாளையைப்போல
வுமிருந்தது அது இதுகளைக் கொன்று விட்ட தென்று சொல்லிக்
கொண்டிருக்கின்றபோது அந்த தேளானது அந்தக் கல்லின்கீழி



ருந்து புறப்பட்டு அவர்களுடைய தலைமைக்காரனை வந்து ஒரு
கொட்டு போட்ட வுடனே அவன் நடுங்கி கீழே விழுந்து
இறந்து போனான் அப்போது அவனை எல்லோரு மெடுத்துக்
கொண்டு தங்கள் ஊருக்குஅழுதுகொண்டு போனார்கள் அப்போது
அந்ததேளானது அவ்விடம்விட்டுகாட்டின்பாதையைபிடித்துப்போ
கின்றதை ஹாத்திம்பார்த்து அதின்பின் தொடர்ந்து கொஞ்சதூரம்
போனவுடனே அவ்விடத்தில் ஒரு பட்டணம் தோற்றியது அந்
த தேளானதுகீழே விழுந்துபுரண்டு ஒருகருநாகமாகிவிட்டது ஹாத்
திம் அதைப்பார்த்துமின்னுமச்சமடைந்து சொல்லுகின்றார் ஆண்டவ
னே இப்போது தேளாகயிருந்து பாம்பாகிவிட்டது இதென்ன ஆ
ச்சரியமென்று எண்ணிக்கொண்டிருக்க அப்போது அந்தப்பாம்பான
து ஒருவளையினுள் போய்விட்டதென்று அன்றிரவு அவ்விடத்தி லி
ருந்தார் பாதி இரவானவுடனே அந்தவளையில் நின்று வெளிப்பட்டு
அப்பட்டணத்தை நோக்கிப்போகின்றது அப்போது ஹாத்திமான
வர் அதோடு பின் தொடர்ந்துபோகையில் அந்தப் பாம்பானது அவ்
வூர்பாத்துஷாவுடைய அரண்மனையின் நீர் ஓடுகின்றகால்வாயில் நு
ழைந்துபோய் பாத்துஷாவை கடித்துவிட்டு பின்புமந்திரியின்வீட்டி
ல் நுழைந்துபோய் அவனுடையமகளையுங்கடித்துபுறப்பட்டுமுன்னி
ருந்தவளையில்போயிருந்தது அப்போதுபொழுதுவிடிந்த பின்பு இரா
த்திரிபாத்துஷாவை பாம்புகடித்து இறந்துபோனானென்கிறபெருஞ்
சத்தம்ஜனங்களிலிருந்துண்டாச்சுமந்திரிமகளும்பாம்புகடித்துஇற
ந்துபோனாளென்றும் இப்படியிருக்கையில்பொழுதுபோய்விட்டது
பின்பு அக்தபாம்பானது அந்தவளையில்நின்றுபுறப்பட்டு மற்றொருபக்
கத்தைநோக்கிப்போகின்றது அதைஹாத்திம்பார்த்து அதினோடுதொ
டர்ந்து போகையில் மனதிலெண்ணுகின்றார் இன்னமிதுஎன்னெ
ன செய்கின்றதோ அதைப்பார்க்க லாமென்றும் இன்னம் அது
எங்கேபோகின்றதென்றும் எண்ணிக்கொண்டு போகின்றார் அப்
போது பொழுது விடிகின்ற சமயத்தில் அந்தப்பாம் பானது
சமுத்திரக்கரையி லிடமாகப் போய்நின்று புலியைப்போலாகிவிட்
டது அப்போது பத்து பனிரண்டு பேர்கள் அவ்விடத்துக்கு
ஏதோ அலுவலாக வந்தார்கள் அதிலொரு பையன் பதினாலுவயது
ள்ளவன் மிகுந்த அழகு வடிவுள்ளவனாகவுமிருந்தான் அவன் மேல்
பாச்சல் பாய்ந்து தாக்கிக்கொண்டு ஒரு மறைவானவிடத்தில் கொ
ண்டுபோய் வயிற்றைக்கீறிசலைத்துண்டு துண்டாக்கி விட்டு காட்

டைநோக்கிப் போகின்றதை ஹாத்திமானவர்பார்த்து தொடர்ந்து போகின்றார் பின்பு கொஞ்சதூரம்போன வுடனேஒருவாலிபமானவடிவுள்ளசந்திரனுக்கொப்பாகிய பெண்ணொருபாதையில்போயிருந்தது அப்போதுஹாத்திம்பார்த்துமிகுந்த ஆச்சரியப்பட்டு ஒருமரத்தின்கீழேமறைவாகயிருந்துகொண்டிருக்கையில் இரண்டுபேர்சிப்பாயிகள் கலியாணஞ்செய்து கொள்ளுவதற்காக அன்னியதேசம்போய் சில நாள்சேவகத்திலிருந்துசிலபொருள்கள்தேடிக்கொண்டு தங்களுடையஊருக்குவரும்போது அப்பெண்ணிருக்கின்ற பாதையைநோக்கிவந்தார்கள் அப்போது அந்தப் பெண்ணின் அருகிற்போய் அவளைப் பார்க்கவுடனே அந்தப்பெண்ணானவள் மிகுந்த துக்கத்துடனே கண்ணீர்சொரிய அழுதாள் அந்த அழுகையைக்கேட்டுமிகுந்தமனவருத்தமடைந்துபெரியதமையன் அவளருகில்போய் அந்தப்பெண்மிகுந்த அழகும் வடிவும்ஒளிவுமுள்ளபெண்ணழுகின்றதைப்பார்த்துதானும் கண்ணீர் சோரவிசனப்பட்டுபின்பு அந்தப்பெண்ணைகேழ்க்கின்றான் ஓ, பெண்ணேரூபவதியே நீ, எதுக்காக இவ்விதமான துக்கத்துடனே அழுகின்றாய் ஓ, வாலிபமான அழகனே நான்இன்றுடைய பெண்ஜாதியாக யிருக்கும் என்புருஷன் என் தாய்தகப்பன் வீட்டிலிருந்து என்னை தன்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகின்றபோது இந்தக்காட்டிலிருந்து ஒரு வேங்கையானதுவந்துவிழுந்து அவரைத்தூக்கிக்கொண்டு போய்விட்டது நான் இவ்விடத்தில் ஒண்டியாக நிற்கின்றேன் என்தகப்பன் வீட்டுக்குப் போகின்றபாதையும்எனக்குதெரியாது என்புருஷனுடையவீட்டுப்பாதையும்தெரியாது நான்மிகுந்த வருத்த மடைந்துகொண்டிருக்கின்றேன்நான் என்னசெய்வேன் எங்கேபோவேன் என்வயதிலும் வருத்தமும் விசனமடைந்தவ ளல்ல இனி என்பேரிலென்னஆபத்துவருகின்றதோஎனக்குதெரியாதுஎன் வயதை எப்படித்தள்ளுவேனென்றுசத்தமிட்டழுது அப்போதிவன் சொல்லி விசனப்படுவதைப்பார்த்துச் சொல்லுகிறான் ஓ, பெண்ணே பேதையானவளே நீ பொன்றுக்கு மஞ்சாதே ஆனால் நான் சொல்லுகின்றதை கேழ்ப்பாயானால்நீசவுக்கியப்படுவா யென்றுசொல்ல நல்லது உன்னையாராவது வைத்துக்கொண்டா லதற்கு நீராசியாகுவேயாயில்லையாஎன்றுகேழ்க்க ஏன் நான் ராசியாகமாட்டேன் இந்தக்காடான வனாந்திரத்தில் எனக்குயாரிருக்கிறார் என்னைமோசம் செய்யாமல்ஆதரிப்பவரிருந்தால்நானிருப்பேனென்றுசொல்லயம்மொழியைக்கேட்டவுடனே அவர்சொல்லுகிறார் என்னிடத்தில் நீ இருக்க



ராஜிபாவாயாவென்றுகேட்கஅப்போதுஅவள்சொல்லுகிறாள்நீஎனக்குமூன்றுவாக்குத்தத்துவஞ்செய்தால்நான்சம்மதியாவேன் (முதலாவது) உன்வீட்டில்வேறொருபெண்சாதியிருக்கக்கூடாது (இரண்டாவது)எனக்குவேலைவெட்டியும் ஒருவருக்குப்பணிவிடைசெய்யவுமென்னால் கூடாது(மூன்றாவது) என்னுயிருள்ளவரையில் என்னை வருத்தஞ் செய்யக்கூடாது என்னைத்தாழ்வாகவும் எண்ணக்கூடாது இம்மொழியைக் கேட்டவுடனே, சொல்லுவான் ஓ, பெண்ணே நான் இன்னம் கலியாணம் முடிக்கவில்லை ஆனால் நீ இவ்விதம் சொல்வதால் நீ தவிரவேறொரு பெண்ணைநான் இச்சிக்கவு மாட்டேன்என்னுயிருள்ளவரையிலும் இன்னொரு பெண்ணின்முகத்தையும் பார்க்கமாட்டேன். அவளொரு பரிபோ லிருந்த போதிலும் ஆண்டவ னுதவியால் என் வீட்டில் வேலைக் காரர்களும் அடிமைப் பட்டவர்களும் பாக்தி குலாம்களும் இருக்கின்றார்கள் ஆகையாலெவ் விதத்திலும் உனக்கு யாதொரு குற்றம் குறைவு வரமாட்டாது நீ வீட்டுக்கு பெரியதனம் செய்துக் கொண்டு எஜமானியாக இருக்கவேண்டியது இன்னாள் வரையிலும் ஒருவராவது லோகத்தில் தன்னுடைய பிராணசிவனுன உடன்பட்ட ஆசை நிறைவேற்றும்படியான ஆவுக்கென்ற பெண்ணை மணந்துணிந்து வருத்தம் கொடுக்கப்பட்டமனிதனுமிருக்கின்றானோநான் உன்னை என்கண்ணுக்கு கண்ணாக யாதொரு வருத்தமும் துன்பமுங்கொடாமல்நித்தியம்சந்தோஷமாகவும் நடத்திக்கொண்டுவருவேனென்று இவ்விதமானமொழிகளைக்கேட்டு பெண்ணானவள் சொல்லுகின்றாள் இப்போது நீர்சொன்னதுபோல்நடத்தினைப்பீராகில்நிச்சயமாக என் உயிராலும்மனத்தாலும்ராஜியாகயிருப்பேன் அப்படி சொன்னவுடனே அந்தப் பெண்ணினுடையகையைப்பிடித்துக்கொண்டு அவ்விடம்விட்டு முன்னால்நடக்கிறார்.

அப்போது ஹாத்திமும் கூடத்தொடர்ந்துபோகின்றவேளையில் பெண்ணானவள் அந்த வாலிபனோடு சொல்லுகின்றாள் நான் மூன்றுதினமாக பசியாலும் தாகத்தாலும் எனக்குமிகுந்த இளைப்புதவனத்தாலும் நடக்கக்கூடாமையாயிருக்கின்றதுஎன்னுயிருக்குமிகுந்தவருத்தமாகவருகின்றது ஆனால் இப்போது தின்பதற்கு யேதாவ திருந்தாலும் சுலமாகயிருக்கும் அப்படிக்கில்லாவிட்டால் தண்ணீராவது எனக்குக்கொண்டுவந்து கொடுத்தால் நான்பிழைப்பேன்இல்லாவிட்டால் நான் பிழைப்பதரிதுபோல் தோன்றுகின்றது இம்மொழியை

கேட்டுபெண்ணை ஒருமரத்தினிழலில் உட்காரவைத்து தன்னுடைய சின்ன சகோதரனுக்குச் சொல்லுகின்றான் நீ பெண்ணை வெகுபத்திரமாயும் சாக்கிரதையாயும்நான்தண்ணீர்கொண்டுவருமளவும்பாதுகாத்துக்கொண்டிருமென்று சொல்லிதான்தண்ணீருக்காகவேண்டி எழுந்துகையில் செம்புதோல்பையும்தோளிலெடுத்துக்கொண்டுபோகின்றான் பின்பு கொஞ்சநேரம் பொறுத்துப்பெண்ணானவள் அவ்விடத்திலிருக்கும் அவன்சகோதரனோடு சொல்லுகின்றாள் ஓ,வாலிபனே உனக்காகவேண்டி அவன்பேரில்இராசியானேன் உன்னுடையமுகலட்சணத்தைப் பார்த்தவுடனே என்மனது என்னுடைய கட்டில் இல்லாமல் போய்விட்டது அப்படிக்கில்லாவிட்டால் வயது சென்ற கிழவனுக்கு நான் எப்படிராசியாகுவேன் இப்போது எனக்குபோதுமானது என்னவென்றால்என்னைஉன்னுடையவேலையில் பணிவிடையில்வைத்து என்னோடுசேரவேண்டியதென்று சொல்ல அப்போது அவன்சொல்லுவான் ஓ,பெண்ணே நீ இவ்விதமான துர்மொழிகள்பேசுகின்றது தர்மமல்ல நீ என்னுடையதமையனை நிச்சயப்படுத்திக்கொண்டாய்ஆகையால்எனக்குதாயும்தங்கையைப்போலாகிவிட்டாய் நீசொல்லுகின்ற சொல் ஒரு போதிலும் என்னால் கூடாதென்று சொல்லஉடனே அவள்சொல்லுகிறாள் நீ சொல்லுகின்றது சரியல்ல நான் உன்தமையனுக்கு பெண்சாதியாக யிருக்கிறேன் நீயும் என்பேரில் இச்சித்து ஆசைவைக்க வேண்டியதென்று சொல்ல அதற்கு என்னால் கூடாதென்று இப்பேர்ப்பட்ட துர்மொழியைஉன்மனதில்நின்று எடுத்துவிடு மென்றுசொல்ல அம்மொழியை அவள்கேட்டுமிகுந்த கோபத்துடனே சொல்லுகின்றாள் உன்பேரில்பழியைப்போட்டு உன்னுடைய தமையனிடஞ்சொல்வேன் அதுஎவ்விதமெனில் நீ என்னைவிட்டுப் போனவுடனே இவன் என்னை அழைத்துக்கொண்டு வேறூர் பக்கமாக ஓடிப்போகலாமென்று சொன்னதாகநான்சொல்லுவேன் இல்லாவிட்டால் என்பேச்சைத்தட்டாமல் கேளென்றுசொல்ல அப்போது அந்தவாலிபன் சொல்லுகிறான் ஓ,பெண்ணே நீ உன்னால் சொல்லவேண்டிய சொற்களையெல்லாம் சொல்லு நானொருபோதிலும்உன்சொல்லைகேழ்க்கமாட்டேன் இவ்விதமான மொழிகளிருவரும் பேசிக்கொண் டிருப்பதை ஹாத்திமானவர்ஒருமறைவில்நின்றுகேட்டுக்கொண்டிருந்தார்,

அப்படிக்கிருக்க அவன்பெரியதமையன் தோல்பையில்தண்ணீர்



நிரப்பிக்கொண்டுதோளின்மேலெடுத்துஅருகில்வரக்கண்டு தலைமயிரையவிழ்த்து விரித்து மண்ணைவாரி தலையில்போட்டுக்கொண்டுபெருஞ்சத்தமாக சத்தம்போட்டுக் கொண்டு நிலத்தில் மாறிமாறியடித்துப் புரண்டு அழுகின்றாள் அப்படியிருக்கின்றவளருகில்வந்து நின்றுகொண்டுகேழ்க்கின்றான் ஓ, என்னுடைய பீபியே நான்தண்ணீர்க்குப்போனவிடத்தில்என்னை ஒருபுலியல்லது துஷ்டமிருகங்களடித்துத்தின்றதோ வென்றும் எனக்காகநீ இவ்விதமாகஅழுகின்றாயோ வென்றுகேழ்க்கஅப்போது அவள்சொல்லுகின்றாள் ஆண்டவன் உனக்கும் உன்சகோதரனுக்கும் நல்ராட்டம் கொடுக்க வேண்டியது ஆனால்யாராவது தன்பெண்சாதியை கெட்ட நடப்புள்ளவனிடமாக விட்டுப் போவார்களுண்டோ ஆண்டவன் என் வெட்கத்தைக் காப்பாற்றினான் நீ தண்ணீர்க்குப் போனையல்லவா உன்நிலைமறைகிறவரையில்பார்த்துக்கொண்டிருந்துஇந்தப்பொல்லாபாவவாளியான செயல்கெட்டவன்என்கையைப்பிடித்து தன்னிடம்சேரவேண்டுமென்று இழுத்தான் பின்பு என்னைக் கெடுக்கவேண்டி என்னுடைய உடுமானசீலையைப் பிடித்திழுத்தான் நான் உடன்படாமல் சீலையை இழுத்துக்கொண்டு மிகுந்த துக்கத்துடனே யழுது யாராவது எனக்கு உதவி யொத்தாசையாக வருவார்களாவென்று எவ்விதமாக அழுது கூப்பிட்டபோதிலும் எனக்கு ஒருவருதவி யில்லாமற் போனார்கள் அப்போது சொல்லுவான் நீ ஏன் என் சொல்லைக்கேழ்க்கிறதில்லை நானுனக்குத் தகுந்த லாயக்கானவனல்லவாவென்றும் அல்லது நீ பதினாறு பதினைந்து வயதுள்ளவள் நான் பதினாறு பதினேழுவருஷத்தின் வாலிபமானவன் என்னுடைய தமையன் உனக்கு லாயக்கானவனல்ல நான் ஆயிரமுயிராலும் உன்பேரில் ஆசைக்காக யிருக்கின்றேன் ஆனால் சந்தரப்பப்பட்டால் என்னுடைய தமையனை வெட்டிப் போடுவேனென்று இன்னமனேகமாய்பேசத்தகாத வார்த்தைகள்பேசி என்னைக்கெடுக்க நினைத்திருந்தான் நல்ல வேளையான படியால் கற்புநிலைமை அழியாமல் உன்னை ஆண்டவன் சீக்கிரத்தில் இவ்விடங் கொண்டுவந்து சேர்த்தான் இவ்விதமாக அவள் சொற்களைக் கேட்டு மிகுந்த ஆங்காரத்துடனேகைகால்நடுக்கமெடுத்துக்கொண்டு தன்னுடையசகோதரனிடமாகச்சொல்லுகிறான் அடா பாவி நீ இப்பேர்ப்பட்ட பாதகத்துக்கு உட்பட்டவனோ தாய் தங்கையையும் நீ கெடுக்க என்னதடையிருக்கின்றதென்று வாயில்வராத மொழிகளைப்பேசி நீ என்னசொல்லு

இரு யென்றுகேழ்க்க அப்போது அவன் சொல்லுகிறான் இவள் பொல்லாதகீலியாயிருக்கின்றாள் இவள்சொன்னசொற்களையெல்லாம் நீ நிசமென்றெண்ணாதே இவள் இவ்விதமாக எத்தனைபேர் குடியைக்கெடுத்தவளோ தெரியவாராதென்று அனேகமாகச்சொல்லிசத்தியம் செய்துகொடுத்தான் அவள்பேச்சைநம்பாதேயென்று அவன் என்ன சொன்னபோதிலும் நம்பாமல் கண்ணை உறுக்கிக்கொண்டு ஆங்காரத்துடனே தன்னிடுப்பில்கட்டிய கத்தியை உருவ அப்போது இன்னவன்சொல்லுகிறான் அடாபாவி இவளாலே இரண்டுபேர் உயிர்களும் இந்த வனாந்திரமான காட்டில் போகும்படிக்கி வந்து நேரிட்டதென்று தானும் தன்னுடைய கத்தியை உருவிக்கொண்டு இருவரும் சண்டைசெய்து அவன் இவனைவெட்ட இவன் அவனைவெட்ட இவ்விதமாக இருவரும் வெட்டுண்டு போனார்கள்.

பின்பு இவர்களிருவரும் இறந்துபோனபின் அப்பெண்ணானவள் அவ்விடம்விட்டு நடந்து போகும்போது ஹாத்திமானவரும் அவள்பின்றொடர்ந்து போகின்றவேளையில் அப்பெண்ணானவள் ஒரு எருமைமாடாகி ஒரு ஊரைநோக்கிப்போனாள் அவ்விடத்திலும்ஹாத்திமானவர் பின்றொடர்ந்தார்அப்படியிருக்க அவ்வூரிலுள்ளவர்கள் அந்தஎருமையைப்பார்த்தவுடனே தன்னுடைய அறிவில்நின்றுநீங்கி திரையைப்போல்பெருவோட்டமாகஓடினார்கள்தாங்கள்பிடித்துதங்கள்வீடுகளுக்குக் கொண்டுபோகலாமென்றெண்ணத்தினால் சகலரும் போய் வளைந்து பிடிக்கப்போனார்கள் அப்போதந்த எருமையானது தன்னுடைய இரண்டு கொம்பாலும் காலுகளாலும் அவர்களைக்கிழித்து அனேகரை உயிர்ச்சேதப்படுத்தி விட்டு அவ்வூரில்நின்று புறப்பட்டு ஒரு காட்டிற்போய் ஒரு பெரிய வயதுசென்ற கிழவனுடைய ரூபமெடுத்துக்கொண்டு போகின்றார் அப்போது ஹாத்திம் பின்றொடர்ந்துபார்த்துஎண்ணுகிறார்இப்போதுஇவர்மனிதரூபமெடுத்திருப்பதால்முன்னடந்தியசங்கதிகளையெல்லாம்கேழ்க்கவேண்டுமென்றுசுருக்கா அருகில்முடுகி கூப்பிட்டு ஓ,பெரியவரே புஜாருக்கானை ஹஜரத்தே தாங்கள்சற்று நிற்கவேண்டியதென்று சொன்னமாத்திரத்தில் அவர் நின்று சொல்லுகிறார் ஓ, ஹாத்திமே நீர் சந்தோஷமாகின்றையாவென்று கேழ்க்க அப்போது ஹாத்திம்சொல்லுகின்றார் ஓ, பெரியவரே நீர் என்னுடையபேர்எவ்விதமாக யறிவீரென்றுகேழ்க்கஅப்போதந்த பெரியவர்சொல்லுகிறார் ஓ, ஹாத்திமேஉன்



னுடையபேரையும் அறிவேன் உன்தகப்பன் (தை) என்பவரையும் அறிவேன்நீ என்னோடுதொடர்ந்துநான்செய்தகோலமெல்லாம்நீபார்த்துக்கொண்டுவந்தது எனக்குத் தெரியும் நீ பரோபகாரி அன்னியர்க்காகப்பாடுபடுகின்றவனென்றுஎனக்குத்தெரியும் நல்லது ஹாத்திமே உன்கூட நான்பேசுவதற்கு நேரமில்லை நீஏதாவதுகேழ்க்கவேண்டியதாக இருக்குமாகில் சீக்கிரத்தில் கேட்டுக்கொள்ளுமென்றுசொல்ல அப்போது ஹாத்திமானவர் கேழ்க்கின்றார் நீர் வேறுவேறுரூபமாகின்றசங்கதிகளைச் சொல்லவேண்டுமென்று கேட்டவுடனே அப்பெரியோர் குஞ்சிரிப்புகொண்டுசிரித்துச்சொல்லுகிறார் ஓஹாத்திமே நீ அதைக்கேழ்ப்பதினால்உனக்கென்னகூடுதலையாகும்ஒருநாள் உன்னையும் இவ்விதமாகக்கொல்லுவே னென்றுசொல்ல அப்போது ஹாத்திமானவர் நல்லது இதினுடைய ரகசியத்தை எனக்குத்தெரிவிக்க வேண்டியதென்றும் இல்லாவிட்டால் உங்களை விடமாட்டே னென்றும் சொல்ல அப்போது அப்பெரியவர் சொல்லுகிறார் ஓ ஹாத்திமே நான் யாரென்று உனக்குத் தெரியவில்லையா நானாகப்பட்டவன் ஆண்டவனுடைய ஏவலான (மலக்குல் மவுத்தென்ற இசுறாஈலாகயிருக்கும் எனக்கு உத்தரவு அவரவர்கள் விதியின்படிக்கு எந்தெந்தரூபங்கொண்டு உயிரை வாங்கும்படிக்கு உத்தரவு ஆகின்றதோ அதுபோல் நான் வேறுவேறுரூபமெடுத்து அவரவர்கள் உயிரை வாங்கப்பட்டவன் இவ்விதமான மொழியை ஹாத்திம்கேட்டு மிகுந்த சந்தோஷத்தை யடைந்தார்,

பின்பு கேழ்க்கின்றார் என்னுடையமவுத்து எப்போது எவ்விதமாக எனக்குவருமென்றுகேழ்க்க அப்போது அவர்சொல்லுகின்றார், ஓ, ஹாத்திமே நீ துனியாவில் உன்னால்வேண்டிய உபகாரம் மனிதர்களுக்கு செய்யும்படிக்கு உன்னைஆண்டவன் நியமித்திருப்பதால் உனக்கு ஐம்பதுவயது கொடுத்திருக்கிறான் ஆகையால் உனக்கு இன்னம் பாதிவயது ஆகவில்லை உனக்கு ஐம்பதுவயது ஆகுமானால் அப்போது நீ ஒருபெரிய மஹாலின்மேல்நின்று தவறிகீழே விழுவாய் அப்போது உன்னுடைய மூக்கினால் இரத்தம் எவ்விதம்விழுமானால் இவ்வளவென்று சொல்லக்கூடாது அப்போது உன்னுடைய உயிர் போய்விடுமென்றுசொல்லி உன்னுடைய ஆயுசு இருக்கிற

வரையிலும் நன்மையானவேலைகளை செய்துக் கொண்டுவாஉடன்பேம்
துனியாவில் லோகமறைகிற வரையில் இலேசிருக்குமென்று சொல்ல
ஹாத்திம்கேட்டு சிஜுதா ஷாகுருடுதொழுதுதலையுயர்த்திபார்க்கிற
போது அப்பெரியோர்காணுமல் கைபாகிப்போய்விட்டார் அப்போது
ஹாத்திமானவர் என்னுகிறார் எவ்விதமாகுல் என்னுடைய ஆயிசுவ
ரையில்இப்பேர்ப்பட்ட ஆச்சரியமானகோலத்தை கண்டதில்லையா
தொருஉயிர்ப்பிராணிகளுக்குஇக்கட்டேசிட்டால் அதற்காகஅந்தி
க்கத்தை தவிர்க்க நான் இடுக்கமும்துன்பமும் எடுத்துக்கொண்டு
திரிகின்றேன் இப்போது இவர்கள்தன்னையோபேர்களை இறக்கச்செய்
துவிட்டார் அதை நாம் கண்ணுல் பார்த்து விலக்காமலும் அவர்க
ளுக்கு உதவியொத்தாசை செய்யாமலும் ஆண்டவனுடைய கற்பனை
யினுல்அவர் ஆயிசுகுறைந்தவடியால் அந்தகடன்களாகியபழிகளைப்பார்
த்துக்கொண்டு வேடிக்கையாயிருக்கும்படிக்கு ஆண்டவன்என்ன
னைகெட்டிப்படுத்திவிட்டா னல்லவாவென்று மிகுந்த மனவருத்தம
டைந்துதான்வந்தவேலைக்குப்போகஎண்ணங்கொண்டு அவ்விடம்வி
ட்டு புறப்பட்டு தஷ்தேசருக்சென்றசெம்மண்ணின் பாதையைப்பிடி
த்துக்கொண்டு சிலதாள்நடந்து சிகப்புமண்ணுள்ள பாதையில் போய்ச்
சேர்ந்தார்.

அவ்விடத்திலுள்ள கரும்பாம்புகளானது மனிதனுடையவாசனை
முகர்ந்தவுடனேநாளுதிக்கிலுமிருந்து ஓடிவந்துகோட்டைபோலசு
த்திஹாத்திமைவளைந்துகொண்டது அப்போது ஜிருனுடையபாத்து
ஷாஹ்யூஸ்கொடுத்த ஆஸாவைகீழே வைத்துக்கொண்டு அதின்மே
லிருந்தார் அவ்விதமாக அன்றிரவெல்லாமிருந்து பின்பு விடியற்காலே
யில் எல்லாப் பாம்புகளும் எங்கிருந்து வந்ததோ அவ்வழியைப்
பார்த்துக்கொண்டுபோய்விட்டது அப்போது அவ்விடம்விட்டுஹாத்
த்திமானவர் புறப்பட்டு வெண்மையானநிலத்தில் போய்ச்சேர்ந்தார்
அவ்விடத்திலுள்ள வெண்மையான பாம்புகளெல்லாம் வந்து
கோட்டைபோல் சுத்தி வளைந்துகொண்டது முன்போல் ஆஸா
வை கீழேவைத்துக்கொண்டு இராத்திரிமுழுதுமிருக்கவிடிந்தபின்பு
பாம்புகள் தம்முடையஇடங்களைப்பார்த்துக்கொண்டுபோய்விட்டது
அப்போதுஹாத்திம்அவ்விடத்தைவிட்டு புறப்பட்டுபச்சைநிறமுள்
ளமண்ணின்பாதையில் போய்சேர்ந்தார்முன்போல் அவ்விடத்திலு
ம் பாம்புகள்வந்துசுத்திக்கொண்டது ஆஸாவைகீழேபோட்டுகொண்
டிராவெல்லாமிருந்து விடிந்த பின்புபாம்புகள்தங்கள்வந்தவழியைப்



பார்த்துக்கொண்டு போய்விட்டதுகள் பின்புஹாத்திமவ்விடம்விட்
டுப் புறப்பட்டு சுத்த சிவப்புமண்பாதையில்வந்து சேர்ந்தபோ
ர்க்கின்றார் அந்தநிலமானது சாதிலிங்கத்தினிறத்தில் நின்று சிவப்
பாக யிருக்கின்றது அவ்விடத்தில் நின்று கொஞ்சதூரம்
நடக்கையில் நடக்க தாகத்தும் பெலனுமில்லாமல் மிகுந்த விசனத்
தை யடைந்து முன்னுல் நான் எவ்விதமாக நடப்பேனென்று இப்
போது நமக்கென்னவிதிவந்துநேரிட்டிருக்கின்றது தெரியவில்லையே
உயிருக்குபலவிதமானமயக்கம்வருகிறதுபசிதாகத்தால்காலும்உடம்பு
காய்ந்து தடுமாறி அக்கினியைப்போல் ஜெலிக்கின்றதுபின்புநிற்க
வும் நிழலில்லை உட்காரலாமென்றால் நிலம் அக்கினியைப்போல் ஜ
லிக்கின்றது இதற்கு நான் என்னசெய்வேன் இப்போது இவ்விடத்
தில் நாம்இறக்கும்படியாக விதிநேரிட்டிருக்கின்றதுஇருக்கவும் நிற்
கவும் கூடாமையாகவு மிருக்கின்றது இவ்விடத்தில் நிற்கவும்நேரமு
மில்லை முன்னுல்போகலாமென்றால் என்னுல்தாகத்தாலிலனு மில்லை
இப்போது இவ்விடத்தில் நாம் இறப்பது நிச்சயமாகிவிட்
டது ஆனுல் நான் ஆண்டவனுக்காக அன்னியர்க்குச்சகாயம்செய்து
அதனுல்என் உயிர்போனுலும்போகட்டும் என்றைக்கிருந்தாலும்இற
ப்பது நிச்சயமென்றெண்ணி ஆண்டவனிடமாக துவாகேட்டுக்கொண்
டுமனதைதரியப்படுத்திக்கொண்டு அவ்விடத்தில் நின்றுபுறப்பட்டு
த்தூரத்தில் நடந்தால் போனார் உடனே இரண்டுகால்களும் சோர்ப
ணுகிவிட்ட தசைவெடித்துவைக்ககூடாமல் நிலத்தில்விழுந்துநெரு
ப்பில் விழுந்தபுழுப்போல் துடித்துபுரண்டுகொண்டுதேகமெல்லா
ம் புண்ணுகிவிட்டது தன்னைமறந்து கிடக்கின்றவேளையிலொரு பெ
ரியோரானவர் வந்து பார்த்து ஹாத்திமை தூக்கியெடுத்துவைத்துக்
கொண்டுசொல்லுகின்றார் ஓ,ஹாத்திமே இவ்வேளையில்தைரியத்தை
விடாமல் உன்மனதைதிடப்படுத்திபின்வாங்காமல் கிரகுடைய மகள்
கொடுத்திருக்கிறமோராவை உன்னுடையதிப்பியிலிருந்தவிழ்த்து
வாயில்வைத்துக்கொள்ளென்றுசொன்னவுடனே அப்போது ஹாத்தி
ம் தன்னுடையதிப்பியிலிருந்தமோராவைஅவிழ்த்துதன்வாயில்போட்
டுக்கொண்டார் பின்பு பசிதாகமும் வருத்தமும் நிலத்தின் வெப்பமு
மதும் அக்கணத்தில் நின்றுவிட்டது அப்போது ஹாத்திம் அந்த
பெரியவருடைய காலில்விழுந்து கேட்கின்றார் இந்த அதிகமான
கொதிப்பான சக்தியெதுவாகயிருக்குமென்றுகேட்கஅவர்சொல்
லுவார் இந்த குடாரனது வெப்புமாயயின் விஷத்தில் குடாகயிருக்

கும் அதினுடையவாயிலிருந்து நெருப்பு புறப்படுகின்றது அதினால் இந்த பூமிநிறம் சிவப்பு செந்தூரம்போலாகியிருக்கின்றது இந்த நிலமானது முன்னால்பசுமையான நிலமாக விருந்தது இம்மொழியை ஹாத்திம்கேட்டு அவ்விடத்திலிருந்து முன்னால் நடக்கின்றார் இவர்மோருவை வாயில் வைத்திருப்பதால் அதினுடைய வேகமான சூடுபடவில்லை இவ்விதமாகப் பாதிவழி நடந்துபோகையில் அந்தசெப்புபாம்பானது ஹாத்திமுடையவாடைவருவதைமுகந்து ஆங்காரத்துடனே தன்னுடைய படத்தைமேலெடுத்து மிகுந்தவிசையாகவாயில் நின்று நஞ்சையிறக்கின்ற வெப்பானநெருப்பின் சுடர் வானத்தையளாவிக்கொண்டு நிற்கின்றது அதினுடையபடமானது பெரியவிசாலம்பொருந்திய கல்லைப்போலவும் உயரமானது பெரியபனைமரத்தின் உயரம்போலவும் அதினுடைய படத்தின்மூக்கின்துவாரத்திலிருந்து நெருப்பானதுபெருங்காற்றைப்போலவீசிக்கொண்டிருந்தது கண்கொண்டதூரவரையிலும்மரங்கள்புல்லுபூண்டுகள்கருகிஉருகிமயிதானமாயிருக்கின்றது அவ்விடத்தில் போய் ஹாத்திம் அந்தநெருப்பில் சிக்கிக்கொண்டதுமொழிபுத்திவேறுபட்டுச்சொல்லுகின்றார்.

இப்போது இந்தநெருப்பினால் நம்முடைய தேகம் கருகி உருகிவிடும்ஆனால் அந்த மோரு வாயிலிருப்பதால் கொஞ்சம்கொஞ்சம் தண்ணீர் குளிர்ச்சியாக தொண்டைக்குள்ளிறங்கிக்கொண்டிருக்கின்றது அதினாலே நம்முடைய உயிர் தப்பியிருக்கின்றது அப்படியிருக்கையில் பாம்பினுடைய பார்வை ஹாத்திம்பேரில் விழுந்தது அப்போது பாம்பானது படத்தையெடுத்துக்கொண்டு ஆங்காரத்துடனே நஞ்சைவாரி கணக்கில்லாமல் அக்கினியைப்போல் சொரிகின்றது சின்பாத்துஷா ஹயூஸ் உடைய மோருவினால் அந்தப்பாம்பின் விஷமானது ஒன்றும் செய்யவில்லை அன்றிரவு இவ்விதமானகோலமாகயிருந்துபொழுதுவிடிந்த பின்பு அந்தசெம்பாம்பினுடையமோரு அதின் உதட்டில்முன்னால்வைத்திருப்பதை ஹாத்திமானவர்நூருவிபிரகாசம்போலிருக்கின்றமோருவென்றகல்லைப்பார்த்து தன்னுடைய அஸாவைக்கொண்டுமெள்ள அதை அசைக்க அப்போது அந்தபாம்பானது தன்தலையைநிலத்திலடித்துக்கொண்டிருந்தது பொழுதாகப்பட்டது இளம்பின இன்பின் அந்தமோருவைதன்வாயிலிருந்து கக்கிவிட்டு அந்த பாம்பானது தன்னாலேதான் அவ்விடம் விட்டு போய்விட்டது ஹாத்திம்அந்தமோருவினருகில்போய் அதையெடுக்க



பயந்து பின்பு மனதில் எண்ணினார் இதுவானால் மிகுந்தசூடாகயிருக்கின்றது இதை நாம் எடுத்தால் கைவெந்துபோகும்ஆதலால் இது நலமாகயிருக்கும்கொஞ்சநேரம்பொறுத்து தன்னுடையதலைப்பாகையில்நின்று ஒருதுண்டைகிழித்து அதின்மேல்போட்டதுணிவெகவில்லை அதைபார்த்தவுடனே அந்தமோருவையெடுத்து தன்னுடையதலைப்பாகையில்கட்டிக்கொண்டார் அதினுடையவேகமானசூடுதணிந்துபோச்சுது பின்பு அந்த காடுநிலமெல்லாம் வேகந்தணிந்து குளிர்ச்சியாகிவிட்டுது பின்புஹாத்திமானவர் அவ்விடம்விட்டு புறப்பட்டார் அந்தமோருவின் சிறப்பானது எவ்விதமானால்யாதாமொருவர் அதையெடுத்துக் கொண்டு போனால் முப்பது வருஷமான பின்பு அப்பாம்புக்கு வேறொருமோருவுண்டாகும் அதினுடைய விபரங்களைக்குறித்துசொல்லவேண்டுமானால் இவ்வளவென்றுசொல்லி முடியாதுபின்பு ஹாத்திமானவர் வெகுவருத்தங்களையெடுத்துக்கொண்டுசிலநாள் சென்ற பின்பு அவ்விடம்விசனத்தையடைந்துகொண்டிருக்கின்ற சிப்பாய் வாலிபனிடமாக வந்து சேர்ந்து அந்த மோருவை அவனிடமாகக் கொடுத்து தான்போயவந்த சங்கதிகளெல்லாம் தெரியச்சொன்னார் அப்போது அந்த வாலிபன் ஹாத்திமுடைய காலில் விழுந்து மிகுந்த ஆயமாக அழுது தன்னுடைய கழுத்தோடே அணைத்துக்கொண்டான் ஹாத்திம் சொல்லுகிறார் நல்லது நீ இப்போதுநீபோய் இந்தமோருவை பரியாசகுலியக்காரனிடமாகக் கொடும் அப்போது அந்தவாலிபன் எடுத்துக்கொண்டு ஹாத்திமுடனே பட்டணம் போய்ச்சேர்ந்து அந்த பரியாச குலியக்கார னுடனே மிலாகத்தாகி அந்த மோருவை அவன் முன்பாக வைத்து ஓ பாத்துஷாவே நானிந்த மோருவை மிகுந்த வருத்தம் துன்பமுமெடுத்துக்கொண்டு இதைக் கொண்டுவந்திருக்கின்றேனென்று சொல்ல அதற்கவன்சொல்வான்நல்லது இதன்பரிட்சை முதலறிந்து கொள்ளவேண்டும் பின்புநீசொல்லுகின்றமொழிகளை எனக்குநிச்சயப்படுமென்று அந்தமோருவை தான் பார்க்கவேண்டியபரிட்சையெல்லாம்பார்த்து சரியானதென்று நிச்சயப்படுத்திக்கொண்டான் அவன் வெளிக்குமிகுந்த சந்தோஷமானான் உள்ளுக்குவிசனத்தையடைந்து வெழுக்கமாகிச் சொல்லுகிறான் ஓ, வல்லமைசாலியாகிய நகரியிலுள்ளவாலிபனே இப்போது இன்னமொருசவாலிருக்கின்றது அதையும் நீ அதாசெய்துக்கொடுக்கவேண்டியதென்று சொல்ல வாலிபன் சந்தோஷமென்றுசொல்ல அந்த பரியாசக்காரன் தன்னுடை

யமனிதர்களை அழைத்துச்சொல்லுகின்றான் ஒருபெரியஇரும்பினுடை
ய அண்டாவைகொண்டுவந்துஅது நிறைய நெய்யை நிரப்பி அடுப்பி
ல்வைத்து இரவும் பகலும் விடாமல் நெருப்பில் எழுநாள் நன்றாய்க்
கொதிக்க வேண்டியதென்று சொன்னான் அதுபோல் செய்தார்கள்
அப்போது அந்நெய்யானது எவ்விதமாக உருகியிருக்கின்றதென்றா
ல் ஒரு கருங்கல்லானதை அதில்போட்டால் அதுவு முருகிநீராகிவி
டும் அப்போது அந்த வாலிபனிடமாகச்சொன்னான் இதில் நீ விழுந்
து நன்மையாக குற்றங் குறைவில்லாமல் வருவாயாகில் உன்னு
டைய மாஷூக்கானபெண் உனக்கு கிடைக்கு மென்றுசொல்ல அப்
போது அந்தவாலிபன் அச்சமடைந்து ஹாத்திமுடனே சொல்லுகி
ன்றான் இப்போதுஇந்த நெருப்பில் நின்று நான்உயிர்தப்பிபிழைத்து
வரமாட்டே னென்றுசொல்ல ஹாத்திம்சொல்லுகின்றார் ஓ, என்னு
டைய தோழனே நீ யாதொன்றுக்கு மஞ்சாதே ஆண்டவன்கிருபை
யால் உனக்குயாதொரு குறைவுவராதென்று தைரியப்படுத்தி நீ ஆ
ண்டவனை நினைத்து உண்மைகொண்டு உறுதிப்படுவையானால் உன்
சங்கடத்தையும் வருத்தத்தையும் நீக்கிவிடுவா னென்றுசொல்லி கர
சுடைய மகள்கொடுத்த மோறுவை தன்தலைப்பாகையிலிருந்து அ
விழ்த்து அவன் கையில்கொடுத்துச் சொல்லுகின்றார் இதை உன்வா
யில்போட்டுக்கொண்டு எரிகின்றநெய்அண்டாவில்குதித்துஆண்டவ
ன்கிருபையால் வந்தால் உன்தேகத்திலிருந்து ஒருமயிராவது விழ
மாட்டாதென்றுசொன்னவுடனே அந்தமோறுவை வாயில்போட்டுக்
கொண்டு பரியாசக்காரனிடமாகப்போய் இப்போதுநீஎன்னசொல்லு
லுகிறா யென்றுகேழ்க்க நீ இந்த எரிகின்ற அண்டாவில் போய்விழு
ந்து முழுகிவா வென்றுசொல்ல அதுபோல் அந்த அண்டாவின
ருகில்போய் பார்த்தவுடனேபயந்து நடுநடுங்கி நிற்கின்றான் அப்போ
து ஹாத்திமானவர் அவனை அதட்டி ஓ, வாலிபனே நீ அச்சப்படா
தே விசனப்படாதே இந்த நெருப்பானது ஆஷக்கானதாகயிருக்கும்
நீ ஆண்டவனை நினையென்று ஹாத்திம் தைரியஞ்சொல்லி முதுகை
த்தட்டினார் அப்போது அந்தவாலிபன் இருகண்ணையும் மூடிக்கொ
ண்டு ஆண்டவனே உன்னுடைய காவலென்றெண்ணி அந்த கடா
யில் குதித்து ஒரு முழுக்குப்போட்டான் அப்போது உருகியி
ருக்கின்றநெய்யானது அவனுக்குகுளிர்ந்ததண்ணீரைப்போலிருந்தது
அப்போது அந்தக்கடாயின்னும் அண்டாவில் நான்குபக்கத்திலும்
முழுகிமுழுகிக் கொண்டிருக்கின்றான் தன்னுடைய தேகத்தில்நெய்



யைபெடுத்துத் தேய்த்துக்கொண்டு சிரித்துச்சொல்லுகின்றான் இப்
போது நீர் என்னசொல்லுகிறீர்நல்லதுநான்வெளியேவரலாமாஇன்
னம் நாலுநாழிகை பொறுத்துவரலாமாவென்றுகேழ்க்க பரியாசக்கா
ரன்பார்த்துதிகைத்து இதிலுமிவன் எரிந்துபோகாமல் உயிர்தப்பி
குற்றமில்லாமலிருக்கின்றானென்று வெழ்க்கமடைந்து தலையைக்கீ
ழே போட்டுக்கொண்டான் அப்போது ஹாத்திம் சொல்லுகின்றார்
நீர் என்வெழ்க்கமடைகின்றீர் உன்னுடையசொல்லை நிறைவேற்றுமெ
ன்றுசொல்லி அந்தவாலிபனை வெளியே அழைத்துக் கொண்டு
பின்பு சொல்லுகின்றார் நீ என்ன சொன்னயோ அதெல்லாம்
அந்த வாலிபன்செய்தான் ஆனால் நீ இப்போதுகுனியஞ்செய்ய நினை
வுகொள்வையானால் அந்த குனியமானது ஒருபோதும்அவனை ஒன்
றுஞ்செய்யமாட்டாது எவ்விதமானால் அவனிடம் இன்னமொருதி
வப்புமோறு யிருக்கின்றது இம்மொழியைக்கேட்டு மிகுந்த வெழ்க்
கமடைந்து அந்தவாலிபனை அருகிலழைத்து கழுத்தோடே சேர்த்
து அணைத்துக்கொண்டு மிகுந்த பூரிப்புடன் சந்தோஷமாகி கலியா
ணத்தின் சாமான்கள் தயார்செய்து அனேகவேடிக்கை விநோதமா
கத் தங்களுடைய வழக்கம்போல் கலியாணஞ்செய்து ஆஷக்கான
வனிடமாக மாஷூக்கென்னும்பெண்ணைச்சேர்த்துவிட்டு அவன்சொ
ல்லுகின்றான் ஓ,என்மருமகனே இந்ததேசமும் என்னிடமிருக்கின்ற
ஆஸ்திகளும் உன்னுடையதாக விருக்கும் இன்னம் இந்தப்பெண்தவி
ரஎனக்கு வேறேபிள்ளைகளில்லையென்றுசொல்லி நீரேஎனக்குப்பிள்
ளையாகுமென்று தன்மகளைப்பிடித்து மருமகன்கையில் கொடுத்தான்
பின்புமாப்பிள்ளையும்பெண்ணுமாகக்கலந்துசந்தோஷத்தையடைந்தி
ருந்தார்கள் அப்படியிருக்கையில் ஹாத்திமானவர் அந்த வாலிபனை
அழைத்துச்சொல்லுகின்றார்ஓ,என்னுடையதோழனே இன்னமுமெ
னக்குறிதுபோலொத்தவேலை மிகுதமாகயிருக்கின்றதுஎனக்கிப்போ
துஉத்தரவுநீர் கொடுக்கவேண்டுமென்றுநான்போகாப்பென்ற மலைக்
குப்போகவேண்டு மென்றமொழியைக்கேட்டு வாலிபனானவன் ஹா
த்திமுடைய காலில்விழுந்து இரண்டுகையு மேந்திக்கொண்டு ஆண்
டவனிடமாக துவா கேழ்க்கின்றான் எவ்விதமெனில்லோகத்தையெ
ல்லா முண்டுபண்ணி காப்பாற்றுகின்ற ஆண்டவன் உனக்குவேண்
டிய உதவி யொத்தாசையும் செய்வான் நீ எங்கேபோனாலும் உன
க்குயாதொரு தடங்கலும் இடுக்கமும்வராமல் காப்பாற்றிக்கொள்வா
னென்றுசொல்ல பின்பு ஹாத்திம் அவனிடத்தில் கொடுத்தமோறு

வை வாங்கிக்கொண்டு உத்தரவுபெற்றுக்கொண்டு கோகாப்புமலையின்பாதையை பிடித்துக்கொண்டு முன்னால் இரவும் பகலுமாக நடந்து சிலநாளைக்குப்பின் கோகாப்புடைய அருகில்போய்ச்சேர்ந்து பார்த்தால் ஒரு மலையானதுவானத்தைத்தொட்டுக்கொண்டுபேசுகின்றதுபோல் தோணவருகின்றதுபறவைகளுடையதாகத்தும்பிலனுமிருக்குமா அவ்விடத்தில்போய்பறக்கஇன்சானுடையதாகத்தும்பிலனும்என்னயிருக்கின்றது அவ்விடத்தைப்பார்க்கஇதினுடைய அச்சமும் பயத்தாலும் ஹாத்திம்கீழேயிருந்து விட்டார் ஆனால் இவ்விடத்தி லிருக்கின்றவர்களை கேழ்க்கலாமென்று பார்த்தால் எவ்விடம் போகுதென்றும் ஒருவரையுங் காணவில்லையேயென்று இந்த விசனத்தின்பேரில் நினைவுகொண் டிருக்கின்றபோதில் ஒரு கூட்டமாகபரிஜாதிகள்வரக்கண்டார் அதைப்பார்த்துஅதனோடுதொடர்ந்துஓடினர் அவர்களைக்காணவில்லை அந்தக் கூட்டங்களும்கண்ணுக்குத்தெரியாமல் கைபாகிப்போய்விட்டது இப்படியிருக்கஒருபெரியகாறென்னுந் துரவு தெரியவந்தது அதின் ஓரத்தில்ஒரு கருங்கல்லு வழுவழுப்புள்ளது உள்ளே சாய்ந்திருக்கக்கண்டுஇந்தபூகாறுன துரவுக்கு பாதையில்லையே இதில் எவ்விதமாகப் போகலாமென்று யோசித்துக்கொண்டு இந்த கல்லில்நின்று வழுக்கிக்கொண்டு அந்த கிணற்றினுள்ளே போகலாமென்று ஆண்டவன் விட்டதுபோல் ஆகுமென்றும் எண்ணி அதுபோல் அக்கல்லில் உட்கார்ந்துகண்ணை மூடிக்கொண்டு காலையில்தொடுத்துமாலைவரையிலும் நகர்ந்து கொண்டும் உருண்டுகொண்டும் அந்தக் கிணற்றுக்குள்ளேபோய்கொண்டிருந்தார்.

பின்பு தன்னுடைய காலானது நிலத்தில் பட்டது அப்போது கண்ணைத்திறந்து பார்த்தார் அவ்விடத்திலொரு பெரிய மயிதானம் பலபலவிருட்சங்களும் சோலைகளும்கண்டு உடனேதன்னுடையமன்மானது விரிந்து சந்தோஷமடைந்து கொஞ்சதூரம் நடந்துபோய் மனதிலெண்ணுகின்றார் நாம்கண்ட பரிஜாதிகளெங்கேபோனார்களோ இந்த காட்டில்எங்கேயாவது வீடுவாசல்க ளிருக்குமாவென்று எண்ணிக்கொண்டு பின்னும் நாலஞ்சடி முன்னால் நடக்கையில் அவ்விடத்தில் மேன்மையானவேலையுள்ள ஒருபெரியமஹாலானவீடுகாணப்பட்டது அப்போது ஹாத்திமென்பவர் இவ்விடத்தி லிருக்கின்ற வீட்டில் யாராவது இருக்கவேண்டுமென்றும்பார்க்கலாமென்றும்முன்



னால்நடக்கின்றார் அப்போது அவ்விடத்திலிருக்கின்ற பரியானவர்கள் ஹாத்திமைப்பார்த்து அவர்கள் சொல்லுகிறார்கள்யாரோஒருமனிதன் வேறுபட்டவன் சந்தேகமும் அச்சமுமில்லாமல் வருகின்றானென்று தம்முடைய இடத்தைவிட்டு ஹாத்திமிடமாக வெகுசுருக்கில்வந்துசொல்லுகின்றார் ஓ, மனிதனுடைய சாதியானவனே இந்த இடமானவீட்டுக்குவர உனக்குலாயக்கும்சரியல்லவேநீஎவ்விதமாகவந்தாய் உன்னைஇவ்விடம்யார்கொண்டுவந்தாரென்றுகேழ்க்கஅப்போதுஅதற்கு ஹாத்திம்சொல்லுவார் என்னுடையகிருபையுள்ளஆண்டவன் என்னை இவ்விடங்கொண்டுவந்தானென்றுசொல்லஅல்லது இந்தகாறுடைய துரவின்பாதைநீஎவ்விதமாக அறிந்தாயென்றுகேழ்க்கநான் உங்களைப்பார்த்து ஓடிவந்தேன்நீங்கள்முன்னாலேபோய்க்கொண் டிருந்தீர் நான்அரை நாழிகை பொறுத்து உங்களைப்பார்த்தால் நீங்கள் சகலரும்காணாமல்கைபாகிப்போனீர்கள் அப்போதுநான்யோசனைசெய்தேன் ஆண்டவனே இவர்களெங்கே போனார்களோவென்று நினைந்துநீங்கள் எந்தவழிபோனீர்களோ நானும்அந்தபாதையைபார்த்துக்கொண்டு நடந்துவருகையில் அவ்விடத்திலொரு இருண்ட காறென்னும் கிணறிருக்கின்றது அதைப்பார்த்து நான்மிகுந்த அச்சமடைந்து இதில் எப்படிபோகலாமென்று யோசிக்கும் போது அப்போது ஒரு எண்ணம் எனக்குவந்தது இந்த கல்லில்நின்று வழுக்கிக்கொண்டுபோனால் எவ்விதத்திலும் கீழே கொண்டுபோகுமென் றெண்ணி அதுபோல் செய்தேன் உங்களுடைய தேட்டத்தின்பேரில் இதுவரையில்வந்து சேர்ந்தேன் நீங்கள் ஆண்டவனுக்காக இந்த மலையினுடையபேரும் இந்ததோட்டமானது யாருடையதென்றும் கேழ்க்க அதற்கவர்கள்சொல்லுகிறார்கள் இந்தமலையின்பேர்கோஹேறுஅல்காவாகயிருக்கும் இந்ததோட்டம்மலிக்காஅல்கன்பரியுடையதாகயிருக்கும்நாங்கள்இதின்காவல்காரர்களாகயிருக்கும்ஆனால்அந்தஅல்கன்பரிஇவ்விடம் வருகிறதாககேள்விப்பட்டு நாங்கள்விசாரிக்கவந்திருக்கின்றோம்இன்னமவள்வருகிறதருணம்அருகாமையில்இரண்டுமூன்றுதினத்தில்வருவாள் ஆனால் ஓ, வாலிபனே உன்னை இவ்விடத்தில் நாங்களெப்படி வைத்திருக்கக்கூடும் நீ உயிரிழந்து போய்விடுவாய் ஆனால் உன்னுடையவாலிபத்திலின்றும் உன்னுடைய அழகிலின்றும்நாங்கள் இரக்கப்படுகின்றோமென்றுசொல்லஹாத்திம்சொல்லுவார் நான் இவ்விடத்திலிருக்கும்படியாக எண்ணங்கொண்டவனல்ல நான் எங்கேபோவேன் என்னுடைய நசீபு இவ்விதமாக விருக்கின்றது நான் அன்னி

யர்க்காக இவ்வளவுவருத்தமும் துன்பமுமெடுத்துக் கொண்டு இவ்விடம்வந்திருக்கிறேன் அந்த அல்கன் பரிகளுக்கில் வந்துசேர்ந்தால்நலமாகயிருக்கும் என்பேரில் என்னவந்தபோதிலும் வரட்டுமென்றுசொல்ல இம்மொழியைக் கேட்டவுடனே அவர்கள் கேழ்க்கிறார்கள் அப்படிக்குஉனக்கென்னவேலையிருக்கின்றது அவளைப்பார்க்கநீ எழ்மைப்பட்டமனிதனாகயிருக்கின்றாய் அவள்பரிசாதிக்கும் உனக்கும் என்னவேலையிருக்கின்றதென்று கேழ்க்க அப்போதுஹாத்திம்சொல்லுகிறார் பரிகளை இன்சான்கள் இச்சித்துதேடுகின்றதுமுண்டு இன்சான்கள் பரிகளைஇச்சித்து தேடுகின்றதுமுண்டு என்று ஹாத்திம் சொல்லஇம்மொழிகளைகேட்டுமிகுந்த கோபமடைந்து சொல்லுகின்றார் பார்த்தால் நீ பயித்தியம் கொண்டவனைப்போல் தோற்றுகின்றது ஆனால் இப்போது மெய்யாகச்சொல்லுகின்றோம் யாதாமொருவன்தன்னுடைய உயிரிழந்துபோகின்றவனெவனோ அவன்இப்பேர்ப்பட்டகோரமானஇடத்தில் துணிவுகொண்டுவருவானென்று மிகுந்த ஆங்காரத்துடனே சகலபேர்களும் இவனைநாம் உயிர்ச்சேதம் பண்ணவேணுமென்றுவாளைகையிலெடுத்துக்கொண்டு கிட்டேமுடுகிவந்தார்கள். அப்போதுஹாத்திம்தன்னுடையதலையைகீழேகுனிந்துகொண்டுயாதொன்றும்பேசாமல்நிற்கின்றார் அப்போதுஅந்தப்பரிகள்குஞ்சிரிப்புகொண்டு தங்களில்தானேபேசிக்கொள்ளுகிறார்கள் இவனைகப்பட்டவன்ஒரு விபரீதமானமனிதனாகயிருக்கின்றான் இவன்பயந்து ஓடப்பட்டவனுமல்லபயப்படப்பட்டவனுமல்ல ஒருவனோடெதிர்த்துசண்டைசெய்யப்பட்டவனுமல்ல ஆனால் இவனை எவ்விதமாக ஒருவர்கத்தல்செய்துவெட்டுவார்கள்தொந்தரவும்செய்வார்கள் இவ்விதமாகப்பேசிக்கொண்டுஹாத்திம்கூட சொல்லுகின்றார்கள் ஓ,வாலிபனேஉனக்காக நாம்இரங்கிச்சொல்லுகின்றோம் உன்னுடையநன்மைக்காகவேண்டி ஆனால் இந்த இடமானது நீ யிருக்கப்பட்டதலமல்ல நீ சலாமத்தாக உயிர்தப்பிப்போகவென்றால் இப்போதுநீயாதொன்றும் பேசாமல் போய்விட்டால் நலமாகயிருக்கும் இல்லாவிட்டால் நீமெத்தவருத்தமெடுத்துக்கொண்டு நீ வெட்டுண்டு போவாயென்று இவ்விதமாகச் சொல்ல அம்மொழியை ஹாத்திம்கேட்டு சொல்லுகின்றார் ஓ, பரிகளே நான்உயிர்தப்பிப்போகவேணுமென்கிற ஆசையெனக்கில்லை உயிர்போகுமேயென்கிற விசனமுமில்லை நான் ஆண்டவன் பாதையில் தலையைக்கொடுக்க நாட்டம்கொண்டவனாகயிருக்கின்றேன் ஆனால் இன்னம் ஆண்டவன் பாதையில் நிச்சயமாகவும் உறுதி



115992

க்கொண்டுதன்சிரசைதன்னுடைய உள்ளங்கையில் வைத்துக்கொண்டு திரிகின்றவர்களாக யிருப்பார்கள் எந்நேரமும் ஆண்டவனுடையபாதையில்தான் இஷ்டப்பட்டிருப்பார்கள் ஆனால் ஆண்டவனானவன் பூமிக்கும் வானத்துக்கும் மற்றசீவராசிகளுக்கும்ப்ராத்துவாக்களுக்கெல்லாம் பாத்துஷாவாக யிருக்கின்றான் அப்பேர்ப்பட்டவனைநாடி நாட்டம்கொண்டு வணங்கவேண்டியதுமன்றிதொழவேண்டியது உண்மையாக யிருக்குமென்றுசொல்ல அம்மொழியை அந்தப்பரிகள் கேட்டுமிகுந்த சந்தோஷமாகி இரக்கங்கொண்டுசொல்லுகின்றார் ஓ, வாலிபனே நீ அச்சப்படவேண்டாம் நீ சந்தோஷத்தையடையும் படியாக நீ எங்களோடு சேர்ந்திருக்க உனக்கு இஷ்டமிருக்குமாகில் நாங்கள் உன்னை எவ்விடத்திலாவதுமறைவாகவைத்திருப்போம் சந்திரன் கூட பார்க்கின்ற யிடமில்லாமலிருக்குமென்று ஹாத்திம்பேரில் ஆசைக்காகியிவ்விதமாகச்சொல்ல அப்போதுஉங்களிஷ்டம்போல் செய்யுங்களென்று சொல்ல அப்போது அவனையழைத்துக்கொண்டு ஒரு மறைவானமஹாலில்கொண்டுபோய் விதவிதமான பதார்த்தத்துடனே பலாவுகளும்விதவிதமானகனிவர்க்கங்களும் முன்னால் கொண்டுவந்துவைத்து சாப்பிடச்சொன்னார்கள் அதுபோல ஹாத்திம்மனமகிழ்ச்சியாகப்பொசித்தார் பின்பு அந்தப்பரிகள் தங்களுக்குஇஷ்டம்வந்ததுபோல ஹாத்திமிடமாககூடிக்கலந்து இன்பத்தையடைந்தார்கள் பின்புமூன்று தினத்துக்கு பின்கேட்டார்கள் ஓ, வாலிபனேநீ மெய்யாகஇவ்விடம்வரவேண்டிய நிமித்தியமென்னவென்றுகேழ்க்க எனக்கு அல்கன்பரியினிடமாக ஒரு வேலைஅவசரமாயிருக்கின்றது அது எவ்விதமானால் ஒரு வாலிபனிடமாக ஏழுநாளில்வருகிறேனென்றுவாயிதாசெய்துக்கொண்டு இவ்விடம் வந்திருக்கின்றாள் இப்போது ஏழுவருஷமாகிவிட்டது அவ்வாலிபன் அவன் வரும் பாதையைதேடிக்கொண்டிருக்கின்றான் இறந்துபோனமையத்தைப்போலவும் கண்கள்கல்லுகள்போலாகி திரேகமானதில் யாதொரு மாமிஷங்களில்லாமலும் நரம்பு தோலு எலும்பு மாக உயிரானது கண்ணில் நின்று ஆடிக்கொண்டு உயிர்போவேனோ யிருப்பேனோவென்று இவ்விதமாயிருந்து இரண்டு மூன்று நாழிகைக்கு ஒரு தடவை ஒருசத்தமானது பகாதுபாரமாக ஆ-ஆ என்றுபோடுகின்றான் அந்தசத்தம் எவ்விதமாய்ச் சொல்லுகிறானென்றால் பாதவித்து அக்கினிபற்றுதேயென்றும் எனக்குஉறவளித்து ஆசையூட்டினனொன்றும் இவ்விதமானசத்தத்தைதான்கேட்டு அவனருகில்போய் அ

வனுடைய சங்கதிகளைவிசாரித்தேன் உன்னுடையகோலம்இவ்விதமா
கவிருப்ப தென்னவென்றுகேழ்க்க அப்போதுதன்னுடையவர்த்தமா
னமெல்லாம்எனக்குத்தெரிவித்தான் அவன்சொன்னவருத்தங்களைகே
ட்டுஎன்னுடையசால் கருகியென்கண்ணில் நின்றுஇரத்தத்தின் சொ
ட்டுவிழுகின்றது நான் அவனுக்காக இவ்விடம் வந்திருக்கின்றேன்
அவனுடையகவுல்மறந் திருப்பதால் நான் நினைவுயெடுத்துகொடுக்
கவும் இன்னு மிவளுடையஆசைக்கின் பேரிலவன் ஒரு வேளை
இறந்துபோவானாகில்அவனுடையபாவமானது இவளுக்குபெரும்பழி
யாகி விடுமென்றுசொல்லஉடனே அந்தபரிகள் சொல்லுகிறார்கள்
ஓ, வாலிபனே அதமுடையசாதியே நாங்கள் இவ்வளவுபெருமைபெ
ற்றவர்க ளல்ல உன்னுடைய சங்கதிகளை அவளிடமாகப்போய்சொ
ல்ல ஆனாலவளிவ்விடம்வருவாள் அப்போது உன்னைக்கட்டிகொண்
டு அவள்முன்பாகவிடுகின்றோம் உன்முகப்பத்துக்காகவேண்டிசொ
ல்லுகிறோம் பின்னால் நீஅவளுடனேபேசவேண்டியபேச்சைபேசிக்
கொள்ளு ஆனால் உன்னைக்கொண்டுபோய்விடாமலும்சும்மா அழைத்
துக்கொண்டுபோனாலும் அவள் எங்கள் பேரில் சந்தேகப்பட்டு ஆங்
காரத்துடன் இம்மனிதனை நீங்கள் ஏன் கட்டி கெட்டிப் பத்திரப்ப
டுத்திக்கொண்டு வரவில்லையென்றென்னுவாளென்று சொல்லஅப்
போது ஹாத்திம் சொல்லுகின்றார் நீங்கள் உங்கள்மனம்போல் எ
ன்னை எவ்விதத்திலுமவள்முன்பாகக்கொண்டுபோய்விடுவீர்களாகில்
நானிருக்கின்றேன் அவளிருக்கின்றாள் என்னுடைய கஷ்டமும்அந்
தவாலிபனுடைய நசீபு எவ்விதமாகயிருக்கின்றதோ அந்த ரகசியம்
ஆண்டவனுக்கேதெரியலாமென்று ஹாத்திம்சொன்னார் அப்படியிரு
க்கையில் ஒரு நாள் அல்கன் பரியென்பவள் தன்னுடையமஹாலிலிரு
ந்துதோழிப்பெண்களோடு வெகுவேடிக்கைவினோதமாகதன்னுடை
யதோட்டத்துக்குவருகின்றாள் அப்போதுஇவ்விடத்திலுள்ள பரிசா
திகள் எதிர்கொண்டு காணப்போனார்கள் போகையில் அல்கன்பரி
யைக்கண்டு அதாபுதஸ்லிமாத்துசெய்துகைகட்டிவாய்பொத்திக்கொ
ண்டு மிருந்தவணக்கத்துடனே அவளிருக்குமஹாலுக்கு அழைத்து
க்கொண்டுவந்தார்கள் அப்போது அல்கன்பரிதன்னுடைய சிம்மாச
னத்தில் வந்திருந்தாள் அவ்விடத்தில் நாற்பது நாற்காலிக ளிருந்
தது அதில் பரிகள் நாற்பது பேர்களும் கானூன்படிக்கு வந்திருந்
தார்கள்பின்புபரிசாதிகள் ஹாத்திமிடமாகவந்துசொல்லுகிறார்கள்நீ
இப்போது எங்களோடுவந்தால் அல்கன்பரியைகாண்பிக்கிறோமென்



று அழைத்துக்கொண்டு வந்து அவளிருக்கின்ற சிம்மாசனத்துக்
குமுன்னாக ஒரு கிடிக்கியில் கொண்டு வந்துநிறுத்தி ஹாத்திமுக்கு
சொன்னார்கள் இவள் தான் மலிக்கா அல்கன்பரியென்றுகாட்டினார்
கள் அப்போது அல்கன்பரியென்பவள்தான் சிங்காரித்துச்சிகை ம
த்தாபுஇரத்தினங்களைஇழைத்தபோர்வைகளை உடுத்திக்கொண்டு நி
ரேகம்கொள்ளாதமுத்தினாலும்இரத்தினங்களினாலுமிழைத்த ஆபர
ணங்களும்பூண்டுக்கொண்டுமட்டுக்கடங்காதகளப கஸ்தூரிகள்அணி
ந்துக்கொண்டுகரத்தில் பூச்செண்டுபிடித்துக்கொண்டு வெகுஉல்லா
சமாகச்சந்திரனுங்கண்டால் மயங்கிவிழுகும் அவ்விதமாகத் தன்னு
டைய சிம்மாசனத்தில் தோழிகள் சூழவந்திருந்தாள் அப்படியிருக்கி
ன்றபெண்ணானவளைஹாத்திம்ஒளிந்துக்கொண்டு பார்த்தார்உடனே
தன்னைமறந்து சுத்துமாறி மயங்கி அவள்பேரில் ஆஷிக்காகி கீழேவி
ழுந்து விட்டார் பின்புகொஞ்சநேரம் பொறுத்து உஷாராகி ஆண்ட
வனை நினைந்துசிஜுதாஷுக்குறுசெய்தார் பின்புஅந்தப்பரிகள்ஹா
த்திமை அழைத்துக்கொண்டுபோய்வைத்துகேட்கிறார்கள்ஓ,வாலிப
னே மலிக்காவென்ற அல்கன்பரியை பார்த்தாயாவென்று கேழ்க்க
அதற்கு பதில்சொல்லாமல் அந்த அல்கன் பரியினுடைய அழகைப்
பார்த்தவுடனேஹாத்திம் தின்பினைஉண்பினையெல்லாம்விட்டு பயித்
தியம் பிடித்தவனைப்போலிருக்கின்றார் இவ்விதமாக மூன்றுநாளாகி
விட்டது அவ்விதமா யிருக்க இரவில் நித்திரைகொஞ்சம்வந்துநேரி
ட்டது அப்போது ஒரு கினவுகாண்கின்றார் எவ்விதமானால் எங்கே
யோ ஒருபக்கத்திலிருந்து ஒரு சத்தம்வருகின்றது எவ்விதமானால்
ஓ, ஹாத்திமே நீ உஷாராகி எழுந்திரு நீ உன்னையறியாமலிருக்கின்
றாய் நீ ஆண்டவனுக்காக இடுப்பு கட்டிக்கொண்டு ஏசான்செய்கின்
றாய் அப்படிக்கிருக்க நீ அன்னியர் சொத்தின்பேரில் இச்சிக்கப்பட்
டது உனக்குலாயக்காக யிருக்குதா நீ யேன் வீணாசைகொண்டு பெ
ருமூச்சு விடுகின்றாய்நீசெய்கின்றதுஆண்டவனுக்காகஅன்னியர்க்கு
உபகாரமாக யிருக்க இப்படிக்கு நீ எண்ணுவது சரியல்லமற்றபொல்
லாதனாகில்களைப்போலவும்நீபுலம்புவது சரியல்லஇவ்விதமானசப்தம்
கேட்டவுடனே திடுக்கிட்டு எழுந்து அங்குமிங்குமாகப்பார்க்கின்றார்
அப்போதுஒருவராவதுகாணப்படவில்லைபின்புஅவ்விடம்விட்டெழு
ந்து ஆண்டவனைநினைத்து அழுதுதோபாச்செய்துபயந்து நடுநடுங்கி
சொல்லுகின்றார் ஆண்டவனே நானென்னனியபாவத்தைநிபொறுக்க
வேண்டியதுஎன்றுதன் தலையைநிலத்தில்வைத்துதேம்பித்தேம்பி அழு

துக்கொண்டு ஆண்டவனே நீ இரக்கமும் கிருபையுமுள்ளவனே என்றும் பல
பலவிதமாக மன்றாடிக்கெஞ்சி கேட்டுக்கொண்டு எழுந்து தன்னை வை
த்திருக்கின்ற பரிகளிடமாகச்சொல்லுகின்றார் ஓ பரிகளே என்னை மலி
க்காவென்றவள் முன்னால் கொண்டுபோக வேண்டுமென்றும் அந்த
வாலிபன் நான் வருகின்ற வழியைப்பார்த்துக்கொண்டிருப்பான் ஆகை
யால் நான் இவ்விடத்தில் எவ்விதமாகவிருக்கக்கூடும் இவ்விதமாக
ஹாத்திம் சொல்ல அப்போது அந்த பரிகள் மலிக்கா என்பவள் சந்
தோஷமாயிருக்கின்ற தருணம்பார்த்து ஹாத்திமுடையகையை கட்
டிக்கொண்டு அவளுடைய தோட்டத்து வாசற்படிக்கு முன்னால் அ
வர்களி லொருத்திபோய் மலிக்காவின் சமுகத்திலறிவிக்கிறாள் அது
எவ்விதமெனில் ஓ, மலிக்காவே ஒரு ஆதம்ஜாத்தானவனொருவன் அவ
னுடைய கெட்டநசீபால் நம்முடைய தோட்டத்தி னிடமாகவந்தான்
அவனை நாங்கள் கண்டுபிடித்து கட்டிக்கொண்டு தங்களுடைய தோ
ட்டத்தின் வாசலில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றோம் ஆனால் த
ங்களுடைய உத்தரவுபோல் நடக்கின்றோம் அப்போது மலிக்கா வெ
ன்பவள் கேட்டு அந்தமனிதனை நம்முடைய சமுகத்தில் கொண்டுவா
ருங்களென்றுசொன்னாள் அப்போது ஹாத்திமைகொண்டுவந்து விட்
டார்கள் அவரைப்பார்த்தவுடனே முன்னுள்ளவாலிபனுடைய நினை
வைவிட்டு மறந்திருந்தவள் திரும்பி அவன் நினைவுவந்து சுருக்காககட்டி
னகட்டை அவிழ்க்கச்சொல்லி தான் எழுந்து கையைப்பிடித்துக்கொ
ண்டுவிருந்தவணக்கத்துடனே தானிருக்கின்ற நவரத்தினசரிகையாலி
ழைத்த சிம்மாசனத்தில் தன்னோடருகில் வைத்துக்கொண்டு ஹாத்தி
மைக்கேழ்க்கின்றாள் ஓ வாலிபனே நீ எவ்விடமிருந்துவந்தாய் உன்னு
டைய பேரென்ன நீ என்னசங்கதிக்காக வந்தாயென்றுகேழ்க்க அப்
போது ஹாத்திம் சொல்லுகிறார் நான் எமனுடைய பாத்துஷா (தை)
என்பவருடைய குமாரனாகயிருக்கும் என்பேர் (ஹாத்திமென்று)
சொல்லப்படும் அப்போது மலிக்கா அல்கன்பரியென்பவள் தன்
னுடைய சிம்மாசனத்திலிருந்து எழுந்து நின்றுகொண்டு மிகுந்த
வணக்கத்துடனே சொல்லுகின்றாள் ஓ, ஹாத்திமே நானும் உன்னுடை
யபேரைக்கேழ்விப்பட்டிருக்கின்றேன் நீ எமனுடையபாத்துஷாவின்
குமாரனென்றும் நீ மிகுந்த இரக்கமுள்ளவனென்றும் நீர் என்பேரில்
கிருபைவைத்து இவ்விடம் வந்தசபபு என்னவென்றுகேட்டு பின்னுஞ்
சொல்லுகின்றாள் நீர் இவ்வளவு வருத்தமும் துன்பமும் முசிபத்துமெடு
த்துக்கொண்டுவந்தீர் ஆனால் நான் தங்களைகாணும்படிக்கு ஆண்டவன்



இவ்விடத்துக்கு உங்களைக்கொண்டுவந்து சேர்த்தான் ஆதலால் நான்
தம்முடைய அடிமையாயிருப்பேன் எனக்குத் தெரியுமானால் நான் உ
ங்கள் தேசத்துக்குவருவேன் நான் தங்களை என் சிரசின் முடியானதா
ஜாக பாவிப்பேனென்றுசொல்ல அதற்கு ஹாத்திம் சொல்லுகின்றார்
நல்லது இதுவெல்லாம் உன்னுடைய கிருபையும் நன்மையாகயிருக்
கும் நான் ஷாஹேஆபாதில் நின்றும் புறப்பட்டு ஸஹ்ரே அஹம
றென்ற பாதையைப்பார்த்துப் புறப்பட்டுப் போகையில் அந்தப்
பாதையில் நான் பார்த்தேன் ஒருவாலிபன் ஒரு மரத்தின் கீழிருந்து
மிகுந்த துக்கத்துடனே அழுது பெருஞ்சத்தமிட்டு இருகண்ணையு
மூடிக்கொண்டு இவ்விதமாய் பலமொழிகள் சொல்லிக் கொண்டு
நான் பிரிந்தேனே உன்முகத்தைக்காணாமல் எனக்குபொறுக்கவில்
லையே நான் நெருப்பில் நின்று உருகின்றேனே என்ற சத்தம் போடுவ
தைக்கேழ்விப்பட்டு இதென்னசத்தமென்று முடுகிப்போய் பார்த்தால்
முன்சொன்னதுபோல் அழுதுகொண் டிருக்கின்றான் அப்போது
நானவனைக்கேட்டேன் ஓ வாலிபனே உன்னுடையவேஷம் இவ்விதமா
க உன்தேகத்தை வருத்தப்படுத்துகின்றாய் ஆனால் ஆண்டவனுக்
காக உன்னுடையசங்கதியை எனக்குத்தெரிவிக்கவேணுமென்றுகேட்
க அப்போது தன்பேரில்நடந்த வர்த்தமானமும் தன்னுடையசங்கதிக
ளையும் முகப்பத்தாகவும் கிருபையாகவும் என்னுடன் சொன்னான் மலி
க்கா அல்கன்பரி என்னுடன் ஏழுநாள் வாயிதாசெய்துபோனாள் ஏழு
வருஷமாகியும் இதுவரையிலும் வரவில்லை அவளுடைய வரவைப்பார்
த்துக்கொண்டு இவ்விதமாக இராமுழுதும் சத்தம்போடுகின்றேன் எ
ன்றால் நடக்கவும் இருக்கவுங்கூட தாகத்தில்லை பின்னு மந்தப்பெண்
சொன்னதாவது பத்திரம் நான் வருமளவும் இவ்விடத்தைவிட்டுப்போ
வையாகில் நீ கெட்டுப்போவாயென்றும் என்னுடைய மாஷூக்கென்
றவள் சொல்லைத்தட்டி நானிவ்விடம்விட்டு எங்கேபோவேன் நான் அ
வளுடைய மிலாகத்து இவ்விடத்திலெனக்கு ஆகவேண்டியது அல்
லது இவ்விடம்விட்டுப்போவேனாகில் ஒருவேளை என்னைத்தேடிக்கொ
ண்டுவந்தால் நான் காணாவிடில் அப்போது என்மாஷூக்கைநான்கா
ணமாட்டேனென்று இவ்விதமாக என்னிடஞ்சொல்ல அவனுடைய
வேஷத்தை நான்பார்த்து ஓ. இவன் இவ்விதமாக ஆஷக்கென்றசாகா
த்தில்மூழ்கி கிடக்கின்றான் என்கிற வெண்ணங்கொண்டு எவ்வித்தி
லுமிவனுடையவருத்தத்தை நாம் கண்டால் பார்த்து போவோமாகில்
நாளை நாம் ஆண்டவனுக்குமுகம் எப்படிகாட்டுவோமென்று என்னு

டையவேலையை நீக்கிவிட்டு அவனுக்காக நான் இவ்வளவு வருத்தமெடுத்துக்கொண்டு தங்களிடமாகவந்திருக்கிறேன் ஆதலால் நீங்கள் அந்த வாலிபன் பேரில் கிருபைசெய்வீர்களானால் என்னை விலைக்குவாங்கினதுபோலாகும் உங்களுக்கு என்னுயிரை பக்ஷீஷ்செய்வேன் அம்மொழியைக்கேட்டுமலிக்காஹாத்திமுக்குசொல்லுகின்றாள் ஓ, எமன்தேசத்து பாத்துஷாவின் குமாரனேநான் உன்னை எப்போதுகண்டேனோ நான் அவனுடைய ஆசையையும் அவனையு மறந்து விட்டேன் ஆகையால்அவன்எனக்குலாயக்கானவனல்ல ஆனால்அவன் என்பேரில் ஆஷக்காகியிருப்பானாகில் அவனுக்குஎன்னவேலையிருக்கின்றது இந்த ஏழுவருஷமாகியும்தன்னுடையஉயிரின்பயத்தாலவன் அவ்விடத்திலிருக்கிறானேதவிரநானிருக்கின்றகோஹேஅல்காஎன்ற பக்கம்வரமாட்டானென்றுமலிக்காசொல்லஹாத்திம்சொல்லுகிறார் ஓ, மலிக்காவே நீ அவ்விதமாக எண்ணாதே அவன் உன்னுடைய ஆசைகொண்டவனில்லாவிட்டால் அவன்உன்னுடைய முகப்பத்தின் ஆசையென்ற பாணக்கங் குடித்திருக்கின்றான் பின்னும் உன்னுடைய ஆசையால் தன்னுடையதேகத்தை மண்ணோடே மண்ணாக்கிக்கொண் டிருக்கின்றான் ஆனால் அவனிடமாக நீ வாயிதாசெய்து வந்திருக்கின்றாய் நீ ஏழுநாளைக்குள்ளாக வருகிறேன்நீ எங்கும்போகக்கூடாதென்று சொல்லிவந்தபடியா லவன் உன்பேரில் சரியான ஆசையுள்ளவனானபடியால்தன்னுடையமாஷூக்கானவளின்மொழியைத்தட்டக்கூடாதென்றும் எவ்விதத்திலும் மெய்யாக என் மாஷூக்கு என்னிடம் வருவாளென்று எண்ணங்கொண் டிருக்கின்றான் எனக்குலாயக்காக யிருக்கும் நான் பசியிளைப்பினால் பட்டினியாக நான் எங்கேயாகிலும் போவேனேயானால் என்மாஷூக்கானவ ளிவ்விடம்வந்து என்னைப் பார்த்து இல்லாவிட்டால் மனவருத்தமாய் போவாளென்ற மொழியை மலிக்காகேட்டுச்சொல்லுகின்றாள் ஓ, பாத்துஷாவின் குமாரனே ஹாத்திமே நான் ஒருபோதும் அவனை இச்சைப்படமாட்டேன்ராஜியாகவு மாட்டேனென்றுசொல்லஅப்போது ஹாத்திம் கேழ்க்கின்றார் ஓ, பெண்களின் நாயகமே மலிக்காவே நீ சொன்னது சரியல்ல நீ அவன்பேரில் இப்பேர்ப்பட்ட கோபமிருக்கின்றதென்ன சபபு அதை எனக்குத் தெரியப்படுத்தவேண்டும் ஆனால் அவன் தன்னுடைய எண்ணம் நிறைவேறுகிற வரையில் நானிவ்விடம்விட்டுப் போகமாட்டேனென்றுசொல்ல மலிக்காசொல்லுகின்றாள் ஓ, ஹாத்திமே இந்தப்பதிலையை விட்டுவிடு நானொருபோதுமவ



அவனிடம் போகமாட்டேனென்றுசொல்ல ஹாத்திம் சொல்லுகின்றார் நீ இவ்விதமாகச்சொல்வது ஞாயமல்ல ஆனால்நான் ஆண்டவனுக்காக எவ்வளவோ வருத்தமும் உழப்புமெடுத்துக்கொண்டு வந்திருக்கின்றேன் என்னுடைய வருத்தத்தையும் உழப்பையும் நீ வீண்செய்யாதேயென்று ஹாத்திம்சொல்ல நல்லதென்று மலிக்காசொல்லுகின்றாள் ஓ, ஹாத்திமே நீ இப்போது சொன்னதெல்லாம் தெரியவந்தது உன்சொல்லைத் தட்டாமல்உனக்காகவேண்டி என்னிடத்திலவனை அழைத்துவைத்துக்கொள்வேன் ஆனால் அவனோடு பேசவுமிருக்கவு மாட்டேனென்றுசொல்ல அப்போதுஹாத்திம்சொல்லுவார் நல்லது அப்படிக்கு நீ செய்வையாகில் உன்னுடையவாசற்படியிலிருந்துநான் யாதொருவஸ்துவையும்புசிக்காமல்பட்டினியாகக்கிடந்துநானிறந்துபோவேன் ஆனாலந்தப் பழியானது உன்னுடைய கழுத்தைசுற்றிக்கொள்ளுமென்று இவ்விதமாகச்சொல்லி எழுந்து அவளுடைய வாசற்படியில் ஒரு விருக்ஷமான மாமிருந்தது அதின் கீழிருந்து அன்னந்தண்ணீர் ஆகாரத்தைவிட்டுவிட்டார்.

இவ்விதமாக ஏழுநாளாகிவிட ஒரு இராவிலொரு கினவு கண்டார் அது எவ்விதமெனில் ஒருமனிதன் சொல்லுகின்றான் ஓ, ஹாத்திமே இவளான அல்கன்பரியானவள் எத்தனையோபேரை தன்னுடைய ஆசையைக் காட்டி இறக்கச்செய்து விட்டாள் ஆகையா லிப்போது நீயானால் அவளிடமாகச் சொல்லவேண்டியது அந்தவாலிபனை அழைத்து உனக்கு கிறஸ் என்றபாத்துஷாவின் மகன் கொடுத்தமோருவை அவனிடமாகக்கொடுத்துவாயில்வைத்துக்கொள்ளும்படிக்கி கொஞ்சம் தண்ணீர் வாயில்விட்டு நன்றாகக்குலுக்கி அந்தவாயிலுள்ள நீரைஒருகிண்ணத்தில்கொப்பளித்து அதோடுகொஞ்சம் பாணகத்தைவிட்டு அந்தப் பரியானவளுக்கு குடிக்கக்கொடுப்பாயானால் ஆண்டவனுடைய குதறத்தினால் அவன்பேரிலிச்சைப்பட்டு ஆஷக்காகிப்போவாளென்று இவ்விதமான கினவுகண்டவுடனே ஹாத்திம் திடுக்கிட்டெழுந்திருக்கையில் பொழுது விடியற்காலமாகிவிட்டது அப்போது அல்கன்பரி ஹாத்திமிடமாகவந்துசொல்லுகின்றாள் ஓ, வாலிபனே பாத்துஷாவின் குமாரனே நீ ஏன் உன் பினை தின்பினை உண்ணாமல் விட்டிருக்கின்றாய் அதனால் நீ சாக உன்னுயிர்போய்விடும் அந்தப்பழியானது என்மேல்வந்து சாரும் நாளைய தினம் ஆண்டவனுக்கு என்ன உத்தரத்தை எப்படி சொல்லப்போகிறேனென்று

சொல்ல அப்போது ஹாத்திம் சொல்லுவார் நல்லது அப்படி உன்
க்குஆண்டவனுடைய அச்சமிருக்குமாகில் அந்த வாலிபனை யழைத்
து உன்முகத்தை அவனுக்குக் காண்பி நீ அவனுடைய முகத்தை
ப்பார்த்தால் நலமா யிருக்குமென்றுசொல்ல அப்போது அல்கன்பரி
சரிதானென்று அம்மொழியை ஒத்துக்கொண்டாள் அப்போதுஹாத்
திமானவர்தான் அந்தவாலிபனைக்கொண்டுவருகிறேனென்றுசொல்ல
அப்போதுமலிக்காவென்பவள்சொல்லுகின்றாள் நீங்களேன்வருத்த
மெடுத்துக்கொள்ளுகிறீர்நான் என்னுடையபரிசாதிகளைக்கொண்டு
அவ்விடத்துக்கனுப்பிஅந்த வாலிபனை அழைக்கின்றேனென்றுசிறி
து பரிசாதிகளை அழைத்துச்சொல்லுகின்றாள் நீங்கள் இன்னமலையி
ன் வழியாகப்போனால் அவ்விடத்திலொருவாலிபன் ஒருமரத்தின்
கீழிருக்கின்ற ஒரு சங்கேமர்மரென்ற கல்லின்மேல் கண்ணை மூடிக்
கொண்டுவெகுவிசனத்தையடைந்துகண்ணீர்சொரிய அழுதுகொண்
டு நிற்கின்றவனிடமாகப்போய் சொல்லவேண்டியது உன்னுடையமா
ஷுக்கானவனிடமாகஹாத்திம்போய்உன்னுடையவர்த்தமானங்களெ
ல்லாம் ஆதிமுதல்அந்தவரையில்தெரியப்படுத்தியிருக்கின்றார் அதற்
காக அல்கன்பரியென்பவள் உன்னை அழைத்துக்கொண்டு வரும்ப
டிக்கு எங்களுக்கு உத்தரவுசெய் திருக்கின்றாளென்று அந்த வாலி
பனுக்குத் தெரியப்படுத்தி அவனை அழைத்துக்கொண்டு வரும்படிக்
கு உத்தரவுகொடுத்தாள் அவ்வுத்தரவுபோல் பரிக்கூட்டங்கள் ஒரு
நிமிஷத்தில் போய்ச்சேர்ந்து அச்சங்கதிகளையெல்லாம் விபரமா
க அவனுக்கு தெரியப்படுத்தினார்கள்.

உடனே வாலிபன் அவ்விடம் விட்டெழுந்துவரும்போது ஹா
த்திமை மிகுதமாகவாழ்த்தி போற்றிஅவருடைய இம்மத்தையும்வல்
லமையும் நினைத்துஆண்டவனிடமாகதுவாசெய்துஅவர்கள்கூடசே
ர்ந்து வருகின்றான் அப்போது அந்தப்பரிகள் ஒரு காலைக்குள்ளாக
அல்கன்பரியுடைய சமுகத்தில் அந்தவாலிபனைக்கொண்டுவந்துவிட்
டார்கள் அப்போது மலிக்காவென்ற அல்கன்பரி தன்னிடமாகவாலி
பனைவைத்துக்கொண்டாள் அப்போது அந்தவாலிபன் அவளைப்பார்த்
தவுடனே சுத்துமாறி நிலத்தில் விழுந்து விட்டான் அப்போது
பரியானவள் தன்னுடைய கையால் பன்னீர்கொண்டு வரச்சொல்
லி அவன் முகத்தில் தெளிக்ககொஞ்சநேரம் பொறுத்து உஷா
ராகியிருக்கையில் அல்கன்பரியானவள் மிகுந்த ஆசையாககுஞ்சி



ரிப்புக் கொண்டுசொல்லுகின்றாள் ஓ, வாலிபனேஎன்னை உன்மனங்
கொண்டபடிநன்றாகஎன்னைப்பார்த்துக்கொள்ளும்இவ்விதமாகஅன்
றுமுழுதும் மவளருகிலிருந்தான் பின்பு சாயந்திரமான வுடனேதன்
னுடையபரிகளுடனேசொல்லுகின்றாள் நீங்கள்நம்முடையஹாலை
யலங்காரஞ் செய்து சிங்காரித்து சகலதினுசுகளாலும் ஜோடித்து
நீங்கள்சகலபேரும்உடுப்புகள்உடுத்திக்கொண்டுசிங்காரித்து ஆடல்
பாடல் கேளிக்கை வாத்தியங்களை நுவர்க்கஞ்செய்யுங்களென்று உத்
தரவு செய்தாள் அம்மொழியைக் கேட்டவுடனே சகலரும் சிங்
காரித்து வீணைவாத்தியங்கள் கைகளிலெடுத்துக் கொண்டு ஆடல்
பாடல்களை நுவர்க்கஞ்செய்தார்கள் அப்போதுஹாத்திமும்அந்தவா
லிபனும் அல்கன்பரிகூட வேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கஅப்போ
து அல்கன்பரி அந்தவாலிபனிடமாய் தன்முகமெடுத்துசுத்தமாய்பார்க்
காமலுமிருந்தாள்இவளுடையசங்கதியை ஹாத்திம் பார்த்துஅந்தவா
லிபனுக்குமோருவைகொடுத்து சொல்லுகின்றார் இந்தமோருவை
நீ வாயில் போட்டுக்கொண்டு சிலநேரம் பொறுத்து கொஞ்சம்
தண்ணீர் வாயில் ஊறிக்கொண்டின்றுகக்குகிக்கிவாய்தண்ணீரை
ஒரு கிண்ணத்தில்கொப்பளித்துப்போடென்று அவனுக்கு சங்கதி
யை தெரியப்படுத்திவிட்டு ஹாத்திம்தன்னிடத்தில்வந்திருந்தார் அப்
போது அந்த வாலிபன் அந்தவேலையைசெய்யசாக்கிரதைபண்ணவே
ண்டியோசனைசெய்துஎழுந்துஅல்கன்பரிக்காகஒருகூஜாவில்தண்ணீ
ர்வைத்திருக்கின்றவிடத்துக்குப்போனான் அப்போதவ்விடத்தில் கா
வலாயிருக்கும்பரிகள் ஓடிவந்து ஓ, வாலிபனே அல்கன்பரிக்காகதண்
ணீரிருக்கின்றவிடத்தில் உனக்கென்ன வேலையிருக்கின்றது என்று
கேட்கையில் வாலிபன் சொல்லுகின்றான் எனக்கு தண்ணீர் தா
கமிகுதமா யிருப்பதால் நான் வந்தேனென்றுசொல்ல அப்போதுப
ரிகள்தண்ணீர்அவனுக்கு குடிக்க கொடுத்துவிட்டு அவர்கள்போன
பின்புஅவனங்கிருக்கஹாத்திமானவர் பார்த்துவாலிபனிடமாக வந்து
கூடயிருக்கையில் மலிக்காபார்த்துச் சொல்லுவாள் அவர்களுக்குகு
ட்டினால் தாகமாகயிருக்கின்றார்கள்கொஞ்சம்ஷர்பத்துகொடுங்களெ
ன்று பரிகளுக்கு உத்தரவுசெய்ய அப்போது பரிகள் ஷர்பத்து தயா
ர் செய்து அவர்களுக்குகொடுத்தார்கள் அப்போது ஹாத்திம்அதை
வாங்கிக்கொண்டு ஜாடைபார்த்து அந்தக் கட்டோறாவில் வாலிபனை
வாயிலிருக்கும் தண்ணீரைக் கொப்பளிக்கச்சொல்லி அந்த கட்டோ
றாவின் ஷர்பத்தை ஹாத்திம் தம்முடைய கையிலேந்திக்கொண்டு

மலிக்காவின் முன்பாகக்கொண்டுபோய்ச் சொல்லுகின்றார் ஓ, பெ
ண்கள் நாயகமே நாங்கள் மனங்குளிர ஷர்பத்து குடித்தோம் நாங்க
ளும் குடிக்கவேணுமென்றுசொல்ல அப்போது மலிக்கா ஷர்பத்தை
வாங்கி வாயில்வைத்து இரண்டுமுனர் குடித்தாள் உடனே மலிக்கா
வென்பவள் அந்த வாலிபன்பேரில்ஆஷக்காகிப் போய்விட்டாள் அப்
போது ஹாத்திம் அவளுடைய கோலத்தைப்பார்த்து மெள்ளச்சொ
ல்லுகிறார் ஓ, மலிக்காவே உன்பேரில் ஆஷக்காகி உயிரிழந்தவன்
மேல் நீ கிருபைவைத்துக் கொள்வாயாகில் உன்னுடையபுத்தியும்அ
றிவையும் இவ்வளவென்று பெருமையடைவேனென்ற சொல்லைக்கே
ட்டு குஞ்சிரிப்புகொண்டு மலிக்காவென்பவள்சொல்லுகிறாள் எனக்
குத்தெரியவில்லைஇதென்னகூதுமாயமோஇவ்விதமான ஆபத்தை நா
ன் எப்போதும் எடுத்துக்கொள்ளவில்லை எனக்கு இவனைவிட்டுப்பி
ரிகின்ற துக்கமான அனல் என்னைவிட்டு நீங்கவில்லை அவனைக்காணா
மல் ஒரு நிமிஷமிருக்க என்னாலேகூடமாட்டாது நீ சொன்னதுபோல்
அவனைநான் கபுல்செய்து உண்மைகொண்டேன் ஆனால்என்னுடைய
தாய்தகப்ப னுத்தரவில்லாமல்நானிந்தவேலைசெய்யஎன்னால்கூடாது
இவ்விதமாகச் சொல்லிவிட்டுகோஹேஅல்காவுக்குப் போனாள்பின்பு
தன்னுடைய மஹாலிலிருந்து தன்னுடைய தாயாரைக்கண்டு சலாம்
செய்துதலைகுனிந்து யாதொன்றும் பேசாமல் வெட்கப்பட்டிருக்கின்
றாள் அப்போதுதாயானவள்கேழ்க்கின்றாள்ஓ,மகளேநீபோய்நாற்பது
நாள் தோட்டத்திலிருந்துவரப்பட்டவள் இவ்வளவு அவசரமாகவந்த
சங்கதியென்னவென்றுகேழ்க்க அப்போதுமலிக்காவுடையதோழிமார
்கள்சொல்லுகிறார்கள்எவ்விதமானால்தாயாரே இப்போதுஉன்மகளா
கியமலிக்காஒருஆதம்ஜாத்தானஒருமனிதன்பேரில்மிகுந்த இன்பமாக
இச்சைப்பட்டிருக்கின்றாள்அவன்இவள்பேரில்மோகங்கொண்டுநெடு
நாளாகத்துன்பமும் வருத்தமுமெடுத்துக்கொண்டிருக்கிறான் அவன்
தான்இப்போதுவந்திருக்கிறான்இதனாலிவள்சம்மதிப்பட்டிருக்கிறாள்
அவனுக்குப்பெண்ஜாதியாக வேணுமென்று தங்களுடையஉத்தரவில்
லாமலைனால்அவ்வேலைகூடமாட்டாதென்றுதோழிகள்சொல்ல அம்
மொழியைக்கேட்டுதாயாரானவள் தன்புருஷனிடமாகப்போய்சொல்
லுகிறாள்என்னுடையமகளுக்குஇன்பமாகயிருக்கிறது ஒருஆதம்ஜாத்
தானவரைக்கலியாணஞ்செய்து கொள்ளமனங்கொண்டவளாயிருக்கி
றாள் அப்போதவர்சொல்லுகின்றார் அவளுடைய நாட்டம்அப்படியிரு
க்குமாகிலதுநமக்குமிகுந்தசந்தோஷமும்முபாரக்காகயிருக்குமென்று



சொல்லஅப்போது அல்கன்பரியென்னும் மலிக்கா மிகுந்த பூரிப்புட
ன் சந்தோஷத்தையடைந்து தன்னுடைய தோழிகளை யனுப்பிஹாத்
திமையும் அந்தவாலிபனையும்தன்தோட்டத்திலிருந்து அழைத்து வ
ரும் படிக்கு உத்தரவுசெய்ய அதுபோலவர்களை அழைத்துவந்தார்
கள் அவள் தாயார் அவனைப்பார்த்து மிகுந்தசந்தோஷப்பட்டாள்
பின்பு தன்னுடைய புருஷனிடமாக மிகுந்த பெருமையாக தாரி
ப்புசெய்து அவனுமிவர்களைப்பார்த்து மிகுந்த சந்தோஷமடைந்துஉ
டனே கலியாணத்துக்கு ஆகவேண்டிய சாமான்களெல்லாம் தயார்
செய்து தங்களுடைய வழக்கம்போல் மிருந்தசடங்குகளை செலவு
பண்ணிமிகுந்தவேடிக்கை கோலமாக மலிக்காவை கலியாணம்முடி
த்து அந்தவாலிபனிடமாகச்சேர்த்து ஆஷிக்கும் மாஷுக்கும் ஒன்று
கச்சேர்ந்த பின்பு அவ்வாலிபன் ஹாத்திமை மிகுதமாக வாழ்த்திப்
போற்றினான் பின்பு ஹாத்திமெப்பவர்அவ்விடத்தில் ஏழுநாளிரு
ந்து அவர்களிடமாக உத்தரவுபெற்றுக்கொண்டிருக்கஅப்போதுஅல்
கன்பரிகேட்டாள் நீர் இவ்விடம்விட்டு எவ்விடம் போகும்படியாக
யிருக்கின்றீரென்றுகேழ்க்கஹாத்திம் சொல்லுகிறார் நான் கோஹே
அஹமரென்ற மலைக்குப்போக வேணுமென்றுஅவ்விடத்திலெனக்
கு ஒருவேலை சமாசாரமிருக்கின்றதென்றும் என்னை அவ்விடம்
நீங்கள் சேர்த்துவிடவேணுமென்றுசொல்லஹாத்திமை ஒருசிம்மா
சனத்தில்வைத்து தங்களுடைய பரிஜாதிகளையழைத்துச் சொல்லுகி
றாள் ஓ, பரிகளே இவரை கோஹே அஹமரென்றமலையில்கொண்டு
போய்விட்டுவாருங்களென்றுசொன்னவுடனே அப்பரிகளிந்தஸிம்மாசன
த்தில்வைத்து ஹாத்திமைஎடுத்துக்கொண்டுஇரவெல்லாம்பறந்து அ
வ்விடம் போய்ச்சேர்ந்தார் அப்போது ஹாத்திமவர்களுடனேசொல்
லுகிறார் ஓ, பரிகளே என்னை நீங்கள் இவ்விடத்தில் விட்டுப்போ
ங்களென்றுசொல்ல அவ்விதமாகச்சகலரும் உத்தரவு பெற்றுக்கொ
ண்டு போனார்கள் அப்போது ஹாத்திமானவர் அவ்விடத்தில் நிற்க
ஒரு சத்தமானது வருகின்றது அந்த வழியைப்பார்த்துக்கொண்டு
போகின்றார் அப்போதுஅவ்விடத்தில் ஒருவிருட்சமான மரமிருக்கி
ன்றது அந்தமரத்தினிடமாகப்போய்ச்சேர்ந்து அந்தச் சத்தமானது
எவ்விடத்தில் நின்றுவருகின்றதோவென்று அந்தமரத்தைப்பார்க்கு
ம்போது ஒரு பெரிய இரும்பினுடைய கூண்டில் ஒருவயதுசென்ற
பெரியமனிதனிருக்கக்கண்டு அதிக ஆச்சரியப்பட்டுமனவருத்தமடை
ந்துகொஞ்சநேரம் நின்றிருந்தார்,

பின்பு அந்தபெரியமனிதனைகேழ்க்கின்றார் ஓ,பெரியவரே உன்வா
யில்நின்று வன் சத்தம்துயரமாகவும் அடிக்கடி வருகிறதென்றுயாரி
ந்த இரும்புக்கூண்டிலுன்னைதொங்கும்படிக்கிபோட்டிருக்கிறதார் அம்
மொழியைஅந்தபெரியமனிதன்கேட்டு மிகுந்த துயரமானசத்தம்போ
ட்டுச் சொல்லுகிறார் ஓ, வாலிபனே நீ என்னுடைய சங்கதியைக்கு
றித்து ஒன்றுங்கேழ்க்காதே அப்படி நீ கேழ்ப்பாயாகில் என்னுடை
யமொழியை உண்மைகொண்டு என்வேலையை முடிப்பாயாகில் என்
னுடைய சங்கதிகளைத் தெரியப்படுத்துவேன் நல்லது நீர்சொன்னது
போல் செய்ய கபூலாகுமேனென்றுசொல்ல பின்பு அந்தப்பெரியம
னிதன்சொல்லுகின்றார் நானுகப்பட்டவன் அஹமர் சவுதாகராகயிரு
க்கும் எந்தவேளைநான்பிறந்தேனோ அவ்வேளை நின்று இந்த தேசத்
தை என்தகப்பனானவர் பேரால் ஆபாதாக்கினார், நான் பெரி
யவனான பின்பு என்னுடையதகப்பன்இந்தப் பட்டணத்தில் என்னை
விட்டு எந்த தேசத்துக்கோ வர்த்தகஞ் செய்யப்போனார் அப்
போது என்வசத்தில் அனேகதிரவியமும்நகைகளும் ஆஸ்திபாஸ்திக
ளும் மிகுதமாகக் கொடுத்துவிட்டுப் போனார் அப்போது நான் அந்த
ஆஸ்திகளைப் பத்திரப்படுத்தாமல் கொஞ்சநாளைக்குள் எல்லா ஆஸ்
திகளையும் வீண்செலவு செய்து பக்கீராகி விட்டேன் நான்மி
குந்த வருத்தமடைந்து எனக்கேழ்மையென்றகொடுமைவந்துநேரிட்
டது பின்பு என்னுடைய தகப்பன்வர்த்தகத்துக்குப்போனவர் அந்த
சபரில்தானே இறந்துபோய்விட்டார் பின்புஎன்தகப்பனிடமாகயிருந்
த ஆஸ்திகள் புதைத்தயிடம் எனக்குத்தெரியவில்லை அப்படியிருக்க
ஒருநாள் பஜாருக்குப் போகும்போது ஒரு வாலிபன் அவ்விடத்தில்
சொல்லிக் கொண்டிருக்கின்றான் யாதாமொருவருடைய நகைநட்டு
கள் காணமற்போயிருந்தாலும் அல்லது புதைத்துவைத்துமறந்து
போயிருந்தாலும் என்னுடைய மந்திரத்தால் அதை யெடுத்துக்கொ
டுப்பேன் ஆனாலவர்கள் எனக்கு நான்குபாகத்திலொரு பாகம்கொடு
க்கவேண்டுமென்று சொல்லிக்கொண் டிருந்தான் அச்சொல்லை நான்
கேழ்விப்பட்டு நல்லது என்னோடு வந்தால் என் வீட்டில்புதை
த்திருக்கின்ற இடம் எனக்குத் தெரியாது அதை நீ எடுத்துக்கொடு
ப்பாயாகில் நீ சொன்னதுபோல் தருகிறேனென்று அவனைவீட்டுக்க
ழைத்துவந்து அந்த இடங்களைக் காண்பித்தேன் அவனவ்விடத்தி
லுள்ளமண்களை வெட்டிவெட்டி முகர்ந்து பார்த்துமண்களை எறிந்துவி
ட்டு கடசியில் ஒரு மூலையைவெட்டினான் அவ்விடத்தில் நகைநட்டு



களும் திரவியங்களும் கணக்கில்லாமற் புதைத்துவைத் திருப்பது
தெரியவந்தது அதில்நாலத்தொருபாகம்அவனுக்கு கொடுக்கமனமில்
லாமல் சலசெய்து அவனுக்குசெய்தகராரில் நின்றுதவறிப்போனே
ன் அதில் கொஞ்சமெடுத்து அவன் முன்னாலேவைத்தேன் அப்போ
து அவன் சொன்னான் இவ்விதமாகக் கொடுத்தால் நான் வாங்கமா
ட்டேன் நாலத்தொரு பாகங்கொடுத்தால் வாங்குவே னென்றுசொல்
ல அவன் கேட்டதுபோல் கொடாமல் அவனைகன்னத்தில் நாலடிய
டித்து வெளியே தள்ளிவிட்டேன் அப்போது அவன் அழுதுசத்தம்
போட்டுக்கொண்டுபோய்விட்டான்சிறிதுநாளைக்குப் பின்புஅவன் எ
ன்னிடமாகவந்து மிகுந்தசினேகிதம்செய்துக்கொண்டு ஒருநாள் என்
னோடுசொன்னது எவ்விதமானலும்நிலத்திற்புதைத்திருக்கின்றகஜானா
க்கள் யாவுமவஸ்துக்களெல்லாம் என் கண்ணுக்குத் தெரியவருகின்ற
தென்று சொல்லஅப்போதவனை நான்கேட்டு அப்பேர்ப்பட்டஇல்
முனென்னவென்று கேட்டேன்நான் அந்த இல்மையெவ்விதத்திலும்படி
ப்பேனென்றுசொல்ல அதைநீபடிக்கவேணுமென்றால் அந்தஇல்மு
அதிக வருத்தமில்லாமல் சலபமாயிருக்கும் அது ஒரு சுருமாவுடை
யவேலையாக யிருக்கும் அதை தயார்செய்து யாதாமொருவர் கண்ணி
லிட்டுக் கொண்டால் பூமியிலென்னென்ன கஜானாயிருந்த போதிலு
ம் கண்ணாடியில் காண்பதுபோல் தெரியவருமென்று சொன்னான்அ
ப்போது அந்த சுருமாவை என்கண்ணில் தடவென்றும் கஜானா எ
னக்குத் தெரியும்படியாயும் அப்படி தெரியவந்தால் அதில்பாதி தரு
கின்றேனென்றுசொல்ல நல்லது என்னோடு காட்டுக்கு வந்தால் நா
ன் உன்னுடையகண்ணில் தாம்பிரத்தா லிருக்கின்ற சலாக்கியினால்
அந்த சுருமாவை ஒருதடவை கண்ணில் போடுகிறேனென்று அவ
ன்சொல்ல நான் அவனோடு இந்த காட்டுக்குவந்து இந்த இரும்பு கூ
ண்டைப்பார்த்து நான்மிகுந்தவனாகி அவனைக்கேட்டேனிக்கூ
ண்டியாருடையதென்றும்அவன் எனக்குத்தெரியாதென்றுசொல்லி இந்தமர
த்தின்கீழிருந்துவிட்டான்பின்பு தன்னுடைய கழுகட்டிலிருந்துஒரு
சுருமாடப்பியையெடுத்துசலாக்கை அந்த டப்பியில் நனைத்துப் பிரட்
டி என்னுடைய கண்ணில் தடவினான் உடனே எனக்குஇருகண்ணும்
தெரியாமல்போய்விட்டது அப்போது அவனைக்கேட்டேன் ஓ,சினேகி
தனே நீ இப்போது என்கண்ணை என்ன செய்தாயென்று கேழ்க்க
அதற் கவன்சொன்னான் வாக்குமாறின பொய்யர்களுக்கு இதுவே
தெண்டனையாகயிருக்கும் ஆனால்உனக்குகண்வெளிச்சம்தெரியவேண்

மொனால் இக்கூண்டி லிருந்து நான் சொல்லுகின்ற மொழியைச் சொல்லிக்கொண்டிரு அதுஎவ்விதமானால் யாதொருவருக்குந்தீமை செய்யாதே அப்படிச்செய்தால் அதுவேஅவனுக்குநேரிடுமென்று இம்மொழியைசொல்லிக்கொண்டிருவென்று சொன்னான்.

அப்போது நானவனைக் கேட்டேன் நல்லது என்கண்ணுக்கு என்னவழி சொல்லுகின்றாய் அப்போதவன் சொன்னான் நீ இந்தகூண்டில் சிலநாள் இருப்பாயாகில் இவ்விடத்துக்கு ஒருவர் ஆண்டவனுடைய கிருபைபெற்றவர் வருவார் அவரிடமாக உன்னுடையநடக்கையை விபரமாகச் சொல்வீயானால் அவர்கேட்டு உன்பேரில் மிகுந்தகிருபையாகி (நாரேஷ்) என்றபுல்லிருக்கிறது அதைக்கொண்டுவந்து அதினுடைய நீரை உன் கண்ணில் விடுவாராகில் அப்போது உன் கண் வெளிச்சமாகி முன்போலிருந்த பார்வையாகி விடுமென்று சொல்லிப்போய்விட்டான் அவனுடைய மொழியைநானுறுதிகொண்டு இந்த இரும்புக் கூண்டில்முப்பதுவருஷ காலமாக அந்தப்பெரியவருடைய வழியைபார்த்துக்கொண்டு துன்பத்தையடைந்துகொண்டிருக்கின்றேன் என்னுடையதிரேகம் அதிலுள்ள எலும்புகளும்சதைகளும்சதையைச்சார்ந்த தோல்களும் வற்றிப்போய் இவ்விதமான வலியும் கடுப்பும் பொறுக்கக்கூடாமல் நான் வருத்தமாகச் சத்தம்போடுகின்றேன் இவ்விதமாக நானிருப்பதைப்பார்த்து வேண்டியவர்கள்வந்து என்சங்கதிகளைக்கேட்டுப்போகிறார்கள் ஒருவராவது என்சங்கதியைக்குறித்து நிவர்த்திசெய்யவில்லை ஒருவராவது இதற்காக யாதொருஇக்குமத்துஞ் சொல்லவில்லையென்றுஇவ்விதமாக அம்மனிதன் சொன்னமொழிகளை ஹாத்திம்கேட்டு மிகுந்த மனவருத்தமடைந்து சொல்லுகிறார் ஓ, பெரியவரே நீர்யாதொன்றுக்குமஞ்சாதீர் ஆண்டவன்கிருபையால் நீர் கொண்ட ஆசையை எவ்விதத்திலும் நான் நிறைவேற்றுவேனென்று சொல்லிக்கொண்டிருக்கையில் ஹாத்திமென்பவரை பரிஜாதிகள் இவ்விடங் கொண்டுவந்துவிட்டு கோஹேஅல்காவுக்குப் போனார்கள் அவர்களை மலிக்காவென்ற அல்கன்பரிபார்த்து முகம் கடுகடுப்பாகிச் சொல்லுகிறாள் ஓ, பரிகளே நீங்கள் இப்போது ஹாத்திமை எப்படிவிட்டு வந்தீர்களென்று கோபித்துச்சொல்லுகிறாள் நீங்கள் இக்ஷணம் ஹாத்திமிடமாகப்போய் அவரோடிருந்து அவர்வேலைகளெல்லாம் தீர்ந்த பின்பு அவருடைய தேசத்துக்கு கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு இவ்விடம் வரவேண்டியது அப்படி



வராவிட்டால் உங்களைத் தண்டிப்பேனென்று உத்தரவு செய்ய அதுபோல் ஹாத்திமிடமாக வந்து தாங்கள் போய்வந்த சங்கதிகளை ஹாத்திமுக்குப் பரிகள் தெரியப்படுத்திஅவரை கேட்கின்றார்கள் நீங்க ளெவ்விடம்போக யோசித்திருக்கிறீர்க ளென்று கேட்க அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் நான் (நாரேஷ்) என்றபுல்லெங்கேயிருக்கின்றதோ நான் அவ்விடம்போக எண்ணங்கொண்டவனாகயிருக்கிறேனென்றுசொல்ல அப்போது அப்பரிகள் சொல்லுகின்றது நாங்களும்மை அப்புல்லிருக்கிறகாட்டினருகிற் கொண்டுபோய் தூரத்திலின்று அதினுடைய அடையாளம் தெரிவிக்கிறோம் ஆனால் நாங்கள் அதினருகில் போகமாட்டோம் தாங்கள் அவ்விடம்போய்ச் சலாமத்தாக வருவீர்களானால்தங்களுடையபட்டணத்துக்குஉங்களைக்கொண்டு சேர்ப்போம் அல்லாமல் உங்கள்மேல்வருகின்ற செயல்களை நாங்கள் மலிக்காவினிடமாகத் தெரிவிப்போம் நல்லது நீங்கள் இவ்விதமாகச் சொல்வதால் அந்தப் புல்லினுடைய குணமென்ன வென்றுகேட்க அப்போது அவர்கள் சொல்லுகின்றார்கள்.

ஓ. ஹாத்திமே அப்புல்லானது நிலத்திலிருந்து எப்போதுமுளைக்கின்றதோ அப்போது அக்காட்டி லுள்ளபுட்ப சாதிகளெல்லாம் பூத்து சிவப்புநிறமாக விளக்கின்வெளிச்சம்போல் ஒளியுள்ளதாகாசமாகும் அப்போதுஆயிரவிதமானமிருகஜாதிகள்பாம்புகளும்தேள்களும்நாற்கால்ஜீவஜெந்துகளும் பறக்கும்பறவைகளும் புலிகரடிகளும் யானைசிங்கம் யாளி இன்னம் பலபலமிருகங்களும் அக்காட்டிலுள்ளவந்துசேர்ந்து கூட்டங்கூட்டமாகஅக்காட்டை சூழ்ந்துகொண்டிருக்கும் ஆகையால் அவ்விடத்துக்கு யாவராலும் போகமுடியாது ஹாத்திம் சொல்லுகின்றார் நல்லதுஎன்னுடையநசிபையபழியனாமென்று சொல்லஅப்போது அப்பரிகளில் ஒருத்திதோளில்வைத்திக்கொண்டு மற்றபரிகளுடனேஏழாநாள்பறந்துஅக்காட்டினருகாமையில் போய்சேர்ந்து பார்க்கஅவ்விடத்திலொரு பெரியவிசாலமானமைதானம்காணப்பட்டது அப்போது அப்பரிகளைஹாத்திம்கேட்டார்அப்புல்லானதுஎவ்விடமிருக்கின்றதென்றும்அப்போதுஅப்புல்நிலத்திலின்றுமுளைக்கின்ற பருவம்இன்னங்கொஞ்சவேளையில்முளைக்கும்அல்லது இன்னும் இரண்டுமூன்றுநாளையில்முளைக்குமென்றுசொல்லபின்புபரிகளும் ஹாத்திமும்அப்புல்முளைக்கின்றவரையில் அவ்விடத்திலிருந்துகொண்டு அதிலுள்ள பலபலகனிவர்க்கங்களை சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்

அப்போதொருநாள் அங்கிலத்திலின்று அப்புல்லானதுமுளைத்தது
அந்தக்காட்டிலிருக்கிறபூஜாதிகளெல்லாம்விளக்கின்வெளிச்சம்போ
ல்பிரகாசமாக இருக்கின்றதுஅக்காடு வஹைந்திரமெல்லாம்மிருதமான
புஷ்பவாசனை நிறைந்து போயிருக்க அப்போது எல்லா மிருகஜா
திகளும் பறவைஜாதிகளும் எல்லாம்வந்து அக்காட்டை சூழ்ந்து
கொண்டு சப்பு சப்பாக யிருக்கின்றதை ஹாத்திம்பார்த்துபரிஜா
திகளுடனே சொல்லுகின்றார் நீங்களிவ் விடத்தில் நில்லுங்கள்
ஆண்டவனுடைய கிருபையால் அவன்பேரில்தவக்கலாகப்போய் வரு
கின்றேன் பின்னு லவனுடைய செயல்போல்நடக்கட்டுமென்று தன்
னிடத்திலிருக்கின்றமோறுவைதலைப்பாகையிலிருந்தவிழ்த்துவாயிலெ
டக்கிக்கொண்டுஅந்தகாட்டினுள்ளேநுழைந்து (உ)(௩)புல்லின்இலை
களை ப்பறித்துக்கொண்டுயாதொருகுறைவுகுற்றமில்லாமல் வந்து
சேர்ந்தார்அப்போதுஹாத்திமைபரிஜாதிகள் கண்டுமிகுந்தசந்தோஷ,
த்தையடைந்துஹைஹறுஷிவிட்டுசொல்லுகிறார்கள்இந்தமனிதன்நல்
விலதமான ஆதம்ஜாத்தாகயிருக்கின்றதென்றும்அவரைப்போலொத்
தமனிதனைகண்டதுமில்லை கேட்டது மில்லை என்று சொலலி ஹா
த்திமை முன்னிருந்த கிழவனிடமாகப் பறந்து கொண்டு வந்து விட்
டார்கள் அப்போது அக்கிழவன் முன்னிருந்ததுபோலவேயிருக்கின்
றான்அவனை ஹாத்திமானவர் கூப்பிட்டுச் சொல்லுகின்றார் ஓ, பெ
ரியவரே நீர் சொன்னபுல்லானதை நான்கொண்டுவந்திருக்கின்றேன்
அப்போதுஅந்தக்கிழவனார் அச்சொல்லைக்கேட்டுமற்ஹபா,மற்ஹபா,
வென்றும்சொல்லி சந்தோஷத்துடனே சொல்லுகின்றார் ஓ, வா
லிபனே நீ என்னுடைய இடுக்கத்தை தீர்த்து என்கண்ணைதிற
க்கும்படிக்கு உம்முடையகையால் அந்த புல்லைப்பிசைந்து இரண்
டு துளிஎன்கண்ணில் விடுமென்றுசொல்ல அதுபோல் பிசைந்து இ
ருகண்ணிலும் இரண்டு மூன்று துளிவிட்ட உடனே இருகண்ணு
ம் பளிச்சென்று தெரியவந்தது அப்போது அந்த மனிதன் ஹாத்தி
முடைய காலில் விழுந்து அழுதிருக்கின்ற வேளையில் ஹாத்திமா
னவர் அம்மனிதனை தூக்கி கழுத்தோடணைத்துக் கொண்டு சொல்லு
கின்றார் ஓ, பெரியவரே ஆண்டவன்எவ்விதத்திலும்உன்னுடையசங்க
டமும்இடுக்கமும் தீர்த்துவைத்தார் நீ, இனி சவுக்கியத்தை யடைய
லாம் என்றுசொல்ல அப்போது அப்பெரியமனிதன் சொல்லுவான்
நீஎன்னுடையஇடுக்கத்தையும்துன்பத்தையுந்தீர்த்தால்ஆண்டவன்உ



னக்கு வேண்டிய வல்லமையும்பெருமையும்நீண்டஹயாத்தையுங்கொ
டுப்பானென்று சொல்ல அப்போது ஹாத்திம்சொல்லுகின்றார் ஓ,
என்னுடைய தோழனாகிய தமையனே நீ, பட்டதுன்பத்தை ஆண்ட
வன்நீக்கிவிட்டான் நான்ஆண்டவன் பாதையில் நின்றுஅன்னியர்து
ன்பத்தை நீக்க இடுப்புகட்டிக் கொண்டு திரிகின்றேன் என்னையா
ல் யாதொருவருக்கு நன்மைசெய்கின்றதுஅந்தவேலையைஆண்டவன்
செய்துவைக்கின்றானென்றுநான் சந்தோஷமடைகின்றேனென்று
சொல்ல அப்போது அப்பெரிய மனிதன்சொல்லுகின்றார் ஓ, வா
லிபமான வல்லமைசாலியே என்வீட்டில் அனேக திரவியங்களிருக்
கின்றதுநீர்என்னோடு வீட்டுக்கு வரவேண்டும் உங்களுக்குஎவ்வளவு
திரவியம்வேண்டுமோ அவ்வளவுஎடுத்துக்கொள்ளும்அப்போதுஹா
த்திம் சொல்லுகின்றார் ஓ,பெரியவரேஎனக்குயாதொருவஸ்துவும்வே
ண்டியதில்லை ஆண்டவன் கிருபையால் என்வீட்டில்அனேகதிரவிய
மிருக்கின்றது அந்ததிரவியத்தை எப்போதும் ஆண்டவன்பேரால்செ
லவுசெய்துகொண்டிருக்கின்றேன் உன்னுடையதிரவியத்தை வாங்கி
நான்என்னசெய்வேனென்று அவரிடமாக உத்தரவுபெற்றுக்கொண்
டுபரிகளுடைய தோள்மேலேறிக்கொண்டுபத்துநாழிகைப் பின்பு ஹா
ஷே ஆபாதில் வந்துசேர்ந்தார்அப்போதுபரிஜாதிகள் ஹாத்திமிட
மாககேழ்க்கிறதுஎவ்விதமானால்ஓ, குதாவந்தேதார்களெங்கள்பேரி
ல்கிருபைவைத்து எங்களுக்குஒருகாகிதம் கொடுக்க வேண்டும் அ
தை எங்களுடைய பாத்துஷா ஜாதிக்கு காண்பித்தால் அப்போது
அவள்தங்களை தங்கள் நகரத்தில்சேர்த்துவிட்டுவந்தோமென்றுஉண்
மைபடுவாளென்றுசொல்லஅப்போது ஹாத்திமானவர் தன்னுடைய
சங்கதிகளும்தான் தன்னுடையபட்டணம்வந்துசேர்ந்தவிபரமெல்லா
ங்கண்டெழுதி ஒருகடிதம் கொடுத்தார் அப்போதுஅந்தகாகிதத்தை
வாங்கிக்கொண்டு பறந்துதங்கள் பட்டணம் போய்ச்சேர்ந்து மலிக்கா
விடத்தில் காகிதத்தைக்கொடுத்துநடந்த சங்கதிகளை தெரியப்படுத்த
மிகுந்தசந்தோஷமாகி காகிதத்தைப் பார்த்திருந்தாள் பின்புஹாத்தி
மானவர் கார்வான்சாராவென்ற சத்திரத்துக்கு வந்துமுனீர்ஷாமியிட
மாக பிலாகத்தாகி நடந்தசங்கதிகளெல்லாம் தெரியப்படுத்த மிகுந்த
சந்தோஷமானான் பின்பு நாலுநாழிகைசென்று இருவரும் கூடிக்கொ
ண்டு ஹுசன்பானுவின் வீட்டுக்குவந்தார்கள் அப்போது ஹுசன்பா
னுவுக்கு அவளுடைய வேலைக்காரர்கள்தெரிவிக்க உடனே அவ்வி
டத்தில் ஒருஇடம் தன்வீட்டில் சிங்காரிக்கச்சொல்லி அதிலிருவ

ரையும் அழைத்து இருக்கும்படிக்கு உத்தரவுசெய்ய அதுபோல்செ
ய்து அவர்களை அழைத்துக் கொண்டுவந்துவைத்து ஹசன்பானுவு
க்காக அவ்விடத்தில் ஒருபர்தாகட்டி அதினுள்ளே நவரத்தினமிழை
த்த நாற்காலி கொண்டுவந்துபோட அதில் ஹசன்பானுவந்திருக்க
அப்போதுஹாத்திமானவர்தான்போய்வந்தசங்கதிகளெல்லாம் விபர
மாகத் தெரிவித்தார் அதைக்கேட்டு மிகுந்த சந்தோஷப்பட்டு அவர்
களுக்காகவேண்டியவிருந்துதயார்செய்து விதவிதமானபுலாவுகளும்
பதார்த்தங்களும் கனிவர்க்கங்களும்மிட்டாய்தினுசுகளும் ஷர்பத்துக
ளும் தயார்செய்து கொண்டுவந்து வைத்தார்கள் அப்போது ஹா
த்திமும் முனீர்ஷாமியும் மிகுந்த சந்தோஷத்துடனே பொசித்
தார்கள் அன்றிரவு அவ்விடத்திலிருந்து விடிந்த பின்பு ஹாத்தி
மானவர்கேழ்க்கின்றார்ஓ,ஹசன்பானுவேஇப்போதுநீஎன்னசவால்
சொல்லுகிறாய்அதின்விபரத்தைதெரியசொல்லு அப்போதுஹசன்
பானு சொல்லுகிறாள் அதுஎவ்விதமானால்(ஒருவன்சொல்லுகிறான்
மெய்சொல்லப்பட்டவனுக்கு எப்போதும்சவுக்கியமாகயிருக்குமென்
றுசொல்வதால்)அதென்னமெய்சொன்னதென்றும் அதற்காகஎன்ன
சவுக்கியமடைந்தானென்றுஇதைதீரறிந்துவரவேண்டியதென்றுசொ
ல்லஅப்போதுஹாத்திம்நல்லதுநீங்கள்அறிவீர்களா அது எந்தமூலை
யிலிருக்கிறதென்றுகேழ்க்கஅப்போதுஹசன்பானுசொல்லுகிறாள்
என்னுடையதாதியானவள்சொல்லியிருக்கிறாள்ஷஹரேகுர்ரமென்ற
இடத்திலிருக்கிறதென்றும்ஆனால் அந்தப்பட்டணம்எந்தமூலையிலிரு
க்கிறதோ தெரியமாட்டாதென்றுசொல்ல அப்போது ஹாத்திம்
அம்மொழியை கேழ்விப்பட்டுச் சொல்லுகிறார் வருத்தத்தில்நின்று
ஆண்டவன் நன்மைசெய்வானென்று ஹசன்பானுவினிடமாகஉத்த
ரவு பெற்றுக்கொண்டு போகிறவிபரமாவது எவ்விதமெனில்.

## நான்காவதுசவால்.

## ஹாத்திமானவர் பிரயாணப்பட்டு மெய்சொல்லப் பட்டவனுக்கு எப்போதும் சவுக்கியங்கிடைக்குமென்பதை அறிந்துவரும்படியானவரலாற்றின்பாடு

ஹசன்பானுவி னிடமாக உத்தரவு ஹாத்திம் பெற்றுக்
கொண்டு பட்டணத்தை விட்டு வெளிப்பட்டு அனேகக்காடுக
ரம் காடுவனாந்திர மெல்லாங்கடந்து ஒரு மலையின்அடிவாரத்
தில்போய்ச்சேர்ந்தாரப்போது அவ்விடத்தில் என்னபார்க்கின்றாரெ
ன்றால் ஒரு ஆறு சமுத்திரம்போல் வெகுவேகமாக இரத்தம்
நிரம்பிப்போகிறது அப்போது அதை ஹாத்திம் பார்த்து மிகுந்த
விசனத்தையடைந்து தன்மனதிலெண்ணுகிறார் நான் எப்போதும்இ
ப்போர்ப்பட்ட இரத்தத்தின் ஆறுபார்த்ததில்லை ஆகையா லிதை
நாம்விசாரிக்கவேண்டுமென்றும்இந்தஆறுஎவ்விடமிருந்துவருகிறதெ
ன்றும் இவ்விதமாயோடுவதின் சபபுஎன்னவென்றெண்ணங்கொண்டு
அதைப்பார்க்கலாமென்றுபோகின்றார் அப்போதவ்விடத்தில்ஒருபெ
ரிய விருட்சமானமரமொன்று முன்னால்தெரியவந்தது அதினருகில்
போய்ச்சேர்ந்தபின் அந்தமரத்திலுள்ள ஒவ்வொருகொப்பில்மனிதரு
டையதலைஎத்தனையோகட்டித்தொங்குகிறது அதின்கீழேஒருஎரிபெரி
தாகவும்அதிகவிசாலமாகவுமிருக்கின்றது அதினுடையதண்ணீர்நாட்
டின்வழியாகஓடுகின்றது அப்போது ஹாத்திம்மிகுந்த ஆச்சரியத்தை
ப்பார்த்து அம்மரத்தின்கீழே யிருந்துவிட்டார் அப்படியிருக்கையி

ல் அந்த மரத்திலே எத்தனையோ தலைகள் தொங்கிக்கொண்டிருந்த
துகளோ அந்த தலைகளெல்லாம் சந்தோஷத்துடனே கெக்கலிக்கொ
ண்டு சிரிக்கின்றதுகள் இதைப்பார்த்து ஹாத்திம் மிகுந்த ஆச்சரிய
மடைந்து இந்த அறுப்பட் டிருக்கின்ற தலைகள் சிரிக்கிறது
அதில் நின்று இரத்தம்வழிந்து அந்த ஏரியில் விழுகிறது அந்த தண்
ணீர்களெல்லாம் இரத்தமாயோடி சமுத்திரத்தில் போய்விழுகிறது
இப்படியிருக்க ஹாத்திமுடையபார்வை அந்தத்தலைகளின்பேரில்விழ
அந்தத் தலைகளுக்குமேலொரு தலைதொங்குகின்றது அந்தத்தலையை
ப்பார்த்தவுடனே புத்திமாறி தன்னைமறந்துவிட்டு கொஞ்சநேரத்துக்
குப்பின்பு தெளிவுவந்து தம்முடைய மனதிலெண்ணுகிறார் இதினு
டைய விபரத்தைபறியாமல் எவ்விதமாக இதையொருவருக்குச் சொ
ல்லக்கூடுமோ இப்போது நாம் இவ்விடத்தில் சிலநா ளிருக்கவே
ணும்ஆகையால் இதினுடைய விபரத்தை நன்றாக அறியலாமெ
ன்று இதுவே நினைவாக அவ்விடத்தில் அன்றையபொழுது போகிற
வரையி லிருந்தார் இப்படியிருக்க பொழுதுபோய் விட்டது
அப்போது ஹாத்திம் ஒரு மூலையில் பதுங்கி ஒளிந்து கொண்டி
ருக்கையில் அந்தமரத்தில் தொங்கிய தலைகளெல்லாம் அந்தமரத்தி
லின்று விடுபட்டு அந்தயேரியில்விழுந்தது அப்போது ஹாத்திமா
னவர் அந்த ஏரியைப்பார்த்துக் கொண்டிருந்தார் அப்போது அந்த
யேரியின் தண்ணீர்மேல் நடுவாக யிருந்த விலைபெற்ற பட்டால் சரி
கைவேலைசெய்த விரிப்புவிரித்து அதின்மேல் ஒரு சிம்மாசன மிருந்
த அழகுள்ள இரத்தினாதிக ளிழைத்திருக்கப்பட்டதைக்கொண்டுவ
ந்துவைத்தார்கள் பின்பு கொஞ்சநேரம்பொறுத்துசிறிதுபரிகள் அ
னேகவிதமான உடுப்புகளுடுத்திதிரேகமுழுதும் முத்தினாலும் இர
த்தினாதிகளாலிழைத்த நகைகளைப் பூண்டுகொண்டு சந்திரனுக்கொ
ப்பான பெண்கள்வந்து அச்சிம்மாசனத்தி னருகில்போய் நிற்கின்
றார்கள் அப்போது அதில் நின்று ஒரு பரியானவளுடைய அழ
கும்வடிவும் அவள்பூண்டநகையினுடைய பெருமையைச் சொல்ல
வேண்டுமானால் இவ்விதமென்று சொல்லக்கூடாது சந்திரன்கூட அ
வளைக்கண்டு வெட்கமடையும் அப்பேர்ப்பட்டவள் வெகுவுல்லாச
மாக அந்தச்சிம்மாசனத்தில் வந்திருந்தாள் அப்போது ஹாத்திமா
னவர் உற்றுப்பார்த்து இந்த மரத்தின்மேலே எல்லாத்தலைகளுக்கு
மேல் தொங்கியதலைபோல் தோற்றியது அவ்விடத்திலிருந்தபரிக
ளெல்லாம்இவ்விடம்சூழ்ந்துகொண்டிருந்தார்கள் இன்றி எத்தனை



யோபரிகள்கைகட்டிக்கொண்டிருந்தவணக்கமாகநிற்கின்றார்கள் இ
ப்படியிருக்க அந்தப்பரிகள் சகலவாத்தியங்களும்கையில்பிடித்துகொ
ண்டிருந்தஇசையாக விதவிதமானவினோதஆடல்பாடல்கள்செய்து
க்கொண்டிருந்தார்கள் அப்போது ஹாத்திமானவர் மூக்கில் கை
யைவைத்து பார்த்துக்கொண்டிருந்து யோசிக்கின்றார் ஆண்டவனே
இதென்ன வேடிக்கையாயிருக்கின்றது ஆகையால் இவ்விதமாகயிரு
க்கும்போதுபாதியிரவாகிவிட்டது ஆடல்பாடல்களை நிறுத்தி அவ்வி
டத்தில் ஒரு தஸ்தர்கான் என்ற விரிப்பைக்கொண்டுவந்து விரித்து
அதின்மேல் பலவிதமான புலாவுகளும்கனிவர்க்கங்களும்மிட்டாய்க
ளும்ஷர்பத்துகளும்தட்டுகளில்நிரப்பிக்கொண்டுவந்துவைத்தார்கள்
அப்போது அச்சிம்மாசனத்தி லிருக்கின்றபரியானவள் சொல்லுகிறா
ள் இந்தவஸ்துக்களில் நின்று ஒருதட்டை அம்மூலையிலிருக்கப்பட்ட
முசாபருக்குகொண்டுபோய்கொடுங்கலென்று ஒருபரிக்கு உத்தரவு
செய்ய அதுபோல்ஹாத்திமிடமாகக்கொண்டுபோய்கொடுத்துசொல்
லுகிறாள் எங்களுடையசர்தாரானபரியானவள்தங்களுக்குஇந்தவஸ்
துக்களைகொடுக்கும்படியாக அனுப்பியிருக்கிறாளென்றுசொல்ல அப்
போதுஹாத்திம்கேழ்க்கிறார் நல்லதுஉன்னுடையபேரென்ன உன்னு
டையசர்தாரின்பேரென்னவென்றுகேழ்க்க அப்போது அவள்சொல்
லுகிறாள் நீ என்பேரும் எங்களுடைய சர்தாரின்பேரும் கேட்கவே
ண்டியதென்ன நீபசியாளியாயிருந்தால் இந்தஜீவனத்தைசாப்பிடு
மென்றுசொல்ல அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் ஓபரியே உன்
னுடையபேரும்உன்சர்தாரின்பேரும்சொன்னாலொழியஇந்தஜீவனை
த்தைநானெப்போதும் புசிக்கமாட்டேனென்று சொல்ல அம்
மொழியைக்கேட்டு அந்தபரியானவள்தங்களுடையசர்தாரென்றபரி
யினிடமாகப்போய்சங்கதியைத்தெரிவிக்கின்றாள் அது எவ்விதமெ
னில்அந்தமுசாபரானவனிடமாகஜீவனத்தைகொண்டு போய்கொ
டுக்க அவன்சொல்லுகிறான் நீ உன்னுடையபேரும்உன்சர்தாரின்பே
ரும் இந்த பரிக்கூட்டத்தின்சங்கதியும்இந்தயேரியில்நின்றுவந்திருப்
பதையும் நீ தெரிவித்தால் நான் புசிப்பேனே தவிரவேறில்லையெ
ன்றுசொல்ல அப்போதுமலிக்காவென்பவள்சொல்லுகிறாள்நல்லது
அவ்விதமாக நீ கேட்டதுபோல் சொல்வேன் நீ இந்தஜீவனத்தை
முதல்சாப்பிடென்றுபோய்சொல்லென்றாள் அம்மொழியைக்கேட்
டுஹாத்திமிடமாகவந்துமலிக்காவின்மொழியைப்போல்அப்பரியான
வள் சொல்லுகிறாள்நல்லதுநீர் சாப்பிடும் பின்பு அதின் விபரத்தை

ச்சொல்லுகிறேனென்றுசொல்ல அதுபோல் ஹாத்திம்பொசித்தார் பின்பவர் கேட்கநல்லதுநான் நாளையதினம்வந்துதங்களுக்குத்தெரிவிக்கிறேனென்று சொல்லஅப்போதுஹாத்திம்அவளுடையகையைப்பிடிக்கப்போகையி லவளோடிஏரியில்விழுந்துமலிக்காவினிடத்திற்போய் அன்றிரவெல்லாம்கூத்து கேளிக்கை ஆடல் பாடல்களுடனே பலவிதமான வேடிக்கைகளாடியிருந்தார்கள் பின்பு விடிந்தவுடனெல்லாப்பரிகளும் ஏரியில் குதித்து கொஞ்சநேரஞ் சென்றபின்பு ஏரியிலிருந்து தண்ணீரின்மேலேதலைகள்வந்து தானேதான் குதிகுதித்துக்கொண்டு மரத்தின்மேலே பாய்ச்சலாகப் பாய்ந்துகொப்பு கொப்புகளில் தொங்கிக்கொண்டிருந்தது முன்போலொரு தலையானது எல்லாத் தலைகளுக்குமேலே தொங்குகின்றது அப்போது சகல தலைகளும் சிரிக்கின்றதை ஹாத்திமானவர் அந்த மூலையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார் அது எவ்விதமானால்சகலத்துக்குமேலிருக்கின்ற சர்தாரின் தலையின்மேல் மிகுந்த இன்பமாக எண்ணங் கொண்டிருந்து இதனுடையஇரகசியத்தை ஆராய்ந்தறியவேண்டுமானால் இந்தப்பெண் உயிராக யிருப்பாளாகில் நான் எவ்விதத்திலும் இவளை நிக்காசெய்வேனென்றும்ஆண்டவனே இது எவ்விதமான தலைகளாயிருக்கும்இராக்காலங்களில்உயிராகயிருக்கின்றது பகற்காலங்களில் இந்த மரத்தில் வந்துதலைகீழாய் தொங்குகின்றது ஆனுசிதவேலைகளைப் பார்த்தால் மந்திர தந்திர வித்தைபோல் தோன்றுகின்றது இவ்விதமான எண்ணத்தால் பொழுது போய்விட்டது பின்னுமந்த தலைகள் இரவில் வழக்கம்போல் ஏரியில் விழுந்து முன்போல் விரிப்புகள் விரித்து மஜ்லீஸ்யென்ற கூட்டங்கூடி பரிகளனைவரும் சூழ்ந்திருக்கும்படியாய் சிம்மாசனத்திலிருக்க முன்போல் கேளிக்கை கூத்து ஆடல் பாட்டல் துவக்கஞ்செய்துகொண்டிருந்தார்கள் அப்போதுஹாத்திம்இவர்களுடையஎண்ணத்தின்பேரிலிருக்கிறார் நல்லது அவள் இன்றையராத்திரிக்கு என்னஜவாபு சொல்லுகிறாளோ அல்லது மோசம் செய்கிறாளோ தெரியாதென்றிருக்கையில்பாதியிரவாகிவிட்டது பின்புவழக்கம்போல் தஸ்தர்கள் விரித்து விதவிதமானபுலாவுகளும்பதார்த்தங்களும்கனிவர்க்கங்களும் மிட்டாய்களும்கொண்டுவந்துதபக்குகளில் வைத்தார்கள் சகலரும்மலிக்காவுஞ்சேர்ந்துக்கொண்டு பொசித்தார்கள்.

பின்பு ஒருதட்டில்தின்னும்படியானவஸ்துக்களைநிரப்பிமுன்கொண்டுபோனபரியினிடமாகக்கொடுத்து ஹாத்திமுக்காக அனுப்பிவைத்தாள் அப்போது அந்தப்பரியானவள் ஹாத்திமிடமாகப்போய்அந்தட்டைவைத்து நிற்கையில் அவர் அப்பரியைக்கண்டவுடனே சொல்லுகிறார்கூ, பரியானவளே நீமுன்சொன்னாய்நாளையத்தினம் வந்து சொல்லுகிறேனென்றுசொன்னாயல்லவாஆகையால்இப்போதுநீஅந்தச்சங்கதியைஎனக்குத்தெரிவிக்கவேண்டுமென்றுகேழ்க்கநான் எத்தனையோநாளாகபட்டினியுள்ளவனென்றுஞ்சொல்லஅச்சொல்லைக்கேட்டுக்கொண்டுமலிக்காவினிடமாகப்போய் அச்சங்கதியைச்சொல்லியறிவிக்க அப்போதுமலிக்காசொல்லுகிறாள்நீ அவரிடமாகப்போய்சொல்லுஎவ்விதமானால்நீமலிக்காவுடையசமூகத்துக்குவந்தால் உன்னுடையசவால்களுக்குஜவாபுதெரியவரும்ஆனதால்இப்போதுஇந்த ஒஜீவனத்தை பொசித்துஎன்கூடவரலாமென்றுசொல்லஅப்போதுஹாத்திமானவர் அம்மொழியைக்கேட்டு அதைப்பொசித்தவுடனே அவளோடு போனார் அப்போது அப்பரியானவளிவரைக்கரையில்விட்டு தண்ணீரில் குதித்து முன்னிருக்கு மிடமாகப்போனாள் பின்பு ஹாத்திமானவர் அவளுடைய சங்கதியொன்றுந் தெரியாதபடியால் கொஞ்சநேரம் வரையில் அவள் வழியைப்பார்த்து அந்த தண்ணீரில் கண்ணைமூடிக்கொண்டு தானுங்குதித்துவிட்டார் அப்போது பூமியானது காலில்பட்டவுடனே கண்ணைத்திறந்து பார்க்குமளவில் அந்தஏரியையும்அந்தமரத்தையும் பரிகளையுங்காணாமலிருக்கக்கண்டு ஹாத்திமானவர் மனவியாகூலமடைந்து பார்க்கும்போது கோரமாகிய வனாந்திரமான காடுகளாயிருக்கக் கண்டு பயந்து மிகுந்த சத்தம்போட்டுக்கொண்டு கண்ணீர்சொரிய அழுதுசொல்லுகிறார்இப்போது நாய்பெரிய அகப்பாட்டில்வந்து சிக்கிமுன்பின்யாதொன்றுந்தெரியவில்லையே என்னமோசம்வந்துநேரிட்டதென்றுமண்ணைவாரி தலைமேல் போட்டுக்கொண்டு திரிந்தார் இவ்விதமாய் இரவுபகலாக ஏழுநாளிருந்தார்.

அப்போது ஆண்டவன் தன்னுடைய கிருபையாலும் இரக்கத்தாலும் ஹஜரத்து காஜா கிதர் அலைஹிஸ்ஸலாத்துக்குஉத்தரவுசெய்தான்எவ்விதமானால் ஹாத்திமானவர்அகோரமானகாட்டில்அகப்பட்டுக்கொண்டுபயந்து தன்புத்திமாறிபயித்தியம்பிடித்தவர்போல்அழுதுக்கொண்டு நிற்கின்றார் அவரிடமாகப்போய் அவருக்குதைரியப்படுத்தி ஒத்தாசைசெய்துவிட்டுவாருமென்றும்ஹாத்திமானவர்மனிதர்களுக்குமிருந்தநன்மை பேரான்செய்யப்பட்டவரென்றுசொல்ல அப்போ

கிதர்அலேகிஸ்ஸலாம் அவ்வுத்தரவுபோல்பச்சை ஜுப்பாவென்ற
உடுப்பைபோட்டுக்கொண்டு கையில் ஆஸாபிடித்துமிருந்த பெரியவய
துசென்றவர்போல் அவருடைய இடதுபக்கத்தி லிருந்துவந்து முன்
ஞல் நிற்க அவரைப் பார்த்தவுடனே மிகுந்த சத்தம் போட்டு
அழுகிறார் அப்போது ஹாத்திமுடைய கோலத்தைப் பார்த்துகிதர்
அலேகிஸ் ஸலாம் மிகுந்த இரக்கப்பட்டு தன் கையால் ஹாத்தி
முடையமுகத்தில்தடவினவுடனே அவருடைய கோலங்களெல்லா
மாறி முன்னிருந்த பயித்தியம் தெளிந்து உஷாருகிஞர் ஹாத்
திம் அப்பெரியவரை மிகுந்த வணக்கத்துடனே கேழ்க்கிறார்எவ்
விதமாஞல் என்னுடைய பீரே முர்ஷிதே இந்த யிடமானது இ
ன்னதென்று எனக்குத் தெரியவில்லை யென்றுகேழ்க்க அப்போது
சொல்லுகிறார் இந்தஇடமானது(ஸஹ்ராயே கபர்பாஸ்)என்றகாடாக
யிருக்கும் இந்தஇடத்துக்குளெவ்விதமாகநான்வந்தேனென்றுகேட்ககி
தர்அலேகிஸ்ஸலாம்சொல்லுகிறார்நீஇன்னயேரியில் இன்னபரியான
வள்கூட தண்ணீரில் கண்ணைமூடிக்கொண்டு குதித்தாயல்லவா அந்
தயேரியானது(தில்சிம்)என்றமந்திரத்திஞலுண்டாகியதாகஇருக்கும்
அதினுடைசப்பாகயிருக்கும்ஆஞல் எந்தமனிதஞவது அவ்வேரியில்
குதிப்பாஞகில் அவனைஇவ்விடத்தில்கொண்டுவந்துவிட்டுவிடுகிறது
அவ்வேரிக்குமிந்தஇடத்துக்கும்நூறுகாதவழி தூரமாக யிருக்குமெ
ன்றமொழியை ஹாத்திம் கேட்டவுடனே நிலத்தின்மேலே விழுந்து
என்மனதுக்கு கெடுதலைவந்து நேரிட்டதென்று ஆ - ஆ. வென்
று சத்தமாக சத்தம்போட்டு நானிவ்விடத்தை விட்டு எவ்விதமா
கப் போவேனென்றும் என்னுடையெண்ணம் நிறைவேறமாட்டாதெ
ன்றும் அதஞல் நான் துடிதுடித்து என்னுடையஉயிரைப்போக்கிவி
டுவேனென்றுஞ்சொல்லஅப்போதுஹஜ்றத்துகிதர்என்பவர்கேழ்க்கி
ருர் உன்னுடையஎண்ணமானது என்னவென்றுகேட்க அப்போது
சொல்லுகிறார்நானெவ்விடத்திலிருந்தேனே அவ்விடத்துக்குப்போ
கவேணுமென்றுசொல்ல அப்போதவர் சொல்லுகிறார் நல்லதுஎன்
னுடைய ஆஸாவைப்பிடித்துக்கொண்டு உன்னிருகண்ணையு மூடிக்
கொள்ளென்றுசொல்ல அதுபோலவர் செய்தார்.

பின்பு ஒரே மூச்சில் கொஞ்சநேரம் சென்றதின்பேரில்காலா
னது நிலத்தில்பட கண்ணைத் திறந்துபார்க்க முன்னிருந்தகாடாகவு
ம் அவ்விடத்தி லிருந்தமரமும் அவ்வேரியும் அம்மரத்தில்தொங்கி



தலைகளையுங்கண்டு ஹாத்திமென்பவர் அம்மரத்தி னருகில்வந்து அ
தின்மேலேற எண்ணங்கொண்டார் அப்போது மரத்திலேற அம்ம
ரமானது அசைந்தது எவ்விதமாஞல் அம்மரத்திலிருந்து கீழே
விழுக சமையமாக யிருந்தது அப்போது ஹாத்திமானவர் அதினு
டைய அடிமரத்தை தன்கையால் கட்டிக்கொண்டார் பின்னுமந்த
மரமானது அசைந்துகொண்டிருந்ததுபின்பு அவ்விடத்திலிருந்துகொ
ஞ்சம்மேலேறிஞர் அப்போதுபயங்கரமானஒரு சத்தம்வந்தவுடனே
அந்தமரமானதுநடுவேஇரண்டாகப் பிளந்து போய்விட்டது அதில்
ஹாத்திமானவர் இடுப்புவரையில் அம்மரத்தி னுள்ளேபொருந்தி
போய்விட்டார் அப்போது ஹாத்திம்அதைப்பார்த்துதன்ஞல் யா
தொன்றுஞ் செய்யக்கூடவில்லை மிகுந்த ஹைராஞகிபயந்து இ
தென்ன ஆபத்துவந்து நேரிட்டதென்று ஆஞல் இவர்களுக்காக
மூதற்றடவை இவ்வேரியில்குதித்துநானிவ்வளவு வருத்தமெடுத்து
க்கொண்டுவந்துஇந்தமரத்தின்மேலேறி இவர்களுடையசங்கதிகளைய
றியலாமென்றே இவ்விதமாகநான்இம்மரத்தினுள்ளேசிக்கிக்கொண்
டு என்ஞல்கூடிய பிலனைக்கொண் டிழுத்து வெளியேவரலாமென்
றாலும் உள்ளே யிழுக்கின்றது இவ்விதமாகச் சொல்லிக்கொண்டி
ருக்க எல்லோ வுடலையும்மரமானது உள்ளே யிழுத்துக்கொண்டதுக
ண்கள்மாத்திரம்வெளியேதெரிகின்றது அப்படியிருக்கையில் உடனே
ஹஜ்றத்துகாஜாகிதர் அலேகிஸ்ஸலாம்அவ்விடத்தில்வந்துஹாத்திமு
க்குச்சொல்லுகிறார்ஓ,வாலிபனேநீயேனிந்த பலாவில்சிக்கிக்கொண்
டாய்இந்ததுனியாவின்வாழ்க்கையைவிட்டு ஏனிவ்விதமான வருத்
த்தை எடுத்துக்கொள்ளுகிறாய் அப்போது ஹாத்திமானவர் ஜவாபு
சொல்லக்கூடாமையால்வருத்தமடைந் திருக்கின்றார் அவரதைக்க
ண்டுமிகுந்தமனவருத்தமடைந்துஇரக்கமாகிகிதர் அலேகிஸ்ஸலாம்த
ங்களுடையஆஸாவால்அம்மரத்தை ஓங்கியடிக்கவுடனே அம்மரமான
து மெழுகைப்போலாகிவிட்டது அப்போது ஹாத்திமானவர் அதில்
நின்றுவெளிப்பட்டுவந்துவெகுநேரம்வரையில் ஒன்றுந்தெரியாமலும்
உஷாரில்லாமலிருந்தார்பின்புதெளிவுகொண்டிருக்கையில்ஹஜ்றத்து
கிதர் அலேகிஸ்ஸலாம்சொல்லுகிறார் ஓ, ஹாத்திமேநீஉன்பேரில்இப்
பேர்ப்பட்ட வருத்தத்தையும்மூசீபத்தையும் ஏனெடுத்துக்கொண்டி
ருக்கின்றாயென்றுகேழ்க்க அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் இவர்
களால் நான் மிகுந்தவருத்தமெடுத்துக்கொண்டிருப்பதால் இவர்களு
டையசங்கதியை எவ்விதத்திலும் நானறியவேண்டுமென்று சொல்ல

அப்போது அப்பெரியோராகிய கிதர் அலேகிஸ்ஸலாம் சொல்லுகின்றார்.

ஓ, ஹாத்திமே இவளாகப்பட்டவள் யாரென்றால் ஷாம்அஹமர் மந்திரக்காரனென்பவனுடையமகளாகயிருக்கும் ஆனால் இவ்விடத்தின் பேர்கோஹே அஹமர்என்றமலையாகஇருக்கும்ஆனாலிந்தப்பெண்ணா னவள் வாலிபமாகி ஒருநாள் தன்னுடைய தகப்பனிடமாகப் போய்ச் சொன்னாள் ஓதகப்பனேஇப்போது நான் வாலிபமான்படியால் என க்குகலியாணம் செய்யவேண்டுமென்றுகேழ்க்க அம்மொழியை க்கேட்டு அவள்பேரில்மிகுந்தஆங்காரத்துடனேகோபங்கொண்டு இ ந்தப்பெண்ணை அந்நாள்தொடுத்துஇந்த (தில்சிம்)என்றமந்திரமானசு முத்திரத்தில்போட்டு இவ்வேரியும் இம்மரமும்ஜாது என்ற மந்திரத் தாலுண்டாகி யிருக்கிறது ஆனால் இந்த மரத்தின்மேலே தொங்குகி ன்ற தலைகளுக்கெல்லாம் மேலாகத்தொங்குகிற தலையானது அவனு டைய மகளின் தலையாகயிருக்கும்அவளுடையபேரானது (மலிக்காஜ றீன்போஷ்) என்றதாகயிருக்கும் ஆனால் அந்த மந்திரமலையின் ஸ்தலமானது இவ்விடத்துக்கு நூறுகாதவழி தூலையிலிருக்கின்றது மந்திரத்தினுடைய பலத்தாலிவள் ஒருநாளையில் அவ்விடம்போய்ச் சேர்வாள் ஆனால்ஷாம்அஹமர் என்பவன்எதுவரையில்உயிரோடிருப் பானோஅதுவரையில்இவளுக்கு கலியாணஞ்செய்ய மாட்டான் இத் தவேஷமாக இவள் துன்பப்பட்டுக்கொண்டிருப்பாள்இன்னம்இவள் ஒருவர்வசத்தி லகப்படமாட்டாள்இவ்விதமானமொழியைஹாத்திம் என்பவர்கேட்டுசொல்லுகிறார்என்னுடையதலையின்விதிஇவ்விடத்தி லிறக்கும்படிக்கு எழுதியிருக்கின்றது ஆகையா லிவ்விடத்துக்கு ஆண்டவனே கொண்டுவந்து சேர்த்து ஷாம் அஹமருடைய மந் திரத்தின்வழியில்என்னைமூழ்கியிருக்கச்செய்தானென்று மிகுந்தமன வருத்தமடைந்துகண்ணீர்சொரிந்துநிற்கையில் அப்போதுஹஜறத்து காஜாகிதர்அலேகிஸ்ஸலாம்சொல்லுகிறார்ஓ,ஹாத்திமே நீ அவனுடை யமகளின்பேரில் இன்பம்வைத்துநீ தன்னைத்தானே பலாவிலும்மூசி பத்திலும் என்போடுகிறாய் ஆனாலிதுநன்மையாக இருக்கும்நீ அவ ளுடையஎண்ணத்தையும் நினைவையும்உன்மனதால்தள்ளிவிடுமென் றுசொல்லஅப்போதுஹாத்திம் சொல்லுகிறார்என்னுடைய உயிரை நானிழந்துபோட்டுகிறேனல்லது ஆன்துபோலாகட்டுமென்றெ ண்ணி அவளென்கையில் எதுவரையில் கைவசமாகா திருப்பாளோ



அதுவரையில் நீர்சொல்லிய சொல்லைப்போல்கேழ்க்க மாட்டேனெ ன்று ஹாத்திம்சொல்ல அப்போது ஹஜறத்து கிதர் சொல்லுகிறார் ஓ, வாலிபமான ஹாத்திமே உன்னுடைய எண்ணமிப்போ திருக் கிறதைச் சொல்லென்றுகேட்க அப்போதவர்சொல்லுகிறார்ஹஜறத் தே பீர்முராஷிதே என்னுடைய எண்ணமானது இம்மரத்திலேறி அவர்களோடு சேர்ந்து பேசிக்கொண் டிருக்கவேண்டு மென் றுசொல்ல அப்போது ஹஜறத்து கிதர் அலேகிஸ்ஸலாம் சொல்லு கிறார் ஓ, வாலிபனே நீ அவள்பேரி லிச்சைப்பட்டு என்இரேகத்தை வீணாக்கிக் கொள்ளுகிறாய் அதினாலொன்றும் உனக்கு பிரயோசன மில்லை ஆகையாலதைவிட்டு திரும்பினால் நலமாக யிருக்குமென்று சொல்ல அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் அதினாலெனக்கு மி குந்த லாபமிருக்கிறது நான் அவளை விட்டு ஒரு நிமிஷமாவது வேறுபட மாட்டேன் என்னுடைய நசீபில் முசிபத்து அடையும் படியாக எழுதினவர் எழுதிவிட்டார் அப்படியிருக்கசுகத்தை நான் எவ்விதமாகயடைவேனென்றுசொல்ல அப்போது ஹஜறத்து கிதர் அலேகிஸ்ஸலாம் தம்முடைய ஆஸாவை யெடுத்து அந்த மரத்தை யடித்து இஸ்மே ஆஜம்படித்துச்சொல்லுகிறார் நீ இப்போது இந்த மரத்தி லேறிப்போ வென்றுசொல்லிஉடனே கண்பார்வையில்நின்று மறைவாகிப்போனார் அச்சொல்லைக்கேட்டு ஹாத்திமானவர் அம்மரத் திலேறி அப்பெண்ணிடமாகபோய் தலைக்குச்சரியாகச் சேர்ந்தவு டனேஇவரும்அவர்கள்தலையைப்போல் தொங்குகின்றார் அவருடை ய உடலானது அவ்வேரியில் விழுந்து முழுகிப்போய்விட்டது அப் போது வானத்திலிருந்து ஒரு கொடூரமான சப்தம்வந்தது நிலத் தில் நின்றும் கொடூரமான இரச்சல் கிளம்பினது பின்பு சூரியன் மறைந்து இரவாகி விட்டது அப்போது அத்தலைகளும் அதின் கூட ஹாத்திமுடைய தலையும் அவ்வேரியில் போய் விழுந்தது வழக்கம்போல் உருவாகிப்போய்சகலரும் கூடிமலிக்காசிம்மாசனத் திலிருக்கின்றவளை சூழ்ந்துகொண்டிருந்தார்கள் அப்போதுஹாத் திம் ஒரு மூலையில் நின்று கைகட்டிக்கொண்டெண்ணுகிறார் எவ் விதமெனில் இப்போது நானறியேன் எவ்விடம் வந்திருக்கின் றேன் நானெங்கே யிருந்தேன் இப்போதுநான் எங்கேபோவேனோ வென்றெண்ணங்கொண்டுநிற்கிறவேளையில் அப்போதுஅப்பெண்ணான மலிக்கா ஜறீன்போஷ் என்பவள்கேழ்க்கிறாள் எவ்விதமானால்ஓ,வா லிபனே நீ நிஜத்தைச்சொல்லு நீ யார் உன்பேரென்ன எவ்விடமிருந்

துவந்தாயென்றுகேட்க அப்போதுஹாத்திம்சொல்லுகிறார் நானொ
வன் உன்னுடைய அடிமைகளில் ஒருவனாக இருக்கும் இவ்வேரியிலி
ருந்து வெளிப்பட்டவ னென்றுசொல்ல அப்போது அவளெண்
ணினாளிவன் என்பேரில் ஆஷக்காகி இருக்கிறா னென்றெண்ணி
அதற்கு யாதொன்றும் பேசாமலிருந்தாள் பின்புதன்வழக்கம்போல்
ஆடல்பாடல்களில் சந்தோஷத்திலிருக்கிறாள் அப்போது ராத்திரி
வாகிவிட்டது விலைமதிக்காதின்ற விரிப்புகள் விரித்து அதின்மேல்
அனேகவிதமானஒஜீவனங்களும்பதார்த்தங்களும் விதவிதமான கனி
வர்க்கங்களும்தட்டுகளில் கொண்டுவந்துநிரப்பினார்கள் அப்போது ம
லிக்காவென்பவள் ஹாத்திமையழைத்து அருகில்வைத்து முன்னாலி
ருக்கின்றதபக்கென்றதட்டின்மீர்துவானவஸ்துகளெடுத்துமுன்பாக
வைத்துசொல்லுகிறாள் ஓ, வாலிபனே நீ சந்தோஷமாக இதைச்சா
ப்பிட்டு ஷர்பத்தைக்கொண்டு தாகந்தீருமென்றுசொல்ல அப்போ
து சாப்பிடுகிறபோது எண்ணுகிறார் எவ்விதமென்றால் நாம் யாராக
யிருக்கும் நானென்னத்துக்காகவந்தேன் நான் எங்கேபோகவேண்டு
மென்று பலவிதமாக எண்ணியிருக்கையில் எல்லாப்பரிகளும் தின்
று முடிவாகிவிட்டது அப்போதுஹாத்திம்சாப்பிட்டபின்பு தங்கள்
வழக்கம்போல்ஆடல்பாடல்துவர்க்கஞ்செய்தார்கள் பொழுதுவிடிந்
தபின்புவழக்கம்போல்அந்தலைகளும் ஹாத்திமுடைதலையும்கூட அ
ம்மரத்தில்போய் கொப்புகளில் தொங்கிக்கொண்டார்கள் அவர்களு
டையதிரேகங்கள்அவ்வேரியில்முழுகிப்போய் விட்டதுஇவ்விதமாக
ஏத்தனையோ நாளாகிவிட்டது அப்படியிருக்க ஒருநாள்ஹஜரத்துகா
ஜாகிதர் ஆலேகிஸ்ஸலாம்ஹாத்திமுக்கு உபகாரஞ்செய்யப் பின்னும்
வந்து தன்னுடைய ஆஸாவினால் அம்மரத்திலிருந்து கீழே யிறக்கி
ஹாத்திமுடைய உடலை ஏரியிலிருந்தெடுத்து ஒன்றாகச் சேர்த்து
இஸ்மே ஆஜமென்ற ஆயத்தையோத அப்போது உடலில் தலைபொ
ருந்திக்கொண்டு உயிராகிப்போனபின்பு அந்த ஜாதுயென்ற மந்திர
ம் தூறகிப்போகிவிட்டது உடனே கண்ணைத்திறந்து பார்க்கும்போ
து முன்வந்த பெரியவர் ஆஸாவை கையில்பிடித்துக்கொண்டுநிற்கக்
கண்டுஹாத்திமானவர் எழுந்துநின்று அவருடையகாலில்விழுந்து
சொல்லுகிறார் ஓ, பெரியவரே தாங்கள் என்னுடைய கோலமான
பொல்லாங்கின் வேஷத்தை பார்த்தீர்களா இதற்காக தாங்கள் யா
தொன்றுஞ் செய்யவில்லையே அப்போது ஹஜரத்து கிதர் சொல்லு
கிறார் ஓ, வாலிபனே இதுவரையில் நீஎங்கேயிருந்தாயென்றுகேழ்க்க



அப்போதுஹாத்திம்சொல்லுகிறார் நான் இம்மரத்தில்தொங்குகின்ற
ஒளிவுபொருந்திய தலைகளின்வேடிக்கையை இன்பமாகப் பார்த்துக்
கொண்டிருந்தேனென்று சொல்ல அப்போது ஹஜரத்து கிதர் அ
லேகிஸ்ஸலாம் கேழ்க்கின்றார் இன்னம் இக்கோலமாகியும் அப்
பெண்பேரில் உனக்கு இச்சை யிருக்கின்றதா வென்று கேழ்க்க
ஹாத்திம் சொல்லுகிறார் ஓ, ஹஜரத்தே தாங்கள் இப்போது என்
னுடைய யெண்ணம்போல் நிறைவேற்றவேண்டும் இல்லாவிட்டால்
நான் இந்த பலாவான அகப்பாட்டிலிருந்துகொண்டு இதிலே இறந்
து போவே னென்றுசொல்ல அப்போது ஹஜரத்துகாஜா கிதர்
சொல்லுகின்றார் நீ எதுவரையிலிருக்கப்போகிறாய் இவளுடைய
தகப்ப னிருக்கிறவரையில் அவளிடமாக ஒருவருஞ் சேரமாட்
டார் ஆனாலவன் மிகுந்த சூனியஞ்செய்கின்ற மந்திர வாதியாயி
ருக்கும் அவனானவன் தன்னுடையசூனியமென்றவித்தையால் இவ்
விதமானகோலமிவளைச்செய்திருக்கின்றான் அவனுடையவேலைஇவ்
விதமாக இருக்கும் ஆனாலிப்போது நான் ஏதாவது சொல்வேனானா
லதுபோல் நீ நடக்கவேண்டிய தென்றுசொல்ல அப்போது ஹாத்
திம்சொல்லுகின்றார் தங்களுடைய உத்தரவுபோல்நடப்பேனென்று
சொல்ல அதைக்கேட்டு ஹஜரத்து கிதர்சொல்லுகிறார் நானுனக்கு
இஸ்மேஆஜம் என்கிற ஆயத்தைசொல்லித்தருகிறேன் ஆனால் நீர் அத
ற்காக மிகுந்தசுப்பிரவாகயிருக்கவேண்டும்பொய்யொன்றுஞ் சொல்
லக்கூடாதுநித்தியம்நீரில் முழுகிக்கொண் டிருக்கவேண்டியது நாள்
முழுதும்நோன்புவைத்து உபவாசமா யிருக்கவேண்டுமென்றுசொல்
ல நல்லது தங்கள்சொற்போல்நடப்பேனென்றுஉண்மைகொண்டார்
அப்போதுஹஜரத்துகிதர் அலேகிஸ்ஸலாம்இஸ்மேஆஜமென்றமந்திர
ஆயத்தைப்படித்துக்கொடுத்துசொல்லுகிறார்நீ இப்போதுஅம்மலையி
லிடமாகப்போ நீ யாதொன்றுக்கும் மனதில்சந்தேகப்படாதே யென்
றுசொல்ல நல்லது நான் கோஹே அஹமறென்ற மலைக்கு நானெப்
படிபோவே னென்றுசொல்ல அப்போது நீ என்னுடைய ஆஸாவை
ப்பிடித்துக்கொண்டு உன்னுடைய கண்களை கெட்டியாக மூடிக்கொ
ள்ளென்று சொல்ல அவருத்தரவுபோல் ஆஸாவைப்பிடிக்க ஒரே
மூச்சில் கொண்டுபோய்விட்டதுகாலானது நிலத்திற்பட்ட வுடனே
கண்ணைத்திறந்து பார்த்தார் அவ்விடத்தில் யாதொரு வஸ்துவும்
காணப்படவில்லை ஆனால் ஒரு பெரியமலையானது மிகுந்த உயரமுள்

ளதாகவும் அதின்பேரில் சிவப்புநிறமுள்ள மலர்ந்த புட்பஜாதிகளை
பூத்திருக்கிறதுபோல் தோற்றப்பட்டது அதையும் ஹாத்திம்பார்த்து
மிகுந்த சந்தோஷப்பட்டு அதின் பேரிலேறி கால்வைத்த வுட
னே அவ்விடத்திலுள்ள கல்கள் காலைப்பிடித்துக்கொண்டது அது
எவ்விதமானால் காலையெடுக்க கூடாமையான வருத்தமாகி விட்டது
அப்போதவரெண்ணினர் இனி நாம் சும்மாயிருக்கக் கூடாதென்றும்
இஸ்மேஆஜம்படிக்கவேணுமென்றுபடிக்க அக்கற்கள்காலை உடனே
விட்டுவிட்டதுஅப்போது தெரியவந்ததுஇதுகோஹேஅஹமரென்ற
மலையாக யிருக்குமென்றெண்ணி பின்னு மந்த இஸ்மே ஆஜம் படி
த்துக்கொண்டு அந்தமலையின்பேரி லேறினர்.

அப்போது அவ்விடத்தி லொருமயிதானம் மிகுந்த சாபாகத்
தோற்றியது முன்னால் நடந்துபோகின்றார் அவ்விடத்தில் ஒரு சஷ்
மா என்றசின்ன குளம் மிகுந்த துப்பரவாயிருக்கக்கண்டு அதின்
சுற்றிலுமிருக்கின்ற மரங்கள் காய்த்துப்பூத்துகனிவர்க்கங்கள் சொ
ரிந்திருக்கின்ற சிறப்புமழகும் இன்னவிதமென்றுவர்ணித்துச் சொ
ல்லக்கூடாதுஎன்னுயிருள்ளவரையிலும் இதுபோலகாணவில்லையெ
ன்றுசொல்ல அப்போதுஹாத்திமானவர் தன்உடுப்புகளைகழற்றிவை
த்துவிட்டுஅக்குளத்தில்குளித்துகுசல்செய்து பின்பு உடுப்பைஉடுத்
திக்கொண்டுஅவ்விடத்திலிருந்து இசுமேஆஜம்ஓதினர் அதினுடைய
பறக்கத்தால் சூனியமந்திரத்தாலிருந்தநாற்கால்ஜீவஜெந்துகளாகியபு
லிகாடி சிங்கமுதலியதுகளும் அவ்விடம்விட்டோடுகின்றது இச்சேதி
ஷாம் அஹமருக்குத் தெரியவந்ததுஎல்லாமிருகஜாதிகளும்ஓடிப்போ
கிறதைப்பார்த்து அப்போது அவன் நுஜூமுடையகிதாபையெடுத்துப்
பார்க்கத்தெரியவந்தது எவ்விதமானால் ஒருநாள் (ஹாத்திம்பின்தை)
இவ்விடம்வருவார் நம்முடைய மந்திரம்தந்திர முதலானதெல்லாம்
ஒன்றில்லாமல் போக்கி விடுவாரென்று தோணவருகிற தென்று
அக்குளத்தின் அருகிலிருந்துகொண்டு இஸ்மே ஆஜம் படிக்கிற
தைப்பார்த்தான் அனேகந்த இஸ்முக்குமுன்னால் எந்த மந்திரவி
த்தைகளும் சூனியமும் மற்றதுகள் யாதொன்றும் இதற்கு முன் நி
ற்கமாட்டாது மந்திரங்களொன்று மேறமாட்டாதென்று மிகுந்த ம
னவருத்தமடைந்து அந்த இஸ்மே ஆஜத்தை மறந்துபோகும்படிக்கு
செய்யவேணுமென்று யோசித்துஒருமந்திரம்படித்து நான்குபக்கங்க
ளிலுமோதினவுடனேஒருபரிக்கூட்டமவன்முன்பாகவந்துநின்றார்கள்



அதிலிருந்து ஒருபரியானவள்முன்னால்புறப்பட்டுவந்தாள்அவள்எவ்
விதமாயிருந்தாளானால்மலிக்காஜறின்போஷ் என்பவளைப்போலொத்
த்சுந்தரவடிவுள்ளவளாகயிருந்தாள் அவள்கையில் (சுறாஹி) என்றகூ
ஜாவையும்(பியாலா)என்றகட்டோறாவையும்எடுத்துக்கொண்டுவந்தா
ள் அப்போதுஷாம் அஹமரென்னும் சூனியமந்திரக்காரன்சொல்லு
கிறான் நீ போய் இந்த மதுபானத்தை ஹாத்திமுக்குகொடுத்து அவ
னை சரிப்படுத்திவிடுமென்றுசொல்லஅப்போதுஅப்பரியானவள் தன்
கூட்டத்தோடு குளிர்ச்சிபொருந்திய குளத்தினருகிற்போய்ச் சேர்ந்
தவுடனே ஹாத்திம்பார்த்துஹைரானாகி இவர்களெல்லாம் அம்மர
த்தில் தொங்கிக்கொண் டிருந்தார்களே இவ்விடத்தில் எவ்விதமாக
வந்தார்கள் பின்னு மனதிலெண்ணுகிறார் அனேகவளுடைய தகப்ப
ன்வீடானபடியால் இவ்விடம்வந் திருக்கிறாளென் றெண்ணி யிருக்
கையில் மலிக்காஜறின்போஷுடையரூபங்கொண்டபரியானவள் ஹா
த்திமிடமாகவந்து சொல்லுகிறாள், ஓ. ஹாத்திமே நீர் மிகுந்த வருத்
தமும் துன்பமும் இளைப்பு மெடுத்துக்கொண் டிருக்கின்றாய் இப்
போது என்னுடையதகப்பன் இந்த தோட்டத்திலுடைய காற்றுவா
டையும் சவுக்கியமும் பெறும்படிக்கு என்னை அழைப்பித்தான் இப்
போது உன்னைப்பார்த்தவுடனேநான் மிகுந்த பூரிப்புடன் சந்தோஷ
மானேனென்றுசொல்லிஹாத்திமுடைய வலதுபுறமாய்மடியில் போ
யிருந்துக் கொண்டு கூஜாவிலிருந்த மதுபானத்தை அந்த கட்
டோறாவில் வார்த்து கையிலெடுத்துக்கொண்டு ஹாத்திமுக்குகொ
டுக்கஅதை வாங்கிக்கொண்டுஎண்ணுகிறார் நம்முடைய மாஷூக்கெ
ன்பவள்கொடுக்கிறதேபோதும்அவளுடையசொஹபத்தானது நமக்
கு நியாமத்தாக இருக்குமென்று அந்த ஷர்பத்தென்றமதுபானத்தை
கையில் வாங்கி வாயில் வைத்துக் குடித்தவுடனேசுத்துமாறியிருக்க
அந்தமகபூபானபரியானவள்கருந்தேவாகி ஹாத்திமை கட்டிக்கொ
ண்டு ஷாம் அஹமர் சூனியக்காரனிடமாகக் கொண்டு வந்து வி
ட அவன் ஹாத்திமைப்பார்த்து தன்னுடைய தலையை கீழே
குனிந்துகொண்டு மனதிலெண்ணுகிறான் இவ்விதமான வாலிபனை
க்கொல்வது கெட்ட புத்தியீனமாக இருக்குமென்று அனேகவன்நம
க்கு பகையனாகயிருக்கிறான் இவனுக்குத்தகுந்த தெண்டனை செய்ய
வேண்டுமென்றெண்ணி அவர்களுக்கு சொல்லுகிறார் ஓ. பரிகளேஇ
வனைக்கொண்டுபோய் ஒருநெருப்பின் கிணற்றில்போட்டு ஒரு பெரி
ய நாற்சதுரம் இரும்புஆயிரமணங்கு கொண்டதைநெருப்புப்போல

காச்சி அதின்வாயைமூடிபத்திரப்படுத்துமென்றுசொல்ல அதுபோ
லவர்கள்செய்தார்கள் அப்போது ஹாத்திமந்த நெருப்பின் கிணற்றி
னுள்ளிருந்து மிகுந்த வருத்தத்துடனே யிருக்கையில் இறஸானுடைய
மகள்கொடுத்த மோறுவென்றது ஹாத்திமுடைய வாயிலிருப்ப
தால்அதினால் அந்தகோரமான அக்கினியும் இரும்பின் அனலும
வரவர குளிர்ச்சியாகவுமிருந்தது அப்போது ஷாம் அஹமருடைய
மனிதர்கள் போய்சொன்னார்கள் ஹாத்திம் அந்த நெருப்பின்கிண
ற்றில் வெந்து சாம்பலாகிவிட்டா னென்றுசொல்ல அப்போது
அவன் தன்னுடைய நுஜூமு கிதாப்பைபார்த்து தெளிந்து கொ
ண்டு சொல்லுகிறான் நீங்கள் பொய்சொல்லுகிறீர்கள் ஹாத்திம்
ஒரு மோறுவினாலவன் உயிர்ச்சேதமில்லாமல் பிழைத் திருக்கிறா
ன் அதினாலவனுக்கு அக்கினிசுடமாட்டாது ஆனால் அந்தமோ
றுவை எவ்விதத்திலும் நான் வாங்கவேண்டும் அது இருக்கும்வ
ரையில் அவனுக்குயாதொரு குற்றம்குறைவுவரமாட்டாது ஆனாலவ
வன்கையால் கொடுத்ாலது நம்க்குபலனாகும் அப்படிகொடுக்காவி
ட்டாலது நாம் வலுவால் வாங்கினபோதிலும் நம்மிடமிருக்க மாட்
டா தென்றுயோசித்து தங்கள் வேலைக்காரர்களிடமாகச்சொல்லுகி
ன்றான் நீங்கள் சுருக்காகப்போய் ஹாத்திமை அக்கிணற்றிலிருந்து
எடுத்துக்கொண்டுபோய் முன்னிருந்த குளத்தினருகில்வைத்து வா
ருங்களென்றுசொல்ல அதுபோலெடுத்து குளத்தினருகில் கொண்
டுபோய் வைத்தார்கள் அப்போதவர் குளத்தினருகில் வந்தவு
டனேசுருக்கில் குளத்திலிறங்கிமூழ்கி தேகத்தை சுத்தமாய்செ
ய்து கொண்டுகரையிலேறி ஆண்டவனுக்காக சுக்கறானாக்குறா
தொழுதுவிட்டுமிகுந்த யோசனையாகயிருக்கின்றவேளையில் ஷாம்
அஹமதென்பவன் மந்திரத்தையோதி ஊதினவுடனேமலிக்கா ஜரி
ன் போஷானுடைய ரூபமெடுத்துக்கொண்டு ஹாத்திமுடையமுன்னி
ல்வந்துநின்று சொல்லுகிறாள் எவ்விதமெனில்.

ஓ என்னுடைய ஆசைக்கானவிசனமுள்ளவனே நா னுன்னிடத்
தில்வர எனக்குமிகுந்த விசனமா யிருக்கின்றது நான் உன்னருகி
ல் வந்திருக்க மாட்டேனென்றும் தூரத்தில் நின்று உன்னு
டைய முகத்தைப் பார்ப்பே னென்றிருந்தேனானால் அன்றையத்தினம்
நான் உன்னிடத்தில் உட்காந்துகொண் டிருக்கையில் என்னுடை
ய தகப்பனானவன் பார்த்து ஒரு கருந் தேவானதை அனுப்பி



என்னை கொண்டு வரும்படிக்குச்செய்து உன்னை வேண்டியதுன்ப
ப்படுத்தினான் ஆண்டவன் கிருபையா லதில்நின்று நீர் தப்பி வந்தீ
ர் ஆனாலிப்போது உன்னிடமாகநான் வந்திருப்பேனாகில் என்னுடைய
தகப்பனறிந்தால் முன்போல் செய்வானென்று சொல்லஉடனே
ஹாத்திமானவர் அவளுடைய கையைப்பிடித்திழுத்து தன்னருகில்
வைத்துக்கொண்டார் அப்போது அவள் பரியாசமாகச்சொல்லுகின்
றாள் ஓ, ஹாத்திமே நீ யென்பேரில் மெய்யாக ஆசைகொண்
டிருக்கின்றாயா வென்றுகேட்க அப்போது அவர் சொல்லுகி
றார் என்னுடைய உயிரும் மனமும் உண்டாக நான் உன்பேரில்
ஆசைகொண் டிருக்கிறேன் சந்தேகமாக யென்னைவேண்டாம் எ
ன்னுடைய கண்மணியே யென்றுசொல்ல அப்போதவள் சொல்
லுகின்றாள் நல்லது நீ யென்பேரில் இன்பங்கொண்டவனாகயிருப்பா
யாகில் நான் ஒரு வஸ்து கேட்கிறேனதைக் கொடுப்பையாகில் எ
ன்பேரில் ஆசைகொண்டவனென்று நான் நம்புவேனென்று சொ
ல்ல அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் ஓ, என் பிராண நாயகியே
நீ கேட்கின்ற வஸ்தானது என்னவென்றும் நான் முஸ்தீபாகயி
ருக்கின்றேன் என்னிடமாக நகை நட்டு பொருள்கள் யாதொன்று
மில்லையென்று சொல்ல அப்போது அம்மொழியைக் கேட்டவுட
னே சொல்லுகின்றாள் ஹாத்திமே கிரஸ் பாதுஷாவுடைய மக
ள்கொடுத்த மோறுவை கேட்கின்றேன் மற்றப்படி யெனக்குநகை
கள் பொருள்கள் யாதொன்றும் வேண்டியதில்லை அப்போது ஹாத்
திம் சொல்லுகிறார் ஓ, என்னுடைய ஆசை நாயகியே அந்த
மோறு யிருக்கின்றது உனக்கு எவ்விதமாகத் தெரியு மென்று
கேட்க என்னுடைய தகப்பன் நுஜூமுடைய வெளியால் எனக்கு
தெரியப்படுத்தியிருக்கிறான் அம்மொழியை ஹாத்திம் கேட்டு நல்ல
து அந்த மோறுவானது உன்னில் நின்று எனக்கு பெரிதல்லவென்
று தன்னிடமாயிருக்கின்ற மோறுவை யெடுத்துக் கொடுக்கின்றவே
ளையில் ஹஜறத்து காஜா கிதர் ஹாத்திமுடைய இடது பக்க
மாக வந்து அதட்டிச் சொல்லுகிறார் ஓ, ஹாத்திமே நீ அறிவுகெ
ட்டுப்போனாயோ உன் புத்தி மாறிப்போச்சுதோ பத்திரம் நீ மோறு
வைக் கொடுப்பாயாகில் நீ மிகுந்த வருத்தத்தை யடைவதுமல்லா
மல் உன்னுடைய உயிரையு மிழந்துபோவா யென்று அப்பெரியோர்
சொன்னமொழியைக்கேட்டு ஹாத்திம் சொல்லுகின்றார் ஓ பெரிய
வரே நீர் யாராகயிருக்குமென்றுகேட்டு நீர் இவ்விதமாகமோறுவை

அவளுக்குகொடுக்க வேண்டாமென்று பயப்படுத்துகின்றீர் அந்த
வஸ்தானது என்னுடைய பிரியமாகிய பெண்ணில் நின்று பெரி
தல்லவென்று சிறிது உகமைகளைச்சொல்ல அப்போது அப்பெரிய
வர்சொல்லுகிறார் நீ என்னையறியமாட்டாயா நானுனவன் உனக்கு
இஸ்மே அஜம்படித்துக்கொடுத்தவ னல்லவாவென்றுசொல்ல அப்
போது ஹாத்திம் எழுந்து அவருடையகாலில் விழுந்துயிருந்தஅ
தபுட னின்றுகொண்டு சொல்லுகின்றார் ஓ யென்னுடைய ஹஜ
றத்தே நான் இன்பங்கொண்டிருந்த பெண்ணானவள் இப்போது
என்வசப்பட்டிருப்பதா லந்தவஸ்து அவளில் நின்றும் எனக்கு
பெரிதல்லவென்றுசொல்ல அப்போதப்பெரியோர் சொல்லுகின்றார்
ஓ,ஹாத்திமே நீ இவ்வளவுபாடுபட்டு முனக்குகொஞ்சமாவது அறிவி
ல்லாமல் போய்விட்டுதே இவள் யாரென்று நீ அறியவில்லையேமலிக்
காஜரின்போஷ் யென்பவளிவளல்ல குனியமந்திரத்தால் முன்னால்
ஷாம்அஹமர் மந்திரக்காரன் உன்னிடமாக மலிக்காவைப்போல்ரூப
ஞ்செய்து அனுப்பி யிருந்தானல்லவா அரீவு உனக்குப்போய் விட்
டதா ஆனால் நீ அவளுடைய இச்சையை மனதில் நின்றுதாரவெ
டுத்துப்போடு மலிக்கா ஜரீன் போஷ் யிவள் அல்லநீ புத்திமாறி
ப்போகாதே இவளானவள் முன்னால் மந்திரத்தால் ஷாம் அக
மறென்பவன் மலிக்காவுடைய ரூபம்போல்செய்து உன்னிடமாக
அனுப்பியிருந்தானல்லவா அவளுடைய கையால் மதுரமான சாறுய
த்தைமந்திரத்தால்செய்து உனக்கு குடிப்பாட்டிஉன்னைநெருப்புக்கி
ணற்றில்போட்டு எரிக்கும்படிக்கு உத்தரவுசெய்தவளல்லவா இந்த
மோறு உன்னிடமாக யிருந்தபடியால் நீ உயிர் தப்பி சலாமத்தாக
வந்து சேர்ந்தாய் ஆனால் இப்போது இந்த ரூபங் கொண்டுவந்திரு
க்கப்பட்டவர்கள் மந்திர ரூபங்களாகயிருக்கும் ஆகையால் நீ வி
ரைவாய் இஸ்மே அஜம் ஓது அவள் மெய்யாக மலிக்காஜரின்
போஷாக யிருந்தால் உன்னருகிலிருப்பாள் மந்திரவித்தையால் ரூ
பமெடுத்து வந்திருந்தால் எரிந்துபோவா ளென்றுசொல்லஅம்மொ
ழியைக் கேட்டவுடனே ஹாத்திம் சுருக்கெலெழுந்து அப்பெரியோரு
டைய பாதத்தைமுத்தமிட்டுகுளத்தில் போய்குளித்து குசுல்செய்து
மேலேறிவந்திருந்துஇஸ்மே அஜம் அவர்க்கஞ்செய்துபடிக்கும்போ
து அப்பெண்ணோடுவந்தவர்களும் அவளுடையமுகமுங் கருகிவே
துபட்டு அவர்களெல்லாருக்கும் நடுக்க லெத்துக்கொண்டது ம
லிக்கா வுடைய ரூபங்கொண்டவள் மிகுந்தடுக்கமுங்குதிப்பு குதிக்



கின்றாளப்போது எல்லோர்களுக்கும்தலையிலிருந்துநெருப்பினுடை
யசுடர்சுந்தியெரிகின்றது எவ்விதமானால் பெரியதீவட்டியைப்போ
லெரிந்து கருகி கொஞ்சநேரத்தில் எல்லோரு மெரிந்து கருகி
சாம்பலாகிப்போய்விட்டார்கள் பின்பு ஹாத்திமானவர் மிகுந்த மன
வருத்தமடைந்து சொல்லுகின்றார் எவ்விமானால்நான் இச்சைகொ
ண்டவளைப்போல்பார்த்துக் கொண்டு என்னுடையஎண்ணத்துக்கு
ந்தரியங்கொடுத்துக் கொண்டிருந்தேன்இனி நானெவ்விதமாக என்
னுடையஉயிரையும் மனதையும்கெட்டிப்படுத்திஸபர்செய்வேன்ஆனா
லிப்போதுஅவளைநினைத்துஅழுதுக்கொண்டிருந்தாலொழியவிசனம்
தீருமில்லாவிட்டால் சரியல்லவென்று மிகுந்ததுக்கத்துடனே என்
னைக்கொண்டு அழுகின்றார் இவ்விதமாக யிருக்கின்ற சங்கதியை
ஷாம்அஹமர்என்றமந்திரக்காரனுக்கு தெரியவந்ததுதானனுப்பியமந்
திரத்தின் பெண்கள் எல்லோரும் நெருப்பினால்வெந்து சாம்பலா
கிப்போனார்களென்றசொல்லைக்கேட்ட வுடனே தன்னுடையமந்தி
ர வித்தையினால் ஷயித்தானையழைப்பித்தான் அவன் வந்த வுட
னே வேண்டிய மரியாதிகள் செய்து தன்னருகில் உழ்க்கார வைத்
துக்கொண்டு சொல்லுகின்றான் நான்ஹாத்திமுடைய வித்தையின்
முன்னால் மிகுந்தபிலயீனனாகிவிட்டேன் என்னுடைய வித்தைகள்
ஒன்றுமெனக்குபலங்கொடுக்கவில்லைஆகையால் இதற்குநான் என்
ன செய்வேனென்று மிகுந்தசலிப்புடன்சொல்லஅப்போதுஷயித்தா
னென்ற இபிலீசானவன் சொல்லுகின்றான் ஓ, ஷாம் அஹமர்என்
பவனே நான் ஹாத்திமுடையசங்கதியைச் சொல்லுகிறேனெவ்விதமென்றால் அவனுடையஆயுசு இன்னம் மெத்தயிருக்கின்றதுஅவன்
யார்கையாலாவதுவெட்டுண்டுஇறக்கவுமாட்டான் ஒருவருடையகுனிய
மந்திரத்தாலுமகப்படவுமாட்டான்அவன்பேரில்மந்திரதந்திரங்கள் ஒ
ன்றும் நடக்கமாட்டாதுஆனால்நான் சொல்வதுபோல்கேட்டுஉன்னு
டையபெண்ணை அவனுக்கு விவாகஞ்செய்துகொடுத்தால் நலமாகயி
ருக்குமென்றுசொல்லஅப்போதுசொல்லுவான்நானுயிரோடிருக்கும்
வரையிலவனையொருபோதும் நான் நிகாசெய்துகொடுக்கமாட்டேன்
அப்போதுஇபிலீஸ் என்பவன் சொல்லுகின்றான்ஆனாலிந்தபேச்சுஉ
ன்மனதிலிருக்கின்றதுநீ சொன்னது நிச்சயமாகமெய்யாவென்றுகே
ழ்க்க அதற்கவன்சொல்லுகின்றான் எவ்விதமானால் அவனுக்கு ஒரு
போதும் என்பெண்ணைக்கொடுக்கவுமாட்டேன் என்னுடைய அடி
மையானபெண்களையெல்லாம் எரித்து சாம்பலாக்கி விட்டான் ஆனு

ல் உன்னால் எனக்கொரு நம்பிக்கை யிருக்கின்றது நீ மிகுந்த வல்லமைசாலியான படியால் எவ்விதமானால் அந்தஹாத்திமென்பவன் படிக்கின்ற இஸ்மே ஆஜத்தை அவன் மனதில் நின்று மறக்கும்படிக்கு செய்யவேண்டுமென்றுசொல்ல அப்போது இபிலீஸ் சொல்லுகிறான் நானவரிடத்தில் யாதொன்றுஞ்செய்ய என்னால் கூடாது அதெப்படியானால் ஆண்டவன் ஹாத்திமுடையகாவலாகவும் அவருக்குதவி யொத்தாசை செய்யும்படியாகவும்ஹஜரத்துகிதர்அலேகிஸ்ஸலாத்தையியமித்திருக்கிறான் ஆகையால் இஸ்மே ஆஜமென்றதை மறக்கடிக்கவென்னால் அவ்வளவு வல்லமையில்லைஆனால்என்னால்கூடியது எவ்விதமானால் அவரை நித்திரையில்மயக்கி ஹறக்கத்துசெய்து அசுத்தப்படுத்தி முழுகும்படியாகஎன்னால் கூடுமென்று சொன்னமொழியை ஷாம் அஹமர்கேட்டு மிகுந்த சந்தோஷமாய் எழுந்து அவன்காலின் கீழேவிழுந்தான்அப்போதுனைத்தானைஇபிலீஸ் பயப்படாதேயென்று அவனுக்கு தைரியங் கொடுத்து தான் கைபாகிப்போய்விட்டு ஹாத்திமை மிகுந்தஎண்ணத்திலாக்கிவிட்டு நித்திரைவரும்படிக்கு மயக்கத்தைவிட்டு அவருக்குனைத்தானுடையஹறுக்கத்தால் முழுகும்படிக்கு நேரிட்டது அப்போது ஹாத்திமானவர் திடுக்கிட்டெழுந்து பார்க்கும்போது தான் துப்பரவில்லாம லிருக்கக்கண்டு குசல்செய்ய நாட்டங்கொண்டார் அப்படியிருக்க அச்சூனியக்காரழுந்திரமுள்ளஷாம் அஹமறென்பவன்சமயம்பார்த்துக்கொண்டிருந்து இப்போதுநல்லசமையம்வந்துநேரிட்டதென்று மகிழ்ந்து மந்திரத்தை யோதினனப்போது பூமியிலிருந்து ஒரு கருந்தேவானது எழுந்து வந்து ஹாத்திமிடமா யோடுகின்றது அப்போதுஹாத்திமானவர்அசுத்தமிருப்பதினால் இம்மூதேவி யோடுகாம் எவ்விதமாகப் போர் செய்யலாமென்று எண்ணங்கொண்டிருக்கையில் அந்தேவானது அருகில் வந்து ஹாத்திமைப்பிடித்து ஷாம்அஹமரிடமாக கொண்டுபோய்விட்டது அப்போதவன் ஹாத்திமைப்பார்த்து அத்தேவுக்கு சொல்லுகிறான் ஆனால் இவனைக் கொல்லுகிறது நமக்குச்சரியல்ல இவனிடமாக ஒரு மோறுவிருக்கின்றது அது இவனிடமாகி இருக்கும்வரையில் அவனை நாமென்னசெய்தபோதிலு மவனிறந்துபோகமாட்டான் அதை நாம்ஜாலமாக வெடுத்துக்கொண்டாலும் அது நமக்கு பலனாகமாட்டாது அவன்தன்மனாருஜியாலதை கூடாதவரையில் இவனுக்குகாலும்கையும் கழுத்து மூன்றையுஞ்சேர்த்தோக்குஜஞ்ஜீறென்றவிலங்கைப்போட்டு அதின்மேல்மிகுந்தகனமானஇரு



ம்பின்உடுப்பு உடுத்தி வெறுந்தலைதெரியும் படிக்குச்செய்துஇரண்டுபெரியதூணில்கட்டிவெகுபத்திரமாகஇவனைக்கொண்டுபோய்வைக்கச்சொன்னான் அப்போது அவனடிமைக்காரர்கள் அதுபோல்செய்தார் அப்போது ஹாத்திமானவர் மிகுந்த வருத்தப்பட்டு பொறுக்கமாட்டாமல் ஆண்டவனிடமாக நினைத்து இந்தவருத்தம் பொறுக்கஎன்னால் கூடுவதில்லையே என்று கண்ணீர் சொரிய முறையிட்டு அழுதுக்கொண் டிருந்தார் எவ்விதமானால் ஆண்டவனே இவ்வேளையில் என்னைக்காப்பாற்ற நீ யல்லாமல்வேறில்லையென்றிருக்க அப்போது இந்த ஷாம் அஹமர் மந்திரக்காரன் தன்னைச்சேர்ந்த மந்திரக்காரர்களிடமாகச்சொல்லுகிறான் நீங்கள் சகலரும்அவனைச்சூழ்ந்துகொண்டிருங்களென்றுசொல்லிப்போய்விட்டான் இவ்விதமாஏழுநாள் இரவும்பகலுமாகவிருந்தார் அப்படியிருக்கஹாத்திமுக்குபசிதாகமும் இளைப்பினால் மிகுந்த வருத்தமாயிருக்கிறவேளையில் ஷாம் அஹமறென்ற மந்திரக்காரன்வந்துசொல்லுகிறான்ஓ, ஹாத்திமேஉன்னுடைய அஹவால் எவ்விதமாக இருக்கிறதென்று கேழ்க்க அதற்கு யாதொருத்தரவு கொடுக்கவில்லை அப்போது மந்திரக்காரன் சொல்லுகிறான் எவ்விதமானால் ஓ, ஹாத்திமே நீ இப்போது உன்னிடமாக இருக்கிறமோறுவைகொடுப்பாயானால்உன்னை இக்ஷணம் கைதியிலிருந்து விடுவிப்பேனென்றுசொல்ல அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் உன்னுடையமகளை எனக்குகலியாணஞ்செய்து கொடுப்பையாலந்த மோறாவை இப்போதேதருகிறேனென்று சொல்ல அது கேட்டவுடனேமிகுந்த ஆங்காரங்கொண்டு தன்னுடைய சிம்மாசனத்திவிருந்திறங்கி தன்னுடைய மந்திரக்காரர்களை யழைத்து அவர்களுக்குஉத்தரவுசெய்தா னெவ்விதமானால்ஹாத்திமுடைய பேரில்கல்மழைபெய்யும்படிக்குஎறியுங்க ளவனுடையதலைநசுங்கி உருவில்லாமற்பஞ்சாகப்பறக்கும் படிக்குச்செய்யுங்களென்றுசொன்னவுடனேமந்திரக்காரர்களெல்லாம் கற்களைக்கையாலெடுத்துக்கொண்டுஹாத்திமுடைய அருகில்வந்து சொல்லுகிறார்.

ஓ, ஹாத்திமே நீ உன்னுடைய உயிரின்பேரி லிரக்கம்வைத்து மோறுவைக் கொடுத்துவிடு இல்லாவிட்டால் உன்னுடையதலையை கற்களினாலுடைத்து பொடிபொடி யாக்கிவிடுவோம் நீவீணாக உயிரிழந்து மிகுந்த துன்பப்படுவா யென்றுசொல்ல அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் ஆண்டவன்கிருபையால் உங்களுடைய சர்தாரை

க்கொன்றுவிட்டு உங்களையுமெரித்துநாசம்பண்ணி அவனுடையபெண்ணை என்னுடையஅடிமைப்படுத்திக் கொள்வேனென்றும் சொல்லஅது கேட்டவுடனே அந்த மந்திரக்காரர்களெல்லாம் மிகுந்த ஆங்காரத்துடனே கோபங்கொண்டு கல்மாரி பொழிகின்றார்கள் எதுவரையிலானால் ஹாத்திம் கல்லால்மறைந்துபோகும்படியாக ஒருபெரியமலைபோல் மூடிக்கொண்டது அப்போது மந்திரக்காரர்கள் தம்முடைய சர்தாரினிடமாகப்போய் ஹாத்திமென்பவனிறந்துபோனானென்றுசொல்ல அப்போதவன்சொல்லுகிறான் நீங்கள்பொய்சொல்லுகிறீர்கள் இன்னமவன் உயிரோடேபிழைத்திருக்கிறானென்றுசொல்ல மந்திரக்காரர்கள்சொல்லுகிறார்கள் நாங்கள் கற்களைக்கொண்டு விசையாக எறிந்தால் எகுவினுடைய திரேகமாயிருந்தபோதிலும் கருகியுருகி சாம்பலாகப்போய்விடும் அப்படியிருக்க மனிதன் இவ்விதமாக உயிர்தப்பியிருப்பானென்றுசொல்ல, நல்லது நான்சொல்வது உங்களுக்கு சந்தேகமாயிருக்குமாகில் நீங்கள் கற்களையெல்லாமெடுத்துப்பார்த்தால் அப்போதுதெரியுமென்றுசொல்ல அம்மொழியைக்கேட்டுப்போய்கற்களையெல்லாமெடுத்துப்பார்க்கும்போது யாதொருகுற்றமில்லாமல் ஹாத்திமுயிரோடிருப்பதைப்பார்த்து மிகுந்தமனவருத்தமடைந்து பின்னும்கல்மாரிசொரிந்தார்கள் அதுஎவ்விதமெனில்அம்மலையில்நின்றுஇரண்டுபங்கதிகமாய்விட்டதுபின்பு பார்க்கலாமென்று கற்களை எடுத்துப்பார்க்குமுன்போலிருக்கக்கண்டு யாதொருகுற்றமுமில்லாமலிருந்தார் இவ்விதமாக ஏழுநாளாகிவிட்டது அப்போதுஷாம் அஹமரென்பவன் மிகுந்த மனவருத்தங்கொண்டு சொல்லுகிறான் நீங்கள் நித்தியம் இவ்விதமாக கல்மாரிசொரிந்துகொண்டிருங்களென்று சொல்லிவிட்டு தான் தனதுமஹாலில்போயிருந்து மந்திரத்தைப்படிக்கதுவக்கஞ்செய்தான் அப்போது ஹாத்திம்பசிதாகத்தால்இளப்புவந்துகூடி உயிர்போகும் படியாய்க்கிடக்கின்றார் அப்போது காவலாள்களோடு ஹாத்திம்சொல்லுகிறார் ஓ, என்னுடைய தோழன்மார்களே நீங்களிந்த மோறுவினுடையகுணம் உங்களுக்குத் தெரியவில்லையா அது எவ்விதமெனில் நான்நெருப்பிலும் வேகமாட்டேன்கற்களினாலும் சேதப்படமாட்டேன்நான் சொல்வது உங்களுக்குத் தெரியாதிருந்தால் இப்போது என்கட்டைய விழ்த்து அந்தக்குளத்தினிடமாகக் கொண்டுபோய்விடுவீராகில் இந்தமோறுவை நான் உங்களுக்கு கொடுப்பேனென்று சொல்ல அப்போதந்த தேவுகள் சொல்லும் எங்களுக்கு உன்னுடைய



மோறு வேண்டியதில்லையென்றுசொல்ல அதிலொருதேவானதுமெள்ள கண்ஜாடையாகத் தெரிவிக்கின்றதுநானுன்னை அக்குளத்தில் கொண்டுபோய் விடுவேன்இன்னங்கொஞ்சம் இரவானால் உன்னைக் கொண்டுபோறேனென்றுதெரிவிக்கவுடனேஹாத்திமும்இந்தமோறுவைஉனக்குத்தருகிறேனென்றுகண்ஜாடையாகத்தெரிவித்தார் அப்போதுபாதியிரவாகினபின்புசகலரும்நித்திரைசெய்தார்களப்போது சொன்ன தேவானது அந்தமோறுவினிச்சையால் அவன்தாங்கவில்லைகொஞ்சநேரத்துக்குப்பின்பு திடுக்கின்றெழுந்து ஹாத்திமிடமாக வந்து சொல்லுகிறான் இப்போதுன்னை எவ்விதத்திலும்அக்குளத்தினருகில்போய் விடுகிறேனென்று சொல்ல அப்போது ஹாத்திம் சொல்லுகிறார்எனக்குஅசைகிறதற்குசக்தியும்பலனுமில்லை எவ்விதமாய் இந்த கற்களையெடுத்துப்போட்டுவருவேனென்றுசொல்ல அப்போதவன் சொல்லுவான் நீ பயப்படவேண்டியதில்லை நான் என்னுடைய மந்திரபலத்தால் உன்னை வெளிப்படுத்திக்கொண்டு போகிறேன் நீ சந்தேகப்படாதேயென்று மந்திரம்படிக்கதுவக்கஞ்செய்தான் உடனே ஒரு கருந்தேவுவந்து அந்தக்கற்களில்நின்றெடுத்து இருவரையும் அக்குள்ளத்தினருகில்கொண்டுபோய்விட்டுமறைவாகிப் போய்விட்டது.

அப்போது ஹாத்திமானவர் உடுப்பைக்கழற்றி முன்னால் துவைத்து பின்பு தன்னுடைய திரேகத்தை தண்ணீரால் தேய்த்துக்குளித்து சுத்தமாகிப்போனபின் கொஞ்சந்தண்ணீரெடுத்துக்குடித்துவிட்டு அக்குளத்திலிருந்து வெளியில்வந்து தன்னுடையஉடுப்பை யுடுத்திக்கொண்டிருக்க அப்போது அந்த மந்திரக்காரன சொல்லுகிறான் ஓ, ஹாத்திமே அந்தமோறுவின் ஆசையால்உன்னை அந்தக்கற்களில் நின்றெடுத்துஇவ்விடங்கொண்டுவரும்படிக்குசெய்தேன் ஆனாலுனக்கு உண்மையாகயிருக்கும் நீ சொன்னதுபோல்சொல்தவறாமல் அந்தமோறுவைக்கொடுக்கவேண்டுமென்றுகேட்க ஹாத்திம் சொல்லுகிறார் ஆனால்நீ எனக்கு மிகுந்த உபகாரஞ்செய்தாய் நானும் உனக்குபகாரஞ்செய்வேன் ஆனாலிந்த ஷாம் அஹமர் என்பவனைக் கொன்றுஅவனுடையராஜபட்டம்உனக்கேதருவேன் அப்போது அவன்சொல்லுகிறான் ஓ, ஹாத்திமே அந்தமோறுதவிர மற்றவஸ்து யாதொன்றும் எனக்குவேண்டியதில்லை ஆனால் நீ கொடுக்கவேண்டுமானால் அந்தமோறுவை எனக்குகொடுக்கலாமென்றுசொல்ல அப்போதுஹாத்திம்சொல்லுகிறார் இந்த மோறுவானது எனது சிநேகிதனுடைய

அடையாளமாக யிருப்பதாலதை நானுனக்கு எவ்விதமாகக்கொடுப்பேனென்றுசொல்லி இந்த மோறுவானது உனக்கென்ன வேலைக்காக கேழ்க்கின்றாய் இன்னம் யாருக்காவதுகொடுக்க எண்ணுகிறாயாவென்று கேழ்க்க அப்படி நானொருவருக்குங்கொடுக்க எண்ணங்கொண்டவனல்ல எனக்காகக்கேழ்க்கின்றேனென்றுஞ்சொல்ல அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் ஓ, அறிவுகெட்டமூடனே நீ ஆண்டவனுக்காக வேண்டுமென்று நீ கேட்பாயாகில் நானிப்போதே இந்த மோறுவை உன்னிடமாககொடுப்பேனென்றுசொல்ல அப்போதவன் சொல்வான் என்னுடைய ஆண்டவன் ஷாம் அஹமரென்பவருடைய வுஸ்தாது (கும்லாக்கு)என்பவராகயிருக்கும் அவருக்காகநான் இந்த மோறுவைஎவ்விதமாககேட்பேனென்றுசொல்ல ஹாத்திமென்பவர் கேட்டு சொல்லுகிறார் ஓ, காபரே நீ ஆண்டவனுடைய படைப்பிலுள்ளவனை நீ ஆண்டவனென்று சொல்லுகிற படியால் நீ என்முன்னால் நிற்கவேண்டாமென்றதட்டி கொடுமாகப்பேசிப்போவென்றுசொல்லி ஓ, மலவூனே நீ ஆண்டவனுடைய பெருமையை அறியாதவனானபடியால்நீ ஆண்டவனுடைய பகையனாயிருக்கின்றாய் சொன்னசொல்லுக்காக உனக்கு தகுந்த தெண்டனைகொடுப்பேன் ஆனால் நீஎனக்குபகாரஞ் செய்திருக்கிறாய் அதற்காக நான் அபகாரஞ்செய்வது தருமமல்ல நீ சொன்ன தப்பிதத்துக்காக நானுன்னை ஒன்றுஞ்செய்யக்கூடாதென்று சொன்னவுடனே அப்போது அவன்சொல்லுகிறான் நீ எனக்கு மோறு தருகிறேனென்று வாக்குத்தத்துவம்பேசி இப்போது இல்லாதமுகாந்திரஞ் சொல்லுகின்றாய் ஆனாலிப்போதிந்த மோறுவை எனக்குகொடுத்தால் நலமாயிருக்கும் இல்லாவிட்டால் உன்னுடைய உயிர்போகும் படியாக இந்த குளத்தில் போட்டு அமுக்கி கொன்று போடுவேனென்றுசொல்ல ஹாத்திம் சொல்லுகிறார் ஓ, மலவூனே கெட்ட மூதேவியே நீ, மெத்தவும் பினத்தாதே இந்தமோறு என்னதாகவிருக்கும் நீ ஜுலும்செய்து எடுத்துக்கொள்வேனென்றெண்ணுகிறாய் ஆனால் நீஎனக்குபகாரஞ் செய்திருக்கிறாய் நான் சொல்வதுபோல்கேழ்ப்பாயாகில் உனக்கு இவ்வூர்பாத்துஷாவின் பட்டம் கொடுப்பேன் ஆனால்நீ ஆண்டவனொருவனென்று உண்மைகொள்வாயாகில்இன்னம் உன்னுடையமந்திரதந்திரவித்தைகளை விட்டுவிடென்றுசொன்னவுடனே அவன் மிகுந்த ஆங்காரங்கொண்டு தன்னுடையமந்திரத்தை படிக்கதுவக்கஞ்செய்தான்.



அப்போது ஹாத்திமானவரும்இஸ்மேஆஜம் படிக்கதுவக்கஞ்செய்தார் அப்போது அவன் மந்திரத்தைப்படித்து ஊதினானதினால் யாதொன்றும் நடக்கவில்லை அப்போது இஸ்மே ஆஜமுடைய பறக்கத்தால்அவன் பயந்து நடுநடுங்கி அவ்விடம் விட்டுதிரும்பிப்பார்க்காமல் ஓடிப்போய் அவ்விடத்திலுள்ள காவற் காரர் படுத்திருக்கின்ற இடத்துக்குப்போய் பார்க்கசகலரும் நித்திரைபோகின்றதைப்பார்த்து தன் உயிர்பயத்தால் ஒருவருக்கும் தெரியாமல் தானுமொரு மூலையில் பேரீயபடுத்துக்கொண்டான் அப்போது ஹாத்திமானவர் இஸ்மே ஆஜம் படித்துக்கொண்டிருக்கையில் விடியற்காலமாகி விட்டது அப்போது அவ்விடத்திலுள்ள காவற்காரர்கள்துலைப்போய் பார்க்கையில் அதில் ஹாத்திமைகாணமலிருக்கக்கண்டுபயந்து சொல்லுகிறார்கள் இப்போது நாம் ஷாம் அஹமர் இடமாய்போய் சொல்வோமாகில் நம்மை உயிரோடே விடமாட்டானென்ற அச்சத்தால் எல்லாரும் மண்ணைவாரித் தலையில் போட்டுக்கொண்டுவிசனமாக அவன் முன்பாகவந்து சொல்லுகிறார்கள் ஓ, ஆண்டவனே நாங்கள் சகலபேரும் ஹாத்திமை இரவுகாலத்தில் சுத்திக்கொண்டு படுத்திருக்கின்ற வேளையில் ஹாத்திமென்பவர் கைபாகிப்போய் விட்டானென்றுசொல்ல உடனே மிகுந்த ஆங்காரமாகி தன்னுடைய இல்முநுஜூமுகளைக்கைப் பார்த்துச்சொல்லுகின்றான் ஹாத்திம் என்பவன் அக்குனாகின்கனாயிலிருக்கின்றான் எவ்விதமென்றால்நம்முடைய காவற்காரர் (ஸர்தக்கு) என்பவன் அந்த மோறுவின்பேரில் இச்சைகொண்டு ஹாத்திமை அவ்விடம் கொண்டுபோய் விட்டிருக்கின்றான் ஆனாலவனை என்முன்பாகக்கொண்டு வாருங்கள் அவனை நான் உயிரோடே விடமாட்டேனென்ற சொல்லைக் கேட்டு உடனே அவர்கள் (ஸர்தக்கு) என்பவனை பிடிக்கப்போனார்கள் அப்போது அவன் தங்களுடைய இனத்தாரின் மூலமாகவிசாரித்தான் தன்னைப்பிடிக்க வருகின்றார்களென்றுகேள்விப்பட்டுஓட்டமாகஓடிஹாத்திமிடமாக வந்துசொல்லுகின்றான் ஓ, ஹாத்திமே உனக்கு நான் சகாயம் செய்தபடியாலிப்போது என்னுடைய உயிர் சேதப்படுத்த வேண்டி எல்லாரும் பிடிக்கவருகின்றார்கள் நானுனக்கு யாதொரு குற்றமுஞ்செய்யவில்லை ஆனால்உனக்குநன்மைசெய்துஉன்னைக்கொரேமான் கைதியிலிருந்து வெளிப் படுத்தினேன் அப்படி செய்துமெனக்கு மோறுவும் அகப்படவில்லை ஆனாலிப்போது உனக்கு சகாயம் செய்தபடியால் என்னுடைய உயிருக்கு சேதம் வந்திருக்கி

ன்றது இவ்விதமாக சொன்னமொழிகளை ஹாத்திம்கேட்டு அவன் செய்த நன்மையை நினைத்துவெழ்க்கமடைந்துநல்லதென்று அவனுக்கு நன்மொழிகளைச்சொல்லிதேறுதல்படுத்திசொல்லுகின்றார்நீஅச்சப்படவேண்டியதில்லை யாதொருசந்தேகம் நினைக்கவேண்டியதில்லை நீ செய்த நன்றியை நான்மறக்கமாட்டேனென்று சொல்லிக்கொண்டிருக்கையில் ஷாம் அஹமர் யென்பவன் தன்னுடைய மந்திரக்கணக்கால் பார்க்க ஸர்தக்குஓடிப்போயிருக்கின்றானென்றுதெரியவந்துமந்திரத்தை ஓதிக்கொண்டிருக்கஸர்தக்குயென்பவனுக்குஒருநெருப்பினுடைய கோரமான சுழல் சுத்திக்கொண்டது பயந்து ஸர்தக்கு யென்பவன்ஹாத்திமிடமாக மிகுந்தசத்தம்போட்டு சொல்லுகின்றான்நீ,இப்போது என்னுயிரைக்காப்பாற்றவேண்டுமில்லாவிட்டால் நான் வெந்து உருகிசாம்பலாகிப்போய் விடுவேனென்றுசொல்லக்கேட்டு ஹாத்திமானவர்இஸ்மேஆஜம்என்கிறதைஓதிஊதினவுடனே அந்தசுழலானதவிழ்ந்துபோய்விட்டதப்போதவர்ஸர்தக்கைபார்த்துசொல்லுகின்றார்நீ பயப்படாதேயென்பின்னால் வந்துநில்லு யாதொன்றுக்கும்அச்சப்பட வேண்டாமென்றுசொல்ல அப்போது ஸர்தக்குசொல்லுவான் ஓ, ஹாத்திமே நானிப்போது உன்னுடைய அடிமையாகிவிட்டேன் என்னை இந்தஷாம் அஹமர்யென்பவனுடையமந்திரத்தாலென்னைதப்பித்துக்கொள்ளுமென்றுசொல்ல அப்போது ஹாத்திமானவர் சொல்லுகிறார் நீயாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் அவனால் உன்னையென்னசெய்ய வல்லமை யிருக்கின்றது என்று சொல்லி ஹாத்திம் எழுந்து நின்று இஸ்மே ஆஜம் படித்துக்கொண்டுஷாம்அஹமர்இடமாகஸர்தக்கையுங்கூட அழைத்துக்கொண்டு போகையில் அப்போது ஷாம் அஹமர் என்பவன்தன்னுடைய மந்திரத்தால் பார்த்தான்ஹாத்திமும் ஸர்தக்கும் இவ்விடம் வருகின்றாரென் றறிந்து தன்னுடைய படைகளை யெல்லாம் ஒன்றாகச்சேர்த்துக்கொண்டு தன் நகரத்தைவிட்டுவெளியில்புறப்பட்டுதன்னுடைய மந்திரத்தைப்படிக்கின்றான்அப்போதுஇருந்தாப்போலிருந்து வானத்தில் நின்றும் ஒருகருமேகமானதுநெருப்பின் துளிர்களைச்சொரிந்து மின்னல்களின் வெளிச்சமும்மேகத்தின்சத்தமும்இடியையும் கண்டு ஸர்தக்கு என்னபவன் பார்த்துமிகுந்த பயங்கரமாகச்சத்தம் போட்டுக்கொண்டுஹாத்திமிடத்தில் சொல்லுகின்றான் இவ்வானத்தில் நின்று நெருப்பின துளிர்கள் விழுகின்றதுமந்திரவித்தையால் செய்துவருகின்றதாகையால் ஹாத்திமே நீர் மிகுந்தசாக்கிரதையாக



யிருக்கவேண்டுமென்றுசத்தமிட்டு சொல்லஅப்போதவர் இஸ்மேஆஜம் ஓதிவானத்தைப்பார்த்து ஊதினாருடனே நெருப்பின்மேகங்களெல்லாம் அவனுடைய் படைகளைப்போய் சுத்திக்கொண் டெரிகின்றதை ஷாம் அஹமர்என்பவனிந்த கோலத்தையறிந்து மிகுந்தவருத்தமடைந்துஹைறானாகிசொல்லுகிறான் இந்தஹாத்திமானவன்நம்மிலும் பெரியமந்திரக்காரனாகயிருக்கிறான்நம்முடைய மந்திரமானது அவன்மேலேற வில்லையென்றுசொல்லிபின்பு இன்னமொருமந்திரமவனுக்குநினைவுவந்தவுடனே அதை ஓதி ஊதநிலத்திலிருந்து ஒருபெரிய மலையானதுகிளம்பிவருகின்றதை. ஸர்தக்கு என்பவன்பார்த்துஓ ஹாத்திமே பத்திரம் இந்தமலையானதுவருகின்றதுஇது இரண்டாவதுமந்திரமென்றுசொல்ல அப்போது ஹாத்திமானவர் இஸ்மே ஆஜமை ஓதிஅந்தமலையைப்பார்த்து ஊதினார்உடனே அந்தமலையானது வெடித்து துண்டுதுண்டாகத்தெறித்து அவர்களுடையதலையின்மேலேபோய்விழுந்ததுநாலாயிரமந்திரக்காரர்களிறந்துநரகத்திற்போய்ச்சேர்ந்தார்கள்பின்பு ஒருபெரியகல்லானதுஷாம்அஹமரென்பவனுடையதலைக்குநேராக வந்ததைப்பார்த்து தன்னுடையமந்திரத்தால்அதை விலக்கிக்கொண்டான் அக்கல்லானது ஒருகாட்டில்போய்விழுந்துவிட்டதுபின்பு ஹாத்திமென்பவர் இஸ்மே ஆஜம் படித்துக்கொண்டுமுன்னால் நடக்கிறார் அப்போதுஷாம்அஹமரென்பவன் பார்த்துதான்ஹாத்திமானவர் யாதொருஅச்சமில்லாமல்வருகின்றார் என்று இன்னொரு மந்திரத்தையோதினவுடனே நாலு பக்கங்களிலுமிருந்து நாலு மலைப்பாம்ப[illegible]து வெளிப்பட்டு அவனுடைய படையில்போய் விழுந்து சகலரையும் விழுங்கிவிட்டது அப்படையில் விழுங்கினவர்கள்போக மூன்றுபேர் பிழைத்தார்கள்பின்புஷாம்அஹமரென்பவன் பின்னொரு மந்திரத்தையோதி ஊதினவுடனே விழுங்கின மலைப்பாம்பானதுகள்வந்து விழுங்கினவர்களையெல்லாம் கக்கிவிட்டுப்போய்விட்டதுபின்பந்தச் சங்கதிகளையெல்லாம்அஹமருடைய (௯௲) மந்திரக்காரர்கள்பார்த்து தங்களுடையஉயிரைதப்பிக்கொள்ளும்படிக் கோடினார்கள் அப்போது ஷாம்அஹமரென்பவன்அவர்களைச்சத்தம்போட்டுக்கூப்பிட்டு நீங்களோடவேண்டாமென்று வேண்டியதைரியஞ்சொன்னான் அவர்களதைக் கேழ்க்காம லோடினார்கள்.

அப்போது ஷாம் அஹமரென்பவன்நாம் எவ்விதமாக கூப்பிட்டபோதிலும் அவர்கள் வரவில்லையேயென்று மிகுந்த ஆங்காரத்துட

னே ஒரு மந்திரமோதினன் உடனே யோடினவர்களெல்லாம் அந்
த மைதானத்திலே மரங்களாகிவிட்டார்கள் பின்பு ஷாம் அஹம
ரென்பவன் ஒண்டியாக ஹாத்திமிடமாகவந்து நின்றுகொண்டு மந்தி
ரத்தை யோதியோதி ஊதுகிறான் அதினால் ஹாத்திமுக்கு யாதொ
ருமந்திரமு மேறவில்லையென்று மனவருத்தமடைந்து பின்னொருமந்
திரத்தை யோதி வானத்தின்பேரிலூதிமந்திரக்கையால் வானத்தில்
பறந்து கைபாகிவிட்டான் அப்போது ஹாத்திம் மிகுந்த மனவருத்த
மடைந்துகொண்டுசொல்லுகிறார்ஓ,ஸர்தக்கே இப்போது என்னசெ
ய்யவேண்டியது அப்போதவன்சொல்லுகிறான் அவன்தன்னுடையஉ
ஸ்தாது (கும்லாக்கு) மந்திரவாதியினிடமாகப்போகிறான் அவனைப்
பேர்ப்பட்டமந்திரவாதியானால் வானத்தின் சந்திரசூரிய நட்சத்திர
முதலானதுகளை உண்டாக்கினதுமன்றி அவன் ஒரு மலையின் மீ
ழாக ஒரு பட்டண முண்டாக்கியிருக்கிறான் அதில்(நாற்பதினாயிரம்)
மந்திரவாதிக ளிருக்கிறார்கள் அவன் சொல்லுகிறதாவது எவ்விதமா
னால் நானுங்களை உண்டுபண்ணியிருக்க, அவன்வாயில் மண்விழ
என்னுடைய ஆண்டவன் தினத்தை தாவாசெயயப் பட்டவனுக்கு
நாங்கள் சகலரும் வருஷத்துக்கோர்தடவை அவன்தரிசனத்துக்காக
ப்போகிறோம் அக்காபர் மிகுந்த கெட்டிமந்திரவாதியானவன் அவனு
டையவீடானது இவ்விடத்துக்கு நாறுகாதவழி தூரத்திலிருக்கிறது
அப்போதுஅவனுடையமொழிகளை ஹாத்தி மென்பவர்கேட்டுசொ
ல்லுகிறார் நீ இவ்விதமாகச் சொன்னதற்கு தோபாசெய்து ஆண்ட
வனானவன் ஒரு ஒப்புஉவமையுள்ளவனல்ல அவனுக்குச்சரியானவஸ்
துயாதொன்றுமில்லை அவன சகலவஸ்துகளையும்சகலபேர்களையும்ப
டைத்துஅதற்குதகுந்தபடி யிரணங்களும்ஆயிசும்கொடுத்துகாப்பாற்
றிஇரட்சிக்கப்பட்டவன் அவனை யொருவரும்பெறவுமில்லை அவன்ஒரு
வரையும்பெறவுமில்லை யாதொன்றிலுஞ்சேர்ந்தவனல்ல அவனில்லாத
யிட மொன்றுமில்லை யென்றுசொல்ல (ஸர்தக்கென்பவன்) கேட்டுச்
சொல்லுகிறான் அம்மா ஸதக்கன நானுண்மைகொண்டேன் இந்த
இஸ்மே ஆஜமுடைய பெருமையும் வல்லபத்தையும் பர்க்கத்தையு
ம் பார்த்தேன் மந்திரக்காரர்களுடையமந்திரமெல்லாம் எடுபட்டுபோ
ய்விட்ட தென்றுசொல்ல ஹாத்திமானவர் (ஸர்தக் கென்பவனுக்கு)
தைரியங்கொடுத்துச் சொல்லுகிறார் இப்போது நான் (கோஹே கும்
லாக்கு) மலைக்குப்போக நான் எண்ணங்கொண்டவனாயிருக்கிறேனெ
ன்றுசொல்ல அப்போது ஸர்தக்கென்பவன் சொல்லுகிறான் தங்களி



ஷ்டம் நானும் தங்களுடைய அடியனைக்கூட இருக்கிறேனென்று
பின்னுந் சொல்லுகிறான் இந்த மரங்களானது தெரிகின்றதே இது
களெல்லாம் ஷாம்அஹமரென்பவனுடையபடைகளின் ஜனங்களாக
யிருக்கும் மெய்யாக இதுவரையில் இவர்களிவ்விதமாகவே யிருப்
பார்கள் இவர்களையவன் தன்மந்திரத்தால் இவ்விதமாகச் செய்துவி
ட்டுப் போயிருக்கிறான் ஆனால் உங்களால் கூடுமானால் அவர்களை
முன்போலாக்கி தங்களோடு அழைத்துக்கொண்டு போகலாமென்ற
மொழியைக்கேட்டு ஹாத்திமானவர் கொஞ்சம் தண்ணீரெடுத்து இ
ஸ்மே ஆஜமோதி ஸர்தக்கு இடமாகக்கொடுத்து சொல்லுகிறார் பி
ஸ்மில்லாவென்று இந்தத் தண்ணீரை இம்மரங்களின்மேல் தெளி
அப்போது ஆண்டவனுடைய குறைதன்ற வல்லமையின் வேடிக்
கையைப்பாரு அதுபோலவன் தண்ணீரைக் கொண்டுபோய் அம்மர
ங்களில்தெளிக்க ஆண்டவன்திருவையா லந்த இஸ்முடைய பர்க்கத்
தினால் உடனே முன்னிருந்த ரூபம்போ லாகிவிட்டார்கள் அப்போ
தவர்கள் ஸர்தக்கென்பவனைக் கேட்டார்கள் ஓ,ஸர்தக்கே நம்முடை
ய ஷாம் அஹமரென்பவன எங்கே யென்றுகேட்க அப்போது அவ
ர்களுக்குச்சொல்லுகிறான் அவன் உங்களையெல்லாம்மந்திரத்தால்ம
ரங்களாக்கிவிட்டுதன்னுடையகுருகும்லாக்குஎன்பவ னிடத்துக்கோ
டிப்போனான் இப்போது உங்களையெல்லாம் ஹாத்திமானவர்தம்மு
டைய இஸ்மே ஆஜமென்ற ஆபத்தால் முன்னிருந்தரூபம்போலா
க்கிவிட்டார்அவர்களுடைய சங்கதிகளைத்தெரியப்படுத்துங்களெ
ன்றுசொல்ல அவர்கள் சொல்லுகிறார்கள்நாங்கள் நிலத்திலின்
றிருக்கிறோம் நடக்கவும் இரியவும்பேசவும்தாகத்தில்லாம லிருந்தது
இரேகமெங்கும் நரம்புகள்தோறும் மிகுந்த துக்கமாக நொந்துகொ
ண்டிருந்தபலனில்லின்று இந்த வல்லமைசாலியானவர் எங்களை
சவுக்கியத்தை யுடையும்படிக்கு செய்தாரென்றும் ஆண்டவன் கிரு
பைபெற்ற மிகுந்த வல்லமையாளியும் நன்மையான நடப்புள்ள பல
சாலியும் இரக்கமுள்ளவரென்றும்ஷாம் அஹமருடைய மந்திரத்தின்
மேலாகி விட்டதென்றுமசகலரும் கூடிக்கொண்டுவந்து ஹாத்திமு
டைய காலின்கீழே விழுந்தெழுந்து நின்றுகொண்டு சொல்லுகிறார்
கள் ஓ, ஹாத்திமே நாங்களெல்லாரும் ஷாம் அஹமருடைய கட்டிலக
ப்பட்டிருந்தோமானலின்றுமுதல்நாங்களெல்லாரும் தங்களுடைய அ
டிமையாகிவிட்டோம் ஆகையால் எங்கள்பேரில்மிகுந்தகிருபைசெய்

தாய் அதினால் ஆண்டவனுங்களுக்கு மிகுந்த வல்லமையும் ஸவாபும் கொடுப்பானென்று சொன்னவுடனே ஹாத்திமானவர் இஸ்மே ஆஜமோதி அவர்களின்பேரிலோத அவர்களின்மேலிருந்த மந்திரங்களெல்லாம் அவர்களைவிட்டு விலகிப்போய்விட்டது முன்னாலெப்படியிருந்தார்களோ அதுபோலாகி விட்டார்கள் அப்போது ஹாத்திமோடு சொல்லுகிறார்கள் ஓ, எங்களுடைய குதாவந்தே நீங்களெவ்விடம் போகும்படியான எண்ணங்கொண் டிருக்கின்றீரென்றுகேழ்க்க ஹாத்திம்சொல்லுகிறார் ஓ, என்னுடைய தோழர்களே ஷாம் அஹமரென்பவ னிடத்தில் எனக்கு கொஞ்சம்வேலை யிருக்கின்றது அந்தவேலை என்கைவசமாகும்வரையில் நான் யாதொருவேலை செய்யவும் பார்க்கவுமாட்டேன் அவனுடையமகளை கலியாணம் செய்ய எண்ணங்கொண்டவனாயிருக்கிறேன் ஆனாலவன்சந்தோஷமாகக்கலியாணஞ்செய்துகொடுத்தால்நலமாகும்இல்லாவிட்டாலவனைஉயிரோடேநான் விடமாட்டேனென்றுசொல்ல அப்போதவர்சொல்லுவார்கள் அவனுடையமகளைநீஎங்கேபார்த்திருக்கிறாய் அவள்பேரில் இவ்விதமாகப் பயித்தியம்பிடித்தவனைப் போலிருக்கிறாய் அப்போது ஹாத்திம் அவளைபேரில் ஆசைக்கான பயன்களெல்லாம் ஆதிமுதல் அந்தவரையில் நடந்த சங்கதிகளைத்தெரிவித்து சொல்லுகிறார் நான் அவள்பேரில் மிகுந்த இச்சையுள்ளவனாயிருக்கிறேன் அவளிடமாகச்சேருவதற்கு எவ்வளவோதுன்ப மெடுத்துக்கொண்டு இதுவரையில் வந்திருக்கிறேன்ஷா அஹமரென்பவன் என்[illegible]ருந்தஜனங்களுமகள் செய்துபோயிருக்கிறான் என்னையவன்படுத்திய[illegible]க்குறித்து நாவினால் சொல்லிமுடியாது கல்மினாலும் எழுதமுடியாது ஆனால் நான் எசானுக்காக ஆண்டவன்பாதையில் திரிகின்றவனை எவ்விதமான ஜபர் தஸ்திசெய்து அவனிவ்விடம் விட்டோடி அவனுடைய ஒஸ்தாதிடமாகப் போயிருக்கிறான் ஆனாலவனால் என்னசெய்யக்கூடும் ஆண்டவன் கிருபையால் அவனையும் அவனுடைய ஒஸ்தாதையும் இவர்களுடைய பேர் இந்தப் பூலோகத்தில்நின்று எடுபட்டுப் போகும்படியாகச் செய்வேனென்று சொல்ல அப்போதவர்கள்சொல்லுகிறார்கள் ஓ, குதாவந்தே அந்தக் கும்லாக்கென்பவன் பெரியசூனியமந்திர தந்திரங்களில்மிகுந்தவல்லமையுள்ளவன் அவனுடையமந்திரத்தைகெடுக்கவும்எதிர்க்கவும்மிகுந்தகடினமாயிருக்குமென்றுசொல்ல அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் ஓ, என்னுடைய சினேகிதர்களே நீங்களிவ்விதமாக எனக்குச்சொல்லி அச்சமடையாதீர்கள்



தைரியமாயிருந்து என்னுடைய வேடிக்கையைப் பாருங்கள் அப்படிக்கவனுடைய அச்சம் உங்களுக்கிருக்குமாகில் நீங்களிவ்விடத்திலிருங்கள் என்னோடு வரவேண்டாம் ஆனால் அந்தகும்லாக்கென்பவனும ஷாம் அஹமர் என்பவனுண்டு நானுண்டு பார்த்துக் கொள்வேனென்றுசொல்ல அப்போதவர்கள் சொல்லுவார்கள் நீங்களிவ்விதமாக எண்ணுகிறீர் எங்கள்பேரில் மிகுந்த எசான் செய்திருக்கிறீர் ஆகையாலுங்களை ஒண்டியாகப் போகும்படி செய்யமாட்டோம் நாங்களும் தங்களோடு சேர்ந்துவருகிறோம் ஆனாலவன் வெற்றிகொள்வானாகில் அப்போது நாங்களுங்களோடு திரும்பி வருவோம் நீங்களெங்கே போனபோதிலும் தங்களோடிருப்போம் இவ்விடத்திலெங்களுக் கென்னவேலையிருக்கின்றது எங்களுயிருள்ளவரையில் உங்களையொண்டியாகவிடமாட்டோமென்று சொன்னமொழிகளை ஹாத்திம்கேட்டு அப்போது அந்த மந்திரக்கார கூட்டங்களையெல்லாம் சேர்த்துக்கொண்டு கும்லாக்கென்பவ னிருக்குமிடமாக நோக்கிப்போகின்றார் கொஞ்சதூரம் போனபின்பு அவர்கள் சொல்லுகிறார்கள் ஷாம் அஹம ரென்பவன் இவ்விடத்திலிருந்து ஒருநாள் எங்களுக்கு ஒரு நாளுக்குள்ளாக அந்தமலைக்குக் கொண்டுபோய் விட்டான் அப்போதுஹாத்திம்சொல்லுவார்நீங்கள்சொல்வதுசரிதான் ஆனாலவன்தன்னுடைய மந்திரத்தின் வலுவாலே தொலைதூரத்துப்பாதையை கொஞ்சமாகச் சுருக்கி ஜல்தியில்போவான்.

அப்போதவர்கள் சொல்லுவார்கள் ஓ, குதாவந்தே நீங்களப்பேர்ப்பட்டவித்தை உங்களிட மில்லாவிட்டால் அவனை எவ்விதமாக வெற்றிகொள்வீர் ஆனாலவன் மலையை மெழுகாக்கிப்போடுவான்மெழுகை மலையாக்கிப்போடுவான் இவ்விதமாகஇவர்கள்சொல்ல ஸர்தக்கென்பவன் சொல்வான் ஓ, அறிவில்லாத பேதைகளே நீங்களென்னமொழிகளாடுகிறீர்கள் ஆனாலிவருடைய பெருமையும் வல்லமைகளையும் நான் கண்ணாரப்பார்த்திருக்கிறேன் எண்ணுவாராகில் இவரும் ஒருநாழிகையில் கொண்டுபோய்ச்சேர்க்க வல்லமையுமுண்டு கும்லாக்கனையும் ஷாம் அஹமரென்பவனையும் கைதுசெய்து தன் கைவசம்பண்ணவும் வல்லமையுண்டு ஆனாலவர்களைக் கொன்றுபோடவும் வல்லமையுள்ளவர் அவருடையபெருமையை நீங்கள் பார்க்கவில்லை ஆனாலவருக்கு ஆண்டவனுடைய காவலிருக்கின்றது அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் ஓ, எனதுபிரியமான தோழர்களே இஸ்மே ஆ

ஜமென்ற ஆயத்து எனக்குத்தெரியும் அந்த இஸ்மானது இருக்கு மிடத்தில் மந்திரதந்திர வித்தைகள் நடக்கமாட்டாது அந்த இஸ்மா னதால் மந்திரதந்திர வாதிகளைநெருப்பாகவெரித்துச் சாம்பலாக்கி விடுவார் அப்போது ஹாத்திம்கூட முந்தினபயணத்தில் போகி ன்றவழியில் ஒருயேரியானது காணப்பட்டது அவ்வேரியி னிடமாக ப்போய்ச் சேர்ந்தார்கள் அவ்வேரியினுடையசங்கதி எவ்விதமானல் அதை ஷாம் அஹமரென்பவன் அந்தவழியாகமுன்னல்போகும்போ து தன்னுடைய மந்திரத்தையோதி அவ்வேரி யிலூதிவிட்டுப் போயி ருக்கிறான் அதின்விபரந் தெரியாமல் சகலருக்கும் பசியுந்தாகமுமயி குதமாகவிருந்து அவ்வேரியினுடைய தண்ணீரைக் குடித்தார்கள்உ ட்னே அவர்களுடைய தொப்புளிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து பீரிட்டடிக்கின்றது அப்போததை ஹாத்திமானவர் பார்த்து மிகுந்த ஆச்சரியப்பட்டு அவர்களைவிட்டுவிலகாமல் சொல்லுகிறார் இவர்கள் என்னேடு வந்தவர்களாறுனபடியால் இந்ததண்ணீரைச் சாப்பிட் ட்வுடனே இவர்களுக்கிவ்விதமாக வந்திருக்கிறதென்று மனவருத்த மடைந்துகொண்டு அன்றிரவெல்லாம் அவ்விடத்திலிருந்தார்கள்ஹா த்திமானவருக்கு மிகுதமாக தாகமிருந்தது ஒருதுளி தண்ணீர் கூட அவ்வேரியி லெடுத்துக்குடிக்கவில்லை அப்போது பொழுது விடிந்த வுடனே அவர்களைப்பார்த்தால் தேகங்களெல்லாம் வீங்கி பீப்பாய் போலாகிவிட்டார்கள் அப்போதுஹாத்திமானவர் அவர்களுடைய கோலத்தைப்பார்த்துஇதென்னகாரணமென்றுயோசித்துப்பிசை ந்திமிகுந்த சலிப்பாகக் கண்ணீர் சொரிந்து ஷாம் அஹமரென்பவன் இவ்வேரியையும் மந்திரத்தால்கெடுதலேசெய் திருக்கிறானென்றுதெ ரியாது இவர்கள்பிழைக்கமாட்டார்களென்கிறதெயென்னஹாத்திமா னவர் எண்ணிக்கொண்டிருந்துபின்னும்எண்ணினர் ஆண்டவன்கிரு பையால் இஸ்மே அஜமோதி அதின் பக்கத்தை பார்க்கலாமெ ன்று யோசனைசெய்து அந்த ஆயத்தையோதி அவர்கள்பேரில் முத லொருதரமோதினவுடனே அவர்களுடையவீக்கங்களெல்லாமிறங்கிப் போய்விட்டது.

• இரண்டாந்தடவைப்படித் தாததொப்புள்களில்நின்றோடிய இர த்தங்கள் நின்றுவிட்டுநீலதண்ணீரைப்போலோடுகின்றது மூன்றாந்த டவை யோதியூதமுன்னிருந்தது போலாகிவிட்டார்கள் அப்போது எல்லவரும் ஹாத்திமானவரை மிகுதமாக வாழ்த்தி போற்றியிச்ச



மாக அவருடைய இஸ்மை பெருமையாக எண்ணினர்கள்அப்போது ஹாத்திம்கேட்டார் என்பிரியமானவர்களே இதென்னகாரணமாகயி ருக்குமென்று கேழக்க அவர்கள் சொல்லுகிறார்கள் ஆனல் எங்களுக்குதெரியவருகின்றது ஷாம்அஹமர் யென்பவன்தான்போ கையில் இந்தயேரித்தண்ணீரில்மந்திரஞ்செய்துபோயிருக்கிறனென் றுதெரியவருகின்றது அப்போது ஹாத்திமானவர் அவ்வேரித்தண்ணீ ரிலும்முதல்இஸ்மேஆஜம்ஓதிஊதினர் உடனே அந்ததண்ணீர்களெல் லாம் பொங்கிக்கொண்டிருந்து இரண்டாவது தடவை ஓதி யூத கரு நிறமானது பின்பு பச்சைநிறமாகி நீலநிறமாகிவிட்டது மூன்றாந் தடவை யோதியூத எப்போதும்போல் நல்ல நிறமுள்ள தண்ணீரை ப்போல் தெளிவாகிவிட்டது அப்போது ஹாத்திம் எண்ணினர் இவ் வேரியிலிருந்த மந்திரத்தின் வித்தையானது விலகிவிட்டதென்று அ ந்த தண்ணீரில் கொஞ்சமெடுத்து தான் குடித்துபின்புசகலருக்கும் உத்தரவுகொடுத்தார், நீங்களனைவரும்இந்தண்ணீரைக்குடித்து குளி யுங்கள் அவன்செய்த மந்திரத்தினுடைய வெப்புகளெல்லாம் போய் விடுமென்றுசொன்னசொற்போல்எல்லோரும்செய்தார்கள்அப்போ து சகலரும் ஹாத்திமுடைய பேரில் உறுதிகொண்டு சொல்லு கிறார்கள்.

ஆ, ஆண்டவனே நாங்களனைவரும் உங்களோடுசேர்ந்துக்கொ ண்டு ஷாம்அஹமர் கும்லாக்கு இவர்களோடு சண்டைசெய்வோமெ ன்றுசொல்லிக்கொண்டு முன்னல் நடக்கின்றர் அப்போது ஷாம் அஹமர் என்பவனிவர்கள்வருகின்றதைப்பார்த்து பயந்துநடுங்கி உடுப்பொன்று முடித்தாமலும் காலில்யாதொன்றும் போடாமலும் வெற்றுடம்பாகஓடி தன்னுடைய ஓஸ்தாதானவன்வீட்டுவாசற்படியி ல்போய்நிற்கஅவ்விடத்துகாவற்காரர்கள் கும்லாக்குமுன்பாகப்போ ய் கைகட்டிவாய் புதைத்துக்கொண்டுசொல்லுகின்றார்கள்ஒருபோ தும் வழக்கமில்லாமல் ஷாம் அஹமர் என்பவர் உடைகள்உடுத்தா மலும் காலில்ஜோடுபோடாமலும்வெற்றுடம்பாகதங்களுடையதெரு க்கடையில் வந்து நிற்கின்றரென்றுசொல்லஉடனே கும்லாக்கென்ப வன் உள்ளே யழைத்து கழுத்தோடணைத்துக்கொண்டு கேழ்க் கிறான் என்னுடைய பிள்ளையேயுன் நீ இவ்விதமாகவந்தா யெ ன்றுகேழ்க்க அப்போது சொல்லுகிறான் என்னுடைய மலையில் ஒருவாலிபனை ஹாத்திமென்பவன் பெரியமந்திரக்காரன் எவ்வி

டத்திலேயோயிருந்துவந்திருக்கிருன் என்னையிக்கோலம்செய்துவிட்
டான் அம்மொழியைகும்லாக்குகேட்டுஆங்காரத்துடனே கண்களில்
நெருப்பெழச்சொல்வான் மகனே நீ யாதொன்றுக்குமஞ்சாதே இப்
போது உன்முன்னுலவனைஎவ்விதமாகச்செய்துஉன்வசத்திற்கொடு
க்கிறேனென்று அவனுக்குவேண்டியதைரியஞ்சொல்லிவிட்டுஅவன்
ஒருமந்திரம்படித்து தன்னுடைய மலையின் பக்கமாகஊதினன் உட
னே ஒருநெருப்பானதுதோணப்பட்டு அந்தமலையைவந்துசுத்திவளை
ந்துமூடிக்கொண்டது அப்படியிருக்கஹாத்திமென்பவர் மூன்றுநான்
கு தினத்திற்குப் பின்பு கும்லாக்கென்பவனுடைய எல்லையில்வ
ந்து சேர்ந்தார்அப்போதுதன்னேடிருக்கப் பட்டவர்கள் ஹாத்திமு
டையமுன்பாகவந்துநின்று கொண்டுசொல்லுகிறார்கள்கோஹேகும்
லாக்கென்றது இதுவாகயிருக்கும் அதைசுத்திய நெருப்பானதுமந்தி
ரத்தாலாக்கியிருக்கின்றனென்றுசொல்ல அப்போதுஹாத்திமானவ
ர் அவ்விடத்திலிருந்துகொண்டு இஸ்மேஆஜமென்பதை ஓதி அந்தம
லையைப்பார்த்துஊதினார்அப்போது அவ்விடத்திலுள்ளநெருப்பெல்
லாம் அணைந்துபோய் விட்டது இச்சேதியானது கும்லாக்குயென்
ற மந்திரக்காரனுக்கு தெரியவந்து பின்பொரு மந்திரத்தைபடித்து
ஊதினன்அந்தமந்திரத்தினுடையபலத்தால் அந்தமலையையொரு வி
சாலமான சமுத்திரமானது வந்து சூழ்ந்து ஜனத்தை யவாவிக்
கொண்டு அலைகள் அடிக்கும்படியாகஹாத்திமிடமாகவருகின்றது
அப்போது எல்லாரும் ஹாத்திமிடமாகச்சொல்லுகிறார்கள்.

ஓ, குதாவந்தே இந்தசமுத்திரமானது மந்திரத்தாலாகி வருகின்
றது இப்போது நாம் எல்லோரும் முழுகி கண்ணுக்குகாணமல்போ
கும்படியாகவந்துநேரிட்டிருக்கின்றதுஎன்றுபயந்தார்கள்அப்போது
ஹாத்திம்சொல்லுகின்றார் ஓ, என்னுடையபிரியமான துணைவர்களே
நீங்கள் பயப்படாதீர்கள்ஆண்டவன்நமக்குஉதவியாகயிருந்துநம்மை
காப்பாற்றுவா னென்று தைரியப்படுத்தி நீங்கள் ஆண்டவன்பேரில்
பாரம்சாட்டி அவனை நினைத்துக்கொண்டிருங்களென்றுஹாத்திமான
வர் இஸ்மே ஆஜமென்ற ஆயத்தைஓதிஅந்தசமுத்திரத்தைப்பார்த்து
ஊதினருடனே அந்தசமுத்திரமானது காற்றைப்போல்பறந்து வெ
ருநிலமாகிவிட்டது அப்போது ஹாத்திமிடமாகயிருந்தவர்கள் இவ்வ
ல்லமைசாலியைவெல்ல ஒருவராலும் கூடாதென்றெண்ணி யிருந்
துஇனியென்ன வருகின்றதோஅதையும்பார்க்கலாமென் றிருக்கின்



றவேளையில் கும்லாக்கென்பவன் இன்னொரு மந்திரமோதி ஊதின
னப்போது கனமானகற்கள் பத்துமணங்கு இருபதுமணங்கு பாரமு
ள்ளதுவந்துவிழுந்ததில்முன்னிருந்தமலையைச்சுத்திபெரும்மலையாகி
ப்போய் கண்ணால் பார்க்ககூடயில்லாமல் நிரம்பிப்போய்விட்டது
இந்தாக்கதியைப்பார்த்து ஹாத்திமானவர் இஸ்மே ஆஜமைப்படித்
தூஓதி அந்தமலையைப்பார்த்துஊதினார்உடனே ஒருபெரியகாற்றான
துவந்துஅக்கற்களெல்லாம்கண்ணில் காணமற்செய்துவிட முன்
னிருந்தகோஹேகும்லாக்குயென்றமலைதெரியவந்தது அப்போதுஹா
த்திமானவர் முன்னால் தன்னுடைய கூட்டத்தைசேர்த்துக்கொண்டு
நடக்கின்றார் அப்போது அவன்பார்த்து பின்னொருமந்திரத்தைபல
மாக உருப்படுத்தி ஊதினன்தானும் தானிருக்கின்ற மலையானதும்
இவர்களின் கண்பார்வையால் நின்று கைபாக்கிவிட்டான் அப்போது
ஹாத்திமிடமாகச்சொல்லுகிறார்கள்கும்லாக்குயென்பவன் தன்மந்தி
ரத்தாலந்தமலையை கைபாக்கிபோட்டிருக்கிறனென்றுசொல்ல அம்
மொழியை ஹாத்திம்கேட்டுஅவ்விடத்திலிருந்துகொண்டு இஸ்மேஆ
ஜம் ஓதிஊதினார்ஆண்டவன்கிருபையால்(உ)(ரு)தினத்துக்குப்பின்பு
அம்மலைதோற்றியதுஹாத்திம்எழுந்துநின்றுபார்த்துதங்களுடையகூ
ட்டத்தைசேர்த்துக்கொண்டுஅந்தமலையின்மேலேறினார் அவ்விடத்தி
லிருந்தமந்திரவாதிகளும்பார்த்துமிகுந்தசத்தம்போட்டுசொல்லுகிறார்க
ள்நாம்இவ்வளவு உபத்திரவங்களெல்லாம்செய்தும்அதுகளையெல்லா
ம்தப்பித்துக்கொண்டு யாதொருகுற்றமில்லாமலிந்தமலையின்மேல்சம
ர்த்தாகவந்தேறினனென்றுகும்லாக்கென்பவன்கேள் விப்பட்டுதாஹ்
ம்ஷாம்அஹ்மர்யென்பவனும்தன்னுடையஎல்லாப்படைகளையும்சேர்
த்துக்கொண்டு (ருங)காதவுயரத்திற்போய்தன்மந்திரத்தால்செய்தவா
னத்திலிருந்துகொண்டான் அப்போது ஹாத்திம்பார்த்துநம்மைதடங்
கல் செய்பவர்கள் யாதொருவருமில்லை யென்கிற அச்சமில்லாமல்தா
னும் தன்னுடைய கூட்டத்தார்களுடனே அந்தப்பட்டணத்தில்போ
சேர்ந்து பார்த்தால் பட்டணமானதுமிகுந்தசிறப்புள்ளதாகவும்பெரி
தாகவும்மஹால்கள்மெத்தைகளுடையபெருமைகளையும்சிங்காரத்தை
யும் இவ்விதமென்று வர்ணிக்கக்கூடாது அந்த மஹால்களில் உள்நு
ழைந்துபார்த்தால் விதவிதமான நவரத்தினங்களாலிழைத்திருக்கின்
றதட்டுகளான சாமான்களை இன்னவிதமென்றுசொல்லக்கூடாது எவ்
விடம் பார்த்தாலும்வீடுகளில் கற்களைப்போலரத்தினங்கள் குப்பல்
குப்பலாக குவித்துக்கிடக்கின்றதொழிய இன்னும் பதார்த்தங்களும்

மிட்டாய் தினுசுகளும் இன்னமனேக விதவிதமான வஸ்துகள் நிறைந்திருக்கின்றது.

ஆனாலவ்விடத்திலொருமனிதனையாவது காணவில்லை அப்போது ஹாத்திமானவர் அக்கோலத்தைப்பார்த்து தங்களோடுவந்தசனங்களைப்பார்த்துச்சொல்லுகிறார் எவ்விதமானால் இவ்விடத்திலுள்ளமனிதர்களெல்லாம் எவ்விடம்போயிருக்கிறார்களென்று கேழ்க்க அப்போதவர்கள் சொல்லுகிறார்கள் ஓ, குதாவந்தே தங்களுடைய பயத்தால் ஷாம் அஹமரென்பவன் தன்னுடைய படைகளுமாகத்தான்மந்திரத்தால் உண்டுபண்ணியஸ்தானத்தில்போய்ச்சேர்ந்திருக்கிறான் அப்போது ஹாத்திமானவர் அம்மொழியைக் கேட்டவுடனே குஞ்சிரிப்புகொண்டு சொல்லுகிறார் ஓ, என்னுடைய துணைவர்களே நீங்களேன் பசியாலும் இளப்பாலும் வீணாக உங்களுயிரைப்போக்கிறீர்கள் ஆண்டவன் உங்களுக்கு நியாமத்தைக்கொடுத்திருக்கும் போது நீங்கள் ருசிகரமாக இந்த நியாமத்தான வஸ்துகளைப் பொசித்து ஆண்டவனுக்காக ஸஜ்தா ஷுக்குரானா செய்யுங்களென்று சொல்ல உடனே அவர்கள் மிகுந்த பசியாலும் இளப்பாலுமிருந்தபடியால் தடங்கலில்லாமல் பொசிக்க ஆரம்பஞ்செய்தார்கள் எல்லோரும் பசியாறினபின்பு அவர்களுடைய தேகமெல்லாம்வீங்கிப்போய் மூச்சுமில்லாமல் பேஹோஷாகிகிடக்கிறார்கள் அவர்களுடைய மூக்கினால் இரத்தம் பீறிட்டோடுகிறது அப்போது ஹாத்திமானவர் இந்த கோலத்தைப்பார்த்து என்னுகிறார் இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது அந்த ஜின்னியானவன் இந்த தின்னும் பதார்த்தங்களிலும் மந்திரஞ்செய்திருக்கிறானென்று கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரும்படிக்குத்தரவுசெய்து அதில் இஸ்மே ஆஜத்தையோதி அத்தண்ணீரினூதி சகலருக்கும் கொடுக்கும்படிக்கு செய்ய உடனே அம்மந்திரவிஷமானது எடுபட்டுப் போய்விட்டது அப்போது ஹாத்திமானவர் அந்த தின்னும்படியான நியாமத்துகளின்பேரிலும்இஸ்மே ஆஜமையோதியூதி சொல்லுகிறார் ஓ, என்னுடைய தோழர்களே நீங்களிப்போது யாதொரு தடங்கலில்லாமல் பசியாறலாம் அதிலிருந்த மந்திரவிஷமெடுபட்டுப்போயிருக்கிறதென்றுசொன்னவுடனேயாவருமதை வயிறுநிறையப்பொசித்தார்கள்பின்பு ஹாத்திமானவர் அவர்களோடுகேழ்க்கிறார் (ஜாது) என்றமந்திரவானம் எவ்விடமிருக்கிறதென்றும் கேழ்க்கஅப்போதவர்கள்சொல்லுகிறார்களெவ்விதமானால் அவ்வான-



மானது இந்நிலத்தில்காற்றின்மேலாகஅது ஒருகும்பஜ்போல்தோற்றியதென்றுஞ்சொல்லஉடனேஹாத்திமானவர் அவ்விடத்தைநோக்கி இஸ்மேஆஜமென்றபெருமைபெற்ற ஆயத்தையோதியூதினவுடனே அந்தமந்திரகும்பஜானது துண்டுதுண்டாக அம்மலையின்பேரில் விழுந்தது அதிலுள்ளமந்திரக்காரர்கள் இறந்துநரகவாதிகளாகிப்போனார்கள் ஆனால் ஷம்லாக்கும்ஷாம் அஹமரென்பவனும் தப்பித்துமலையின்மேல்விழுந்துநாற்பக்கமோடுகிறார்கள் அப்போது அவர்களோடுகிறதைஹாத்திமானவர்பார்த்து இஸ்மேஆஜமைபடித்துக்கொண்டுபின்னால் நடக்கையில்ஹாத்திமை அவர்கள்பார்த்துபயந்து அச்சமடைந்து இருவர்களும்மலையிலிருந்துகீழேவிழுந்து பொடி பொடியாகயிற்று விழுந்துபோனார்கள் அப்போதுஹாத்திமானவர்பார்த்து மிகுந்தசந்தோஷமாகி ஆண்டவனை வாழ்த்திப்போற்றிஸஜ்தா ஷுக்குரானாதொழுது ஸர்தக்கென்பவனைஹாத்திம்பார்த்துசொல்லுகிறார் முன்னால் நானுன்னிடமாகவாய்தாசெய்திருந்தேன்ஷம்லாக் கென்பவனைக்கொன்று அவனுடையபாத்துஷா தனத்தை உனக்குக்கொடுப்பேனென்று சொன்னேனே அதுபோலவனுடைய சீமையும் பாத்துஷாத்தனமும் இப்போது உனக்குத்தருகிறேனென்றுசொல்லி ஆனால்நீஆண்டவன் ஒருவனென்றெண்ணி அவனைவணங்கி தொழுக வேண்டும் யாதொருவஸ்துவையும் அந்த ஆண்டவனுக்கு இணையாகவைத்து தொழுகவேண்டாம் நீ இரவும்பகலும் ஆண்டவனுடைய அச்சத்தை மனதில் வைத்துக்கொண்டு நெறிநீதியில்யாதொருகுற்றங்குறைவில்லாமல் உன்னுடைய தேசத்திலுள்ள சனங்களுடைய மனதுகள் கலங்கும்படியாக வருத்தத்தைக் கொடுக்காதே அப்படிக்குநீ வருத்தங் கொடுப்பையானால் உன்னுடைய பாத்துஷாத்தனமழிந்து போகுமென்று பலபல அறிவுகளை போதனைசெய்து பின்பு அவ்விடத்திலுள்ளவர்களுக்கும் தம்மிடத்திலிருந்த மந்திரக்காரர்களையும் அழைத்துச் சொல்லுகிறார்.

அது எவ்விதமானால் ஓ சனங்களே இந்த பாத்துஷாத்தனம் ஸர்தக்கென்பவருக்குகொடுத்திருப்பதால் நீங்களனைவர்களும் உண்மைகொண்டு அவருத்தரவுபோல் நடக்கவேண்டியது பின்னும் நீங்களுடைய கெட்டநடப்பானகுணமானது ஆண்டவன்படைத்தவஸ்துகளை வணங்கி தொழுகாமல் என்னாளும் ஆண்டவனை நாடி நிச்சயப்படுத்திக்கொண்டு தொழுகவேண்டும் இன்னுநீங்களுடை-

யகெட்டசெயலானமந்திரவித்தைகளையெல்லாமனதில்நின்றுஅகெ
டுத்துவிடுங்கள்ஏனென்றாலதுபிசாசுகளின்வேலைகளாகயிருக்கும் அ
தினால் நீங்களொன்னநன்மைசெய்தபோதிலுமது உங்களுக்குநன்மை
யும்பலனுங்கொடாதுநீங்கள்ஷைத்தானோடுநரகத்தில் போயிருக்கும்,
படிக்கு ஆண்டவன் தெண்டனைசெய்துவிடுவான் இன்னம்பலபல
அறிவுகள்ஹாத்திமானவர் சொல்லி ஷாம் அஹமருடையமகள்ம
லிக்காஜறீன்போஷுடைய தேசத்துக்குப்போகிறேன்நீங்கள்சகலரு
ம் யாதொரு குற்றம் குறைவில்லாமல் சந்தோஷமாக யிருங்களென்
றுசொல்ல அப்போதவர்கள் சொல்லுகிறார்கள்நாங்களும் தங்களோ
டெவருவதற்கு மிகுந்த சந்தோஷமென்றுசொல்லி எங்களுடையவாக்
கைஎப்போதும் மீறோமென்றுசொல்ல நல்லது நீங்களென்னோடுநீ
ளிவருத்த மெடுத்துக்கொண்டுவரவேண்டாமென்றுஅவர்களிடமாக
உத்தரவுபெற்றுக்கொண்டுமலிக்காஜறீன்போஷுடைய மஹாலைநோ
க்கி வருகின்றார் சிலநாள்நடந்து பின்பு அவ்விடம்போய்ச்சேர்ந்
து பார்க்கும்போது அவ்வேரியையும் அதிலிருந்த தண்ணீரையுங்கா
ணாமல் முன்னிருந்தவிருட்சமானதுமிகுந்தபச்சைநிறமுள்ளதாகயி
ருக்கக்கண்டார்ஆனால் அவ்வேரிக்குப்பதிலாகஒரு அழகாகிய விஸ்
தாரமான ஒளிவு பிரகாசப்பொருந்திய மஹாலிருக்கக் கண்டுஹா
த்திமானவர் அந்த மஹாலின் வாசற்படியில் போய்நின்று அவ்வி
டத்திலென்ன பார்க்கிறாரானால் மலிக்கா ஜறீன்போஷும் அவளோ
டிருந்த பரிகளும் கை கட்டிக்கொண்டு மிகுந்த அதபாக நிற்கிறதை
ப்பார்த்து ஹாத்திம் மிகுந்த சந்தோஷமாக நிற்கின்றார் அப்போதவ
ர்களில்நின்று ஒருபரி அவரிடமாக வந்துகேழ்க்கிறாள் ஓ, மனிதனே
நீயார்நீஎவ்விடத்துக்குவந்தாயென்றுகேழ்க்கஹாத்திம்சொல்லுவார்
என்னை யறியமாட்டீர்களானாலும்உங்களோடு இம்மாத்தில் தொங்கி
க்கொண் டிருந்தவனல்லவா வென்று சொல்லி என்னுடைய சலாம்
உங்களுடைய மலிக்காவுக்குப்போய் சொல்லுங்களென்று சொன்ன
மொழியைக்கேட்டு அவர்களிலொருபரி மலிக்காவிடத்தி லோடிப்
போய்ச் சொல்லுகிறாள் அது எவ்விதமெனில் ஓ, என்னுடைய ரா
ஜாத்தியாகிய மலிக்காவே ஹாத்திமென்றுபேருள்ள ஒரு வாலிபன்
முன்னால் நம்முடைய கூட்டத்தில் மிகுந்த வருத்தமும் துன்பமும
டைந்துகொண் டிருந்தவன் இப்போதுபார்த்தால் மிகுந்த சந்தோஷ
மாகவந்து நம்முடைய வாசற்படியில் நிற்கின்றானென்ற சொல்லை
க்கேட்டு மலிக்கா ஜறீன்போஷென்பவள் தலையைக்கீழாகசாய்த்து ஒ



கொண்டு கொஞ்ச நேரம்பொறுத்து தலையையுயர்த்தி பார்த்துச்சொ
ல்லுகிறாள் அந்த வாலிபன் இன்றைவரையில் எவ்விடம்போ யிருந்
தார் அல்லதுகோஹே அஹமரென்றமலைக்குப்போனார்போல் தோற்
றுகின்றதுஅல்லது நீஜல்இயிலவரிடம்போய்சங்கதிகளைவிசாரித்துவா
வென்றுசொல்ல உடனே அப்பரியானவள்ஹாத்திமிடமாகவந்துகேழ்
க்கின்றாள் ஓ, ஹாத்திமே கோஹே அஹமருடைய சங்கதியுனக்குத்
தெரியுமானால் அந்தசங்கதிகளை எனக்குச்சொல்லென்றுகேழ்க்கஅப்
போது ஹாத்திம்சொல்லுகிறார் மலிக்காஜறீன்போஷுடையதகப்பனா
னவன் காபராகவிருந்தான் அவனுடையகெட்டசெயலால்வெட்டுண்டு
(ஜஹன்னம்)என்றநரகத்துக்குப்போய்சேர்ந்தானென்றுசொல்லிமற்
றசங்கதிகளைமலிக்காஜறீன்போஷிடமாகச்சொல்வேனென்றுசொல்
ல அப்போதவள்மலிக்காவிடம்போய் ஹாத்திமானவர்சொல்லியமொ
ழியைப்போல் தெரிவிக்க அச்சேதியை அவள் கேட்டு மிகுந்த துக்க
த்துடனே மனவருத்தமடைந்து கண்ணீர்சிந்த அழுகின்றாள் அப்
போதந்தப் பரியானவள் மிகுந்த ஆயாசப்பட்டு மலிக்காவுக்குவேண்டி
யதேறுதலைசொல்லி பின்னுஞ் சொல்லுகின்றாள் ஓ, மலிக்காவே நீ
உன் தகப்பனால் பட்டபாடுகளைநினைக்காமல் அவனுக்குக்காகவிசனப்
படுவது லோகத்துக்கும் ஆண்டவனுக்கும்பொருத்தமாக யிருக்குமா
ஆனாலவன்செய்தகொடுமையானகோலத்துக்கு தகுந்தபடி அவனுக்
குவந்துமுடிவாகிப்போய்விட்டதுஇப்போது அவனிறந்துபோனபடி
யால்தாங்களும்நாங்களும்அவனுடையகொடுமையில்நின்று விலகியி
ருக்கிறோமென்று பலபலமொழிகளை தெரியச்சொல்லி பின்னுஞ்சொ
ல்லுகிறாள் தாங்கள்ஹாத்திமென்னும்வாலிபனை அரண்மனைக்குள்ள
ழைத்துப்பேசவேண்டிய சங்கதிகளைப்பேசினால்நலமென்றுசொல்ல
மலிக்காவென்பவள் தன்னுடையதுக்கத்தையெல்லாம்நீக்கிவிட்டுதன
துமஹாலை சிங்காரிக்கச்சொல்லி தம்முடையசிம்மாசனத்தில்வந்திரு
ந்துகொண்டுதன்னுடையதோழிப் பெண்ணாகியபரியென்பவளைக் கூ
ப்பிட்டு அவரையழைத்து வாருங்களென்று சொல்ல உடனே அப்ப
ரியானவள் சுருக்காபோடிப்போய் ஹாத்திமை அழைத்துக்கொண்டு
வர மலிக்காவை பார்த்தவுடனே சுத்தமாறி கீழே விழுந்துவிட்டார்
அப்போது மலிக்காவென்பவளும் ஹாத்திமைப்பார்த்து சொரனைத
ப்பிமயங்கி தலையைக்கீழே போட்டுக்கொண்டாள் பின்பு கொஞ்சநே
ரஞ்சென்று உஷாருகி யெழுந்து சிம்மாசனத்தி லிருந்திறங்கிஹா
த்திமிடமாகவந்திருந்து பன்னீரைக்கொண்டு திரேகமெல்லாந் தெ

ளிக்க ஹாத்திமானவர் மயக்கந்தெளிந்து மஷிக்காதன்னருகி லிருப்பதைப்பார்த்து (இஷ்க்குனுடைய)சமுத்திரத்தில் மூழ்கிஆசையென்ற வெள்ளம்பெருகி தேகமெல்லாம் பூரித்து சந்தோஷமடைந்திருக்க அப்போதுமஷிக்காவென்பவள்ஹாத்திம்கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு தன்னுடையசிம்மாசனத்தில் உட்காரவைத்து தானுமிருந்துகொண்டு தன்னுடையதகப்பனுடையவரலாற்றை கேழ்க்கிறாள் அப்போது ஹாத்திமானவர் எல்லாவர்த்தமானங்களும் ஆதிமுதலந்தவரையில்எல்லாந்தெரிவித்துசொல்லுகிறார். ஓ,மஷிக்காவே உனக்காகவேண்டிநானிவ்வளவுதுன்பமெல்லாமடைந்தேன் ஆனால்இப்போது நீ என்மனம்போல் என்னைசந்தோஷப்படுத்தவேண்டும் நான் பட்டபாடுகளெல்லாம்வீணாகப்போகாமல் என்னுடைய பிரியாதை மனங்கொண்டுகேட்டு தங்களுடையதபவாலும் பிரியத்தினாலும் என்னுடைய எண்ணத்தை நிச்சயப் படுத்தவேண்டியது இவ்விதமானமொழிகளைக்கேட்டு மஷிக்காவென்பவள்தன்தலையைக் குனிந்து கொண்டாள் அப்போது தோழிப் பெண்கள் சொல்லுகிறார்கள் ஓ, எங்களுடைய ராஜாத்தியே நீ யாதொன்றுக்கும் சந்தேகப்பட வேண்டாம் இவரைப் போலொத்த வல்லமைசாலி இவ்வுலகத்தில் இன்னொருவன் பிறக்கவும் போறானா இவருடைய கிருபையினால் நம்முடைய இடுக்கங்களும் வருத்தங்களும் நிவர்த்தியாகி விட்டது ஆனாலவர் உனக்காகவேண்டி லோகத்தில் படாத்துன்பங்களெல்லாமெடுத்துக்கொண்டார் ஆகையாலவருடைய எண்ணத்துக்கு யாதொரு குறைவுவராமல் நீங்கள் நடக்கவேண்டியது ஆனாலவர் மற்றவரைப்போலொத்தசொல்பமனிதனல்லநீயும் பாத்துஷாவுடையமகள் அவரும் எமன்தேசத்து பாத்துஷாவுடைய மகனாயிருக்கிறார் ஆகையாலுனக்கு தகுந்தஜோடு ஆண்டவன் கற்பித்தபடியால் அவரிவ்விடம் வந்துசேர்ந்தார் உன்னுடைய நசீபு நலமாக யிருக்கின்றது.

ஆகையால் எவ்விதத்திலும் நீங்கள் அவரைகலியாணம்செய்து கொள்ளவேண்டியது மகாபெருமையாக உங்களுடையகீர்த்திலோகத்தில் உண்டாகும் நன்மையாகயிருக்கும் ஆனால் தங்களுடையதகப்பனிறந்துபோன்விசனத்தை விட்டுவிடுங்கள் அவன்பொல்லாத சூனியமுமந்திரமுமுள்ளவன்லோகத்தில்அவனுடையஅச்சமும்பயமுமெடுபட்டுப்போய்விட்டது அவனிறந்துபோனது எல்லோருக்கும்நன்மையாயிருக்குமென்று இவ்விதமாகப்பலமொழிகளை மஷிக்காவுக்குதோ



ழிப்பெண்கள் சொல்லஅவள்வெட்கப்பட்டு சிம்மாசனத்திலிருந்து கீழிறங்கிதனதுமஹாலினுள்ளிருந்துகொண்டுதம்முடையமுஜாவிசிலிருப்பவர்களையழைத்துஉத்தரவு செய்தாள்நீங்கள்கலியாணத்துக்காகவேண்டியசாமான்சேகரம்செய்யுங்களென்றுஉத்தரவுமஷிக்காகொடுக்க அதுபோலவர்கலியாணத்துக்காகவேண்டியசாமான்களெல்லாம்தயார்செய்துதங்களைச்சேர்ந்தவர்களையழைத்துபலபலவிதமானபுலாவுகள் சமைத்து சகருலம்சந்தோஷமாய்புசித்தபின்பு (எ)நாள்வரையிலனேகவேடிக்கை ஆடல் பாடல்களுடனேவெகுவிநோதசிங்காரிப்பு மஷிக்கா சிங்காரித்து தங்களுடையநடவடிக்கைபோலேமுநாள் இரவும்பகலுமாகசடங்குசாஸ்திரம்செய்தாள்எட்டாநாள்ஒன்பதாநாளிரவில் ஹாத்திம்தம்முடையவழக்கம்போலமஷிக்காஜாதின்போஷ்என்பவளை நிக்காசெய்தபின்பு பெண்ணுந் தானு மாகப் படுக்கை யிடத்துக்குப்போ யிருவரும் கூடி சந்தோஷமென்ற சாகரவெள்ளத்தில் மூழ்கி ரதிகேளிக்கையாக ஹாத்திமென்பவர் மஷிக்காவென்றராஜாத்தியோடு மனமகிழ்ச்சியாக விளையாடிக்கொண்டிருக்கையில்உடனே ஹாத்திமானவர் முனீர்ஷாமி யென்ற ராஜகுமாரனை நினைத்தார் உடனே ஒருதரம் ஆண்டவனுடைய அச்சமானது மனதில் வந்து நேரிட்டது அப்போதுபயந்துநடுநடுங்கிகளின்முன்னைபோலநடுக்கலெடுத்து மஷிக்காவைப்பாராமல்முகந்திருப்பியிருக்கின்றவேளையில்மஷிக்காவென்பவள் பார்த்து மிகுந்த விசனமடைந்து என்னுகின்றாள் ஹாத்திமானவர் என்னிடத்திலென்ன குற்றத்தைக்கண்டு இப்பேர்ப்பட்ட சந்தோஷமானவேளையில் என்னைவிட்டு ஒதுக்கியகாரணமென்னவென்றுகேட்பதற்கு சங்கைப்பட்டு யாதொன்றும் கேழ்க்காமல் மிகுந்தவிசனமாக இருக்கின்றவேளையில் ஹாத்திமானவர் மஷிக்காஜாதின்போஷுடைய முகம்வேறுபட்டுசோர்ந்துவாடியிருக்கின்றதைப்பார்த்து சொல்லுகின்றார் ஓ, என்னுடைய ஆசைக்குகந்த பெண்கள் நாயகியாகிய என்னுடைய கண்மணியே நீ முகஞ்சோர்ந்துவாடி விசனப்படுவது என்னுடைய ஆசையில் நின்று எவ்விதமான துக்கம் உனக்கு நேரிட்டது என்னுடைய சந்தேகத்தால் நீ இவ்விதமா யிருக்கின்றாய் ஆனால் சந்திர சூரியனிலும் குற்றமிருக்கின்றது நீ அதில் நின்று யாதொருகுற்றமில்லாமலிருக்கின்றாய் நான் ஆண்டவனுடைய பாதையில்அன்னியர்க்குசகாயஞ்செய்யத்துணிந்துஇடுப்புகட்டிக் கொண்டு என்னுடையவீட்டிலிருந்து முனீர்ஷாமி என்பவனுக்காக புறப்பட்டிருக்கின்றேன் அவன் ஹசன்பானூ வென்பவளுடையது

ஷக்காகயிருக்கின்றாள் அந்தப்பெண்ணானவள்(ஏ)சவால்கள்சொல்லு
கின்றாள் அதையாதாமொருவன் அவ்வேழுசவால்களை அவளுக்குதெ
ரியப்பட அறிந்துசொல்வானாகில் அவனை நிக்கா செய்துகொள்வேனெ
ன்றிருக்கின்றாள்.

அப்படியிருக்கஇந்தமுனீர்ஷாமியென்பவன் அவளுடையசவால்
களில்நின்றுஒன்றாவது சொல்லஅவனால்கூடவில்லை ஆகையாலவனை
ஹசன்பானுவென்பவள் தனது பட்டணத்திலிருந்து துரத்திவிட்
டாள் அவன் அழுதுகொண்டு காடுகள்தோறுந்திரிந்து எமன்தேசத்
தின் காட்டில் வந்துநிற்கையிலப்போது நான் என்னுடையஊரைவி
ட்டு ஒருநாள் வேட்டையாடிக்கொண்டு புறப்பட்டு அவ்விடம் போ
கையில் அவனுடைய மிலாகத்துயெனக்காச்சுது அவனுடையசங்க
தியைக்கேழ்க்க அவன்பக்கீர்களைப்போல்தன்னுடையசங்கதிகளையெ
னக்கு தெரியபடுத்தினான் அவனுடையதுக்கமானசேதியெனக்குதெ
ரியவந்தது என்னுடைய மனமானது அவனுடைய வருத்தத்தைக்
கேட்டு மிகுந்த இரக்கமாகிஎன்னால்பொறுக்கக்கூடாமையாகிவிட்ட
து பின்பு அவனையழைத்துக்கொண்டுஷாஹாபாதென்ற பட்டண
ம்போய்ச்சேர்ந்துஹசன் பானுவுடையசவால்களை நான் கேட்டுக்
கொண்டுஅந்தமுனீர்ஷாமியென்பவனை காரியவான் ஸஹுவென்றசத்தி
ரத்தில் வைத்துவிட்டுநான்அவனுக்காககாட்டின்வழியைப்பிடித்துக்
கொண்டுஆண்டவன்கிருபையாலவளுடையமூன்று சவால்களைநிறை
வேற்றிவிட்டேன் இப்போது நான்காவது சவாலுடையபயணமாயி
ருக்கும்உன்னைப்பார்த்தவுடனேஎன்னுடையமனமானதுஎன்கையை
விட்டுப் போய்விட்டது உன்னுடைய இஷ்க்குயென்றஆசையுடைய
அம்பானது என்னுடையசாலைத்துளைத்து சல்லடைக்கண்ணாக்கிவெ
ந்துகருகிப்போயிருக்கின்றது இந்தலோகத்தில் கூடாதவேலைகளெல்
லாம்முடிவாகிவிட்டு என் ஈரிமியுள்ளதுபோலாகட்டுமென்று நான்
மண்ணைதலையில்போட்டுக்கொண்டனேக துன்பமடைந்துகடைசியில்
என்னுடைய நற்காலம் உன்னுடையமுந்தாணியைப்பிடித்தேன்என்
னுடைய யெண்ணம் உன்னாலிருந்து உன்னுடைய வடிவாகியதோ
ட்டத்தின் பூவை சதாகாலமும் முகர்ந்திருக்க என்றால் கூடுமானால்
என்னசெய்வேன் நான் முனீர்ஷாமியென்பவனுக்குசத்தியம்செய்து
கொடுத்திருக்கின்றேனெவ்விதமானால் உன்னுடைய வேலையில் நா
ன் ஒருபோதும் தாமிதப்படுத்தமாட்டேன் உனக்குவஞ்சனையும்செ



ய்யமாட்டேன் ஆனால்உன்னுடையஆசைநிறைவேறுகிறவரையில்உன்
னிடத்தில் சதாகாலமுமிருக்கமாட்டேன் அப்படியிருப்பேனாகில் அது
எனக்குஹராமாகயிருக்குமென்றுமுனீர்ஷாமிக்கு சொல்லியிருப்பதா
ல்நான் உன்னிடமிருக்கமனம்கொள்ளவில்லை அந்தஏழ்மைப்பட்டவன்
என்னுடையவழியைப்பார்த்துக்கொண்டுயிருப்பான் ஆகையாலவனுக்
குகொடுத்தவாக்கு மாறிப்போய் என்னுடையசுகசவுக்கியத்தை நான்
அடைந்துகொண்டு யிவ்விடமிருப்ப நல்ல மல்லஆண்டவனுக்குபொ
ருத்தமாக யிருக்கின்றதல்ல ஆகையால் மலிக்காவே நீ சந்தோஷமா
க எனக்கு உத்தரவு கொடுத்தனுப்ப வேண்டியது நான் ஷஹரே
கார்ஜ மென்றபட்டணம்போய் நான்காவதுசவாலுடைய சங்கதியை
யறிந்து வரவேணுமென்று ஹாத்திம் சொன்னமொழியை மலிக்கா
கேட்டுசொல்லுகின்றாள் ஓ, ஹாத்திமே நீர்என்னிடஆசையானமோ
கத்தின் கடலில்மூழ்கிவிட்டு என்னை இப்போதிந்த வனாந்திரமான
காட்டில்விட்டுப்போறேனென்றுசொல்வதுதர்மமல்ல உன்புத்திக்கு
சரியாக யிருக்கின்றதா ஆனால்என்னுடையதகப்பன்உயிரோடேயிருந்
தால் எவ்விதத்திலும் என்னை விசாரித்துக்கொண் டிருப்பான் என்
தகப்பனால் என்ன வருத்தமடைந்தபோதிலும் எனக்கு மனவருத்த
மில்லாமலிருந்தது இப்போது நீரென்னை என்தோழிமார்களுடனிந்த
அந்தரமானகாட்டி லென்னுயிருள்ளவரையிலெவ்விதமா யிருப்பே
னென்றுசொல்லி மிகுந்ததுயரத்தோடுகண்ணீர்சொரிய அழுதுகொ
ண்டிருக்கையில்ஹாத்திம்கேட்டுமிகுந்தமனவருத்தப்பட்டுமலிக்காவு
டையகண்ணைத்துடைத்துமாரோடணைந்து முத்தமிட்டுக்கொண்டும
லிக்காவே நீ ஏன்விசனப்படுகின்றாய் நானுனக்காகப்பட்டபாடெ
ல்லாம் உனக்குத்தெரியுமல்லவா ஆனால் நான் உன்னை ஒருபோதும்
விட்டுபிரியேன் உன்னுடைய விசனத்திலும் பதின்மடங்கு வருத்
தமும்துயரமுமெனக்கிருக்கின்றது ஆனால் நான் என்ன செய்வேன்
முனீர்ஷாமிக்கு கொடுத்தவாக்கைமாறமாட்டேன் அன்னியர்க்காகநா
ன்வருத்தமெடுத்ததை உனக்குத்தெரிவித்தேனே அப்படியிருக்கநான்
உன்னை மோசம்செய்யமாட்டேன் ஆனால் இப்போது நான் சொல்லு
வதுபோல்கேழ்ப்பாயாகில் என்மனதுக்கு மிகுந்தசந்தோஷமாகுமெ
வ்விதமெனில் உன்னை எமனுக்கு அனுப்பிவைக்கிறேன் என்னுடை
ய தகப்பன் (தை) அவ்விடத்தில் பாதுஷாவாகயிருக்கின்றார் அவர்
உன்னை மிகுந்த சந்தோஷமாகதன்னுடைய பிள்ளைகளிலுமதிகமாக
வைத்திருப்பார் எவ்விதமான விசனமுமுனக்கிருக்கமாட்டாது ஆனா

ல் என்தகப்பனுருக்கு உன்னுடைய பெருமைகளையும் மற்றசங்கதிகளெல்லாம் விபரமாக ஒருகாகிதமெழுதித் தருகிறேன் ஆண்டவன் கிருபையால் இன்னம் சிலநாளையில் நான் எமின் வந்துசேருகிறேனென்று மலிக்காவுக்கு வேண்டியபுத்திகளும் சமாதானமும்பறித்து அப்போது மலிக்காஉங்கள்மனம்போல் செய்யுங்களென்றுசொல்ல அப்போது ஹாத்திமானவர் தங்கள் தகப்பனுருக்கு காகிதமெழுதுகின்றார்.

ஓ, என் பிரியமுள்ள தகப்பனுரவர்களே ஹாத்திமென்னும்தங்களுடைய அடிமையானவன் மிகுந்தவணக்கத்துடனே அதாபுதஸ்லீமாத்துசெய்து எழுதுகின்றவிபரமாவது நான் ஆண்டவன் கிருபையால் ஹயாத்தாகயிருக்கின்றேன் நான் ஒருவனுக்குவாக்குத்தத்துவம் கொடுத்துஅவனுக்காக மிகுந்தவருத்தமெடுத்துக்கொண்டுதிரிகின்றேன் இன்னம் சிலநாளையில் நான் கொண்டகருத்துநிறைவேறிப்போகும் ஆண்டவன்கிருபையாலப்போதுதங்களுடைய அடிமைக்காகதங்கள்சமூகத்தில் வந்துசேருவேன் ஆனல் நான் ஷாம் அஹமர் பாத்துஷாவுடைய மகளாகிய (மலிக்காஜரின்போஷ்)யென்பவளை நிக்கா செய்திருக்கின்றேன் ஆதலால் தாங்கள் அந்தப்பெண்ணைதங்களுடைய வீட்டில் என்னைப்போல் பாவித்துஅவளுக்குயாதொருகுறைவுகுற்றமில்லாமல் காப்பாற்றிக்கொண்டு வரவேண்டுமென்றெழுதிகாகிதத்தில் முத்திரைவைத்து மலிக்காவினிடமாகக்கொடுத்தார் அப்போது மலிக்கா அந்த காகிதத்தைப்பெற்றுக்கொண்டு தன்னுடைய பந்துக்களையும் தனது சமூகத்திலிருக்கப் பட்டவேலைக் காரர்களையும் தன்னுடையபடைகளையும் மற்ற வீட்டிலுள்ள சகலநகைநட்டுகளையும் சாமான்களையும் எடுத்துக்கொண்டு பயணப்பட்டு எமன்தேசம் போய்ச்சேர்ந்துமாமனுரைக்கண்டு காகிதத்தையும்கொடுக்க அக்காகிதத்தை (தை) என்பவர் பார்த்து மகனைநினைத்துகொஞ்சம்விசனமடைந்துபின்புமலிக்காஜரின்போஷுக்காகயாதொருதடங்கலில்லாமல்வேறொருதோட்டத்தில் மிகுந்த விசாலமானவெகுவிநோதவேலைகள்செய்யப்பட்ட மஹாலில் போயிருக்கும்படிக்கு உத்தரவு செய்து அம்மஹாலில்போய்மலிக்காவும் மற்றசனங்களும்யாதொருகுறைவில்லாமல் சவுக்கியமாகயிருக்கின்றார்கள் அப்போதுஹாத்திமானவர் மலிக்காவென்பவளை எமனுக்கனுப்பி பின்பு அவ்விடம்விட்டு புறப்பட்டு கார்ஜம்என்னும் பட்டணத்தை விசாரித்துக்கொண்டு நடக்கின்றார்



சிலநாளைக்குப்பின்பு ஒரு பட்டணம் போய்ச்சேர்ந்து அவ்விடத்திலுள்ளவர்களை விசாரிக்கிறார் ஓ, என்பிரியமானதோழர்களேகேளுங்கள் அந்தமனிதன் யாராகயிருப்பான் நித்தியம்சொல்லுகிறான் நிஜம்பேசப்பட்டவனுக்கு எப்போதும் சவுக்கியமாக யிருக்குமென்று சொல்லுகிறது)யாரென்றுகேழ்க்க அப்போது அவ்வூரிலுள்ளவர்கள் சொல்லுகிறார்கள் ஓ, வாலிபனே அப்பேர்ப்பட்டமனிதனிவ்விடத்தில் யாருமில்லை ஆனல் ஒருவிர்த்தாப்பியமான ஒருகிழவன் நீர்சொல்லுகிறமொழியைப் போல் தன்னுடைய வாசற்படியின் மேலெழுதியொட்டியிருக்கிறா னென்றுசொல்ல அப்போது ஹாத்திமானவர் அவருடைய வீடு எவ்விடமிருக்கு தென்றுகேழ்க்க சொல்லுகிறார்கள் அவருடைய வீடுமுக்காதவழி தூரத்தில் ஷஹரே காற்ஜம் என்னும் பட்டணத்தி லிருக்கிறதென்ற மொழியைக்கேட்டுஹாத்திமானவர் அவ்வழியைநோக்கி அப்பட்டணம் போய்ச்சேர்ந்து அவர் வீட்டைதேடிக்கொண்டு போய்ப்பார்த்தால் ஒரு பெரியமஹாலானது மிகுந்த உயரமும் இடமுமுள்ளது மிகுந்த வேலைப்பாடாகக்கட்டியிருக்கிறது அதினுடையவாசற்படியில்முன்சொன்னதுபோலெழுதியிருக்கின் றதைப்பார்த்துவாசித்து மிகுந்த சந்தோஷமாய்நுழைந்து கையைத்தட்டினபோது உள்ளிருந்து சிலநேரம் பொறுத்து இரண்டு வேலைக்காரர்கள் வெளியில்வந்து என்னைப் பார்த்து கேட்டார்கள் ஓ, வாலிபனே நீயார் இவ்விடத்தி லென்ன வேலையாகவந்தாயென்றுகேழ்க்க ஹாத்திம்சொல்லுகிறார் நான் ஒரு வேலைக்காக ஷாஹே ஆபாதென்ற பட்டணத்திலிருந்து வந்திருக்கிறேனென்ற மொழியைக்கேட்டு அவ்வேலைக்காரர்கள் ஓடிப்போய்தங்களுடைய எஜமானிடமாகத் தெரிவித்தார்கள் அம்மனிதனவன்மிகுந்தவயதுசென்றகிழவனுமாகயிருக்கிறபடியால்வாசற்கூடமல்லவாது அந்தமுசாபரை உள்ளேயழைத்துக்கொண்டுவாருங்களென்றுசொல்ல அதுபோல்வரை அழைத்துக்கொண்டுவந்துவிட என்னபார்க்கிறாரானல் ஒரு அழகுவடிவுள்ளவிர்த்தாப்பியமான மனிதன் ஒருசிம்மாசனத்தில் திண்டுதலைகாணிகளும்காலுக்குச்சிறிய உருண்டைதலைகாணிகளும் மிகுந்த விலைபெற்ற விரிப்புகளுடனே அதிலிருக்கக் கண்டு குனிந்து சலாம்செய்தின் உடனே அந்தமனிதனும் எழுந்து நின்றுக்கொண்டு சலாமுக்குஜவாபுஞ்சொல்லி மிகுந்த மரியாதையாகதன்னிடமாய்உட்கார வைத்துக்கொண்டு உடனே விதவிதமான அன்னமுதலிய பதார்த்தங்களும் மிட்டாய்கனிவர்க்கங்களும் அழைப்பித்து அ

வர்முன்பாக தபக்குகளில்நிரப்பி கொண்டுவந்து வைத்தார்கள் உட
னே ஹாத்திமானவரும் அவருமாகச் சாப்பிட்டு தீர்ந்தபின்பு ஹா
த்திமைக்கேழ்க்கின்றார்.

இ, சாயபே நீர்யார் எவ்விடமிருந்து என்னவேலைக்காக இவ்வ
ளவு தூரத்திலிருந்து வருத்தமெடுத்துக் கொண்டுவந்தீர் ஆனாலுங்க
ளைப்போலொருவரும்இவ்வளவுவருத்தமெடுத்துக்கொண்டுஇன்னாள்
வரையிலும்என்வீட்டுக்குவந்தவர்களைப்பார்க்கவில்லை யென்றசொல்
லைஹாத்திம்கேட்டுசொல்லுகிறார்ஐ,புஜருக்கானபெரியவரேநானவ
ன்எமனிலிருக்கப்பட்டவன்இப்போதுஷாஹேஆபாதென்றபட்டணத்
திலிருந்துமுனீர்ஷாமியினுடையவேலைக்காகவேண்டி உங்கள்வரையி
ல்வந்து இருக்கிறேன் அதின்விபரம்எவ்விதமானால் ஹசன்பானே
வென்பவள்பேரில்முனீர்ஷாமி ஆஷக்காகி அவளுடைய சவால்கள்
முழுதுமப்பெரியோருக்குத்தெரியப்படுத்தி முனீர்ஷாமியுடைய எ
ண்ணத்தைமுடிக்கவேண்டியபயான்களையெல்லாஞ்சொல்லிகேழ்க்கி
ன்றார் தங்களுடைய மஹாலின் வாசற்படியின்மே லிவ்விதமாக எ
ழுதிக்கட்டியவிபரமென்னவென்றுகேழ்க்க அப்போதந்தப்பெரியவர்
சொல்லுகிறார் ஓ, வல்லமைதத்துவம்பொருந்திய எமனிலுள்ளவரே
நீரிந்த துனியாவில் பெரிய நன்மையானவேலையில் பிரசங்கமானவரா
யிருப்பாய் எவ்விதமானால் உன்னைப்போல்எவனாயும்நானிதுவரையி
ல்அன்னியர்க்காகவேண்டி தன்பேரில் வருத்தமும்பிரயாசமுமெடுத்
துக்கொண்டு வந்தவர்களைக்காணவில்லை ஆனால்நீஇப்போப்பட்டசங்க
டமும்வருத்தமுமெடுத்துக்கொண்டு மிகுந்ததுன்பப்பட்டுவெகுதூர
விலிருந்துவந்திருப்பதால்இன்றிரவு என்னிடமாககொஞ்சம்சவுக்கிய
த்தையடைந்துபொழுதுவிடிந்தபின்புஇதினுடையசங்கதிகளைசவுக்கி
யமாக உனக்குத்தெரியப்படுத்துவேனென்றுசொல்ல,அதுபோலன்றி
ரவெல்லாம் அவரிடமாயிருந்துபொழுதுவிடிந்தபின்புகாலைஅன்னம்
பொசித்துஹாத்திமானவர் அப்பெரிய வரைக்கேழ்க்கின்றார் இப்போ
அதாங்களெனக்கு அதினுடையரகசியத்தைதெரியப்படுத்தென்றுகே
ழ்க்க அப்போதந்த மனிதன்சொல்லுகிறான் ஓ, வாலிபனே இந்த கா
ர்ஜம் என்றபட்டணமுண்டாகி (௭௱) வருஷமானது என்னுடையவ
யதானது (௮௱) வருஷமாச்சுது இப்போதுநீர் எவ்விதமாகபார்
க்கின்றீரோ அதுபோலவேநான் முன்னேயிருந்தேன் ஆனால் நான்கூ
டவிளையாடுகிறவரோடு சேர்ந்துக்கொண்டுநித்தியம்கூதாடுகிறதேய



ல்லாமல்லோகத்தினுடையநல்வேலையாதொன்றுஞ்செய்கிறதில்லை இ
வ்விதமாகஎன்பேரெங்கும் பிரசங்கமாயிருந்தது அப்படிக்கிருக்கஒரு
நாள்எனக்குமிகுந்தவருத்தமாயிருந்துஎன்னிடத்திலொருபயிசாவுமில்
லாமலிருக்கக்கண்டு நான் இரவானவுடனே திருடுவதற்காகவெ
ளியில் புறப்பட்டு என்மனதிலெண்ணினேன் எந்தஏழைமிஸ்கீன்
கள் வீடுகளிற்போய் திருடுவதைப் பார்க்கிலும் பாத்துஷாவுடை
ய அரண்மனையில்போய் திருடி நகைகள் மற்றவஸ்துகளையும் எடு
த்தாலதினால் நாம் சவுக்கியமாயிருக்கலாமென்று யோசனைசெய்து
பாதியிரவில் பாத்துஷாவுடைய அரண்மனையி னுள்ளே நுழைந்து அ
வருடைய கஜானாவில்போய் தானெடுக்கப்பட்ட நகைகட்டுகள் விலை
மதிக்காகின்ற ரத்தினங்களையெடுத்துமூட்டையாகக் கட்டிக்கொண்
டுவந்துபார்த்தால்பாத்துஷாவானவர்படுக்கை கட்டிலின்மேல் உஷா
ரில்லாமல் தூங்குகிறதையும் அவ்விடத்திலுள்ளபாரா சவுக்கிதா
ர்களனைவரும் சுத்துமாறி படுத்திருப்பதையும் பார்த்து மூட்டை
யையொருபக்கமாக வைத்துமெள்ள பாத்துஷாவினருகில் முடுகி
ப்போய் அவருடைய கழுத்திலிருந்த விலைமதிக்காகின்ற ரத்தினமு
த்துமாலையை மெள்ளக்கழட்டிமூட்டையைகையிலெடுத்துக்கொண்
டுவந்தவழியாகத்திரும்பிவெளிப்பட்டுஒரு காட்டுப்பாதையாகப்போ
கும்போது அவ்விடத்தி லொருமரத்தின்கீழேசிலதிருடர்கள்எவ்விட
த்திலோயிருந்து கொள்ளையடித்து வந்து பங்குகள் பிரித்துக்கொண்
டிருந்தார்களப்போது என்னைப்பார்த்தவுடனே ஓ, மனிதனே நீ யார்
எவ்விடமிருந்து வருகின்றாயென்றுகேழ்க்க நான் நடந்தசங்கதிகளை
நிஜமாகத் தெரியப்படுத்திஎல்லாவஸ்துகளையுங் காண்பித்தேன் அப்
போதக்கள்ளர்கள் இந்நகைகளையும்ரத்தினமுத்துமாலையையும்பார்
த்தவுடனே எல்லாம்பறித்துக்கொள்ள எண்ணம்கொள்கையிலுட
னே அக்காட்டில் கைபாக ஒருவர் வந்துநின்று பயங்கரமானவொ
ரு சத்தம்போட்டார் அச்சத்தத்தைக்கேட்டவுடனே அக்கள்ள
ர்களெல்லாம் பயந்துநடுநடுங்கி தன்னுயிரைத் தப்பித்துக்கொள்ளும்
படியாக எல்லாக்கள்ளர்களு மோடிப்போனார்கள் அப்போது பயமி
ல்லாமல் நான் ஒண்டியாக நிற்கையில் அந்தமனிதன் என்னிடமாகவ
ந்துநீயாரென்றுகேழ்க்கும்போதுநான் யாதொருகுற்றமில்லாமல்நிஜ
மாக நடந்த சங்கதிகளைத்தெரிவித்தேன் அம்மொழியைக்கேட்டு அப்
பெரியவர் சிரித்துச்சொல்லுகிறார் நீநிஜத்தைசொன்னபடியால் இந்

நகைகட்டுகள் முத்து இரத்தினமாலைகளெல்லாம் உனக்குபக்கிஷ் செய்து விட்டேன் ஆகையால் நீ இதுமுதல் திருடுவதைவிட்டு நீங்கி தோபாசெய்து விடென்றுசொன்னார் அம்மொழியைக்கேட்டு திருடுவதையும் சூதாடுவதையும் என்மனதில்நின் றெடுத்துவிட்டு தோபா செய்துவிட்டேன் பின்னுமந்த பெரியவர்சொல்லுகிறார் நீசூதையும் திருடுவதையும் விடுவாயாகில் உன்னுடையவயது (கூ) வருஷமிருப்பாயென்றுசொல்லி மைபாகிப் போய்விட்டார்.

பின்பு நான் கொண்டுவந்த நகைகளையும் அத்திருடர்கள்போட்டோடிப் போனவர்களுடைய நகைகள்முழுதும் நானெடுத்துக்கொண்டு வீட்டுக்குவந்து சேர்ந்துசிலநாளைக்குபின்புஒருமஹால்பெரிதாகவும்விசோதமாகவுங்கட்டி வதிகசந்தோஷமாயிருந்தேனப்படி யிருக்குங்காலத்தில்அத்தெருவிலிருப்பவர்களென்பேரில்மிகுந்தபகையாகி அவ்வூர்கொத்துவாலிடமாகப்போய்சொல்லுகிறார்கள் அதுஎவ்விதமெனில் ஓ, கொத்துவாலே இந்த மனிதனானவன்நேற்றையதினமுழுதும் ஒருகாசில்லாமல் மிகுந்த வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான் இன்றையதினமவனுக்கு எங்கிருந்துஇப்பேர்ப்பட்ட திரவியங்களும்நகைகட்டுகளும் கையிலகப்பட்டு இப்பேர்ப்பட்டபெரிதான மஹால்கட்டினானென்றுசொல்ல இம்மொழிகளை கொத்துவால் கேழ்விப்பட்டு என்னையழைப்பித்துக்கேட்டார் அப்போது அவரிடமாகவும் நிஜமாய் நடந்தசங்கதிகளை தெரியச்சொன்னேன் அதைக்கேட்டுயாதொன்றுஞ்சொல்லாமல் என்னை பாத்துஷாவிடங் கொண்டுபோனார்களப்போதவருடைய சமுகத்திலும் நடந்த வர்த்தமானங்களெல்லாம்யாதொருகுறைவில்லாமல் நிஜத்தையே சொன்னேன் அம்மொழிகளை பாத்துஷாகேட்டு என்பேரில் மிகுந்த இரக்கப்பட்டு சந்தோஷத்தையடைந்துசொல்லுகிறார் இந்தமனிதனானவன் மிகுந்த ஆச்சரியமான நிஜமுள்ளவனாயிருக்கிறான் இவ்விதமான நகைகட்டுகளை ஒளித்துவைக்காமலும் லாபாக நிஜத்தைச் சொல்லிவிட்டான் ஆகையால் நிஜஞ்சொன்ன படியாலந்த நகைகள்முழுதும் உனக்கு பக்கிஷ்செய்துவிட்டேனென்றுசொல்லி என்னுடைய குற்றத்தையும்பொறுத்து விட்டு பாத்துஷாவானவர் தன்னுடையகஜானாவிலிருந்தும் வேண்டிய திரவியங்களு மெனக்குக்கொடுத்தார் அது இவ்வளவென்று நான் சொல்லக்கூடாது அதினால் நான் மிகுந்தசெல்வம்பெற்றேன் இப்போதும் அதிலிருந்து வேண்டியதிரவியமிருக்கி



ன்றது அதில்நின்றும் வேண்டியதிரவியம் செலவுசெய்திருக்கிறேன் அன்றனிலிந்நின்றுநானென்வீட்டின்கதவின்மேலெழுதி ஒட்டியிருக்கிறேன் எவ்விதமெனில் (நிஜத்தைச்சொல்லப்பட்டவன் எப்போதும் சவுக்கியமடைவானே தவிரவேறில்லையென்றும்) இன்றானவர்கள் எப்போதும் மெய்யைத்தவிர பொய்யொருபோதுஞ் சொல்லக்கூடாது என்பேரில் நடந்தவர்த்தமானமெல்லாம் சனங்களுக்குதெரிந்தும் பொய்யைமறந்துமெய்யென்பதைத்தான் கைபற்றிக்கொண்டிருக்கப்படியால் எனக்கெவ்வளவுதிரவியங்கள்கிடைத்ததோ அதுபோலவர்கள் நடந்தால் நலமாகயிருக்கு மதினாலவர்களுக்கு நன்மையும்வேண்டிய சவுக்கியங்கள் கிடைக்க வேண்டுமென்று எல்லோருமறியும்படிக்கிவ்விதமாக எழுதியிருக்கின்றேன் ஆனால்என்னுடையசரித்திரமெல்லாமுனக்கு தெரிவித்திருப்பதால் உன்னுடையவாராற்றையெனக்கு நீ சற்றே சொல்லென்றுகேழ்க்கஅப்போதுஹாத்திம்சொல்லுகின்றார் நானானவன் எமனுடையபாத்துஷா(தை)என்பவருடையமகன்(ஹாத்திமாக) இருக்குமென்றமொழியைகேட்டவுடனேதன்னுடையமஸனதென்பதைவிட்டு கீழிறங்கி மாரோடணைத்துக் கொண்டு மிகுந்த தாழ்ம் தக்ரீமானமரியாதிசெய்து வணக்கத்துடனேசொல்லுகின்றார் சரிதான்ஹாத்திம்தவிரமற்றவர்யார்இப்பேர்ப்பட்ட வேலையைசெய்யக்கூடுமாவென்றுஹாத்திமைமிகுந்மாகவாழ்த்திபோற்றி ஓ,ஹாத்திமேயென்னுடைய நல்லநசீபால் உன்னைநான்கண்ணால்பார்க்கும் படிக்குஆண்டவன் உதவிசெய்தான் ஆனா லெனக்காகவேண்டி என்வீட்டில் சிலநாள் மெஹமானாகயிருந்து போகவேண்டுமென்றுமிகுந்தஆவலுமாசையுடன்கேட்டுக்கொண்டார்அவருடையசொல்லைக்கடவாமல் அவரிடத்தில் சிலநாளிருந்து ஒருநாள் ஹாத்திமானவர் அப்பெரியவரைப்பார்த்து கேழ்க்கின்றார் உங்களுடையசொல்நான்மீறாதிருந்தேன்இப்போதுஎனக்கு மிகுந்தஅவசரமான அலுவலிருப்பதால் நீர் உத்தரவுகொடுத்து அனுப்பவேண்டுமென்று சொல்ல அப்போது ஹாத்திமைமிகுந்தஆவலாகத்தன்னுடைய வேலைக்காரர்களை யழைப்பித்து விதவிதமானபலாவுகளும்-பிட்டாய்களுகளும்-நன்-பீர்னிகளும்-இன்னமனேகருசிகரமானபதார்த்தங்களுந்தியார் செய்யும்படிக்குத்தரவு செய்துதானுமவருமாகச்சேர்ந்து வெகுசந்தோஷமாகப் புசித்தார்கள் பின்பவர்ஹாத்திமைமிகுதமாகவாழ்த்தி போற்றிபோகும்படிக்குஉத்தரவு கொடுக்க ஹாத்திமானவர் அவ்வுத்தரவு பெற்றுக்கொண்டு அவ்விடம்விட்டுப்புறப்பட்டு இரவும் பகலும் நடக்கின்றார்.

அப்படி போகின்றபாதையில் ஒரு நாள் மலிக்காஜதின் போஷ்யெனபவனுடைய முகத்தின் நினைவு வந்தவுடனே மலிக்காவைபோய் பார்த்துவிட்டுவரலாம் பின்பு ஷாஹேஆபாதெதிறநகரம்போகலாமென்று தீர்மானித்துக்கொண்டு எமன்தேசத்தைநோக்கி நடக்கின்றார் சில்நாளைக்குப் பின்பு எமனுக் கருகாமையில் ஒரு ஏரியின் கரையில் போய்சந்தோஷமாக உட்கார்ந்தார் அவ்வேரியின் கரையோரமாக ஒரு விருட்சமிருந்தது அதின்மேலொரு ஜோடுகிளிப்பிள்ளை ஆண்பெண்ணுமாகயிருந்தது அக்கிளிகள்தங்களுக்குள் தான்பேசிக்கொண்டிருந்ததுகள் அப்போது ஹாத்திம்தமதுகாதை அக்கிளிகளின்மொழியின் பேரில்வைத்துவேறுநினைவில்லாமல் கேட்டுறுதுகள் என்ன பேசுகிறதென்றிருக்கையில் பெண்கிளி ஆண்கிளியினிடமாகச்சொல்லுகின்றது நீயென்னை யொண்டியாகவிட்டு யெங்கேபோகிறாய் என்பேரில்ஒருவேளையென்னசந்தற்பம் நேரிடுமோஆகையால் நீ ஆண்டவனுக்காகபோகவேண்டாமென்றுசொல்ல ஆண்கிளியானது சொல்லுகின்றது எவ்விதமானால் ஓ, பேதகமில்லாதபெண்ணே நீ ஏன்நான்போகின்ற நல்வேலைக்கு தடைபடுத்துகின்றாய் யாமத்துநாளில் நீ யெனக்கென்னவேலைக் குதவுவாய் இந்ததுனியாவில் உன்னோடுசேர்ந்தவனாக யிருந்து நன்மையான வேலையை விட்டுப்போயிருக்கின்றது இன்னம் நீகேட்கவில்லையா ஒரு பாத்துஷாவானவன் ஒருநாள்தன்னுடைய தளங்களுடனே வேட்டைக்குப் புறப்பட்டார் நாள்முழுதும் அவர்கையில்யாதொருவேட்டையும் அகப்படாமல் மனவருத்தமடைந்து தன்னுடையபடைகளைவிட்டுப்பிரிந்துவேறுபட்டுவேட்டைக்காகவேண்டி ஒருபெரியவனாந்திரமானகாட்டில் போய்சேர்ந்துஅவ்விடத்தில்ஒருபெரிய அலங்காரமானதோட்டத்தைக்கண்டுஅதில் நுழைந்து போகின்றவேளையில் அவ்விடத்திலொரு மிகுந்தஅழகுள்ளமஹாலைக்கண்டு அதினிடமாகப்போய்பார்க்கின்றார் ஒருகுளமானது பெரியயேரியைப்போல்தோணவந்தது அதைப்பார்த்தாலதினுடையதண்ணீர் துப்பறவுமிகுந்தநல்லநிறமாகவும்தெளிவாகவுமிருக்கக்கண்டுவெகு ஆச்சரியமாக பார்த்து சந்தோஷத்தையடைந்து அதின்கரையில்போயிருந்துக்கொண்டு தண்ணீரால்தாகந்தீர்த்து பின்பு ஒருவேடிக்கையாக தண்ணீரைக் கையாலெடுத்து இறைத்துக் கொண்டிருந்தார் அப்போததிலிருந்து ஒரு சங்கிலிகையிலகப்பட்டது அதைப்பிடித்திழுக்க ஒருபெரியஇரும்பு பெட்டியானது திறவுகோலுடனே வெளியில்வரக்கண்டு அதைத்திறந்துபார்த்தால் அதிலொரு எவ்வர்மானபரி



யானவள்சந்திரனைப்போலொத்தவள் அதிலிருக்கக்கண்டு பாத்துஷா அச்சமடைந்திருக்க அப்போதந்தப்பெண்ணானவள் சொல்லுகின்றாள் ஓ, வாலிபனே நீ ஏன்பயப்படுகின்றாய் நானொரு இன்சானாகயிருக்குமென்று சொல்லி பெட்டியிலிருந்து வெளியில்வந்து மதுரமான்ஷர்பத்தென்றபானகத்தைக்கொண்டு வந்துபாத்துஷாவுடைய முன்னால்வைத்து குஞ்சிரிப்பும்சரசமானமொழிகளும் பேசிக்கொண்டிருந்தாள் அவளுடையநாட்டத்தைப்பார்த்தால் மோக யிச்சையின் சாடையாயிருந்த ஆவலாகநிற்கின்றதைப் பாத்துஷாபார்த்துஅப்பானகத்தை சாப்பிட்டு அவளோடுசேர்ந்து கலந்திருந்துபின்புதன்னுடைய படைகளின்பேரில் நினைவுவந்தவுடனே யெழுந்து போககிற்கையில் அந்தப்பெண்ணானவள் பாத்துஷாவைப்பார்த்து கேட்கின்றாள் ஓ, பாத்துஷாவே நீர் போனால் உம்முடையநினைவும் அடையாளமும் எனக்கிருக்கும்படிக்கு நம்முடையகையின்மோதிரத்தைக் கொடுத்தால் நலமென்றுகேழ்க்க அப்போது பாத்துஷாவானவர்தன்னுடைய கைமோதிரத்தைக் கழட்டி அவளிடமாகக்கொடுக்க அப்பெண்ணானவள் அம்மோதிரத்தை வாங்கிகையில் வைத்துக் கொண்டு தன்பெட்டியிலிருந்து ஒருபையை யெடுத்துபாத்துஷாவுக்குகாண்பித்து சொல்லுகின்றாள் ஓ, பாத்துஷாவே யென்னுடையசரித்திரத்தைசொல்லுகின்றேன் நீர்மனம்கொண்டுகேழ்க்கவேண்டுமென்று சொல்லுகின்றாள் எவ்விதமானால் என்னுடைய புருஷனானவன் மிகுந்தகிரவியமுள்ளவன் அவனென்பேரில் அதிக அன்பும் பிரியமுமாக யிருப்பதும் என்னையாராவதுபார்ப்பார்களென்று என்னுடைய பத்திரத்துக்காக இந்தக்காட்டில்ஒருபெரியதோட்டமுண்டாக்கி அதிலொருபங்களாகட்டி அத்தோட்டத்திலொருபெரியகுளமும் வெட்டி யென்னை அந்தப்பங்களாவில்வைத்தால்யாராவதுபார்ப்பார்களென்று ஒருபெரிய இரும்பு பெட்டியில் போட்டு மூடி பூட்டிட்டு இந்தக்குளத்தில் என்னைதொங்கப்போட்டுவிட்டுஎனக்குஉண்பினைதின்பினையெல்லாம் குறைவில்லாமல்இவ்விடம் வைத்திருக்கின்றான் இவ்விதமாகயென்னைபத்திரப்படுத்தி தான்வர்த்தகஞ்செய்ய சீமைகளில்திரிகின்றான் அப்படியிருக்க இவ்விடத்திலாராவது வழிதப்பி உம்மைப்போ லொத்தவர்கள் இத்தோட்டத்துக்கு வந்து இக்குளத்தினருகில்கால்கைகள் துப்பறவுசெய்யவந்தால் அவர்களுக்கு இப்பெட்டியினுடைசங்கலி தெரிந்தவுடனே அதையிழுத்துதிறந்துபார்க்கின்றார்கள் அப்போதுஅவர்களோடுநான்சேர்ந்து அவர்களுடையகைமோதி

ரங்களை அடையாளத்துக்காகவாங்கி வைத்திருக்கிறே னென்றுசொ
ல்லிஅப்பெட்டியைத்திறந்து ஒரு பையைக்காட்டினுள் அதிலிருக்கின்
றமோதிரங்கள் இவ்வளவென்று கணக்கில்லை அவர்கள் இன்னுரென்
று எனக்குநினைவிருக்கும்படிக்கு வாங்கியமோதிரங்களாக யிருக்கும்
ஆனுலிதுகள்எனக்கு கியாபகமில்லை எந்தெந்தமோதிரங்கள் யாராரு
டைய தாயிருக்குமென்று ஒன்று இரண்டிருந்தாலும் எனக்குகியாபக
மிருக்கும்(க)(அக)இருந்தால்அதைநானெவ்விதமாகநினைவுவைப்பே
ன் எப்போதும்அவர்களுடைய அடையாளமிருந்தால் எனக்கு நினை
வுவரும் அதுபோல்உங்களுடையநினைவுக்காகநான் தம்முடையமோ
திரத்தைவாங்கினேன் அவர்களைமறந்தாப்போல்உங்களையும் சிலநாளை.
க்குள்ளாகமறந்துபோவேனென்றுபின்னுமவள் சொல்லுகிருள் ஓ,பா
த்துஷாவே என்புருஷனென்னைஎத்தனையோ கட்டுக்குள்ளாகவைத்
திருக்கநான்செய்கின்றவேலையைப்பார்த்தீரா என்றமொழியைக்கேட்
டுஹாதிஅவளைமுன்னிருந்த பாவனைபோலந்த பெட்டியில்போ
ட்டுமூடிமுன்னிருந்தகுளத்தில்எப்போதும்போல்வைத்துவிட்டுதன்
னுடைய படைகளுடனே பட்டணம் போய்ச்சேர்ந்து தனது
திரவியங்களெல்லாம் ஏழை எளியோர்களுக்குபங்கிட்டு பாத்துஷா
தனத்தையுமிழந்து ஒருகாட்டின்பக்கமாகப்போய்ஆண்டவனைநாடிக்
கொண் டிருந்துவிட்டு தன்னுடைய உயிரிருந்தவரையில் பெண்சாதி
யின்முகத்தையும்பார்த்ததில்லைஓ,பெண்ணேபோதுமானது இப்படிக்
கிருக்கநீ உனதுபத்தினித்தனத்தைஎன்னேடுஎன்சொல்லுகிருய்இப்
போதுநான் நல்வேலைக்காகப்போவதை ஏன்தடங்கல்செய்கிருயென்
று ஆண்கிளிசொல்லிபின்னுஞ்சொல்லுகின்றது ஓ,பெண்ணே இந்த
ஹாத்திமானவரும் ஆண்டவனுக்காகஇடுப்பு கட்டிக்கொண்டுஅன்னி
யர்க்காகவேண்டிமிகுந்த ஆபத்தும்துன்பமும்பட்டுஉபகாரஞ்செய்து
எவ்வளவோ பாடுகள்பட்டு நன்மை தேடிக்கொண்டிருக்க இப்போ
து மலிக்கா ஜறின்போஷ் என்பவள்பேரில் நினைவுகொண்டுஷாஹோ
ஆபாதென்ற பட்டணத்தின். பாதையைவிட்டு அவளுடைய மு
கத்தை பார்க்கவேண்டுமென்று இப்போது எமனுக்குப்போகிருர்
இவ்வளவுபாடு வருத்தமெடுத்துக்கொண்டு தேடியநன்மைகளையெல்
லாம் வீணுக்கிமண்ணேடேசேர்க்கிருர் அது எனக்கு மிகுந்த விச
னமாகயிருக்கிறதென்று ஆண்கிளிசொல்ல இம்மொழியை ஹாத்
திம்கேட்டவுடனே மிகுந்தமனவருத்தமடைந்து ஆண்டவனிடமாக
சிஜூதாஷுகுருஞதொழுதுஇக்கிளிகளுடையசொற்களைமனதில்மு



த்திரைபோல் பதித்துக்கொண்டுசொல்லுகிருர் ஓ,ஹாத்திமேஇந்தச
த்தமானது ஆண்டவனிடமாக யிருந்துவந்ததாகயிருக்கும் இனிஉனக்
குநன்மையாகயிருக்கும்ஆனுல்நீஎமனுக்குப்போகிறநினைவைவிட்டுநீ
திரும்பென்றுதன்னைத்தான்சொல்லிக்கொண்டுஷாஹோ ஆபாதென்ற
பட்டணத்தைநோக்கிநடக்கசிலநாளைக்குப்பின்புஅப்பட்டணம் போ
ய்ச்சேர்ந்தவுடனே அவ்விடத்திலுள்ளவர்கள்ஹாத்திமையறிந்து ஹச
ன்பானுவின் வாசற்படியிடமாகக்கொண்டுபோனுர்கள் பின்புஹாத
திமானவர்வந்தசங்கதியைத்தெரிவிக்க அப்போதுஹசன்பானு பர்தா
வின் பின்னுலிருந்து ஹாத்திமை யழைத்துவரும்படிக்குஉத்தரவுசெ
ய்ய அதுபோ லழைத்துவந்து மேலானவிரிப்புகள விரித்து அதின்
பேரில்இரத்தினுதிகளிழைத்த நாற்காலியைக்கொண்டு வந்துபோட்டு
அதின்மேலிருக்கச்சொல்லி பின்புபோன சங்கதிகளைக்கேட்க அப்
போது ஹாத்திமந்தநாற்காலியின்மேலிருந்துக் கொண்டுதன்னுடைய
பாடுகளையும்நடந்தவர்த்தமானங்களையெல்லாஞ்சொல்லிபின்புஅந்தச
வாலுக்காகப்போனசங்கதிகளையுமந்தப்பெரியவர்சொல்லியமொழிகளை
விபரமாகச்சொன்னுர் பின்புஅச்சங்கதியைஹசன்பானுகேட்டுமிகு
ந்தஆச்சரியப்பட்டுஹாத்திமேநீர்சொன்னசங்கதிகளெல்லாம் சரியாக
யிருக்குமென்றும்அதில் யாதொருசந்தேக மில்லையென்றுஞ்சொல்லி
உடனேஹாத்திமுக்காகவிதவிதமானபுலாவுகளும்மிட்டாய்களும்ஷர்
பத்துகளும்மற்றவஸ்துகளும்தயார்செய்துகொண்டுவரும்படிக்குஉத்
தரவுசெய்ய அப்போது ஹசன்பானுவைப்பார்த்து ஹாத்திம்சொல்
லுகிருர் ஓ, பெண்ணுயகியே என்னுடைய சகோதரன்கார்வான்சரு
விலிருப்பதா லவரைப்போய்கண்டு அவரிடமாக நான்சாப்பிடுவேனெ
ன்றுசொல்லி ஹசன்பானுவினிடமாகஉத்தரவுபெற்றுக்கொண்டுஅ
வ்விடம் விட்டெழுந்து கார்வான் சருவில்வந்து முனீர்ஷாமியைக்க
ண்டுஇருவருங்கூடிசாப்பிட்டார்கள்பின்புதான்போனசங்கதிகளெல்
லாந்தெரியப்படுத்த மிகுந்த சந்தோஷமாகஹாத்திமைவாழ்த்திபோற்
றிபின்பு முனீர்ஷாமி தன்னுடையகட்டிலில்ஹாத்திமைபடுக்கச்சொ
ல்லிஇருவருமாக அன்றிரவுபடுத்துக்கொண்டிருந்தார்கள் விடிந்தவுட

னே ஹாத்திமானவர் உடம்புகுளித்து தன்னுடைய உடுப்புகளைமாற்றி உடுத்திக்கொண்டு ஹசன்பானுவுடையவாசற்படியில்வந்துநிற்க காவற்காரர்களோடி தெரியப்படுத்தினார்கள்.

அப்போது ஹசன்பானுவென்பவள்பர்தாவினுள்ளாகவிருந்துக்கொண்டுஹாத்திமைஉள்ளேயழைத்துவா உத்தரவுசெய்தாள் அதுபோ லழைத்துக் கொண்டு வந்துவிட்டு விலையுயர்ந்த நின்ற ஒரு நாற்காலியி லிருக்கச்சொல்லி ஹசன்பானு சொல்லுகின்றாள் ஓ, ஹாத்திமே நான் கேள்விப்பட்டிருக்கின்றதை சொல்லுகிறேன் நீர் கேளும் அது எவ்விதமானால் ஒரு மலையிலிருந்து ஒரு சத்தம் வருகின்றது அதினாலதற்கு (கோஹெநிதா) வென்றபேர் வைத்திருக்கின்றார்கள் இப்போது அதினுடைய செய்தியை யறிந்துவரவேண்டியது அவ்விடத்தில் சத்தம்போடப்பட்டவன் யாரென்றும் இன்னமந்த மலைக்கு அப்புறமென்ன இருக்கின்றதென்றும்கண்டுவா வேண்டுமென்று சொல்ல அப்போது ஹாத்திமானவர். அம்மொழியைக் கேட்டு ஹசன்பானுவின் உத்தரவு பெற்றுக்கொண்டதின் பின்பு காறுவான் சறுவில் போய் முனீர்ஷாமியினிடமாகச் சொல்லுகிறார் ஓ, என்பிரியமான முனீர்ஷாமியே நான் கோஹெநிதாவென்ற மலையின்செய்தியையறியப்போகிறேன் ஆண்டவன் கிருபையாலெனக்கு ஆயிசுமிச்ச மிருக்குமானால்அச்சேதிகளையறிந்து நிச்சயப்படுத்திக் கொண்டுவருவேன் இல்லாவிட்டால் ஆண்டவனுடைய எண்ணம்போலாகும்ஆனால்நீ யாதொன்றையுங்குறித்து சந்தேகப்படாமலிருக்கவேண்டுமென்று முனீர்ஷாமிக்கு மிகுந்ததைரியப்படுத்தி அவ்விடம்விட்டு ஹாத்திமென்பவர்ஆண்டவன்பேரில் பாரத்தை வைத்துப்புறப்பட்டார்,

## ஐந்தாவதுசவால்.

## ஹாத்திமானவர் பிரயாணப்பட்டு கோஹெநிதாவுடையசேதி அறிந்து வருகின்ற வரலாற்றின் பாபு.

ஹாத்திமானவர்முனீர்ஷாமிக்குவேண்டியதைரியங்கள்சொல்லி அவ்விடத்திலிருந்து புறப்பட்டுகொடுவனாந்திரமான பாதையைப்பிடித்துக்கொண்டுபோகின்றபோதெல்லாம்மத்தியில் ஒவ்வொருநகரத்தைக்கண்டால் அதிலுள்ளவர்களை கேட்கின்றதெவ்விதமானால் ஓ, எனதுபிரியமாகியதோழர்களே(கோஹெநிதா) என்றமலையுடைய வழியறிந்திருக்கின்றீர்களா அப்படித் தெரிந்திருந்தால் அப் பாதையை எனக்குத் தெரிவிக்கவேண்டுமென்றுகேழக்க அம்மொழியை அவ்விடத்தி லுள்ளவர்களெல்லாம் கேட்டு ஆச்சரியப்பட்டு ஹைரானாகிச் சொல்லுகிறார்கள்ஓ, வாலிபனே எங்களுடைய ஆயுசிலும் நாங்கள்கேட்டதுமில்லை அதினுடைய பேரையு மறியமாட்டோமென்று சொல்லி ஹாத்திமானவர் தன் வல்லமையால் அவ்வழிதனக்கு தெரிந்திருப்பதுபோல் உடனே அவ்விடம்விட்டு ஆண்டவனபேரில் பாரத்தைச் சாட்டி ஒரு வழியை நோக்கிப் பார்த்துக்கொண்டு போகின்றார் அப்படியாக ஒரு மாதபயணத்தின்பின் ஒருபட்டணத்துக்கருகாமையில் ஒரு காடிருக்கின்றது அவ்விடம் போய்ச்சேர்ந்து பார்த்தால் வெகு [illegible]மாக ஆண்பெண்கள்சிலதூரத்தில்சேர்ந்துக்கொண்டிருப்பதை

நமதுவீடுகளில்சிலநாள்மேஹமானுகயிருந்துபோகலாமென்றுசொல்
ல நல்லது நீங்களிவ்விதம்சொன்னபடியால் உங்களுடைய இஷ்டத்
துக்காகவேண்டி இரண்டு மூன்று நாளைக் கிருப்பேனென்று சொ
ல்ல அப்படியேஹாத்திமையழைத்துக்கொண்டுத[illegible]களுருக்குப்போய்
சகலரும்கூடிஅவருக்காக ஒருபெரியமஹாலிருக்கும்படிசெய்து அவர்
சாப்பிடும்படிக்கு வேண்டிய அன்னம்பதார்த்தங்களைசமைத்து தங்க
ள்தங்கள் வீடுகளில்நின்றுநல்லநல்ல லட்சணமான பெண்கள்கையில்
கொடுத்தனுப்பினுர்கள் அப்போதுஹாத்திமானவர் அந்தஇன்னும்படி
யானவஸ்துகளை இஷ்டமானதில் கொஞ்சம் கொஞ்சமெடுத்துக் கொ
ண்டுபின்பு ஹாத்திம் மனதிலெண்ணுகிறுர் இந்தஊர்வழக்கம் நன்று
கயிருக்கின்றது.

ஆனுல் என்வேலையிலிருந்து நான் சாவகாசம் பெறுவேனுகில்
ஆண்டவன் என்னுடைய எண்ணத்தையும்நிறைவேற்றுவானுகில்நா
னும் என்னுடைய பட்டணத்துக்குப்போய்இவ்விதமானவிருந்துகள்!
முசாபர்களுக்குசெய்வேனென்று எண்ணுகிறுர் அப்போதந்தப்பெ
ண்கள் இவர்பேரில் மிகுந்தஆவலாகயிருக்கின்றுர்கள் எவ்விதமானு
ல் இந்தவாலிபன் எங்களில் யாரிடமாவதுசேர்வதற்கு இஷ்டமானுல்
அப்பெண்ணிடம் யாதொருதடங்கலில்லாமல்சேரலாம் இன்னுமவளி
டமிருக்கின்றபானமான ஷர்பத்தையும் இஷ்டம்போல் சாப்பிடலா
மென்று மனதிலெண்ணிக்கொண்டிருந்தார்கள் ஆனுலிவர் யாதொரு
பெண்களுடையமுகத்தைஇச்சித்துகண்ணெடுத்துப்பார்க்கவில்லைஇ
வ்விதமாக ஏழுநாளாகிவிட்டது அப்போதந்தப்பெண்கள் தங்களு
டைய எஜமான்களிடமாகஹாத்திமுடையமுகலட்சணத்தையும்நல்ந
டப்பையும் அவருடையநல்லெண்ணத்தின் குணங்களையும்தெரிவித்
தார்கள் அப்போதுஅந்நகரத்துஅதிபதியாகியராஜன்இவருடையபெரு
மையைக்கேள்விப்பட்டு தனதுசமுகத்தில்அழைப்பித்துமிகுந்தஅன்
பாகவும் பெருமையாகவும் தம்முடைய மஸ்னதென்ற சிம்மாசன
த்தின் பேரிலிருக்கச்சொல்லி ஹாத்திமைபார்த்து சொல்லுகின்றுர்
ஓ, வாலிபனே இந்நகரத்தில்நீர் குடியாக இருப்பீராகில் என்பேரில்
கிருபைவைத்து அது எனக்குமிகுந்த நன்மையாகயிருக்கும் அப்
போது என்னுடைய பெண்ணைஉங்களுக்கு நிக்காசெய்து கொடுப்பே
னென்றுசொல்ல ஹாத்திம் அம்மொழியைக்கேட்டுசொல்லுகின்றுர்
ஓ, பாத்துஷாவே என்னசெய்வேன் ஒருவேலையை கைப்பற்றிக்கொ



ண்டிருப்பதால் அந்தவேலையினுல்நான்யாதொன்றும்சொல்லக்கூடா
மையாக இருக்கின்றேன் அப்படிக்கில்லாவிட்டால் தாங்கள் சொல்லி
யது போலிருப்பேன் அப்போதந்த பாத்துஷாசொல்லுகின்றுர் நீர்
அந்தவேலையைக்குறித்துச்சொல்வீராகில் அதற்கு உதவியாகநானுமி
ருப்பேனென்றுசொல்ல அப்போது ஹாத்திமானவர்சொல்லுகின்றுர்
என்னுடைய வேலைக்காக நான்இன்னொருவருக்குவருத்தம்கொடுக்க
மாட்டேனென்று சொல்ல நல்லதுநீர் அப்படிக்குசொல்லதால் அதின்
சங்கதியைநமக்குகொஞ்சந்தெரிவிக்கவேண்டும் அந்தவேலை எப்பேர்
ப்பட்டதாகயிருக்குமென்றுகேழ்க்க அப்போது அவ்வரசனுக்குஹாத்
திம் சொல்லுகின்றுர் ஷாஹே ஆபாதென்றபட்டணத்தில் ஹசன்
பானுவென்னும் ஒரு பெண்ணிருக்கின்றுள் அவள் ஏழுசவால்
சொல்லுகின்றுள் அதற்குயாதொரு பிசகில்லாமல் ஜவாபுசொல்வா
ராகில் அவனைநிக்காசெய்வேனென்றும் அப்படியிருக்க ஒருபாத்து
ஷாவின் குமாரன் முனீர்ஷாமிஎன்பவன் அவள்பேரில்ஆசையாகி அ
வளைவிட்டுப்பிரிகிறதுமில்லை அவளுடையசவால்களுக்கும் ஜவா
புகொடுக்கவுமாட்டாமல் காடுகள்மலைகள் தோறும்அவளுடையமோ
கத்தால் அழுதுகொண்டுதிரிகிறுன் அப்படியிருக்க ஒருநாள் நான்
அவனைஎமன்காட்டில் கண்டேன் அவன்படுகின்றவருத்தத்தைப் பார்
த்து எனக்குமிகுந்தவருத்தமாகி கண்ணீர் சொரிந்தேன்மனம் பொறு
க்காமல் அவனுடைய வரலாற்றைத்தெரிந்து அவனைக் கூட்டிக்
கொண்டுபோய் ஷாஹே ஆபாது பட்டணத்திலொரு கார்வான்
ஸறு என்றசத்திரத்தில் வைத்துவிட்டு அவனுக்காக வேண்டிமிகுந்த
வருத்தமெடுத்து சபர்கள் புறப்பட்டு திரிந்து அனேகபாடுகளெல்லா
ம்பட்டு அவளுடைய(ச) சவால்களை யறிந்துஜவாபுசொல்லிவிட்டே
ன் ஆண்டவன்கிருபையால்இப்போது (ஐந்தாவது)சவாலின்சபறுகயி
ருக்கும்அந்தசவாலின் விபரம்(கோஹே நிதா)வென்றமலையின்சங்கதி
யை அறிந்துவரும்படியாகவும் ஆனுல் இதினுடைய சங்கதியைக்குறி
த்து நான் அவ்விடம்விட்டுஆறுமாசமாகத்திரிகின்றேன் அதினுடை
யபாதையுமதின் நடப்பையும்கேட்டால் யாதொருவரும்சொல்லுகிறதில்
லை ஆகையால் நீர் என்பேரில்கிருபைவைத்து அவ்விடமாகஎனக்
கு உதவிஒத்தாசைசெய்யவேண்டுமென்றுஹாத்திம்சொல்ல அப்போ
து அவ்வரசன் சொல்லுகின்றுன் நான் எங்களுடைய பெரியோர்க
ளிடமாக கேழ்விப்பட்டிருக்கின்றேன்(தக்கன்தேசத்தில்) ஒரு இல்சி
மாத்திருக்கின்றது அந்த இடத்துக்குஇடதுபக்கமாகஒரு மிகுந்தபெ

ருமையுள்ள பெரியபட்டணம் ஆபாதாகயிருக்கின்றது அவ்விடத்தில் இன்னுள் வரையிலும் இதந்துபோனமையத்தைபார்த்ததில்லை அல்ல துஒருகபூரையாவது பார்த்ததில்லை அல்லது ஒருவர்க்காக அழுவார்க ளுமில்லைஇம்மொழியை ஹாத்திம் கேட்டுசொல்லுகிறார் நீசொல்லிய இடத்துக்கு நான் போகவேண்டுமென்று சொல்ல அப்போது அவ் வரசன்சொல்லுவான் ஓ, என்னுடைய அன்புள்ள பிரியனே அந்த நகரமானதுவெகுதூரமாகயிருப்பதால் நீ எவ்விதமாகப்போய் அந்த நகரம்சேருவா யென்றுசொல்ல அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் என்னை இவ்வளவுதூரங் கொண்டு வந்து சேர்த்தவன் அவ்விட மும் கொண்டுபோய்ச் சேர்ப்பானென்றமொழியை அவ்வரசன்கே ட்டு யாதொன்றும் பேசாமல் சிலநேரம் பொறுத்து நீர் இவ்வித மான உறுதிகொண் டிருப்பதால் நன்மைதா னென்றுசொல்லி ஹாத் திமுக்குமுன்பாக சிறிது இரத்தினங்களும்கொஞ்சம்பொருள்களும் கொண்டுவந்துவைக்க ஹாத்திமானவர் தன்வழிச்சிலவுக் காகும்படி யாக கொஞ்சமதி லெடுத்துக்கொண்டு மற்றதை பக்கீர்களுக்கு பங் கிட்டு அவர்களிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு அந்தவெளியைநோ க்கிப்போகின்றார் அவ்விதமாக நடந்து சிலநாளைக்குப்பின்பு ஒருபட் டணத்தி னெல்லையில் போய்ச்சேர்ந்தார் அவ்விடத்தில் சுற்றிலும் பார்த்தால்யாதொருகபூர்களையுங்காணமலிருந்தது அப்போது ஹாத் திமானவர் இப்பட்டணம்போல் தோணுதென்றெண்ணி அப்பட்டண த்துக்குள்போனார்.

• அவ்விடத்தி லிருக்கப் பட்டவர்கள் பார்த்து ஓ, வாலிபனே நீ எங்கிருந்துவந்தாய் எவ்விடம்போகிறாயென்றுகேழ்க்க ஹாத்திமான வர் சொல்லுகிறார் நான் ஷாஹே ஆபாதென்ற பட்டணத்திலிருந்து வந்திருக்கிறேன் கோஹே நிதாவென்றவிடத்துக்குப்போகிறேனென் றுசொன்னமொழியைக்கேட்டுஅவர்கள்சொல்லுகிறார்கள் அப்பட்ட ணத்தின்வழி இவ்விடத்துக்குவெகுதூரமாகயிருக்கும் நீபோகமாட் டாயென்றுசொல்ல அப்போதவர் சொல்லுகிறார் என்னையிவ்வளவு தூரங்கொண்டுவந்துசேர்த்த ஆண்டவனானவனுமான் அவ்விடத்துக் கும் கொண்டுபோய்ச் சேர்ப்பான் அப்போதவர்கள்சொன்னார்கள் நல் லது நீ இன்றிரவு இவ்விடத்தில் எங்களிடமாக யிருக்கின்ற ப ருப்பும் ரொட்டியும் சாப்பிடுமென்று சொன்னவுடனே அவ்விட மிறங்கியிருந்தார் அவ்விடத்தி லொருமனிதன் எத்தனையோநாளா



கவியாதி யஸ்தனாகயிருந்தான் அவனுடைய இனத்தார்கள் சேர்ந் துக் கொண்டு அவனை யறுத்துசகலரும் அக்கறியைப் பங்கிட்டுக் கொண்டார்கள்ஹாத்திமுக்குவிருந்துசொன்னமனிதனுக்கும்ஒருபங் குகறியனுப்பிவிட்டுப்போய்விட்டார்கள் அவனந்தபங்கின்கறியைசமை த்துசாயங்கிரவேளையில் (உ-கூ) ரொட்டியுமாகஒரு வனத்திலிகொண் டுவந்துவைத்து ஒருகூஜாவில் தண்ணீருங்கொண்டுவந்து அந்தமனி தன் சொல்லுகிறான் ஓ, முசாபரே நீர் இந்தக்கறியை சுருக்காகத்தி ன்னும்இது மிகுந்த ருசியுள்ளதாக யிருக்கும்இப்பேர்ப்பட்டகறி உன் னுடைய ஆயுசிலும் தின்றிருக்கமாட்டா யென்றுசொல்ல அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் ஓ, என்பிரியனே துனியாவில்ஹலாலானவஸ் துகள்யாவையைதின்றால் சிவன்களை சுபாசெய்து நான் சாப்பிட்டவஸ் துகளின் ருசிகளெல்லாமெனக்குநன்றாகத்தெரியும் ஆனால் நீர் சொல் லுகிற கறியானது எப்பேர்ப்பட்டதாக யிருக்குமென்று ஹாத்திம்கே ழ்க்கஅவன்சொல்லுகிறான் நீயிருக்கஜாதிகளுடைய கறியைத்தின்றிரு ப்பாய்ஆனாலிது மனிதனுடையகறியாகயிருக்கும்உன்னுடையவயதிலு ம்நீ தின்றிருக்கமாட்டா யென்றுசொல்ல அப்போதுஹாத்திம்சொல் லுகிறார் நீங்கள்(ஆதம்கார்)என்றமனிதர்களைத்தின்னும்படியானபுலிக ளாயிருக்கிறீர்கள் ஆனால்உங்களைக்கண்டால்பயப்படவேண்டியதுயா தொருமுசாபர்கள்வந்தால் அவர்களையும் அறுத்துத்தின்பீர்கள் ஆனாலிது உங்களுடையவழக்கம்போலிருக்கிறது இன்றையதினமே தோவொரு வழிதப்பினமுசாபர்இவ்விடம்வந்ததுபோல்தோணுகின் றது அவனைஅறுத்துநீங்கள் சகலரும்கறிபங்கிட்டுக்கொண்டு அக்கறி யைச் சமைத்துசாப்பிட்டுவிட்டீர்க ளென்றுசொல்ல அப்போதவன் சொல்லுவான் ஓ,முஸாபரேநீர்அப்படிசொல்லாதீர்தோபாசெய்யும்ஆ ண்டவனுக்குப்பயப்படும்நாங்கள்முஸாபரையறுத்துச்சாப்பிடுகிறதில் லையென்றுசொல்லஹாத்திம்சொல்லுவார் நீர் சொல்வது சரியாயிருக் கும் எப்படியானால்தங்கள் ஜாதியிலில்லாமல் அன்னியர்களை அறு த்துத்தின்பார்கள்போலிருக்கின்றது இது பொய்யாகயிருக்கும் அதயானால் எங்களுடைய தேசத்தி லிதுவே வழக்கமாயிருக்கும் யாதொருவன் சங்கடப்பட்டுநோயாளியாகிப்போனால் அவனுடை ய இனத்தார்கள் அவனை யறுத்து சகலரும் கறியைப்பங்கிட்டுக்கொ ள்ளுகிறார்கள் ஆகையா லெங்களுடைய வழக்கம் பி ன்னை இவ்விதமானமொழியை ஹாத்திம்கேட்டு மிகுந்த யனவரு த்தத்துடனே சொல்லுகின்றார் உங்கள்யோசனையும் உங்களுடையபட்

ணத்தின்பேரிலும் ஆண்டவனுடையலானத்துண்டாகதாகவும்பின்னு
ஞ்சொல்லுகிறார் ஓ,மனிதர்களே ஆண்டவனானவன் நோயாளிகளுக்கு
சொஸ்தப்படு துகிறான்இன்னம்நோயில்லாதவர்களுக்குநோயுண்டா
க்கவும்வல்லமையுண்டு அப்படியிருக்கஒருவன்நோயாயிருந்தாலவனை
யறுத்து அக்கறியைப்பங்கிட்டுசகலரும்சாப்பிடுகிறவழக்கமாஇன்னம்
எந்தஜாதியிலிவ்விதமிருக்கிறதாஇதுபெரியஜுலுமாகயிருக்கிறதுஇச்
செயலால்நீங்கள்சகலரும்பெரும்பாவவாளியாயிருக்கிறீர்கள் உங்கள்
பேரில்எத்தனைகணக்கில்லாதபழிகள்சுமந்திருக்கிறது ஆதலாலுங்கள்
முகத்தைப்பார்க்ககூடாது அதுமார்க்கத்துக்குவிரோதமென்றுசொல்
லிஎழுந்துநின்றுஒருகாட்டின்பாதையைபிடித்துக்கொண்டுசிலதூரத்
தில்போய்அவ்விடம்என்னபார்க்கிறாரானால் ஒரு வெண்புலியான
து மிகுந்தபசியிளப்பால் நிலத்தில்விழுந்துபதைபதைத்து துடித்துக்
கொண்டிருக்கிறதைஹாத்திம்பார்த்துமிகுந்தமனவருத்தமடைந்து நி
ற்கும்போது ஒருமானானது அவ்விடமிருந்துபோகின்றதைப்பார்த்து
அதின்பேரில் வேட்டையாடி யுடனேகைவசப்படுத்திஅதை அந்தப்பு
லியின்முன்பாகவிட அதையடித்துதன்வயிறுபூரிப்பாகச்சாப்பிட்டுஆ
ண்டவனைசிஜுதாஷுகுராணுசெய்துகாட்டின்வழியாகப்போகின்றது
அப்போது ஹாத்திமானவரும் காட்டில் விதவிதமான கனிகள்பறித்
துப் பொசித்துக்கொண்டு போகிறவேளையில் ஓரேரிகாணப்பட்டது
அதினிடமாகப்போய் கொஞ்சம் தண்ணீரெடுத்து தாகந்தீர்த்து ஆ
ண்டவனிடமாக சிஜுதாஷுகுராணுசெய்துமுன்பாதையைப்பிடித்து
க்கொண்டுபோய்ஒரு காட்டின்வழியாகச்சிலநாள் நடந்துபோகின்றா
ர் பசிநேரிட்டால் அவ்விடத்திலிருக்கின்றகாய்கனிகளைப்பறித்து பசி
யாறிக்கொண்டுபோகையில் அவ்விடத்தில்மனிதர்கள் ஒரு பெருங்கூ
ட்டமாய்க்கூடி யிருப்பதைக்கண்டுஅவ்விடத்தை நோக்கிப்போய் அ
ருகாமையில்சேர்ந்து என்னபார்க்கிறாரானால் ஒருவிஸ்தாரமான மயி
தானத்தில் வெகுசனங்கள்கூட்டமாய்கூடிக்கொண்டுநெருப்பைக்கொ
ளுத்தி அதைச்சூழ்ந்து கொண்டு நின்றிருந்தார்கள் அவர்களிடமா
க அடுத்து ஹாத்திமானவர் கேழ்க்கின்றார் ஓ, சிநேகிதர்களே
இது எந்த ஊராகயிருக்கும் இன்னம் நீங்களாராகயிருக்கும் இந்த
யிடத்தில் நீங்களேன் இவ்வளவு விறகு சேர்த்து நெருப்பாலெரிக்
கின்றீர்க ளென்றுகேழ்க்க அப்போதவர்கள் சொல்வார் ஓ, அக்கிரே
உன்வழியைப் பார்த்துக்கொண்டு போகாமல்நீயேனிதுகளை விசாரிக்
கிறாய் அதினுலுனக்கு என்னபிரயோசனமுண்டு இவ்விடத்தில் யா



தொரு சடங்கு செய்கிறதில்லை ஆனாலுனக் கேதாவது கொடுக்கலா
மென்றால் எங்களுடைய ஜாதியில் ஒருமனிதன் இன்றைபதினை
மிருந்துபோயிருக்கிறான் அவனுடையபெண்ஜாதியானவள் அவனோ
டுஇந்தநெருப்பில் உயிரோடேவிழுந்துஎரிகின்றாள் அப்போது ஹாத்
திமானவர் சொல்லுகிறார் ஓ, சிநேகிதர்களேஇந்தப்பிணத்தை நிலத்
தில் நீங்களேன் புதைக்கிறதில்லைஉயிருள்ளபெண்ணையிறந்துபோன
வனோடேயேனெரிக்கின்றீர்களென்றுகேழ்க்க அப்போதம்மனிதர்கள்
சொல்லுகிறார்கள்.

ஓ, வாலிபனே நீ இந்தவூரானைப்போல் தோற்றியதில்லை இது
(இந்துஸ்தான்) சீமையாகயிருக்கும் இவ்விடத்தில் நடக்கிறவழக்க மி
வ்விதமாகயிருக்கும் எவ்விதமானால் புருஷனிறந்துபோனாலவன்பெ
ண்ஜாதி தன்னிஷ்டமாகவும் சந்தோஷமாகவும் அவனோடிறந்துபோ
கின்ற வழக்கம் எங்களிலிருப்பதா லதுபோலவனோடு நெருப்பில்
போட் டெரிக்கின்றோமென்றுசொல்ல ஹாத்திம்கேட்டு மிகுந்த ம
னவருத்தமடைந்து சொல்லுகின்றார் ஓ, மனிதர்களே பிணத்தினோ
டு உயிருள்ள ஜந்துவையறுக்கிறது மிகுந்த கொடுமையான செய
லாகயிருக்கும் உங்களுடையவழக்கமும் சாஸ்திரமும் எந்தபாவியா
னவன் செய்தானோ அவன் பேரிலும் உங்கள்பேரிலும் ஆண்டவ
னுடையலானத்துண்டாகதாகவும் இந்த பழியும் பெரும்பாவமும் சந்
தேகமில்லாமல் சுமந்திருக்கின்றீர்கள்எவ்விதமானால்ஆண்டவனான
வன்மனிதர்களையெழுத்தாவஸ்துகளில்நின்று அருமையானதாகவும்மே
ன்மையானதாகவும்படைத்துஅவரவர்களுடைய நன்மைதீமைக்காக
(நரகம்) (சொர்க்கம்) ஆண்டவனுண்டாக்கிநன்மைசெய்தவர்களுக்கு
சொர்க்கமென்றும்தீமைசெய்கின்றவர்களுக்கு நரகமென்றும் எல்லா
வேதங்களிலும் முன்னோர்கள் எழுதியசாஸ்திரங்களிலெல்லாங்கண்
டிருக்கஇப்போதுநீங்கள்சகலரும்பாவவழியில்நின்று ஆண்டவன்செ
ய்யாத செய்ல்களையெல்லாம் நீங்கள் செய்து நரகத்தில் போட்டெ
ரிக்கின்றவிதம்போல் உயிருள்ளவர்களையும் இறந்து போனவர்களை
யும்நெருப்பிலேபோட் டெரிக்கின்றீர்கள் நீங்களும் மனிதர்களாவெ
ன்று மிகுந்த மனவருத்தப்பட்டுக்கொண்டு அவ்விடம்விட்டு முன்னே
ல்நடந்து ஒரு ஊரில்போய்தங்கி அவ்விடத்திலொருமனிதனைக்கண்
டுதாகத்துக்கு கொஞ்சம் தண்ணீர்கொடுத்தால் உனக்கு மிகுந்த நன்
றி இருக்குமென்றுசொல்ல அப்போதந்தமனிதன்உடனே தன்வீட்

டுக்குப்போய்ஒருசொம்பில்பாலும் இன்னொருசொம்பில்மோரும்கொண்டுவந்து ஹாத்திம் முன்பாகவைத்துஇவ்விரண்டிலெஸ்தில் உன்மனங்கொண்டதைச் சாப்பிடுமென்றுசொல்ல அப்போது ஹாத்திம் முதல் மோரைக்குடித்துபின்புபாலையும்குடிக்கக்கேட்டார் அப்போதவன் அதில் கொஞ்சம் சர்க்கரையும்போட்டு அப்பாலையுங் கொடுக்க அதையுங்குடித்தார் பின்பு அம்மனிதன் சொல்லுகிறான் ஓ. முசாபரே இப்போது என்வீட்டில் நல்ல உயர்ந்த வாசனையுள்ளசுகுதாஸ் அருசி சமைத்திருக்கின்றது அதை நீர் சாப்பிடுவீரானால் அதையும்கொண்டு வருவேனென்றுசொல்ல அப்போதுஹாத்திம்சொல்லுகிறார் ஓமனிதனேநல்வேலைக்காககேழ்க்கவேண்டுமாவென்றுசொல்லி தன்னுடைய மனதி லவனுடைய நன்மையை நினைத்து ஆச்சரியப்படுகின்றார் அப்போதந்த (இந்துவானவன்) ஹாத்திமுக்காக வேண்டி மிட்டாய் தயார்செய்து தட்டுகளில் வைத்துக் கொண்டு வந்து முன்னில்வைக்க அதையும்மனமகிழ்ச்சியாகச்சாப்பிட்டு அன்றிரவெல்லா மவ்வூரில்தங்கி விடியற்காலையில் அந்த இந்துடையபெண்ஜாதியானவள்வந்துசொல்லுகிறாள் ஓ முசாபரே இப்போதுஉங்களுக்காக காலையில்அன்னஞ்சமைத்திருக்கின்றது அதில்நீங்கள்கொஞ்சம்புசிக்கலாமென்றுசொல்லி பின்னுஞ்சொல்வாள் நீங்கள் நம்மிடத்தில் நாலைந்துநாளிருந்து முசாபராக வெளிப்பிரயாணப்பட்டிருப்பதால் இளைப்பாறிகொஞ்சம்மனதைத்திடப்படுத்திக்கொண்டுபோகலாமென்றுசொன்ன மொழியைஹாத்திம்கேட்டு மிகுந்த சந்தோஷமடைந்து அவர்களைப்பார்த்து சொல்லுகிறார் என்பேரில் நீங்கள் இவ்வளவுகிருபையாகச்சொன்னது எனக்கு மிகுந்த சந்தோஷந்தான் ஆனால் எனக்காக நீங்களேன்வருந்தப்படுகின்றீர்களென்றுசொல்லி அவர்களைமிகுதமாக வாழ்த்தி போற்றினார் அப்போதவர்கள் சொல்லுகின்றார்கள்,

ஓ முசாபரே நாங்கள் உங்களுக்காக வேண்டி வேறே சமைக்கவில்லை எங்களுடைய பிள்ளைகுட்டிகளுக்காகவழக்கம்போல்சமைத்து தின்பதில் உங்களுக்குகொடுத்தோமே தவிர வேறுசமைக்கவில்லைஆனால்உங்களுக்காகவேண்டி நாங்கள்வேறேசமைத்துக்கொடுக்கஎண்ணங்கொண்டிருப்பதால் தாங்கள்எங்கள் பேரில்தயவுசெய்து (சிலநாள்)நாளைக்குஇவ்விடமிருந்தால்வெகுநலமென்றுசொல்ல ஹாத்திம்சொல்லுகிறார் உங்களுடையஎண்ணத்துக்கும் நடப்புக்காகவே



ண்டி உங்கள்சொல்கடவாமல் இரண்டுமூன்றுநாளைக்கிருப்பேனென்றுசொல்ல அவர்கள்மிகுந்தசந்தோஷமாகி ஒருஅழகுள்ளமஹாலை வாடகையாகவாங்கி அதில்கட்டில்மெத்தைநாற்காலிமுதலியசாமான்கள்கொண்டு போய்போட்டுஅதுகளில்மிகுந்தவேலைப்பாடுள்ளபட்டுப்பட்டாவளிகள்கார்ச்சோப்பிசரிகைவேலைசெய்யப்பட்டவிரிப்புகளினால், கட்டிலின்மெத்தைமேல்விரித்துஹாத்திமென்பவரை அதிலிருக்கும்படி செய்து பின்புஅவருக்குமுன்பாக ஒரு (தஸ்தர்கான்)என்றவிரிப்புமேலானதாகக்கொண்டுவந்து விரித்துஅதின்மேல்விதவிதமான புலாவுகள் கனிவர்க்கங்களும் மேவாமிட்டாய்களும் கொண்டுவந்து வைத்துசொல்லுகிறார்கள் இதுகளில்தாங்கள்மனதிஷ்டம்போல்எங்கள் பேரில் கிருபைவைத்து திருப்தியாகச் சாப்பிட்டால் எங்களுக்கு மிகுந்த யெசானுமவு நன்மையாகவுமிருக்கும் ஹாத்திமானவர் மூன்றுதினமூர் வெளிப்பட்டதின்பின் இப்பேர்ப்பட்ட வஸ்துகள் இதுவரையில் சாப்பிடாதிருந்ததினால் மனமகிழ்ச்சியாகப்புசித்து அவர்களை மிகுதமாகவாழ்த்தி போற்றி சொல்லுகின்றார் (இந்தஹிந்துஸ்தான் என்பதுமிகுந்தகுலிஸ்தானாக யிருக்கின்றது) அதின் விபரம் குலிஸ்தான்னென்றால் வாசனைபொருந்தியபூங்காவனத்தோட்டத்துக்குப்பேராகயிருக்கும்இப்பேர்ப்பட்டசீமையில் ஒருகெட்ட நடப்பிருக்கின்றது அது என்ன வென்றால் உயிருள்ள பெண்ணை இறந்துபோன புருஷனோடு நெருப்பில்போட்டெரிக்கின்றது அப்போது அந்தஇந்துவானவன்சொல்லுகின்றான் நீங்கள்சொன்னதுசரிதான் ஆனால்பெண்புருஷன்பேரில்மிகுந்தஆசையும்அன்புமாகஆசைக்குமாசைக்காகயிருக்கின்றார்கள் அப்படியிருக்கையில் புருஷனிறந்தபின்பு பெண்சாதியிருக்கிறதுநாயமல்லஆனாலும்நாங்களவளைவலுவாக எரிக்கிறதுமில்லை அவள் தன்னுடையபுருஷனோடுதன்னிஷ்டத்தால் நெருப்பில்விழுந்துஉயிர்போக்கிக்கொள்ளுகிறாள் ஆனால்நீங்கள்இப்பட்டணத்தில்இன்னஞ்சிலநாளிருப்பீராகில் அதினுடைய சங்கதிகளைஉங்களுக்குநன்றாய்த்தெரிவிக்கிறேன் அதுபோலஹாத்திம்சிலநாளிருக்கையில் அப்பட்டணத்தரசன் வியாதியாகயிருந்து (௨)(௩) தினத்துக்குப்பின் இறந்துபோனான் அவனுக்கு அழகுபொருந்திய நான்குபெண்சாதிகளிருந்தார்கள் அதில் மூன்றுபெண்சாதிக்கு ஒருஆண்பிள்ளையுமிருந்தது அந்த நான்குபெண்சாதிகள் வெளிப்பட்டு அப்பிணத்தின்றும் எவ்விதமாகப்போகின்றாரானால் மிகுந்த விலைபெற்ற சரிகைவேலைசெய்தகின்காபுடவை மெருகுத்திவிலைபெற்ற சரிகைப்புடவை

கள் மேல்கட்டிக்கொண்டும் விலைமதிக்காத ரவிக்கைகளும் போட்
டுக்கொண்டும் திரேகங்கொள்ளாத நவரத்தினநகைகள் பூண்டுக்கொ
ண்டு சந்தோஷமாகக் கழுத்தில் பூமாலைகளும்அணிந்து வாய் நி
றைய தாம்பூலமும் தரித்து சந்தன மத்தர் புனுகு ஜவ்வாது
களும் பூசிக்கொண்டுசந்தோஷமாகப்போகையில்அவர்களைச்சேர்ந்த
பந்து ஜனங்களெல்லாம் வந்து அப்பெண்களின் கால்களில் விழுந்து
அழுதுக்கொண்டு சொல்லுகின்றார்கள் அம்மா நீங்கள் நெருப்பிலே
வீணாகப்போய்விழுந்து உயிரைப்போக்கடிப்பதுதர்மமல்லநீங்கள்
திரும்பிவிடுங்களென்றுசொல்லஅவர்களென்னசொன்னபோதிலும்
அந்தப்பெண்கள்கேழ்க்காமல் அப்படியேபோகின்றார்கள்அதெல்லா
ம் ஹாத்திமானவர் பார்த்து மிகுந்தமனவருத்தமடைந்து ஜனங்களை
விலக்கிக்கொண்டுஅப்பெண்களிடமாகப் போய்சொல்லுகின்றார் ஓ,
பெண்களே உங்களைப்பார்த்தால் பரிஜாதிகளைப்போலொத்தஅழகும்
வடிவும்பொருந்தியிருக்கின்றீர்களே உங்களுக்குஆண்டவன்நற்புத்தி
யும் நல்லறிவும்கொடுக்கவில்லையா கொஞ்சமாவதுவெழ்க்கமென்றப
ர்தாவை யெடுத்துப் போட்டு இறந்துபோன பிணத்தோடு கண்கொ
ள்ளாத ஆண்பிள்ளைகள் அன்னியர்கள் முன்பாகநீங்கள் வெளியில்
வரலாமா உங்கள் உயிர்களை வீணாக நெருப்பிலேன்போக்குகிறீர்கள்
உங்களுக்கு ஆண்டவன் ஒருபோதும் நன்மைகொடுக்கமாட்டான்நீ
ங்கள் அநீதமாக உயிரைக்கொடுப்பது தர்மமல்லவென்று அனேகவி
தமானமுகாந்திரமெல்லாம் ஹாத்திம்சொல்லஅப்போதந்தப்பெண்க
ள் அம்மொழிகளைக்கேட்டுகுஞ்சிரிப்புகொண்டுசொல்லுகின்றார்கள்
ஓ, வாலிபனே உன்னையுமிச்சனங்களையும்நாங்கள்பார்த்தால் எங்களு
க்கு வெழ்க்கம் வரமாட்டாது அதேனென்றால்நாங்களிப்போதுஉயிர்
போனபிணமாக யிருப்பதால் எங்களுக்கு கோஷாமறைவு ஒளிவு
பர்தா வேண்டியதில்லை ஆனால் அது எவ்விதமான நாளாகயிருக்
கும் இந்தப்பிணத்தோடு நாங்கள்எவ்வளவுஇன்பமோகமென்றவெள்ள
த்தில் முழுகியிருந்தோமல்லவா இப்போது அவன் இறந்துபோயிருப்
பதால்நாங்கள் வெறுபட்டிருக்கின்றோம்அவர்உயிரோடிருக்கும்போ
து எங்களுடைய ஆசையும்இன்பமும்மோகமுமடைந்துகொண்டுசந்
தோஷமென்றசாகரத்தில்முழுகிக்கொண்டிருந்தோம் அவ்விதமானச
ந்தோஷத்தையடைந்துஇப்போதுஇவருக்குப்பின்பு அந்தயின்பத்தை
யும் சந்தோஷத்தையும் நாள்தோறும்நினைந்து ஆயிசெல்லாம்துக்கத்
தில் முழுகிக்கொண்டிருப்பதைப்பார்க்கிலும்இவரோடுநெருப்பில்வெ



ந்துஉயிர்விடுவதற்காகநாங்களிவ்விதமான செயல்கள்செய்கின்றோம்
இல்லாவிட்டால் எங்கள் ஆயுசெல்லாம் துக்கமும் துன்பமுமடையு
ம் படியாகநேரிடுமிதல்லாமல் இன்னமுமனதில் ஒரு அச்சம்வருகின்
றது ஒருவேளைநம்மைக்கெடுக்கும்படியானஷயித்தான்கூட இதிலிருப்
பதால்அவன் எங்கள்மனதைத்திருப்படித்துபாவத்தின் வழிபோகும்
படியாகச்செய்வான்ஆகையால் எங்களுடைய புருஷனைமறந்து விட்
டு அன்னியபுருஷன்பேரில் பார்வையாகி நம்முடைய நல்லடப்பான
பத்தினித்தனத்தைஇழந்துபோகும்படியாகநேரிடும்அப்பேர்ப்பட்ட
முசாரத்தின் நடக்கையின்பேரில் ஆண்டவனுடைய லானத்துஇறங்
க இவ்விதமானமொழிகள் சொன்னபோதிலும் கேழ்க்காமல் பயி
த்தியங்கொண்டவர்களைப்போல அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு
தங்கள் புருஷனுடைய- பல்லக்கைப் பிடித்துக்கொண்டு மசி
னசத்திவிழுவதற்குப் போகின்றார்கள் பின்பு சத்திவிழுகின்றபள்
ளத்தில் இந்நான்குபேரும்போய் சந்தோஷமாகச்சிரித்துக்கொண்டுஇ
றங்கினார்கள் அப்போதப்பிணத்தையும் எல்லோரும் கூடி அவர்களி
டமாகஇறக்கிவிட அப்பெண்கள் அப்பிணத்தை சூழ்ந்துக்கொண்டு
அதிலிருவர் அவனுடைய தலையையெடுத்து தங்களுடைய முழங்
கால்களில் வைத்துக்கொண்டார்கள் இன்னமிரண்டுபேர்கள் அவனு
டைய கால்களையெடுத்து தங்களுடையமடிகளின்மேல்சந்தோஷமாக
வைத்துக் கொண்டதின்பின் அவனோடு அப்பெண்களைச்சேர்த்துக்
கட்டி விறகுகளைக்கொண்டுவந்து அடுக்கி சுற்றிலும் வைக்கலை நிர
ப்பி நாலுபக்கங்களிலும் நெருப்பினால் கொளுத்தி அதின் மேல்
எண்ணெய் குங்கிலியத்தையும்போட்டுவிட்டவுடனே அப்பெண்கள்
ஹரீ-ஹரீயென்றசொல் கொஞ்சநேரம் வந்ததுபின்பு அக்கினிபற்றி
நாலுபக்கமுமெரிய அந்தப்பெண்கள் வெந்துசாம்பலாகிப்போனார்கள்
அப்போதந்த வேடிக்கையை ஹாத்திம்பார்த்து மிகுந்தமனவருத்தப்
பட்டு அந்தஇந்துவானோடுதானிருக்கும் ஜாகைக்குவந்துவிட்டார்.

பின்பு கூட நின்றவர்களும் அவனுடைய இனத்தார்களும் மிகு
ந்ததுக்கத்தை யடைந்துகொண்டு தங்கள் தங்கள்வீடுகளுக்குப்போய்
விட்டார்கள் பின்பு அந்த இந்துவானவன் ஹாத்திமைப்பார்த்துச்சொ
ல்லுகின்றான் ஓ, வாலிபனே பார்த்தீரா அந்தப்பெண்கள் தங்களுடைய
உறுதிப்பாட்டாலும்தங்கள் மனதுக்குயாதொருவருத்தமில்லாமல்சிரித்
துக்கொண்டுதங்களிஷ்டம்போல் நெருப்பில்வெந்துபோனார்களேபா

அல்லது ஆணிவர்கள் தங்களுடைய வாலிபத்தில் வராவிட்டால் அதுவரையில் நாங்களவர்களைக் கலியாணஞ்செய்கிறதில்லை எவ்விதமானால் அவரவர்கள் சந்தோஷமாகஉறுதிப்பாடுசெய்துகொள்ளுகிறது எவ்விதமானால் நாம் இருவர்களிலொருவர் இறந்துபோனால் என்னோடு உன்னையும் உயிராகப்புதைக்கப்படுவதென்று வாக்குதத்துவஞ்செய்துகொண்டதின்பின்பு அவர்களிருவரையுங்கூட்டிகலியாணஞ்செய்துகொடுக்கிறது அதுபோலிந்தமனிதனும் எங்கள் ஜாதிவழக்கம்போல் நடக்கிறேனென்று வாக்குதத்துவஞ்செய்து என்பெண்பேரிலிச்சைகொண்டான் அப்போது இவனுடைய எண்ணமும் இச்சையும் சரியாகயிருக்குமென் றெண்ணி இவர்களிருவரையும் இந்த ஊருக்கு அதிபதியாகிய பாத்துஷாவினிடத்தில் கொண்டுபோனேம் அப்போது இவர்களிருவரையுங்கேட்டார் எங்களுடையஊரில் இவ்விதமான வழக்கமிருக்கிறது அது எவ்விதமானால்பெண்ணிறந்துபோனால் புருஷனை அவளோடு உயிராகப் புதைக்கிறது அல்லது புருஷனிறந்துபோனால் பெண்ஜாதியை உயிராகஅவனோடுசேர்த்துப்புதைக்கிறதென்று சொல்ல அப்போது இருவர்களும் ராசியாகி ஒப்புக்கொண்டார்கள்.

பின்பு இருவருடைய எண்ணத்தை நான் பார்த்து கலியாணமுடித்துக்கொடுத்துவிட்டேன் அவ்விதமாகப்புருஷனும்பெண்ணும் சிலநாள் சந்தோஷத்தை யடைந்துக்கொண்டு அந்தப்பெண்ணுடைய வாலிப பூங்காவனத்தின் பூவென்ற இன்பமதுரமான வஸ்தைக்கொள்ளையடித்துக்கொண் டிருந்தான் இவ்விதமாக இருக்கையில் அப்பெண்ணனவள் இறந்துபோனாள் இப்போது இவன்தன்னுடைய வாக்குதத்துவம் போல் சந்தோஷமாக அப்பெண்ணோடு புதைக்க ராசிப்படேனென்று சொல்லுகிறான் அதினலிப்போது யாருடையபேரில் தப்பிதமிருக்கின்றது நாங்கள் ஒருவரையும் வலுவாகப் புதைக்கிறதில்லை அப்படிக்குகட்டி அவளோடுகுழியில் புதைத்தாலது ஞாயமாகவிருக்கும் ஆனலிவன் தன்னுடைய வாக்கில்நின்று ஏன்மாறியிருக்கின்றான் இவன்சொன்னவாக்கையேன்நிறைவேற்றுகிறதில்லை இம்மொழிகளைக்கேட்டு ஹாத்திமானவர் அவரிடமாகப் போய் சொல்லுகிறார் ஓ, வாலிபனே நீசெய்த கறார்போல் நடக்காமல் நீ ஏன் தகுறார் செய்கின்றாய் நீ இந்த லோகத்தில் எத்தனைகாலம் பிழைக்கப் போகிறாய் எத்தனைகாலம் பிழைத்திருந்தாலும் ஒருநாளிறக்கவேண்



டும் ஆனலினி எவ்விதமாக இக்கறார்செய்தாயோ அதுபோல் நடக்கவேண்டும் அது உனக்குநன்மையாகயிருக்குமென்று ஹாத்திம்சொல்ல அம்மனிதன் சொல்லுகிறான் ஓ, முசாபரே நீருமவர்களோடுசேர்ந்துக்கொண்டு இவ்விதமாகச் சொல்லுகிறீர் அவர்களுக்கு உங்களுடைய தேச நடக்கையும் வழக்கத்தையும் ஏன் சொல்லாமலிருக்கிறீரென்றுசொல்ல அப்போது ஹாத்திமவனுக்குச்சொல்லுகிறார் நீ அவர்களுக்கு இக்கறார் என்ற வாக்குதத்துவம் கொடுத்திருக்கின்றாய் அந்தவாக்கை நிறைவேற்றாமல் அதில்நின்றுமாறுகிறது உனக்குவெட்கமில்லையாவென்றுசொல்ல அப்போதவன்சொல்லுகிறான் அந்தவேலை என்னாலெப்போதும் முடியாது அவர்கள் சொல்வதுபோல் இறந்துபோனவளோடுநானுயிராயிருக்கப்பட்டவன் எப்படி புதைக்கப்படுவேனென்று சொல்ல அப்போது ஹாத்திமென்னுகிறார் அவர்கள் இவனை அவளோடு புதைக்காமல் விடப் போகிறதில்லை இவனும் தன் மனராஜிபால் அவளோடு புதைபட மாட்டானென்கிற குணங்கள் தெரியவந்து அம்மனிதனுக்கு தங்கள் தேசபாஷையால் சொல்லுகிறார் எவ்விதமானால் ஓ, என் தோழனே நானுன்னை எவ்விடத்திலும் கபுரிலிருந்து தப்பி வெளிப் படுத்துகிறேன் நீ அவர்கள் சொல்போல் கபுரிலடக்கமாய் விடுமென்றுசொல்லவல்லேதுநீ என்னையெடுக்கிறவரையில் கபுரி லென்னுடையசிவனிருக்குமா கொஞ்சநேரத்துக்குள்சுவாசபந்தாகிப்போய் திக்குமுக்குககொண்டு என்னுயிர் வீணாகப் போய்விடுமென்றுசொல்ல அப்போதம்மொழியை ஹாத்திமொத்துக்கொண்டு அவனைத் தேறுதல்செய்து அவர்களுக்கு சொல்லுகிறார் ஓ, என்னுடைய பிரியமானவர்களே அவன் தன்னுடையபாஷையால் சொல்லுகிறான் எவ்விதமானால் எங்கள் தேசத்தின்வழக்கம் கபூரைஇபாதத்துசெய்கிற (ஹுஜுரு)என்றசின்ன அறைப்போல் கட்டி என்னையுமந்தப்பெண்ணையு மதினுள்ளேவைத்தால் என்னிஷ்டம்போ லதிலடங்கிவிடுவேனென்று சொல்லுகிறானென்று ஹாத்திம சொல்ல அப்போதவர்கள் கேட்டு நாங்க ளிதற்காக ஜவாபு சொல்லமாட்டோம் எங்களுடைய சர்தாரிடத்தில் தெரிவிக்கிறோம் அவர் சொல்வது போல் நடப்போமென்று சொல்ல ஹாத்திமானவர் அவர்க ளெல்லபேரையும் அந்த ஹாக்கிமென்ற சர்தாரிடமகக் கொண்டு போய் சொல்லுகிறார்கள் ஓ, ஆண்டவனே இந்த மனிதன் இப்பெண்ணோடு சுத்தமாக புதைக்கப்படமாட்டேனென்றுசொல்லுகிறான் எங்கள் தேசத்தின் வழக்கம்போல் குழிகட்டினல் நான

அதிலடக்கமாகுமேவேனதவிர வேறில்லையென்றுசொல்லுகிறான் அப்போதந்தசர்தாரானவன்சொல்லுகிறான் அந்த(ஹுஜுறு)என்பதெவ்விதமாகயிருக்குமென்றுகேழ்க்க அப்போதுஹாத்திம்சொல்லுகிறார் ஓ, சர்தாரே அவ்விடத்தில்குழிகள்கட்டுகின்றது(ய)(மஉ)பேர்கள் உட்காரும் படிக்கும் விஸ்தாரமாக யிருக்க வேண்டிய தென்று சொன்னவுடனே அந்த சர்தாரானவன் தன்தலையைமுழங்காலில் சாய்த்துக்கொண்டுகொஞ்சநேரம்பொறுத்துதலையையுயர்த்தி பார்த்துசொல்லுகிறான் நல்லது அவன்சொல்லைப்போல்குழிகட்டி அவன்சந்தோஷமாகும்படிக்கு அதிலடக்கஞ்செய்யுங்களென்றுசொல்ல அம்மொழியை அந்தமனிதர்கள் கேட்டுக்கொண்டு ஹாத்திம்சொன்னதுபோல் ஒரு ஹுஜுறு கட்டினார்களப்போது அந்தமனிதனுக்கு வேறுபாஷையால் தெரிவித்தார் இப்போது நீ யாதொருதடங்கலில்லாமல் இதினுள்ளே போயிரு நான் எவ்விதத்திலுமின்றையராத்திரி வெளிப்படுத்திக்கொண்டு போகிறேனென்றுசொல்ல அப்போது ஹாத்திமுடையசொல்லைநம்பி அதில்போக ராசியாகி அவர்களுக்குசொல்லுகிறான் ஓ,மனிதர்களே இனிநீங்கள் தாமிஷப்படுத்தவேண்டாம் எவ்விதமாகயென்னுடைய தீர்க்கமோ அது எனக்கு ராசியாகயிருக்கின்றது அப்போதவர்களிருவரையுமந்தஹுஜுறுவில் போட்டுஒருபெரியகல்லினால்அதினுடையவாசலை யடைத்துப்போட்டு ஹாத்திமும் எல்லோரும் கூடிக்கொண்டு தங்களுடைய நகரம்போய்ச் சேர்ந்து ஹாத்திமுக்கு விருந்தளித்தார்கள் அவரிருக்க ஒரு நல்லஇறமான வீடு ஒழித்துக்கொடுத்தார்கள் அப்போதுஹாத்திமானவர்எப்போதிரவாகுமோவென்றவெளியைப்பார்த்துக்கொண்டிருந்தார்எவ்விதத்திலுமந்தமனிதனை அந்தஹுஜுறுவிலிருந்தெடுக்கவேண்டுமென்றும் அப்போது பொழுதுபோயிரவாகின வுடனேஹாத்திமானவர் மண்வெட்டியும் ஒருகத்தியையும் கையிலெடுத்துக்கொண்டுஅந்தஹுஜுறுவினிடமாகப்போனார் அவ்வூரின்வழக்கமூன்றுநாள்வரையிலும் அந்தமய்யத்துடைய இனத்தார்கள் இரவில்வந்து காவலாயிருக்கின்ற வழக்கமாயிருப்பதால் மூன்றுநாள்வரையிலும்தங்களுடைய பெண்சாதிகள்முகத்தையும்பார்க்கக்கூடாது அப்படியிருப்பதால் ஹாத்திமுக்குசந்தர்ப்பப்படாமல் இம்மூன்றுநாளும்போய் இரவில் பார்த்துக்கொண்டிருந்தார்.

நாலாநாள் அந்தமனிதர்களெல்லோரும் தங்கள் தங்கள் வீடுகளுக்குவந்துவிட்டார்கள் அன்றிரவு ஹாத்திமானவர் எழுந்துஅக்கபு



ரிடமாகப்போனார் அப்போதந்தக்கபுரிலுள்ளவன்ஹாத்திமையினைத்து மனதுக்குவந்ததுபோல் பினத்திக்கொண் டிருக்கின்றான் எவ்விதமாகு அந்த முசாபரானவன் மிகுந்த பொய்யான தகல்பாஜாகயிருக்கின்றான் இந்த யெளியவனை தன்னுடைய பொய் சூது பித்தலாட்டத்தினாலே யென்னைமாறுபாடுசெய்து எனக்கு எத்தனையோ தமிழிஞ்சொல்லி இந்தக்கபூரில் என்னைத்தள்ளி யடக்கஞ்செய்துபோய்விட்டானல்லவா நான் ராஜியாகாமலிருக்க இவன்சொல்லை நம்பி மெய்யுள்ளவனென்று இவன் எப்பேர்ப்பட்ட சினேகிதன் இவனுக்கு என்னகூடி தலையாச்சு தென்று மனவருத்தத்தோடும் பசி யினாபாலும் புலம்பிக்கொண் டிருக்க அப்போது ஹாத்திம் அந்த ஹுஜுறுவின் வாசற்படியில் தன்னுடைய காதைவைத்துக்கொண்டு அவன் சொன்னசொற்களையெல்லாம்கேட்டு மனவருத்தமடைந்து அப்போதவனை அடைத்திருக்கின்ற வழியாக வாயை வைத்துக்கொண்டு அவனைக்கூப்பிட்டார் ஓ, வாலிபனே உன்னை யெடுக்க நான் வந்திருக்கிறேனென்றுகூப்பிட்டபோதிலவன்பதில் யாதொன்றும் ஜவாபு கொடுக்கவில்லை அப்போது ஹாத்திம் எண்ணுகிறார் இப்போதுபுலம்பிக்கொண்டிருந்தானே என்னமோ ஒருவேளை யிறந்துபோனானோவென் றெண்ணி பின்னொருதரம் கூப்பிட்டார் அதற்கும்பதில் சொல்லவில்லை அப்போது ஹாத்திம் மனதில் எண்ணினார் இவனிறந்துதான் போனானென்று மிகுந்த துக்கத்தோடு கண்ணீர்சொரிய அழுது பின்னொருதரமதிக சத்தமாகக் கூப்பிட்டார் ஓ, வாலிபனே நீஉயிரோ டிருப்பாயாகில் எனக்கு சுருக்கில் ஜவாபுகொடு இல்லாவிட்டால் கியாமவரையில் இந்த கபூரில்தா னிருக்கும்படிக்கு நேரிடும் நான் என்னுடைய வாக்கைப்போல் இப்போது வந்திருக்கின்றே னென்றசத்த மவன் காதில் விழுந்தவுடனே யாரோ கபுறினிடமாக நின்றுகொண்டு கூப்பிடுகிறானென்று மெள்ள யெழுந்து அந்தவாசற்படியில் வந்துநின்றுக்கொண்டு கேழ்க்கின்றான் நீயாராகயிருக்கு மென்னைக்கூப்பிட்டவன் அவனுடையசத்தம்வந்தவுடனே ஆண்டவனிடமாகநின்று தாஷூக்குருணு தொழுது சொல்லுகின்றார் நானானவன் உனக்குவாயிதாசொல்லிப்போனவனென்றும்சொல்லிஇடுப்பில் கட்டியிருந்தகத்தியையெடுத்து மண்வெட்டியினால் மெள்ள வெட்டி கத்தியினாலும் மெள்ளக்கெல்லி ஒரு ஆள்வெளியே வரும்படியான தொளைசெய்து அவனைமெள்ள வெளியிலெடுத்து உட்காரவைத்து அவனுடைய பயாசி தாகம் தீரும்படிக்கு [illegible] தண

ணீரும்குடிக்கக்கொடுத்து தாகமிளப்பு தீர்ந்தபின்பு ஹாத்திம் அவ
னைப்பார்த்து (மூன்று)நாளாக இவ்விடத்தில்நடந்தசங்கதிகளைத்தெ
ரியப்படுத்த அவன்ஹாத்திமை மிகுந்த வணக்கத்துடனே அனேகமூ
ரு வாழ்த்துதலைச்செய்து என்னுடைய உயிரைக்காப்பாற்றியவல்லமை
சாலியே உன்னைப்போலொத்த வாக்குமாறுதமனிதனையவனை நான்
யாரோடொப்பனை சொல்வேனென்று அனேகவிதமான மொழிகளைப்பே
ச அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் நீ இனியிவ்விடத்தில்தலைகாட்
டாமல் இக்ஷணமேபுறப்பட்டு உனக்கிஷ்டமான ஊருக்குமெள்ளநடந்
து இந்தயெல்லையைவிட்டு அப்புறம்போய்விடுமென்றுசொல்லி அவ
னுக்குவழிச்செலவுக்குதன்னிடத்திலிருந்ததைக்கொடுத்து அவனைசில
தூரத்தில் கொண்டுபோய்வழிகாண்பித்துவிட்டு அந்தகபூரைமுன்னி
ருந்ததுபோல அடையாளம் தெரியாமல்மூடிவிட்டு தன்னுடையஜா
கையிலொருவருக்கும் தெரியாமல்வந்துபடுத்திருந்து பொழுதுவிடிந்
தவுடனே ஹாத்திமானவர் அம்மனிதர்களிடமாகச்சொல்லுகின்றார்
நான் கோஹேகிதாவென்ற யிடத்தின்சங்கதியைஅறியப்போகவேண்
டும்அதற்காகவேண்டிநீங்கள்உத்தரவுகொடுக்க வேண்டுமென்றுசொ
ல்ல அப்போதவர்கள் சொல்லுகிறார்கள் ஓ, வாலிபனே கோஹேகிதா
வென்ற யிடம் இவ்விடத்துக்குஅருகாமையாகயிருக்கின்றதுமெத்த
கலமாகும் நீங்கள்போகலாம் ஆனால் நாங்கள்சொல்லுகின்ற மொழி
களை நன்றாக ஞாபகமிருக்கட்டும் நீர் கொஞ்சதூரம் போனால் அவ்
விடத்திலிரண்டு பாதைபிரியும் அப்போது நீர் இடதுபக்கம்வழியாக
ப்போகவேண்டும்அப்படிபோவாயாகில் நீகொண்டயெண்ணம் நிறை
வேறும் அம்மொழிகளைக் கேட்டுக் கொண்டு அவர்களிடமாக உத்தர
வுபெற்றுக்கொண்டு (௰)நாள்இரவும்பகலுமாகநடந்து வழிகளைத்தொலை
த்துக்கொண்டு போகிறார் (௰௧) நாள் இரண்டுபாதை பிரிகின்றயிடத்
துக்குப்போய் சேர்ந்து அவர்கள்சொன்னமொழிகளைமறந்துவிட்டுவ
லதுபக்கமாகப்போகவேண்டாமென்றபாதையைப் பிடித்துக்கொண்
டொருபெரியகோரமானகாட்டின்வழியாகப்போகின்றார் அப்படிபோ
கின்றவேளையில் அந்தக்காட்டிலிருந்துகூட்டங்கூட்டமாக நாற்கால்
மிருகங்களும் புலி கரடி யானை காண்டா மிருகங்களும் பயந்து காற்
றுப்போல் பறந்துக்கொண்டு எதிரில் வரக்கண்டு ஹாத்திமானவர்ப
யந்து அச்சமடைந்து ஒரு செடியின்மறைவில் ஒளிந்துநின்று பார்த்
துக்கொண்டு நிற்கின்றபோது எல்லாமிருகங்களும் பின்னால் ஒரு
சிறிய கோரமான முகமுள்ள மிருகமானது இருகண்களும் நெருப்



பைப்போல் பெருமூச்சு விட்டுக்கொண்டு மிகுந்த ஆங்காரமாக சத்
தம்போட்டுப்பின்னால்துரத்திக்கொண்டு வருவதைப்பார்த்துஹாத்தி
மானவர் பயந்துஇந்தின்னபெரியகோரமானமூதேவியாக மிருகமிரு
க்கிறது அந்தமூதேவியினால்யிப்பேர்ப்பட்டமிருகங்களெல்லாம் பயந்து ஓ
டுகின்றது நாம் எந்தமூலையோவென்றுகலங்கிநாமிவ்விடத்திலிருந்தா
ல் மோசமென்று மனதிலெண்ணி உடனே அவ்விடத்தி லிருக்கிற
ஒருபெரிய மரத்தின்மேலேறிமனதை தயிரியப்படுத்திக்கொண்டுதன்
னிடுப்பிலிருந்தகத்தியையுருவிகையில் பிடித்துக்கொண் டிருக்கின்ற
வேளையில் அக்கோரமானமிருகமானது அந்த மரத்தின்கீழ்வந்துஉ
டனே மனிதனுடையவாசனையைமுகர்ந்து மரத்தின்மேல் பார்த்து ஒ
ருசத்தம்போட்டு பாய்ச்சல்பாய்ந்து ஹாத்திமைபிடித்துத்தின்னஎண்
ணங்கொண்டு வாலைமுறுக்கி கொம்பிமூச்சை ஒடுக்கிக்கொண்டுமகா
கோபத்துடனேமேலேயெழும்பி ஹாத்திமுடைய உடம்பி லிருகை
களையுமெடுத்து நீட்டி யிழுக்குமுன்னில் ஹாத்திமானவர்தன்னுடை
ய உருவினகத்தியினால் மகாவீரத்துவத்துடனே ஒருவீசாகவீசவும்
மிருகத்தினுடைய இருகால்களும் இரண்டு துண்டாக விழுந்தது ஒ
ருசத்தம்போட்டு ஆங்காரத்துடனே எழும்பி தன்னுடைய வாயைக்
கொண்டு கடிக்கப்போனவுடனே ஹாத்திமானவர்கத்தியால் தூக்கி
ஒரு வெட்டு அதினுடைய வயிற்றில் பட வயிற்றின்குடல்களெல்
லாம் வெளியில்வந்துவிட்டது சத்தம்போட்டு நிலத்தில் விழுகின்ற
வேளையில் அதினுடைய வயிற்றிலிருக்கும் மூத்திரப்பையானதுகிழிந்
து நிலத்தில் பலபக்கங்களிலும் சிதறிசிந்தினதுளிகள் வந்துகேட்
டுதோ அவ்விடத்திலுள்ள புல்பூண்டு மரங்களெல்லாம் பற்றிக்கொ
ண்டெரிந்து ஹாத்திமேறிய மரத்தினருகில்நெருப்பு பற்றிக்கொண்டு
வருகையில் அந்தநெருப்பின் அனல் மிகுந்து எரிச்சலாக ஹாத்திமு
டைய தேகமெல்லாங் கன்றி கருத்தாக மரத்தின் கீழிறங்கி அவ்வி
டத்தில் ஒரு தடாகமான குளமிருந்தது அக்குளத்தில் போய்குதித்
து முழுகி வெப்பமாறியபின்பு குளத்தின்மேலேறி அந்த மரத்தினரு
கில்போய் மிருகமானது இறந்துகிடப்பதை ஹாத்திமானவர் பார்த்து
அதினுடைய நான்குபற்களைப்பார்த்தால் நான்குகத்தியைப்போல் கூ
ர்மையாக யிருக்கின்றது அப்போது ஹாத்திமானவர் தன்னுடை
யகத்தியினால் நான்கு பற்களையும்தட்டி பிடுங்கிக்கொண்டும் அதி
னுடைய இருகாதுகளையும் வாலையுமறுத்து கத்தியினுடைய உறை
யில் போட்டுக்கொண்டு சிலநாள்நடந்து காடுகளுந்திர. மெல்லக்

தாண்டிப்போகும்போது அவ்விடத்தில் பெரிதானஒருகோட்டை துலேவில் காணப்பட்டது அந்தக்கோட்டையைப் பார்க்கநடக்கிறார் அப்போதந்தக் கோட்டைக் கருகாமையில் போய் அதினுடைய மதில்களைப் பார்த்தால் வானத்தை யளாவிக்கொண்டு நிற்கிறது அதைப்பார்த்து அதினுள்போய் அவ்விடத்தில் பார்த்தால்கண்ணுக்கடங்காத பெரிய பெரிய மெத்தைகளும் மஹால்களும் வெகு வேடிக்கையாகவும் அலங்காரமானவேலைகள் செய்ததாகவும் கண்ணாடி யொளியைப்போல் வீடுகளும் மின்னுகின்றதுபின்னுங்கொஞ்சதூரம் எட்டிப்போனால் கடைகளும் கடைத்தெருவுகளும் அலங்காரவீதிகளும் பார்த்தால்வெகு அழகாகவும் ஒழுங்காகவுமிருக்கிறது எந்தகடைகளைபார்த்தாலும் என்னென்ன வஸ்துகள்வேண்டுமோ அதுவெல்லாம் நிறைந்திருக்கிறதுஇவ்விதமாகப்பட்டணந்தோறும்வைத்துவைத்தாற்போ லிருக்கின்றது ஆனால்மனிதருடைய இருப்பு நடப்பு யாதொன்றுங்காணவில்லை இதுகளைப்பார்த்து மிகுந்த ஆச்சரியமும் அச்சமும்பட்டுஹாத்திம் மனதிலெண்ணுகிறார்இந்தப்பட்டணத்திலுள்ளவர்கள்ஒருவராவது இல்லாததினால் ஏதோயிந்தவூரிலொருபெரிய பலாவானது வந்திருக்கவேண்டும்அதினுடைய அச்சத்தால் வீடுகளிலும் கடைகளிலும் யாதொருமனுஷில்லாமல்திசைதப்பியோடிப்போயிருக்கிறதுபோல் தோணுகிறதென்று பின்னுமுன்னே நடக்கையில் அவ்விடத்தில் பாத்துஷாவுடைய அரண்மனைவாசற்கருகில் முடுகிப்போய்ச்சேர்ந்தார் அப்பட்டணத்து பாத்துஷாவானவர்தம்முடைய அரண்மனையில் நாலாபக்கத்திலுங்கதவுகளை சாத்திக்கொண்டு தன்னுடைய பெண்சாதி பிள்ளைகளும் சிந்துசொந்த பந்துசனங்களுமாகத்தம்முடைய உண்பினைதின்பினைக்காக வேண்டிய வஸ்துகளையும்மற்றபேருடையஆஸ்திபாஸ்திகளுடனே அவ்விடமிருக்கிறார்கள்(காலைந்து) சேவகாளும்வாசற்படிக்கதவையடைத்துக்கொண்டு ஜன்னலினிடமாக வெளியேபார்த்துக்கொண்டிருக்கின்றார்கள் அப்போது அந்த சிப்பாய்களி லொருவன்சொல்லுகிறான் இந்தப் பட்டணத்துக்குவெகுநாளைக்குப்பின் ஒரு முசாபர்வந்து நிற்கின்றானென்று சொல்ல மற்றொருவன் அவனை அருகில்வரும்படிக்கு கூப்பிடுமென்றுசொல்ல உடனே ஹாத்திமை கூப்பிட்டார்கள் அச்சத்தத்தைக் கேட்டவுடனே சிப்பாய்களிருக்கின்ற கிடிக்கின்கீழ்வந்துநிற்க அப்போது பாத்துஷாவானவர் தன்னுடையதலையைக்கிடிக்கின்வெளியாக நீட்டி ஹாத்திமைபார்த்து கேட்கின்றார் ஓ,முஸாபரே!எங்கேயிரு



ந்துவந்தாய் எவ்விடம்போவா யென்று கேட்க அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் நான்யெமன்தேசத்திலுள்ளவன்ஷாஹாபாதென்ற பட்டணத்திலிருந்து கோஹேநிதாவென்றமலைக்குப்போகவெண்ணங்கொண்டு வந்திருக்கிறேனென்றுசொல்ல அம்மொழியைபாத்துஷா கேட்டுசொல்லுகிறார் ஓ, முஸாபரே! வலதுபக்க வழியை மறந்துவிட்டு இடதுபக்கவழியாகஇவ்விடம்வந்துவிட்டாய்ஆனாலுன்னுடைய (மவுத்து) என்றசாவு உன்னை யிவ்விடம் கொண்டுவந் திருக்கின்றதென்றுசொல்லி நீ எண்ணிய எண்ணம் உனக்குகூடமாட்டாது அப்போது ஹாத்திம் அம்மொழியைக்கேட்டு சொல்லுகிறார் ஆண்டவனுடைய ஆக்ஞைம்போல் முடியு மவனுடைய கட்டளைக்குஎன்னுடைய உயிரும் மனதுகொண்டு நான் ராசியாக யிருக்கின்றேன்.

பின்பு அப்பாத்துஷாவைஹாத்திமானவர்பார்த்து கேட்கிறார் நல்லது உம்முடையவர்த்தமானத்தை யெனக்குத்தெரியச்சொல்லும் உங்களைப்பார்த்தால்பெரியதவுலத்துக்காரனைப்போல் தோணுகின்றது நீர்கோட்டையை மூடிக்கொண்டுஏனிருக்கின்றீர் நீர் விசத்தைச் சொல்லவேணும் நீர் யாராகயிருக்குமென்றுஹாத்திம்கேட்க அப்போதவர் சொல்லுகிறார் ஓ, வாலிபனே நானிந்த பட்டணத்தினுடைய பாத்துஷாவாகயிருக்கும் ஆனாலிந்ததேசத்தில் சிலநாளாக ஒருபெரியபலாவானது மிருகமானமூதேவிவருகின்றது அதினாலிவ்வூரிலுள்ளவர்த்தகர்கள் என்னிடத்தில்சேவிக்கப்பட்டசிப்பாய்களுமற்றவர்களெல்லாம் அந்தமிருகத்துக்காக தங்களுயிர்களை தப்பிவிக்கவேண்டி என்னுடைய உத்தரவுகூடயில்லாமல் போட்டது போட்டதுபோல் போட்டுவிட்டு என்னையும்விட்டு ஓடிப்போயிருக்கிறார்கள்இந்தப்பட்டணமும் மற்றநாடுகள்தோறும் பாழடைந்துபோயிருக்கிறதுநானுதவியொத்தாசையில்லாமலிருக்கிறேனவர்களாலும்யாதொருதுற்றமில்லை அந்தமூதேவியை அடிக்கவும்பிடிக்கவும் போர்செய்யவும ஒருவராலுமுடியாது ஆனாலென்னுடையவெழுக்கரும்ஹயாவினால்என்னுடைய பிள்ளைகுட்டிகள் பந்துக்களோடு இந்தக்கோட்டைக் கதவுகளெல்லாம் பந்தாக்கி பூட்டிக்கொண் டிருக்கின்றேன் அந்தமூதேவியையடிக்க என்றால் கூடாமல் (தவக்கல் இலாஹி) யீமாக சிஜ—தாஜ—க்கூர் செய்துக்கொண் டிருக்கிறேனென்றமொழியை ஹாத்திமானவர்கேட்டு ஓ, பாத்துஷாவே அந்தபலாவானபிடையானது தேவாகயிருக்குமா அல்லது அகோரமான மிருகஜா

திகளாயிருக்குமா அப்பேர்ப்பட்டதின்பேரில் எதிர்க்கக்கூடாதமையா கயிருக்கிறது அப்போது பாத்துஷா சொல்லுகிறார் அந்த மூ தேவிஅகோரமுள்ள மிருகமானது இவ்விடத்திலுள்ளதல்ல அது (கோஹேகாப்)மலையினருகிலிருக்கப்பட்டது ஆனாலிது சிலநாளாகஇ ந்தேசத்தில்வந்து நடமாடுகின்றது அது நிதம் வெளியில் புறப்பட் டு(௨) (ரு) பேரை யடித்துதின்றுவிட்டுப்போகின்றது ஆனால் நாளது வரையில் அந்தமூதேவியானது இந்த கோட்டைக்குள் அடிவைக்க வில்லை அதென்னவென்றால் இந்த கோட்டைக்குள்வராமல்சுத்திலும் அகழ்வெட்டி எப்போதும் தண்ணீரை நிரப்பி வைத்துக்கொண் டிருக்கின்றோம் ஆனாலிதுவரையில் அது என்னவென்றுதெரியவராதெ ன்றுபாத்துஷாசொல்ல ஹாத்திம்கேட்டு ஆண்டவனிடமாக ஷுக்கு ர்செய்து சொல்லுகின்றார் ஓ, பாத்துஷாவே, உனக்கு சந்தோஷமு பாரக்காவும் ஒரு சங்கதியை யறிவிக்கிறேன் நீர் சொன்னமிருகத்தை இன்ன காட்டில் நான் வெட்டி அதினுயிரைப் போக்கிவிட்டே ன் ஆண்டவன் இதற்காகவேண்டி கோஹேசிதாவுக்குப்போவதை ம றந்து என்னை வலதுபக்கம்போகாமல் இடதுபக்கமாகப்போகும்படி க்கு ஆண்டவன்செய்தான் தான் வருகும்போது நடந்தவர்த்தமானங் களும் நாற்கால் மிருகங்கள்புலி கரடி யானைமுதலாகிய காட்டுமிரு கங்களெல்லாம் தன்முன்னே ஓலமிட்டுவந்தும் தான்மரத்தின்மேலேறி னதும் தானிருந்த மரத்தினிடமாக அந்தமிருகமானது கடிக்கவந்த தும் தான் அதைவெட்டினதும் இதுவெல்லாம் நடந்த சங்கதிகளை த்தெரியச் சொன்னதின்பேரில் பாத்துஷாகேழ்விப்பட்டு கோட்டை யிலிருந்து உடனேகீழேயிறங்கிஹாத்திமுடைய கையைப்பிடித்துயார் போடுங்கழுத்தோடுங் கட்டியணைந்து கோட்டைக்குள் ளழைத்துக் கொண்டு வெகுபெருமையாகப்போறார் தம்முடைய மஸ்னத்தென்ற சிம்மாசனத்திலிருக்கவைத்து விதவிதமானபுலாவுகளும் குர்மாரொ ட்டிகளும்விதவிதமானமிட்டாய்களும்இன்னமனேகருசியமான்தினு சுகளும் பெரியபெரிய பொன்தட்டுகளில் நிரப்பி விலையதிக்கமுள்ள ரத்தினங்களிழைத்த தட்டுகளில் விதவிதமான கனிவர்க்கங்கள் நிர ப்பி ஒரு மேன்மையான(தஸ்தர்கான்)என்றவிரிப்பைவிரித்து அதின் மேல் இதெல்லாம் கொண்டுவந்து ஹாத்திம் முன்பாகவைத்தார்கள் அவரும் பாத்துஷாவும் மனமகிழ்ச்சியுடன் போசித்த பின்பு வாசனைபொருந்திய மதுரமான ஷர்பத்துகளையும் பொசித்தார்கள் பி ன்பு பாத்துஷாவானவர் ஹாத்திமை பார்த்துசொல்லுகின்றார் நீர் அ



ந்துஷ்ட்ட மிருகத்தைவெட்டி கொன்றதாகச் சொன்னமொழி யானதின் நம்பிக்கையெனக்கு எவ்விதமாக யிருக்குமென்றுகே ட்க்க அப்போதுஹாத்திமானவர் தன்னுடையகத்தியின்உறைப்பை யிலிருக்கின்றவாலும் காதுகளும்நான்குபல்களும் வெளித்துக் காண்பி த்தவுடனேபாத்துஷாவானவர் அதைப்பார்த்துஹாத்திமுடைய கானி ல்விழுந்து மிகுதமாய் ஆண்டவனிடமாக ஷுக்குறுதுசெய்து அதி மோகவாழ்த்தி போற்றிக்கொண்டுதம்முடையகோத்தில்முன்னிருந்த குடியத்துகளுக்கெல்லாம் அந்த மிருகமானது வெட்டுண்டிறந்து போன தென்றுநீங்கள் யாதொருஅச்சமும்பயமுமில்லாமல் தங்கள் தங்கள் வீடுகளில்வந்து எப்போதும்போல் வியாபாரங்களை நடத்திக் கொண்டுவரவேண்டுமென்றும்இன்னம் முன்னிருந்தசேவகர்களையும் தங்கள்தங்கள்சேவகத்தில்தடங்கலில்லாமல் வந்துசேரவேண்டியதெ ன்று பலபல விடங்கள்தோறும் இவ்விதமாகயெழுதி விளம்பரஞ் செய்தார் அதுபோல்சகலரும் பாத்துஷாவுடைய பத்திரிகையைப்பா ர்வையிட்டுஉடனே தங்கள்தங்கள்வீடுகளில்வந்துஎப்போதும் போல் குடியேறினார்கள்.

பின்பு ஹாத்திமானவர் பாத்துஷாவைப்பார்த்து சொல்லுகின் றார் ஓ, பாத்துஷாவே நீர் இப்போது எனக்கு கோஹேசிதாவுடைய வழிகாண்பிக்க தயவுசெய்து ஒருமனிதனை அனுப்பவேண்டுமென்று சொல்ல பாத்துஷாவென்பவர்சொல்லுகிறார் ஓ, தயிரியமான வாலிப னே இப்போதுஇந்தப்பட்டணம்ஆண்டவன் கிருபையாலும்தம்முடை யதயவினாலும்அபாரமானசந்தோஷத்தையடைந்ததாம்ஆகையால் இந்த ப்பட்டணமானது தங்களுடையதென்றெண்ணி தயவுசெய்து இந்தப்ப ட்டணத்தி லிருப்பீராகில்என்னுடையபெண்ணை தங்களுக்குமணம்ப ண்ணிவைப்பேனென்றுசொல்லி எவ்விதத்திலும் தாங்கள் கபூல்செ ய்யவேண்டுமென்றமொழியை ஹாத்திம்கேட்டு சொல்லுகிறார் ஓ, பாத்துஷாவே நான் ஆண்டவனுக்காக ஒருவருடைய வேலையை நிறைவேற்றுகிறவரையில் துனியா வுடைய சுகசவுக்கியத்தை நான் ஹராம் செய்திருக்கிறேனென்றமொழியை பாத்துஷாகேட்டு சொல்லுகிறார் ஓ, வாலிபனே உன்னுடையதைரியத்துக்கும் உன்னை க்குறித்தும் அபாரமாக யிருக்குமென்று ஹாத்திமை வாழ்த்திபோற்றி துணைக்காக ஒரு மனிதனை அவர்களோடனுப்பினார் உடனே ஹாத் திமானவர்அவனைச்சேர்த்துக்கொண்டுசிலதூரம்நடந்துபோய் அவனை சொல்லுகிறான்ஓ,ஹாத்திமேகோஹேசிதாவென்றதற்குபோகின்றபா

தை யிதுவாகியிருக்கும் ஆகையால் நீர் இந்தபாதையை பிடித்துக்கொண்டு நேராக யாதொருதடங்கலில்லாமல் போவீராகில் தங்களுடைய எண்ணம்நிறைவேறு மென்றுசொல்லி ஹாத்திமிடமாக உத்தரவுபெற்றுக்கொண்டுதன் நகரத்தில் போகிறான் அப்போது ஹாத்திமானவர் அவ்வழியைநோக்கி சிலநாள் நடந்து ஷஹறே குல்ஜாரென்ற பட்டணம் போய் சேர்ந்தவுடனே அந்தப் பட்டணத்திலுள்ளவர்கள் இவரைக்கண்டவுடனே தங்கள் பாத்துஷாவின் சமுகத்தில் கொண்டு போய்விட அந்த பாத்துஷாவானவர் ஹாத்திமானவரைக் கண்டவுடனே எழுந்து தாஜிம்செய்து கேழ்க்கின்றார் ஓ, முசாபரே நீரெவ்விடமிருந்து வந்தீர் இவ்விடத்தில் சிலநாளைக்குமுன் (ஷிகந்தர்பாத்துஷா) என்பவர் வந்திருந்தார் இப்போது உங்களைப்பார்த்தேன்நீர் வந்தகாரணமென்ன வென்று கேழ்க்க அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் எவ்விதமானால்பர்ஜக்கு சவுதாகருடைய மகளாகிய ஹசன் பானுவென்பவள் என்னை கோஹெநிதாவின் சேதியை கெட்டியாகவிசாரித்துக் கொண்டுவர அனுப்பியிருக்கிறாள் ஆனாலிதுவரைக்கும்பாதையைக்கேட்டுக்கொண்டுநான்மிகுந்தவருத்த மெடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன் அதினுடைய ரகசியம்தமக்கு தெரிந்திருக்குமாகில் ஆண்டவனுக்காகவேண்டி எனக்குத்தெரிவித்தாலது மிகுந்த ஐனை நன்மையாகயிருக்கும் நானமுசாபரானபடியால் எனக்கு நீங்கள் சகாயம்செய்தால் அது உங்களுக்கு மிகுந்த ஸவாபுகிடைக்கும் இன்னம் என்னுடையயெண்ணமும் நிறைவேறும்என்னுடைய முசீபத்தும்தீர்ந்து முஹத்தாகயிருப்பேனென்றுசொல்ல அப்போது அவ்வூர் பாத்துஷாவானவன் சொல்லுகிறான் ஓ, ... நீர் சொல்லுகிறதுசரிதான் ஆனால் கோஹெநிதாவுக்குப்போகவேண்டுமானால் அது கொஞ்சமென் றெண்ணாதே அதினுடையரகசியம்அறியவேண்டுமாகில் இவ்வூரில் நீ இன்னம்சிலநாளிருப்பாயாகில் அப்போது அதினுடையசங்கதி உனக்குநன்றாகத்தெரியவரு மென்றுசொல்ல ஹாத்திம் மெத்தநலமென் றுசொல்லவுடனே பாத்துஷாவானவன் ஹாத்திமிக்கு ஒருவீடு நல்ல அழகுள்ளதாகவும்கட்டி மேலானவிரிப்புகளுடனே வேண்டியசாமான்களும் கட்டில்மெத்தை சோபா நாற்காலிகூடவிரப்பி அதிலிருக்கும்படிக்கு உத்தரவுசெய்தார் அதுபோலந்தவீட்டிலிருக்க காலைமாலையில் விதவிதமானபுலாவுகளும் மேவா மிட்டாய்களும் அனுப்பிக்கொண்டு தானுமிவ்விடம்வந்து பேசிக்கொண் டிருக்கிறது அப்படியிருக்க ஒருநா



ள் ஹாத்திமிடமாக (ா)(உா) ஜனங்கள்வந்து வேறுமொழிகளைப் பேசிக்கொண் டிருக்கையில்கோஹெநிதாவுடையசங்கதிகளையு மதில்வரைஅப்போதுஅவர்களைக்கேழ்க்கிறார்கோஹெநிதாவென்றதுஎதுவாகயிருக்கும்அப்போதவர்கள்சொன்னார்கள்கோஹெநிதாவென்றதெதுவானால் அதினுடைகோட்டையின் ஒவ்வொருசுவர்கள்வானத்தை யளாவிக்கொண் டிருக்கின்றது அதிலிருந்தாப்போலொரு சத்தம்வருகின்றதென்றுசொல்லி அம்மொழிகளைப் பேசிக்கொண் டிருக்கையில் ஒரு சத்தமானது அம்மலையி னிடமாகயிருந்து வந்தது அதெவ்விதமெனில் (யா, அகீ-யா, அகீ) என்றசத்தம்வந்தவுடனே அக்கூட்டத்திலிருந்த ஒருவாலிபன் மிகுந்த அழகுள்ளவனாயிருந்தான் அவனெழுந்து ஒருவருக்குஞ் சொல்லாமல் மின்வேகம்போ லோடிப் போகின்றான்

அவ்விடத்திலிருந்தவர்கள் அவனுடைய ஜனத்தார்களிடமாகப் போய்ச்சொன்னார்கள் இன்றைனகோஹெநிதாவிலிருந்து கூப்பிடப்பட்டது அந்தசத்தம்கேட்டவுடனே அவன் எழுந்துபோகின்றானென்றசொல்லைக்கேட்டுஎல்லோரும்கூடிக்கொண்டு ஓடி அவனைப்பார்த்தாலவனுடைய முகமானதுசிவந்து இரத்தம்போலாகியிருந்தது பின்புஅவனருகில்போனால் இவர்களைதிரும்பிபார்க்காமல்கோஹெநிதாவென்றவழியைப் பார்த்துக்கொண்டுகாற்றுப்போல்பறக்கின்றான் அப்போதிவர்க ளவனைச்சூழ்ந்துக்கொண்டு அவனைஓடவிடாமல்மெள்ள கோஹெநிதாவுக்குப்போகிறார்கள் அப்போதிந்தசங்கதியைஹாத்திமானவர்கேட்டுமிகுந்த ... அவ்விடத்திலுள்ளவர்களைக்கேழ்க்கின்றார் ஓ, சினேகிதர்களே இவன் நம்மோடிருந்து இப்போது பயித்தியக்காரனைப்போல் ஓடுகின்றான் நீங்கள் சொல்வதுகளையும் கேழ்க்காமலும்அதற்குயாதொரு ஜவாபுங்கொடாமலோடுகிறானதென்னவென்றுகேழ்க்க அப்போதந்தமனிதர்கள் சொல்லுகிறார்கள்இவனைகோஹெநிதாவிலிருந்து அழைக்கப்பட்டதென்றுசொல்லஹாத்திமானவர்தன்மனதிலெண்ணுகின்றார் இவனுடைய சங்கதிதெரியவந்து இவனையாரோகூப்பிட்டாப்போல்தெரியவருகின்றதென்று இவ்விதமாக இவன் ஓடுகின்றானென்று எண்ணத்தை யெண்ணிக்கொண்டு ஹாத்திமானவர் ஓட்டமாகஓடி யவனைப்பிடித்துக்கொண்டு சொல்லுகின்றார் ஓ என்னுடையபிரியமான சகோதரனே உன்னுடையசினேகத்தைப்பார்த்தால் மெத்தநலமாகயிருந்தது நம்மை இப்போது பார்க்காமல் யாரோகூப்பிட்டாவென்றுமொழியில்லாமலுமஓடுகி

ன்றாய் அதைஅவ்னுக்காக நீ எனக்குசொல்லவேணுமென்றுஅ
னேகவிதமாகக் கேட்டபோதிலுமவன் யாதொரு மறுமொழிசொல்
லாமல் ஹாத்திமுடைய கையையுதறிவிட்டு ஓடி அந்தமலையினருகி
ற்போய்சேர்ந்தான் அப்போது ஹாத்திமுமவனோடு தொடர்ந்துபோகப்
பட்டார் அப்போது ஹாத்திமுடைய கண்ணுக்குத்தெரியாமல் அம்
மனிதனும் அம்மலையானதும்மறைபட்டுப்போய்விட்டது அப்போதுசில
நாழிகையில் போய் பார்த்தால்யாதொன்றுந்தெரியாமல்வெருசிலமாகஎ
ங்கேபார்த்தாலும் கல்லுகளும்கானகமுமாகயிருக்கின்றதுவேறேயா
தொன்றும்காணப்படவில்லை அப்போது ஹாத்திமானவர் மிகுந்தவி
சனமும் வருத்தமுமெடுத்துக் கொண்டு வழிதடுமாறிக்கொண்டுஅவ்
விடத்தில்நிற்கின்றவர்களோடுசேர்ந்துக்கொண்டுபட்டணம்வந்துசே
ர்ந்தார் அவன் இனத்தார்களெல்லோரும் தங்கள்தங்கள் வீடுகளுக்
குப்போய்சேர்ந்தார்கள் ஆனாலவனுக்காக யாராவதுவிசனப்பட்டு
ஒருவரும்அழவுமில்லை அவன்பேரால்சோறுகறிகளாக்கிதங்கள்பந்துச
னங்களும் ஏழையெளியோர்களுக்குகொடுத்துமிகுந்தசந்தோஷமாகச்
சாப்பிட்டுஅவரவர்கள்மனைகளிப்படைந்து தங்கள்தங்கள் வேலையில்
போயிருக்கின்றார்கள் அப்போதுஹாத்திமானவர் அவர்களைக்கேழ்க்கி
ன்றார்ஓ, என்னுடையபிரியமாகிய சினேகிதர்களே உங்களில்யாருக்கா
வது தெரியவந்ததா அவன்பேரில்நடந்தசங்கதி என்னவென்றுகேழ்க்க
அப்போதுஅவர்கள் சொல்லுகிறார்கள் நீயும் எங்களோடு சேர்ந்தி
ருந்தாயே நீயென்னபார்த்தையோ அதுவேநாங்களும் பார்த்தோமே
தவிரவேறில்லை இன்னம் என்ன கேட்கிறாயென்றுசொல்ல ஹா
த்திமவனைக்கேட்டு அவ்வளவையும் நினைத்து மிகுந்த விசனப்பட்டு
அழுதுக்கொண்டிருக்க அப்போதவர்கள்சொல்லுகிறார்கள்ஓ,மூஸா
பரே நம்முடையதேசத்தில் இவ்விதமானவழக்கமில்லை யாராவதுஎ
வனுக்காவது அழுதுவிசனப்படப்பட்டவர்களில்லை ஆனால் நீ இந்த
பட்டணத்தில் (நாலைந்து) நாளிருக்க எண்ணங்கொண்டவனாகயிருந்
தால் எங்களுடைய நடப்பைப்போலிரும் இல்லாவிட்டால் இக்ஷணமே இந்தப்பட்டணத்தில் நின் றெடுபட்டுப்போவாய் என்ற மொழி
யைக்கேட்டஉடனே ஹாத்திம்அழுகையைவிட்டுமனதில்விசனப்பட்
டுக்கொண்டிருப்பதையவர்கள்பார்த்துசொல்லுகின்றார்ஓ, மூஸாபரே
நீ யேன்விசனப்படுகின்றாய் இந்த கோஹெநிதாவுடைய சங்கதியிது
வாகயிருக்கும்நீ பார்த்ததில்லையா வென்றுகேழ்க்கஅப்போதுஹாத்தி
ம்சொல்லுகிறார் நான் என்னபண்ணைப்பார்த்தேன்எனக்குயாதொன்றும்



ம் தெரியவில்லையேயென்று எண்ணமாகவருத்தங்கொண்டுஹசன்பா
னு வென்பவனுக்குநானென்ன சங்கதியைக்கண்டு சொல்வேன் இவ்
விதமாகஅந்தகுல்ஜார்பட்டணத்தில்ஆறுமாதமாகயிருக்கையில் (பதி
னைந்து)பேர்கள்முன்போனவனைப்போல் அந்தமலைக்குப்போனவர்க
ள்திரும்பி யாதொருவரும்வரவில்லை ஆனாலந்த குல்ஜார்பட்டணத்தி
லொருமனிதன்(ஹாத்திம்)என்றபேருள்ளவனிருந்தான் அவனிடமாக
எமன் ஹாத்திம் மிகுந்தமுஹப்பத்தாகயிருந்தார் எவ்விதமானால் அவ
ரோடுவேண்டிய மனிதர்களும் கூடவந்திருந்தபோதிலு மிவர்களிரு
பேரும்சந்தோஷமாகஇரவும்பகலுமாகஒரேயிடமிருக்கின்றார்கள் அப்
படியிருக்ககோஹெநிதாவின்கோட்டையிலிருந்து ஒருசப்தம்வந்தது
எவ்விதமானால்(யா, அகீ-யா, அகீ)யென்றசப்தம்வந்தவுடனே குல்ஜார்
ஹாத்திம்எழுந்துஅந்தமலையினிடமாகப்போகிறான் அவனுடையபந்து
சனங்களுக்குத்தெரியவந்தது குல்ஜார்ஹாத்திமையும்அழைத்துஇருக்
கின்றதென்றும் அப்போது எல்லோரும் ஓடிப்போய் அவனைசுத்திக்
கொண்டார்கள் எமன் ஹாத்திம் தம்முடைய மனதிலெண்ணுகிறார்
இவனும் முன்போனவர்களைப்போல போய்விட்டால் எனக்குமிகுந்
த மனவருத்தம்நேரிடுமென்று இவனோடு எனக்கு அதிக சினேகி
தமும் பட்சமுமாயிருக்கின்றது இப்போது இவனும்நம்மைவிட்டுவே
றுபிரிந்துபோவான் ஆகையால் இவனை ஒருபோதும்விடக்கூடாது
எவ்விதமும் இவனோடு நாம்போகவேண்டும் எதுவந்தபோதிலும்வர
ட்டு மென்று அவனிவ்விடத்திலுள்ளமனிதரால்கோஹெநிதாவுடைய
விபரம் சரியாகத்தெரியமாட்டாதென்றுஇம்மொழியை உறுதிப்படுத்
திக்கொண்டு இடுப்பைகெட்டியாகஇழுத்துக்கட்டி அவனுடைய கை
யைப்பிடித்துக்கொண்டு மலையைநோக்கிஓடுகின்றார் அப்போதுஹா
த்திமானவர் கேழ்க்கின்றார்ஓ, என்தோழனே இதென்னசங்கதியாக
யிருக்கும் உன்னை இப்போது யார் இழுத்துக் கொண்டுபோகிறாரெ
ன்றுகேழ்க்க அவன்யாதொன்றும்பேசாமலும் ஜவாபு கொடாமலும்
போகிறான் எமன் ஹாத்திம்சொல்லுகின்றார் ஓ, கிர் தாஅழிவையுள்
ள ஹாத்திமே இதுஎப்பேர்ப்பட்டசினேகிதமாகயிருந்தது நீயும்நானும்
வெகுநாளாய் ஒன்றாகஒருகிண்ணத்திலும் ஒருகூஜாவில் நீர்குடித்து
க்கொண்டுஒருபடுக்கையிலிருவரும்படுத்துக்கொண்டிருந்தோமேஇவ்
வளவு சினேகிதமாக யிருந்தும்உன்மனதுக்குத்தெரியாதா இப்போது
ஒரு மொழி என்னோடு பேசாமல் வாயை மூடிக்கொண்டு நாவைத்
திறக்காமல்உன் பந்தாகிப்போய்விட்டதுகிசத்தைசொல்லுஇப்போது

உன்னையார்இழுக்கின்றார்கள் நீ எவ்விடம்போகின்றாயென்றுகேழ்க்க அதற்கவன்யாதொருஉத்தரவுகொடாமல் கோபமாக எமன் ஹாத்திமை பார்த்துச்சொல்லுகின்றான் நீயார்என்னைவிடாதிருக்கின்றாயென்றுசொல்லிதன்னுடையகையை ஹாத்திமுடையகையில் நின்றுதிமிறிக்கொண்டு இழுத்துக்கொண்டவுடனே ஹாத்திமானவர் நிலத்தில் விழுந்துவிட்டார்அப்போதவன்கோஹேகாபிதாவென்றபாதையைப் பிடித்துக்கொண்டுசுருக்காகப்போகிறான் அப்போது எமன்ஹாத்திமானவர் எழுந்து அவனைத் தொடர்ந்துபோய்சேர்ந்துக்கொண்டு இருபேரும் ஒரே மூச்சில் அந்தமலையினருகில்முன்பின்னாகப்போய்சேர்ந்தார்களப்போது எமன் ஹாத்திமானவர் அவனுடைய இடுப்பை ஒரு குதிப்பு குதித்துகெட்டியாகப்பிடித்துக் கொண்டார் அப்போதவன் தன்னால் கூடிய வரையில் பரிதவித்தான் ஒன்றும் கூடவில்லை இவ்விதமாயிருவரும் விழுந்தெழுந்து தடுமாறிக்கொண்டு இடுப்பு பரிப்புமாக அம்மலையின் மேலேறிப்போய் அவ்விடத்திலிருக்கின்றகோட்டையினருகில் போனவுடனே ஒரு சின்னகிடிக்கி தோற்றியது அதினருகில் போய் இருவரும் ஒன்றையொன்றுபிடித்துசத்திக்கொண்டு அக்கிடிக்கியில் நுழைந்தவுடனே மனிதர்கள் பார்வையில் மின்னலைகபாகி போய்விட்டார் அப்போது எல்லோருஞ்சேர்ந்துகுல்ஜார் ஹாத்திமுக்காகவிசனப்பட்டுக்கொண்டு பட்டணம்வந்துசேர்ந்துவிஷயபாத்துஷாவுக்குதெரிவித்தார்கள்முனாபராகவந்தமனிதன்எமனுஹாத்திமோடு அந்தமலையில்போய் விட்டானென்று [illegible] பாத்துஷா ஆனவர்கேட்டு மிகுந்தகோபங்கொண்டுசொல்லுகின்றார் ஐ அறிவில்லாதீங்காள் இன்னாள்வரையில்கூப்பிடாமல்ஒருவரும்போனதில்லையே நீங்கள்அவனை எவ்விதமாகவிட்டுவந்தீர் ரோதுக்காகப்போகச்சொன்னீர்ஆனாலந்தமுனாபராகியவனுடைய பழிபாவமெல்லாம் உங்களுடையகழுத்தில்விழும்அப்போதவர்கள்சொல்லுகிறார்கள் ஐ ஆண்டவனே நாங்கள்எங்களால்கூடியவரையிலும்சொல்லிப்பார்த்தோம் நீபோகவேண்டாமென்றும்நாங்கள்சொன்னமொழிகளையவர்கேழ்க்கவில்லை பின்பு அம்முனாபர்சொல்லுகிறான் என்னுடையதோஸ்தானவன்என்னுயிரைப்போலொத்தவன் அவனைதனியாகநானொருபோதும்விடமாட்டேனென்றும் அதனாலவன்பேரில்எனக்குயிருக்கிறதோ அதிலேயும் நானவனுடன் படுவேனென்றும் இவ்விதமாக மொழிகள்பேசினதை அந்தபாத்துஷாவும் மையத்துகளுங்கேட்டு எல்லோரும்விசனத்தை [illegible]



அம்மலையினுடையசெய்தியிவ்விதமாகயிருக்கும் அப்போதவர்களிருவரும் அந்தகிடிக்கியைவிட்டு அப்புறம்போய் அவ்விடத்தைப்பார்த்தால் ஒருபெரிய விஸ்தாரமான மயிதானமாகயிருக்கிறது அதினருகில் போய்பார்த்தால் அவ்விடம் பசுமைநிறமானஇடங்காணப்பட்டு அது எவ்விதமாக யிருந்ததானால் பச்சைநிறமான விரிப்புகள் செய்து நாலுபக்கங்களிலும் விரித்திருப்பதைப்பார்த்தால் கண்பார்க்க கூடாமையாகயிருக்கின்றது அப்படியிருக்க அவ்விடத்தில்கொஞ்சநிலம் பச்சை விரிப்பில்லாமல் வெறுநிலமாக யிருக்கின்றது அந்த குல்ஜார் ஹாத்திமதில் தன்கால்களை வைத்தவுடனே கீழே விழுந்துவிட்டான் அப்போதுஎமன் ஹாத்திம் அவன்கையைப்பிடித்து எடுக்கலாமென்றெண்ணி அவன்முகத்தைப்பார்த்தால் மயக்கமுகமாக வெளுத்துப்போய்கண்கள் நீலநிறமாய்கால்கைகள்குளிர்ந்துமரம்போலாகிவிட்டது அப்போதவனுடைய கோலத்தைப்பார்த்துஹாத்திமானவர் தன்னுடையமனதிலெண்ணுகிறார் ஓ, என்னமோசம் வந்ததென்று மனங்கலங்கிகண்ணீர்சொரிய மிகுந்தவிசனத்தோடே அழுதுகொண்டிருக்கையில் அந்த நிலமானதுவெடித்தது அப்போதந்தவாலிபன் அதினுள்ளே நுழைந்துபோய் விட்டவுடனே அந்நிலமானது சரியாக மூடிநிலத்தோடே நிலமாகியபின்பு பசுமைநிறமாகி விட்டது இந்தகோலத்தை ஹாத்திமானவர்பார்த்து மிகுந்த விசனப்பட்டு கண்ணீர்சொரிந்துகிழேபுரண்டு அழுது(ஹக்குசுபஹானுத்தாலா)விடம் சிஜுதா செய்து தொழுதுகொண்டு சொல்லுகிறார் இந்தலோகத்தின் வாழ்க்கையானது பொய்யானதென்று கண்ணால் பார்க்கிற வஸ்துகளெல்லாம்அழிந்துபோகிறதே யல்லாமல் நிலையுள்ளவஸ்தல்லவென்றெண்ணி நாம்வந்த கோரிக்கைநிதாவென்றசங்கதி நமக்கு நன்றாய்த்தெரியவந்ததுஇனிநாம் இவ்விடம்விட்டுநடக்கவேண்டியதென்றெண்ணி அவ்விடம்விட்டுத்திரும்பி அன்றையதினமெல்லாம்நடந்துபோய்பார்த்தால்கோட்டையையும் அந்த கிடிக்கியையும் காணப்படாமல் ஆண்டவனே இந்த கோட்டை எங்கே போய்விட்டது அதிலிருந்த கிடிக்கியும் மற்ற வஸ்துகளெல்லாம் எங்கே மறைந்துபோச்சுதே யென்றெண்ணி விசனப்பட்டு அவ்விடத்தில் ஏழுநாள் வரையிலும் அன்னமாகாரமில்லாமல் நடக்க சத்தியற்று படுத்திருக்கின்றார்

ஓ, ஹாத்திமே உன்னுடைய முயற்சியானது இவ்விடம் கொண்டு வந்தது ஒருவரும் உன்னைக்கூப்பிடாமல் வந்தபடியால்

இப்போது அந்த கோட்டையையும் மலையும் அந்தபட்டணத்தையும் காணோமென்று ஆயாசப்பட்டுக்கொண்டு நாமிவ்விடமிருந்தால் என்னசெய்வோமென்றும் வழிதடுமாறிக்கொண்டு அவ்விடம்விட்டுப்போய் ஒரு சமுத்திரம்தோற்றநல்லது அப்பாதையைபார்க்கலாமென்று சமுத்திரக்கரையோரத்தில் போய்ச்சேர்ந்தார் அந்தசமுத்திரத்தைப்பார்த்தால் அதினலைகளையும் அதினுடைய இரச்சலையும் குமுறலையும்பார்க்க யாதொருகரையும் தெரியவில்லை, மிகுந்த மன வருத்தமடைந்து நின்று ஆண்டவனே இந்தசமுத்திரத்தைவிட்டு அப்புறப்படுத்துவது நீயேயல்லாமல் வேறெனக்குஆதரவுமில்லையென்று மனங்கலங்கி நிற்கின்றவேளையில் ஒரு படவானது எதிரில் தானிருக்கும்பக்கமாகவருகின்றது அதையாரோஒருவன் கொண்டுவருகிறானென்றெண்ணிக்கொண் டிருக்கையில் அந்த படவானது கரையோரமாக வந்து நின்றது அதைப்பார்த்தால் அதில் யாதொருவரையும் காணவில்லை ஹாத்திமானவர்மிகுந்த ஆச்சரியப்பட்டு பின்பு ஆண்டவனிடமாக ஷுக்கூர்செய்து அந்த படகின்பேரிலேறிக்கொண்டு என்னபார்க்கிறாரானால் ஒரு தஸ்தரைசுருட்டி மூலையி லிருக்கக்கண்டு ஹாத்திமானவர் மிகுந்த பசியும் இளப்பாகயிருக்க அந்த தஸ்தர் சுருட்டியிருப்பதையெடுத்துப்பார்க்க அதிலிரண்டுரொட்டியும்கொஞ்சம்பொரித்தமீனு கடகட யிருக்கக்கண்டு ஹாத்திமானவர் எண்ணுகிறார் இந்த படகுகாரனுடைய தின்பினைக்காக வைத்திருக்கிறதுபோலதோணுவதால் நாம் அன்னியர்சொத்தைசாப்பிடக்கூடாதென்றெண்ணிக் கொண்டிருக்கையில்ஒருமீனானது சமுத்திரத்திலிருந்து தலையையுயர்த்தி சொல்லுகின்றது ஓ, ஹாத்திமே இந்தரொட்டியும் பொரித்தமீனும்உன்னுடைய ரிஜ்ஜக்காகயிருக்கும் நீ இதையாதொருதடங்கலில்லாமல் சாப்பிடு யாதொருகல்மிச்முமனதிலெண்ணாதே யென்று சொல்லி சமுத்திரத்தில் மூழ்கிப்போய்விட்டது ஹாத்திமானவர் அம்மொழியைக்கேட்டு சந்தோஷமடைந்து அதைச் சாப்பிட்டார்.

பின்பு தண்ணீர்குடித்து சிஜுதாஷுக்கூர் ஆண்டவனிடமாகச் செய்தார் உடனே ஒரு பெரிய காற்றானது வந்து அந்தப் படவை இரண்டுமூன்று நாளைக்குள் அக்கரைகொண்டு போய்விட்டது அப்போது ஹாத்திமானவர் ஆண்டவனைப் புகழ்ந்துகொண்டு அந்த படவிலிருந்து கீழிறங்கி யெண்ணுகின்றார் இப்போது நமக்குயாதொருவழியுந்தெரியாது எந்தயிடத்தைப்போய் அந்தவாலிபனுடையசங்க



திஎவ்விதமாகச் சொல்லலாமென்று(ஏழுநாள்) இரவும்பகலுமாகநடந்துபோய் அவ்விடத்தில்பார்த்தால் ஒரு வழியாவது வெளிச்சமாவது தின்பண்டமாவதுதண்ணீராவது யாதொருவஸ்துவையும்பார்க்கவில்லை உட்காரலாமென்றால் ஒரு மரத்தினுடைய நிழலுமில்லை கானகமான வனாந்திரத்தில்போய் அகப்பட்டு பசியும் இளப்பாலும் மிகுந்தவருத்தமாக ஆண்டவனே நீயே எனக்குத்துணையென்று கெட்டிப்படுத்திக்கொண்டு அனேகவிதமான பாடுகளும் வருத்தமுமெடுத்துக்கொண்டு நடந்துபோகையில் வெகுதூரத்தில் ஒரு மலையானது வெகுபெரிதாகவும் உயரமாகவும் கண்ணுக்குத்தோற்றியது அம்மலையை நோக்கி இரவும்பகலுமாக நடந்துபோய்மூன்றுகாலைக்குப்பின் அதினருகில்போய்ச்சேர்ந்து அந்த மலையினுடைய [illegible]களிலெதையெடுத்து பார்த்தபோதிலும் அதினகிழிருந்து [illegible]மோடிக்கொண்டிருந்தது அப்போது ஹாத்திமானவர்மனவருத்தமடைந்துஎண்ணுகிறார் யாதாமொருவருங்காணோமே இதின்சங்கதியறியலாமென்று இவ்விதமாக எண்ணிக்கொண்டு அந்தமலையின்மேலே (பனிரண்டாநாள்) போய்ச்சேர்ந்தார் அவ்விடத்தில் ஒரு விஸ்தாரமான மயிதானமிருந்தது அவ்விடத்திலுள்ள மண்முதலாகிய ஜீவராசிகளும் நாற்கால் ஜீவன் பறவை பக்ஷிராமும் மரம் புல் பூண்டுகளும் எல்லாவஸ்துகளும் இரத்தம்போல் ஒரே சிவப்பாகயிருந்தது அப்போது ஹாத்திமானவர் இளைப்பும் பசிதாகத்துடனே இருகாதவழி நடந்துபோய் அவ்விடத்திலென்னபார்க்கிறாரானால் ஒருசமுத்திரம் இரத்தத்தினால் நிறைந்திருக்கக்கண்டு அதிலிருக்கப்பட்ட மச்சமுதலாகிய வஸ்துகளெல்லாம் பார்த்தால் இரத்தத்தால் செய்ததுபோலிருப்பது அதைப்பார்த்து ஹாத்திம் மிகுந்த அச்சமடைந்து ஆண்டவனே இந்த சமுத்திரத்தில் நின்று நாம் எவ்விதமாக அப்புறம்போவோமென்றெண்ணி அந்த சமுத்திரக்கரையோரமாக நடந்துபோகிறார் அவ்விடமிறங்கிப்போகும்படியான துறையெங்கும்காணப்படவில்லை அதினால்துன்பப்பட்டுக்கொண்டுபோகிறார் பசிநேரிட்டால் காட்டின் கனிவர்க்கங்கள் பொசிக்கிறது தாகத்துக்கு தன்னிடத்திலிருக்கின்ற மோஹ்ரவைவாயில் போட்டுகன்னத்திலடைக்கிக்கொண்டிவ்விதமாக அந்த சமுத்திரக்கரையோரத்தில் ஒருமாதம் நடந்துகொண்டுபோகிறார் அவ்விடத்தில் பார்த்தால் முன்னிருந்த இரத்தக்கடலல்லாமல் வேறொருபூமியில்லை நாற்கால்ஜீவன் பறவைகள் பக்ஷிஹாரம் புல்பூண்டு மரமுதலாகிய வஸ்துகள் யாதொன்றுமில்லாமலிருப்பதால் மிகுந்த விசனப்பட்டுக்

சொல்லுகிறார் ஓ, ஹாத்திமே நீ இந்த ஒரு மாதம் வரையில் நடந்து
வெகுவருத்தமும் துன்பமுமெடுத்துக்கொண்டு நடந்தாயேயாதொன்
றும் காணப்படவில்லை ஆனால் நீ இவ்விதமாக (ம) வருஷம்வரையில்
நடந்தபோதிலும் இரத்தத்தின் சமுத்திரமல்லாமல் வேறொன்றுங்கா
ணமாட்டாய் ஆண்டவனுடைய வல்லபத்தையும் பெருமையையுங்கு
றித்து யாதொன்றும் பேசக்கூடாது எந்தவஸ்தை அவன் மறைவா
கவைத்திருக்கிறானோ அந்தவஸ்தின் பெத்து அவனுக்கே தெரியும
ல்லாமல் வேறொருவரால் வெளிப்படுத்தக் கூடாமையாக யி
ருக்கும் ஆனால் இவ்விடத்தில் நின்று உன்னை வெளிப்படுத்தயாதொ
ருயோசனை நடக்கவில்லை ஆனால் அவனுடைய உதவியொத்தா
சையால் நீ சலாமத்தாகநல்வழியில் போய்ச்சேர்வாய் இல்லாவிட்டா
ல்யாதொன்றுக்கும் புத்தியெட்டவில்லை நல்லதுநானிவ்விதமாகத்தி
ரிந்து கைசேதப் பட்டுக்கொண்டு ஒருவேளை நாம் தேசம்போய்ச
சேர்ந்தால்ஸலமாச்சுது இல்லாவிட்டால் என்னுடைய வெளியைப்பா
ர்த்துக்கொண்டு முனிர்ஷாமி என்பவனிருப்பானே நீ இப்போதுஇப்
பேர்ப்பட்ட கொடூரமான அகப்பாட்டில் அகப்பட்டு தடுமாறிக்கொ
ண்டிருக்கிறயே இது வல்லாமல் கோஹெ நிதாவின் சங்கதி
கள் ஹுசன்பானோ பர்ஜக்கு சவுதாகருடையமகளுக்குஎவ்விதமாகத்
தெரியும் அவன் கோஹெ நிதாவின்சேதியை யறிவதற்குமனிதர்களை
யனுப்பி அவர்களை இப்பேர்ப்பட்ட காடுவனாந்திரமான கொடுமையா
ன்வெளியில் அகப்படுத்துகிறான் அதினுடையசேதியை அறியவந்திரு
ப்பார்கள் அவர்களால் யாதொன்றுங் கூடாமல் திரும்பிப்போயிரு
ப்பார்கள் இவ்விதமாகயெண்ணிசொல்லுகின்றார் ஓ, ஹாத்திமேநீ
ன்னுடைய நப்ஸுக்காக நீ இவ்விதமான வேலைசெய்யவில்லையே நீ
ஒருவனுக்காகவேண்டி இவ்வளவு பட்டுக்கொண்டு இவ்விட
மவந்திருக்கின்றாய் ஆனையாதுன்னுடைய பாடுக்காவது ஆண்டவ
ன்தயைசெய்து அவனுடையவேலையை நிறைவேற்றவேண்டுமென்று
ஆண்டவனை நினைத்து கண்ணீர்சிந்த பலபலவிதமாக சொல்லிக்கொ
ண்டிருக்கின்றவேளையில்வதோஒருபிர்மாண்டமானவஸ்துசமுத்திரத்
தில்நின்றுவருகின்றதைப்பார்த்துஎன்னனுகிறார்வதோஒரு இறந்த வ
ஸ்தாகயிருக்கும்அல்லது ஒருபெரியமரமாகயிருக்கவேண்டுமென்றும்
எண்ணியிருக்கையில்அது அருகில்வரபார்த்தாலொருகப்பலாகயிருந்
தது உடனேஹாத்திம்ஆண்டவனை நினைத்துசிஜுதாஷுக்குருஹுதொ
ழுது அதிலேறிக்கொண்டுபார்த்தால்முன்போல் தஸ்தரில்ரொட்டியும



பொரித்தமீனும்சுருட்டிவைத்திருந்ததைக்கண்டு ஆண்டவனைப்புகழுக்
குசாப்பிட்டார்பின்புஅக்கப்பல்நடுத்துமத்தியில் சுழலருகிற்போலே
டனேஒருபெரியகாற்றுவந்துவேலிட்டுசமுத்திர அலைகளெல்லாமிருந்த
ஆங்காரமாகபெரிதாகவெழும்பிறதுஅப்போதுஹாத்திமானவர் பின்
னும்ஆண்டவனைநினைத்து இருகண்ணையும்பொத்திக்கொண்டுருப்பதிலி
ருந்துசுருட்டிக்கொண்டார் இப்பாடிருக்கையில் அதினுடையஅலை
களைப்பார்த்தால் நெருப்பின் ஜ்வாலையைப்போல் தெரிகின்றது ஆகாசவரை
யில்போகின்றது அப்போது ஹாத்திம் சத்தமாய் மிகுந்தபய
த்தினால் தடுமாறிகாவலர்ந்து என்னிருந்து போகும் படியான
வேளையாகிவிட்டது அந்தருணத்தில் அக்கப்பலானது அலைகளின்
மேலாகப்போய் அக்கப்பலை [illegible] கொண்டிருக்கையில்
ஹாத்திமானவர்மனத்திடங்கொண்டு ஆண்டவனிடமாக திரு
தாஷுக்குருஹுதொழுதமுனாஜாத்துசெய்தவுடனே அக்கப்பலானது
சுழலில்நின்றுவிலகிப்போய்விட்டதுஅக்கப்பல்(ஏ)நாள்நடந்து (ஏட்
டாநாள்) கரையோரத்தில்போய் நின்றவுடனே ஹாத்திமானவர்க்கு
கொஞ்சம்தெளிவுண்டாயிறங்கிச்சமுத்திரக்கரையோரமாக நடந்
துபோகின்றார் அக்கப்பலானது வந்தவழியைநோக்கிப்போய்விட்டதுபோ
கின்றது அப்போதுமனதில் எண்ணுகின்றார் இந்த ரகசியம் ஏனக்கு
ஒன்றும்தெரியவில்லையே இந்தக்கப்பலையார்கொண்டுவந்ததாகயிருக்கு
ம் இன்னுமந்தரொட்டியும் பொரித்தமீனும் யார் வைத்ததாகயிருக்கு
ம் இவ்விதமாக (ஏ) நாள்வரையிலும் உட்கார்ந்திருந்துக் கொண்டு
போகின்றபோதுஎன்னனுகிறார் இப்பேர்ப்பட்ட உதவிசெய்ததானசு
ஆண்டவனல்லாமல் வேறே யாரானாலுமுண்டோவென்றுஆண்டவனை
புகழ்ந்து போற்றிக்கொண்டுபோகிறபோது வெளியில் ஒரு விஸ்தாரமாக
வெண்மையுள்ளவஸ்து அலைகளால் மறைந்திருப்பதைப் போலத்தோ
ற்றியது பின்பு கொஞ்சநேரம் பொறுத்து அவ்விடத்திலே போ
ய்க்கிட்டப்போய் அவ்விடம் என்னபார்க்கிறாரானால்ஒருசமுத்திர
ம் வெண்மையாக அப்பரவுள்ளதாகவும் அலைகளெழுந்துக் கொண்டி
ருக்கின்றது அதெப்படி மின்னுதானால் யாதாமொருவன் வெள்ளி
யை யுருக்கிவிட்டா லெவ்விதமாகயிருக்குமோ அதுபோ லிருக்கின்
றது அவருக்குமிருந்ததண்ணீர் தாகமிருப்பதால் தண்ணீரைதன்னுடை
ய பாத்திரத்திலே கொண்டு கரையோரமாகவந்து உட்கார்ந்து அதில் தன்னு
டையவனானையைப்போட்டு [illegible]
டைப்பட்டதால் வெள்ளியாகிவிட்டது.

அப்போதவர் இடது கையால்துப்பரவாகத்துடைத்தபோதிலும் அது வெள்ளியாகவே யிருகின்றது ஆனாலந்தகை வெகு பாரமாயிருந்தது அப்போது ஹாத்திமானவர்பார்த்து இதுவும்நல்ல ஆச்சரியமானசமுத்திரமாகி யிருக்கின்றது இப்போது நான் இதில் குதித்து முழுகிவருவேனாகில் தேகமெல்லாம் வெள்ளியாகி விடும்அப்போது அந்தபாரமெடுத்துக்கொண்டுநடக்கவும் படுக்கவும் வெகுவருத்தமாகி விடுமென்று யோசித்து தலையைமுழங்காலில்வைத்துக்கொண்டு அவ்விடத்தில். உட்கார்ந்திருந்துமிகுந்த ஹைரானாகிவலதுபக்கமாகவும் இடதுபக்கமாகவும் இவ்விதமாகநான்குபக்கங்களிலும் பார்த்துக்கொண்டிருக்கின்றவேளையில் முன்போல ஒரு கப்பல்கரையோரத்தில் வந்துநின்றதைப்பார்த்து ஹாத்திமானவர் மனதைதைரியப் படுத்திக்கொண்டு ஆண்டவனையினைத்தும் புகழ்ந்துபோற்றி பிஸ்மில்லாவென்று அந்தகப்பலி லேறினார் அப்போது அதிலொருதட்டில்மதுரமான(ஹலுவா)வெகுதுப்பரவாகவும் சுடசுடவு மிருந்ததைப்பார்த்துதன்னிடமாக இழுத்துவைத்துக்கொண்டு தனக் கிஷ்டமானதுபோல்சாப்பிட்டுகாலைநீட்டிப்படுத்துக்கொண்டார் எத்தனையோ நாளைக்குப்பின் அக்கப்பலானது அக்கரையோரம்போய்ச்சேர்ந்தவுடனே ஹாத்திமானவர் இறங்கிமுன்னால் நடந்து போகின்றபோதெல்லாம் தன்னுடைய வெள்ளிக் கையைப்பார்த்துக்கொண்டு போகின்றார் நாலா நாள் ஒருமலையானது காணப்பட்டவுடனே அந்தமலையருகிலிருக்குமென்று எண்ணிநடக்க ஒரு மாதபயணமிருந்தது அவ் வெளியிலிருக்குமரங்களிலுள்ளகனிவர்க்கங்களைப் பறித்துபொசித்துக்கொண்டுநடந்துபோய் (மூன்று) நாள் பயணத்திலிருந்து பார்த்தால் வெண்மைசிவப்புபசுமை இன்னமனேக விதமானநிறமுள்ளதுமிகுந்த அழகாகக்காணப்பட்டது இன்னம் அப்புறம்போனால்பச்சைகளும்இரத்தினங்களும்வயிரியங்களும்முத்துகளும்எங்கேபார்த்தாலும் நிலத்தில்நிரம்பிகிடக்கின்றதைஹாத்திமுடைய ஆசையானது அந்தவஸ்துகளில்நின்று அதில் முதற்றரமுள்ளஇரத்தினங்களைப்பார்த்துபொருக்கியெடுத்து தன்னுடையஜேபில்போட்டுக்கொண்டு அப்புறம்கொஞ்சதூரவில்போய்பார்த்தாலிதைப்போல நூறுபங்கு அதிகமுள்ளதாக இரத்தினங்கள் பரப்பி கிடக்கின்றதைப்பார்த்து உடனேதன்னிடமிருந்ததையெறிந்துவிட்டுஅந்தஇரத்தினங்களில்கொஞ்சமெடுத்துமுந்தானியில் மூட்டைகட்டிக்கொண்டு எண்ணுகின்றார் நல்லதுஇந்தஇரத்தினங்களை நாம் எடுத்துக்கொண்டுபட்டணங்களில்போவோமாகில்இந்த இரத்தினங்களை



விலைமதிக்கவும்இதைவாங்கவும் ஒருவ னிருப்பானாவென்றுயோசனைசெய்துக்கொண்டுபோகிறார் அப்போதந்தமூட்டையைச்சுமந்துகொண்டுபோக தன்னால்கூடாமையாகஅவ்விடத்தில் உட்கார்ந்து தன்மூட்டையை அவிழ்த்து அந்தஇரத்தினங்களில்உயர்ந்தமேலானதுகளைப்பார்த்துபொருக்கிகொஞ்சமெடுத்துக்கொண்டு மற்றதையெல்லாம் அவ்விடத்தில் எறிந்துவிட்டுப் போகின்றபோது ஒரு குளத்தைக் கண்டுஅதினருகில்சென்றுகைகால்கள்துப்பரவுசெய்தபின்பு தன்னுடையவலதுகையைப்பார்த்தால்முன்னிருந்தபூவனைபோலாகிவிட்டது ஆனால் நகமானதுவெள்ளிபோலிருந்ததைப்பார்த்து ஆண்டவனிடமாகஷுகூர்செய்துமிகுதமாகப்புகழ்ந்துசொல்லுகிறார் ஆண்டவனே அந்தசமுத்திரத்தின் நீரால்என்கைவெள்ளியாகிப்போயிருந்தது இந்தக்குளத்தினீரால்எப்போதும்போலாகிவிட்டதுஇதிலென்ன ரகசியமிருக்கிறதென்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கையில்இரவாகிவிட்டது அவ்விடத்தில் தானேபடுத்துவிட்டார்அப்போதந்த குளத்திலிருந்து இரண்டுபேர்புறப்பட்டார்கள் அவர்களுடையதலையானது மனிதர்தலையைப்போலிருந்தது காலைப்பார்த்தால் யானையின்கால்போலவும்நகத்தைப்பார்த்தால்புலியின்நகம்போல்நிறத்தைப்பார்த்தால் மிகுந்தகறுப்பாகயிருந்தது.

அதைப்பார்த்தவுடனே ஹாத்திம் பயந்து நடுநடுங்கி எழுந்துநின்றுகொண்டு இதென்ன பலாவாகயிருக்குமென்றெண்ணுகிறார் நாம்பயந்தோடினால் வெட்கமாகயிருக்கும் நிற்கலாமென்றால் அச்சம்பெரிதாக யிருக்கின்றது நிற்கக்கூடவுமில்லைஆனால்இராத்திரியில் எவ்விதமாக யிருக்கலாமென் றெண்ணிக்கொண்டு வில்லையெடுத்துப்பூட்டி அம்பையெடுத்து அதில்வைத் தெய்தார் அந்த அம்பு வேகமாகப்போனவுடனே அவன்கையால் பிடித்துக்கொண்டான் இரண்டாவது அம்பையெடுத்து எய்யப்போகிறசமையத்திலவர்கள் மிகுந்தவணக்கமாகக்கேட்டுக்கொள்ளுகிறார்கள்ஓ ஹாத்திம்-பின் (தை) உன்னுடைய உயிரின்பயத்தால் நீ அம்பினால் எய்கின்றாய் நாங்களும் ஆண்டவனுடைய படைப்பாகயிருக்கும் நாங்கள் உனக்கு வருத்தம் கொடுக்கவரவில்லை யென்றமொழியைக்கேட்டவுடனேதன்கையிலிருந்தவில்லையும் அம்பையும் கீழேபோட்டுவிட்டு தலையைக் கீழேசாய்த்துக்கொண் டிருக்கின்றார் அவர்களுக்கு என்னவென்னவேலை யிருக்கிறது இவ்விடம் வருவதற்கு அம்பானால் நம்மிடமாக்விருக்கிறது

ஆனால் முன்னெய்த அம்பை பிடித்துக்கொண்டதுகள் இப்பேர்
தெறிந்தாலுமதையும் பிடித்துக்கொள்ளும் அதுகள்கம்பிடமாக நல்
மொழிகள் பேசிவருகிறதென் றெண்ணிக்கொண் டிருக்கையில்
அருகில் வந்து நின்றுக்கொண்டு சொல்லுகின்றது ஓ, ஹாத்திமே
உனக்கு கொஞ்சமாவது வெழ்க்கம்வரவில்லையா இந்த இரத்னங்
களுடைய ஆசைகொண்டாயென்று சொல்ல அப்போது ஹாத்தி
ம்சொல்லுகிறார் நானுடைய இரத்தினங்களை எடுத்துக்கொண்டு வ
ந்தேனென்றுசொல்ல அப்போதந்த தேவுகள்சொல்லுகிறது இன்ன
காட்டிலிருந்து நீ இரத்தினங்களையெடுத்துவந்திருக்கிறாயல்லவா அ
து இப்போது உன்னிடமாக யிருக்கின்றது அம்மொழியை ஹாத்
திம்கேட்டு ஜவாபுசொல்லுகிறார் ஓ, தேவுகளேஇந்த [illegible]
லுண்டான வஸ்துகளெல்லாம் [illegible]டைய படைப்பிலுள்ளதா
கயிருக்கின்றது ஆகையால் நானதையெடுத்துக் கொண்டுவந்திருக்கி
றேன் நீ யாருடையதோவென்று சொல்லுகிறாய்கல்லது உன்னுடை
யவஸ்த்தல்லவே அப்போதவர்கள்சொல்லுகிறார்கள் இந்தவஸ்தைவே
ெறுரு மனிதர்களுக்காகவேண்டி ஆண்டவ[illegible]பண்ணி வைத்தி
ருக்கிறான் ஹாத்திம்கேழ்க்கிறார் அந்தமனிதர்க[illegible]ராகயிருக்கும் இ
ன்சான்களில்நின்றுமேன்மையாகயிருப்பார்களா [illegible]னிதர்கள் எல்லாப
டைப்[illegible]களில்நின்றுமேன்மையாகயிருக்கின்றார்கள் அப்போதவர்கள்
சொல்லுகி[illegible]ர்கள் அதுமெய்யாகயிருக்கும் ஆனால்ஆண்டவன்இந்தவ
ஸ்துகளை (பரிக்ஷைக்காக)வைத் திருக்கின்றான் அவர்களுடையவேலைக்
கிரகவேண்டி அப்போது ஹாத்திம்சொல்லுகின்றார் என்ன இந்தஇரத்
தினங்கள்மனிதர்களுக்கு லாயக்கல்லவா அவர்கள்நகைகள் செய்து
போடவர்களுக்கு தகாதென்றுசொல்லி எனக்கிந்த இரத்தினங்கள்
வேண்டியதில்லை நானதை விரும்பவு மில்லை இந்த அந்தரமான
காரணத்தி லிருக்கின்றதை மனிதர்களுக்குக் காண்பித்து ஆண்ட
வனுடைய பெருமையையும் வல்லபத்தையும் அறியும்படிக்கு நான்
ஆசைகொண்டெடுத்தேனே தவிரமற்றபடியெனக்காகவேண்டியெடுக்
கவில்லை இம்மொழிகளைதேவுகள்கேட்டுசொல்லுகின்றதுநல்லது நீர்
சொன்னதுசரிதான் ஆனாலிப்போது நாம் சொல்வதைக்கேளும்என்
விதமானால் உனக்குயோக்கியமல்ல நீ உன்னுடையபட்டணத்துக்கு
யாதொருகுற்றமில்லாமல் போய்ச்சேரவேண்டுமானால் இந்தஇரத்தி
னங்களையெல்லாம் இவ்விடத்தில் இருக்கணமே போட்டுவிடுமென்ற
மொழியை ஹாத்திம்கேட்டு தான் கட்டிவைத்திருந்த இரத்தினங்க



ளையெல்லாம்கோபமாகயெறிந்துவிட்டு இதை நீங்களேதான்கொண்
டு போங்களென்றும் பின்பு சொல்லுகின்றார் நானெவ்வளவுதூரத்தி
லிருந்து சுமந்து மிகுந்தவருத்தமும் தொந்தரவும்பட்டுக்கொண்
டு ஆசையாகக்கொண்டு வந்திருக்க இப்போது நீங்கள்பெரிய ஜுலூம்
செய்து என்னிடமாகயிருந்ததை எடுத்துக்கொண்டீர்கள் நானந்தவ
ஸ்துகளைத் திருடிக்கொண்டுவரவில்லை ஆனாலொருவன் வருந்தப்பட்
டு ஒரு சுமையையெடுத்துவந்தால் அவனுக்கு கூலியாவது கொடுக்க
வேண்டுமே உங்களுடைய செய்ல்சரியானதல்ல இம்மொழியைதே
வுகள்கேட்டு சொல்லுகிறது நீர் சொன்னதுசரிதான் பெரியோர்கள்
அன்னியவஸ்துக்களுக்கு இச்சிக்காமல்தனக்குவேண்டுமாகில் தன்னு
[illegible]உழைப்பெடுத்துக்கொண்டு கூலிகள்வாங்கிக்கொள்
ளுகிறார்கள் அப்படிக்கி[illegible] [illegible]ளியர்சொத்தைதகையால்தொட்
டெடுக்கலாமா உன்னுடையபெருமைக்கு இந்தகுமாஇன்னும் நீசுமந்
தகூலிகொடுக்கவேண்டுமென்றுகேழ்க்கிறாய் பெரியோர்களுக்கிது அ
ழகானதல்லவென்றுதேவுகள்சொல்லஹாத்திமானவர்கேட்டியாதொ
ரு மறுமொழிகளு[illegible]சாமல் அச்சப்பட்டு தலைசாய்த்துக் கொண்
டிருக்க அப்போது[illegible]தேவுகள் இரத்தினங்களிலவகைக்கு ஒவ்வொ
ன்று உயர்ந்தாகப்பொறுக்கி ஹாத்திமுக்கு கொடுத்து சொல்லு
கிறார்கள் இந்த இரத்தினமே உனக்குப் போதுமானதா யிருக்கும்
அவர் அதை வாங்கிக் கொண்டு சொல்லுகிறார் ஓ, ஆ
ண்டவனுடைய படைப்பிலுள்ளவர்களே எனக்கு சகாயமாக நான்
என்னுடையதேசம்போக வேண்டிய பாதையைக் காண்பிக்கவே
ண்டுமென்றுகேழ்க்கஅப்போதந்த [illegible]சொல்லுகின்றது ஓ, வாலி
பனே நீ இதுவரையிலும் இறந்துபோகாமல் உயிரோடே பிழைத்து
வந்தது வெகு ஆச்சரியமாக யிருக்கின்றது ஆனாலிந்தஇவுகளில் யா
தொருவர்வந்து உயிர் தப்பிப்போனவர்கள் ஒருவரையும் நான் கண்ட
தில்லை ஆனால் நீ சந்தேகப்பட வேண்டியதில்லைஉன்னுடைய [illegible]
பெரிதாகயிருப்பதால் இவ்விடம் வந்தாய் ஆனால் நீ போகவேண்
டுமானால் பாதையில் ஒரு இரத்தினத்தினுடைய சமுத்திரமும்
நெருப்பின் சமுத்திரமும் காணப்படும் இது களைக்கடந்து நீ அப்
புறம் போனால் யாதொரு வருத்தமும் தடங்கலில்லாமல் ச
லாமத்தாக உன்னுடையதேசத்தில் போய்ச்சேர்வாய் ஆனால் வழியி
ல்கண்ணுக்கடங்காதஇரத்தினங்கள்நிலத்தில்கிடக்கும் அதில்யாதொ
ன்றையுமிச்சிக்காதே அதைகண்ணெடுத்துப் பார்க்காதே எவ்விதத

திலும் ஆண்டவன் உன்னை உன்தேசம் கொண்டுபோய்ச் சேர்ப்பான், அப்படியிருக்கநீ இச்சித்து அதையெடுப்பாயாகில் அதினால்வரும்தண்டனைநீ யடைவாயென்றும் இவ்விதமாக இவ்விரண்டுதேவுகளும்சொல்லி தண்ணீரில் முழுகி ஹாத்திமுடைய கண்ணுக்குத்தெரியாமல் மறைந்துபோனார்கள் அப்போதுஹாத்திமானவர் அவ்விடத்தில் அன்றிரவுமுழுதும் தனித்திருந்து ஆண்டவனை நம்பிபோற்றிப்புகழ்ந்து நீதவிர வேறேதுணையில்லையென்று அவ்விடத்திலிருந்து விடிந்தபின்பு முன்னால் நடக்கின்றார் அப்படிக்கு கொஞ்சதூரம் போனவுடனே அவ்விடத்தில் ஒரு சமுத்திரம் காணப்பட்டது அதினுடைய தண்ணீரைப்பார்த்தால் மிகுந்த குளிர்ச்சியாக யிருந்தது அப்போது ஹாத்திமானவர் மிகுந்த விசனத்தோடே சொல்லுகின்றார் ஆண்டவனே நீ என்னையெத்தனையோ அபத்துக்களிலின்று காப்பாற்றிக் கொண்டாய் இவ்வேளையிலிந்த சமுத்திரத்தில் நின்று என்னைதப்பிக்க வேண்டுமென்றுகெஞ்சிகேட்டுக்கொண்டுநிற்கின்ற வேளையில் ஒருவகைபாகசத்தம்ஹாத்திமுடையகாதில்விழுந்ததுஎவ்விதமானால்ஓ, ஹாத்திமே நீ அச்சப்படாமல் தைரியமாக இச்சமுத்திரத்தில்இறங்கி நடந்தால்நிலத்தில்நடக்கிறபாவனைப்போலாகுமென்ற சத்தம்கேட்டவுடனே ஆண்டவனே உன்னைநம்பினேனென்றுசமுத்திரத்திலிறங்கி நிலத்தில்நடந்துபோகிறதுபோ லிருந்தது யாதொருகுற்றமில்லாமல் அக்கரைபோய்ச்சேர்ந்தார்.

அவ்விதமாக மூன்றுநாள் நடந்துபோகும்போது ஒரு சமுத்திரம் எதிரில் காணப்பட்டது அதைப்பார்த்துமிகுந்த சந்தோஷமடைந்து பசிதாகமும் மிச்சமாக யிருந்தபடியால்அந்தசமுத்திரத்தினருகாமையில்சேர்ந்து அவ்விடத்தில் பார்த்தால் அதினுடையஓரத்தில் கண்ணுக்கடங்காத(ஆணிமுத்துகள்) கோழிமுட்டைப்பிரமாணமாகக் கிடக்கின்றது அதினுடைய ஒளிவால்கண்கள் முழிக்கக் கூடாமையாகயிருக்கின்றது அதினுடையவிலையைமதிக்க லோகத்திலாராலும் இவ்வளவென்றுமதிக்கக் கூடாமையாக யிருக்கும் அப்படிக்கிருக்கையில் ஹாத்திமானவர் அதை இச்சைப்பட்டு (ஃ உம) முத்துகளெடுக்க வெண்ணங்கொள்கையில் அந்த இரண்டு தேவுகள்சொன்னசொற்கள் நினைவுவந்தவுடனே பயந்து அதைத்தொடாமல் விலகின்றார் பின்பு அந்த கரையோரத்திலிருந்து அதினுடைய தண்ணீரைப்பார்த்தால் வெண்மையானபால்நிறம்போலவும்ருசி தேனைப்போ



லவுமிருந்ததுதனக்குபசிதாகமிச்சமிருந்தபடியால் அதுதணியும்வரையில் அந்ததண்ணீரைக்கையாலெடுத்து வயிறு நிரையச் சாப்பிட்டு பின்பு இதைக்கடந்துஎவ்விதமாகப்போவோமென்றுவிசனப்பட்டுநிற்கின்றவேளையில் ஒரு மனிதன்வந்துஹாத்திமை தூக்கிபறந்துக்கொண்டு அப்புறம்விட்டுகையாகிவிட்டார் வுடனே அவர் அவ்விடத்திலிருந்துமுன்னால் நடந்துபோகிறபோதுவெகுதுலைவில்ஒருவெளிச்சம் காணப்பட்டது அதெவ்விதமானால்காற்றின்மேலாக ஒரு பொன்னால் செய்தசிம்மாசனம்போல் பிரகாசித்துக்கொண்டிருந்தது அதைப்பார்த்துக்கொண்டுஒருமாதம்சென்றபின்பு அதினருகில் போய்ச்சேர்ந்து பார்த்தால் ஒரு பொன்மலையானது வானத்தை யளாவிக்கொண்டுநிற்கின்றது அதின் மேலேறிப் பார்க்கவேண்டு மென்று யோசித்து மனதைத் திடப்படுத்திக் கொண்டு அம்மலையிலேறினார் அவ்விடத்திலுள்ள மரங்கள், புல்பூண்டுகள் மற்றதெல்லாம் பொன்னாகயிருப்பதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு இன்ன மதிலென்ன ஆச்சரியமிருக்கிறது அதைப்பார்க்கலா மென்று முன்னால் நடந்து (மூன்று) நாள் பயணம்போய் அவ்விடத்தில்பார்த்தால் ஒரு பெரியமயிதானம் காணப்பட்டது அதின்நிலமெல்லாம்பொன்னிறமாகஒளிவுபொருந்தியதாகயிருக்கிறது அதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு அப்புறம்போய் பார்த்தாலொருபெரிய விஸ்தாரமான மஹாலானது பொன்னால்கட்டி இரத்தினாதிகளாலிழைத்துகண்ணால்பார்க்கக்கூடாததாகயிருந்தது அதினுடைய வேலைப்பாட்டைக்குறித்துஎழுதவேண்டுமானால் இவ்வளவென்று எழுதமுடியாது அவ்விதமாகயிருக்கும் அதினருகில் போய் பார்த்தால் அந்த மஹாலினுடைய வாசற்படி கதவுதிறந் திருக்கிறது அதில்நுழைந்து போய்பார்த்தால் ஒருதோட்டமானதுகாணப்பட்டது அதினுள் கணக்கில்லாத பொன்மரங்களும்பொன்புஷ்பஜினுசுகளும் இன்னவிதமென்றுசொல்லக்கூடாது பூவின்மரங்களெல்லாம் வயிரமாகவும் அதின் புஷ்பம்இலைகாய்பிஞ்சுகளெல்லாம்இரத்தினங்களாலிழைத்திருக்கின்றபாவனைபோலிருந்தது இன்னம்நான்குபக்கங்களில் பார்த்தாலும் அவ்விடத்திலுள்ள மரங்களெல்லாமவ்விதவண்ணமாயிருக்கின்றது அதினுடையபிரகாசவொளியை கண்ணால்பார்க்கக்கூடாமையாகிவிட்டது இந்தஆச்சரியங்களைஹாத்திமானவர்பார்த்து மிகுந்த ஹைரானாகி ஆண்டவனே உன்னுடையகாரணம்உனக்கேதெரியுமென்று யனமபூரித்து அனேகவிதமாகஆண்டவனைப்புகழ்ந்து போற்றிக்கொண்டு அவ்விடத்திலிருக்கின்ற கனிவர்க்கங்களை

ன்னலாமென்றுமரத்தினருகில்போய்ஒருகனியைப் பறித்துத்தின்றுர்
அதினுடைய ருசியும்வாசனையும் இவ்விதமென்று சொல்லக்கூடாது
தன்னுடையபசிதீரும்படியாக கனிகளைப்பறித்துவயிறுநிறையச்சாப்
பிட்டவுடனே தன்னைமறந்துசுத்துமாரி கிடந்தார்சிலநேரம் சென்ற
பின்பு எழுந்து அவ்விடத்திலொருகுள மிருப்பதைக்கண்டு அந்த
குளத்தினருகில்சென்றுபார்த்தால்அந்தத்தண்ணீர்பாலிலும் வெண்
மையாகவிருந்தது குடித்தால்தேனிலும்அதிகருசியாகயிருந்தது அந்த
க்குளத்தின்கரையிலிருந்துஹாத்திமானவர்நினைக்கின்றார் இவ்விதமா
னதோட்டம் யாருடையதாகயிருக்கும் இதினுடைய எஜமானனவன்
யாராகயிருப்பான் இதை யாரிடமாகக்கேழ்க்கலாமென்று நாடியிருக்
கிறவேளையில் சிறிதுபரிக்கூட்டங்கள்மிகுந்த அழகுபொருந்திய மின்
னற்கொடிபோலவும் சந்திரனுக்கொப்பான திரேகங்கொள்ளாத மா
ணிக்கம் முத்தால் பலபல நகைகளணிந்து ஒளிவு பொருந்
திய உடுப்புகளுடுத்திக்கொண்டு மிகுந்த அலங்காரமாக ஹாத்திமா
னவரைக்கண்டு புன்சிரிப்புடன்சிரித்துக்கொண்டு வைஹருஞ்கிசொ
ல்லுகிறார்கள்.

ஓ, ஆதம்ஜாதேகீயாராகயிருக்கும்ஏவ்விடமாகயிருந்துஇந்ததோ
ட்டத்தினுள்ளேவந்தாயென்றுப ரிகள்கேழ்க்கின்றமொழிகளைப்பார்
த்தால்முத்துகளும்இரத்தினராசிகளையுங்கலந்து இறைக்கின்றதுபோ
ல் ஹாத்திமானவர்பார்த்து கண்கொள்ளாதபூரிப்புடன்சொல்லுகின்
றார்ஆண்டவனேஇந்தப்பெண்களைஉன்னுடையகையாலேசெய்ததையா
இந்தஅழகும்வடிவும்பிரகாசமும்இவ்விதமாகஉன்னுடையகுதரத்தா
ல்இவர்களுக்கு இவ்வளவுலட்சணத்தைக்கொடுத்தாய் இந்தப்பெண்க
ளைப்பார்த்தவுடனே(மலிக்காஜரீன்போஷ்)என்றபெண்ணை நினைத்து
அவளுமிவர்களைப்போலவேஅழகாகஇருக்கின்றாள்ஆண்டவனேஎன்
னை அவளோடு சுருக்கில்சேர்க்கவேண்டும் அவளுடைய முகத்தைப்
பார்க்கநீ உதவிசெய்யவேண்டு மென்றும் எண்ணி அந்தப் பரிகளைப்
பார்த்து ஹாத்திம்கேழ்க்கின்றார் ஓ, ஆண்டவனுடையபடைப்பிலுள்
ளவர்களே நீங்கள் யாரென்று எனக்கு நிசத்தைச்சொல்லவேண்டும்
இந்த தோட்டத்தினுடைய பாத்துஷா யாராகயிருக்குமென்று கே
ழ்க்க அப்போது அந்தப்பரிகள் சொல்லுகிறார்கள் இந்ததோட்டமு
மிந்தமஹாலும் (பரிகவுஷ்லப்)யென்பவளுடையதாகயிருக்கு மென்று
சொல்லிக்கொண் டிருக்கின்றவேளையில் அந்தப்பரியானவள் வந்து
சேர்ந்தாள் அவளைப்பார்த்தவுடனே ஹாத்திமானவர்தன்னைமறந்துசு



த்துமாறி நிலத்தில் விழுந்துவிட்டார்அப்போதவள் ஹாத்திமுடைய
தலைமாட்டில்வந்து நின்றுக்கொண்டுசொல்லுகின்றாள் அடே நீயாரி
வ்விடமிருக்கப்பட்டவர்கள் சுருக்கில் பன்னீர்கொண்டு வந்துஇவரு
டைய முகத்தில் தெளியுங்களென்ற மொழியைக்கேட்டு ஒருபரியான
வள்ஓடி ஒரு(குலாபுதீஷானைக்) கொண்டுவந்துரெத்தினமிழைத்த ப
ன்னீர் சொம்பில் விட்டு ஹாத்திமுடையமுகத்தில் தெளிக்கமயக்கம்
தெளிந்து எழுந்திருக்க உடனே (பரிகவுஷ்லப்) என்பவள் நவரத்தி
னமிழைத்த சிம்மாசனத்தில் போயிருந்து ஹாத்திமுக்காக ஒருநாற்
காலி ரத்தினமிழைத்ததாகக்கொண்டு வந்துபோடச்சொன்னாள் அப்
படியே போட்டவுடனே அதின்மேல் ஹாத்திமுட்கார்ந்தார் அப்போ
து அந்தப்பரியானவள்கேழ்க்கின்றாள் ஓ அழகுவடிவுள்ளவாலிபனே
நிசமாகச்சொல்லும் நீர் இந்நேரத்தில் எங்கேயிருந்து இவ்விடம்வந்
தாய் என்னவேலையாக என்னைக்கொண்டு இதுவரைக்கும் வந்திருக்
கின்றாய்நீ இப்போதெங்கேபோகிறாயென்றுகேழ்க்கஅப்போதுஹாத்
திமானவர்தன்னுடைய சங்கதிகளையெல்லாம் ஆதிமுதல் அந்தவரை
யில் சொன்னபின்பு கேழ்க்கின்றார் இந்ததோட்டமும் அதிலிரு
க்கின்றமஹாலும்யாருடையதாகயிருக்கும் இந்த மலையினுடையபே
ரென்னவென்று கேழ்க்கஅப்போதந்தபரியானவள்சொல்லுகின்றாள்
இந்த மலையானது (கோஹெஜரீன்) என்றதாகயிருக்கும் இந்ததோட்
டமும்மஹாலும் (ஷாஹபால்) பாத்துஷாவுடையதாகயிருக்கும் அவ
ருடைய பெண் (ஆலா) யென்றபேருள்ளவளாக யிருக்கின்றாள்
நானுமந்தப்பெண்ணுடையதோழிகளில் ஒருவளாகயிருக்கும்ஆறுஜெ
ன்னுடையமுறையானது ஏழாநாளாயிருக்கின்றது அப்போதவளரு
காமையில்நானிருப்பேன் இந்ததோட்டமும்மஹாலும்(கோஹெகாபு)
என்றமலையைச்சேர்ந்ததாகயிருக்கும் அது நானியாவினுடைய நடு
வியாகயிருக்கும் துலைவில் தெரியவருகின்றதே அது அவளுடைய
கோட்டையாகயிருக்கும் (௩) நாள் வரையிலும் ஹாத்திமானவருக்கு
விருந்துபலபலவிதமான அன்னமுதலியபதார்த்தங்களும்கனிவர்க்கங்
களும் விதவிதமான வஸ்துகளெல்லாம்சாப்பிடக்கொடுத்து (ஐந்தா)
நாள் சொல்லுகின்றாள் ஓ, வாலிபனேநீர் இவ்விடமிருக்கத்தகுந்த
தல்ல ஆறுஞ்சமையாயிருக்கும்இவ்விடம்விட்டுப்புறப்படலாமென்று சொ
ல்ல அம்மொழியை ஹாத்திம்கேட்டு அவளிடமாக உத்தரவுபெற்று
க்கொண்டு காடுகள் மலைகள்தோறும் நடந்துபோகின்றார் (௰௨) நா
ளைக்குப்பின் அந்தமலையைவிட்டு நடந்து பெரிதானவொருவனாந்திரமான

காட்டில் போய்ச்சேர்ந்து அவ்விடத்தில் பார்த்தால் பொன்னிறம்
போல் ஒரு சமுத்திரம் காணப்பட்டது அதினருகில்போய் பார்க்
க பொன்னையுருக்கியிருக்கின்றதைப்போலிருந்தது அதுமிகுந்த அலை
களடித்துக்கொண்டு வானத்தையளாவிக்கொண் டிருக்கின்றது இ
வ்விதமான சமுத்திரத்தை பார்த்தவுடனே மிகுந்த விசனமாக அந்த
க்கரையிலிருந்து கொண்டுசொல்லுகிறார் நான் இந்த சமுத்திரத்தை
விட்டப்புறம் எவ்விதமாகப்போவேனென்றிருக்கையில்கைபாகஒரு
பொன் படகு எதிரில்வரக்கண்டு மிகுந்தசந்தோஷமடைந்தார் அதுக
ரையோரம்வந்துநின்றவுடனே ஆண்டவனை ஷுகூர்செய்து அப்படகில்
ஏறி யென்னபார்க்கிறாரானால் ஒருதட்டில்சுடசுட (ஹலுவா) கிரப்பியி
ருக்கக்கண்டார் அப்போது ஹாத்திம் மிகுந்தயிளப்பும்பசியாகயிருந்த
படியால் அந்தஹலுவாவைவயிறு நிறையச்சாப்பிட்டு அச்சமுத்திரத்தி
ன் தண்ணீரில் கொஞ்சம் குடிக்கலாமென்றெண்ணி பின்னும் நினை
க்கின்றார் ஒரு வேளை கைபொன்னாகப்போய்விடுமோவென்று பயந்
து குடிக்காமலிருந்தார் பின்பு தன்னிடத்திலிருந்த ஒரு கட்டோரு
வையெடுத்துக்கொண்டு கொஞ்சம் தண்ணீர்மொண்டு தன்னுடை
ய தாகந்தீரும்படியாகக்குடிக்கலாமென்றெண்ணி பின்னுமெண்ணுகி
ன்றார் இத்தண்ணீரைக்குடித்தால் என்னபழுது வருமோவென்றெண்
ணி அத்தண்ணீரில் அண்ணாந்துக்கொண்டு நாலுதுளிதொண்டையி
ல் படும்படிக்குவிட்டுக்கொண்டு பார்த்தால் அந்தகட்டோருவும் நா
ன்கு முன்பல்லுகளும் பொன்னாகிவிட்டது பின்பு அவ்விடத்தில் ஆண்
டவனைப் புகழ்ந்துபோற்றிக்கொண்டு இரவும்பகலுமாக (நாற்பதா) நாள்
அக்கரையோரம் போயிறங்கி ஆண்டவனுடைய பெருமையான குத
ரத்தின்வேடிக்கைகள் நினைத்து (உ) ரகாயத்துஷுகுரானதொழுது
(எ) நாள்வரையில்நடந்துஎண்ணுகிறார் என்னுடைய ஆயிசிலும் இவ்வி
தமானவேடிக்கைகளைப்பார்த்ததும்கேட்டதுமில்லையேயென்று மூன்
றால்நடந்து (எட்டா) நாள் சுத்தகல்லால்நிறைந்திருக்கின்றபெரியவி
ஸ்தாரமானமைதானத்திற்போய்ச்சேர்ந்தார் அந்தகல்லுகளின்பேரில்
காலடிவைத்து நடக்கக்கூடாமையாகிவிட்டது எவ்விதமானால் அந்த
கல்லுக ளெல்லாம் நெருப்பில்போட்டுக்காச்சி உருக்கிவிட்டதுபோ
லிருக்கின்றது இவ்விதமான கல்லுகளில் கொஞ்சம்தூரம்நடந்துபோ
கலாமென்று காலடி யெட்டிவைத்துமுன்னால் நடந்தேன் பின்புஎன்
னால் நடக்கதாகத்தில்லாமல்போய் அவ்விடத்தில்உட்கார்ந்து விட்
டேன் அந்தவெப்பத்தால் நாவுலர்ந்து தொண்டையும் உதடும் வர



ண்டுதிரேகமெல்லாம் அனலெழும்படி பற்றிபதைபதைத்து தமோரு
தன்னிடத்திலிருந்தமோருவையெடுத்துவாயில்போட்டுக்கொண்டார்
அதினாலொரு குணமும்காணவில்லை அப்போதந்தமோருவைவாயில்
நின் றெடுத்து கோபத்தா லெறிந்துவிட்டார்தான் தண்ணீரிலிருந்த
மீனை கரையில்பிடித்துப்போட்டால்எவ்விதமாகத் துள்ளுமோ அது
போல் பதைபதைத்துதுடித்துக்கொண்டு ஆண்டவனேஎன்னை இப்
பேர்ப்பட்ட அகப்பாட்டில்அகப்படச்செய்துவைத்தாய்ஆனால் தனி
யாயிருந்து இப்பேர்ப்பட்ட துன்பமடைவதைப் பார்க்கிலும் இப்
போது என்னுடையஉயிரைவாங்கிக்கொண்டால் நலமாயிருக்குமெ
ன்றுசொல்லி அனேகவிதமாகப்புலம்பியழுதுதன்னைமறந்துசுத்தமா
றிமய்யத்தைப்போலவும்[illegible]மாகிகாவுமுடைபடப்பல்கிட்டுகின்
றவேளையில்[illegible]ன்னால் அந்[illegible]த்திலிருந்துவந்து இரத்தினங்களை
க்கொண்டுபோகக் கூடாதென்றுசொன்ன இரண்டு தேவுகள் வந்து
ஹாத்திம் படுகி[illegible]றதைப்பார்த்து மனவருத்தமடைந்து மடியில் தூக்
கிவைத்துக்கொண்டு தன்னிடத்திலிருந்தஷர்பத்தானதை கொஞ்சங்
கொஞ்சமாக வாயில்விட்டார்கள் அந்த குளிர்ச்சியான ஷர்பத்தான
து வாயில்பட்டவுடனே ஹாத்திமானவர் மயக்கந்தெளிந்து கண்ணைத்
திறந்துபார்க்க முன்னேற்கண்ட இருவர்களு மிருக்கக்கண்டு மிகுந்த
வாழ்த்தல்வாழ்த்தி இந்தவேளையில் நீங்களெனக்கு பெரியவுபகாரஞ்
செய்தீர்கள் ஆனாலிப்போது நான் எந்தவழிபோகவேண்டும் இந்த சூ
டானவெப்பமானது இவ்விடத்தில் இவ்விதமாக யிருக்கின்ற காரண
மென்னவென்றுகேட்க்க அப்போதந்ததேவுகள்சொல்லுகின்றது இ
வாமியனே இந்தசூடானதென்னவானால் இதற்குமுன்னால்நெருப்பினுடை
யசமுத்திர மிருப்பதால் அதினுடைய சூடாகவிருக்கும் ஆனால்தை
க்கடந்துபோகவேண்டியது ஆண்டவனுடைய குதரத்தினால் உம்மு
டையதேசம் போய்ச்சேரலாம் ஆனால் நாங்கள் வழிகாண்பிக்க
யெங்களுக்குத்தரவில்லை எங்களுடையவேலையுமல்ல ஆனாலெங்க
ளாலாக வேண்டிய வுபகாரம் இந்த நெருப்பானது சுடாமல் குளிர்
ச்சியாக யிருக்கும் படிக்கு எங்களாலாகுமென்று சொல்ல ஹாத்
திம் சொல்லுகிறார் நீங்களெனக்கு நன்மைசெய்ய வேண்டிய
தைத் தடங்கலில்லாமலெனக்குச் செய்யலாம் அது பெரியஹாஜிக்
கன்மையாகவும் வசானகவுமிருக்கும் தங்கள் உதவி வீண்போகா
தென்று ஹாத்திமானவர்சொல்ல அப்போ தந்த இரண்டுதேவுகளும்
யோசித்து ஹாத்திமுக்கு ஒரு மோருவை கொடுத்து சொல்லு

இருர்கள் இவ்விடத்துக்கு முன்பாகநெருப்பினுடைய சமுத்திரமிரு
க்கிறது அவ்விடம்போனால் இந்த மோருவை வாயில்வைத்துக்கொ
ண்டால் அந்த நெருப்பின்சூடு உன்னை யாதொன்றுஞ் செய்யமாட்
டாது குளிர்ச்சியாகயிருக்கும் அப்புறம் போனவுடனேஇந்த மோரு
வை நினைவாகமறவாமல் வாயிலிருந்தெடுத்துஎறிந்துவிடுமென்று அ
றிவும் தைரியமுஞ்சொல்லிவிகைபாகப்போய்விட்டார்கள் அப்போது
ஹாத்திமானவர் அன்றிரவெல்லாம் அவ்விடத்தில் தங்கியிருந்து வி
டிந்தபின்பு அந்தமோருவை வாயில்போட்டுக்கொண்டு நடந்தார் மூ
ன்று தினத்துக்குப்பின்நெருப்பினுடைய அலைகள் எதிர்காணப்படுகி
றது அதைப் பார்த்தவுடனே அச்சப்பட்டுஆண்டவனேஇந்தஅக்கினி
யைக்கடந்துபோக உதவிசெய்யென்று புகழ்ந்துக்கொண்டு நடந்து
அந்தச் சமுத்திரத்தின்கரையில் [illegible]சேர்ந்து பார்க்கும்போதுஅ
ந்தநெருப்பின்அலைகளானதுவானத்தையளாவிக்கொண்டு போவதை
யும் வருவதையும் ஹாத்திமானவர்வானத்தையும் பூமியையும் கீழ்மே
லாகப்பார்த்துக்கொண் டிருக்கின்றபோது கைபார் ஒருகப்பலானது
கரையோரத்தில்வந்துஒதுங்கிநிற்கக்கண்டு ஆண்டவனை மிகுதமாகப்
போற்றிபுகழ்ந்துசொல்லுகிறார் பார்த்தும்தெரிந்தும்இந்தநெருப்பின்
சமுத்திரத்திலென்னுடையதிரேகத்தைப்போடுவதுசரியல்ல ஆனால்
நானென்னசெய்வேன் இது தவிரவேறுவழி தெரியவில்லையே எவ்
விதத்திலும் ஆண்டவன் எனக்குதவிசெய்வார் அவனுடையநாட்ட
ம்போல்நடக்கும் ஏறுவந்தபோதிலும் நான்ராஜியாகயிருக்கவேண்டு
மென்று மனதைக்கெட்டிப் படுத்திக்கொண்டு விதியின்போல்நடக்க
ட்டுமென்றெண்ணி அந்தகப்பலில்ஏறினார்அவ்விரண்டுபேர்கள் கொ
டுத்தமோருவை வாயிலடக்கிக்கொண்டுபார்க்கும்போதுகுதறத்தாக
அக்கப்பலில் ஒரு கட்டில்(குர்மாவும் கோதுமைரொட்டியும்)நிறைய
விருக்கக்கண்டு அதை தன்னருகிலிழுத்து வைத்துக்கொண்டுவயிறு
நிறையச்சாப்பிட்டேன் அக்கப்பலானது மிகுந்தவேகமாகப்போகின்
றதை ஹாத்திமானவர்பார்த்து மிகுந்த பயமடைந்து கண்ணைகெட்டி
யாக மூடிக்கொண்டு குப்புறப்படுத்துக் கொண்டிருக்கின்றார் ஒரு
வேளை கண்கள்தன்னாலேதான்திறந்துப்போனால் அப்போது உயிரா
னது உடலைவிட் டோடுகிறதாயிருக்கும் உடனே நான்பலமாக
மூடிக்கொண் டிருப்பேன் அப்படி போகிறவேளையில் அக்கப்பலா
னது மத்தியில் ஒருசுழலிலகப்பட்டுக்கொண்டு பம்பரம் சுற்றுகிறது
போல் சுற்றுகின்றதுஅப்போது ஹாத்திமானவர்என்னுகிறார் [illegible]



[illegible]யில்லாமல் இப்போது இச்சமுத்திரத்தில் மூழ்கிவிடுவோம்துனி
யாவின் ஆசையை யெல்லாம்வெறுத்து ஆண்டவனே நீயேதுணையெ
ன்று நினைத்துசிஜுதாவில் விழுந்துகிடக்கிறார் இவ்விதமாக மூன்று
நாள்வரையில்அந்தச்சமுத்திரத்திலகப்பட்டுதடுமாறிஆண்டவன்கிரு
பையால் அக்கரைபோய்தோணிசேர்ந்து நின்றவுடனே கண்ணைத்தி
றந்து ஹாத்திமானவர்பார்த்து தோணியிலிருந்து கீழேயிறங்கி பார்க்
கின்றபோது அந்தச்சமுத்திரமும் அந்த தோணியும் யாதொன்றுங்
காணாமல்மாயமாகப்போய்விட்டது.

ஹாத்திமானவர் மிகுந்த ஆச்சரியப்பட்டு ஆண்டவனேஇதெ
ன்ன உன்னுடைய வல்லமையென்று நினைத்து அப்புறம் போகின்
றபோதில் ஒரு அகோரமான [illegible]காணப்பட்டது அப்போதந்தமோ
ருவைவாயிலிருந்தெடுத்து அவ்விடத்திலெறிந்துவிட்டுகொஞ்சம்பா
தைநடந்து போன[illegible]பின்பு அவ்விடத்தைப்பார்த்தால் எமனுடை
யஎல்லைகைப்போல் காணப்பட்டு ஆண்டவனே என்னுடைய கிருபை
யா லென்னை எமன்தேசத்தில் கொண்டுவந்துசேர்த்தாயென்று மிகு
தமாகப்போற்றி புகழ்ந்துகொண்டுபின்பு அவ்விடம்விட்டுமுன்னால்
கொஞ்சதூரம் போனவுடனே ஊர்காணப்பட்டது அந்தஊரைநோ
க்கிப்போகின்றபோது அவ்விடத்திலொருவன்வெள்ளாமைசெய்துக்
கொண்டிருந்ததை ஹாத்திமானவர்பார்த்து ஓ,மனிதனேஇந்தஊர்தே
சமாகயிருக்கும் யாருடையதாகயிருக்கும் இதின்பேரென்னவென்று
கேழ்க்க அதற்கவன் மறுமொழிசொல்லாமல் ஹாத்திமுடைய முக
த்தை உற்றுஉற்றுப்பார்க்கிறான் அப்போதவனைக்கேழ்க்கிறார் ஓ,மனி
தனே நான்கேழ்க்கின்றமொழிக் குத்தரவுகொடாமல் என்முகத்தை
என்பார்க்கின்றாயென்றுகேழ்க்க அப்போதவன் சொல்லுகின்றான்
ஓ, வாலிபனே உம்முடைய முகத்தைப்பார்த்தாலெங்கள் ஹாத்திம்
பாதுஷாஜாதாவைப்போல்தோற்றியது அப்போதவனை ஹாத்திம் கே
ழ்க்கிறார் நீ யாராகயிருக்கும் உனக்கென்ன தெரியவருமென்று
கேழ்க்க அப்போதவன சொல்லுகிறான் ஓ, வாலிபனே இந்தத்தே
சமானது (எமன்) ஆகயிருக்கும்ஹாத்திமானவர் எங்கள்ராஜாவாக
விருக்கும் இப்போது இந்ததேசத்தை யாருமின்றவர் (தை) என்
றபாதுஷா வாகவிருக்கும் அவருடைய குமாரன் ஹாத்திமென்பவ
ராகவிருக்கும் அவர் இந்ததேசத்தை விட்டுப்போய்(ப)வருஷமாகிவி
ட்டது ஆனால் ஒருதடவை மலிக்காஜரின்போந்த இவ்விடம்வந்தான்

அப்போது ஹுசன்பானு அனுப்பிய பதார்த்தங்களை இருவரும் மனமகிழ்ச்சியாகச் சாப்பிட்டு கார்வான்ஸருவில் ஹாத்திமானவர் (௨ - ௩) நாளிருந்து தலைமுழுகிவேறேயுடுப்புடுத்திக்கொண்டுஹுசன் பானுவிடமாகப்போனார் அப்போது அவருடைய வேலைக்காரர் கள்போய்தெரியப்படுத்த ஹுசன்பானு வென்பவள் முன்போல் பொன் நாற்காலி போட்டு ஹாத்திமை யுட்காருக்கச்செய்து பர்தா வை நடுவில்விட்டுக்கொண்டு ஹுசன்பானுவிருக்க ஹாத்திம்சொல்லுகிறார் ஓ, ஹுசன்பானுவே (ஆறாவது சவாலின்) விபரத்தை எனக்குத் தெரிவித்தால் நான் அறிந்துவருவே னென்றுசொன்ன மொழியை ஹுசன்பானுகேட்டுச்சொல்லுகின்றாள் என்னிடமாக ஒரு முத்திருக்கின்றது அதைப்போல் வேறே பிரயத்தனம் பண்ணிக்கொண்டுவரவேண்டும் அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் அந்த முத்தை யெனக்குக் காண்பித்தா லதைப்பார்த்து அதைப்போலொத்தமுத்து கொண்டுவருவே னென்றுசொல்ல அப்போது தன்னிடத்திலிருந்த முத்தை கொண்டுவரச் சொல்லிக் காண்பித்தாள் அந்த முத்தைப்பார்த்தால் பெரிய கோழிமுட்டைப் பிரமாணமாயிருக்க ஹாத்திம் சொல்லுகின்றார் இந்தமுத்தை பார்த்தேனானல் இதை என்னிடம்கொடுத்தா லதைப்போலடையாளம் பார்த்துக்கொண்டுவருவே னென்றுசொல்ல அப்போது ஹுசன்பானுவென்பவள் அந்த முத்தைப்போல் வெள்ளியால் செய்துக்கொடுத்தாள் அதைவாங்கிக்கொண்டு கார்வான் ஸருவில்வந்து முனீர்ஷாமிக்கு அந்த வெள்ளிமுத்தைக் காண்பித்து சொல்லுகின்றார் ஹுசன்பானு வென்பவள் இவ்வளவு பிரமாணமுள்ள முத்தைகேட்கின்றாள் நான் அதை என்னுடைய ஆயிசிலும் பார்த்ததும் கேட்டதுமில்லை ஆண்டவன் அறிவானெந்த சமுத்திரத்தில் எந்தயிடத்தி லிருக்கின்றதோ வென்றுசொல்ல முனீர்ஷாமி சொல்லுகின்றான்.

ஓ, என்னுடைய தலைவனே இந்தமுத்தானது எவ்விடத்தில் பிறக்கின்றதோ அந்த இடத்தைமுன்னாலறிந்துக்கொண்டு போனால் நலமாகயிருக்குமென்றுசொல்ல அப்போது ஹாத்திம்சொல்லுகின்றார் அப்படிகேட்கவேண்டிய நிமித்தியமில்லையெனக்குஎன்னுடைய ஆண்டவன் அவ்விட மென்னைக்கொண்டுபோய்சேர்ப்பான் எனக்கு எத்தனை வருத்தமும்கஷ்டமும்நேரிட்டுது அதுகளையெல்லாம் ஆண்டவன்விலக்கி காப்பாற்றவில்லையா அதுபோலஇப்பவும்காப்பாற்



றுவானென்றுநானுறுதிப்பட்டிருக்கின்றேன் எவ்விதத்திலும்நானந்த சமுத்திரத்தினிடமாகப்போவேன் ஆண்டவனுதவியாலதைப்போலொத்தமுத்துகொண்டுவருவேன் (தவக்கல் இலாஹி) யென்றுஆண்டவனுடையஎண்ணத்தினால் அவனல்லாமல் வேறேயொருவனாக நம்பவில்லையென்றுசொல்ல முனீர்ஷாமிஇம்மொழிகளைக்கேட்டுமிகுந்த சந்தோஷமடைந்துஹாத்திமுடையஉறுதியும்தைரியத்தின்பேரிலும் வல்லமையும் மெச்சிக்கொண்டு சொல்லுகின்றார் என்துணைவனே நீர் மிகுந்த துன்பமெல்லா மெடுத்துவந்திருப்பதால் இவ்விடத்தில் சிலநாளிருந்து உடம்பை சவுக்கியப்படுத்திக்கொண்டு புறப்பட்டால்நலமாகயிருக்குமென்று சொல்ல அப்போது ஹாத்திம் சொல்லுகின்றார் ஓ, என் துணைவனே எவ்விதத்திலும் அந்தவேலை நான் செய்யவேணுமே யல்லாமல் வேறில்லை ஆகையால் இவ்விடத்தில் சவுக்கியத்தைப்பார்த்தால் எவ்விதமாகக்கூடுதல நரும்தாமிஷப்படுத்தினால் என்னபலனென்று ஹாத்திமானவர் முனீர்ஷாமிக்குவேண்டிய தைரியஞ்சொல்லிபின்பு உத்தரவுபெற்றுக்கொண்டு அந்தமுத்தைவிசாரித்துக்கொண்டு போகின்றார்.

# ஆறுவது சவால்.

## ஹாத்திமானவர் பிரயாணப்பட்டு கோழிமுட்டைப்பிரமாணமுள்ள முத்தைகொண்டுவரும்படியான வரலாற்றின்பாடு.

ஹாத்திமானவர் ஷாஹெஆபாதென்றபட்டணத்தைவிட்டு புறப்
பட்டு(நி-கூ)காதவழிதூரம்போய் ஒருகருங்கல்லின்மேல் உட்கார்ந்து
மனதில் விசனப்பட்டுக்கொண்டு எண்ணுகின்றார் எவ்விதமானால்
ஆண்டவனே இவ்விதமான முத்து எந்த சமுத்திரத்திலிருந்து என
க்கு அகப்படும் ஆனல் உன்னுடைய கிருபையினுதவியால் இந்தமுத்
தானது அகப்படுமென் றெண்ணிக்கொண்டிருக்கின்ற வேளையில்
பொழுது அஸ்தமித்துப்போய்விட்டது அப்படியிருக்கையிலொருஜோ
டிபக்குஷாரமாகஆண்பெண் மிகுந்தஅழகுரூபமுள்ளதாகயிருந்த
து அதுவானது (கஹர்மான்) சமுத்திரத்தின்கரையோரத்திலிருக்கின்
றபறவையாகயிருக்கும்அப்பேர்ப்பட்டதுகள் ஆண்டவனுடைய கிரு
பையால் அவ்விடம் ஒரு மரத்தில் வந்திருக்கின்றதை ஹாத்தி
மானவர்பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கின்றபோது அந்தப் பெண்பற
வையானதுஆணைப்பார்த்துசொல்லுகின்றதுஎவ்விதமானல் இவ்விட
த்தின் தண்ணீருங்காற்றும்நமக்கு சரியாகயில்லைஆனல்இவ்விடத்தில்
நாம்தின்னப்பட்டதும்குடிக்கின்ற வஸ்துகளும்விதவிதமானதுகளிரு
க்கின்றதுமெத்தநலமாகவும்இப்படிக்கிருப்பதால்உடம்புசவுக்கியம்என
க்கில்லை ஆகையால் நாமிவ்விடம்விட்டுப் போகல்லவென்று சொ
ல்ல அப்போது ஆண்பறவைசொல்லுகின்றது ஓ, பெண்ணே நீ யிப்
போதுசொன்னது தெரியவந்தது ஆனல் நான் எண்ணிக்கொண்டி
ருந்தேன் இன்னம் சிலநாளித்தகாட்டில் வாசம்பண்ணிக்கொண்டி
ருக்கலாமென்று நீ இப்படிச்சொல்வதால் நல்லது பொழுதுவிடிந்த
வுடனே நம்முடைய சீமைக்கு போகலாம்நீ நிச்சயமாகயென்னுடனே
ஒரு நாழிகைவரையிலும் சும்மாயிருமென்று சொல்லிபின்பு அந்தபெ
ண்பறவையானது சொல்லுகின்றது ஓ, யென்னுடைய பிரியமுள்ள
புருஷனே இவ்விடம் கீழேயுட்கார்ந்திருக்கிற மனிதன்யாராகயிருக்கு
ம் இந்த அகோரமானகாட்டில்தலையைக்குனிந்துக்கொண்டு மிகுந்த
விசனத்தோடிருக்கின்றானென்று கேழ்க்கஅப்போது அந்தஆண்ப
றவை சொல்லுகின்றது ஓ, பெண்ணேநீ யறியமாட்டாயாஇவர் எம
னுடையபாதுஷா (தை) [illegible]யவருடையகுமாரன்ஹாத்திமாகயிரு
க்கும்ஆனல்அவர்மிகுந்த உபகாரி இப்போதுவிசனத்தையடைந்துக்
கொண்டிருக்கின்றார் அது எவ்விதமானல் கோழிமுட்டைப்பிரமா
ணமுள்ளஒருமுத்தைத்தேடிக்கொண்டுவரும்படி அதுதனக்காகவல்
ல ஆண்டவன் பேரால் அன்னியர்க்காகவேண்டி இப்படிக்கட்டிக்கொ
ண்டுதிரிகின்றார் ஆனல் முனீர்ஷாமி யென்ற ராஜகுமாரன்ஹசன்
பானுவென்பவள் பேரில் இச்சைப்பட்டு ஆசைக்காரியிருக்கின்றான்
அவள் (எ) சவால்சொல்லுகின்றாள் அவளுடையசவால்களைக்கண்டு
சொல்ல அவனால் கூடாமையாலும் அல்லது அவளைவிட்டுநீங்கிப்போ
காமலும் அவளுடைய ஆசையினால் பயித்தியங்கொண்டு திரிந்தான்
அப்போதவள் அவனை தன்னுடைய பட்டணத்திலிருந்து துரத்
திவிட்டாள் அவன் காடு மலைகள்தோறுந்திரிந்துக்கொண்டு எமன்
தேசத்து காட்டில் வந்து அழுதுக்கொண்டு நிற்கின்றவேளையிலிந்த
ஹாத்திமென்பவர் வேட்டைமார்க்கமாக அக்காட்டில்வரும்போதில
வனை ஹாத்திமானவர்கண்டு இருவருஞ்சந்தித்தார்கள்முனீர்ஷாமியெ
ன்பவன் தன்னுடையசங்கதிகளை தெரியப்படுத்தி தான்போனசங்கதி
களைக்கேட்டு மிகுந்த வருத்தமடைந்து ஹாத்திமென்பவர் முனீர்ஷா
மிக்குச் சொல்லுகின்றார்நீ படுகின்றபாட்டைப்பார்த்தா லெனக்குமி
குந்த வருத்தமாகயிருப்பதால் உன்னுடைய கருத்தின்படிக்கு ஆண்
டவன்கிருபையால் நான்நிறைவேற்றுவேனென்றும் அவனுக்காகவே
ண்டி இவரிப்பேர்ப்பட்ட அனேகவருத்தங்களும் துன்பங்களுமெடுத்
துக்கொண்டு(எ)சவாலில் (ஐந்து)சவால்முடித்துவிட்டார் இப்போது
(ஆறுவது) சவாலுடையபயணமாகயிருக்கும்ஒருமுத்துக்காகவேண்

டி அதுஎப்பேர்ப்பட்டமுத்தாகயிருக்குமென்றும் இந்தபேதையான
வன்இந்தமரத்தின்கீழேஇதற்காக எண்ணாத எண்ணங்களையெல்லா
மெண்ணிக்கொண் டிருக்கின்றானென்கேபோவேனென்றும்இவ்
விதமானமுத்தெங்கேயிருந்துகொண்டுவருவேன் எனக்குத்தெரியாத
பாதையில் எப்படி நடப்பேனென்றும்இவ்விதமானமுத்துஎவ்விதமா
கத்தேடுவேன் என்கையிலகப்படுமோவென்று ஹாத்திமானவர்மிகுந்த
விசனத்தையடைந்துகொண்டிருக்கின்றார் ஆனால்நீ என்னை அவருக்
கு பாதையைச் சொல்லென்றுசொன்னால் நான் அவருக்கு ஒருபாதை
யைக்காண்பிக்கிறேனென்றுசொல்ல அப்போதுபெண்பறவைசொல்
லுகின்றது இப்பேர்ப்பட்டவஸ்தில் நின்றும் மேலானவஸ்துஎதுவா
கயிருக்கும்பறவைகளுடையசகாயம் மனிதர்களுக்குச்செய்தா லதின்
பலன்மிகுதியானநன்மையென்றுசொல்லபெண்பறவையினுடைய எ
ண்ணத்தை யறிந்துக்கொண்டுஆண்பறவைசொல்லுகின்றது ஒ பெண்
ணேஇப்பேர்ப்பட்டமுத்தானதின்பிறப்புஇவ்விதமாகயிருக்கும்முந்தி
னகாலத்திலெத்தனையோபக்குஷாரங்கள் (நூஹ்)வருஷத்துக்குப்பின்பு
(குஹார்மான்) சமுத்திரத்தின் கரையோரத்தில்முட்டையிட்டுக்கொ
ண்டிருந்தது அதிலொருமுட்டை(ஷம்ஷ் பாத்துஷா)என்பவர்கையில
கப்பட்டிருந்தது அவர் முன்னாலனேகதிரவியங்களும் இரத்தினங்க
ளுமவரிடமாகயிருந்தது அவர் ஒரு பெரியபட்டணம் ஆபாதாக்கி யி
ருந்தார்இப்போது அந்த பட்டணம்பாழடைந்துகாடாகிவிட்டது அ
ப்படிக்கிருக்க அந்த (ஷம்ஷ் பாத்துஷா) என்பவருடைய கஜானாவெ
ன்றதிரவியங்களும் இரத்தினங்களும் ஹசஷ்பாரோவென்பவனுக்கு
அகப்பட் டிருக்கின்றது கோழிமுட்டைப்பிரமாணமுள்ளமுத்து அ
திலொன்றிருந்தது அதையு மவனெடுத்துக்கொண்டான் முன்னால்(ஜ
ம்ஜாகஹார்மானீ) என்பவர் இறந்துபோனபின்பு அவனுடையதேசத்தி
ன்னொருவன் கைவசப்படுத்திக் கொண்டான் அவனுடைய பெண்சா
தி கெர்ப்பஸ்திரீயாயிருந்தா ளந்தமுத்தையெடுத்துக்கொண்டு தம்மு
டைய அரண்மனையை விட்டு புறப்பட்டு ஒருகாட்டின் வழியாக
ப்போய்கொஞ்சநாள் திரிந்துகொண்டு கஹார்மானென்ற சமுத்திரக்
கரையோரமாகப்போகிறபோது (மஸ்ஊதுஸவுதாகர்) என்றவர்த்த
கன் கப்பலிலேறிக்கொண்டு அவ்விடமாகப் போகும்போது இந்தப்
பெண்ணானவள் அந்த கப்பலைப் பார்த்தவுடனே பெருஞ்சத்தமாகப்
போட்டு கூவிக்கொண்டு நின்று சொல்லுகிறாள் ஒ, கப்பலிலுள்ள
வர்களே ஆண்டவனுக்காக இந்த ஏழையாகிய மிஸ்கீனை உங்கள் க



ப்பலிலேற்றிக்கொண்டு போகவேண்டுமென்றுசத்தம்போட அப்போ
தந்த சவுதாகர்கேட்டு மிகுந்த இரக்கப்பட்டு தன்னுடையகப்பலை நி
றுத்தி படவை கரையோரத்தில் கொண்டுவந்து அந்தப்பெண்ணை
கப்பலி லேற்றிக்கொண்டு அவளுடைய சங்கதிகளை விசாரிக்க அப்
போதவள் தன்னுடைய சங்கதிகளை ஆதிமுத லந்தவரையில் சொ
ல்ல மஸ்ஊதுஎன்றசவுதாகர் தன்னுடையபெண்ணைப்போல் பாவித்
துக்கொண்டுதன துபட்டணம்கொண்டுவந்து தன்வீட்டில் வைத்து
க்கொண்டிருக்கும்போது அந்தப்பெண்ணானவள் ஒருஆண்பிள்ளையை
ப்பெற்றாள் அதற்கு (பர்ஜக்கு)என்றபேர்வைத்தார் அப்பிள்ளையான
துவளர்ந்து பெரிதாகிவாலிபமானான் அப்போதந்த (மஸ்ஊது என்ற
சவுதாகர்இறந்துபோனார்.

பின்பு அந்தப்பிள்ளை அவனுடைய சகல ஆஸ்திக்குமஜமா
னாகியிருந்து அவனுடையதிரவியம் அளவற்றதாகயிருந்தது அனேக
சேவகாளும் சிப்பாய்களும் குதிரை சவாரிகளும் காலாள்களும் அ
னேகபடைகள் சேகருசெய்துகொண்டும்அனேகசீமைகளை தன்வச
வசப்படுத்திக் கொண்டிருந்தான் இப்படியிருக்க அந்ததேசத்துக்குபா
த்துஷாவாகிவிட்டான் சிலகாலமிருந்தது அவனு மிறந்துபோனான் பி
ன்பு (ஹஜரத்சுலைமான் அலைஹிஸ்ஸலாமானவர்) பாத்துஷாவானார்
அப்போதவர் (கோஹுகாபு) மலையும்அதைச்சேர்ந்ததீவுகளும்கோட்
டைகள் நகரங்களும் (ஜீல்ஜம்) (குஹார்மான்) (ஜஸீன்) (ஆகவின்) சமு
த்திரங்களும் கோஹு காபு என்ற மலையைச்சார்ந்த இடங்கள்
தோறுமதேவுகளும் பரிகளும் சூனிய வித்தைக்காரர்களும் இப்பே
ர்ப்பட்டதுன்மார்க்கமான கெட்ட நடப்புள்ள ஜாதிகளையெல்லாம்
அவ்விட மிருக்கும்படியாக நியமித்து அவர்களுக்கு உத்தரவுகொடுத்
ததாக்கீதுசெய்ததாவதுநீங்கள்மனிதர்களிருக்கின்றபட்டணங்களில்
போகக் கூடாதென்றும் இப்போது அந்ததேசங்களிலேதேவுகளும்
பரிகளுமாகயிருக்கிறார்கள் ஆகையால் அவ்விடத்துக்கு மனிதர்கள்
போகவரக்கூடாது (ஹஸ்நாபரி) என்பவளுடைய கையிலந்த முத்
து அகப்பட்டது (மாஹெயார் சுலைமானீ) என்பவர் பரியினுடைய
வமிசத்திற்பிறந்தவராகயிருக்கும்அவரந்த(ஹஸ்நாம்பரியி)னிடமாகயிருந்
தமுத்தானதை அவர்தன்கைவசப்படுத்திக்கொண்டார் அவரிருக்கின்ற
இடமானது(பர்ஜக்கு) என்றதீவு அவருக்கு ஒருபெண்ணிருந்தது அ
வளுடையஅழகையின் னவிதமென்றுசொல்லக்கூடாது அவளுடைய

அழகுவடிவுக்கு முன்னால் பரிஜாதிகளெல்லாம் வெழ்க்கமடைந்துக்
கொண் டிருந்தார்கள் அப்பேர்ப்பட்ட தாகவிருக்கும் அந்தப்பெண்
ணைக் கலியாணஞ்செய்ய ஒரு நிபந்தனை செய்துகொண் டிருந்தார்
அதெவ்விதமெனில் அந்தஆணிமுத்தினுடையபிறவியைக்குறித்து எ
வனாவதுஎனக்குத்தெரியப்படுத்துவானாகில் இந்தப்பெண்ணையவனுக்கு
விவாகஞ்செய்து கொடுப்பேனென் றிருந்தார் அம்மொழியையறிந்து
அனேகம்பரிஜாதிகளும்அனேகராஜகுமாரர்களும் அவள் மேலிச்சித்
து அம்முத்தினுடையபிறப்பின்சங்கதியைத்தெரிவித்து அப்பெண்ணை
க்கொள்ளலாமென்றுபோய் முத்தின்பிறவி தெரியாமல் காடுமலைகள்
தோறும் திரிந்துதடுமாறி வந்துவிட்டார்கள் (மாஹேயார் சுலைமானி)
என்பவர்மிகுந்தபடிப்புள்ள(ஆலிம-வ-பாஜிலாக)இருந்தார்இதுகவிர
அந்நாளிலுள்ள கிதாபுகளிவரிடமாகயிருந்தது அதைப்பார்வையிட்டு
அந்த முத்தினுடைய பிறவியின்சங்கதியைநன்றாக அறிந்திருந்தார்
அதெவ்விதமானால் அந்தபட்சிகளுக்கு ஹஜரத்துசுலைமான் அலை
கிஸ்ஸலாமுடைய நாளிலிருந்து உத்தரவில்லைஎங்கிலும்மூட்டையிட
அதினாலிப்பேர்ப்பட்ட முத்துகிடைக்கிறதுவெகு அரிதாகயிருக்
கும் இம்மொழிகளைப் பேசவுங்கூடாது ஆனாலிந்த வாலிபனுடைய
தைரியத்துக்கு ஆண்டவனுக்காகஇவன் அன்னியர்க்கு உபகாரஞ்செ
ய்கின்றவனானபடியால் நான்பார்த்து இம்மொழிகளை பிரசங்கஞ்செ
ய்தேன் ஆனாலிவன் தன்னுடையமனதால்நன்மையான வழியிலிருக்கி
ன்றவல்லமைசாலியானபடியால்ஆண்டவனுக்காகஇடுப்புகட்டிக்கொ
ண்டு வருத்தமென்று திரிகின்றார் ஆனாலிவர்கொண்ட யெண்ணமெய்
யாக நிறைவேறுமென்றுஆண்பட்சிசொல்ல அப்போது பெண்சொல்
லும் நல்லதுநீங்கள்சொன்னதெல்லாம் தெரியவந்தது ஆனால் இந்தவ
ழியாகியமிஸ்கீனானவன் கஹர்மான்சமுத்திரத்தினிடமாகயெவ்வி
தமாய் போகக்கூடும் அந்த தீவுகளில்தேவுகளிருக்கின்றயிடமானது
இதல்லாமல்இன்னமெத்தனையோ ஆபத்துகள் அந்தபாதையிலிருக்
கிறதுஇவரெவ்விதமாகப்போவாரென்றுபெண்பட்சிசொல்லஅப்போ
து ஆண்பட்சிசொல்லுகின்றது ஓ, பெண்ணேநீகேட்கவில்லையா தர்
மம் தலைகாக்குமென்பதை நீ யறியவில்லை இவர் செய்கின்ற தர்மத்
தாலும் அன்னியர்க்காகதுன்பமெடுத்துக்கொண்டிருக்கின்றது ஆண்
டவனுக்குத்தெரியாதா இவரைப்போலொத்தவர்லோகத்திலார்பிறக்
கப்போகிறார்கள் ஆகையாலிவருடையநன்மையானதுஎவ்விதத்திலு
மிவரைக்காப்பாற்றி அவர் கொண்டயெண்ணத்தை ஆண்டவன்நிறை



வேற்றுவான் இவர்படுகின்ற பாடுகளெல்லாம் ஆண்டவனுக்குத்தெ
ரியும் அவன் தாத்திலில்லையெல்லாவருத்தத்தையும்அவன்பார்த்து
க்கொண் டிருக்கின்றான் நாமிப்போது அவருக்கு ஒரு உபகாரஞ்
செய்யவேண்டும் எவ்விதமானால் நம்முடைய இறக்கையின் மயிர்
களை இவரிடமாகச்சிலது கொடுத்தாலதை வைப்பார் அதுஎவ்வி
தமானால் கோஹே காபுடைய எல்லையில்போனால் அவ்விடத்தி
லொரு தீவிருக்கின்றது அதைக்கடந்துபோக ஒருவராலுமுடியா
து அப்போதந்த தீவுக்குப்போகும்போது நம்முடைய சிவப்புயி
றக்கையின் மயிரைச்சுட்டு தண்ணீரில்கரைத்துசிரேகமெங்குந்தே
ய்த்துக்கொண்டு யாதொரு அச்சமில்லாமறபோகலாம் அதினுடை
யவாசத்தால் சிங்கம் புலி யானை நரி முதலாகிய எல்லா மிருகங்க
ளும்ஓடிப்போய்விடும் அப்போதிவருடையமுகமானது தேவுகளின்
முகம்போல் ஆகிவிடும்அந்தவனாந்திரமான தீவைக்கடந்து அப்புறம்
போனால் பற்ஜக்கு யென்றதீவுவந்துநேரிடும் அப்போதுநம்முடைய
வெண்மையான இறக்கையின்மயிரைச்சுட்டு தண்ணீரில்கரைத்துமே
லெங்கும்பூசிக்கொண்டானுடனேதேவுருபமாறிமுன்னிருந்தது போ
ல் ஆண்டவன்கிருபையாலாகிவிடும் ஆனாலந்தமனிதர்கள் கண்டவுட
னேஇவரை (மாஹேயார்சுலைமானி)பாத்துஷாவின்சமுகத்திற்கொண்
டுபோய் விடுவார்களப்போதவரிடமாகதங்களுடையசங்கதியைச்சொ
ன்னால் அம்மொழியைக்கேட்டுதங்களெண்ணம்போல்நிறைவேற்றுவா
ர் யாராவது இந்த முத்தின் பிறப்பின்சங்கதிதெரிவித்தால் அந்தமுத்
தையும்தன்பெண்ணையும் கொடுப்பேனென்றுஇதுவெகு நலமாகயிரு
க்கும் இப்போது நான்சொன்னவிசளங்களையெல்லாம்மறந்துபோகா
மல் மனதில்கெட்டிப் பத்திரமாக நினைவிருக்கவேண்டும் (மாஹயார்
சுலைமானி) தன்னுடைய வாக்கில்நின்று எப்போதும் தவிரமாட்டார்
எவ்விதத்திலும் தன்னுடையபெண்ணைக்கலியாணஞ் செய்துகொடு
ப்பார் அப்போதுபெண்பட்சிசொல்லுகின்றதுநம்முடையஇறகின்ம
யிர்எவ்விதமாகக்கொடுக்கப்படுமென்றுசொல்ல உடனேதனது இற
கை உதறிவிட அதில்நின்று மயிர்களுதிர்ந்துவிழ ஹாத்திமானவர்மி
குந்த சந்தோஷப்பட்டு இறகுகளையெல்லாம்பொருக்கிக்கொண்டார்

பின்பு பெண்பட்சி கேழ்க்கின்றது அவர் இந்த வேலைக்காக வந்
ததை நீ எவ்விதமாக அறிவாய் இப்பேர்ப்பட்ட கதைகாரணமானவி
ஷேஷங்களை நீர் எவ்விதமாக நினைவு [வைத்திருக்கின்றீர்] அம்மொழி

யைக்கேட்டு ஆண்பட்சி சொல்லுகின்றது ஓ, பெண்ணே நம்முடைய ஜாதியில் ஆண்பட்சிகளுக்கெல்லாம், லோகத்திலுண்டான சரித்திரத்தின்செய்தியை ஆதிமுதலந்தவரையில் அறிவார்கள் இன்னும் அவர்கள்பேச்சு வார்த்தைகள்பேசுவார்களல்லாமல் வேறில்லை இவ்விதமாக பேசிக்கொண் டிருக்கையில் பொழுது விடிந்துவிட்டது அப்போதந்த மரத்திலிருந்து ஜோடு பட்சிகளை பறந்துபோய் விட்டது ஹாத்திமானவர் எழுந்து நின்றுகொண்டு கொஞ்சநேரம்பொறுத்து அவ்விடம்விட்டு பயணப்பட்டு (உ௲) நாள் சென்றபின் ஒருவழியில் ஒரு மரத்தின்கீழே படுத்துக்கொண் டிருக்கையில் எத்தனையோ மிருகஜாதிகள் பிரியாது செய்கின்றார்கள் எவ்விதமாறல் (ஹை - ஹை) ஆண்டவனுடைய படைப்பிலுள்ளவர்களில்யாராவதுஇல்லையா எங்களுடையபிரியாதைக்கேழ்க்க என்றசத்தத்தை ஹாத்திமானவர் கேட்டு தன்னுடையமனதி லெண்ணுகின்றார் ஓ, ஹாத்திமே நீயும்ஆண்டவனுடையபடைப்பாகயிருக்கின்றாயே ஆகையால் உனக்கு உண்மையாகயிருக்கும்நேராகநடந்து அவர்களுடையசெய்தியை யறிந்து அவர்களுக்கு உதவி யொத்தாசை செய்யவும் இவ்விதமாக யெண்ணி அந்தசப்தம்வருகின்றதலத்தைநோக்கிப்போய் அருகில் நின்று பார்க்கின்றபோதில் ஒரு குள்ளநரியானது நிலத்தில் கிடந்து புரண்டு புரண்டு கால்களையுதறிக் கொண்டு பெருஞ்சத்தமாகக் கூப்பிட்டு அழுகின்றது அதை ஹாத்திமானவர்பார்த்து மிகுதமாக மனமிரங்கி கேழ்க்கின்றார் ஓ, நரியே நீ இவ்விதமான கோலமாகவேன் அழுகின்றாய் ஆண்டவனுடையபடைப்பில்யாராவது கல்நெஞ்சுடையவர்கள் உன்னை இவ்விதமாக துக்கிக்கச்செய்தவர்கள் யாரென்றுகேழ்க்க அப்போதந்த குள்ளநரியானது ஹாத்திமைப் பார்த்து சொல்லுகின்றது ஓ, வாலிபனே உனக்குஆண்டவனுடைய உதவியும் கிருபையுமுண்டாகும் உன்னுடைய தைரியத்துக்கும் வல்லமையாகிய வீரத்துவத்துக்கும் என்னுடைய வருத்தமும் துன்பப்படும்படியான இந்தவேளையில் என்னிடமாகவந்தாய் என்னுடையவருத்தத்தையும்பார்த்து என்னுடைய சங்கதிகளையும் நீ கேட்டாய் ஆகையாலென்சங்கதி யென்னவென்றால் ஒரு வேட்டைக்காரன் என்னுடையபுருஷனையும் என் பிள்ளைகளையும் பிடித்துக்கொண்டு போயிருக்கிறான் ஆகையால் நான் அவர்களைவிட்டுப்பிரிந்தபடியாலிவ்விதமாக விசனத்துடனே அழுகிறேன் ஆனால் எந்தயிடத்தையும் பார்த்துபிரியாது செய்கின்றபோதிலும் என்னுடைய பிரியாதையறிந்து வ



ளாது ஆபத்தையும் அழுகையையும் ஒருவருங்கேட்கவில்லை நீர் இப்போது வந்திருக்கிறீர் உங்களை நான் பார்த்தேன் ஆனால் நீர் மனிதராகயிருக்கிறீர் நான் மிருகஜாதியாக யிருக்கிறேன் நீர் உம்முடைய ஜாதிக்கு உதவிசெய்வீர் அப்போது ஹாத்திம்சொல்லுகிறார் ஓ, நரியே யென்னசொல்லுகிறாய் எங்கள் மனிதஜாதிகளில் எல்லபேருமுன்னைப்போலிருக்காது சிலபேர்இரக்கமுள்ளமெழுகுமனமானவர்களும்சிலபேர்களுங்கல்லைப்போல்கெட்டிமனதுள்ளவர்களுமிருக்கிறார்கள் சிலர்விவேகமில்லாதமூடாத்துமாக்களுமிருக்கிறார்கள் அப்படி நீயென்னுடைய ஆனால் உம்மனிதன்தான் இப்பேர்ப்பட்ட கல்நெஞ்சுடையவனல்ல நானுமிந்த மிரங்கப்பட்டவன் ஆகையாலுன்னுடையபுருஷனையும் பிள்ளைகளையும் யார் கொண்டுபோயிருக்கிறான் மெய்யாகச்சொல் லென்றுகேழ்க்க அப்போதந்த குள்ளநரியானது சொல்லுகின்றது இவ்விடத்திலிருந்து(௬-௭)கோஸ்தூரத்தில் ஒரு ஊரிருக்கின்றது அதில் ஒரு வேட்டைக்காரனிருக்கின்றான் அந்தஜாதி கெட்ட முட்டாளுக்கு இதுவே தொழிலாகயிருக்கிறது அவன் இந்த வழையாகிய யெங்களை எவ்விதத்திலும் மாறுபாடுசெய்து பிடித்துக்கொண்டுபோகின்றான் அதில்அவனுக் கென்ன பலன் கிடைக்குமோ தெரியாது ஆனாலவன் ஆண்டவனுடைய கோபப்பார்வையில்நின்று அச்சமடையவில்லை அந்த பொல்லாதபாவி யிரக்கமில்லாதவனாக யிருக்கின்றான்.

அப்போதவர்சொல்லுகிறார் குருடன்மரத்தில்நின்றுகனிபறிக்கின்ற பாவனைபோல விருந்துகுருடன் இந்த பாவத்துக்கு அஞ்சாமலின்விதமானகோலம் செய்தான் அவனுக்கு அதுவேதொழிலாக யிருக்கும் ஆனால் பெரிதல்ல அவனிருக்கின்ற இடத்தை எனக்கு நீகாண்பிப்பாயாகில் நானவனிடம்போய் உன்னுடைய புருஷனையும் பிள்ளைகளையும் அவனிடத்திலிருந்துவிடுதலைசெய்துஉனக்குகொடுப்பேன் அப்படிக்கு அவன்கொடாவிட்டால்அவர்களுக்குபதிலாக என்றலையை யாவது கேழ்ப்பானாகில் நான் தடங்கலில்லாமல் கொடுத்துவிடுவேன் ஆனதினித்தவேலை ஆண்டவனுடைய பாதையில்நடக்கின்றவர்த்தமானமாகயிருக்கும் அப்போது நரியானது சொல்லுகின்றது ஓ, வாலிபனே உன்னோடு வரப்பேன் ஆனால் ஒருவேளையென்னையவன்கண்டுபிடித்துக் கொள்வானேயாகில் அப்போதென்னுடைய கோலமுன்னால் அந்தகுருடனுடையகோலம்போலாகிவிட்டால்நானென்னசெய

வேனென் றுகிசொல்ல அப்போதுதுரைத்திமந்திரச்சுகிசொல்லென் றுகேட்க நீ சொல்லுகின்றது எவ்விதமானல் ஒரு குரங்கானது வதோ ஒருகாட்டில்போய் ஒருபள்ளத்தில் குட்டி போட்டுக்கொண் டிருந்தது ஒருநாள் அந்த காட்டிலொருவேடன்வந்து அந்த பள்ளத்தி ல் ஆண்குரங்கும் பெண்குரங்கும்பிள்ளைகளுமாகவிருக்கின்றதைபார் த்து அந்த ஆண்குரங்கையும் பிள்ளைகளையும்வதோ ஒருகுருகுபோ ட்டுபிடித்துக்கொண்டுதரு ஆவின்வழியவானிடமாகவிற்றுப்போட்டா ன் பெண்குரங்கானது இருக்கவல்லமையும் புத்திசாலியுமாகவிருந்தது ஆனல் கெட்டகாலம் வரும்போதில் புத்தி ... மாயமாய் போய்விடும் எவ்விதமானல் அந்த பெண்குரங்கானது தன்புருஷனை யும் பிள்ளைகளையும்விட்டு பிரிந்தபடியால் ... ஆம் கல்லுகளிலும் மரங்களிலும் மோதிக்கொண்டு ... [illegible]

[illegible]



கட்டிவிருக்கின்றதுரங்கினிடமாக வந்து நின்றுகொண்டு வேடனைப் பார்த்து சொல்லுகின்றாள் வேடனே இந்தகுரங்கின்புருஷனையும்பிள் ளைகளையும்கட்டிக்கொண்டு என்னசெய்தாயென்று கேழ்க்க அப்போதந்தவே டன்சொல்லுகின்றான் ஆண்டவனே அதுவென்னுதான் மொழியாக விருக்கின்றது ... இருக்கின்றேன் ஆனல் ... பெண்குரங்கின் ... பார்த்து ... அப்போது அந்த ... சொல்லுகின்றான் ... காலைப் ... சொல்லுகின்றேன் எவ்விதமானல் ... [illegible]

[illegible]

விடுவித்து உன்னோடு அனுப்புகிறேனென்றமொழியை நரிகேட்டு மிகுந்த சந்தோஷத்துடனே ஹாத்திமுடைய தைரியத்தையும் நன்மையுள்ளமொழிகளையுங்கேட்டு ஆபரீன்செய்துமுன்னால் நடக்கின்றது ஹாத்திமானவர் அதின்பின்னால் நடந்துபோகின்றபோது இராவாகிவிட்டது அந்த ஊரினருகாமையில்போய்ச்சேர்ந்து ஹாத்திமானவர் நரிக்குச்சொல்லுகிறார் நீ இவ்விடத்திலெங்கேயாவதுமறைவாக யிருநானூருக்குள்ளேபோய்அந்தவேடனைதேடிப்பிடித்துசங்கதியையறிந்து வருகிறேனென்றுசொல்லிப்போக அப்போது அந்தநரியானது ஒரு காட்டில்போய் பதுங்கிக்கொண்டிருந்தது ஹாத்திமானவர் அவ்வூரிலொரு இடத்திற்போய் இரவெல்லாம் ஆண்டவனுடைய வணக்கத்திலிருந்து விடிந்தபின்பு அவ்விடம்விட்டு அந்த வேடனுடைய வீட்டை தேடிப்பிடித்து அவனுடையவீட்டின் வாசற்படியில்நின்றுக் கொண்டு கையைத்தட்டினாப்போது அந்தவேடனறிந்துவெளியில் வந்து கேழ்க்கின்றான்.

ஓ, வாலிபனே உனக்குமெனக்கும் என்னவேலையிருக்கிறது நீ இவ்வளவுகாலையில்வந் திருக்கின்றாய் ஆனாலுன்னைப்பார்த்தால் நம தூரிலுள்ளவனைப்போல் தோணவில்லை யென்றுசொல்லஓ, யென்னுடைய சினேகிதமான வேடனே நீ சொன்னதுபோல் நானிந்தவூரிலுள்ளவனல்ல எனக்கு ஒரு வியாதியிருக்கின்றது அதினால் நடக்கக்கூடாமையால்மிகுந்த வருத்தமடைகிறே னெப்படிக்கிருக்க என்னுடையநோய் தீருவதற்காக ஒரு வயித்தியன் சொன்னான்நரியினுடையபுது இரத்தமானதை உன்தேகத்தில் பூசவையானால் உன்னுடையநோய் தீருமென்றுசொல்ல அதற்காகவேண்டி உனது வீட்டை தேடிக்கொண்டு இவ்வளவுகாலையில்உன்னைத் தொந்தரவுகொடுத்தேனால் நீ நரிகளின்வேட்டை யாடிவைத்திருப்பா யென்றெண்ணி உன்னிடமாக வந்தேன் ஆனாலுன்னிடத்தில் நரிகள் அதின் குட்டிகள் (௮-௫) இருந்தபோதிலும் எனக்கு கொடுக்கவேண்டும் அதின் கிரையம் என்னிடத்தில் வாங்கிக்கொள்ளும் அப்போதந்த வேடன் சொல்லுகிறான் நான் வேட்டையாடி ஏழு நரிகள் கூட்டிபிடித்துக்கொண்டு வந்து வைத்திருக்கிறேன் அதி லுனக்கு எது பசந்தாகயிருக்கிறதோ அதை வாங்கிக்கொள்ளென்றும் தன்வீட்டிலிருந்த (எ) நரிகளை ஹாத்திமுக்கு முன்பாகக்கொண்டுவந்து நிறுத்தினான் அப்போதந்தவேடனுக்கு (எ) தினார்கொடுத்துவிட்டு அ



ந்த ஏழுநரிகளையும் பிடித்து காட்டில் கொண்டுவந்து அதினுடைய கால்களிலும்கழுத்துகளிலும்கட்டியகயிறுகளை யவிழ்த்துவிட்டுஹாத்திமானவர் நிற்கிறாப்போது அந்த நரியின்குட்டிகள் தன்னுடைய தாயாரைப் பார்த்தவுடனே அதைப்போய் சூழ்ந்துகொண்டு குதிக்கின்றது அப்போது அந்தப்பிள்ளைகளை யெல்லாமழைத்துக் கொண்டு ஆசையாகப் பிரியத்தோடு தன்னுடைய புருஷனிடமாக வந்துபார்த்தால் அதுமிகுந்மாகமெலிந்து பேஹுஷாக இறந்துபோகும் வேளையாயிருந்தது சத்தம்போட்டு நிலத்தில்விழுந்து புரண்டு மண்ணைவாரி தலையிலேபோட்டுக் கொண்டிருக்க ஹாத்திமானவர் பார்த்துசொல்லுகிறார்ஓ, பெண்ணரியே நீ புருஷன் பிள்ளைகளைக் கண்டவுடனே ஆண்டவனிடமாக ஷுக்கூர்செய்து சந்தோஷமடையாமல் இவ்விதமாக யேனழுகின்றா யென்றுகேட்க அப்போதந்தப் பெண்ணரிசொல்லுகிறது என்னையும் என்பிள்ளைகளையும் என்புருஷனையும் ஒன்றுகச்சேர்த்த இரட்சகனே நானிவ்வளவு விசனப்படுகிறது எதுக்கானுலென்னையும் என்னுடைய பிள்ளைகளையும் விட்டு என்புருஷனிறந்துபோவானுகையால் நான் விதவையாகிப் போவேன் அவருக்குப்பின்னிருந்து லோகத்திலெனக்கு என்ன பலனுண்டுஆகையாலவருக்கு முன் நானிறந்துபோனால் நலமென்று எண்ணுகிறேன்பெண்களுக்கு புருஷனானவர் ஒரு குடையைப்போ லிருக்குமென்றுசொல்ல அப்போது ஹாத்திமானவர் சொல்லுகிறார் அவனைப்பார்த்தா லிப்போது இறந்துபோறவனைப்போல் தோணவில்லையே அவனுக்கு இரையெடுக்க சக்தியில்லாவிட்டால் அச்சப் படவேண்டாம் அவனுக்கு என்னதேவை யென்றுகேழ்க்க அப்போதந்த பெண்ணரிசொல்லுகிறது ஓ, இரட்சகனே எங்கள் கூட்டங்களுக்கு வியாதிவருகிறதில்லை அப்படி வருமாகில் அவர்கள் பிழைக்கமாட்டார்களானுலிவர் என்னைவிட்டுப்பிரிந்து அந்தவேடனுடையகட்டுப்பாட்டில் சிக்கிக்கொண்டுவேளைக்குத்தகுந்த இரையில்லாமலிருந்து மிகுந்த விசனத்தினாலிப்போது நோயாளி யிருக்கின்றார் இவர் பிழைக்க மாட்டாரென்று நானிவ்விதமாக அழுகின்றேனென்றுசொல்லி பின்னுஞ் சொல்லுகின்றது இந்தவேளை அதற்குத்தகுந்த கிகிட்சை செய்தா லவர்பிழைத்துக்கொள்வா ரென்றமொழியை ஹாத்திமானவர்கேட்டுகல்லதுநீ சொன்னமொழி தெரியவந்தது அதற்கு தகுந்த மருந்து எவ்விடமிருக்கின்றது அந்த இடத்தைச் சொல்வையாகில் அதைப்போய் கொண்டுவருகிறேனென்றுசொல்ல அப்போதந்த நரியானது சொல்லுகின்றது

ஓ, இரட்சகனே இப்போது இதினுடைய நோய் தீர்ந்துபோக வேண்டுமாகில் உயிருள்ள மனிதனைக்கொன்று அவனுடைய இரத்தத்தை சுடச்சுட கொஞ்சம் அவருடைய வாயில் குடிப்பாட்டினா லப்போதவருடைய துர்ப்பலமும் நீங்கினவுடனே சவுக்கியப்படுவா ரென்றமொழியை ஹாத்திம்கேட்டுச்சொல்லுகின்றார் அப்படி மனிதரெனக்குள் என்னபகை செய்திருக்கின்றார்கள் அவர்களைக்கொல்லஎன்மனந்துணியாது ஹைவானுடைய நன்மைக்காக மனிதனைக்கொன்று அந்த பாவத்தை நான் சுமந்து கொள்வேனா இப்போது என்னுடைய திரேகத்தின் இரத்தமானது நான்கொடுக்க என்னாற்கூடும் ஆகையால் நீ எந்த இடத்தின் இரத்தம் வேண்டுமோ அதைநான் கொடுப்பேனென்றுசொல்ல அந்த ஹைவானான நரிசொல்லுகின்றது எந்த இடத்தின் இரத்தமானபோதிலும் பெரிதல்ல சுடச்சுட இருந்தால்போதுமென்றுசொல்ல ஹாத்திமானவர் தம்முடைய அம்பின் கூட்டிலிருந்து ஒரு அம்பை யெடுத்துக்கொண்டு ஓ, பெண்ணே இப்போது உன்னுடையபுருஷனை என்னிடமாகக் கொண்டுவாவென்றும் அவனுக்கு எவ்வளவுவேண்டுமோ அவ்வளவுகுடிக்கட்டுமென்றுசொல்ல அப்போதந்த ஆண் நரியை அழைத்துக்கொண்டுவந்துவிட நீஇந்த இரத்தத்தை எவ்விதமாகஅவன்வாயில் விடுவாயென்றுசொல்ல தங்களுடைய இஷ்டம்போல்செய்யலாம்நான் எவ்விதமாக விடுவேனென்றுசொல்ல அப்போதுஹாத்திமானவர் தன்னுடைய இடதுகைநரம்பைப்பார்த்துதன்னுடைய அம்பினால்குத்தி அதில் நின்றுவர இரத்தத்தை அந்த நரியினுடைய வாயில்வைத்து உன்மனங் கொண்டவரையில் குடியென்றுசொல்ல அப்போதந்த நரியானது தன்னுடைய வாயில்வைத்து தன்மனம்போல் வயிறு நிறையச்சாப்பிட்டவுடனே தன்னுடையநோய்தீர்ந்து பிலன்வந்து எப்போதும்போல் திரேகமாகிவிட்டது.

பின்பு ஹாத்திமானவர் தன்னுடைய கைக்குட்டியை கட்டிக்கொண்டு ஹாத்திம்சொல்லுகின்றார் ஓ, பெண்ணரியே இப்போது உன்மனம்போல் என்னை உண்மைகொண்டாயாவென்றுகேட்க அப்போதந்தநரியும் ஆண்நரியும் பிள்ளைகளும் ஹாத்திமானவரை அனேகவிதமாக வாழ்த்தி போற்றி அவருடையகாலில்விழுந்துநின்றுக்கொண்டு சொல்லுகின்றது ஓ, ஹாத்திமானவரே இந்த லோகத்திலும் உம்மைப்போலொத்த மனிதனுண்டா யிருப்பானோ யெங்களுடைய வருத்தத்தையும் கட்டிலகப்பட்டு கிடந்தவர்களை தன்னுடைய திரேகத்



தின் இரத்தத்தைக்கொடுத்து காப்பாற்றியவல்லமைத்தனமும் ஹைவானாதிக்கு செய்யப்பட்டவர்கள் பிறப்பார்களாவென்றும் ஆண்டவனே இந்தமனிதனை வாலிபனெங்களுக்கு உதவியொத்தாசை செய்தது உனக்கெல்லாந் தெரிந்திருக்கலாமே ஆகையாலவர் எங்கேபோனபோதிலு முன்னுடைய உதவியும்கிருபையுமிருக்க வேண்டுமென்று வாழ்த்துதலைசெய்துவிட்டு ஹாத்திமிடமாகஉத்தரவுபெற்றுக்கொண்டுதங்களிருக்குந்தலத்துக்குப்போய்விட்டது அப்போதுஹாத்திமானவர் அவ்விடம்விட்டுப்புறப்பட்டு காடுவனாந்திரங்களில்போகின்றபோது பசிதாகம்நேரிட்டால் அவ்விடத்திலிருக்கின்றகாய்கனிகிழங்குகளைப்பறித்துத்தின்று தன்பசியையாற்றிக்கொண்டுமலையடிவாரங்களில் சுனை தண்ணீர்கள் ஓடினாலதைதாகத்துக்குப்பொசித்துக்கொண்டு இவ்விதமாகநடந்து கொஞ்சநாளைக்குப்பின்புஒரு அகோரமானவனாந்திரக்காட்டிலகப்பட்டுக்கொண்டு சூரியனுடைய கொரேமானவெப்பத்தால் தண்ணீர்தாகம்மிகுதியாகிதன்னால்பொறுக்கமாட்டாமலும்தண்ணீர்கிடைக்காமலுமந்த வனாந்திரத்திலெங்குமோடித்திரிந்து அலைகின்றவேளையிலப்போது ஒரு குளம்வெண்மையாகவும்பனிக்கட்டிபோலவும் தூலவில் தோற்றியது அப்போது தாகத்துடைய கொடுமையால் ஹாத்திமானவர் மானைப்போலோடினதை இன்னவிதமென்றுசொல்லக்கூடாது அவ்விதமாகஓடியதினருகில்போய்ச்சேர்ந்துபார்த்தால் யாதொன்றுங்காணவில்லை ஆனாலொருபெரியவெண்மையானசர்ப்பமானது சீறிசீறி மூச்சைவிட்டு சுருட்டிக்கொண் டிருந்தது அதைப்பார்த்தவுடனே அச்சப்பட்டுமெள்ளதிரும்பிப்போகிறதைகயில் அச்சர்ப்பமானது கூப்பிட்டுசொல்லுகிறது ஓ, எமனிலுள்ள வாலிபனே என் திரும்பிக்கொண்டு போகின்றாய நீ இவ்விடத்துக்கு என்னவேலையாக வந்தாயென்று அந்தசர்ப்பமானதுபேசியதை ஹாத்திமானவர்கேட்டு மிகுந்த அச்சப்பட்டு சொல்லுகின்றார் ஆண்டவனுடைய படைப்பிலுள்ளவனே நான் தண்ணீர்தாகத்தால்மிகுந்த வருத்தமடைந்து தூலவிலிருந்து உன்னுடைய வெண்மையான நிறத்தைப் பார்த்து தண்ணீரைப்போல் காணவந்தது கானதைப்பார்த்து தாகந்தீரச்சாப்பிடலாமென்றெண்ணி மிகுந்த ஓட்டமாக ஓடிவந்தேன் ஆண்டவனுடைய குதறத்தானதைப்பார்த்து நான் திரும்புகிறேனென்றுசொல்ல அப்போதந்த சர்ப்பமானதுசொல்லுகின்றது ஓ, வாலிபனே நீ யாதொன்றுக்கும் அச்சப்படவேண்டியதில்லை உனக்காகவேண்டிய வஸ்தெல்லாம் என்னிடம் கிடைக்குமென்றுசொல்லி என்னோடுவரவேண்டும்

அப்போது பெருமூச்சுகள் விட்டுச் சிறிக்கொண்டு போகிற
போது ஹாத்திமானவர் என்னுகிறார் இவ்விதமானுசிறு நமக்கு ந
ல்மொழிகளைப்பேசி தன்கூடவரச்சொல்லிப்போகினறது ஆனலது
கோரமான ஜந்துவாகயிருக்கிறது அதினுடையமொழியை நானே
வ்விதமாக நம்பியதின்பின்னல் போகலாமென்கிற யெண்ணத்தையு
ங்கொண்டு பின்னும் நினைக்கிறார் நல்லது நம்முடைய நசீபு தலையெ
ழுத்து எவ்விதமாக யிருக்கிறதோவென்று றெண்ணி நாம் பார்க்கலா
மென்று அதினேடு பின்னல் மெள்ளமெள்ள அடியையெடுத்துவை
த்துக்கொண்டு நடக்கிறார் அப்போதந்த சர்ப்பமான து திரும்பிப்பார்
த்து சொல்லுகிறது ஓ, வாலிபனே நீ மனதில் யாதொன்றுக்கு மச்ச
ப்படாமலென்னேடு தொடர்ந்துவாருமென்று கூப்பிட்டுச்சொல்ல அ
ப்போது ஹாத்திமானவர் மனதை தைரியப்படுத்திக்கொண்டு அதின்
கூடதொடர்ந்து நடந்துபோகிறார் அப்போ தவ்விடத்திலொரு (குல்
ஜார்ஜன்னத்) என்ற பூங்காவனமானது சொற்கத்துக்கு ஈடாகயிரு
ந்தது அதைக் கண்டவுடனே விசனங்களெல்லாந்தீர்ந்தது மன
மானது பூமலர்ந்ததுபோல் மலர்ந்து அதிக சந்தோஷமாகி ஹாத்
திமென்னுகிறார் நாம் இவ்விதமுள்ள தோட்டமெங்கும்பார்த்ததில்
லை ஆனல் பரிஜாதிகளுடைய சீமையில் திரிந்திருக்கிறோம் இன்னு
மனேக தேசங்களில் ஸபர்போயிருக்கிறோம் இவ்விதமானதோட்டத்
தை நாம் பார்க்கவில்லையென்று மிகுந்த ஆச்சரியப் பட்டுக்கொண்டு
அப்புறம்போய் பார்க்கிறபோதில் அவ்விடத்திலொரு மஹாலானது
இருக்கக்கண்டு அந்த மஹாலில் விரிப்புகள் விரித்திருக்கிறதையும்
பார்த்தாலிவ்விதமுள்ளதென்றுவர்ணிக்கக்கூடாது அதினுள்ளொரு
சிம்மாசனமிட்டு அனேகவிதமான தலைகாணிகள்போட்டிருந்ததுமன்
றி அவ்விடத்தில் ஒரு குளமிருந்தது அதினருகில் ஒருமென்மையா
னவிரிப்பும் விரித்திருந்தது அப்போதந்தசர்ப்பமானது நீரிவ்விடத்தி
ல்கொஞ்சநேரமிருக்கவேண்டும் நானிப்போது திரும்பிவருகின்றே
னென்றுசொல்லி அந்தகுளத்தில்போய்விழுந்துவிட்டது பின்புகொ
ஞ்சநேரம் பொறுத்து சிலபரிஜாதிகள் பொன்வெள்ளிகளினல் செ
ய்த தட்டு களில் சிறைய இரத்தினுதிகளை தலைகளிலெடுத்துக் கொ
ண்டு அந்த குளத்திலிருந்து புறப்பட்டு வெளியில்வந்து ஹாத்திமு
க்கு சலாம்செய்து தாங்கள்கொண்டுவந்த தட்டுகளைமுன்னல் வைத்
தப்போட்டு நின்றார்களப்போது ஹாத்திமானவர் கேழ்க்கின்றார் ஓ,
ஆண்டவன்படைத்த படைப்பிலுள்ளவர்களே நீங்கள் யாராகயிருக்



கும் மெய்யாகச்சொல்லுங்களென்றுகேழ்க்கஅப்போதவர்கள்சொல்
லுகிறார்கள் உங்களைஇவ்விடமழைத்துக்கொண்டு வந்தவருடையவே
லைக்காரர்களாக யிருக்கும்ஆனுலிந்த இரத்தினங்களெல்லாம் தமக்கா
கவேண்டி அனுப்பியிருக்கிறராகையாலிதைதாங்கள்ஒப்புக்கொள்ள
வேண்டும்அம்மொழியைஹாத்திமானவர்கேட்டு ஆந்தவஸ்துகளெல்
லாமெனக்கென்ன வேலைக்காகும்இவ்விதமானவஸ்துகளை நானெவ்வி
தமாக யெடுப்பேன் நானேடமாகக்கொடுப்பேனென்று இவ்விதமாக
பேசுகையில்இன்னம்சிலதுபரிஜாதிமுன்போலவேயெத்தனையோதட்
டுகளிலெடுத்துக்கொண்டு ஹாத்திமிடமாக வந்தவுடனே கேட்டார்
இதெல்லாமென்னயிருக்கிற தென்றுகேழ்க்க அப்போதவர்கள் உங்களுக்கா
கவேண்டியனுப்பியிருக்கிறார் அதைநீங்கள் கபுல்செய்யுமென்றுசொ
ல்ல அப்போது இதுவுமெனக்கு வேண்டியதில்லையென்று சொல்லி
க்கொண் டிருக்கிறபோதின்னம் சிலதுபரிஜாதிகள் அதேபிரகாரம்
இரத்தினுதிகளாலிழைத்த விலைமதிக்காத தட்டுகளில் ஸர்போஷ்
மேகவர்ணமுள்ளதால் மூடிக்கொண்டுமுன்வந்ததுபோல் குளத்தி
லிருந்து புறப்பட்டு ஹாத்திமுக்கு முன்பாகக்கொண்டுவந்துவைத்து
சலாம்செய்து நிற்க அப்போது ஹாத்திமானவர் இதிலென்னயி
ருக்கிற தென்றுகேழ்க்க அப்போதவர்கள்தங்களுக்காகவே ஒசிவனை
க்கொண்டு வந்திருக்கிறோமென்றுசொல்ல அப்போது ஹாத்திமான
வர் சொல்லுகிறார் மெத்த நலமாகயிருக்கும்எனக்குவிருந்துகொடுக்
கும்படியானஎஜமானவரெங்கேயென்றுகேட்கஅப்போதுபாம்பின்
ரூபமெடுத்துவந்தவர் அழகுபொருந்திய வாலிபன் ரூபத்தோடு (சூழ)
பரிகளுடனே அந்த குளத்திலிருந்துவெளிப்பட்டுவந்து ஹாத்திமிட
மாகவர அப்போதுஅவரைப் பார்த்தவுடனேமிகுந்த ஆச்சரியப்பட்டு
இந்த அழகு வடிவுபொருந்திய வாலிபன் யாராகயிருக்கும் எனக்கு
தெரியவில்லையே என்றுமரியாதிக்காக எழுந்துநிற்க அப்போதந்த
வாலிபன் ஹாத்திமுடைய கையைப்பிடித்துமிகுந்த பிரியமுடனே அந்
த சிம்மாசனத்தின்மேல் தன்னேடிருக்கும் படிக்கு செய்து நீர் எ
ன்னையறியமாட்டீராவென்றுகேழ்க்கஅப்போது ஹாத்திமானவர்சொ
ல்லுகிறார் நானெப்போதாவதுதங்களைக்கண்டிருப்பேனுகில்அப்போ
தெனக்குதெரியுமென்றுசொல்ல அவ்வாலிபன் குஞ்சிரிப்புடன்சொல்
லுகிறான்நான்உம்மைஇவ்விடமழைத்துக்கொண்டு வந்தவனுகயிருக்
குமென்றவுடனேஹாத்திமானவர்ஓ, என்னுடையதோழனே முன்னா
ல்உன்னுடைய ரூபமான துபாம்பின்வடிவாகயிருந்ததுஇப்போதுமனு

தனுடைய ரூப மெவ்விதமானதென்று கேழ்க்க அப்போதவர் சொல்
லுகிறார் நல்லது நீர்பசியாறியபின் இதினுடைய ரகசியம் தெரியவரு
மென்று சொல்லி தஸ்தர்கான் என்ற விரிப்பைவிரித்தார் அவ்விரிப்
பிலனேக விதவிதமானபுலாவும் மேவாமிட்டாய்களும் கனிவர்க்கங்
களும் கொண்டுவந்து நிரப்பி நவரத்தினத்தினாலிழைத்த (தஷ்த்து
சிலம்சாவில்) வாசனைபொருந்தியபன்னீரைநிரப்பிக்கொண்டுவந்து
ஒரு பரிஜாதியானவள் ஹாத்திமுடைய கையிலூற்றினாள் அப்போ
து ஹாத்திமானவர் பசியாற துவக்கஞ்செய்தார் அவ்விடத்திலு
ள்ள பரிஜாதிக ளெல்லாரும் அவரவருடைய வேலைகளில் நிற்கின்
றார் அப்போது ஹாத்திமானவர் சாப்பிட்டுக்கொண்டு என்னுகி
றார் நானிவ்விதமான ருசிகரமுள்ள வஸ்துக்களை இப்போது சாப்
பிடுகிறேன் இவ்விதமான வஸ்துகள் முன்னால் (பரிகவுஷ்லப்) யெ
ன்பவளோடு (கோஹெ நிதா) வில்சாப்பிட்டேன் ஆனால்வரும்ப
ரிஜாதிகளின் கூட்டமாக யிருப்பாளென்று எண்ணியொசித்த பி
ன்பு ஒரே வயிரத்தாலிருக்கின்ற சீஷாவில் அத்தர் நிரப்பிக்கொ
ண்டு வந்து வைத்து நவரத்தினத்தாலிழைத்த தட்டில் தாம்பூலமுங்
கொண்டுவந்துவைக்கஹாத்திமானவர்கையைகழுவிக்கொண்டுஷர்பத்
தென்றபானதினுக்களைப்பொசித்து அத்தர்களையெடுத்துதம்முடை
ய திரேகத்தில் சாத்திக்கொண்டுதாம்பூலத்தையுமருந்திக்கொண்டார்
அதினுடையவாசனையால் மனம்திக்குமாறி சந்தோஷத்துடனே மன
தில் எண்ணுகிறார் இப்பேர்ப்பட்ட தின்பினைவஸ்துகளும் வாசனை
பொருந்திய வஸ்துகளுமிவர்களுக்காகவேண்டி இவ்விதமானவஸ்து
களை உண்டாக்கியிருக்கின்றானென்று ஆண்டவனைமிகுதமாகபோற்
றி வாழ்த்தி ஷுக்கூர் செய்து சொல்லுகின்றார் லோகத்தையெல்லா
ம் படைத்து ஆளுகின்றவல்லவனாகிய ஆண்டவனே உன்னுடையமகி
மையையும் வல்லபத்தையுமறிய ஆசால்கூடுமோ இந்தபரிஜாதிகளுக்
கு இவ்விதமானவஸ்துக்களையுமின்பங்களையுமிவர்களுக்குகொடுத்தது
போல் மனிதர்களுக்கு கொடாமலிருக்கின்ற ரகசியம் உனக்கேதெ
ரியுமென்று போற்றி பின்பு அந்தமனிதனைப்பார்த்து ஹாத்திம்கேழ்க்
கின்றார் ஓ, என்னுடைய தோழனாகிய பிரியனே நீர் முன்னால் பா
ம்பினுடைய ரூபங்கொண்டிருந்தீர் இப்போது பரிகளைப்போலாகியி
ருக்கின்றீர் அதின் விபர மென்னவென்று கேழ்க்க அவர் அதை
சொல்லுகிறேன் ஓ, வாலிபனே நானெப்போதும் பரிஜாதியாகயி
ருக்கும் என்னுடைய பேராவது (ஷம்ஷ்ஷா) வாகயிருக்கும் நானொ



ருநாள் ஹஜரத்து சுலைமான் அலைஹிஸ்ஸலாமுடைய நாளில் என்னு
டைய தோட்டத்தை சுற்றிப்பார்த்துதிரிந்துக்கொண்டிருந்து என்
னுடைய படைகளெடுத்து மனிதர்களின்சீமையில்போய்விழுந்து அ
ந்தசீமைகளைபிடித்துக்கொண்டு அவரவர்களையும்வெட்டிஜெயம்பண்
ணவேண்டுமென்றெண்ணினேன் அந்தசீமையிலிருந்த துப்பறவுள்ள
தாகவும்மேன்மையுள்ள தண்ணீர்காற்றுமற்றதினுசுகளும் வெகுநேர்த்
தியுள்ளதாகயிருந்ததால் இவ்விதமாகஎண்ணிக்கொண்டுஎன்னுடைய
மந்திரிபிரதானிகள் தளகர்த்தர்களையுமழைப்பித்து மேற்கண்டசங்க
திகள்தெரியப்படுத்தினதின்பேரிலவர்மிகுந்தசந்தோஷத்தை யடைந்
தாங்கள் உத்தரவுபோல்நடக்கிறோமென்றுசொல்லநல்லது நாளை
யதினம் நம்முடையபவுஜுகளைமனிதரோடு சண்டைக்குப்போகவே
ண்டுமென்று ஆகையால் நீங்கள் உங்களுங்களுடைய பவுஜுக
ளும் மற்றஆயுதங்களையும் தயார் செய்துக்கொண்டு சாக்கிரதையா
க நாளையகாலையில் எல்லோரும் ஹாஜராக வேண்டுமென்று உத்
தரவுசெய்ய அவ்வுத்தரவைப்போல் கேழ்க்கிறோமென்றுமுஜுறு
செய்துப்போய்விட்டார்கள் இரவானபின்பு நான்படுக்கைக்குப்போ
ய் நித்திரைசெய்துவிடிந்தபின் பார்த்தால் என்னுடைய கோலமும்
என்படைகளுடையகோலமும்எல்லாம்பாம்பாகவேறுபட்டுப்போன
தைப்பார்த்து நான் வெளியேபுறப்படாமல் அன்றையதினமெல்லாம்
வீட்டினுள்ளே வெழுக்கத்துடனேயிருந்து ஆண்டவனிடமாக காலை
யில் துடங்கிமாலைவரையில் தொங்கிக்கொண்டு துவாகேட்டுக்கொ
ண்டிருந்தேன் ஆண்டவனே. என்னையு மென்னுடைய படைக
ளையும்முன்னிருந்த ரூபம்போலாக்கிவிடுமென்றுமன்றாடிக்கொண்டு
ஆண்டவனேநான்நினைத்தநினைவானதைகொண்டுநீபொறுக்கவேண்டு
ம் என்னுடையதப்பிதமானபாவத்தின்பிழையைப்பொறுத்து என்னை
யுமென்னுடைய படைகளையும் காப்பாற்றவேண்டுமென்று அனேக
விதமாக அழுது முறையிட்டு தோபாசெய்து கேழ்க்கும்போது ஒரு
சத்தமானது ஆகாசத்தில் நின்றுவந்தது.

அது எவ்விதமெனில் யாதாமொருவன் தன்னுடைய கவுல்மா
றிபுறண்டவனுடைய கெடுதலையானபடியால் இவ்விதமாகிறதுஇவ்வி
தமாக நாளிரவுகாலங்களிலே வெளியில்வருவே னப்படிக்கிருக்க இ
ரவில் நானவன் மிகுந்த துக்கத்தோடு சிரசை நிலத்தில் வைத்
துக்கொண்டு ஆண்டவனிடமாக அழுது தோபாசெய்து நானிவ்வித

மான எண்ணமெப்போதும் மனதிலெண்ண மாட்டேன் ஆண்ட
வனே நீ என் குற்றத்தைப் பொறுக்கவேண்டு மென்று அழுதே
னப்போது எனக்கொரு சப்தம்வந்தது கல்லது நீ யின்னங் கொஞ்ச
நா ளிவ்விதமாகத்திரிவாய் பின்னொரு உத்தரவுசெய்வேனென்றுசொ
ல்ல அம்மொழியைக்கேட்டு பின்னும் நான் மிகுந்த துக்கத்தோடழ
ழுதேன் ஆண்டவனே இவ்விதமானயெண்ணம் இனிநானெப்போ
தும் எண்ணமாட்டேன் என் பிழையைப்பொறுத்து முன்போலாக
வேண்டுமென்றுகேட்க அப்போதொருசப்தம் வந்தது(௩௰) வயதுள்
ளஒருவாலிபன் எமன்தேசத்திலிருந்து இவ்விடம்வருவான் அவனை
நீ பார்த்தவுடனே முன்னிருந்த ரூபம்போலாவாய் அனலவரு
க்கு நீ உன்னுடைய உயிருமனதாலும் பணிவிடைசெய்ய வேண்
டும் உனக்காகவேண்டி என்னிடமாகதுவாகேழ்ப்பார் அவருடைய
துவா கபூலியத்தாகும் நீ எப்போதும் போலாகுவாய் அவனை
க்காண்கிறவரையி லிவ்விதமாக நீ இருக்கவேண்டும் அப்படிய
வனைநீ காண விட்டால்நீயும் உன்னுடைய படைகளுமெப்போதும்
போல் பாம்பின்ரூபமாக இருக்கவேண்டு மப்படியிருக்க நானந்தவரு
ஷந்தொடுத்து (௩௰) வருஷமாக இந்தவேஷத்துடனே இந்தமலைகள்
காடுகள் வனாந்திரத்தில் திரிந்துக்கொண்டு உன்னுடையதேட்டமும்
நாட்டமும்படையுங்கொண்டுஇரவும்பகலுமாகஎனக்கொருஇருப்பிட
மில்லாமலும் உண்பினைதின்பினையும் இல்லாமலும்வெய்யலென்றும்
கானலென்றும் மழையென்றும் காற்றென்றும் தோணாம லிவ்வித
மாய்திரிந்து கொண் டிருக்கிறவேளையி லுன்னைக்கண்ட வுடனே
இந்த மனிதன்தா னென்றெண்ணினேன் ஆனால் நானுங்களுடைய
ஜிஸ்மத்து என்னுடைய உயிருமனமுமொன்றாக வாளிப்போது செய்
தேன் ஆனவிவ்வேளையின்பேரில் கிருபைவைத்து என்னுடையசங்
கதிகளைமனதிலறிந்து எனக்கிரங்கியென்பேரில் பட்சம்வைத்து காப்
பாற்றும்படியாக உண்மையான இரக்கத்தா லென்வேஷத்தை மா
ற்ற ஆண்டவனிடமாக துவாகேழ்க்க வேண்டுமென்று மிகுதமா
கவெஞ்சிக் கேழ்க்க அப்போது கேழ்க்கின்றார் நீயென்ன கவுல்
மாறிப் போனீயென்று கேழ்க்க அப்போது (ஷம்ஷ்) பாத்துஷா-ஆ-
வென்றொரு பெருமூச்சிட்டு சொல்லுகிறார் எங்களுடைய கூட்டந்
தார் ஹஜரத்து சுலைமான் அலைகிஸ்ஸலா மவர்களிடமாக ஒரு கறார்
செய்திருந்தார்கள் உங்களுக்குப்பின்புநாங்கள்மனிதர்களுக்கு வருத்த
மும் இடுக்கண்களும் அவர்களுடைய சீவனின்பேரி லெண்ணமுமா



சையுங் கொள்வோமாகில் எங்களுடைய கூட்டங்களில் ஆண்டவ
னுடைய கஹர் இறங்குமென்றும் அந்நாள்தொடுத்து எங்களு
டைய கூட்டங்கள் எந்தமனிதருக்கும் வருத்தமும் இடுக்கமுங்
கொடுக்கவில்லை ஆனவொருநாள் என்மனதில் கெட்ட எண்ணம்
வந்து நேரிட்டது அதினாலிப்போது இவ்விதமான தங்கடமுண்டாச்
சுது ஆனலும்முடைய சமூகத்தில் நானிப்போது சத்தியமாகவுமுண்
மையாகவும் தௌபாசெய்கிறேன் அல்லாஹ்விற்குமேனில் இனி இவ்வித
மானயெண்ணம் நான்கொள்ளாமல் என்னுடைய ஆண்டவனறியஅ
ம்மொழியை ஹாத்திமானவர்கேட் டெழுந்துதண்ணீரால குசல்செ
ய்து துப்பரவான உடுப்புடுத்திக்கொண்டு உட்கார்ந்து ஒரு மனதாய்
ஆண்டவனிடமாக துவாகேட்டார் அப்போதந்த துவா ஆண்டவ
னுடையசமூகத்தில்கபூலாகிவிட்டது ஹாத்திமானவர்(எஹூதி)களு
டைய ஜாதியாயிருந்தபோதிலும் ஆண்டவனொருவனென்று உண்
மைகொண்டி ருந்தார் இரவும் பகலும் ஆண்டவனுடைய நினை
வில் சொக்கிப்போயிருந்தார் பின்புகடைசியில் தானிறக்கும்போதுத
ன்னுடைய இனத்தார்களுக்கு சொல்லிக்கொண் டிருந்தார் எங்களு
டையகூட்டத்தார் விவேகமில்லாத அறிவீனராகயிருந்து காலத்தை
வீணாகப் போக்கடித்தார்கள் இன்னாள்களில் கீர்த்தியை நிலைப்படுத்தி ந
ல்வழிக்கு பாதையைக் காண்பிக்கும்படியானவர்கள் இப்போதில்லா
மையினால்இன்னம்சிலநாளைக்குப்பின்புபயகம்பராகிய ஆகிறஜ்ஜமான்
காத்திமுல் அன்பியா வுபீஉல் முஜனபீனுகிய

## முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்.

பிறப்பார்கள் என்னுடையமொழி பிசகானதல்ல உண்மையாகயிருக்
கும் அவர்கள் மனிதர்களிடத்தில் தங்களுடைய (கலிமா) என்றதை
போதிப்பார் தம்முடையமார்க்கத்தில் ஈமான் ஆண்டவனொருவனெ
ன்றும் அவனுடையதூதர் நானென்றும் உண்மைகொள்ள வேண்டு
மென்பார் இவ்விதமான மார்க்கட்டுப் நடத்துவாராகையால் நீங்
கள் அவ்வேளையில் என்னுடைய ஸலாமவர்களுக்கு சொல்லி
எனக்காக துவா கேழ்க்கச் சொல்லவேண்டியது அப்போத
வர்கள் சொல்லுகிறார்கள் அப்பேர்ப்பட்டவிவருகிறவரையிலெங்
கள்லோகத்திலிருப்போமா உம்முடைய ஸலாமவருக்குச்சொல்ல
அப்போது ஹாத்திம் சொன்னார்நான்சொல்வது பொய்யாகஎண்ண
வேண்டாம்நல்லதுஅவர்பிறந்து தீன்மார்க்கத்தை உண்டாக்கு

இறபோது எங்களுடையது அல்லது உங்களுடைய பிச்சளங்களொ
ருவனிருப்பானு அவருக்கு உங்களுடைய ஸலாம் சொல்வதற்கு அப்
போது ஹாத்திமானவர் சொன்னார் நானிச்சயமாக உண்மைகொண்
டிருக்கிறேன் என்பிச்சளங்களி லொருமனிதன் மார்க்கத்தை உண்
மைகொண்டு அம்மார்க்கத்தில்சேர்ந்து என்னுடையஸலாம் ஆதாபு
அவருக்கு தெரிவிப்பாரென்றும் சொன்னார் (இது நிற்க சிலதுநாளை
க்குப்பின்பு ஆகிர் ஜமானுடையகாலத்தில் நபிநாயகத்தினுள் வந்திரு
க்கையில் ஹாத்திமுடையவம்மிஷத்திலுள்ளபெண் மக்கத்தார்களு
டையகைதி லகப்பட்டுக்கொண்டு எமனிலுள்ளவர்களோடு வந்திரு
ந்தார்கள் அப்போது நபிசல்லல்லாகு அலேகிவஸல்லமிவர்கள் யாரெ
ன்றுகேழ்க்க அப்போது அஸ்ஹாபிகளிவர் எமனிலுள்ளவர்களென்
றுசொன்னவுடனே நல்லதிவர்கள் தீன்மார்க்கத்தில் சேர்ந்து ஈமா
ன்கொள்வாராகில் நல்லது இல்லாவிட்டாலிவர்களை வெட்டிவிடுங்க
ளென்றும் அப்போதந்தப் பெண்ணானவள் அம்மொழியைக் கேட்டு
மிருந்த விசனத்தை யடைந்து சொன்னாள் ஓ, மூமின்களே என்னு
டைய சலாமானதை ஹாஜறத்தவர்களுடைய சமுகத்தில்சென்று பின்
னுஞ் சொல்லவேண்டியது ஹாத்திமுடைய வம்மிஷத்தில்நின்று இ
ந்தகூட்டத்தில் ஒரு பெண்ணகப்பட்டு வந்திருக்கிறாளென்று மறிவி
க்கவேண்டுமென்றுமிருதமாக கெஞ்சிச்சொல்ல அப்போது அஸ்ஹா
பிகள் சங்கதியை நபிநாயகத்துக்கு தெரிவிக்க அப்போதவர்கள் அப்
பெண்ணை கைதியிலிருந்து விட்டுவிடும்படிக்கு உத்தரவுசெய்துசொ
ல்லுகிறார் ஹாத்திமானவர் முன்னுளில்மிகுந்த தர்மசாலியாக ஸகாவ
த்துசெய்து இருந்தவருடைய அவுலாதானபடியா லென்றுசொல்ல
அப்போதவளிடமாகப் போய்சொல்லுகிறார்கள் நீ ஹாத்திமுடைய
வம்மிஷத்தி லுள்ளவளாகையா லுன்னைகைதியிலிருந்து விடும்படிக்
குத்தரவாகி யிருப்பதால் நீ உன்னுடைய தேசத்துக்கு போவென்று
சொன்னவுடனே அந்த பெண்ணென்பவள் சொல்லுகிறாள் ஹாத்தி
முடைய சொந்தமான வம்மிஷமுடையவர்கள் இவ்விடம் கைதியில்
வைத்து நான் ஒண்டியானவள்கைதியிலிருந்து விடுபட்டுப்போவது
நன்மையல்லவென்று அவர்களுக்கு வருத்தம் வந்தால் எனக்குவந்
ததாகவிருக்கும்இந்தலோகமானது எப்போதும் நிலையுள்ளதல்ல எ
வ்விதத்திலு மொருநாளிறக்கவேண்டு மென்றுசொல்ல அம்மொழி
யை நபிநாயகமிடமாகத் தெரிவித்தார்கள் தங்களுடைய கூட்டத்தை
விட்டுப்பிரிய அந்தப் பெண்ணுக்கு ராஜியில்லையென்று சொல்ல



ஹாத்திமானவர் மிகுந்த தர்மமென்ற ஸகாவத்து செய்தவரானபடி
யினால் அவருக்காக அந்த கூட்டங்களையெல்லாம் கைதிலிருந்துவிடும்
படிக்குஉத்தரவுசெய்தார்)

அப்போது அந்தப்பெண்ணானவள்தங்களுடைபந்துக்களாகி
ய கூட்டத்துடனே சந்தோஷமடைந்தாள் பின்பு அப்பெண்ணுக்கு
ஹாத்திமுன்னால் சொல்லியிருந்த மொழியந்நேரம் நினைவுவந்து அ
வ்விடத்திலுள்ளவர்க்கறிவித்தாள் என்னைநபிநாயகமிடமாகக்கொண்
டுபோய் விடவேண்டுமென்றுஞ் சொல்லஅதுபோலஇவளையும் மற்ற
வர்களையும் கூட்டிக்கொண்டுநபிநாயகத்தின்முன்னில்கொண்டுபோய்
விடஅப்போதவர்கள்நபிநாயகத்தைக்கண்டுமிகுந்தவணக்கமாக ஆதா
பு ஸலாமாத்துசெய்துஹாத்திமுடையஸலாம்பந்தியைசெய்துஹாத்
திம்நபிநாயகத்தைகுறித்துச்சொல்லியமொழிகளையெல்லாம்தெரியப்ப
டுத்தியபின்புநபிசல்லல்லாகு அலேகிவஸல்லமவர்கள் தீன்மார்க்கத்தி
ன்நல்வழியின்சங்கதிகளைவிபரமாகத்தெரிவிக்கவுடனேதம்முடையஏ
கூதிஜாதியைவிட்டுநீங்கி தீன்மார்க்கமென்றவழியில் அந்தப்பெண்ணு
மவளோடு வந்தகூட்டமெல்லோர்களும்சேர்ந்துஈமான்கொண்டு இஸ
லாமாய் போனார்கள்ஹாத்திமுடையதுவா அந்தப்பரிஜாதிக்காகஎவ்வி
தம்கபூலாச்சுதானால் இவர்பேரில்கடைசிகாலத்தில் நபிசல்லல்லாகு அ
லேகிவசல்லம் கிருபைசெய்வாரென்றிருந்தபடியால்அந்தபாம்பின்ரூப
மிருந்தபரிஜாதிகளுக்கெல்லாம்இறகுகள்முளைத்துபாம்பினுடையரூப
மாறிமுன்னிருந்ததுபோலாகி யிருந்தார்கள்அப்போது அந்தப்பரிகளு
க்குபாத்துஷாவான ஷம்ஷ் என்பவர்கேட்டார் ஓ, ஹாத்திமே நீங்களி
வ்விடம் வந்தது எதுக்காகவென்றும் எங்கேயிருந்து எவ்விடம்
போக வந்தீரென்றுங்கேழ்க்க அப்போது ஹாத்திம சொல்லுகின்றார்
இப்போது நான் ஷாஹெ ஆபாதென்ற பட்டணத்திலிருந்துபர்ஜக்
கு என்ற தீவுக்குப் போகிறேனென்றும் தான் கொண்டு வந்தமுத்
தின் பிரமாணமுள்ள வெள்ளியின் முத்தையெடுத்துக் காண்பித்து
இவ்விதமானமுத்து (க) கொண்டுவரப்போகின்றேனென்று சொல்ல
அப்போது அந்த ஷம்ஷ்பாத்துஷாவானவர் சொன்னார் நீங்கள்சொ
ல்லுகின்றது சரிதான் பிசகில்லை அந்த முத்தானது மிகுந்த பெ
ருமையுள்ளது ஆனால் அந்த பாத்துஷாவானவர் ஒரு ஷரத்து
நிச்சயப்படுத்திக் கொண்டிருக்கின்றார் எவ்விதமெனில் இந்தமு
த்தின் பிறவிபினுடைய வரலாற்றையாதாமொருவர் கண்டுசொல்வா

ராகில் அந்த முத்தையும் என்னுடையபெண்ணையுமவர்களுக்குகொடு
ப்டேனென்றும்அதனால்அவ்விடத்துக்குப்போகிறவழியில் அனேகமா
னகஷ்டங்களிருக்கின்றதுமனிதர்களால் அவ்விடம்போகஒருவராலு
முடியாது தங்கள் மனங்கொண்டதுபோல் போகக்கூடாது அப்போ
து ஹாத்திம் சொல்லுகின்றார் அவ்விடத்தில் எவ்விதமாக விருந்த
போதிலும் நான்போவேன் என்னுடைய ஆண்டவன் என்னை தற்கா
த்துக்கொள்வானென்றமொழியை ஷம்ஷ் பாத்துஷாயென்பவர்கேட்
டு மிருந்த ஆச்சரியமடைந்து ஹாத்திமுடைய வல்லமையையும் தை
ரியத்தையும் பார்த்துசொல்லுகின்றார் நீர்இவ்விதமாகச்சொல்வதால்
அதற்காகதாங்கள் யாதொன்றுக்கும் யோசிக்கவேண்டியதில்லை என்
னுடைய படைகளாகிய பரிஜாதிகளைவேண்டியபேர்களை தங்களோடனு
ப்புகிறேன் உங்களுடைய வேலைக்காகவும் உதவிக்காகவும் இவ்வித
மாகச்சொல்லிதம்முடையபடையிலுள்ளபரிஜாதிகளையழைத்துசொ
ல்லுகின்றார் எவ்விதமெனில் இந்த ஹாத்திமென்பவரால் நீங்கள் எ
ல்லபேரும் பாம்பின் ரூபத்தில் நின்று உங்களுடைய சயரூபமாகி
யிடுக்கமும் துன்பமும் தீர்ந் திருப்பதால் இப்போது இவரோடுநீங்
கள் துணையாகவும் உதவியாகவும் போக வேண்டுமென்றுஞ் சொல்
ல அப்போது பரிஜாதிகளுடைய மனமுமுயிரும்உடலுமாகஉண்மை
கொண்டு நடப்போமென்றும் சொல்ல அப்போது ஷம்ஷ்பாத்துஷா
சொல்லுகின்றார் இவரை பர்ஜக்கு என்றதீவுக்கு கொண்டுபோய்வி
டுங்களென்று சொல்ல அம்மொழியைஅவர்கள் கேட்டவுடனே யா
தொருஜவாபும் சொல்லாமல்தலையைக் கீழேபோட்டுக்கொண்டுகொ
ஞ்சநேரம்பொறுத்துதலையையுயர்த்தி பாத்துஷாவுக்குதெரியச்சொல்
லுகின்றார்கள்.

ஓ, பாத்துஷாவே அந்தஇடத்துக்கு கொண்டுபோய்விடுவதுமிகு
ந்தவருத்தமும்துன்பமுமாகவிருக்குமெவ்விதமானால் அந்தபாதையி
ல்கேடானதேவுகளிருக்கிறதுஎங்களைஉயிரோடேவிட மாட்டார்கள்
ஆகையால்பாத்துஷாவேநீங்களிப்போதுஅவ்விடம்போகஎங்களை எ
ன்னங் கொள்வீராகில் வீணாகமேதுபேரில்குற்றஞ்சுமத்திசண்டை
க்கு தயாராகிவருவார்கள்அப்படியிருப்பதால்தங்களுக்குசங்கதியைத்
தெரிவித்தோம் தங்களுடைய உத்தரவுபோல் நடக்கின்றோமென்று
சொல்லஅப்போது ஷம்ஷ்பாத்துஷா சொல்லுகிறார் ஓ, வல்லமைசா
லிகளேஇவர்செய்தநன்றியைநீங்களெண்ணி அதைநினைக்காமல் எவ்



விதத்தாலுமிவரை அவ்விடங்கொண்டு போய்சேர்க்கவேண்டும் அம்
மொழியைப்பரிஜாதிகள்கேட்டுஉள்ளதுபோல்முடியட்டுமென்றுமன
தை தைரியப்படுத்திக்கொண்டு அவர்கள் சொல்லுகிறார்கள் எவ்வி
தமெனில் இவரை தங்களுடைய உத்தரவுபோல் அவ்விடம்கொண்டு
போய்சேர்க்கிறோம் ஆனால்நாங்கள் போகிறபாதையிலெங்களுக்கே
தாவது தொந்தரவுகேடுமானால் அந்தவேளையில் உங்களுடைய உதவி
யொத்தாசையெங்களுக்குஉடனே அனுப்பிவைக்கவேண்டியதென்றுசொல்ல
அப்போது பாத்துஷாவானவர் அம்மொழியைக்கேட்டுச்சொல்லுது நீங்க
ள் சொல்வதைப்போல் நடக்குமென்றுசொல்ல உறுதியாகவுண்மை
கொண்டு ஒரு சிம்மாசனமானதை அவர்கள் கொண்டு வந்ததைவ
த்து பாத்துஷாவானவர் ஹாத்திமுக்கு சொல்லுகின்றார் தாங்களிந்த
சிம்மாசனத்தி லேறிக்கொள்ளுங்கள் இந்த பரிஜாதிகள் நீங்கள்போ
கவேண்டி மென்ற இடத்துக்குகொண்டுபோய்விடுவார்கள்ஆகையால்
ஆண்டவன் கிருபையால் அவ்விடம்போய் தங்களுடைய எண்ணம்
நிறைவேறி வருகும்போது என்னிடமாக வந்துபோகவேண்டிய தெ
ன்றும் பலபல உபசாரஞ்செய்து அந்த சிம்மாசனத்திலேற்றிவிட அ
ப்போ தந்தப்பரிகள் நாலுபேர்களை நாலுபக்கம் சிம்மாசனத்தினுடை
யகால்களைப்பிடித்துக்கொண்டு மற்ற பரிஜாதிகளெல்லபேர்களும்நா
ன்கு பக்கங்களிலுங்காவலாகவானத்தைப்பார்க்க எழும்பிபறந்துபோ
கிறார்களிவ்விதமாக இரவும்பகலுமாக மூன்றுநாள் பறந்து நாலாநா
ளில் தேவர்களுடைய எல்லையின் மறதியாக அவ்விடத்தி லொரு
மரமிருந்தது அதின்கீழே அந்தசிம்மாசனத்தையிறக்கிச்சொல்லுகின்
றார்கள் இப்போதுமூன்றுநாளாகநாங்களுண்ணவும்தின்னவுமில்லாத
தால் இவ்விடத்தில் இரண்டு நாழிகையிருந்திளைப்பாறி எதாவதிருப்ப
தைப்பொசித்துப்போகலாமென்றுசொல்லஅம்மொழியை ஹாத்திம்
கேட்டுஉங்கள்மனதிஷ்டம்போல்செய்வதைச்செய்புங்களென்றுசொ
ன்னவுடனே பரிஜாதிகள் இளைப்பாறுதலுக் காகவேண்டி அவ்விடத்
தில் சுற்றிப்பார்க்கப் போனார்கள் அப்போது ஹாத்திமானவரிடமாக
ஒருவன் காவலாகயிருந்தான் இவ்விதமாகயிருக்கையில் கணக்கில்லா
ததேவுகள் அந்த வனாந்திரத்தில் வேட்டையாடிக்கொண்டு ஹாத்
திமானவர் இருக்கு மிடமாக வந்து பார்த்தார்கள் ஒரு மனி
தன் ஒரு சிம்மாசனத்திலிருக்கிறான் அவனிடமாக ஒரு பரிஜா
தியானவன் நிற்கிறானென்றும்பார்த்து (௨-௪-௯) தேவுகள்வந்தவை
த்திலமைத்துக்கொண்டது (௩-௪-௯) தேவுகள் சந்தோஷமாகக்கூடிதா

டுகிறதுபின்பு அந்ததேவுகள்சொல்லுகின்றதுஇந்தமனிதன் இவ்விட
த்துக்கெங்கேயிருந்து வந்தானென்று பேசிக்கொண் டிருக்கையில்
தபரிஜாதியானவன்பயந்துஹாத்திமைதள்ளித்துவிட்டோடிப்போகலா
மென்றெண்ணி நிற்கின்ற போதில் நாலுதேவுகள் அவனைப் பிடிக்க
ப்போனார்கள் அப்போதந்த பரிஜாதியானவன் அவர்களோடு யுத்தம்
பண்ணி இரண்டு மூன்று பேரையடித்தான் பின்பு அவர்கள் கை
யில் அகப்பட்டுக் கொண்டபின் ஹாத்திமையும் அவனையுமழை
த்து தங்கள் வீட்டுக்கு கொண்டுபோனார்கள் பின்பு அந்தபரி
யானவனை தேவுகள்கேட்கிறார்கள்இந்தமனிதனை இவ்விடத்துக்குஎ
ங்கிருந்து கொண்டு வந்தாய் எங்கேகொண்டு போகிறாயென்று
கேழ்க்க அப்போதந்த பரிஜாதியானவன் சொன்னான் இந்தமனிதன்
எமன் தேசத்திலுள்ளவன் எங்களுடைய ஷம்ஷ் பாத்துஷாவுக்கு
மிகுந்த சினேகிதனானபடியால் அவரை நீங்கள் யாதொரு இடஞ்சல்
செய்யாமலும் வருத்தம் வராமலும் நீங்களிருக்கவேண்டியது அ
வருக்கு ஒரு குற்றம்வரும்படியாகச்செய்வீர்களாகில் உங்கள்பேரில்
பெரியதப்பிதம்வரும் நீங்கள் வருத்தப்படும்படியாக நேரிடுமென்று
சொன்னவுடனே தேவுகள் சொல்லுகிறார்கள் உங்களுடையபாத்து
ஷாஷம்ஷ் என்பவருடையபேர் இல்லாமல் வெகு நாளாகயிருக்கஇ
ப்போதெங்கேயிருந்து வந்திருக்கிறா ரென்றுஞ்சொல்ல அந்த பரிஜா
தியானவன் நடந்த சரித்திரமெல்லாந் தெரியச்சொன்னான் அப்போ
து தேவுகளுடைய சர்தார் தலையை கீழேபோட்டுக்கொண்டு கொஞ்
சநேரம்பொறுத்து தலையை யெடுத்துப்பார்த்து அந்த தேவுகளுக்கு
சொல்லுகின்றான்.

இந்த மனிதனையும் பரியானவனையும் இன்ன (நார்) என்ற
புதாரில் கொண்டு போய் வையுங்கள் இவர்களை இன்றிரவில்
நான் சாப்பிடுகிறேனென்றுசொல்ல அதுபோல் கொண்டுபோய் கை
தில் வைத்தார்கள் முன்னால் இவர்களை மரத்தின்கீழ்விட்டுப் போ
ன பரிஜாதிகள் தங்களுடைய பசிக்காக இரைதேடிப் போனவர்க
ளெல்லபேருமாக வந்து அந்தமரத்தினருகில் பார்க்கும்போது தேவு
களுடைய பிணங்கள் (உ-ந) கிடக்கின்றதுஹாத்திமையும்அந்தப்பரி
யானவனையும் காணாமல் எல்லாப்பரிகளு மிகுந்ததுக்கத்துடனேவிச
னப்பட்டுதங்களில்தானேபேசிக்கொண்டார்கள் இந்த தேவுகளிறந்து
கிடக்கின்றது எந்நாட்டைசேர்ந்ததோயிதுகளையார்கொண்டார்க



ளோ ஹாத்திமையும் பரியானவனையும் யார்கொண்டுபோனார்களோ
இன்னம் அவர் ஏறிவந்த சிம்மாசனத்தையெடுத்துக்கொண்டு போ
னவர்கள் எத்தனையோ தேவுகள் வந்தாப்போ லிருக்கின்றது அப்ப
டி யிவர்கள் மனவியாகூலப் பட்டுக்கொண் டிருக்கின்ற வேளையில்
அவ்விடத்திலிறந்துகிடக்கின்றதேவுகளைப்பார்த்தால் மிகுதமாககாய
ப்பட்டுக் கிடந்தார்கள் அருகில்போய் பார்க்கும்போது அதிலொ
ரு தேவானது மெள்ள கண்திறந்தது உடனே அவர்கள் அதின்
வாயில் கொஞ்சம் தண்ணீர் விட உஷாராகி எழுந்து உட்கார்ந்தது
அப்போதவர்கள்நீயார் எவ்விடத்தி லுள்ளவனென்றுகேழ்க்க அத்
தேவுசொன்னது நானவன்(முகறுகஸ்)வுடையதேவுகளிலுள்ளவனா
கயிருப்பேன் இன்னமுமெங்கள்கூட்டமானதேவுகள் ஒருமனிதனையும்
ஒருபரியானவனையும்பிடித்துக்கொண்டுமுகறுகஸ் என்பவனிடமாக
க்கொண்டு போ யிருக்கின்றார்கள் இம்மொழியைபரிஜாதிகள் கேட்
டு உடனே அந்ததேவைப்பிடித்து பின்கட்டுமாகட்டிதங்கள்சீமை
க்குகொண்டுபோய் தங்களுடையபாத்துஷாவின்சமுகத்தில்பிரியாது
செய்தார்கள் அப்போதுபாத்துஷா வானவர் அவர்களுடையபிரியாதை
கேள்விப்பட்டு யாரோயிவர்களை ஜுலும்செய்தாப்போ லிருக்கிறதெ
ன்றெண்ணி நீங்கள்எமன் தேசத்தானைகொண்டுபோனீர்களே அவ
ரெங்கே யென்றுகேழ்க்க அப்போதந்த பரிஜாதிகள்சொல்லுகிறது
மிகுந்த வணக்கத்துடனேகைகட்டிக்கொண்டுநின்று ஆதாபுதஸ்லிமா
த்துசெய்து சொல்லுகிறது எவ்விதமெனில் ஓ, எங்களுடையபாத்து
ஷாவே ஏழைகளை இரட்சிக்கும்படியான இரட்சகனே தங்களுடைய
உத்தரவுபோல் இரவும்பகலுமாக ஆகாசத்தில் மூன்றுநா ளாகப்பறந்
தோம் அப்போதெங்களுக்கு மிகுதமான இளைப்பும்பசிதாகமும்கொடு
ரமாக எங்களை வாதித்தது நாங்கள் அவ்வாதனையைப் பொறுக்கக்கூ
டாமையால் அவரை ஒரு மரத்தின்கீழே உட்காரவைத்துகூட ஒருப
ரியானவனையும் காவலாக வைத்துவிட்டு எங்களுடைய பசிக்காக
வேண்டிய பிரயத்தினம் செய்யப்போனோம் அவ்விடத்தி லுள்ள
கனிகாய்களைப் பறித்துபொசித்து பின்னொருநாழிகைக்குப்பின்வந்து
பார்த்தால் அவர்களைக்காணவில்லை இச்சங்கதிகளைவிசாரிக்கலாமென்
றாலும் ஒருவரும் காணப்படவில்லை அப்படிக்கிருக்கையில் அவ்வி
டத்தில்காயப்பட்டுகிடக்கிறதேவுகளருகில்போய்ப்பார்த்தால்ஒன்றுக்கு
கொஞ்ச முயிரிருப்பதுபோல்தோணவந்தது கொஞ்சந்தண்ணீர்கொ
ண்டு அதின்வாயில் மெள்ளவிட்டோம் உடனே கண்ணைமுழித்துப்

பார்த்தெழுந்திருந்தான் அப்போதவனைகேழ்க்க எமன்மனிதனையும்ப
ரியானவனையும் தேவுகள் பிடித்துக்கொண்டு அவர்கள் பாத்துஷாவி
டமாகப்போனார்களென்றுசொல்ல உடனே அவனைப்பிடித்துக்கட்
டித் தங்கள் சமூகத்தில் கொண்டுவந் திருக்கின்றோம் அப்போது
பாத்துஷா அவனை என்முன்னில் கொண்டுவாருங்களென்றுசொல்
ல அதுபோல் கொண்டுவந்து விட அந்த தேவைப்பார்த்து ஷம்ஷ்
பாத்துஷா கேழ்க்கின்றார்.

ஓ, தேவே நீ யாரைச் சேர்ந்தவனாயிருக்கும் அவ்விடத்தில் நடந்
தசங்கதிகள் என்னவென்று கேழ்க்க அப்போதந்த தேவானது வாய்
புதைத்து கைகட்டிக்கொண்டு மிகுந்தவணக்கத்துடனே சலாம்செய்
து சொல்லுகின்றது பாத்துஷாவே நானாகப்பட்டவன் முகறுநஸ் உ
டைய தேவுகளில் சேர்ந்தவனாக இருக்குமென்றுசொல்ல அப்போத
ந்த ஷம்ஷ் பாத்துஷாவானவர் சொல்லுகின்றார் உங்களுடைய தலை
வனாகிய முகறுநஸ் என்பவன் இன்னம் உயிரோடே யிருக்கின்றானா
அவன் நானிருப்பதை மறந்துவிட்டானாவென்றுசொல்ல அப்போது அ
ந்ததேவானது சொல்லுகின்றது ஓ, பாத்துஷாவே தாங்கள் வெகுநா
ளாக உங்கள் சீமையிலில்லாமல் கைபாகி போயிருந்தீர்களே இப்போ
இந்த பரிஜாதிகளுடன் இருப்பதைப்பார்த்து எனக்கு மிகுந்தசந்தோ
ஷ மடைந்திருக்கின்றேனென்றுஞ் சொல்ல நல்லது என்னைச்
சேர்ந்த மனிதனும் அவரோடு சிறிது பரிஜாதிகளையும் ஊரிட
த்துக்கு அனுப்பிவெளியில் அவர்களைத் தொந்தரவுசெய்து கைதி
யில் வைத்திருப்பது அவனுக்குத்தகுமா என்பேர் கேட்டவுடனே அ
வர்களை அவன் அனுப்பாமல் பிடித்து கைதியில் வைத்திருக்கிறான் அ
து நிஜந்தானாவென்றுகேழ்க்கஅந்ததேவானது நிஜந்தானென்றுசொல்
ல ஷம்ஷ் பாத்துஷா மிகுந்த ஆக்ரோஷத்துடனே தன்னுடை
ய மந்திரி பிரதானிகளை அழைத்து உத்தரவு செய்தார் எவ்வி
தமெனில் நம்முடைய அச்சமில்லாமல் முகறுநஸ் என்பவன்
நமது மனிதர்களைப் பிடித்துவைத்து கைதிசெய்திருப்பதால் அவ
னுக்குதகுந்த தெண்டனைசெய்து வரவேண்டியது ஆகையால் நம்மு
டைய பரிக்கூட்டத்தை சுருக்கில்தயார்செய்துஅவர்களுக்குவேண்டி
ய ஆகாரங்களும் ஆயுதங்களுங்கொண்டு (௩௰௫) படைகளை என்மு
ன்னால் கொண்டுவரும்படிக்கு உத்தரவுசெய்ய அதுபோல் ஜாக்கிர
தைசெய்து படைகளைக் கொண்டுவந்து நிறுத்தினவுடனே ஷம்ஷ்பா



த்துஷாவும் அவர் படைத்தலைவர்களையும் சேர்த்துக்கொண்டு அந்த
தேவையும் கூடகூட்டிக்கொண்டு பறந்து மூன்றுநாளில் அந்த முக
றுநஸ் என்பவனுடைய சீமையின் எல்லையில்போய் தம்முடைய ப
டைகளும் கூடாரமடித்து இறங்கி கொஞ்சநேரம் இளைப்பாறி பசிதா
கத்தை தீர்த்துக்கொண்டு அந்த தேவையழைத்துக்கேட்டார் உன்னு
டைய எஜமானனவன் முகறுநஸ்என்பவனெங்கே யிருப்பானென்று
கேழ்க்க அப்போ தவன்சொன்னான் பாத்துஷாவே அவன்தன்னரண்
மனையில் கொஞ்சநேர மிருப்பான் மற்ற வேளையெல்லாம் காடுகளில்
வேட்டையாடிக்கொண்டு திரிகிறவழக்கமானபடியால் அவனை கா
டுகளில்போய் பார்த்தால் அகப்படுவானென்றுசொல்ல அதுபோல்
தம்முடைய பரிஜாதிகளில் சிலதுபேர்களைத் தயார்செய்து அவனெ
வ்விடமிருக்கிறானென்று சீக்கிரத்தில்போய் உளவுபார்த்துக்கொண்
டுவரும்படி காடுவனாந்திரங்களிலும்நாடுநகரங்களிலும்உருமாறிக்கொ
ண்டுபோய் பார்த்து வரும்படிக் குத்தரவுசெய்ய அதுபோல் நான்கு
திக்கிலு மோடிப்பார்க்கிறபோது ஒரு காட்டில் தன்னுடையபடைக
ளுடனே தானும் நின்றுக்கொண்டு வேட்டையாடுகிறதைப் பார்த்தொ
ரு பரிஜாதியானவன் ஷம்ஷ்பாத்துஷாவுக்குவந்துதெரிவிக்க உடனே
படைத்தலைவர்களுக்குச் சொன்னார் தன்னுடைய படைகளை யெல்லா
ஞ் சேர்த்துக்கொண்டு அந்த முகறுநஸ் என்பவனைப்போய் சுற்றி வ
ளைத்துக்கொண்டு பிடித்து என்னிடமாகக் கொண்டுவாருங்களென்று
உத்தரவு செய்ய அதுபோல் தங்கள் தங்கள் படைகளை தயார் செ
ய்துகொண்டு பாத்துஷாவுக்கு முஜறாசெய்து உத்தரவு பெற்று ப
டைகளை யழைத்துக்கொண்டு அவன் வேட்டையாடுகிற இடத்தில்
போய் சுற்றிவளைத்துக்கொண்டு அவனைப் பிடிக்கப்போனார்கள் அப்
போது முகறுநஸ் என்பவனுடைய படைக்கூட்டமாகிய தேவுகள்ப
ரிஜாதிகளுடனே போர்செய்தார்கள் பரிஜாதிகள் படைமிகுதமாகயி
ருந்தபடியால் தேவுகள் போர்செய்யக்கூடாமையால் அவர்களில்வெ
குபேர் காயப்பட்டார் வெகுபேர் இறந்தும்போனார்கள் வெகுபேர் ஓ
டிப்போனார்கள் மற்றவர்களையும் முகறுநஸ் என்பவனையும் பிடித்து
க்கட்டிக் கொண்டுவந்து ஷம்ஷ் பாத்துஷாவுக்கு முன்பாகக்கொண்
டுவந்துநிறுத்த அவனைப்பார்த்துசொல்லுகின்றார் அடே துஷ்டத்தன
மானகாபுருஷனவனே நீ என்னைமறந்துவிட்டாயா ஷம்ஷ்பாத்துஷா இ
துவரையில் உயிராகயிருக்கிறாரென்றுந் தெரியவில்லையா என்னுடை
யபயமும் அச்சமுமில்லாமலென்னைச் சேர்ந்தவர்கள்வந்தால் அவர்

களைப்பிடித்துகைதுசெய்வது அவர்தெரிவாராகில் நம்மை உயிரோடே வைக்கமாட்டாரென்றுநீ அறியாமற்போய்விட்டாயா ஆனால் அவர்களை இப்போது என்னிடமாகசீக்கிரத்தில்கொண்டுவந்து ஹாஜரப்படுத்தவேண்டுமென்றுசொல்ல அப்போது முகருஸ்என்னும்தேவானதுசொல்லுகின்றது,

ஓ, பாத்துஷாவே நான் தேவ்வானபடியால் அந்தமனிதனைக் கண்டவுடனே பிடித்துத் தின்று விட்டேனென்றுசொல்ல ஷம்ஷ் பாத்துஷா மிகுந்த மனவருத்தமடைந்து புத்திகள்தடுமாறி தலையைக்கீழே போட்டுக்கொண்டு எண்ணுதெல்லா மெண்ணி மிகுந்த ஆங்காரத்துடனே தலையையுயர்த்தி அவனைப் பார்த்து சொல்லுகின்றார் ஓ, மூதேவியானசெயல்கெட்ட துஷ்மனே நீ என்னவேலைசெய்தாய் நீ சுலைமான் அலைஹிஸ்ஸலாமுடைய ஆணைசத்தியங்களையு மனதிலெண்ணாமல் மனிதர்களை நீங்கள் தின்காமலும் தொந்தரவு செய்யக்கூடாதென்று உங்களிடமாக சத்தியம் வாங்கிக்கொண்டிருக்க அந்த சத்தியத்தையும் தள்ளி இவ்விதமான துர்நடக்கைச் செய்திருக்கின்றாயல்லது நீங்கள் கவுல்கரார் செய்யவில்லையா மனிதர்களைத்தொந்தரவு செய்கிறதில்லை அவர்களைத்தின்றதுமில்லையென்று அப்போதந்தேவானது சொல்லுகின்றது நீங்கள் சொன்னது சரிதான் அவர்கள் உயிராகயிருந்து ராஜாங்கம்செலுத்திக்கொண்டிருக்கின்ற நாளையில் அவர்களுத்தரவுபோல் நாங்கள் நடந்துகொண்டிருந்தோம் அவர்களிறந்துபோனபின்பு அவருத்தரவும் அப்பொழுதே போய்விட்டதென்று சொன்னவுடனே ஷம்ஷ் பாத்துஷாவென்பவருக்கு ஒரு நடுக்கலுண்டாகி தேகமெல்லாம்வேர்வைசேர்ந்து மனந்தடுமாறிச் சொல்லுகின்றார் எவ்விதமெனில் அடே துஷ்மனான மூதேவியே என்முன்னால் கொஞ்சமாவது அச்சமும் பயமுமில்லாமல் சுலைமான் அலைஹிஸ்ஸலா மவர்களிருக்கும்போதில் அந்த உத்தரவிருந்தது இப்போது அவர்களுடைய உத்தரவில்லையென்று நீ சொன்னாயே நல்லது சுலைமான் அலைஹிஸ்ஸலா மிறந்துபோனாரென்று உனக்கெவ்விதமாகத்தெரியும் இப்பவும் அவர்நாலாவது சமுத்திரத்தில் அவருடைய முகாமான கபூரிருக்கின்றது அந்தகபூரில் உயிராக ஆண்டவன்வைத்திருக்கின்றான் அவருடைய மொஹர் என்ற முத்திரைமோதிரம் அவருடை கபூரிடமாக யிருக்கின்றது அந்த மோதிரத்தை உன்னைப்போலொத்த சத்தியந் தப்பிய மூதேவிகள் ஜின்கள் பரிகள் தே



வுகளெடுத்துக் கொண்டு போகுமென்று அந்த மோதிரத்துக்கு காவலாக ஒரு வழுதலையாகிய சர்ப்பத்தை ஆண்டவன் வைத்திருக்கின்றான் அது உனக்குத்தெரிந்திருந்தும்நீவனென்முன்னால் இறந்ததுசுலைமான் அவர்கள் ஆதிகாலத்தில் அவருத்தரவிருந்தது இப்போதில்லையென்று நீ சொன்னாயல்லவா இப்பவும் அவருடைய அதிகார உத்தரவின்படிக்குநாங்கள்இரவும்பகலும் நடுநடுங்கிக்கொண்டிருக்கின்றோம் ஆகையால் அவருடைய உத்தரவைமீறி நீ நடந்தபடியால் உன்னை இந்த லோகத்திலில்லாமல் நெருப்பில்போட்டுசுட்டு சாம்பலாக்கிப்போடுவேனென்றுமிகுந்தஆங்காரத்துடனே சொல்லுகின்றார் ஓ, பரிஜாதிகளே நீங்கள் வெகுசீக்கிரமாக இவனையுமிவனுடைய ஜனங்களையும் நெருப்பில் போட்டு எரிக்கவேண்டும் இந்த வனாந்திரத்திலுள்ள விறகுகளை யெல்லாம் கொண்டுவந்து ஒரு பெரும்பள்ளம் வெட்டி அதில் கொண்டுவந்து சேருங்களென்று உத்தரவுசெய்ய அதுபோல் பெரும்பள்ளம்வெட்டி அதில் விறகுகளைக் கொண்டுவந்து ஒரு மலையைப்போல் நிறைய நிரப்பிவிட்டார்கள் அந்த தேவுகளும் ராஜனான முகருஸ் என்பவனப்போது இந்த முகாந்திரங்களைப் பார்த்து இவனெவ்விதத்திலும் நம்மை யெரிக்காமல்விடான் ஆகையால் இப்போது எவ்விதத்தாலுமிவன் கையில்விட்டு தப்பிக்கொள்ள வேண்டியது பின்னால் பார்த்துக்கொள்ளலா மென்றெண்ணியிருக்கின்றபோதில் ஷம்ஷ் பாத்துஷாவென்பவர் முகருஸ் என்பவனைப்பார்த்து சொல்லுகின்றார் அடே ஆண்டவனுடைய பகைவனே நீ என்ன கொடுமையான வேலைசெய்தாய் அந்த மனிதனிடமாக வெனக்கு மிகுந்த இன்பமான தோஸ்தாகவுமிருப்பதால் இப்போது அவனையாவதொரு உயிர்ச்சேதமில்லாமலென்னிடமாகக்கொண்டுவந்து விடுவையாகில் உனக்கெனக்கு யாதொருகுற்றமில்லாமலிருக்கும் நீ யோசிக்கவேண்டாம் உன்னை பிராணவதைசெய்வேனென்றும் இவ்விதமான மொழியைக்கேட்டவுடனே சொல்லுகின்றான் நல்லது நீர் என்னை உயிர்வதை செய்வதில்லையென்றும் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்பேரில்சத்தியம்பண்ணிக்கொடுப்பீராகில் அந்த மனிதனையும் பரியானவனையும் தங்கள்சமுகத்தில்கொண்டுவந்து விடுவேனென்றுசொல்ல அப்போது ஷம்ஷ்பாத்துஷா வென்பவர் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்பேரால் சத்தியம் பண்ணிக் கொடுத்தார்.

உன்னையெப்போதும் மோசம்பண்ணமாட்டேன் நம்பிநடவும்.

யாதொரு கஸ்திஷமில்லாம லிருக்கலாமென்றும் அனேகவிதமா
க அவருக்குதேறுதலை சொன்னார் அப்போதவன் தங்களுடைய தே
வான ஒருவனைக்கூப்பிட்டு சொன்னான் இன்னமலைப்பொதும்பிலந்த
முனிதனையும் பரிபாலவனையும் கைதுசெய்திருக்கின்றது நீ சருக்
கில் அவர்களை இவ்விடம் கொண்டுவரவேண்டுமென்றுசொல்ல அம்
மொழியைக்கேட்டவுடனேசுட்டமாகஓடி ஹாத்திமையும்அந்தபரிபா
லவனையும் கொண்டுவந்து முன்னால்விட்டார்கள் ஷம்ஷ்பாத்துஷா
ஹாத்திமைகண்டவுடனே போனவுயிர்மீண்டுவந்தாப்போல் சந்தோ
ஷத்தையடைந்துசிம்மாசனத்தைவிட்டு கீழேயிறங்கி மாரோடணைத்
துக்கொண்டு தானுமவருமாக சிம்மாசனத்தின்பேரி லேறிக்கொண்டு
ஹாத்திமைபார்த்து சொல்லுகின்றார் நான் முன்னால் சொல்லியிருந்
தேனல்லவா அவ்வெளியில்தேவுகளின் கூட்டம் மிகுதமாகதான்தம்பி
ராஜாகயிருக்கின்றார்கள் உன்னை உயிரோடே விடமாட்டார்கள் என்
றசங்கதி இப்போது உங்களுக்குதெரியவந்ததாவென்றுசொல்ல ஹா
த்திம்சொல்லுகின்றார்எவ்விதத்திலும் எழுதியஎழுத்தைப்போல் மு
டியுமென்றும் எதுவந்தபோதிலும் ஆண்டவனால் வருவதென்று நாம்
எண்ணங்கொண்டு அவன்பேரில் நிச்சயப் பயித்திக்கொண்டு ஷுக்
கூர் செய்யவேண்டுமென்று சொல்ல ஷம்ஷ்பாத்துஷாவானவர் தங்
களுடையபரிஜாதிகளுக்கு உத்தரவுசெய்தார் இந்த கெட்டகாபறான
மூதேவியைநாம் விடக்கூடாது அவனைவிடுகிறது சரியல்ல இவனால்
மிகுந்தகெடுதலைகள் உண்டாகும் இவன் சுலைமானபியினுடையவாக்
கையும்உடன்படிக்கையும் தவறியிருக்கின்றானிவனைநாம் தனியாவில்
வைத்திருந்தால் நமக்குஎப்போதும் இடுக்கமும்தொந்தரவுஞ்செய்துக்
கொண்டிருப்பானாகையாலிவனை இந்த விறகுபோரில்கட்டிப்போட்டு
இவனைச்சேர்ந்தவர்களையும் கூடச்சேர்த்தெரித்துவிடும்படிக்கு உத்த
ரவுசெய்ய அப்போது அந்ததேவான மூகறுகல்லியென்பவன் அம்மொ
ழியைக்கேட்டு சொல்லுகின்றான் ஓபரிகளின்பாத்துஷாவானஷம்ஷ்
யென்பவரே நீர் சுலையிமான் அலேகிஸ்ஸலாமவர்கள் பேரில் சத்திய
ஞ்செய்து உன்னைநானொருகுற்றமும்உயிர்வதையுஞ்செய்வதில்லையெ
ன்றுசொல்லிஇப்போது நீர்சத்தியம்தப்பிஇவ்விதமாக என்னை உயிர்
வதை செய்வது தமக்குத்தகுமா வென்றுசொல்ல அப்போதவனுக்கு
சொன்னார்நீ எப்போது சுலைமானபியவர்களைமதியாமல் அவர்களுத்த
ரவு மீறி ஆண்டவனுக்கு பயப்படாமலிருந்தாய் நீ சத்தியந்தப்பினப
டியால் இனி நான்உனக்குசொன்ன மொழிதவறினதால்வெகு ஆச்ச



ரியமில்லை என்னகுற்றமுண்டுநீகெட்ட மூதேவிஉன்னைக்கொல்லாம
ல் நான்போவேனானால் ஆண்டவனுக்கும் சுலைமான் அலேகிஸ்ஸலாத்
துக்கும் பாவவாளியாகி விடுவேனென்றுசொல்லிஉடனே அவனை
யுமவனைச்சேர்ந்ததேவுகளையும்பிடித்துப்பிடித்துக்கட்டி அந்தவிறகில்
போட்டு சுட்டுச்சாம்பலாக்கிவிட்டார்பின்புதம்முடையதம்பியைஅந்
தசீமைக்கு அதிகாரியாகப்பட்டம்கட்டிவைத்துவேண்டிய தாக்கீதுக
ள்செய்து ஹாத்திமென்பவரைப்பார்த்துக்கேழ்க்கின்றார்இப்போதுஉங்
களுடைய எண்ணம் மெவ்விதமாக விருக்கின்றதென்று கேழ்க்க அ
ப்போதுசொல்லுகின்றார்முன்னால்தங்களிடமாகத்தெரிவித்திருந்தே
ன் அதுவேயல்லாமல்நான் அடிக்கடிசொல்வதினால் ஒன்றும்பிரயோ
சனமில்லை எவ்விதமானபோதிலும் நான் அந்தநிட்டுக்கு போக வே
ண்டும் அந்த முத்தைகொண்டுவரவேணுமென்று ஒரேபிடிவாதமா
கச்சொல்லுகின்றதை ஷம்ஷ் பாத்துஷாவானவர் இவ்விதமான
கோலங்களையெல்லாமறிந்துபயமும்அச்சமுமில்லாமல்போகவேண்
டுமென்றுசொல்வதால்நாம்தடுத்தாயாதொன்றுஞ்சொல்லக்கூடாதெ
ன்றுயோசனைசெய்து தம்முடையபரிஜாதிகளையழைத்து சொல்லுகி
ன்றார் எவ்விதமெனில்மிகுந்தவல்லமைசாலிகளாகவும்வாலிபருள்ள
வராகவுநான்குபேர் இவரோடுபோகவேண்டுமென்றும் வெளியிலியா
தொருகுற்றம்வராமல்சேர்க்கவேண்டுமென்றுசொல்லஅதுபோல்வா
லிபமானநான்குவல்லமைசாலிகள்எழுந்துநின்றார்கள்தாங்கள்சொல்
லியபணிவிடைக்காகநாங்கள்தயாராகயிருக்கின்றோம்இந்நான்குபேர்
களையும்பார்த்துமிகுந்தசந்தோஷமாகிஹாத்திமென்பவரை ஒரு (தகதீ
து) என்ற சிம்மாசனத்திலவைத்துக்கொண்டுமேலேபார்க்க எழும்பி
இரவும்பகலுமாகப்பறந்துபோகின்றார்கள்மிகுந்தபசிதாகமெடுத்தால்
நல்ல பதார்த்தமுள்ள இடமாக இறங்கி அவ்விடத்திலுள்ளகனிவர்க்
கங்களைப் பறித்துபசிதாகம் தீர்த்துக்கொண்டுஇவ்விதமாகஇரவும்பகலு
மாக (யிரு) நாளாகப்பறந்து போகின்றார்கள்(பதினெறாவது) நாள்ஒரு
மலைகாணவந்தது அவ்விடத்திலிறங்கிப்பார்த்தால்(ஆஜாதயெதோமா
ன்) என்ற ஒருராஜகுமாரன் மிகுந்தஅழகுவடிவுள்ளவன் அவ்விடத்
திலுள்ள பீர்ஜக்கு உடையமகளின்பேரில் ஆசைகொண்டுதன்னுடை
ய சுத்துமாறி பெருஞ்சத்தமாகச் சத்தம்போட்டு நிலத்திலனைந்து
அரைந்துக்கொண்டு புரண்டு அழுதுகொண் டிருக்கின்றான் அந்த
சத்தம்வருகின்றதை ஹாத்திமானவர் கேட்டு மிகுந்த மனவருத்தம
டைந்து அந்த சத்தம்வருகின்றவிடந்தேடிப்பார்க்கப்போய்க்கொண்டு போய்

அவனைக்கண்டு கேழ்க்கின்றார் ஓ வாலிபனே நீ ஒண்டியாக இம்ம
லையில் இவ்விதமான துக்கத்தோடு ஏன் அழுகின்றாய் உனக் கிவ்வி
தமான துக்கம்வரும்படியாகச்செய்தவர் ஆர் அதையெனக்குத்தெரிய
ச்சொல்லவேண்டுமென்றுகேழ்க்க அந்த வாலிபன் அழுகையைவிட்
டு கண்ணைத்திறந்து பார்த்தான் ஒருமனிதன்மிகுந்தஅழகுவடிவுள்ள
வனாக நிற்கக்கண்டு கேழ்க்கின்றான் ஓ மனிதர்குலத்தி லுள்ளவனே
நீ இந்த இடத்துக்குஎவ்விதமாக என்ன காரியத்தைக்குறித்துநா
டிவந்தாயென்றுகேழ்க்க . அப்போது ஹாத்திமானவர்சொல்லுகின்
றார் நான் ஒரு கோழிமுட்டைப்பிரமாணமுள்ளமுத்தை தேடிக்கொ
ண்டு வந்திருக்கின்றேன் அதைப்போலொத்த முத்தானது இக்கிட்
டிலுள்ளபாத்துஷா பர்ஜக்கு என்பவனிடமாக இருக்குமென்று கே
ள்விப்பட்டுவந்தேனென்று சொன்னமொழியைக்கேட்டுகுஞ்சிரிப்பா
கச்சிரித்துசொல்லுகின்றான் ஓமனிதஜாதியே அந்தமுத்தானது உன்
கையில் அகப்படுவது வெகு அரிதாகவிருக்கும் எவ்விதமானால் அ
வ்விடத்திலுள்ள பாத்துஷாவானவன் சிறிதுசவால்கள் செய்கின்றா
ன் யாரைக்கேட்டபோதிலும்அதற்கு ஒருவரும்ஜவாபுகொடுப்பதில்
லை ஆனால் நாங்கள் பரிஜாதியாகவிருந்து அதற்குஜவாபுகொடுக்கக்கூ
டாமையாகவிருக்கின்றது நீ மனிதசென்மமாகவிருக்கின்றாய் எவ்வி
தமாக அதற்கு ஜவாபுகொடுப்பாய் அந்த முத்தின்பிறவியின் வர
லாறு எவ்விதமாக அறிவாய் அல்லது நீ சொல்வது எனக்கு
தெரியவந்தது ஆனால் என்னுடையஆண்டவன் எனக்கு எவ்விதத்தி
லும் உதவிசெய்வானென்றும் சொல்லிஅவனைக்கேழ்க்கின்றார் நீஇவ்
விதமாக இந்தவனாந்திரமானகாட்டில்ஒண்டியாகக்கிடந்துஅழுகின்ற
விதமென்னவென்றுகேழ்க்க அப்போது அந்தப்பரிசாதியான ராஜகு
மாரன் கேட்டு மிகுந்ததுக்கத்துடனே சத்தம்போட்டு அழுதுசொல்
லுகின்றான் ஓ என்னுடைய தோழனே முத்திருக்கின்ற இவு
டையபாத்துஷாவின் குமாரத்திபேரில் நான் இன்பங்கொண்டிருக்கி
றேன் - என்னுடையபேரானது(ஷாஜாதாமெஹ்றுவர்) என்றுயிருக்
கும் என்னுடைய தகப்பனானவர் (தோமான்) என்றதேசத்தின் பாத்
துஷா அவர்பேர் (மெஹறுவர்) பாத்துஷாவாக இருக்கும் ஒரு நாள்
நான்எங்களுடையபாத்துஷாவின்சமூகத்தில்மஜலிசிலிருக்கின்றபோ
தில் அந்தபர்ஜக்கென்ற இட்டின் பாத்துஷாவின்குமாரத்தியுடையஅ
ழகு சவுந்தரியத்தைக்குறித்து ஒருவன்பேசிக்கொண்டிருந்தான் அப
போது அந்தப் பெண்பேரில் இச்சைகொண்டு மனமானதுகலங்கின



வ்விதத்திலும் அந்தப்பெண்ணைநாம் கொள்ளவேண்டுமென்றநாட்டங்
கொண்டு நின்றது நின்றாப்போல்ஒருவருக்குஞ்சொல்லாமல் அவ்விட
த்தைவிட்டு(ஜஜீறயெபர்ஜக்கு)என்றதீவில்வந்து அந்தப்பெண்ணினுடை
யதகப்பனிடமாகச் சொல்லியனுப்பினேன் உடனேதன்னுடைய ச
மூகத்துக்குஅழைப்பித்து என்னைமரியாதியாகஉட்காரவைத்து அ
ந்தமுத்தையழைப்பித்து என்முன்னால் வைத்து இந்தமுத்தானதுஎந்
தசமுத்திரத்திலுள்ளது இதினுடைய பிறவி யெவ்விதமாகயிருக்கு
மெப்படி கைவசமாகினது இதினுடையரகசியமெனக்குந்தெரியாது
எங்கள் பெரியோர்களுக்கும் இதினுடையசங்கதியின்னதென்று தெ
ரியாது ஆகையால் இதினுடைய சங்கதியெனக்குத்தெரியப்படுத்தினா
ல் என்னுடைய பெண்ணையும்இந்த முத்தையுங்கொடுப்பேனென்று
சொல்ல அப்போது அந்தப்பெண்ணுமென்னைப்பார்க்கவேண்டுமென்
று என்முன்பாக வந்து கொஞ்சநேரமறைவாகநின்றுபார்த்துக்கொண்டு
நிற்கநானும் அந்தப்பெண்ணை கண்ணால்பார்த்து முன்னால் இந்தபெ
ண்ணின் அழகைக்[illegible]டைப்பார்க்கிலும் நூறுப
ங்கு அதிகமாயிருக்கின்றது அந்தப்பெண்ணை நான் பார்க்க அவள்
என்னைப்பார்த்துக் கொண்டு நிற்கின்றவேளையில் அந்தமுத்தின்பி
றவியும் அதினிடமும் கைவசப்பட்டதும் எனக்கு யாதொன்று
ம் தெரியாமலிருக்க அப்போதவர் என்னைபின்னையும் அதினுடைய
சங்கதி உனக்குத்தெரியுமாவென்றுகேழக்க அதற்குநான்மறுமொழி
சொல்லாமலிருக்க இவனுக்கு இதின் வரலாறு யாதொன்றும் தெரி
யாதென்று அவ்விடம்விட்டு என்னைநீக்கிவிட்டார்கள் என்றால் ஒன்
றும் கூடாமையால் இந்தமலையில் வந்துவிழுந்து வெட்கமடைந்து
போய் என்னுடைய தேசத்துக்குப்போகாமல் இவ்விடத்தில் இரவும்
பகலாக அந்தப்பெண்ணின்மேல்இச்சைகொண்டு அன்னமாகாரமா
தொன்றின்மேலு மிச்சையில்லாமல் அழுதுகொண்டு இம்மலையிலி
ருக்கின்றேன் என்னுடைய உயிரும் போகவில்லை யென்னுயிருக்கு
மேலான அந்தப்பெண்ணினுடைய முகத்தையும் பார்க்கலானாலுங்கூ
டவில்லையென்றுதன்னுடையவரலாறைச்சொன்னவுடனே ஹாத்திமெ
ன்பவர் அவனுக்குமிகுந்த தைரியங்களான மொழிகளைச்சொல்லிதேறு
தல்படுத்தி ஓ பாத்துஷாவின் குமாரனே நீ யாதொன்றுக்கும் அஞ்
சவேண்டாம் ஆண்டவன் கிருபையால் அந்தமுத்தை எவ்விதத்திலு
ம் நானவரிடமாகவாங்குவேன் அந்தப் பெண்ணை உனக்கு விவாக
ஞ்செய்து கொடுப்பேன் நீ சந்தோஷமாக என்னுடனே அந்த முத்தினு

டையபிறப்பினிடமும் அதின்வரலாறுகள்முழுதும்னக்குத்தெரியும்
ஆகையால்உன்முன்னால் அவரிடமாக அந்தமுத்தின்வரலாற்றைவிவரி
தமாகத்தெரிவிக்கிறேன் பாருமென்றசொல்லப் பரிஜாதியானபாத்ஷு
ஷாவின்குமாரன்கேட்டுசொல்லுகிறான்நீர்சொல்வதுஎன்புத்திக்கு ச
ந்தேகமாகத்தோணுகின்றதென்றுசொன்னவுடனே ஹாத்திம் அதற்
கு ஜவாபு எவ்விதமாகச்சொன்னாரானால் அந்த முத்தின் வரலாறு
உனக்குபின்னால்தெரியவரும்முன்னால் அந்தஇடமானதுமனிதர்களா
ல்நிறைந்துஅவர்கள் வசமாகவெகுபெருமைபெற்றநிட்டாகயிருந்தது
அதினாலுனக்குவேண்டியதென்ன இப்போது என்னோடேவாவென்று
சொல்லஅப்போதுஅப்பரியானபாத்ஷுஷாவின்குமாரன்ஹாத்திமான
வர் சொன்னமொழியைக்கேட்டு மகிழ்ந்து மெய்யென்றுநம்பிஅவ்வி
டம்விட் டெழுந்து நிற்க அப்போது ஹாத்திமானவர் தன்னோடுவ
ந்த நான்கு பரிஜாதிகளைக்கேழ்க்கின்றார் எவ்விதமெனில்நீங்கள் எங்
களிருவரையும் இந்த சிம்மாசனத்தில் வைத்துக்கொண்டுபறக்கஉங்
களுக்குவல்லமையுண்டா வென்றுகேழ்க்க அப்போதுஅந்தப்பரிகள்
சொல்லுகிறது உங்களைப்போல் நாலுபேர் [illegible] பதி
னிருந்தபோதிலும் நாங்கள் எடுத்துக்கொண்டு பறந்து போகவல்ல
மையுண்டென்றுசொல்ல ஹாத்திமென்பவரும்அந்தபரிஜாதிபாத்ஷுஷா
வின் மகனும்அந்த தகத்திலுட்கார்ந்தார்கள்.

அப்போதந்த நான்கு பரிகள் அவர்களை யெடுத்துக் கொண்
டு பறந்து அந்த வனாந்திரமான திட்டை பார்த்து போகின்ற
பாதையில் (மஹாகால்) என்றதேவுடைய தோட்டமிருந்தது அ
த்தோட்டத்தின் வழியாக அவர்கள் பறந்து போகின்றபோது
அத்தோட்டத்துக்குளஜமானனமஹாகாலென்ற தேவானதுஅத்தோ
ட்டத்தில் உலாத்திக்கொண்டிருக்கின்றான் அப்போதிவர்கள்மேலே
பறந்து போகின்றதைப்பார்த்து தன்னுடைய தேவுகளுக்கு உத்தரவு
செய்தான் நீங்கள் சீக்கிரத்தில் மேலே பறந்துபோகின்ற பரிஜாதிக
ளையுமந்த தகத்திலிருக்கப் பட்டவர்களையும் பிடித்து என்னிடமாகக்
கொண்டு வாருங்களென்று உத்தரவுசெய்ய உடனேபறந்து அந்தத
கத்தையும் அந்த பரிஜாதிகளையும் பிடித்துக் கொண்டுவந்து மஹாகா
ல்தேவின்முன்பாக விட்டார்கள் அப்போதவர்களைப்பார்த்துசொல்லு
கின்றான் நீங்கள் மெய்யாகச்சொல்லுங்கள் இந்த மனிதனை எங்கே
கொண்டுபோகின்றீர்கள் எவ்விடமிருந்து வருகின்றீர்களென்றுகே



ழ்க்க அப்போதவர்கள் சொன்னார் பரிஜாதிகளாகிய கூட்டத்து
க்கு பாத்ஷுஷாவான ஷம்ஷ் ஷாவின்சீமையி லிருந்து வருகின்றோம
அம்மொழியைக் கேட்டுசொல்லுகின்றான் வெகுநாளாய் ஷம்ஷ்பாத்
ஷுஷா தம்முடைய தேசத்திலில்லாமல் கைபாகப்போய் அவருடைய
சீமை முழுதும் பாம்புகளால் நிறைந்துபோ யிருக்கின்றது நம
க்கு தெரியுமே இப்போது எவ்விதமாக அவர் வந்திருக்கின்றா
ரென்றுகேழ்க்க அப்போது பரிஜாதிகள் சொன்னார் நீங்கள் சொ
ன்னது மெய்யாக யிருக்கின்றது ஆனாலிப்போது இந்த மனித
னுடைய துவாவின் பறக்கத்தால் முன்னிருந்த நேரம்போல் அ
வரும் நாங்களு மெங்கள் கூட்டங்களும் ஆகிவிட்டோமென்றமொ
ழியைக்கேட்டு நல்லது இப்போது நீங்களெவ்விடம் போகின்றீர்கள்
என்றுகேழ்க்க அவர்கள் சொல்லுகின்றார் நாங்கள் பர்ஜக்கு என்னு
ம் வனாந்திரமான திட்டுக்கு போகின்றோமென்றுசொல்ல இந்த பரி
ஜாதியானவன்யாரென்றுகேட்டான் அப்போது மெஹறூவர்என்பவன்
தேவுக்கு ஜவாபு சொல்லுகின்றான் ஓ, தேவே நீ என்னை அறியமா
ட்டாயா என்தகப்பன் மெஹறூவர் பாத்ஷுஷா அவருடைய குமாரன
க்கிருக்குமென்றுசொல்ல அந்த தேவு சொல்லுகின்றது ஓ, பரிஜாதி
யே உனக்கு இந்த மனிதனைக்கொண்டு என்னவேலை யிருக்கின்றது
உன் வெளிவையும்பார்த்துக் கொண்டுபோகாமல் நீ இவனுடையகூட
மிருப்பது உனக்கென்ன பெருமையுண்டு ஹஜரத்து சுலேமான் அலே
ஹிஸ்ஸலாம் பரியினுடையஜாதியிலுள்ளவா அப்படிக்குமேன்மைப
ற்றஜாதி நீங்களாகவிருக்கும் இந்த மனிதனுடைய சாவாசம் உன
க்குவேண்டியதில்லை யென்றுசொல்லி அந்த சிம்மாசனத்திலிருந்து
ஹாத்திமை யிழுத்திழுத்து தன்னிடமாக வைத்துக்கொண்டான் அ
ப்போது மெஹறூவர் என்பவன் தேவைப்பார்த்துசொல்லுகின்றான்
ஓ, தேவே நீ ஹஜரத்து சுலேமான் அலேஹிஸ்ஸலாம் அவர்களிடத்
தில் (கவுல்கரார்) என்றவாக்குத்தத்துவம் எவ்விதமாகச்செய்திருக்கி
ன்றாய் அதை நீ மறந்துவிட்டாயாஇப்போதுஉன்னுடையவல்லமைத்
தனத்தைக்காட்டி வீணைகப்பாவையாகிப்போகாதே அப்போதந்த
தேவானது சொல்லுகின்றது சரிதான் ஆனால்வாஙகேயிருக்கின்றார்
அவர் உத்தரவுபோல்நடக்க இப்போது இந்தமனிதனை நான் விடமா
ட்டேன் வெகுநாளைக்குப்பின்பு இவனகப்பட்டிருக்கிறான் நானென்
வாயில் கொஞ்சம் ருசியாக்கவேண்டுமென்றுசொல்ல மெஹறூவர்
என்பவன் வருத்தமடைந்து இந்ததேவான் முந்தேவிமனிதனைக் கண்

டவுடனே தன்னுடையபுத்திமாறி போகின்றான் ஆகையாலிவனை எவ்விதத்தாலும் நாம் ஒருமாறுபாடுசெய்யவேண்டுமென்றுயோசித்து அந்ததேவான் மஹாகாலென்பதை பார்த்துச்சொல்லுகிறானெவ்விதமெனில் நீ இந்த மனிதனை தின்பதினாலுனக்கென்ன பலனுண்டு இப்போது இந்த மனிதனைப்போல் ( ம ) பேரைக்கொண்டு வருகிறேனென்னுடைய சொல்லை நீ நம்பு இவரை யென்வசப்படுத்தும் - இவராலென்னவேலை - முடியவேண்டிய தாகயிருக்கிறதென்றுசொல்ல அந்த தேவுசொல்லுகிறது ஓ, பாத்துஷாவின் குமாரனே நானுங்களுடைய பந்துகளில் மிகுந்த பட்சம் வைக்கிறேனாகையாலிவனை என்னிடமாகவிட்டுநீபோகலாம்நீசொன்னதுபோல் செய்வையாகில் இம்மனிதனை உன்னிடமாக வொப்பிப்பேனென்று சொல்ல அப்போதந்த பாத்துஷாவின் மகனெண்ணினதற்கு ஒரு வேலையுஞ்செய்யக் கூடவில்லையே என்றுமனதிலெண்ணிமனவருத்தமடைந்துசொல்லுகின்றான்.

ஓ, தேவே இந்தமனிதன் எனக்குமிகுந்தபிராணசிநேகிதனாகயிருக்கின்றான் ஆகையாலிந்தமனிதனைஎவ்விடத்திலாவதுபத்திரப்படுத்திவை அந்தமனிதனுக்கு யாதொருவருத்தம்நேரிடுமாகில் அதற்காக உன்னிடத்தில்பதில்நான்வாங்குவேனென்றுசொல்லஅப்போதந்ததேவுசொல்லுகின்றதுஉனக்குபசந்தான இடமாகப்பார்த்துவைத்துவிட்டுபோகலாமென்றுசொல்ல அப்போது ஒருதோட்டத்தை பசந்துபண்ணி அதில்வைத்தார் இன்னும் உன்னுடைய தேவுகளைகாவல்வைத்து அவருக்குவேண்டியதைக்கொடுத்து அவரைஜாக்கிரதையாக பத்திரப்படுத்திக் கொண்டிருந்தால் நான்இரண்டுமூன்று தினத்திலுள்ளாக பத்துமனிதர்களை உன்னிடமாகக்கொண்டுவருவேனென்றுசொல்ல மெத்த நலமென்று சொன்னான் அந்த பாந்துஷாமகனும் நான்குபரிஜாதிகளுமாகக்கூடிக்கொண்டு ஒருகாட்டின்மூலையில்போய்யோசனைபண்ணுகின்றார்கள்எவ்விதமெனில்நான்என்னுடையஊருக்குப்போய் படைகளைக்கொண்டுவந்து இவர்களைவெட்டி ஜெயம்பண்ணலாமென்றால் கால தாமசமாகிவிடும் நான் சொன்னகெடுவு தப்பிப்போகும்அப்போது அந்த கெட்டமூதேவியானவன்நான்சொன்னகெடுவையைப் பார்த்துக்கொண் டிருந்து மோசம்செய்து தின்றுவிடுவான் ஆகையால் நாம் அந்த தேவுகள் காவலிருப்பதால் நாமிவர்கள் அசதி சோம்பார்த்து இரவில்போய் ஹாதிமை யெடுத்துக்கொ



ண்டு பறந்து பொழுதுவிடிய முன்னால் ( கூல - எ ) காதவழி போய்விடலாமென்று யோசனைபண்ணி தீர்மானித்துக்கொண்டு வழியைப் பார்த்திருக்கின்றார்கள் தேவுகள் காவலாகயிருந்தவர்கள் எண்ணுகிறார் எவ்விதமெனில் அந்தபரிஜாதிகள் இந்தமனிதனை நம்மையறியாமல் எவ்விதமாகத் திருடிக்கொண்டு போவார்கள் அல்லது அப்படியே அவர்கள் திருடிக்கொண்டு சிலதூரம் போவார்களாகில் நாமவர்களை விடப்போறமா இன்னமந்தமனிதனுக்குஇறகுகளுண்டா இவ்விடம்விட்டுசுருக்கில் பறந்துபோக நாமெவ்விதத்திலும்பிடித்துக்கொள்ளலா மென்கிறயெண்ணத்தாலிவர்கள் பயமில்லாம லிவரை அவ்விடத்தில் வைத்துவிட்டு • இவர்களெல்லோரும் தங்களுடையபசிக்காகவேண்டி காடுகளுக்குப்போய் நாற்கால் ஜீவஜெந்துக்களைப்பிடித்துக்கொண்டு வரலாமென்று வேட்டைக்குப்போனார்கள்போய் எத்தனையோ நாற்கால் மிருகங்களையும் துஷ்டமிருகங்களையும் பிடித்துக் கொண்டுவந்து நெருப்பில்சுட்டு எல்லோருந்தின்று பசியாறிதீர்ந்தபின் சாறுயங்களை தங்களிஷ்டம்போல் குடித்து தோட்டத்தினுடைய கதவைமூடி பூட்டிவிட்டு பாதியிரவில் எல்லபேரும் வெளியில்வந்து சொரணைதெரியாமல் கால்களை விரித்துக்கொண்டு நித்திரை போகின்றார்கள் அப்போது இந்த பாத்துஷாவின் குமாரனாகியமெஹருவர் என்பவரும் மற்ற நான்கு பரிஜாதிகளுமெண்ணினார் இந்த தேவுகள் தன்னையறியாமல் மயக்கத்தில் கிடப்பதாலிவர்களை நாம் கொன்று விடலா மென்கிற யெண்ணம் கொண்டுபின்னும் யோசனைபண்ணினார், நல்லது இந்த மூதேவிகளை நாம் கொன்றதினால் நமக்கென்னபலன் கிடைக்கும் ஆனால் இவர்கள் வெறிதீர்ந்தெழுந்திருக்கபொழுதுவிடிந்தபின்பு எத்தனைநேரம் செல்லுமோ ஆகையால் நாமிப்போது வெளிப்பட்டு போவோமாகில்பொழுதுவிடிகிறதற்குமுன்னமே (ஈ)காதவழிக்கப்புறம் போய்விடலாமென்கிற யோசனையைத் திறப்படுத்திக்கொண்டு அந்ததேவுகள் இவ்விதமாகக் கிடக்கிறதையும் போய்பார்த்து, இதுவே தருணமென்று ஹாதிமைஅசிம்மாசனத்தி லேற்றிக்கொண்டு மேலே மேகமண்டலம் வரையில் எழும்பிப்பறந்து பொழுதுபுறப்படுமுன்னமே (ஈ) காதவழிதூரத்தில் போய்விட்டார்கள்பொழுதுவிடிந்தபின்புநல்லிடமாகப்பார்த்து அவ்விடத்தி லிறங்கி கொஞ்சம் கனிகள்சாப்பிட்டு இளப்பாறினார்கள் இவ்விதமான செய்திகள் தேவுகளுக்கு தெரியாம லிருக்கின்றார்கள் நான்குபரிகளும் ஹாத்திமு மந்தராஜகுமாரனும் இரவும்பகலாகப்

றந்து போகின்றார்கள் நல்லவிடங்களுள்ளதைப் பார்க்கிறக்கிபி
ஏப்பாரி பசிப்பற்றிக்கொண் டிவ்விதமாகப்போகிறார்கள் மஹாகால்
தேவு அந்த பாத்துஷாவின்மகன் ( ம ) மனிதர்களைக் கொண்டு
வருகிறா னென்றவாயிதாகாள் தப்பிப்போனவுடனே அந்தபரிஜாதி
பாத்துஷாமகன் ஒரு அழகுசவுந்தரிய முள்ளமனிதனை விட்டுப்போ
னைல்லவா அவனைக்கொண்டுவாருங்களென் றுசொல்ல அதுபோல்
தேவுகள் போய்பார்த்து அவனைக் காணாமலிருக்க மஹாகால் தேவி
னிடமாகப்போய் சொல்லுகிறார் அமமனிதனவ்விடத்தில் காணே
மென்றுசொல்ல மிகுந்த ஆக்ரோஷத்துடனே ஆங்காரித்துசொல்லு
கிறா னெவ்விதமெனில் அடே துரோகியாகிய கொடும்பாவிகளென்
றுசொல்லித் தானேயெழுந்து அந்த தோட்டத்துக் குள்ளேபோய்
நான்கு பக்கங்களிலும் தேடிப்பார்த்து அவனைக்காணாமல் அந்ததே
வுகளைப்பார்த்து கண்கள் நெருப்புப்பறக்க உறுக்கிப்பார்த்துமிகுந்த
ஆங்காரத்துடன் ஓ, (நம்மக்ஹறாம்) என்ற ரோகிப்பயல்களே என்
னுசையை வீணாக்கிவிட்டு அவனை நீங்களே வெகுருசியாகத்தின்றி
ருக்கிறீர்களென்றும் மற்றதேவுகளிடமாக உத்தரவு செய்தானிவர்க
ளை கைதுசெய்து அடியுங்களென்று சொன்னவுடனே அந்தகாவ
லாகயிருந்ததேவுகள் ஹஜறத்துசுலைமான் அலைஹிஸ்ஸலாமவர் கள்
பேரில் சத்தியஞ்செய்துசொல்லுகிறார்கள் அம்மனிதனைநாங்கள் கை
யால்தொடவில்லையே நாங்கள் தின்பது ஒருபக்கமிருக்கட்டு மென்று
சொல்லஅப்போதந்த மஹாகால்தேவானவன்நீங்களென்னசத்தியஞ்
செய்தபோதிலும்நான் நம்பமாட்டேன் நீங்கள் பொய்சொல்லுகிறீர்க
ளென்றுஅந்த நான்கு பரிகளுடனே ஹாத்திமென்பவரும் கஹர்மா
ன் சமுத்திரம்போய்ச்சேர்ந்தார் அவ்விடத்தில் மஹாகால்தேவுடைய
ஒரு தேவானதுஅந்தஜீவாந்தரமாகியதிட்டுக்குப்போயிருந்தது அந்த
தேவானது இவர்களறிந் திருந்தபடியால் ஹாத்திமுடைய மேலேகை
யைபோட்டு எடுத்திழுத்துக்கொண்டு பறந்துபோகவேண்டி அவனி
ழுக்க மெஹறுவர், தன்னுடைய கத்தியையுருவி ஒரு வெட்டு
வெட்டினன் கையானதுதோளில்நின்று அறுந்துகீழேவிழுந்தது அந்
ததேவு பயந்தோடுகிறபோதில் சொல்லுகின்றது ஓ, பரிஜாதியே
நீமனிதனுக்காகஎன்னுடையகைவெட்டினாயல்லவாஇப்போதேநானி
ந்தஜீவாந்திரத்திலுள்ளதேவுகளுக்குத்தெரியப்படுத்துகிறேன் ஒருபரி
யானவனொருமனிதனைக்கொண்டுபோகிறா னென்றுசொல்லி நீ என்
னைபிவ்விதமாக வின்னப்படுத்தியபடியால் இதற்காகபதி லுன்னி...



த்திலென்ன பழிவாங்குகிறே னென்றுசொல்ல மெஹறுவென்பவன்
சொல்லுகிறான் ஓதேவேநீஇந்தஜீவாந்திரத்திலுள்ளவன்யாரைச்சேர்
ந்தவனாகயிருக்குமென்றுகேழ்க்கஅப்போதந்த தேவுநான் மஹாகால்
தேவுடையகூட்டத்திலுள்ளவனென்றுசொல்லஅப்போதுபாத்துஷா
வின்குமாரன்சொல்லுகிறானுன்னுடைய மஹாகாலிடமாகப்போய் நீ
சொல்லவேண்டியது அந்தமனிதனைக்கொண்டுபோகிறாரென்றும்பின்
னும்நான்போய்என்வேலையைமுடித்துக்கொண்டுஇந்தவழியைப்பார்க்
கதிரும்பிவருவேனப்போதுஉன்னையுமுன்னுடையகூட்டத்தையுமுன்
னையும்நெருப்புபோட்டெரித்துசாம்பலாக்கியூதிப்போட்டுபோவார்
களென்றுநீஅவனுக்குசொல்லவேண்டியது அப்போதந்ததேவுகேட்
டுகைபோகிபோய்விட்டது இவர்கள்வழக்கம்போல்அவ்விடம்விட்டுபரி
ஜாதியானவர்கள்ஹாத்திமையும்பாத்துஷாவின் குமாரனையும்தூக்கிப
றந்துபோகிறார்கள் அப்படிபோகிறபோது ஒருஅகோரமானவனாந்தி
ரத்தினருகில் போய்ச்சேர்ந்து ஹாத்திமை தூக்கிக்கொண்டுவந்த
பரிஜாதிகள் சொல்லுகிற தெவ்விதமெனில் நாங்கள் போகிற
எல்லை யிதுவரையில் தான் அப்புறம்போக எங்களால் கூடா
தென்றுசொல்லி எங்களையனுப்பிவிட வேண்டுமென்றுகேழ்க்க அப்
போது மெஹறுவர் சொல்லுகின்றான்.

ஓ, வல்லமைசாலியாகிய தோழனே உன்னோடுநான் வரு
வேன் அப்படி உங்களுக்கு ஏதாவது துன்பம்வந்துநேரிடுமாகில் அ
ப்போதெனக்கும் அதுபோல்வருமல்லவா நீங்கள் யாதொன்றுக்குமி
யோசிக்கவேண்டாம் ஹாத்திமானவர் தானேறிய தகத்திலிருந்து கீ
ழேயிறங்கி நீங்கள் உங்கள் தேசத்துக்குப்போங்களென்று உத்தரவு
கொடுத்து அவர்களை அனுப்பியபின் மெஹறுவரென்பவரைபார்த்து
ஹாத்திம்சொல்லுகின்றார் ஓ, பாத்துஷாவின்குமாரனே என்னோடு
நீ வருவது மிகுந்த மனவருத்தமிருக்குது எனக்காக உனக்கு ஏதாவ
து தங்கடம் நேரிடும் அதை நீ எண்ணிப்பார்க்கவேண்டியது என்று
சொல்ல பாத்துஷாவின் குமாரன்சொல்லுகின்றான் இந்தஅகோரமா
ன வனாந்திரத்தில் துஷ்டதேவுகள் வாசம்பண்ணிக்கொண் டிரு
ப்பதால் இதில் எவ்விதமாக நீர்போவீரென்று நான் யோசிக்கின்றே
னேதவிரவேறில்லையென்றும்சொல்ல பின்னும்சொல்லுகின்றார் இந்
தவனாந்திரத்தி லிப்பரிஜாதிகள் போகமுடியாத் தில்லாமலிருக்கின்ற
து எவ்விதமெனில் இந்த வனாந்திரத்தி லுள்ளதேவுகள் பரிகளை

அனேக தோந்தரவும் உயிர்வதைகளும் செய்துக்கொண் டிருந்த
துகளை அப்படியிருக்க ஒரு நாள் பரிஜாதிகள் மிகுதமான கூட்
டத்தைசேர்த்துக்கொண்டுபோய் தேவுகளுடன் போர்செய்துஅனே
கதேவுகளை உயிர்வதை செய்தார் அதிலுலவர்கள் பரிஜாதிகளுட
ன்மிகுந்தபங்கயாதமிருக்கின்றார்கள்பரிஜாதிகளிந்தவனாந்திரத்துக்கு
வருகிறதில்லை இவ்விதமாகவிருக்கின்றது அம்மொழியை ஹாத்திம்
கேட்டுசொல்லுகின்றார் அப்படியிருப்பதால் நான்தேவினுடையரூப
ம் எடுத்துக்கொண்டு இந்த வனாந்திரத்தைக்கடந்துபோவேன் நீஎன்
னோடு எவ்விதமாக வருவாயென்று கேழ்க்க அப்போது சொல்லுகி
றான்நான்மேகமண்டலத்தை அடர்ந்துதினமெல்லாம்பறந்துகொண்
டு இரவில் நீர் இறங்கிய இடத்துக்குவந்துசேர்ந்து படுத்திருப்பேன்
னல்லது போகலாமென்றுசொல்ல ஹாத்திமானவர் தன்னிடமி
ருந்த சிவப்புப்பறவை யிறகின்மயிரைச்சுட்டு சாம்பலாக்கி அதை
தண்ணீரில் கரைத்து திரேகமெல்லாம் பூசிக்கொண்டவுடனேதேவி
னுருமாறிப்போனார் அவ்விடம்விட்டு அப்புறம்போகையில் அந்தவனா
ந்திரத்திலுள்ள யானை புலி சிங்கமுதலிய நாற்கால்செந்துகளெல்லா
மிவரைக்கண்டவுடனே யிரண்டுகாலாபக்கங்களிலும்ஓடுகின்றது இவ்
விதமாக வனாந்திரத்தைக்கடந்து இரவான வுடனே ஓரிடத்தில் போ
ய் தங்கினார் மெஹறுவ்நும்தினமெல்லாம்பறந்துஅவ்விடம்வந்துசே
ர்ந்துஇருபேருமாகஓரிடந்தங்கியிருந்துவிடிந்தவுடனேமெஹறுவர்மே
லாகப்பறந்து போவார் ஹாத்திம் கீழேநடந்து போவார் இவ்விதமாக
ப்போகையில் ஒருநாள்மெஹறுவர்என்பவன் ஹாத்திமை கேட்டார்
எவ்விதமெனில் நீர் பூசிக்கொண்ட யிறகானது எந்த பறவையின் இ
றகாகயிருக்குமென்று கேழ்க்க அப்போது ஹாத்திம்சொன்னார் அந்
த முத்தின் பிறவியின் சங்கதியைத் தெரியப்படுத்திய ஒருமுத்து
மஹாயார் சுலைமானீ யென்பவர் கைவசப்பட்டிருந்தது அதினுடை
ய விபரம் தெரியப்படுத்தின பறவையினுடையதாக யிருக்குமென்று
சொன்னார் ஓ, யென்னுடைய பிரியமாகிய மெஹறுவரே நானுகப்
பட்டவன் ஷாஹே ஆபாதுபட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுவெளி
யில் வெகுவிசனத்தையடைந்து இவ்விதமானமுத்துஎந்தசமுத்திரத்
தில் பிறக்கின்றதோ அதை நான் எவ்விதமாக அறிவேனென்று தலை
யைமுழங்காலில் வைத்துக்கொண்டு துக்கத்தோடேயிருக்கின்றவே
ளையில் அந்தமரத்தின்மேல் வெகு அழகுசவுந்தரியமுள்ளஒருசோடு
(எ) நிறமுள்ளதாக பறவையிருந்தது அப்போது பெண்பறவையானது



தமுன்னால் அந்த காட்டினுடைய காற்றையும் தண்ணீரையும்குறித்
து ஆண்பறவையோடு இதின் குணங்களையும் பேசிக்கொண்டு பின்பு
என்னுடைய சங்கதிகளைக் குறித்து இவ்விடத்தி லிருக்கின்ற
மரத்தின்கீழே ஒரு மனிதன் யிருந்துவிசனத்தையடைந்தவனாகயிருக்
கின்றானென்று கேழ்க்க அப்போது ஆண்பறவை சொல்லுகின்றது
இந்த மனிதன் இவ்விதமாக விசனத்தை யடைந்திருக்கின்றானென்
ஒரு கோழிமுட்டையைப் போல பருமனுமுள்ள முத்தினுடைய பிறப்புமூ
லிடமும் எவ்விடமிருக்கின்றதோ அதைபறிந்துகொண்டுவரப்போ
கிறானென்றுசொல்லி அதினுடைய விபரமெல்லாம் எனக்கு ஆ
திமுதலந்தவரையில் தெரியப்படுத்தி தன்னுடைய இறகிலிருந்து
இந்தமயிரைக்கொடுத்துஇதைமின்னலிதஞ்செய்தால்இவ்விதமாகுவா
யென்றுகொடுத்த பறவையின் இறகாகயிருக்கும் நான் மாஹயார்சு
லைமானி யிடமாகப்போய் தெரியப்படுத்துவேனே அப்போதுஎல்லாச்
சங்கதியும்உனக்குதெரியவருமென்றார் ஆறாவர்மேற்கண்டசங்கதிக
ளை முழுதுமவனுக்குசொல்லவில்லைநாம்அவனுக்குசொன்னோமானா
ல் ஒருவேளை முன்னால்போய் அந்தசங்கதிகளைதெரியப்படுத்திதன்னு
டையவேலையைசெய்துக்கொள்வான் அப்போதுநம்முடையவேலைகெ
டுதலையாகுமென்று இவ்விதமானமொழிகளைமெஹறுவர்பாத்துஷாஹி
ன்குமாரன்கேட்டிருந்தசந்தோஷத்தையடைந்து எவ்விதத்தாலும்
நம்முடையவேலைக்கு யாதொருகுறைவுவராதென்றுமனதில்எண்ணி
க்கொண்டு இவ்விதமாக யிருவருமபேசிக்கொண்டு விடிந்தபின்புமெ
ஹறுவர்மேலே பறந்துகொண்டுபோகின்றான் ஹாத்திம் முன்னால்
தேவாக நடந்து போகின்றார் இவ்விதமாக இரவுகாலங்களிலே கூடி
யிருப்பது பொழுதுவிடியும் முன்னால் வழக்கம்போல் போ
கின்றது ஒரு இரவில் இவர்களிருவரும் ஓரிடத்தில் படுத்து நித்
திரைசெய்கின்றபோதில் அந்தவனாந்திரத்திலுள்ள (முலூக்ஸோஸ்)
உடைய தேவானது வந்து இவர்கள்தலைமாட்டில் வந்திருந்துக்கொ
ண்டு ஒரு தேவு மொருபரிஜாதியும் ஓரிடத்தில் நித்திரைசெய்கி
ன்றதைப்பார்த்து அவ்விடம்விட்டெழுந்து தங்கள்கூட்டமாகியதே
வுகளுக்கு தெரியப்படுத்தினான் அப்போதவர்கள் வந்துஇருவரையும்
பார்த்து தங்களில் தானே பேசிக்கொள்ளுகின்றார்கள் இவர்களைநம்
முடையபாத்துஷாயிடமாகக்கொண்டுபோகலாம்அவர்களிலிருந்தொ
ருவன் சொல்லுகின்றான் ஓ, சினேகிதர்களே இவர்களை காய்கிதாங்
தரவு செய்தால் நமக்கென்னபலன் இவன் நமது கூட்டத்திலுள்ளவ

னல்ல ஆனாலவர்கள்ஏதாவதுகுற்றம்செய்திருக்கிறார்களோஇவர்கள் எந்ததீவாந்திரத்திலுள்ளவர்களோ ஏதோ ஒரு வேலைக்காகப்போய் இராக்காலத்திலிவ்விடம் வந்திறங்கி நித்திரைசெய்கிறார்கள்இவ்விதமாக பேசுகிறவேளையில் அந்த மெஹருவென்ற பாத்துஷாவின்மகன் முழித்துக்கொண்டு அவர்கள்பேசுகிறதைக்கேட்டுக்கொண்டிருந்தான் பின்பு அந்தேவுகள் சொல்லுகிறார்கள் இவர்களை எழுப்பி நாம் கேழ்க்கலாம் ஒருவேளை இவர்கள் பற்ஜக்குவுடைய தீவாந்திரத்திலுள்ளவர்களோவென்றும் இன்னமவர்களிலொரு தேவுசொன்னது அதுபோலிருந்தால் உங்களுக்கென்னவென்று மற்றொருதேவுசொன்னது ஒருநாள் (பாத்துஷாமுலுக்கு)என்பவர் சொல்லிக்கொண்டிருந்தார் வெகுநாளாக பற்ஜக்கு தீவுடைய செய்தியாதொன்றும் தெரியவில்லையென்று உனக்குத் தெரியவில்லையா கொஞ்சமாவது அச்சமும் பயமுமில்லையா நீ எவ்விதமான மொழிகள் சொல்லுகின்றாய்.

ஆனால் இந்தமொழியையாராவதுபாத்துஷாவுக்குத் தெரிவித்தாலொருதேவும் ஒரு பரிஜாதியானவனு மெந்ததீவாந்தரத்திலுள்ளவரோஇவ்விடம்வந்து படுத்து நித்திரைசெய்துக்கொண்டிருந்ததை இன்னாரின்னார்பார்த்து தம்மிடத்தில் தெரிவிக்கவில்லையென்றும் அப்போதந்தவேளை என்னஜவாபு சொல்வீர் இப்போது நம்முடைய நிருவாக மெவ்விதமாகயிருக்குமென்றும் பலபல யோசனைகள்செய்து பின்பு அவர்களைத் தட்டியெழுப்பினார்கள் அப்போது ஹாத்திமானவர் அந்ததேவுகளைப்பார்த்து சொல்லுகின்றார் நாங்கள் அசந்து நித்திரை போகிறவர்களை நீங்களேன் எழுப்பினீர்கள் எங்களாலுங்களுக் கென்னவேலையிருக்கிறது அப்போதந்த தேவுகள் கேழ்க்கிறது நீங்களெந்த தீவாந்தரத்திலுள்ளவர்கள் நிஜமாகச் சொல்லுங்களென்றுகேழ்க்க அப்போது ஹாத்திமென்பவர் சொல்லுகிறார் நீங்களறியமாட்டீர்களாஒருமனிதன்பற்ஜக்குதீவாந்தரத்திற்குபோய்கொண்டிருந்தான் அவனுக்காகவேண்டி ஷம்ஷ்பாத்துஷா முகருகல் என்ற தேவானவனையும் அவனுடைய பந்துக்களையும் நெருப்பினால் சுட்டெரித்து அவனுடையசீமையைபிடிங்கிக்கொண்டுதன்வசப்படுத்தினது உங்களுக்குதெரிந்திருந்தாலவனை நீங்கள்போய்தேடி உங்கள்பாத்துஷாவின சமுகத்துக்கொண்டு போகலாமென்றுசொல்ல அந்ததேவுகள் பின்னும் கேழ்க்கிறது இந்த பரிஜாதியானவன் எந்ததீவாந்தர



த்திலுள்ளவன் அப்போது சொல்லுகிறார் இவர் தோமாவென்ற தீவாந்தரத்திலுள்ளவர் இவர் சிலசங்கதிகளைத் தெரியப்படுத்த பிரபல்லியமான ஷம்ஷ் பாத்துஷாவானவர் முகருகல் என்பவனைக்கொண்டு அவனுடைய தேசத்தைக் கைவசப்படுத்திக்கொண் டிருக்கின்றாரென்றுஞ்சொல்ல அந்ததேவுகள் அச்செய்தியைக் கேட்டு பயந்து நீங்கள் சந்தோஷமாக நித்திரைசெய்யலாம் நாங்கள் அவரைத்தேடிக்கொண்டு போகின்றோ மென்றுசொல்லி இவர்களுக்கு நல்லமொழிகளைப்பேசி அந்ததேவுகள் போய்விட்டது பின்பு இவர்களிருவரும் அவ்விடம்விட்டு புறப்பட்டு மூன்றுநாள் ஒரு சமுத்திரத்தினருகில்போய்ச் சேர்ந்தார் அப்போதுமெஹருவர் என்பவர் சொல்லுகின்றார் இந்த சமுத்திரமானது கஹர்மாவென்றதாக யிருக்கும் அப்போது ஹாத்திமானவர் கேட்டு இந்த சமுத்திரத்தின் அக்கரையின், ஓரம். யாதொருகுறிப்பு தெரியவில்லை இதினுடைய அலையானது வானத்தை யளாவிக்கொண்டு நிற்கின்றது அந்த அலையானது மேலெழும்பி கீழேபணியும்போதில் அக்கரையில்பார்த்தால் அவ்விடத்திலுள்ளசமுத்திரமிருகஜாதிகள்யானை ஒட்டகம்குதிரைமாடு முதலை ஆமைகள் வாத்துகள் கொக்குகள் இன்னம் ஜீவஜெந்துக்களும் அக்கரையில் புரளுகின்றது இன்னம் நானாவிதபக்ஷாதிகளெல்லாம் அவ்விடத்தி லுள்ள மலைகளிலும் செடிகளிலும் உட்கார்ந்துக்கொண்டு பாடல்கள் பாடிக்கொண் டிருந்ததுகள் இந்த குதரத்தான கோலங்களெல்லாம் ஆண்டவனுடைய பெருமையையும் வல்லமையையும் மனிதர்களுடைய புத்தியினாலும் அறிவினாலும் எண்ணத்தாலும் கணக்கிடக் கூடாதென்றும் ஹாத்திமானவர் மனதில் அச்சங்கொண்டு மெஹருவர் கூடச் சொல்லுகின்றார் ஓ, தோழனே இப்பேர்ப்பட்ட சமுத்திரத்தை நாமெவ்விதமாகக் கடந்து போவோம் இப்பேர்ப்பட்ட அலையின் பேரில் பறந்துபோக முடியாதென்றுஞ்சொல்ல அப்போதுமெஹருவர் சொல்லுகின்றார் நீங்கள் சொன்னது மெய்தான் பறவைஜாதிகள் எழுநாள் இரவும்பகலுமாகப்பறந்து போனபோதிலும் அக்கரைபோய்ச் சேரமாட்டாதுஆனால் நான்பரிஜாதியானவனிருந்தபோதிலும் என்னால்கூடஅக்கரைபறந்துபோகத்தெரியவில்லையே உம்மால்எவ்விதம் போகக்கூடு மென்றுசொல்ல அப்போதுஹாத்திமானவர் சொல்லுகிறார்சாமிவ்விதமாகப்பேசிக்கொண் டிருப்பதினால்ஒன்றுமில்லைஇதற்குதகுந்தயோசனைபண்ணவேண்டுமென்றுசொல்ல அப்போ

து மெஹறுவர் சொல்லுகிறார் நீரிவ்விடத்திலே சிலநாளிருப்பீராகில் இந்த சமுத்திரத்தைக்கடந்து போகநான் எத்தனம்செய்கிறேனென்றுசொல்ல ஹாத்திமானவர் நல்லது உன்மனம்போல் செய்யுமென்றுசொல்ல மெஹறுவர் சொல்லுகின்றார் இவ்விடத்துக்கு நொஞ்சதூலவாக ஒரு (பத்ரூன்) என்றதீவு இருக்கின்றது அவ்விடத்தி லிருக்கின்ற பரிஜாத் பாத்துஷாவானவர் (ஷம்ஸர்ன்) ஆகயிருக்கும் அவரிடமாக நல்ல சமுத்திரகுதிரைகள்பறக்கும்படியானதாகயிருக்கின்றது ஆகையால் நான் அவரிடமாகப்போய் இரண்டு குதிரைவாங்கிக் கொண்டு வருகின்றேன் அப்போது ஹாத்திமானவர் கேட்டிருந்த சந்தோஷமென்றுசொல்ல அம்மொழியைமெஹறுவர்கேட்டு உத்தரவுபெற்றுக் கொண்டு அவ்விடம்விட்டுபறந்துஒருபகல் இரவானவுடனே அவ்விடம் போய்ச்சேர்ந்து அந்தபாத்துஷாவானவரைக்கண்டு மிலாகத்தானார் உடனேபாத்துஷாவானவர் நீங்கள்வந்தசங்கதியென்னவென்றுகேழ்க்கஅப்போதுசொன்னார் எனக்குமிகுந்தவேகமுள்ள(உ)குதிரைகள் வேண்டியது தாங்களென்பேரில்தயவுசெய்துகொடுப்பீர்களானால் தங்களுடைய யேசானுகமிருக்கு மென்றுசொல்ல பின்னும் ஷம்ஸான் கேழ்க்கின்றார் தாங்களெவ்விடமிருந்து வருகின்றீரென்றுகேழ்க்க அப்போதுமெஹறுவர் சொல்லுகின்றார் நான்(தோமானி)லிருந்துவருகின்றேனென்றுசொல்லஅப்போதந்தபாத்துஷாவானவர் சொல்லுகின்றார் தோமான்பாத்துஷாவுடையகுமாரனென்றுஇப்போதுஎனக்குத்தெரியும் நீர்இவ்விடம் ஒண்டியாகவந்தவரலாறென்னவென்றுகேட்கஅப்போதுசொல்லுகின்றார் நீங்கள்சொன்னதுசரியாகயிருக்குமானால் நான் ஒரு பெரியபலாவில் அகப்பட்டுமிருந்த துன்பத்தையடைந்திருக்கின்றேன் ஆகையால் நான் கேட்டவஸ்துகளை தயவுசெய்துகொடுப்பீராகில் என்னுடைய ஆயுசுபரியந்திரம் நான் மறக்கமாட்டேன் அம்மொழியை ஷம்ஸான் பாத்துஷாகேட்டு சுருக்கெழுந்து கையைப் பிடித்துக்கொண்டு தன்னுடைய குதிரைகள் கட்டியிருக்கும்படியான லாயத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் குதிரைகளையெல்லாம் காண்பித்து அதிலுள்ள திறமான (உ) பறக்கும்படியான குதிரையைப்பார்த்துபொறுக்கி ஜீன்சாமான்களும் போட்டுக்கொடுத்தார் அக்குதிரைகளைவாங்கிக்கொண்டு ஹாத்திமிடமாக வந்துசேர்ந்து சொல்லுகின்றார் சுறுக்காகவெழுந்து இக்குதிரையின் பேரிலேறிக் கொள்ளுமென்றுசொல்லி தானும் ஹாத்திமானவரும் ஏறிக்கொண்டபின்பு மெஹறுவர் சொல்லுகின்றார் என்தோழனே பத்திர



மாக அக்குதிரையின் கழுத்தை கெட்டியாகப்பிடித்துக்கொண்டு கழுத்தின்மே லிருக்கின்ற மயிரின்பேரில் ஒரு கையைப்போட்டுப் பிடித்துக்கொள்ளும் (வேகமாக) பறக்குமென்றும் நீர் ஜாக்கிரதையாக இருமென்றுசொல்லி இருவரையும் அக்குதிரைகள் தூக்கிக்கொண்டு காற்றைப்போல் பறக்கின்றது இவ்விதமாக கொஞ்சநாள் பறந்துபோகின்றபோதில் பசியுண்டாகி கொஞ்சமாகி ஹாத்திமுக்கு மிகுந்த களையாகிவிட்டது அப்படியிருக்க மெஹறுவர் என்றபரிஜாதியான பாத்துஷாவின் குமாரன்பார்த்து சொல்லுகின்றான் நீர் இளைப்பில் மிகுதமாகவருத்தமாகியிருப்பதுபோல் தெரிகின்றது ஆகையால்நான்வரும்போதுகொஞ்சம் கனிவர்க்கங்களும் ஒரு கூஜாவில் தண்ணீர்கொண்டுவந்தேனென்றுசொல்லி நீங்கள்புசியாற்றிக்கொள்ளுமென்று கனிகளைக்கொடுக்க அவர் அதை வாங்கிகொஞ்சம் சாப்பிட்டு தண்ணீரும் கொடுத்த பின்பு அதுபோல் பறந்து சிலநாளைக்குப்பின்பு ஒரு கரைகாணப்பட்டது அப்போது பரிஜாதியான மெஹறுவர்சொல்லுகின்றார் ஓ, என்தோழனே இனிலகானையும் மயிரையும் விட்டால் நாம் இப்போது நிலத்தி லிறங்கிவிடுவோம் ஹாத்திம் சொல்லுகின்றார் ஓ, என்தோழனே நான் பத்ஜுக்கு உடைய தீவாந்திரம் கடலி லடிமிலிருக்கின்றதென்று கேழ்விப்பட்டிருக்கின்றேனென்றுசொல்ல அப்போதுமெஹறுவர்சொல்லுகிறார் அந்ததீவாந்தரமானது நாம் இருவரும் உழக்காந்திருந்தோமே அது தொடுத்திருக்கிறது நீங்கள் என்னவேண்டாம் நாம் கஹர்மான் என்றசமுத்திரம் தாண்டிவிட்டோமென்று அதினுடையஅக்கரையல்ல இதுஒருதிட்டாகயிருக்கும் இன்னம் இதெத்தனையோ தீவாந்தரங்களும்சீமைகளுமிருக்கிறது அப்போதுஹாத்திம்கேழ்க்கின்றார் இன்னம்அந்தசீமையெவ்வளவுதூரமிருக்கின்றது அப்போது மெஹறுவர் இன்னம் அறு(௬)நாள் பயணமிருக்கின்றதென்றுசொல்ல அப்படியிருந்தால் நாம் இவ்விடமென்னத்துக்கு இருக்கவேணும் அப்போது மெஹறுவர்மிகுந்தவணக்கத்துடனே சொல்லுகின்றார் என்னுடைய சீமையானது இவ்விடத்துக்கு அருகாமையாகயிருப்பதால் நான்போய் என்னுடைய படைகளைக் கூட்டிக்கொண்டுவந்துநீங்களும்நானும்அந்த படைகளுடனேயிருந்துநமென்னையார் கப்போகலாமென்றுசொல்லஅப்போதுஹாத்திம்சொல்லுகிறார் ஓ, என்னுடையதோழனேமாறேயார்சுலைமானீபுடனேநாம சண்டைசெய்யவரவில்லையே நமக்குபடைகள்வேண்டியதப்போதுமெஹறுவர் சொ

ல்லுகிறார்என்னுடைய எண்ணமிதுவல்ல ஆனதினாற்காகநான்சொல்
லுகின்றேன் நாமிருபேரும் ஏழையாக அந்தப்பட்டணம்போவோமா
கில் நீங்கள் எவ்விடத்தி லுள்ளவர்களென்று பலபலவிடங்களிலும்
கேழ்ப்பார்கள் நாம்படைகளை கூடச்சேர்த்துக்கொண்டுபெருமையா
கப்போவோமாகில் நாமவ்விடம் போகிறதுக்குமுன்னமேநம்முடை
யசெய்திகள் அவர்களுக்குதெரியவருமாகையால் நீங்கள் அச்சப்பட
வேண்டியதில்லைநான் ஒருவாரத்துக்குள்ளேபோய்வருகின்றேனென்
று சொல்லஹாத்திமானவர்நாணித்த அகோரமானதோட்டத்திலுண்
டியாகளவ்விதமிருபேனென்றுசொல்லமெஹறுவர்அப்படிக்குஇவ்வி
டத்தில் யாதொருபயமச்சமில்லையென்றுசொல்லநல்லதுஎனக்கு ஆ
ண்டவனுடையகாவலிருக்கிறதென்றுசொல்ல மெஹறுவர் என்பவர்
ஹாத்திமுடையஉத்தரவுபெற்றுக்கொண்டுஉடனேகைபாகமறைந்து
விட்டார் ஹாத்திமானவ ரிடமிருந்த வெள்ளையிறகை யெடுத்து
சுட்டுசாம்பலாக்கி தண்ணீரில்கரைத்துதம்முடையதேகமெங்கும்பூ
சிக்கொள்ள முன்னிருந்த மனிதருபமாகிப் போனார்கள் அம்புவில்
லும் எடுத்துக் கொண்டு காடுவனாந்திரங் களில் போய் வேட்
டையாடி ஒரு (௰௨) கொம்புள்ளமானைப் பிடித்துக் கொண்டுவ
ந்து அத்தோட்டத்திலிருந்து அறுத்து அப்பரவுசெய்துநல்லகறிகளைப்
பார்த்தெடுத்து மசாலாக்கள் போட்டு பிசிரி ஒரு பாத்திரத்தி
ல் போட்டு அடுப்பில் வைத்து சக்கிமுக்கியால் நெருப்புண்டாக்கி
காட்டின் விறகுகளைக்கொண்டுவந்து எரித்து வேகவைத்து பசியாறி
ஆண்டவனைப்புகழ்ந்துஷுக்கூர்செய்துஒருசெடியின்கீழாகபடுத்துக்
கொண்டிருந்தார்சிலநாளவ்விடத்திலிருந்துபுறப்பட்டொருநாள்காடுக
ளில்திரிந்துக்கொண்டிருக்கையில் அவ்விடத்திலொருதோட்டமிருந்த
து அதின்வாசற்படிதிறந்திருக்கின்றதைக் கண்டு அந்த தோட்டத்
துக்குள்போய்பார்த்தால் அவ்விடத்திலுள்ள மரங்களில்கனிவர்க்கங்
கள்பலதினுசுகளாகக்காய்த்துபழுத்து குலை குலையாகத்தொங்கு கின்
றது அவ்விடத்தில்பூமரம்சோலைகளின்கினிசு இவ்விதமென்றுசொல்
லமுடியாது அதினுடையவாசனையால் அவ்விடமிருக்கும் படியாக
யோசனை செய்தார் அவரேறிவந்தகுதிரையானது தினமெல்லாம்மை
தானங்களில் மேய்ந்து திரிந்துகொண்டு இரவான வுடனே அத்தோ
ட்டத்தில் வந்திருக்கும்இவ்விதமாக ஹாத்திமானவர்கொஞ்சநாள்அத்
தோட்டத்திலிருந்தார்அப்படியிருக்கையில் அந்தபாத்துஷாவின்குமா
ரன்தன்னுடையதகப்பனிடமாகப்போய்அதாபுதஸ்லிமாத்துசெய்துகா



லில்விழுந்தன் மகனைக்கட்டியணைத்துக்கொண்டு சங்கதிகளைக்கேட்டு
உனக்காக ஜஸீருபர்ஜக்கு என்ற தீவாந்திரத்துக்கு படைகளனு
ப்பினேன் அதைவிட்டு நீங்கி தனித்து வந்தவிதமென்ன நீ எந்த
தீவாந்திரத்திற்போய் மறைந்திருந்தாய் நானனுப்பிய படைக
ளெல்லாம் உன்னைத்தேடியலைந்து வெகுநாள் வரையிலும் நீ காணாம
லிருந்தபடியால் அவர்களெல்லோருமிகுந்த வருத்தமெடுத்துக்கொ
ண்டு இவ்விடம்வந்துசேர்ந்தார்கள் நல்லது நீ போனகாரியம் மாஹெ
யார் சுலைமானி உடையபெண்உன்கைவசப்பட்டுதாவென்றுகேழ்க்க
அப்போது மெஹறுவர்அம்மொழியைக்கேட்டுதலையைக்கீழேபோட்
டுக்கொண்டுசொல்லுகின்றார்என் தகப்பனேதங்களுக்குசொல்லாமல்
போனபடியால்நான்வெகுநாளாகமிகுந்ததுன்பத்தையும்வருத்தத்தை
யுமெடுத்துக்கொண்டுபட்டபாடும்இரவுபகலுமாக அழுதுகொண்டுகா
ன்போக்கிஎன்னுடையதேகத்தின்சரணைகூடவில்லாமல்கிடந்தேன்
நான் பட்டசிறுமைபோல் இந்த லோகத்தில் யாருக்கும் ஆண்ட
வன் கொடுக்கக் கூடாதென்று மிவ்விதமாக நான் கேட்டதுமில்லை
ஆனால் என்னுடைய தலையெழுத்து செம்மையானபடியால் ஒரு
எமன் தேசத்திலுள்ளவன் பாத்துஷாவின் குமாரன் ஹாத்
திமென்பவர் ஷாஹெ அபாத்தென்றபட்டணத்திலிருந்து ஒரு கோ
ழிமுட்டைபிரமாணமுள்ள முத்துக்காகதேடிக்கொண்டு புறப்பட்டு
வருகின்றபோது ஒரு காட்டில் என்னிடமாகவந்துகண்டார் என்னு
டைய சங்கதிகளையவருக்குதெரிவிக்க அவர் எனக்கு ஒரு நம்பிக்கை
யும் கூறும்செய்திருக்கின்றார் எவ்விதமெனில் அந்தமுத்து எனக்
கு அகப்பட்டால் மாஹெயார் சுலைமானியுடைய பெண்ணை உன்வச
ம் கொடுப்பேனென்றும் அம்மொழியை நான் கேட்டு வந்திருக்கின்
றே னென்றுசொல்ல மெஹறுவ ருடையதாய்தகப்பன் சொ
ல்லுகிறா ரிதுவரையில் குழந்தைகளின் செயலுன்னை விட்
டுபிரியவில்லையோ நீபரிசாதியானவன் அந்தமுத்தினுடையசங்கதிகள்
தெரியாமலிருக்க ஒரு சொல்பமான மனிதனானவன் அதின் ரகசியத்
தையறிந்துசொல்ல அவனுக்கவ்வளவுவல்லமையிருக்குமாமாஹெயார்
சுலைமானி சொல்லும்சவால்களைசரிப்படுத்த அவனால்கூடுமாவென்று
சொல்ல அப்போது அவர் சொல்லுகின்றார் நீங்கள் அப்படியிப்படிக்
கொத்தவரென்று எண்ணவேண்டாம் அவரெப்பேர்ப்பட்டவல்லமை
சாலியானால் அவர் எமன் தேசத்து பாத்துஷாவின் குமாரகனாகவி
ருக்கும் அவருடைய அறிவாகாரமவல்லமைத்தனம் நம்முடையபாரி

ஜாதிகளிலும் தேவுகள் ஜின்களிலு மிருக்கமாட்டாது ஒரு பறவை சோடானது அந்த முத்தினுடையபிறவியின்சரித்திரமெல்லாம் அவருக்குசொல்லித்தெரியப்படுத்தி மாஹேயார் சுலைமானியுடையமொழிகளைநான் கேழ்விப்பட்டிருக்கின்றேன் அம்மொழிகளையெல்லாம் கண்டதுகேட்டதுபோல் எனக்குமுன்னால்சொல்லியிருக்கின்றார் அவருடையமொழிகள் எல்லாமுழுதும் எனக்குஉண்மையாகவிருக்கின்றது அந்தமுத்தினுடையவிபரம்சந்தேகமெல்லாம்தெரியவரும்இப்போது அவளை அந்தபர்ஜக்குநீவாங்கிரத்துக்குகானமயில்விட்டுவந்திருக்கின்றேன் ஆனால் அந்தமனிதன் பிறவியெப்பேர்ப்பட்டதோ அவருடைய சங்கிகளைக் குறித்துச் சொல்லவேண்டுமாகில் இவ்வளவென்று சொல்லிமுடியாது அவருக்குத்தேவுகள்பரிகள் பறவைபக்குஷாரயிருக்ஜாதியிதுகளுடைய பாஷையெல்லாமவருக்கு யாதொரு குறைவில்லாமல் தெரிந்திருக்கின்றது நல்லது நீ சொன்னதெல்லாம் தெரியவந்தது இப்போது நீவந்தசங்கதியென்னவென்றுகேழ்க்க அப்போது மெஹறுவர் சொல்லுகின்றார் தங்களுடையஅடிமையானவனுக்கு என்ன மெப்படியிருக்கின்றதென்றும் படைகளை கூடசேர்த்துக்கொண்டுபாத்துஷாக்களைப்போல அந்தபட்டணத்தில்போனால் அந்தபாத்துஷாகேழ்ப்பாராகில்நமக்குமிகுந்தமரியாதிசெய்வார் என்றுசொல்ல அதுபோல வேண்டிய படைகளும் அதற்கு தகுந்த சாமான்களும் கொடுத்து உன் மனம்போல்போய் சந்தோஷமாக வரலாமென்று தாய்தகப்பனிடமாக உத்தரவு பெற்றுபடைகளை கூட்டிக்கொண்டு சமுத்திரக் கரையோரமாக நிறுத்திவிட்டு வாயிதாபோலே ஹாத்திம்டமாக அவரிருக்கின்ற இடத்தில் வந்து பார்த்தால்அவர் அங்கே [illegible]பாத்துஷாவின்குமாரன் மிருக்குமனவருத்தமடைந்து சொல்லுகின்றார் நமக்குசொல்லியிருந்தவாக்கைமாறிவிட்டு அந்தப்பட்டணத்துக்குமுன்னால்போனாப்போல்தோனுகின்றது என்று யோசனைபண்ணிநான்குதிக்கிலும்தேடிக்கொண்டிருக்கையில் ஹாத்திமுடைய குதிரை மேய்ந்துக்கொண்டு நிற்கின்றதை அறிந்துஷம்ஸான்பாத்துஷாவிடமாகக்கொண்டு வந்தது குதிரை இதுதானென்றுநிச்சயப்படுத்திக்கொண்டு தன்கூடவந்திருக்கிறபரிகளுக்கு உத்தரவுசெய்தார் நீங்கள் இந்த தோட்டத்தில்போய் நுழைந்துபாருங்களென்றுசொல்ல அப்போதந்த பரிகள் தோட்டத்துக்குள்போய் நாலாபக்கமும்தேடித்திரிகிறார்கள் அப்போது ஒரு பரியானவன் கண்ணில்காணப்பட்டது ஒரு அழகு சவுந்தரியமுள்ள வாலிப



மானமனிதன் ஒரு மரத்தின் கீழிருக்கக் கண்டு திரும்பாமல் எதிர்முகமாகப் பின்னிட்டுக் கொண்டு பாத்துஷாவின் குமாரனிடமாகவந்து சொல்லுகிறதாவது இந்த தோட்டத்தி னுள்ளேபோய்பார்க்கும்போதில்ஒருமரத்தின்கீழே உட்கார்ந்துகொண்டிருக்கிறார் நான் பார்த்துவந்தேன் நீங்கள் சொன்னவர்தானோ அல்லது வேறே மனிதனோ எனக்குத்தெரியாது ஆண்டவன் அறிவானென்று சொன்னவுடனே மெஹறுவர் என்பவர் சருக்கிலெழுந்து அவனையுங் கூட்டிக்கொண்டு அவரிருக்கிற இடத்துக்குப் போய்பார்த்தால் ஹாத்திமானவர் தலையைக்கீழே போட்டுக்கொண்டு மிகுந்த விசனத்தோடு அருகில்போய் நின்றுக்கொண்டு கூப்பிட்டு சொல்லுகிறார்.

ஓ, என்னுடையபிரியமாகியபிறவியே தலையையுயர்த்துமென்றும் நீரென்னஎண்ணிக்கொண்டிருக்கிறீரென்றுங்கேழ்க்க அப்போதுஹாத்திமானவர்தலையைஉயர்த்தி கண்ணைத்திறந்துபார்க்கிறபோது மெஹறுவரென்றுமறந்தெழுந்துமாரோடேகட்டியணைத்துக்கொண்டுபோய் வந்த சங்கதிகளெல்லா மிருவர்களும்கூடி பேசிக்கொண்டுஅந்தோட்டத்தைவிட்டுவெளியில்வந்துபார்த்தால் ஒருபடைகூட்டம்பெரிதாக வந்து இறங்கியிருப்பதையும் சகலமானபெருமைபொருந்தியகூடாரங்களும்மதின் சிங்காரத்தையும் பார்த்து இந்தப் படைகள் யாருடையதென்றும்கேழ்க்க மெஹறுவர் என்பவர்சொன்னார் இதுகளெல்லாம் தங்களுடையதாகவிருக்குமென்று அவனுடையகூடாரத்துக்குள் அழைத்துக்கொண்டு போய் தம்முடையபெருமை பொருந்திய இரத்தினத்தாலிழைத்த சிம்மாதனத்தின்மேல் உட்காரவைத்துவேலைக்காரர்களுக்கு உத்தரவு செய்தார் சீக்கிரமாக பசியாறும்படிக்கு மேலான அன்னமும் கறிகளுகளும்கனிகளும்மிட்டாய்களும் ஷர்பத்துகளும்கொண்டுவாருமென்றுசொல்ல அதுபோல இரத்தினங்களிழைத்த தபக்குகளில் சகலமானபதார்த்தங்களும் சரிகைக[illegible]ல் வேலைசெய்த பட்டிலுடைய விரிப்பின்மேல் கொண்டுவந்து பரப்பிவிட்டிருக்க அப்போது ஹாத்திமும் அவரும் இருந்து பசியாறினார் வெகுநாளைக்குப்பின்புஇப்பேர்ப்பட்டஜீவனம் எனக்குக்கொடுத்தாயென்று ஆண்டவனை மிகுதமாகப் புகழ்ந்திருக்கிறபோதில் மெஹறுவர் நாட்டியமும் ஆடல் பாடல் காரர்களை அழைப்பிக்கும்படிக்கு உத்தரவுசெய்ய அதுபோலேஅவர்கள்வந்து ஆடல்பாடல்வெகுவினோதமானவேடிக்கைகள் அன்றிரவெல்லாம் பாடிக்கொண்டிருக்க ஹாத்

தி மிகுந்த சந்தோஷமாக பார்த்துக்கொண் டிருக்கின்றபோதில் வி டியற்காலமாகி விட்டது அப்போது மெஹறுவர் படைகளுக்கு உத் தரவுசெய்தார் இவ்விடம்விட்டு புறப்படும்படிக்கு (கூச்சுநகாறு) அ டித்து படைகளையெல்லாம் சேர்த்துக்கொண்டு வெகுஆரபாத்துட னே போகும்போதில் அந்த பற்ஜக்கு தீவாந்திரத்து பாத்துஷாவா னவனுக்கு தெரியவந்தது எவ்விதமெனில் அனேக பரிஜாதிகளுட னே பெரும்படைகள்கூட்டமாக அருகில் வருகின்றது இன்னகாரியத் துக்கென்று தெரியவில்லையென்றும் சொல்ல அப்போது பாத்துஷா வானவன்கேட்டுமிகுந்த ஆங்காரத்துடனே தம்முடைய படைகளின் ஸர்தார்களை யழைத்துசொல்லுகிறார் நீங்கள் சீக்கிரமாகப்படைகளை சேர்த்துக்கொண்டுமுன்னால்போய்அவர்களிவ்விடம்வாராமல்வழியை க்கட்டிக் கொள்ளுங்கள் அதுபோல்படைகளைச் சேர்த்துக்கொண்டு போயிருக்கமெஹறுவர் தன்படையுடனே தீவாந்திரத்தினுள்ளேவரு கின்றபோதில் படைகள்வந்து வழி கட்டிக்கொண்டிருப்பதைப் பார் த்து தம்முடைய படையை அவ்விடத்தில் நிறுத்திக்கொண் டிருக் கையில் அந்த பாத்துஷாவின் படையில்நின்று ஒரு சர்தாரானவன் முன்னால்வந்து கேழ்க்கிறான் நீங்கள் மாஹெறயார் சுலைமானியவர்கள் கூடயுத்தம்பண்ணவந்தீர்களா வென்றுகேழ்க்கமெஹறுவர் அம்மொ ழியைக் கேழ்விப்பட்டு தன்னுடைய மனிதனிடமாகச்சொல்லியனுப் பினார்எவ்விதமெனில் நாங்கள்போர் செய்யவரவில்லை ஆனால்பாத்து ஷாவுடைய சந்திப்புக்காக வந்திருக்கிறோமென்று போய்அச்சர்தாரு க்கு சொல்லுமென்றார் அதுபோலவனுக்குபோய்தெரிவிக்க அம்மொ ழியைக்கேட்டுமெஹறுவர் என்பவருக்குசொல்லியனுப்பினனெவ்வி தமெனில்நீங்கள்பாத்துஷாவை காணவேணுமென்று வந்திருப்பதால் நீங்கள் யாதொருசந்தேகமில்லாமல்இவ்விடத்தில்தம்முடையபடைக ளோடுகூடாரம்டித்துக்கொண்டிருக்கலாம்பின்புபாத்துஷாவுக்கு ஒரு அர்சியில்இந்தசங்கதிகளைக்குறித்து எழுதிதெரியப்படுத்தஅப்போது பாத்துஷா அந்த அர்சியைபார்த்துஅவருக்குஉத்தரவுசெய்தார் எவ்வித மானால்அவர்கள் நம்மைக்கண்டு சந்திக்கவந்திருப்பதாலவர்களைமிகுந்த மானமேன்மையாக்நம்முடைய மஹால்களில்ஒன்றைதுப்பரவுபடுத்தி சிங்காரித்துஅதிலவர்களையழைத்துக்கொண்டு வைக்கவேண்டுமென் றுபதிலெழுதியனுப்ப அம்மொழியைசர்தாரென்பவன் பார்த்துக்கொ ண்டுஅதுபோல் ஒரு மஹாலைதுப்பரவுசெய்து சிங்காரித்துவைக்கும் படிக்கு உத்தரவு செய்துவிட்டு மெஹறுவர் இருக்கும்படிக்கு போய



சங்கதிகளையெல்லாம் தெரியப்படுத்தி தங்களுக்காக பாத்துஷாவுத் தரவுசெய்திருக்கிறார் தம்முடைய அரண்மனையில் ஒரு மாஹாலை சி ங்காரித்து அதில் கொண்டுவந்து தங்களைவைக்கும்படிக்குதாங்களெ ன்கூட வரவேண்டுமென்றுசொல்ல அப்போது மெஹறுவர் தம்மு டைய படைகளையெல்லாம் ஒரு பெரியதோட்டத்தி லிறங்கும்படிக் கு திட்டஞ்செய்துவிட்டு தாமும் ஹாத்திமானவரும் தம்முடையப டையில் கொஞ்சம் சர்தார்களும் தம்முடைய மந்திரிபிரதானிகளுட னேபட்டணத்தில் போய்ச்சேர்ந்தார்.

பின்பு அவர்கள் சர்தாரானவர்கள் எல்லபேரையு மழைத்துக் கொண்டு இவர்களுக்காக சிங்காரித்திருந்த மாஹாலில் கொண்டுபோ ய் மிகுந்த சிறப்பாக வைத்துவிட்டு பாத்துஷாவுக்குத் தெரியப்படுத் தினார் உடனேமாஹெறயார்சுலைமானி என்பவர்தன்னுடையமந்திரியை அழைத்துச் சொல்லுகிறார் நீர் போய்வந்திருக்கிறவர்களுடனே கே ழ்க்கவேண்டியது நீங்கள் இவ்விடம்வந்த சபபென்னவென்று கேட் டு வாருமென்றுசொல்ல அதுபோல்மந்திரி அவர்களிடம் போனார் உடனே அவருக்குவேண்டியமரியாதைசெய்தார்கள் அப்போது மந் திரியானவர் கேழ்க்கிறார் நீங்க ளிவ்விடம்வந்த சபபென்னவென்று கேழ்க்க அப்போது மெஹறுவர் சொல்லுகிறார் இந்த பாத்துஷாவி ன் குமாரனானவர் எமனதேசமாகயிருக்கும் அவர் தம்முடைய பாத் துஷாவைக்கண்டு வரவேண்டுமென்றுசொல்ல நான் அவரையழை த்துக்கொண்டு வந்திருக்கிறே னென்றுசொல்ல அதுபோல் பாத்து ஷாவுக்கு போய்தெரிவிக்க அவர்கேட்டு சந்தோஷப்பட்டு நல்லது அவர்கள் நம்மைக்காணவந்தபடியா லவர்களுக்கு விருந்துசெய்து பி ன்னால் நாமழைக்கவேண்டு மென்றுசொல்ல அதுபோல் மறுநாள் ஹாத்திமுக்கும்மெஹறுவர்க்கு மற்றவர்களுக்கெல்லாம் வெகுவிதே தமான சமையல்செய்து விருந்தளித்து மறுநாள் பாத்துஷாவான வர் நவரத்தினமிழைத்த நாற்காலிகள்கொண்டுவந்து போடும்படிக்கு செய்துவித்து ஹாத்திமை அதிலிருக்கச்செய்து மிகுந்த கிருபையுட னே பாத்துஷாவென்பவர் கேழ்க்கிறார் ஓ பாத்துஷாவின்குமாரனே நீர் இந்தசீமைக்கு என்ன எண்ணங்கொண்டுவந்தீர் எவ்விதமாகயி துவரையில் வந்துசேர்ந்தீர் என்றுகேழ்க்க அப்போது ஹாத்திமென் பவர்சொல்லுகிறார் ஆண்டவன் தன்படைப்பிலுள்ளவர்கள்மேல் மி குந்த கிருபையுள்ளவன் அவனெவ்விதத்திலும் இவ்விடமென்னைக்

கொண்டுவந்து சேர்த்தானென்றுசொல்லி ஹசன்பானுவென்பவன்
முத்தினுடைய அடையாளத்துக்காககொடுத்திருந்த கோழிமுட்டை
ப்பிரமாணமுள்ள வெள்ளியுருண்டையெடுத்து முன்னால் வைத்துச்
சொல்லுகிறார் இதைக்குறித்து நான்வந்திருக்கிறேனிதைப்போலொ
த்தஜோடு தாங்கள்கிருபைவைத்துக்கொடுத்தால் நலமென்றுசொல்ல
மாஹெயார் கலேமானீ இவ்விதமான முத்தெங்கேயிருக்கிற தென்று
சொல்ல ஹாத்திமானவர் தங்களிடமாக யிருக்கிறதென்று கேள்விப்
பட்டு நான் வந்திருப்பதால் தாங்களென்பேரில் கிருபைவைத்து எ
னக்கந்த முத்தைகொடுப்பீர்களாகில் நலமாகும் என்னுடைய எண்
ணம் நிறைவேறு மென்றுசொல்ல அப்போது பாத்துஷாசொல்லுகி
றார் எனக்கொரு ஷரத்திருக்கின்றது அதை நிறைவேற்றினால் அந்
த முத்தின்கூட என்னுடையபெண்ணையும் கொடுப்பேனென்றுசொ
ல்ல அம்மொழியை ஹாத்திம்கேட்டு தன்தலையை கீழேபோட்டுக்
கொண்டு ஒரு நிமிஷத்துக்குப்பின்பு தலையையுயர்த்தி மிகுந்த வணக்
கமாய்ச்சொல்கிறான் எனக்கு முத்துவேண்டு மல்லாமல் தங்களு
டைய பெண்ணுக்கு தாங்கள் முக்தாரென்றுஞ்சொல்லி நீர் யாரை
வேண்டிக்கொடுப்பீரோ தங்களிஷ்டமென்றுசொல்ல அம்மொழியை
பாத்துஷாகேட்டுச் சொல்லுகின்றார் நல்லது அந்த முத்தினுடைய
பிறவியின் வரலாற்றை யாதொருகுறைவுமில்லாமல் சொல்வீராகில்
அந்த முத்தையும் என்பெண்ணையும் இவ்விடத்தி லொப்பித்து வி
டுவேன் பின்பு உம்முடைய இஷ்டம்போல் நீர்யாருக்குவேண்டுமோ
அவர்களுக்கு கொடுக்கலா மென்றுசொல்ல உடனே ஹாதிமென்ப
வர் பாத்துஷாவுக்கு தெரியப்படுத்தினார் மெஹறுவர் நம்முடைய
ஜாகையில் இருப்பதால் அவரை தாங்கள் அழைப்பிக்க வேண்டு
மென்று சொல்ல அதுபோல் அழைப்பித்தார் அவர்வந்தவுடனே எ
ழுந்து கழுத்தோடும் மார்போடும் அணைத்து தன்னருகில் இருத்தி
னையிழுத்து நாற்காலியி லிருக்கும்படி செய்து ஹாத்திமானவர்
மிகுந்தவணக்கமாக பாத்துஷாவைப்பார்த்து முத்தினுடைய பிறவி
யின் வரலாறுகளைச்சொல்ல அவர்களுஞ் செய்தார்கள் அப்போது
மாஹெயார் கலேமானீ தலையைக்கீழே போட்டுக்கொண்டு முன்னால்
ஒருஜோடு பறவைஜாதிகள் முத்தினுடையபிறவியின்வரலாறுகளைச்
சொன்னதுபோல் யாதொன்றும் குறைவில்லாமல் ஆதிமுதல் அந்
தம்வரையில் சவிஸ்தாரமாகச்சொல்லித் தெரிவித்தார் அப்போ தந்த
பாத்துஷா வென்பவர் மிகுந்த ஆச்சரியப்பட்டு உனக்கே இந்த வல்



லமையும் பெருமையும் தகுமென்றும் ஹாத்திமைமிகுந்தமாக வர்
ணித்து போற்றி புகழ்ந்து தம்முடைய சிம்மாசனத்தி லிருந்தெழு
ந்து அரைக்குள்ளேபோய் அந்த முத்தை கையிலெடுத்துக் கொ
ண்டுவந்து ஹாத்திமுக்கு முன்னில்வைத்து இந்த முத்தை நீர் எடுத்
துக்கொண்டு எனக்கு நீர் மருமக னானென்று மிகுந்த மனக்களிப்
புடனே சந்தோஷமாக கலியாணத்துக்குஆகவேண்டிய சாமான்களை
த் தயார் பண்ணும்படிக்கு உத்தரவுசெய்ய அதுபோல் செய்கின்றார்
அந்த முத்தை ஹாத்திமானவர்கண்டுமிகுந்தசந்தோஷத்தை யடைந்
தார் பின்புஅவரைஅவர்கள் மாப்பிள்ளையாக அனேகமான மந்திரிபிர
தானிகளும் பெரிய மனிதர்களும் அனேக வேலைக்காரர்களும் பணி
விடை செய்யப்பட்டவர்களுமாகக்கலியாணப்பந்தலில்வந்திருக்க அப்
போது தன்னுடைய பெண்ணை அனேகவிதமான சிங்காரிப்புகளால்
சிங்காரித்துஇரத்தினங்களாலிழைத்தநகைகளாலும் சரிகைகளாலும்
காறசிப்பி வேலைகள் செய்த உடுப்புகளாலும் சிங்காரித்துக்கொண்டு
தோழிகளுடனே வந்துநிற்க அவளை ஹாத்திமானவர்பார்த்தவுடனே
எழுந்து நின்றுகொண்டு பாத்துஷாவுக்கு மிகுந்த வணக்கத்துடனே
சொல்லுகின்றார் எவ்விதமெனில் பாத்துஷாவேஇவளை யென்தங்கை
யைப்போல் பாவித்துக்கொண்டு தங்களுடையசவாலை நிறைவேற்
றினேன் நீர்சந்தோஷமாகிவிட்டீர்அதுபோல் என்சவாலைநிறைவேற்
றி என்னை தாங்கள் சந்தோஷப்படுத்தவேண்டு மென்றுசொல்லஅப்
போது பாத்துஷா சொல்லுகின்றார் அதற்கென்னசந்தேகம் நானுமது
துபோல் சந்தோஷப்படுத்துவேன் நீர் எண்ணியஎண்ணத்தை எனக்
கு தெரியப் படுத்த வேண்டுமென்றுசொல்ல பின்பு ஹாத்திமானவர்
சொல்லுகின்றார் எவ்விதமெனில்மெஹறுவர் என்பவருக்குநான் வாக்
குக்கொடுத்திருக்கின்றேன் முத்தை நான்எடுத்துக்கொள்வேனென்றும்
பெண்ணை உனக்குநிகாமுடித்துதருகிறேனென்றும் அவர்யேமான்
தேசத்துப் பரிஜாதியானபாத்துஷாவின் குமாரன்தாங்களும் பரிஜாதி
யானபடியால் அவருக்கு நிகா முடித்துக் கொடுக்கவேண்டு மென்று
சொல்ல அம்மொழியைக் கேட்டு நல்லது உன்மனம்போல் செ
ய்யென்று சொல்ல அப்போது மெஹறுவரை மாப்பிள்ளைகோலமாக
க்கொண்டுவந்து எல்லாச்சபைகளுக்கும்கூடியிருந்து அவர்களுடைய
வழக்கம்போல் செய்கின்ற தலங்கள்செய்து புலாவுகளும் பதார்த்
தங்களும் கறிகளும் மிட்டாய்களும் கொண்டுவந்து பந்தி பரிமாறி
பின்பு மெஹறுவர்என்பவருக்கு அந்தப் பெண்ணை நிகாசெய்துவிட்டு

அவரவர்கள் தங்கள்தங்கள் வீடுகளுக்குப்போய்விட்டார்கள்.
அப்போது அந்தபாத்துஷாவை ஹாத்திம்கேட்டார் அம்முத்தை
என்னிடமாகக்கொடுத்தால்ஹசன்பானு வென்பவளுக்குகொடுப்பே
ன் மெஹறுருவர் என்னைக்கொண்டபடிக்கு ஆண்டவன்நிறைவேற்றிய
பின் ஆஷக்குமாஷுக்கு ஒன்றாகச்சேர்ந்து இன்பமென்றசாகரத்தில்
முழுகிதாங்கள்கொண்ட எண்ணங்கள் நிறைவேறிற்றுஒருமாசத்துக்
குப்பின்பு ஹாத்திம் அம்முத்தைபெற்றுக்கொண்டுமெஹறுருவர்என்ப
வரும்பாத்துஷாவுடைய உத்தரவுபெற்று பெண்ணையும் கூடகூட்டிக்
கொண்டுதம்முடையபடையோடு அவ்விடம்விட்டுபுறப்பட்டுசிறிது
நாளைக்குப்பின்பு அந்த சமுத்திரககரையோரமாகவந்திறங்கி ஹாத்தி
மானவர்மெஹறுருவர் என்பவரைப்பார்த்துசொல்லுகின்றார் ஐ, என்னு
டையபிரியமாகியதோழனே உன்னுடையநகரம் அருகாமையிலிருப்ப
தால்நீர் உம்முடையபட்டணத்துக்குஇப்படியேநேராகப்போய்விடும்
நான் போறேனென்று சொல்ல மெஹறுருவர் சொல்லுகின்றார் என்
னுடைய அருமையான துணைவனே நீர்சொல்லுகின்றது இனையிந்
துக்கு பாத்திரமாகயிருக்குமா நீர் சொல்வது இதுசரியான தல்ல
இந்த அகோரமானதேவுகள் கூட்டம் நிறைந்திருக்கின்ற வனாந்திரத்
தில் உங்களைதனித்து நான் அனுப்புகின்றது ஆண்டவனுக்கும் லோக
த்தாருக்கும் பொருத்தமாக யிருக்குமா நான்தங்களைவிட்டு சவுக்கிய
மாக என்னுடைய பட்டணம்போகின்றது தர்மமல்ல ஆனால் என்னு
டைய எண்ணமானது தங்களை ஷம்ஷ்பாத்துஷாவிடமாகக்கொண்டு
போய்ச்சேர்த்து அவர்களையும்தாங்கள்கண்டுமிலாகத்தானபின்பு என்
னுடைய சீமைக்குப்போவேனென்றுசொல்ல அப்போதுஹாத்திமா
னவர் நல்லதுநம்முடைய மனம்போல்செய்யுமென்றுசொல்லிதம்மு
டையபடைகளுக்குஉத்தரவுசெய்தார் சுருக்கில்தங்களுக்குஆகவேண்
டிய சாமான்களைதயார் செய்யுங்களென்று தாமும் தன்பெண்சாதியு
மாகவழக்கம்போல்ஹாத்திமானவரும்குதிரைசவாரியாகிஅவ்விடம்வி
ட்டு படைகளைசேர்த்துக்கொண்டு நடந்துசிறிதுநாளைக்குப்பின்புபா
தைகளையெல்லாம் கடந்துக்கொண்டு கஹர்மான் என்றசமுத்திரத்
தையுங் கடந்துஅப்புறமொரு காட்டில்போயிறங்கினார்கள் அப்போ
து தேவுகளுக்கு தெரியவந்து பரிஜாதிபடைகள் நம்முடைய காட்
டில் வந்திறங்கி யிருக்கின்றதென்று தங்கள்படைகளைச் சேர்த்
துக்கொண்டு வந்து இவர்களுடையபடைக்கருகாமையில் வந்திறங்கி
னார்கள் அப்போது மெஹறுருவர் என்பவர் தம்முடைய பரிஜாதியி



லொருவனையழைத்து சொல்லுகின்றார்எவ்விதமெனில் நீங்கள்ஜுஜ
ஹத்து சுலைமான் அலைகிஸ்ஸலாமுடையஅடிமையானவர்கள் நாங்கள்
உங்களிடமாய் போருக்காக வரவில்லை நீங்கள் எங்களோடுபோர்ச்
செய்யபடையை ஏன்கொண்டு வந்தீர்கள் நாங்கள் ஷம்ஷ்பாத்துஷா
என்பவர் வெகுகாலமாய் மாயமாகப்போயிருந்து இப்போது தம்மு
டைய ராஜாங்க ஆள்கையில் வந்திருப்பதால்அவருடைய சந்திப்புக்
கு போறோமேதவிர நாங்கள் சண்டைக்காக வரவில்லையென்றும்
போய்சொல்லுமென்று ஆனொருவனை யனுப்ப அதுபோல் அந்த
தேவின் சர்தாருக்கறிவிக்க அவர்கள் நாங்களும்உங்களைக்கண்டு
போகலாமென்று வந்தோமேதவிர வேறில்லையென்றுசொல்ல மெஹ
றுருவர்க்கறிவிக்க அவர்களையழைத்து வரும்படிக்கு உத்தரவுசெய்து
ஹாத்திமானவரை ஒரு மூலையில் மறைவாக வைத்து அந்த தேவு
களெல்லா மெஹறுருவரைக் கண்டுகொள்ள வந்தார்கள் அப்போதவர்
களுக்கு வேண்டியபடி சமையல்செய்துவிதவிதமாக எல்லோருக்கு
ம்விருந்தளித்துசாராயம் வேண்டியவர்களுக்கும்கொடுத்து அவர்களைப்
போகும்படிக்கு உத்தரவுசெய்து தாங்களும்தங்கள்படைகளைசேர்த்
துக்கொண்டு தேவுகளுடைய வனாந்திரமெல்லாம் கடந்துஷம்ஷ்பாத்
துஷாவின எல்லையில் போயிறங்கினார்கள் அப்போது அந்த ஊர்ப
த்தி லுள்ளவர்கள் ஷம்ஷ்பாத்துஷாவுடைய தெரிசனைக்காகவென்
ஹாத்திமும் மெஹறுருவர் என்பவரும்வருகின்றசேதியைதெரிவிக்க அ
வர்உடனேதம்முடையபடைகளைகூட்டிக்கொண்டுஇவர்களை தங்கள
மஹாலுக்கு அழைத்துக்கொண்டுவரப்போகின்றார் அப்போதுஷம்ஷ்
பாத்துஷாவருகின்றதைகேள்விப்பட்டு ஹாத்திமும்மெஹறுருவரும் தம்
முடையபடைகளைகூட்டிக்கொண்டு எதிர்கொண்டபுறப்பட்டுவந்துஇரு
வர்படைகளுமெதிராகவந்துவிட்டது அப்போதுவெளியில் மிலாகத்
தென்றசந்திப்புஒருவர்க்கொருவர்கண்டுமிகுந்தசந்தோஷத்தையடை
து ஒருவர்க்கொருவர் கையைப்பிடித்துக் கொண்டு ஷம்ஷ் பாத்து
ஷாவுக்கு ஹாத்திமென்பவர் தன்னுடைய செய்தியும் மெஹறுருவ
செய்தி யாதொன்றும் குறைவில்லாமல் சொல்லமெஹறுருவர் என்
பவருக்கு மிகுந்த மரியாதியாகப்பேசி அவரைப்பார்த்து சொல்லுகின
றார் நீர் செய்த உபகாரமும் நன்றியுமெனக்கு செய்ததாகயிருக்கும
இவ்வாலிபனை யாதொருதுன்பமுமில்லாமல் என்னிடமவரைக்
கொண்டுவந்துசேர்த்தீர் நான் இரவும்பகலும் இவருக்காகவிசனத்தை
யடைந்துக்கொண்டு மிருந்தேன் இவருடைய சிந்தனையிலும் [illegible]

னுடைய பெண்சாதிபிள்ளைகள் ஆஸ்திபாஸ்தி தவுலத்தின்பேரில் எ
னக்கு இன்பமில்லாமல் ஆண்டவனுதவியாலும் உம்முடையகிருபை
யாலும் இவரைநான் உயிரோடேகாணும்படி ஆச்சுதென்று மெஹுரு
வர் என்பவரைமிகுதமாகப்போற்றி வாழ்த்தி ஒருபெரியதோட்டத்தி
ல் அவர்கள்படைகளுடனே இறக்கிவிட்டு இவர்களுக்கு (௩ம) நாள்
வரைக்கும் விருந்தளித்து விநோதமான ஆடல்பாடலும்செய்வித்து
பின்பு நாற்பத்தோராநாள் ஹாத்திமானவரும் மெஹுருவரும்ஷம்ஷு
பாத்துஷாவினிடமாக தங்கள் தேசத்துக்குப் போகும்படிக்கு உத்த
ரவுகேழ்க்க நல்லதென்று உத்தரவுகொடுத்தார்.

அப்போது ஹாத்திமை தழுவிமுத்திகொண்டு வெகுவிசனப்ப
ட்டு சொல்லுகின்றார் நானிப்போது உங்களைவிட்டு என்தேசம்போ
னால் எனக்கு எந்நேர முங்களுடைய நினைவே மிகுதமாக யிருக்
கும் ஆகையால் என்பேரில் கிருபைவைத்து தங்களுடைய சுகசவுக்
கியத்தைக்குறித்து எனக்கறிவிக்க வேண்டுமென்றும்ஹாத்திமுடை
யஉத்தரவுபெற்றுதாமும்தன்பெண்சாதி படைகளுடனே தம்முடை
யதேசத்துக்குப்போய்விட்டார் ஷம்ஷுபாத்துஷாவானவர்ஹாத்திமை
பார்த்துசொல்லுகின்றார் ஓ எமனுடைய (ஷாஜாதாவே) இப்போ
து நீர் வெளிப்பயணத்தில் மிகுந்த வருத்தமும் உழைப்பு மெடுத்
துக் கொண்டு வந்தீர் தங்களுடைய தேசம் தூரமாயிருப்பதால்
நீர்தனித்துப்போவதுநன்மையல்ல ஆனால்என்னுடைய பரிகளிடமா
க தம்மைகூட்டியனுப்புகிறேன் ஆண்டவன் கிருபையால் ஒருமூச்சி
ல்தம்முடைய பட்டணத்தில்போய் விடும்படிசெய்கின்றேனென்று
சொல்ல ஹாத்திமானவர் தங்களிஷ்டம்போல்செய்யலாமென்றுசொ
ல்ல அப்போது தம்முடைய பரிகளில் மிகுந்தவல்லமைசாலிகளைகூ
ப்பிட்டு உத்தரவுசெய்தார் நீங்கள் இவரை ஒரு தகத்தில் வைத்துக்
கொண்டு வெகுசாக்கிரதையாக எமனில்கொண்டுபோய்விட்டு வாரு
மென்று உத்தரவு கொடுக்க ஹாத்திமானவர் சொல்லுகின்றார் நான்
ஷாஹே ஆபாதுக்குப்போகவேனென்று சொல்ல அப்படி உத்தரவாச்சு
து அப்பரிசாதிகள் ஒரு தகத்தை தூக்கிகொண்டுவந்தார்கள் அப்போதுஷ
ம்ஷுபாத்துஷாவை ஹாத்திம் பார்த்து சொல்லுகின்றார் நீங்கள்என
க்காகவேண்டி மிகுந்த வருத்தமடைந்தீர்கள் ஆகையால்
எனக்குதாங்கள் செய்த நன்றியைநான்மறக்கமாட்டேனென்றுசொல்
ல அவர் ஹாத்திமை மிகுதமாகப்போற்றி வாழ்த்திசொன்னார்நாங்க



ங்களுக்கென்ன உபகாரம்பண்ணினேன் தங்களால் நான் சகலபாக்கி
யத்தை யடைந்தேனென்று வேண்டிய மரியாதைகள்செய்து எப்போ
தும் என்னுடையபேரில் கிருபைவைத்து ஆண்டவனிடமாக தாங்க
ள்பிரார்த்திக்கவேண்டுமென்றும் தகத்திலுட்காரவைத்து பரிகளுக்கு
உத்தரவுசெய்ய அப்போது பரிகள் தகத்தைதூக்கி பறந்துக்கொண்
டு ஷாஹே ஆபாதென்றபட்டணத்தைப்பார்க்க இரவும்பகலுமாகப்ப
றந்து சிலவிடங்களில்இறங்கி இளைப்பாறி பசிதாகத்தீர்த்துக்கொண்டிவ்
விதமாக ஒருமாசத்தில் பட்டணத்துக் கருகாமையில்வந்து தகத்தை
இறக்கிவிட்டு பரிஜாதிகள்போக உத்தரவுகேழ்க்க தான்பட்டணம்வ
ந்து சேர்ந்ததுக்காக ஒரு கடிதமெழுதிக்கொடுத்து பாத்துஷாவுக்கு
என்னுடைய சலாம்சொல்லுமென்று பரிஜாதிகளை யனுப்பியபின் தா
ன்பட்டணம் வந்துசேர்ந்தார் அப்போது மனிதர்கள் ஹசன்பானுவு
க்குசெய்தியை யறிவித்தார்கள் ஷவ்விதமெனில் ஆண்டவன் கிருபை
யால் ஹாத்திமானவர் யாதொரு குறைவில்லாமல் சரீரசுவா
த்தியமாக வந்திருக்கின்றாரென்றுசொல்ல வழக்கம்போல் அழைத்
து உள்ளே கொண்டு போய் இரத்தினத்தினால் விழைத்த நாற்
காலியி லிருக்கும்படியாகச் செய்தாள் அப்போது ஹாத்திமான
வர் யாதொன்றும் பேசாமலிருந்து தன்னுடைய பையிலிரு
ந்த முத்தையெடுத்து அவ்விடத்தி லிருந்த மனிதர்களுக்கு காண்பி
த்து தான்போய் கொண்டுவந்த சங்கதிகளையெல்லாம் சவிஸ்தாரமாக
ஆதிமுதலந்தவரையில்சொல்லியபின்பு அந்தமுத்தை யெடுத்து ஹச
ன்பானுவி னிடமாகக் கொடுத்தார்.

அதைப் பார்த்தவுடனே மிகுந்த சந்தோஷத்தை யடைந்து
ஹாத்திமுடையவல்லமைத்தனத்தையும்தைரியத்தையுங்குறித்துமிகு
தமாகவாழ்த்தி புகழ்ந் திருக்கின்றவேளையில் ஹாத்திமானவர் எ
ழுந்து நின்று ஹசன்பானுவிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு
(மெஹுமான்ஸரு) அல்லது கார்வான்ஸரென்கிற சத்திரத்துக்கு
வந்துமுனீர்ஷாமி என்பவர்கூடயிலாகத்தாகிதான்போய்வந்த வர்த்த
மானமெல்லாம் தெரியப்படுத்தி அவனுடைய கையை தன்னுடைய
கையில் பிடித்துக்கொண்டு சொல்லுகின்றார் ஓ என்னுடையதோழ
னே இனிநீ சந்தோஷமாக யாதொருவிதகவலையில்லாமல் சவால்களெ
ல்லாம் முடிவாகி அறுதிவந்திருக்கிறது இன்னம் ஒரு சவாலிருக்கி
றது ஆண்டவன்கிருபையால் அதையும் சரியாக்கிவிடுவேன் இப்பொ

தேடுகின்றோம் அப்படியும்அவனுடைய பிரேதமானது கிடைக்கா
மலிருக்கின்றது இந்த கிணற்றில் என்ன விதமான பூத பசாசுகளி
ருக்கின்றதோ கொண்டுபோனது தெரியவில்லை அல்லது பெரும்பா
ம்பிருந்து முழுங்கி விட்டதோ வென்றும் இந்த கிணற்றில் தண்ணீ
ர்மிகுதமாக யிருப்பதால் தங்களுடையஉயிருக்காகப்பயந்துஒருவரும்
இதிலிறங்க மாட்டோமென்றும் சொல்லுகின்றார்கள் இவ்விதமாகப்
பேசிக்கொண் டிருக்கையில் அவனுடைய தாய்தகப்பன் மிகுந்த துக்
கமான அழுகையோடும் கண்களை கிழித்துக்கொண்டு மண்ணைவாரி
த்தலைகளில் போட்டுக்கொண்டு அவ்விடம்வந்துசேர்ந்துஅந்தகிணற்
றின் அருகிலிருந்துகொண்டு எவ்விதமான அபரத்தை யடைந்து அ
ழுகின்றார்களேயானால்ஒட்டுவைபக்குதாரமுதல்கல்நெஞ்சுள்ளவர்களி
ன்மனமுமுழுதுமுருகி நீருகிவிடும்இவ்விதமாகவிவர்கள் அழுகின்றதை
ப்பார்த்துஹாத்திமானவர் மிகுந்த விசனத்தையடைந்துமனங்கலங்கி
தடுமாறிப்போய் அவ்விருவர்களையும் பார்த்து சொல்லுகின்றார்
நீங்கள் இவ்விதமாகப்புலம்புகின்றதால் உங்களுக்கென்னபலன்கிடை
க்கும் ஆண்டவன்செய லப்படியிருப்பதால் நீங்கள் விசனப்படுவதை
நீக்கி பொறுமைசெய்யவேண்டுமென்றுசொல்லஅப்போதவர்கள்சொ
ல்லுகின்றார் ஓ,வாலிபனேநீர்சொல்வது சரிதான்ஆனால்அவனுடைய
பிரேதமானதுஅகப்படுமாகில்அவனைஅடக்கஞ்செய்துஅவனுடை
யமுகத்தை பார்த்துக்கொண்டாவது எங்களுடைய மனவருத்தம் நீங்கி
திருப்தி யடைந்து கொஞ்சமானது சலிப்பு தீர்ந்து சபர் செய்யக்கூடு
மெவ்விதமெனில்இறந்துபோனவர்களுடையஅடையாளம்மிகுதமாக
யிருக்கின்றதுஎன்னென்னபிரயத்தனம்செய்கின்றோம் அதுவுமல்லா
மல்வேண்டியபணங்காசுகள்கொடுக்கிறோம் நம்முடைய வருத்தமும்
சங்கடமும்பார்த்துஅதைதீர்க்க ஒருவருக்கு மனமிரக்கமில்லாமலும்
இந்தகிணற்றிலிறங்கப்பயந்து எவ்விதமாகாமுயிர்துணிந்து இந்தபி
ரேதத்தையெடுக்க நமக்கென்னவந்திருக்கின்றதென்று அன்னியர்கள்
நினைப்பதால் அவர்களுக்கு இரக்கமெவ்விதமாகயிருக்கும்அவர்கள்உ
யிரையிழக்கஇவ்விதமாகச்சொல்லி புலம்பிக்கொண்டிருக்க ஹாத்தி
மானவர் அவர்களுக்கு சொல்லுகின்றார் நீங்கள் யாதொன்றுக்குமச்
சப்படவேண்டாம் நானவனென்னுடையசிரசை ஆண்டவனுக்காக
உள்ளங்கைநெல்லிக்கனியைப்போல்வைத்துக்கொண்டு திரிகிறேன்
என்னுடையபிரியமெவ்விதமாகயிருக்கின்றதென்றால் இறகுஉபயோ
கமில்லாமல் என்னுயிர்போவதால்இதினாலெனக்கொரு பலனுமில்லை



ஆனால்ஒருசகாயம்செய்து அதனால் என்னுயிர்போனால்எனக்குரிகும்
ம பலன் ஆண்டவனால் கிடைக்குமென்றும் நானிருக்கின்றேன் என்
னுடைய உயிர்போவது எனக்கொருவருத்தமில்லை ஆகையாலிந்த கு
ளத்தில்முழுகி உன்னுடையமகனின்பிரேதத்தைதேடிக்கொண்டுவரு
கிறவரையிலும் நீங்கள் என்வழியைப் பார்த்துக்கொண் டிவ்விடத்தி
லிருக்கவேண்டுமென்றுசொல்ல அப்போதவர்கள் சொல்லுகின்றார்
ஓ, வாலிபனே எங்களுக்காக நீ உன்னுடையஉயிரை பெரிதென்றெ
ண்ணாமலிந்தகிணற்றி லிறங்குகிறேனென்றும்சொல்வதால்நாங்கள்
விடத்தில்தானே இரவும்பகலுமாக காத்துக்கொண் டிருப்போமென்
றுசொல்ல அப்போது ஹாத்திம் சொல்லுகின்றார் நீங்களெனக்காக
வேண்டி இவ்விடத்தில் ஒரு மாசம்வரையிருந்து பாருங்களப்படி
க்கு நான் திரும்பிவந்தாலாச்சுது இல்லாவிடில் தங்களுடையவீட்டுக்
குப் போய்விடலாமென்றும் இவ்விதமான மொழிகளை சொல்லிய
பின்பு அந்த ஆவில் கண்ணை மூடிக்கொண்டு குதித்து சிலநே
ரம்பொறுத்துதன்னுடையகால்கள் நிலத்தில்தங்கினவுடனேகண்ணை
த்திறந்துபார்த்தால் அந்ததண்ணீருமில்லாமல்யாதொன்றுங்காணுமல்
ஒரு மைதான வழிதோணப்பட்டு ஒரே வெளிச்சமாகயிருந்தது முன்
னால் நடந்தால் அவ்விடத்தில் ஒருதோட்டம் மிகுந்தவிசித்திரமாகவு
ம் கதவுகள்திறந்திருக்கக்கண்டு அதில்யாதொருஅச்சமில்லாமல் உள்
ளே நுழைந்துபோகின்றார் பார்த்தால் விதவிதமான பூவுகள்பூத்து
மலர்ந்து எங்குமொரேவாசனையாகவும் இன்னமவ்விடத்திலுள்ள
விருட்சங்கள் மிகுந்த அழகுள்ள கனிவர்க்கங்கள் குலைகுலையாகப்ப
ழுத்துசொரிகிறது அக்கனிகளுடைய நுட்பமான வாசனையினாலும்
பூக்களுடைய வாசனையினாலும் தலைமூளை குளிர்ச்சி யடைந்துவிட்ட
து இவ்விதமானபூவுகளும் கனிவர்க்கத்தின் சோலைகளு மிருப்பதால்
சுத்திப் பார்க்கலாமென்ற எண்ணத்தால் அவ்விடமெங்கும் சுற்றிப்
பார்க்கின்றபோதில் ஒருபக்கத்திலொரு கூட்டமாக பரிகளிருக்கின்ற
தைப்பார்த்தால் இரத்தினசிம்மாசனத்தில் ஒரு வாலிபன் அழகுபொ
ருந்திய வடிவுள்ளவனிருக்கக்கண்டு ஹாத்திமானவர் அச்சப்பட்டோ
டி ஒரு மரத்தின்மறைவில் ஒளிந்துநின்று வேடிக்கை பார்த்துக்கொ
ண்டிருந்தார் அவ்விதமாய்நிற்கையில் அந்தபரிகளுடையபார்வை
யவர்மேல் விழுந்தவுடனே அந்தபரிகள் மிகுந்த சந்தோஷப்பட்டு இ
தென்ன ஆச்சரியம் ஒரு மனிதனெங்கேயோ இவ்விடம் வெகுகஷ்டமாய் வந்து
நிற்கின்றானென்று தங்களுடைய சர்தாரிடமாகப்போய

மனங் கல்லென்றும்] சொல்லுகின்றபழமொழி மெய்யாகஇருக்கின்ற
து நீசொன்னவாக்கியங்களைப்பார்த்தால் உன்னுடையதாய் தகப்பன்
அவ்விடத்திலபடுகின்றபாடுகள் உனக்காக இவ்விதமென்றும் சொல்
லக்கூடாது அப்படியவர்களிருக்க நீஇவ்விடத்திலிவ்விதமானசந்தோ
ஷத்தை யடைந்துக்கொண் டிருக்கின்றது ஞாயமல்லவென்றமொழி
யைக்கேட்டுசொல்லுகின்றுனெவ்விதமெனில்இப்போது என்னுடை
யபொல்லாங்கென்றகெட்டவேளையால்நான் அவள்கையிலகப்பட்டுக்
கொண்டிருக்கிறேன் ஆஞ்ஞையள்என்னையனுப்புவாளாகில் நான்போய்
அவர்களைமனம்தேற்றிவருவேனென்றும்அப்போது ஹாத்திம்சொல்
லுகின்றார்நல்லது உன்னுடையசங்கதியை அந்தப்பரியானவளுக்குதெ
ரியப்படுத்துகிறேனென்று அவள்பக்கம்திரும்பிப்பார்த்துசொல்லுகி
ன்றார் ஓபெண்கள் சிகாமணியே,மிகுந்தகுணசாலியாகிய அழகுபொ
ருந்தியரூபவதியே, அருமைசெய்கின்ற வல்லமைசாலியே,பெருமை
யுள்ள நடத்தையான மேன்மைபெற்றசிரோமணியே, விசனமடைகி
ன்றவர்களுடைய மனவருத்தங்களை தீர்க்கும்படியான விபரீதமான
நன்றியும் தர்மம் செய்கின்ற இரக்கமுள்ளவளே,இம்மொழிகளுக்கெ
ல்லாம் மேன்மையாகிய நவமணியே. நான்சொல்லும் மொழியைஎன்
பேரில் கிருபைவைத்துகேட்கவேண்டும் எவ்விதமெனில் இந்தவா
லிபனுடைய தாய் தகப்பன் அக்கினிகுண்டத்தில் முழுகிவேதனைய
டைந்துருகிமெழுகாகி வேஷமாறி யிருக்கின்றார்களாகையாலிந்தவா
லிபனுக்கு (உ-௩) நாளைக்கு உத்தரவுதாங்கள் கொடுப்பீராகில் இவர்
போய்அவர்களுடையமனவருத்தத்தைஆறுதல்செய்து கட்டித்தழுவி
மாரோடணைத்து பாததரிசனை யடைந்து தங்களுடைய சொற்போல்
நடப்பாரென்று மிகுந்த வணக்கமாகச்சொல்ல அப்போதந்தமொழிக
ளைக்கேட்டு மனமகிழ்ந்து குஞ்சிரிப்பு கொண்டு சொல்லுகின்றாள்
நல்லது இவ்விடத்தி லிருந்துபோக அவரையார் தடை பண்ணியிரு
க்கின்றார் இப்போது அவர் போகலாம் இம்மனிதனை யார் வரு
ந்தியழைத்து வந்தார்கள் அவனேவெறிபிடித்துஎன்னிடமாகவந்தான்
நன்மைக்காகவேண்டி இவ்விடத்திலிருக்கும்படிக்குசகாயஞ்செய்தே
னுகையால் தன்னிஷ்டம்போல் எங்கேவேண்டுமோ அங்கே போக
லாமென்றுசொல்ல இம்மொழியை ஹாத்திம்கேட்டு எழுந்துநின்றுக்
கொண்டு சொல்லுகின்றார் இப்போது இந்தப்பரி உத்தரவுகொடுத்தி
ருப்பதால் நீ எழுந்துவாவென்றுசொல்ல அப்போதந்தவாலிபன்சொ
ல்லுகின்றான் ஓ, என்பிறவியே அவள்சொன்னமொழிகளையும் உத்



தரவையும் சரியென்று எண்ணுதீர் மன வருத்தத்தால் அவளிவ்வித
மாகச்சொல்லுகின்றாளாகையால்நான்சொல்வதுபோல்எனக்குகவுல்
கொடுத்தால் நான்நிச்சயமென்றெண்ணி என்வீட்டுக்குப்போவேனெ
ன்று சொல்ல எவ்விதமெனில்ஒருவாரத்துக்கு இரண்டு மூன்றுதட
வை என்னிடத்துக்கு வந்து என்னோடு கலந்து இஷ்டபோகமாகயி
ருப்பேனென்று எனக்கு வாக்குகொடுத்தா லந்த வாக்கைநிசமெ
ன்று எண்ணுவே னில்லாவிடில் சரியானதல்லவென்று இவன் சொ
ல்ல அம்மொழியைஹாத்திம்கேட்டு தன்தலையைகீழேபோட்டுக்கொ
ண்டு கொஞ்சநேரம் பொறுத்து தலையையுயர்த்தி அப்பரியைபார்த்து
சொல்லுகின்றார் ஓ, பெண்கள்சிரோமணியே, நவமணியே, என்று
மிருதமாகவாழ்த்திபரியானவளைப்பார்த்துச்சொல்லுகிறார் நீ ஆண்ட
வனுக்காகவேண்டி அவன்பேரில் இரக்கமும் கிருபையும் வைத்துஅ
வன்சொல்வதுபோல் கேழ்க்கவேண்டுமென்று சொல்ல அப்போது
அப்பரியானவள் மிகுந்த ஆங்காரத்துடனே யிருகண்களும் தணல்ப
றக்கும்படியாக ஆக்ரோஷத்துடனே ஆங்காரித்துசொல்லுகின்றாள்
எங்களுடைய சாதியிலில்லாத வழக்கம் நான் செய்யமாட்டேனென்
றுஞ்சொல்லி மிகுந்தகோபமாகச்சொன்னு ளப்போது ஹாத்திமான
வர் சொல்லுகின்றார் நீங்கள் உம்முடைய ஆசைநாயகன் பேரில்கொ
ஞ்சம்இரக்கம் வைத்துநான்சொல்வதைக்கேழ்ப்பீராகில்நான் சிறிது
மொழிகளைத்தெரிவிப்பேனென்றுஞ்சொல்லுகின்றார் எவ்விதமெனில்
இன்னின்ன பரிகளுடைய நடப்பை நான் கேழ்விப்பட்டிருக்கின்
றே னவர்களோடிருந்த ஆசை நாயகர்களுடைய சொற்களை தட்
டாமல்நடந்திருக்கின்றார்களா நீ சொல்லுகிறாய் உங்கள்சாதியிலிவ்வி
தமானசெயல் ஒருவரும் நடக்கவில்லையாவெனப்படிநடப்பேனென்றும்
ஹாத்திம்சொல்லிஇன்னும்ஆதம்ஜாத்தானவர்கள்பரிஜாதிகளின்பேரி
ல் இன்பங்கொண்டிருப்பதுஅன்றிஅவர்கள் ஆதம்ஜாத்களின் பேரிலு
மின்பங்கொண்டிருப்பது முன்னென்றுசொன்னவுடனே முகந்திரு
ப்பிக்கொண்டு சொல்லுகின்றாள் சிரிதான் ஆனலந்தமனிதன்பொய்ய
னுகயிருக்கின்றான்என்னைதன்மனமுழுதாலும் இச்சைப்பட்டவனல்ல
வாயினுல்சொல்வதேதவிர வேறில்லையென்றும்அவள்சொல்ல அப்போ
து அவ்வாலிபனெழுந்து நின்றுக்கொண்டு சொல்லுகின்றான்.

எவ்விதமெனில் நான் உன்பேரில் இன்பமும் பட்சமுங்கொ
ண்டு என்னுடைய வீடுவாசல் ஆஸ்திகளும் தாய்தகப்பன் மற்று

பந்துகளையும் விட்டு நீ எனக்கு உயிரென்று நான் நம்பி என்னு
டைய உயிரையும் பெரிதென்றும் எண்ணமல் அந்தத் தூரவிலிரு
ந்து படாதுன்பங்க ளெல்லாம் பட்டுக்கொண்டு உன்னுடைய ம
னம்போல் நானிருக்க இவ்விதமாகச் சொல்வது உனக்கு சரியல்ல
வென்று மனஞ்சோர்ந்து நிற்கக்கண்டு அப்பரியானவ ளிவன்சொன்
னமொழிகளைக்கேட்டு பின்னும் சொல்லுகின்றாள் இவ்விதமான
மொழிகளனேகம்பேசலாம்வாயிக்கும் நாவுக்கும் என்னகுறைவாகி
ன்றது ஆனல் நீ என்பேரில் இன்பமுள்ளவனாக இருப்பாயாகில் நா
ன்சொல்வதுபோல் கேட்டாலப்போது நானிஜமென்று நம்புவேனெ
ன்றுசொல்லஉடனே அந்தவாலிபன் எழுந்துநின்றுக்கொண்டுநீ அப்
படிக்குளெண்ணுதே சமுத்திரத்தில் நீ நாடியதுபோல் எனக்குஉத்தரவுசெ
ய்தால் அதுபோல் செய்வேனென்றும் சொல்ல அப்போதந்த பரியா
னவள் தன்னுடைய ஜாதிகளானவர்களை யழைத்து சொல்லுகின்று
ள் ஒருகடாயில் நெய்யை நிரப்பி அடுப்பில்வைத்து அந்தநெய் கலக
லவென்று கொதிக்கும்போது எனக்கு தெரிவிக்க வேண்டுமென்று
சொல்ல அந்த பரிகள் அதுபோல் செய்தார்க ளப்போதந்த
பரியானவளிவன்கையைப்பிடித்துக்கொண்டு சொல்லுகின்று ளெவ்
விதமெனில் என்காணும் நீர் என்பேரில் பட்சமும் இன்பமு முள்
ளவனாக இருப்பாயாகிலிந்த கடாயில் குதித்தா லப்போது என்மனது
க்குச்சரியென்று எண்ணுவேனென்றுஞ்சொல்ல அம்மொழியை அ
வ்வாலிபன்கேட்டுமனமகிழ்ந்துக்கொண்டு யாதொருகவ்லையு மில்லா
மல்அவ்விடத்துக்குநடந்து அந்தக்கடாயில்விழப்போகின்றான் அப்
போதந்த பரியானவள் மிகுந்த சுருக்காக எழுந்துஓடிப்போய்அவனு
டைய கழுத்தை பிடித்து மாரோடணைத்துக்கொண்டு ஒருபுஜம் இரு
புஜமாகப்பூரித்துசொல்லுகின்றாள் உன்னுடைய பட்சமான இன்ப
ம் என்பேரிலிருக்கின்றது இப்போது என்மனதுக்குச் சரியாகி விட்
டது ஆகையால் நீ எவ்விதமாகச்சொல்லுகின்றாயோ அதுபோல்நா
ன்செய்ய உண்மைகொண்டேனென்று மனமகிழ்ந்துஅவனைத்தழுவி
முத்தமிட்டுக் கொண்டு தம்முடைய மனிதாளுக்கு உத்தரவு செய்தா
ள் தன்னுடையமஹாலை அழகாக சோடினைசெய்து விதவிதமா
ன உங்களுக்குத்தெரிந்த பதார்த்தங்களு மேவா மிட்டாய்களும் சுவி
ர்க்கங்களும் ஷற்பத்துகளும் ஹல்வாக்களும தயார் செய்யும் படியா
கஉத்தரவு செய்ய அதுபோல் சிங்காரித்து வேண்டிய சமையல்பதா
ர்த்தமெல்லாம் தயாராகி நவரத்தினங்களால் இழைத்த விசித்திரமான



தட்டுகளில் பதார்த்தத்தை யெல்லாம் நிரப்பி நவரத்தினத்தாலிழை
த்த கூஜாக்களில் ஷர்பத்துகளையும் நிரப்பிதயார்செய்து வைத்துவி
ட்டுவந்துதெரியப்படுத்தஅப்போதிவள் அவ்வாலிபனையும் ஹாத்திமை
யுங்கூட அழைத்துக்கொண்டுபோய்உருக்காரவைத்துதானுமிருந்து
அவர்களைசாப்பிடும்படிக்கு உத்தரவுசெய்துதானுமவர்களோடிருந்து
மனத்திருப்தியாகச்சாப்பிட்டு தீர்ந்தபின்பு வீணைமுதலியபதினெட்டு
தாளமேளங்களும் வாசிக்கும்படிக்கு நாட்டியமாடியிரவென்றும் பக
லென்றும் தெரியாமல்விநோதவிநோதமான ரதிகேளிக்கையில்முழு
கியிவ்விதமாக ஒருமாதம் வரையிலும் நடத்திக்கொண்டு வருகையில்
அந்த தூரவினருகிலிருந்தவர்கள் தவினைபோல் முப்பது நாளான
பின்பு சொல்லுகின்றார்கள் அந்த வாலிபனிந்த தூரவிலிருந்து இ
ன்றைபத்தினம் வராவிட்டால் நமது ஊருக்குப்போகவேண்டு
மென்றுஞ்சொல்லிநாளைமுப்பத்தோராநாளாகின்றதுஇவ்விதமாகஇவ
ர்கள் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அப்படியிருக்கஹாத்திம்எழுந்துநின்றுகொண்டுஅவ்வாலிபனோ
டுசொல்லுகிறார்எனக்குவேலையிருந்த அவசரமாகவிருக்கின்றதுஇனி
நானிருக்கக்கூடாது நீங்கள்வாயிதா சொன்னதுபோல் அதை நிறை
வேற்ற வேண்டுமென்று சொல்ல அப்பரியானவள் எழுந்துநின்று
மெந்தநலமாகவிருக்குமென்றுசொல்லஹாத்திம்சொல்லுகின்றார் ஓ,
பரியே நீ செய்தவாயிதாவை கெட்டிசெய்ய வேண்டும் ஹஜரத்து
சுலைமான் நபியைபொதுவாகவைக்கவேண்டும் அப்போது எனக்குஉ
றுதியாகுமென்றுசொல்ல பரியானவள் சத்தியஞ்செய்து சொல்லுகி
ன்றாள் நான் செய்தவாக்குத்தத்துவத்தைநீக்கிஒருபோதுமடக்கமாட்
டேன் நீங்கள் உண்மையான உறுதியென்று எண்ணங் கொள்ளவே
ண்டுமென்றுசொல்லி தம்முடைய பரிஜாதிகளையழைத்துசொல்லுகி
ன்றாளிந்த இரண்டு வாலிபர்களையும் அந்த தூரவின்மேலேகொண்டு
போய்விட்டுவாருங்களென்று உத்தரவுகொடுத்து இவ்விருவர்களையி
ருந்த பட்சத்துடனேபேசவேண்டியமொழிகளையெல்லாம்பேசியிவர்
களுக்கு போகும்படிக்குஉத்தரவுகொடுத்துப்பிரியமாகச்சொன்னாளப்
போது பரியானவர்களிவர்களை யெடுத்துக் கொண்டு ஒரு நிமி
ஷத்துக்குள்ளே பறந்து மேற்சொன்ன தூரவின்மேல் கொண்
டுபோய் இவர்களைவிட்டுஅவர்களிடம் உத்தரவுபெற்றுதங்களுடைய
எஜமானித்திடமாகசங்கதிதெரிவித்தார்கள்இவ்விருவர்களும்தூரவி
ன்மேல்வந்திருப்பதைஅவர்கள்கண்டுமிகுந்த ஆச்சரியப்பட்டுஅவ்வூ

வியனுடையதாய்தப்பன்ஓடிவந்து மகனைப்பார்த்துகட்டித்தழுவிமுத்தியிட்டுக்கொண்டுஹாத்திமுடையகாலில்விழுந்துமிகுதமாகவாழ்த்தி எங்களுடையதுன்பத்தைநீக்கியஇரட்சகனேஎன்றுசொல்லிபோய்வர்தசங்கதியெல்லாம்கேட்டுமனமகிழ்ந்துதாங்களும் தம்முடையபந்துக்களும்மற்றசனங்களும்இவர்களைசுத்திக்கொண்டுஎல்லபேருமாகதங்கள்அரண்மனைக்குகொண்டுபோனார்களப்போது ஹாத்திமுக்குவேண்டிய உபசரணையாகவிருந்துகள் செய்துவெகுவினோதமாகவேளிக்கையாடல்பாடல் முதலாகிய ராகங்களும் பாடிவைத்துக்கொண்டு வீடுவீடுகள்தோறும்ஹாத்திமுக்குவேண்டிய விருந்துகள்செய்து உபசாரம்செய்தார்கள்பல்லவேடிக்கையாகவும்இவ்விதமாகயிருக்க அந்தப்பரியானவனும் தன்னுடைய சொல்மாறாமல் போக்குவரத்தாயிருந்தானிவ்விதமாக யிருக்கையில் ஹாத்திமானவர் அவனுடைய நேர்வழியும் நற்குணம் பார்த்துதான் என்னுகின்றார் (சுபஹானல்லா) கவலைப்போல்செயலும் நடப்பும் உண்மையானகுணமும்மெய்யாகயிருக்கின்றது அழகுள்ளபார்வையுமுள்ள ரூபவடிவுள்ளவனென்றும் அவனை மிகுதமாகப் போற்றி வாழ்த்துதல் செய்தபின்பு அவனுக்கு தகுந்தபுத்திகள் சொல்லி (பதினைந்நாள்) அவர் வீட்டிலிருந்து (பதினைந்தாநாள்) உத்தரவு பெற்றுக் கொண்டு ஹாத்திமானவர் பிரயாணப்பட்டு காடுவனாந்திரத்தின்வழியைபார்த்துக்கொண்டு போகையிலவர்களும்கொஞ்சதூரம்வரையில் வந்துபயணப்படுத்திவிட்டு தங்கள்வீட்டுக்குவந்து விட்டார்கள் பின்பு ஹாத்திமானவர் நடந்துகொஞ்சநாள் சென்றபின்பு ஒரு பட்டணம்முன்னால்தோணப்பட்டது அவ்விடத்தைபார்த்துக்கொண்டு போகும்போதில் அந்தபட்டணத்தின் எல்லையில்ஒருவயதுசென்றவிர்த்தாப்பியமுள்ளகிழவன் உட்கார்ந்துக் கொண்டிருந்தான் அவன் ஹாத்திமைபார்த்து (அஸ்ஸலாமு அலேக்) யென்றுசொல்ல ஹாத்திமானவர் (அலேக்குமுஸ்ஸலாமென்று) ஜவாபு சொல்ல அப்பெரியவர் சொல்லுகின்றார் ஓ, வாலிபமுள்ளமுசாபிராகியவழிப்பயணம்போகின்றவரே என்பேரில் கிருபைவைத்து இன்றிரவிலென்னுடைய வீட்டில் தாங்கள் தங்கியென்னோடு விருந்து சாப்பிட வேண்டு மென்று மிகுதமாக வணங்கி கேட்டுக்கொள்ள ஹாத்திம் சொல்லுகின்றார் நன்மையான வேலைக்கு என்னகேழ்க்கவேண்டியதென்று சொல்ல அப்பெரியவர் கையோடேயழைத்துதங்கள் வீட்டுக்குகொண்டு வந்துவேண்டிய உபசாரமாக விருந்துசெய்தார் சாப்பிட்டுதீர்ந்தபின்பு அந்தபெரிய



வரானவர் கேழ்க்கின்றார் ஓவாலிபனே உன்னுடைய பேரென்னநீ எவ்விடம்போகின்றாய் எந்த ஊரிலுள்ளவ னென்றுகேழ்க்க அவர் சொல்லுகின்றார் என்பேர் (ஹாத்திம்) என்னுடையநகரம்(எமன்) ஆனதாகயிருக்கும் நான் (ஹாமாம்பாத்கர்) செய்தியையறியப்போகின்றேனென்ற மொழியைகேட்ட உடனே தன்தலையைகீழே போட்டுக்கொண்டுகொஞ்சநேரத்துக்குப்பின்தலையைஉயர்த்திசொல்லுகின்றார் ஓ, வாலிபனே உனக்குயார்பகையாக இருந்தாரவர்களுன்னை இவ்விதமானஇடத்துக்கனுப்பியிருக்கின்றார்கள்.முதலாவது அதின்அடையாளம் ஒன்றுந்தெரியாது-இரண்டாவது-யாதாமொருவன் அவ்விடத்துக்குப்போனவன்போனானேதவிரதிரும்பிவரவில்லையாதாமொருவன் அவ்விடம்போக எண்ணங்கொள்வானாகில்தன்னுடைய உயிரைதன்கையால் கழுவிமுதல் மய்யத்தினுடைய முழுக்கு உயிரோடிருக்கும்போது முழுகிவிடவேண்டியது எவ்விதமெனில் அதினுடைய வழியானது முதல்பயணத்திலொருகெடுதலையிருக்கின்றது அவ்வழியில்(ஷஹறெகத்தான்)என்ற ஒருபட்டணமிருக்கின்றது அதின்பாத்துஷாவானவர் அத்தேசத்தின்லசர்ஹத்துக்கு காவல் வைத்திருக்கின்றான்யாதாமொருவர் அக்குளத்தில்குளிக்க எண்ணங்கொண்டுவருகின்றவர்களைமுன்னால் என்னிடமாகக்கொண்டுவாருங்களென்றுசொல்லுகின்றானது போலவர்களைகொண்டுபோயவன்முன்னால் விடுகின்றார்களப்போ தவனவர்களைப்பார்த்து வெட்டும் படிக்கு உத்தரவு செய்கின்றானோ அல்லது விடுகின்றானோ அது தெரியவில்லை ஆனால் அவ்விடம் போனவர்கள் நாளதுவரையில் ஒருவராவது திரும்பி வந்ததை காணவுமில்லை கேழ்க்கவுமில்லை இவ்விதமானமொழிகளை ஹாத்திமானவர் கேட்டு அப்பெரியவருடன் சொல்லுகின்றார்.

அதெவ்விதமெனில்ஹுசன்பானுவென்ற பெண்ணுனவளொரு வர்த்தகனுடைய மகள் அவள்பேரில்முனீர்ஷாமி(காரஜமுடைய)பாத்துஷாவின்குமாரனவன்பேரில்ச்சைகொண்டு தன்னுடையராசாங்கத்தையும்சகலபாக்கியத்தையு மிழந்து அவனுடையபட்டணத்தில்கார்வான்சராவென்பதிலிருக்கின்றான் அவனுக்காகவேண்டிஎன்பேரிலிருந்த வருத்தத்தையும் துன்பத்தையு மெடுத்துக் கொண்டு எந்நேரமோவருஷமாக அவனுடைய வேலையில் ஆண்டவனுக்காக திரிகிறேன் அந்த வர்த்தகனுடைய மகளின் (சு) சவால்கள் நிறைவேற்றிவிட்

டேன் ஆண்டவனுடைய கிருபையால் முழுதும் நிறைவேற்றுவே
னின்னமொருசவால் பாக்கியிருக்கின்றது அது ( ஏ-வது. ) சவால்
(ஹமாம்பாத்கர்) தடாகத்தின் செய்தியாக யிருக்கின்றது அதை
எவ்விதத்திலுமறியப்போகின்றேனானால்என்விதிப்பயன்எவ்விதமாக
யிருக்கின்றதோ தெரியாது இம்மொழிகளை அப்பெரியமனிதன்கேட்
டு ஆபறிஞ்செய்துஉன்தாய்தகப்பனுக்குமுனக்கும் ஆண்டவனுடை
யஹறமத்துண்டாகவும் அன்னியர்க்காக தன்னுடைய சுகசவுக்கியங்
களையெல்லாம தவிர்த்துவிட்டு இவ்விதமான வருத்தமும் தங்கட
மும் முசீபத்தையு மெடுத்துக்கொண் டிருக்கின்றாய் ஆகையா
லென்னுடைய மொழிகளைத் தவிர்க்காமல் கேழ்க்கவேண்டும் நீ இ
ந்த எண்ணங்களை மனதிலிவ்விதமாக நினைத்திருக்கின்றதைதவில
க்கிவிட்டு இவ்விடத்திலிருந்து திரும்பி விடுமென்று சொல்லி
பின்னுஞ் சொல்லுகின்றார் ஓ, வாலிபமான பாத்துஷாவின் கு
மாரனே நீ அக்குளத்தை நிஜமென்றெண்ணாதே அதுவானது மந்தி
ரதந்திர சூனியத்தால் செய்திருக்கின்றது இன்னாள்வரையிலும் யா
தொருவரும் அதினுடைய ரகசியத்தைக் கண்டுபிடிக்கவுமில்லை அ
தைக் கேழ்க்கவுமில்லை பார்க்கவுமில்லை இம்மொழியை ஹாத்திமான
வர்கேட்டுசொல்லுகின்றார் ( அஸ்தக்பிருல்லா)பொய்யானதுஹறாமா
கவிருக்கும் அவள்சொன்ன மொழியைவிட்டு எவ்விதமாகத் திரும்
புவேன் இது ஞாயமல்ல அவன்மோகமென்ற சாகரத்தில்முழுகிநெ
டுநாளாகஅதிக வருத்தமும் துன்பமும் பிரயாசையு மெடுத்துக்
கொண்டு என்வழியைப் பார்த்துக்கொண்டு தனது உயிரையும்பே
ணமை யிருக்கின்றான் அந்த வாலிபன் தான் ஆசைப்பட்டிருக்கின்
றபெண்ணுடைய கையால் அமுர்தமான பானத்தைச் சாப்பிட்டு த
ன்னுடைய உயிரைபுதிதாகச்செய்பவனுடைய அலுவலைவிட்டு நான்
நீங்குவது பெருங்குற்றமாக யிருக்கின்றது நான் நாளைதினம்
ஆண்டவனுக்கு எவ்விதமாக முகங்காட்டுவேன் என்ன ஜவாபு
சொல்வேன் யாதாமொருவர் ஆண்டவனுக்காக இடுப்புகட்டினவ
ர்கள் ஒருபோதிலுஞ் சொல்தவறமாட்டார்கள் பொய்யுஞ் சொல்ல
மாட்டார்கள் அவர்கள் ஆண்டவன் பாதையில் திரும்பி தன்னுடை
யவீடுவாசல் தாய்தகப்பன் முதலாகிய சவுக்கியத்தையும் இழந்து த
ன்னுடைய நல்நடத்தையின் வழியைப் பார்ப்பார்களே தவிர வேறே
யொரு நாட்டமுங் கொள்ளார்கள் என்றுஞ்சொல்ல அப்போது அ
ப்பெரியவர் சொல்லுகின்றார் ஓ, வாலிபனே உன்னுடைய வா



லிபத்துக்காவது நீ இரங்கிசுத்தமாக அவ்விடத்துக்குப் போகவேண்
டாம் அவ்விடம்போகின்றது எவ்விதமானால் இந்த லோகத்தையிழ
ந்து மரணமடைவது போலாகயிருக்கும் ஆகையால் என்மொழியை
நீ கேழ்க்காவிடில் மிகுந்த வருத்தத்தையடைவாய் ஒரு தவளையான
து தன்னுடையபந்துகளின் மொழியைத்தட்டி அனேகம் துன்பத்
தையடைந்து வேதனைப்பட்டதுபோலாகுமென்றுசொல்ல அம்மொ
ழியை ஹாத்திமானவர்கேட்டு அதினுடையவிபரம் எவ்விதமானது
என்றுகேழ்க்க அப்போதந்த பெரியவர்சொல்லத்துடங்குகின்றார் எ
வ்விதமெனில் (ஷாம்) தேசத்தைச்சேர்ந்த சமுத்திரத்தில் வெகுதவ
ளைகளிருந்தது ஒரு நாள் அதிலிருந்த குணங்கெட்ட தவளையா
னது தங்களுடைய பந்துகளுடனே சொல்லுகின்றது நான் என்
னுகின்றேன் இவ்விடமிருந்து சபர்செய்து இன்னொருசமுத்திரத்தி
ல் போயிருக்கலாமென்றும் எவ்விதமெனில் முசாபரிபோகின்றதில்
லாபமிகுதமாக யிருக்கின்றது எளியவன்சீமானாகிப்போகின்றான் எ
ளியவன்தன்னுடைய ஊரில் திரவியசாலி எப்போது மாகமாட்டான்
எவ்விதத்திலும் கால்கைகள் அசவாடிவருத்தப்படுவதல்லாமல் அமி
ரூரியவானாகிறதில்லை யென்றுஞ்சொல்ல அப்போதவனுடையஜாதி
கள் சொல்லுகின்றது.

ஓ, விவேகமில்லாத புத்தியீனனே இந்த கெட்டயெண்ணம் உ
ன்னுடையமனதில் வந்திருக்கின்றது அவ்வெண்ணத்தை நீதூரவில
க்கிவிடு மெவ்விதமெனில் அவ்விடம்போனால் ஒருநாளும் நீசுகப்பட
மாட்டாய் வீணாக வருத்தப்படுவாய் தன்னுடையஊரில்எவ்விதமான
வருத்த மடைந்தபோதிலும் அதினால் யாதொருகுறைவுவராது அதி
ஷ்டம்போலாகும் நிலையில்பிரிவது சரியல்லவென்றும் அனேகமுகா
ந்திரம் சொன்னபோதிலும் தன்சொல்லை மேலென்றெண்ணி ஒருவ
ருடையசொல்லையும் கேழ்க்காமல் தன்னுடைய பெண்ஜாதி பிள்
ளைகள் பந்துகளுடனே அவ்விடம்விட்டு புறப்பட்டு இன்னொரு
சமுத்திரத்தைப் பார்க்கநடந்து கரைவழியாக தம்முடைய சனங்
களும் தானும் வெகுசந்தோஷமாகக் குதித்துக் குதித்துக் கொ
ண்டு பாச்சலாகவும் போகின்றதுகள் அப்போதந்தவழியில் விதியி
னலொரு தடாகமிருக்கின்றதைப்பார்த்தார்கள் அதிலொரு பாம்பிரு
ந்தது அந்த குளத்திலிருந்த தவளைகளையெல்லாம் தின்றுவிட்டுகொ
ஞ்சநாளாக யிருந்ததினால் வேதனைப்பட்டுக்கொண்டு இரையத்

டாமலிருந்தது அவ்வேளையில் இக்கூட்டங்களைக்கண்டு ஒரு பாச்சலாகவந்து விழுந்து ஒன்றொன்றாகப்பொறுக்கி தின்றுவிட்டது அப்போது எல்லபேர்களுடையசொல்லைமீறிப்போன தவளையானது பார்த்துஇதென்ன மோசம்வந்ததென்று தான் முன்னிருந்த சமுத்திரத்துக்குஓடி தடுமாறி வந்துவிழுந்தது தன்னுடைய பெண்டுபிள்ளை கூடப்போனபந்துகளெல்லாம் இறந்துமண்ணாகிப்போய்விட்டார்களப்போது அதினுடையகூட்டங்களெல்லா மவனைப்பார்த்து நிந்தித்துக்கொண்டிருந்து சொல்லுகின்றார்கள் அடேபாவி விவேகமில்லாத அறிவற்றவனே நீ என்ன மோசஞ்செய்தாய் வீணாகயெல்லபேரையுங்கூட்டிக் கொண்டுபோய் நீதனித்து உன்னுயிரை தற்காத்துக் கொண்டு வந்திருக்கின்றாயென்றும் எல்லபேரு மெவ்விதமாகப் போனார் அதின்சங்கதி என்னவென்று கேழ்க்க அப்போதந்த தவளையானது தன் பெண்ஜாதிபிள்ளை மற்றவர்களிறந்த துக்கத்தை யடைந்துகொண்டு தன்னுடையசிரசை கீழேபோட்டுக்கொண் டிருக்கின்றது எவரெவர்கள் என்ன சொன்ன போதிலும் கேழ்ப்பதல்லாமல் பதில்யாதொன்றும் பேசாமலிருக்கின்றது அப்போதெல்லபேரும்வாய்க்குவந்ததுபோல் வசவும் திட்டலுமாக யேசி பேசிக்கொண் டிருந்தார்கள் அதற்கு யாதொன்றும்பேசாமலு மூச்சு விடாமலு மிருந்தது போல் பெரியோர்கள் வாக்கியத்தை தட்டுகின்றவர்களுக்கு இவ்விதமான கொடுமைநேரிடும் ஆகையால் ஓ, வாலிபனே என்னுடையசொல்லைமீறாமல் நீ திரும்பிப்போவது நலமாகயிருக்கும்நீகோபங்கொள்ளாதே என்னவென்றால் ஹமாம்பாத்கருக்குப் போனவர்கள் ஒருவராவது திரும்பிவந்து சேரவில்லைதன்னுடைய ஹவால்களை நினைத்துப்பார்க்காம லிருக்கின்றாயென்றுசொல்ல அப்போதுஹாத்திமானவர் அம்மொழிகளைக்கேட்டு,சொல்லுகின்றார் ஓ, பெரிய நன்மையுள்ளவரேபெருமைபெற்றவரே நீர்சொல்லுகின்றது என்னுடையநன்மைக்காகவேண்டி"வேறில்லைஆனால் ஒருவர்க்கொருமொழிஆண்டவனுக்காக வேண்டிசொன்னால் அந்த மொழிக்குப்பின்னிடுவது நன்மையல்ல எவ்விதமெனில் நான் உறுதிகொண்டு ஆண்டவனுடையகிருபையினாலும் உதவியினாலும் நான் நிச்சயமாக அந்தவாலிபனுக்கு உறுதிசொல்லி யிருப்பதால் அவனுடைய யெண்ணமானது எனால் முடியவேண்டியதாக யிருப்பதால் ஆண்டவனுக்காக நீர்அறிவீராகில் (ஷஹமேகத்தான்)தேசபாதைநான்போக எனக்குகாண்பிக்கவேண்டும்அப்போதந்த பெரியமனிதன் பார்த்தானவனுடைய என்



ணமான உண்மையும்உறுதியும்இவ்விதமாகஇருப்பதால் இவனுக்குநாம்யாதொன்றுஞ்சொல்லக்கூடாதென்றுமனதில் எண்ணிநல்லது உன்விதியிலுள்ளபடிமுடியுமென்றுசொல்லிஹாத்திமையழைத்துக் கொண்டு அந்தஊருக்கப்புறம்போய்நின்றுசொல்லுகிறார் ஓ, முசாபரே நீர் இப்போதுவலதுபக்கமான வழியைப்பிடித்து போவீராகில் அவ்விடத்திலனேகதுன்பங்களிருக்கிறது நீர் பார்ப்பீர் அதின்பின்பு ஒரு மலைதோணப்படும் அதின்கீழே ஆயிரம்துன்பங்கள்காணப்படும்அதில் நின்று நீர்தப்பிப்போவீராகில் அவ்விடத்திலொரு அகோரமான காடுகாணப்படும் அவ்விடத்தில் ஆண்டவனுடைய குதறத்தான பெருமைகள் தெரியப்படும் பின்பு சிலதூரம்போனால் இரண்டு வழிபிரியும் நீ இடதுபக்கமான வழியைத் தொடர்ந்து போனால் அந்த வழி துப்பரவாகயிருக்கும் அது கோர(ஷஹமெகத்தானில்) கொண்டு போய் விடும் இது நிற்க வலதுபக்கத்தின் பாதை மிகுந்த அருகாமையாக யிருக்குமானாலதில் அனேககெடுதலைகளும் துன்பங்களு மிருக்கிறதென்றுஞ்சொல்ல அம்மொழியைக்கேட்டு ஹாத்திம் சொல்லுகின்றார் ஓ, பெரியவரே லோகத்திலொருவனுக்கும் ஆயிசு இல்லாவிட்டால் ஒருபோதும் இருக்கமாட்டான் விதிமுடியாமலிறக்கவுமாட்டான் அருகிலிருக்கின்ற வழியைவிட்டு தூரமாயிருக்கும் வழியைநான்பற்றி எவ்விதமாகப்போவேனென்றுசொல்லஅந்த பெரியவர்சொல்லுகிறார்நீ கேழ்க்கவில்லையாகில்வழிதூரமாகஇருந்தால் சந்தேகமில்லாமல்போகலாம்ஆனால்ஒருநகைப்பெண்சாதிஅதிக அழகுவடிவுள்ளவளாயிருந்தபோதிலுமவளை ஒருபோதும் பெண்சாதியாகக்கொள்ளவேகூடாதென்று பெரியோர்கள்சொல்லியமொழிகளைகேழ்க்கவில்லையாவிதியின்படிமுடியுமென்று ஒருமலைப்பாம்பின்வயிற்றில் நுழையலாமாஇறக்கமாட்டோமென்றுயாதொருஅலுவலையும் நிதானித்துப்பார்க்காமல் விதியின்படிதானெண்ணிய கருமங்களைநடத்துவானாகில் அதிலவனுக்குபெருந்துன்பம் நேரிடும் நான் சொன்னபடிநீ நடக்காமல் போவாயாகில் அதினாலுனக்கு மிகுந்த நஷ்டமும் துன்பமும்வந்துநேரிடு மென்றுசொல்ல அம்மொழிகளையெல்லாம் கேட்டுக்கொண்டு அப்பெரியோருக்கும்உத்தரவுகொடுத்துவிட்டு தானுமுத்தரவுபெற்றுக்கொண்டுபோகும்போது ஒருபட்டணம் காணப்பட்டது அதில்நகாராவின்சத்தம்கேழ்க்கப்பட்டதுஇந்தபட்டணத்தில்யாரொருவர்வீட்டில்கலியாணஞ்செய்வதுபோல்தோணுகிறதென்றெண்ணிக்கொண்டுநடந்து அப்பட்டணமருகில் போய்பார்க்கும்போதில் அவ்

விடத்தி லுள்ளவர்களெல்லாம் பாத்துஷாவின்கூட ஒரு பக்கத்தில் சேர்ந்துக் கொண்டு அவ்விடத்தி லிருக்கிறார்கள் அவருடையவிருதுகளுடனே அநேகமான மேள தாளங்களும்(நகாரா நவுபத்தும்)ராகங்களும் வீணைமுதலாகிய சகல ஆடல்பாடலுமாக அனேகசிங்காரத்துடனேவிரிப்புகள் விரித்திருக்கிறது அதுபோல்நான்கு பக்கங்களிலும் கூட்டங்கூட்டமாக வேடிக்கை விநோதங்கள் செய்துக்கொண்டும் அவ்விடத்தில் எங்கேபார்த்தாலும் (தேக்ஷா)க்களில் புலாவுகளும்கறிகளும் சமைத்துக்கொண்டிருக்கிறார்கள் இன்னமனேகம்பேர் வேடிக்கைகளும் பார்த்துக்கொண்டும் நிற்க ஹாத்திமானவர்ஒருவனை கேழ்க்கிறார் ஓ, சிநேகிதனே இவ்விதமானகோலங்கள்நடக்கிறதின்சங்கதியை நிஜமாகச்சொல்லும் இன்றையதினம் இப்பட்டணத்தில்கலியாணஞ்செய்கின்றார்களா அல்லதுஇன்னமேதாவதுசெய்கின்றார்களா வென்று கேழ்க்கும்போதில் அவன் சொல்லுகிறான் இந்த பட்டணத்தி லொரு வழக்கமான நடப்பிருக்கின்றது வருஷத்துக் கொருதடவைபாத்துஷா-வஜீர்-அமீர்-ஐசுவரியவான்கள்- இன்னம் ஏழைமுதலாகியவர்கள்- வீட்டில் ருதுவாகியிருக்கிற பெண்களையெல்லாம் கலியாணப் பெண்போல் சிங்காரித்து பூக்கள் சந்தனம் அத்தர் இன்னம் விதவிதமான வாசனைபொருந்திய வஸ்துகளால்திரேகத்தில்பூசி கூடாரங்களில் வைத்துக்கொண்டு வெகுவேடிக்கைவிநோதங்கள் செய்துக்கொண்டிருக்கின்றார்கள் அப்படியிருந்தால் ஒருபெரியபாம்பானது காட்டிலிருந்துவந்து ஒரு அழகுவடிவுள்ள வாலிபனைப்போல் ரூபமெடுத்துக்கொண்டு அவ்விடத்திலுள்ள கூடாரங்கள்தோறும் நுழைந்து நுழைந்து எல்லாப் பெண்களையும் பார்த்துக்கொண்டு திரிந்து அவன் எந்தப் பெண்மேலின்பப் படுகிறானோ அதை யெடுத்துக்கொண்டு போகின்றானவர்களுக்கு இதுவேவிசனமாகயிருக்கிறது இன்றையதினம்நகாராமேளதாள வோசையிருக்கிறது நாளையத்தின மாரடிப்பும் அழுகையின் சத்தமாகயிருக்கும் பார்க்கலாம் ஒருநாளின்கலியாணம் ஏழுநாளின் துக்கம் எங்களுக்கு வருஷந்தோறும் இதுவேதுக்கமும் விசனமாக யிருக்கின்றது நாங்களென்னசெய்வோம் ஆனால்இன்றையத்தினம் மாலையில் அகத்தியமாநவருவான் யாருடையபேரில் ஆபத்து வருகின்றதோ தெரியாதென்றும அவன்சொல்ல அவ்வரலாறையெல்லாம் ஹாத்திமானவர்கேட்டு தன் மனதி லெண்ணிக்கொண்டு இந்தவேலை சின்னுடையதாக யிருக்கும் அதுபாரமல்ல வென்று யோசனைசெய்து அவனோடு சொ



ல்லுகின்றார் ஓ, மனிதனே உங்கள் பேரில் பெரிய பீடையாக வருகிற பலாவை நீக்கக்கூடாதா வென்று சொல்ல அதற்கவன் சொல்லுகின்றான் நாங்களென்ன செய்வோம் அதற்காக எங்களால் யாதொன்றுஞ் செய்யக்கூடாமையாக யிருக்கின்றது ஆண்டவன்நாடியபடிக்கு முடிகின்றது ஆண்டவனுக்காக எங்களுடைய ஆபத்தை நீக்கும்படியான இரக்கமுள்ளவல்லமைசாலி யாராவதிருக்கிறார்களா தெரியாதென்றுசொல்ல அப்போது ஹாத்திமானவர் சொல்லுகிறார் ஆண்டவன்கிருபையால் இன்றைய இரவில் உங்களுடையதலையில்வரப்பட்ட ஆபத்தைவிலக்கி விடுகிறேனென்றுசொல்லி நீ உண்மையுள்ளவனாக யிருப்பாயாகில் நான் சொன்னதை நிஜமென்றுசந்தேகமில்லாமல் மனதில் நிச்சயங்கொள்ளு மென்று சொல்ல அப்போ தந்தமனிதன் தங்களுடைய சர்தா[illegible]மாக அம்மொழிகளைத் தெரியப்படுத்தி வந்து ஹாத்திமை யழைத்துக்கொண்டு அந்த பட்டணத்து பாத்துஷாவினிடமாகக் கொண்டுபோய்விட்டு இவர்சொல்லிய மொழிகளை யெல்லாம் தெரியப்படுத்தினான் அதை பாத்துஷா கேட்டு ஹாத்திமானவரை நாற்காலியின்மே லிருக்கச்செய்து கேழ்க்கின்றார்.

ஓ, வாலிபனே இதென்னஆபத்தென்று எனக்குத்தெரியப் படுத்தும்இந்த விபரம்என்னவென்று கேழ்க்க ஹாத்திமானவர்சொல்லுகின்றார் இந்தசங்கதி யெனக்குநன்றாகத் தெரியவருகின்றது அதுபெரும்பீடையான சின்னாகயிருக்கின்றது அவர்களுடையஜாதி எப்போதும் சஞ்சாரஞ்செய்கின்றது நல்வழியைவிட்டுதுன்மார்க்கவழியை யெடுத்து தன்னுடைய வல்லமைகளைக்கொண்டு சனங்களை வேதனைப்படுத்தும் படியான நடப்பை யெடுத்துக்கொண்டு சில மூதேவிகள் நடக்கின்றதாக வென்றுஞ்சொல்ல அம் மொழியைக்கேட்டு பாத்துஷாவானவர் சொல்லுகின்றார் ஓ, வாலிபனே வல்லமைசாலியே இந்த ஜின்னானதை உன் கையால் கொன்றாலும் அல்லது இந்த பட்டணத்திலிருந்து தூரத்தி னாலும் நானும் இந்த பட்டணத்திலுள்ள சகலஜனங்களும் உன்னுடைய உத்தரவின்படிக்கு நடப்பதுமல்லாமல் நாங்களுயிரோடே யிருக்கும்வரையில் தங்களுடைய நன்மையைமறக்கமாட்டோம் அப்போது ஹாத்திம் சொல்லுகின்றார் நான் எந்த வேலை செய்கின்றேனோ ஆண்டவனுக்காக செய்கின்றே னல்லாமல்வேறில்லை மற்றவேலைகளில் அடியெடுத்து வைக்கமாட்டேன் என்

னுடைய ஆண்டவன்பேரால் நானே அடியெடுத்து வைப்பேன் இதுவே வேலைசெய்தோ னல்லாமல் வேறே ஒரு வஸ்த்தின்பேரில் இச்சைப்பட்டவனல்ல ஆகையால் தங்களிடத்தில் நான்சொல்வது கபூல்செய்யவேண்டுமென்றுசொல்ல பாத்துஷாவானவர் சொல்லுகிறார் நல்லது உங்களுடைய இஷ்டம்போல்செய்யலாம் அப்போதுஹாத்திம் சொல்லுகின்றார் ஓ, பாத்துஷாவே அந்தசின்னதுவந்துபார்த்து எந்தப்பெண்ணை ராசிப்பட்டு தரச்சொல்லுகுதோ அப்போது நீங்கள் சொல்லவேண்டும் இந்தப்பெண்ணைக் கொண்டுபோக நீங்கள் முக்தார்தான் ஆனால் எங்களுடைய மொழிகளை கொஞ்சம் கேழ்க்கவேண்டும் எவ்விதமெனில் இப்போது எங்களுடைய பெரிய சர்தார் வெகுகாலத்துக்குப்பின்பு இன்றையதினம் வந்திருக்கின்றார் நாங்கள் எல்லபேரும் அவர்கள்வசமாக யிருக்கின்றோம் அவர் உத்தரவில்லாமல் இந்தப் பெண்ணை உங்களோடனுப்ப எங்களால் கூடாது அப்படியவருடைய உத்தரவில்லாமல் உங்களிட மனுப்புவோமாகில் எங்கள்பேரில் பெருங்குற்றம் வரும் எவ்விதமெனில் நீங்கள் கோபிப்பீராகில் ஒருவருஷத்தில் எங்களுடைய தேசத்தை யழித்துப்போடுவீர் ஆனால் அவர் எங்கள்பேரில் கோப மடைவாராகில் எங்களையும் எங்கள்தேசத்தையும் ஒரு நொடிக்குள்ளே எரித்து சாம்பலாக்கி விடுவாரென்றுசொல்லி ஹாத்திமைஅன்றையதினம் தம்மிடத்தில்வைத்துக்கொண்டிருக்க சாயந்திர மாகிவிட்டது அப்போதந்தப்பாம்பு வருகின்ற இரச்சலும் சத்தமெங்கும் ஒரு முழக்கமாகுகின்றது அப்போது ஜனங்கள் ஹாத்திம்கூட சொல்லுகின்றார்கள் ஓ, வாலிபனே அந்த மூதேவியான பாம்பு வருகின்றது அதைக் கேட்ட வுடனே பாத்துஷாவினிடமாகக் கேழ்க்கின்றார் அதைச் சற்றே பார்க்கவேண்டு மென்றுசொல்லி தானெழுந்து கூடாரத்துக்கு வெளியே வந்து பார்த்தால் ஒரு பெரியமலைப்பாம்பானது தலையை வானத்தின்மேலாக்கும் படியாகவும் வேகமாகவும் வருகின்றது அதினுடைய நீளம் இவ்வளவென்றும் காணப்படவில்லை அதின்முன்னால் தேவர்கள் கூட நிற்கமாட்டார்கள் மனிதர்களாலென்ன ஆகும் அது வருவதைப்பார்த்தால்மலைகள் விருட்சங்களெல்லாம்அதினுடையமார்பின்கீழே அகப்பட்டு அரைப்பட்டு தேய்ந்து பொடி பொடியாகத்தூசிகளாகிப்பறக்கின்றதுகள் அதுவருகின்றதை ஹாத்திமானவர்பார்த்து ஆண்டவனே இந்த பெரும்பிடையானதில் நின்று நீ தற்காக்கவேண்டியதென்றும் கேழ்க்கும்போது அந்த பாம்பானது அருகில் மு



டிகி வந்துவிட்டு தன்னுடையவாலை உயர்த்தி பலமாக ஆட்டி வீசி ஒரு சத்தம்போட்டு அவ்விடத்திலிருந்த மனிதர்களெல்லாம் பயந்து தடுமாறி நிலத்தில் குப்புறவிழுந்து கிடக்கின்றார்கள் அப்போது அந்தப்பாம்பானது நான்குதிக்கிலும் திரும்பிப்பார்த்துநிலத்தில்புரண்டு ஒரு மிகுந்த வடிவானமனித ரூபமாகிவிட்டது பின்பு இந்த சனங்களிருக்கு மிடத்துக்குவந்தது அப்போது அவ்விடத்திலிருக்கின்றவர்களெழுந்து நின்றுக்கொண்டு அதபுடன் சங்கையாக சலாம்செய்தது அந்த பாத்துஷாவானவர்போய் அவனை யழைத்துக்கொண்டு தன்னுடைய கூடாரத்துக்கு கொண்டுவந்து இரத்தினங்களிழைத்த ஒரு சிம்மாசனத்தைக் கொண்டுவந்துவைத்து அதின்மே லிருக்கும்படிக்குச்செய்ய அவன் அதில் சில நேரமிருந்து உங்களுங்களுடையபெண்களையெல்லாம் எனக்கு காண்பிக்கவேண்டு மென்றுசொல்ல பாத்துஷாவானவர் மெத்தநலமென்று சொல்லி அவ்விடத்திலுள்ள வஜீர் அமீர்கள் சர்தார்கள் வர்த்தகர்கள் ஏழையெளியோர்கள் கூடத்தொடர்ந்து தங்களுடைய பெண்களையெல்லாம் காண்பிக்கவெல்லாரையும்பார்த்துஒருபெண்ணும்தனக்குப்பிரியமில்லாமல்வெளியில்வந்துவிட்டு மறுபடியும் பாத்துஷாவுடைய கூடாரத்துக்கு வந்து அவர் குமாரத்தி யிருக்கின்றதைப்பார்த்து பாத்துஷாவினிடமாகச் சொல்லுகிறான் இந்தப் பெண்பேரில் நான் இஷ்டமாக யிருக்கின்றேன் என்வசத்தில் கொடுமென்றுங்கேழ்க்க அம்மொழியைக் கேட்டு பாத்துஷாவானவர் சொல்லுகின்றார் அது எவ்விதமெனில் ஒருபெரியபெருமைபெற்றவர் இவ்விடத்திலிருந்துபோய்வெகுநாளாகிவிட்டது இப்போது அவர் வந்திருக்கின்றார் அவருடைய உத்தரவில்லாமல் நாங்கள் யாதொன்றுஞ் செய்யக்கூடாது ஒரு நொடிக்குள்ளாக எங்களையும் எங்கள் பட்டணத்தையும் நாசம்பண்ணிப்போடுவாராகையால் அவரை நீங்கள் கூப்பிட்டு கேழ்க்கலாமென்றுஞ்சொல்ல அப்போதவன் சொல்லுகின்றான் அவன்இன்றுவரையிலும் எங்கேபோயிருந்தான் இன்றையதினம் இங்கே யெவ்விதமாகவந்தான் நல்லது அவனையழையுமென்றுசொல்ல அப்போது அவ்விடத்தில் கூடார மறைவாகயிருந்த ஹாத்திமானவர் அவன் சொன்னவுடனே முன்பாக வந்துநிற்க அந்த சின்னதுபார்த்து கேழ்க்கின்றது.

ஓ, மனிதனே நான் அநேகநாளாக இந்த பட்டணத்துக்கு வந்து போக்குவருத்தாகஇருக்கின்றேன் எப்போதும் உன்னைநான்பா

கின்றார் எனக்கு இந்த வஸ்த்துகளெல்லாம் வேண்டியதில்லை ஆண்
டவன் எனக்கு வேண்டிய நீயாமத்தெல்லாம்கொடுத்திருக்கின்றான்
அப்படிஎனக்குகொடுக்கும்படியான எண்ணமிருக்குமானால் இந்தவ
ஸ்தையெல்லாம் ஏழைகள்மிஸ்க்கீன்களுக்குப்பங்கிட்டுக்கொடுங்கள்
அதின்பலன்ஆண்டவனுங்களுக்குகொடுப்பான்யாதாமொருவன்ஆண்
டவனுக்காகதன்தலையைநன்மைக்காககொடுப்பானாகில்அவன்யாதொ
ன்றையும்இச்சிக்கமாட்டான்இவ்விதமாகஹாத்திமானவர்சொன்னவு
டனே பாத்துஷாவானவர்அப்பட்டணத்திலுள்ள ஏழைமிஸ்க்கீன்க
ளை அழைத்து அந்தவஸ்த்தையெல்லாம்பங்கிட்டுக்கொடுத்த பின்பு
ஹாத்திமானவர்க்கு வேண்டிய உபசாரங்கள் செய்துக்கொண்டுமிரு
ந்து நான்காவது நாளில் ஹாத்திமானவர் பாத்துஷாவினிடமாக உத்
தரவுபெற்றுக்கொண்டு அவ்விடம்விட்டு புறப்பட்டு எத்தனையோநா
ளைக்குப்பின்பு அந்தமலையின்அருவாரத்தில்போய் சேர்ந்தார்முன்னா
லந்த பெரியவர் சொன்னதுபோல் அந்தமலையிலேறி நடந்து அவ்வி
டம்விட்டுப்போகையில்ஒரு பெரிய அகோரமானகாடுகாணப்பட்டது
அங்கேபோகும்போதில் பலபலவிதமான கனிகள்பழுத்துசொரிந்து
கொண்டு பலபல விதமாய் தின்னும்படியான தினுசுகளுமிருக்கஅது
களைபறித்துதின்றுக்கொண்டு மிவ்விதமாகசிலநாள்போகும்போதில்
அவ்விடத்தில்இரண்டுவழிகள்காணப்பட்டது அங்கேநின்றுக்கொண்
டுமனதில் எண்ணுகின்றார்அந்தபெரியவர்சொல்லியிருந்தார்இடதுப
க்கவழியியாகப்போனால் அவ்விடத்தில் அனேகம் ஆபத்துகளிருக்கி
ன்றது ஆகையால் அவ்வழிபோகவேண்டாமென்று சொல்ல அப்படி
வலதுபக்கவழியைப்பிடித்துக்கொண்டுகொஞ்சதூரம்போகும்போதி
ல் அவர் எண்ணினார் இந்தவழியால் போறதினால்நமக்கு ஒருபலனு
மில்லை ஆகையால் இடதுபக்கவழியாகப் போகலாமென்றும் ஆண்
டவன் துணைசெய்வான் யாதொருகெடுதலையும் பலாவும் முன்னால்
வந்து சம்பவிக்க மாட்டாது அவனுடைய உதவியால் விலக்கிவிடு
வான் முசாபர்களுடையவழி துப்பரவாகிப்போகும் அப்படிக்குஆண்
டவன் பார்த்து கொல்வானாகில் மெத்தஎத்தமான சவாபாகவிருக்கு
ம் இவ்விதமாக நிதானித்துக் கொண்டு அந்தவழியைவிட்டு திரும்பி
இடதுபக்கமாகப்போகின்றார் அப்படிபோகும்போதில் ஒருகாடான
துகாணப்பட்டு சுத்தமுள்ளுகளாயிருக்கின்றது (தவக்கல் இலல்லாஹி)
என்று எண்ணிக்கொண்டு அவ்விடம் போகின்றார் அங்கேபோன
உடனே காலையெடுத்துவைத்தால் அவ்விடத்தில் அனேககேடுகள்



அகப்பட்டது அவ்விடத்திலிருந்துகொஞ்சதூரம்பனைதைகெட்டிபண்
ணிக் கொண்டு நடந்துபோனார் அவ்விடத்தி லிருக்கின்ற மரத்
தின்முள்ளுகளினால்துணிகளெல்லாங்கிழிந்துதுண்டுதுண்டாகிவிட்
டது உடம்பெல்லாம் இரத்தமாரியாகச்சொரிகின்றது நிலத்திலுடை
ய முள்களால்உள்ளங்கால்கள் பொத்தல்பொத்தலாகிக் கால்களெல்
லாம்வீங்கிப்போயவிட்டது அப்போது மிகுந்த மனவருத்தமடைந்து
எண்ணுதுமெண்ணி விசனப்பட்டுக்கொண்டு சொல்லுகின்றார் அ
ந்தபெரியமனிதன் நிசத்தைச்சொன்னார் நான்கெட்டயெண்ணம்பொ
ல்லாக்கேடுகெட்ட நசீபுள்ளவன் அதைமெய்யென்றுநம்பாமல்தனக்
குத்தானே முசீபத்திலகப்படும் படிக்காகிவிட்டது இப்போதெனக்
கு சந்தேகமாகவிருக்கின்றது இன்னம் இதற்கு முன்னால் போனால்
அவ்விடத்தில் எவ்விதமான துன்பங்களிருக்கின்றதோ வென்று ஏ
ன்னுதெல்லா மெண்ணிக்கொண்டு படாததுன்பங்களெல்லாம் பட்
டுக்கொண்டு எவ்வளவோநாளாய் அந்த காடுகளைத்தாண்டிக் கொ
ண்டு முன்னால் நடந்து போகின்றபோது ஒரு வனாந்திரமான
காடு எதிர்ப்பட்டது அவ்விடத்தில்போகும்போது அக்காட்டிலிருக்
கப்பட்டதுஷ்டமிருகங்களான சிங்கம்- புலி- கரடி - நரிகள்- முத
லியவிதவிதமான மிருகஜாதிகளும் மனிதனுடைய வாசனையைக்க
ண்டவுடனேதின்பதற்குகூட்டங்கூட்டமாகமிருந்தவேகமாகஓடிவரு
வதை ஹாத்திமானவர் பார்த்து பயந்துநடுநடுங்கி எண்ணுகிறார் இந்
தமிருகஜெந்துகள்ஓடிவருவதைப்பார்த்தால்நம்மைஎவ்விதத்திலும்தி
ன்பதற்காக வருகின்றதேதவிர வேறில்லையென்று மனந்தடுமாறி இ
தற்கென்னயோசனை செய்வோமென்று மனங்கலங்கி தடுமாறியிருக்
கும் வேளையில் அக்கூட்டங்களெல்லாம் கிட்டேமுடுகி வந்து
விட்டது அப்போது கைபாக ஒருபெரியவர்ஒளிவுபொருந்தியவடிவு
ள்ள ரூபமாக இடதுபக்கமாயிருந்துமுன்னால்வந்துநின்றுக்கொண்டு
சொல்லுகிறார்ஓவாலிபனே நீ பெரியோர்களுடையசொல்லைகேட்கவி
ல்லை அதனாலிந்த துன்பத்தில் வந்து சிக்கிக்கொண்டாயென்றுசொ
ல்ல ஹாத்திம் சொல்லுகிறார் நான் பெரியகுற்றஞ்செய்து விட்
டேன் அதனாலிவ்விதமான துங்கடம் வந்து இப்போது நேரிட்டி
ருக்கிறதென்றுசொல்லஅப்போதந்தபெரியவர்சொல்லுகிறார் கிரஸ-
லைடய மகன்கொடுத்திருக்கிற மோருவைவெடுத்து நிலத்தில்போட்
டால் இந்தபொல்லாக்கூட்டங்களெல்லாம்கண்ணிற்காணாமல் போய்
விடுமென்றுசொல்ல உடனே தன்னிடத்திருக்கின்ற மோருவையெ

டுத்து நிலத்தில்போட்டார் உடனே நிலமானது சிவந்த நிறமாகி க
றுப்பாகிபச்சைநிறமாகி பின்புகறுநிறமாகிவிட்டது;

பின்பு ஓடிவந்த மிருகஜாதிகள் ஒன்றுக்கொன்று சண்டைபோ
ட்டுக்கொண்டு எல்லாக்கூட்டங்களும்மூன்றுநாழிகைக்குள்ளாக இற
ந்துபோய்விட்டதுகள்இவ்விதமானகோலங்களை ஹாத்திமானவர்பார்
த்துமிகுந்தஆச்சரியப்பட்டுசொல்லுகின்றார் ஓ, ஆண்டவனே இந்தமிரு
கஜாதிகளுக்கு இவ்விதமாக இறந்துபோகும்படியான பாதையென்ன
மோ தெரியாதென்று அல்லது நம்முடைய மோருவின்குணமாக யி
ருக்குமோவென்று அவனைப்புகழ்ந்து போற்றிசொல்லுகின்றார் இவ்
விதமானவேளையில் எப்பேர்ப்பட்ட பெரிய(ஓலியானவர்)வந்துஎனக்
கிந்தரகசியத்தைச்சொன்னார் அப்படிக்கவர்வந்து சொல்லாவிட்டால்
நமக்கென்ன மோசம்வந்து நேரிடுமென்று யோசித்துக் கொண்டு
அங்கே யிறந்துகிடக்கின்ற மிருகங்களைப்பார்த்தால் யாதொன்றும்உயி
ரோடிருக்கின்றதைக்காணப்படவில்லை அப்போது ஹாத்திமானவர்
எண்ணுகின்றார் கீழ்கிடக்கின்ற மோருவையெடுத்துக் கொள்ளவே
ண்டுமென்றும் பின்னுமொருயோசனை வந்தது நல்லது அந்தமோரு
வை நாமெடுப்போமாகில் ஒரு வேளை இறந்து கிடக்கப்பட்ட மிரு
கஜாதிகள் உயிராகியெழுந்து நம்மைக்கொன்று போகுமல்லவா நா
ம்பட்ட பாடுகளெல்லாம் வீணாகிப் போய்விடுமென்றும் ஆகையா
ல்நாம்அவசரப்படுத்தக் கூடாது நிதானிக்கவேண்டுமென்றும்எதுவ
ரையில்பொறுத்தாராகில் அந்தமிருகஜாதிகளுடைய மாமிசங்கள்தோ
ல்முதலாகியவஸ்துகளெல்லாம்வெந்துகரைந்துசுத்தவெலும்புகளா
க்கிவிட்டபின்புதம்முடைய மோருவையெடுத்துக்கொண்டு அவ்விட
ம்விட்டுமுன்னால்சிலநாள் வனாந்திரங்களில்நடக்கும்போதில் அநேக
மானகாரணம்ஆண்டவனுடைய பெருமைகளையெல்லாம் பார்த்துக்
கொண்டுபோகின்றபோதில் அதிலுமொருபெரியகாடானதுகாணப்பட்
டது அவ்வனாந்திரத்தில் பார்த்தால் வழிகள்தோறும் முள்ளுகள் இ
ருப்பாணிகள்போல் நிறைந்து கிடக்கின்றது அதில் நடந்தால் கால்
களில்பாய்ந்து அப்புற முருகிப்போகின்றதுகால்களெல்லாம்இரணங்
களாகி வெகுவேதனையாக நடக்கக்கூடாமையால் தான் உடுத்திருந்த
சோமனைக் கிழித்து கால்களிலுள்ள இரணங்களுக்குகட்டிக்கொண்டு
காலில்போட்டிருந்த ஜோடுகளிலும் துணிகளைக்கிழித்துசுற்றிக்கொண்



டுமெள்ள அவ்விடம்விட்டுப்போகின்றார் அப்போதுதன்னுடையமன
திலெண்ணுகின்றார் ஓ, ஹாத்திமே உன்னைப்போலொத்த புத்திகெ
ட்டவன் இந்தலோகத்தில் ஒருவருமிருக்கமாட்டார்கள் அந்த பெரியவ
ராகப்பட்டவர் உனக்கெவ்வளவோ புத்திகள்சொல்லி தடைபண்ணி
னார் பாவா அந்த வழியானது வெகுதுலைவாகயிருக்கும் அவ்வி
டம்போக உன்னால்கூடாது அவ்வழியு முனக்குத் தெரியாது ஆனால்
ஆண்டவன் மனிதனுக்கு அறிவும் நினைவும்என்னத்துக்காகக்கொடுத்
திருக்கின்றான் முன்னால் தன்னை அறியும்படியாக இன்னின்னபடிநட
க்கும்படிக்கு தெரியவும் அதின்மேல்நடக்கவுமிருக்கவுமுன்னால்அவர்
சொல்லியதுபோல் வலதுபக்கம் போய் என்விதிவசத்தாலப்படி
யே போகாமல் அப்பாதையைத் திரும்பி இடதுபக்கமாக வந்
து இவ்விதமான துன்பத்தையும் வருத்தத்தையு மெடுத்துக்கொண்
டாய் ஆனாலிப்போது நீ நினைத்ததினால் உனக்கென்னபலன் கிடைக்
குமென்று ஓரிடத்தில் மனவருத்தத்துடனே நடக்கக்கூடாமையா யி
ருந்துவிட்டு தன்னுடைய காலிலிருந்த ஜோடை மெள்ளஎடுத்து கா
லைப்பார்த்தால்முள்ளுகள் பொத்திக்கொண்டுஇரணமாகி கண்டவிட
ங்களெல்லாம் புரையோடிருந்தது அதெல்லாமெதுவாகக் கிளறியா
தொன்று மில்லாமலெடுத்து கட்டுப்பார்த்தால் கால்களிலுள்ள
துவாரவழியால் எலும்புகளும் வெளியேதெரிகின்றது கால்களில்
துணிகளைச்சுற்றி அதின்மேல் ஜோடைபோட்டுநொண்டிக்கொண்டு
அவ்விடம் விட்டுப்புறப்பட்டு போகும்போது தன்மனதில் எவ்வி
தமெண்ணுகிறாராகில்இப்போதிந்த பெருங்கேடானவழியில்நின்று இ
துவரையில்வந்துசேர்ந்தாய்இதற்குப்பின்பு என்னென்னஆபத்துகள்
வருகிறதோதெரியவில்லையென்றுசொல்லிக்கொண்டுகொஞ்சதூரம் ந
டக்குப்போ தவ்விடத்திலிருக்கிறதேள்கள் மனிதனுடையவாசனையைக்
கண்டவுடனேஓடிவந்துஎத்தனையோதேள்கள் பூனை -நரி- உயரமும்
அதின்வால்களைப்பார்த்தால்பெருநரியின்வாலைப்போலவும் கால்களை
ப்பார்த்தால்சாவல்கால்போலவும்கொடூரமாகவும்இவ்விதமானதேள்க
ளைஹாத்திமானவர்பார்த்து பயந்துநடுங்கிக்கொண்டுதனதுபுத்திமாறி
யாதொன்றுந்தோற்றாமல் கால்களையப்புறமெடுத்து வைக்காமல்அங்
குமிங்கும்பார்த்துக்கொண்டு நிற்கையில் முன்னால் உதவிசெய்த பெ
ரியவரானவர்வந்துகையைப்பிடித்துகொண்டு சொல்லுகிறார்நீ அச்சப்
படாதே மனதைதிடப்படுத்திக்கொண்டு உறுதியாகவும் திடமாகவு
ம் நில்லென்றுசொல்ல ஹாத்திம் சொல்லுகிறார் ஓ, பெரியவரே

ஆண்டவனுக்கு உகப்புள்ளவரே நானென்னசெய்ய இத்தேள்களுடனெவ்விதமாகப் போர்செய்வேன் அதைப்பார்த்தால் மலையிலுள்ளகற்களின்பேரில் தன்னுடைய கொடுக்கால் ஒரு கொட்டு கொட்டுமாகில் அக்கற்களுருகி சாம்பலாகிப் போகும்போலிருக்கிறது ஆகையால் இதுகளோடு நானெவ்விதமாக எதிர்ப்பேனென்றுசொல்ல அப்பெரியவர் சொல்லுகின்றார் நீ ஒன்றுக்கு மச்சப்படவேண்டாம் உன்னிடமாகயிருக்கு மோருவைவெடுத்து அக்கூட்டத்துக்கு முன்பாக நிலத்தில்போடென்றார் ஆண்டவனுடைய காரணத்தைபார்க்கலா மென்றுசொல்ல ஹாத்திமானவர் தன்னிடத்திலிருக்கிறமோருவை யவிழ்க்கலாமென்று தன்னால்கூடியமட்டும் பார்த்தால் இரண்டுகைகளும் பதறிப்பதறி நடுக்க லெடுக்கிறது எடுக்கக்கூடவில்லை அப்போதப்பெரியவர் அதையவிழ்த்துஹாத்திமுடைய கையில்கொடுத்துபிஸ்மில்லாவென்று அம்மோருவைநிலத்தில்போடென்று சொல்ல அதுபோல் போட்டார் அந்த மோருவானது சிவந்த நிறமாகினவுடனே அத்தேள்களெல்லாம் ஒன்றுக்கொன்றுதங்களில்தானேசண்டைசெய்து ஒன்றையொன்றுகொடுக்கினால்கொட்டிக்கொண்டுஅதுகளின்வயிறுவெடித்து சாகிறதுகள் இவ்விதமாய்சண்டைசெய்வதைஹாத்திம் பார்த்துக்கொண்டு நிற்கப் போர்செய்து தங்களில் தானே மூன்றுநாளுக்குளிறந்துவிட்டதுகள் ஹாத்திமிந்த வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்துநான்காநாள் இம்மோருவைகையிலெடுத்து ஷூக்கூருடைய இரண்டு ரகாயத்துதொழுதுகொண்டு அவ்விடம்விட்டு புறப்பட்டு சிலதூரம்நடந்து போகிறபோது அங்கேயொரு பெரியபட்டணம்தோற்றியது அப்பட்டணத்தில் போய்ச்சேர்ந்தார் அவ்விடத்திலிருக்கப்பட்டவாள் இவர் புதிதா வந்ததைப்பார்த்து அருகில்வந்து ஹாத்திமை கேழ்க்கின்றார்கள்.

ஓ. முசாபரே நீ எந்தவழியாகவந்தா யென்றுகேழ்க்க அப்போது ஹாத்திமானவர் நான் இடதுபக்கவழியாக வந்தேனென்றுசொல்ல அவர்கள் மிகுந்த ஆச்சரியமடைந்து சொல்லுகிறார்கள் நீ இறக்காமல் உயிரோடே எவ்விதமாகப்பிழைத்துவந்தாய் அந்த வனாந்திரத்திலுள்ள கோரமாகிய மிருகஜாதிகளும் வேதனையுள்ள முள்ளுகளும் மலைப்பாம்புகளும் கொடியதேள்களுமாகிய இதுகளைநீகாணவில்லையா அந்த முசீபத்தில்நின்று எவ்விதமாகவந்தாயென்றுசொல்ல ஹாத்திம்சொல்லுகிறார் நீங்கள்சொன்னதெல்லாம்என்மேல்வந்துவி



ழ ஓடிவந்தது ஆண்டவனதிலிருந்துதப்பி என்னைக்காப்பாற்றி இதுவரையிலும் கொண்டுவந்துசேர்த்தான் அப்பாதையிலிருக்கிற கொடிய மிருகஜாதிகளும் பாம்புகள்தேள்கள்முதலியதெல்லாம்இறந்துபோய் விட்டதென்றுசொல்ல அப்போதவ்விடத்தி லிறங்கியிருந்தவர்த்தகர்கள் இந்த ஹாத்திமுடைய மொழிகளைக்கேட்டுமனம்திடப்பட்டுசொல்லுகிறார்கள் அதெவ்விதமெனில் நாம் தூரதூரமாகச் சுற்றிக்கொண்டு போவதைப்பார்க்கிலும் இந்த அருகாமையில் சுற்றில்லாதவழி போனால் நலமென்றுஇவ்வழிசுத்தமாகப்பயமற்றதாயிருப்பதுபோல் தோற்றுகிறதுஆனாலவ்விடத்தில் மலைப்பாம்பின் மற்றமிருகஜாதிகள் அப்பாதையில் நடமாட்டமில்லாமல் போனபடியால்அந்தவழி போகவும்வரவும் யாதொருபயமும் அச்சமும் தீர்ந்துவிட்டது இனிமேல் இப்பட்டணம் பிலமாகிப்போமென்றெண்ணிக்கொண்டு அந்த வர்த்தகர்கள் தங்கள்சாமான்களையெல்லா மெடுத்துக்கட்டி ஒட்டகத்தின் பேரிலேற்றி பொதிகளைப்போட்டுக்கொண்டு இடதுபக்கவழியாகப் போகிறார் அச்செய்தியை பாத்ஷாவுக்கு தெரியப்படுத்தினார்கள் நமதுபட்டணத்தில் சிலவர்த்தகர்கள் வந்திறங்கி யிருந்தார்கள் ஒருமுஸாபரின்சொல்லை மெய்யென்று நம்பிக்கொண்டு இடதுபக்கவழியில் மலைப்பாம்புகள் துஷ்டமிருகங்களும் தேள்களிருந்திருக்கிறதையும்பிடித்துக்கொண்டுபோகிறார்களென்றுசொல்லவுடனேபாத்ஷா உத்தரவுசெய்தார் சில (ஹரக்காரர்களை) அவர்கள்பின்னால்போய் அவ்வழிகளின் சங்கதியைநன்றாய்த்தீர அறிந்துவரவேண்டுமென்றும் ஹாத்திமென்பவனையழைப்பித்து தம்மிடத்தில்வைத்துக்கொண்டு அவனைப் பார்த்துசொல்லுகிறார் ஓ,முசாபரே நீர் வராதவழியிலிருந்து அனேகந் துன்பப்பட்டுவந்திருப்பதால் இவ்விடத்தில் சிலநாள் இளைப்பாறி திரேகத்தைதிடப்படுத்திக்கொண் டிருக்கும்படியாகச்சொல்லிநீர்பின்பு எவ்விடம்போகவேண்டுமோ அவ்விடம்போகலாமென்றும் ஆனாலிவனுடையஎண்ணமெவ்விதமாயிருந்ததென்றுஇவர்சொன்னமொழிகள் உண்மையாயிருந்தால்நலமாச்சுது இல்லாவிடிலிவனை தூக்கிப்போடவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு அவன் சிலநாள் வைத்துக்கொண்டிருந்தானிவரெங்கிலும்போகாமல்பத்திரப்படுத்தும் படியாக. எத்தனையோகாவலாள்களையும்வைத்திருந்தான்வழிகளின்சங்கதிகளை யறியப்போனவர்க ளந்தவர்த்தகர்க்குப் பின்னால்போய் அவர்களெங்கே யிறங்கினார்களோ அவ்விடத்திலுள்ள அடையாளங்களைப்

பார்த்தார்கள் யாதோ ரிடங்களிலும் ஒரு ஆபத்தையும்பார்க்கவில்லை
அந்தவர்த்தகர்அக்காட்டில்யாதொருதொந்தரவுமில்லாமல்சுகசவுக்கி
யமாக நடந்து அப்புறம்போனார்களிவர்கள்கிலதூனாளைக்குப்பின்புதம்
முடையபட்டணம்வந்துசேர்ந்தார்கள் பாத்துஷாவுடனேசேதிகளைத்
தெரியப்படுத்தினார் இந்தமுசாபர்எவ்விதமாகச்சொன்னரோ அம்மொ
ழிகள்மெய்யாகயிருக்கிறது அவ்வழியில்யாதொருபயமும்அச்சமுமில்
லை ஆபத்துமில்லையென்று அவர் சொன்னவுடனே பாத்துஷாவா
னவர் தன்னுடையபட்டணத்திலு மதைச்சேர்ந்த நாடு நகர்தோறும்
(இஷ்த்தியார்நாமா)வென்றவிளம்பரம்போடச்சொன்னான்எவ்விதமெ
னில்இடதுபக்க வழிகளிலிருந்த ஆபத்துகளும் துஷ்ட ஜெந்துக்களு
டைய அச்சந்தீர்ந்து பாதை சுத்தமாகப் போயிருப்பதால் இனியாரா
வதுயாதொருஅச்சமும்பயமுமில்லாமலந்த பாதையாகப்போகவரலா.
மென்று இவ்விதமாகவிளம்பரம்போட்டபின்பு ஹாத்திமையழைத்து
மிகுந்த மரியாதிசெய்து சொல்லுகிறார் ஓ, முசாபரே என்னுலொரு
குற்றமாகியிருக்கின்றது அதைநீர் பொறுக்கவேண்டுமென்றுசொல்
லிவேண்டியபொருள்களும் இரத்தினதிகளுமவர்முன்னுல்வைக்க அ
தைப்பார்த்து ஹாத்திம் சொல்லுகிறார் உங்களாலெனக்கு யாதொரு
குறைவில்லாமல் தங்கள்பட்டணம்வந்த நாள்வரையிலும்வேண்டியசு
வுக்கியத்தை யனுபவித்திருந்தேன் தங்களெனக்கு என்னகுற்றஞ் செய்
தீர்களென்று ஹாத்திம்சொல்ல அப்போதுபாத்துஷாசொல்லுகிறார்
நீரறியமாட்டீர் உங்களுக்குவேண்டியதெல்லாம் கொடுத்துக்கொண்
டுநீர்வெளியே எங்கும்போகாமல்நான்பத்திரப்படுத்தியிருந்தேனெவ்
விதமெனில் நீர் சொன்னசொற்கள்பொய்யாகிப்போகுமாகில்தூக்கு
போடவேண்டுமென்றும் நாடியிருந்தேன் அதுபோலொருவரும்சொ
ல்லவில்லை அம்மொழியைஹாத்திம்கேட்டுசொல்லுகிறார் இப்போது
நீங்கள் சொன்னசொல்லானது மெய்யாகயிருக்கு மெவ்விதமெனில்
பாத்துஷாக்கள் ஜனத்துக்குவேண்டியசவுக்கியமடையும்படியாகத்திர
வியங்களுங்கொடுப்பார்கள் பொய்க்குஉடனே உயிர்வதைசெய்வார்க
ள் ஆகையால் நீங்கள்சரியான நடப்புநடக்கிறீர் நான் பொய்யானதை
சொல்லவில்லை அதுசற்குணமுள்ளவர்களுடையநடப்பில்லை இதுசரி
யானயின்சாபாகயிருக்கும்அப்படியிருக்க நீங்கள் யாதொரு தீமைசெ
ய்யவில்லை எனக்கு அவ்வேலைபொருத்தமானதுதான்ஆனால்ஆண்டவ
ன் உங்களைக்காப்பாற்றவேண்டும்உங்களுடையசீமை உங்கள்வசமாக
யிருக்கவும்ஆனால்இப்போதுஎனக்குகொடுத்திருக்கப்பட்டவஸ்துகளெ



னக்குயாதொன்றுக்கு மாகமாட்டாது நான் தனித்த முஸாபர் இ
தையெங்கே கொண்டுபோவேனப்போது பாத்துஷாசொல்லுகிறார்
நீங்களப்படி எண்ணுதீர்கள் உங்களோடு காவலாக என்னுடையசன
த்தையனுப்புகிறேன் தங்களூரில்கொண்டுபோய்சேர்க்கும்வரையில்அ
ப்போதுஹாத்திம்சொல்லுகிறார் எனக்கொருவேலைமுக்கியம்அவசர
மாகயிருக்கின்றது அந்த வேலைமுடிவாகும்வரையில்நான் என்னுடை
யவூர்முகத்தைப் பார்க்கமாட்டே னென்றுசொன்னர்

அப்போது பாத்துஷா அந்த வேலை எதுவாக இருக்கும்
அது நமக்கு தெரியுமாகில் நாமதற்கு சேருமானமாக இருப்போ
மென்றும் சொல்ல ஹாத்திம் சொல்லுகின்றார் ஓ, பாத்துஷாவே
நான் ஆண்டவனுடைய உதவி யொத்தாசைதவிர மனுஷருடை
ய உதவியொத்தாசைக்காக நான்வேண்டவில்லை ஆனலெனக்குஇப்
போதுசெய்யவேண்டியவுதவிஎன்னவெனில்ஒருமனிதனைதாங்கள்ஷ
ஹறெகத்தாலுடையபாதைஎனக்குகாண்பிக்கஅனுப்பவேண்டும்இதுஉ
ங்களுடைய நன்மையாகயிருக்கும் அம்மொழியைக் கேட்டுபாத்துஷா
வானவர்சொல்லுகின்றார் ஓ, வாலிபனே உனக்கு அந்தப்பட்டணத்
தைக்குறித்து என்ன வேலையிருக்கின்றதென்று கேட்க அப்போ
துஹாத்திம் சொல்லுகின்றார் நான் [illegible] டிருக்கின்றேன்
ஹமாம் பாத்கருடைய இடம்நான் பார்க்கவேண்டுமென்று மிகுந்த
இன்பங்கொண் டிருக்கின்றேன் அப்போது பாத்துஷா சொல்லுகி
ன்றார் ஓ,வாலிபனே நீ இந்தஎண்ணத்தை உன்னுடையமனதிலிருந்
துதள்ளிவிடு எவ்விதமெனில் அந்தஇடத்துக்குப் போனவர்கள் தி
ரும்பிஒருவரும்வரவில்லை ஆகையால்தன்னையேன் அந்தகேடில்போடு
கின்றாய் அப்போது ஹாத்திம் சொல்லுகிறார் அதனால் ஆனதா
கட்டும் எவ்விதத்திலும் நான்போய் அவ்விடத்திலுடைய ச
ங்கதிகளை அறிந்துவர எனக்குமிகுந்த அவசரமாக இருக்கின்றதெ
ன்றுஞ்சொல்ல பாத்துஷாதன்னால் கூடியவரையிலும்தடங்கல்செய
தார் அனேகமான முகாந்திரங்களும் புத்திகளுஞ்சொன்னர் என்ன
சொன்னபோதிலும் அதைக்கேழ்க்கவில்லை அப்போதுமிகுந்தமனவ
ருத்தமடைந்து இரண்டுஆள்களை அவரோடுசேர்த்து அனுப்பி அவர்
களுக்குசொல்லுகின்றார் நீங்கள் ஷஹறெகத்தாலென்றதேசபாதை
யில் அவரைக்கொண்டுபோய் விடுங்களென்றுசொல்ல ஹாத்
திமானவர் உத்தாரவுபெற்றுக்கொண்டு அந்தப் பட்டணத்தை விட்டு

அவ்வழியைநோக்கி நடக்கின்றார் சிலநாளைக்குப் பின்பு ஒரு தங்குதலையானவிடத்தி லிறங்கினார் அப்போ திவரோடு வந்த இரண்டு பேர்களும் சொல்லுகிறார்கள் எங்களுடைய எல்லை முடிவாகிவிட்டது இனிஷைஹறெகத்தானுடைய ஸர்ஹத்தாக யிருக்கும் எங்களுக்கு உத்தரவு கொடுக்கவேண்டு மென்று கேழ்க்க ஹாத்திமானவர் இருபேரையும் உத்தரவுகொடுத் தனுப்பிவிட்டு தானவ்விடம் விட்டப்புறம் அருகில்போகும்போது அவ்விடத்திலுள்ள மனிதர்களிவரைப்பார்த்துச்சொல்லுகின்றார்· ஓ, முசாபரே நீ எந்தபாதையாக்வருகின்றாயென்றுகேழ்க்க இன்னபாதையாக வருகின்றேன் அந்த பாதையில் மிகுந்த ஆபத்தானகேடுதலைக ளிருந்தது ஆண்டவன் அந்த பாதையைதன்னுடையகிருபையால் அந்த காடுகளிலுள்ள அச்சங்களை நீக்கி துப்பரவாக்கிவிட்டான்எனக்குயாதொருதீங்கு மில்லாமலிதுவரையிலு மென்னைக் கொண்டுவந்து சேர்த்தான் இம்மொழியையவர்கள்கேட்டு அவ்விடத்திலுள்ளவர்களெல்லோரும் சந்தோஷத்தை யடைந்தார்கள் ஹாத்திமானவர் பட்டணத்துக்குள்ளே போய் சேர்ந்து அவ்விடத்தில் கார்வான் சருவென்ற சத்திரத்திலிறங்கினார் அப்படியிருக்க ஒரு நாள் விலைமதிக்காத இரண்டுமுத்தும்இரண்டுஇரத்தினமும்அவ்விடத்திலுள்ள பாத்துஷாவினிடமாகவுமிருக்கமாட்டாது அவைகளை ஒரு டப்பியில்வைத்துக்கொண்டு அவ்வூர்பாத்துஷாவைகாணும்படியாகப் போனார் வாசற்படி காவலிருக்கின்ற (சோப்தார்கள்)நீர் எங்கேவந்தீர்களென்றுகேழ்க்க பாத்துஷாவை காணும்படியாகவந்திருக்கின்றே னென்றுஞ்சொல்ல அம்மொழியைக் கேட்டு தங்களுக்கு தலைமைக்காரராகிய (தாரோகா) வென்பவரோடு சங்கதியைத்தெரிவிக்கஅப்போதவர் பாத்துஷாவின் சமுகத்தில் போய்தெரியப்படுத்த உத்தரவாச்சுது அம்மனிதனுடைய வரலாற்றைநன்றாயாராய்ந்துகொண்டுவாருங்களென்றுசொல்ல அச்சோப்தார்கள் வந்துஹாத்திமைகேழ்க்க நீங்கள் எவ்விடமிருந்துவருகின்றீர் உம்முடைய பேரென்னவென்று கேழ்க்க நான் வர்த்தகனாகயிருக்கும் ஷாஹெறஆபாதென்றபட்டணத்தி லிருந்து வருகின்றேன் பாத்துஷாவை காணும்படியாக வென்றுசொன்னவுடனேதாரோகாவுக்கு தெரிவிக்க அவர் பாத்துஷாவின் சமுகத்தில் போய் சொல்லுகின்றார் எவ்விதமெனில் ஒருவாலிபன் மிகுந்த அழகு வடி வுள்ளவனாகவும்ஷாஹெற ஆபாதென்ற பட்டணத்தி லிருந்து தங்களுடையசமுகத்தை காண வந்திருக்கின்றார் அம்மொழியைக் கேட்டு பா



த்துஷாவானவர்உடனே அழையுமென்றுஉத்தரவுசெய்தார் அதுபோல் ஹாத்திமை பாத்துஷாவின் சமுகத்திலழைத்துக்கொண்டுவந்தார்கள் அவரைக் கண்டு மிகுந்த வணக்கத்துடனே ஆதாபு தஸ்லி மாத்து செய்து அவரைபோற்றி புகழ்ந்துக்கொண்டு அருகில் போய் முத்தையும்இரத்தினத்தையும்காணிக்கையாகநஜர்செய்தார் அதைப்பார்த்தவுடனே பாத்துஷாவுடைய முகத்தின்நிறமாறிப் போய் மிகுந்த சந்தோஷமாகப் பார்த்துதனக்கு முன்பாக நாற்காலியி லிருக்கும்படி உத்தரவு செய்தார் அதுபோலிருக்கையில்ஹாத்திமுடைய சங்கதிகளைக் கேட்கச்சொன்னார் நான்வெகுநாளாக வர்த்தகம் செய்துக் கொண்டிருந்தேன் பின்பு இந்த லோகத்தை நிலையுள்ளதென்றும் பெருமையாகவு மெண்ணாமல் அந்த வர்த்தகத்தை நீக்கிவிட்டு நீதிநெறிதப்பி பாத்துஷாக்களுடைய மிலாகத்துகளையும் நீக்கிவிட்டு தங்களுடைய கீர்த்தியும் பெருமையும் கேள்விப்பட்டு இந்தபட்டணத்தில் வந்தேன் இன்னமும் தங்களுடையபெருமைகளை மிகுதமாகவும் கேழ்விப்பட்டு இப்பேர்ப்பட்ட அதல் இன்சாபுவுடைய பாத்துஷாவைக்கண்டு தெரிசனஞ் செய்தால் நன்மையென்றெண்ணி தங்களைக்காண நாடிவந்தேனென்று சொல்ல இம்மொழிகளை பாத்துஷா வானவர்கேட்டு மிகுந்த கிருபையாகிச் சொல்லுகின்றார் ஓ,வாலிபனே யிக்காலத்திதேசத்திலிருந்தால் உன்னுடைய சோபத்தாலும் பழக்கத்தாலும் நமக்கு மிகுந்த திருப்தியடையும் நீர் இருப்பீராகில் நலமென்றுசொல்ல அம்மொழியை ஹாத்திமானவர் கேட்டு மிகுந்த வணக்கமாகச் சொல்லுகின்றார் பாத்துஷாவே நான் ஓரிடத்தில் மூன்றுநான்குநாள் தங்கியிருப்பதேயெனக்கு மிகுந்த கடினமாகவிருக்கும் ஆனால் தங்களுடைய தெரிசியாகிய பாத்துஷாவின் சமுகத்திலிருக்க எவ்விதத்திலும் நனமையாகயிருக்கும் என்னுடையஉயிருமனமும் சந்தோஷமாக உறுதிகொண்டும் பின்பு பாத்துஷாவானவர் நீர் எங்கேயிறங்கியிருக்கின்றீரென்றுகேழ்க்க அப்போது சொல்லுகின்றார் நான்கார்வான்சருவென்றவிடத்திலிறங்கியிருக்கிறேனென்றுசொல்ல அம்மொழியைக்கேட்டுதம்முடைய தர்பாருக்குமுதன்மையாகியபெரியதாரோகாவினிடம் உத்தரவுசெய்தார் ஒரு பெரியமஹால் துப்பரவுசெய்து அலங்கரித்திவரை அங்கே கொண்டிறக்கவும்இன்னமவருக்குகாலைமாலை இரண்டு வேளையும் எனக்குச்சமைக்கிற காலான போஜனத்திலிருக்குமதில் (க-ச) காபுகளில் பிபாமத்துகள் நிரப்பி அனுப்ப வேண்டுமென்று

உத்தரவுசெய்து இன்னமவருக்கு யாதொரு குறைவில்லாமல் வேலைக்காக வேண்டியவர்களை திட்டப்படுத்திவைக்கவேண்டியதென்று உத்தரவுகொடுக்கஅதுபோலவர்கள் நடந்துகொண்டுவந்தார்கள்.

அப்படியிருக்கையில் ஹாத்திமானவர் பாத்துஷாவின்சமுகத்தில்போக்குவருத்தாயிருக்க பாத்துஷாவுமிவர்பேரில் மிகுந்தபட்சமாயிருந்தார் இவ்விதமாகஆறுமாசமாகிவிட்டது ஒருநாழிகைஹாத்திமை பார்க்காமலிருந்தால் தன்மனம் சந்தோஷ மடைகிறதில்லைஇவ்விதமானபட்சமாக யிருந்தார் தன்னுடையவுடல் உயிரில்நின்று மதிகமாக இன்பமும் பட்சமும் வைத்துக்கொண்டு தம்முடையமனிதரிடமாக ஹாத்திமுடைய பெருமைகளைக்குறித்து தாரீபுசெய்து சொல்லுகின்றார் இவர் என்னுடையநகரத்தில் குடியாகவுமென்னிடமாகவும் இவர் நிதமிருப்பாராகில் மெத்தநன்மையாக யிருக்குமென்றுசொல்ல அம்மொழியை அவர்கள் கேட்டு சொல்லுகின்றார் பாத்துஷாவேதாங்கள்சொல்லியதுபோல் இந்தமனிதன் இந்நகரத்திலிருந்தாலவருடையகுணமும் செயலும் நடப்பும்வாக்கும்எல்லோருக்கும் தெரியவரும் இவ்விதமானவரிருந்தால் பாத்துஷாவுடையசமுகத்தில் மிகுந்தமேன்மையாகயிருக்குமென்றுசொல்லஒருநாள் நடந்தமொழியானதுஹாத்திமானவர்(ஹாரிஸ்பாத்துஷா) மிகுந்தசந்தோஷத்தையடைந்திருக்கின்றபோதில்ஒருதட்டில் இரத்தினங்களும்பச்சை-புட்பராகம்-வைடூரியம்முதலியஇரத்தினங்கள் விலைமதிக்காததை வைத்து பாத்துஷாவின்முன்னால்கொண்டுபோய்நேராகவைத்துநிற்கசொல்லுகின்றார் ஓ, வாலிபனே என்னுடைய மனதினால் உன்னை யுறுதிகொண்டிருக்கின்றேன் நீ என்னை அடிக்கடி வெழக்கப்படுத்துகின்றாய் நான் உன்னால்வெழ்க்க மடைகின்றேன் எவ்விதமெனில் வெகுநாளாக நீ என்னுடையசமுகத்திலிருக்கின்றாய் என்னிடமாக யாதொன்றும்கேழ்க்காமலுமிருக்கின்றாய் இப்போது என் மனமானது எண்ணுகின்றது உனக்கென்னவேண்டுமோ அதையாதொருதடங்கலில்லாமல்கேழ்க்கவேண்டும் அதை நான் யாதொரு தடங்கலில்லாமல் உனக்குகொடுப்பேன் அப்போது ஹாத்திம் சொல்லுகின்றார் பாத்துஷாவே உங்களுடையகிருபையால் எனக்கு வேண்டிய அயிஸ்வரியமும் செல்வமுமிருக்கின்றது எனக்குயாதொரு குறைவில்லை ஆனால் தாங்கள்வருத்த மெடுத்துகொள்வதுசரியல்லஎனக்குஅனியாயினிச்சையொன்றுமில்லையென்றுசொல்ல அப்பாத்துஷாசொல்லுகின்றார் இவ்விதமா



கச்சொல்வது தகாது என்னுடையசீமை உங்களுடையதாகயிருக்கும் என்னவேண்டுமோ அதை நீர் கேழ்க்கலாம் உங்களுடைய கைவசத்தில் வைத்துக்கொள்ளலா மல்லது நீர்யாருக்காவது கொடுக்கலாமதற்கு நீர்முக்தாராகயிருக்கலாம் எனக்கென்னவேலையிருக்கின்றோ அதற்காக யாதொரு தடங்கலில்லை நீர் சொல்வதுபோல் கேழ்க்கும்படிக்கு ஹாஜராகயிருக்கின்றேன் இம்மொழிகளை ஹாத்திம்கேட்டுசொல்லுகின்றார் பாத்துஷாவே உங்களுடைய ஆயிசு நீடித்திருக்கவும் உங்களுடையசீமையும் ராஜாங்கமும் செல்வமும் எப்போதும் பெருகிக்கொண்டு சதாகாலம்வரவும் என்னுடைய மனதில் யாதொருகுறைவில்லை ஆனால் ஒரு காரியமானது குறைவாக யிருக்கின்றது அதுதவிர வேறில்லை அப்போது பாத்துஷாகேழ்க்கின்றார் அப்பேர்ப்பட்ட வஸ்து என்னவென்றும் ஆனாலென்னுடையபெண்ணைகேட்டபோதிலும்தடங்கலில்லாமல் உங்களைவசப்படுத்திப்போடுவேன்என்னுடைய ஆஸ்தியும் சீமையும் என்னபெரியகாரியமாக யிருக்கும் அப்போது ஹாத்திமானவர் தன்தலையைக் கீழே குனிந்துக்கொண்டு சொல்லுகின்றார் தங்களுடைய பெண்ணானது எனக்குபெரியதங்கையாகயிருக்கும் அப்பேர்ப்பட்ட நினைவுகள் என்மனதிலில்லை ஆனால் தங்களிடமாக நான்சொல்ல அச்சப்படுகின்றேன் அதை சொல்வேனாகில் நீங்கள் கபூல்செய்ய மாட்டீர்கள் அப்போது நான் மனிதர்களில் வெழ்க்கமடைந்தவனாகிப்போவேனென்றுசொல்லபாத்துஷாவானவர் நீர் அப்படி யோசிக்கவேண்டாம்சொல்லலாமென்று பிரியமாகச்சொல்லுகின்றார் ஓ, என்னுடைய பிரியமுள்ளவரே நீர்என் ராஜாங்கம் கேட்டபோதிலும்அதற்கு நான்கொடுக்கஹாஜராகயிருக்கின்றேன் என்பெண்ஜாதிதவிரமற்றவஸ்துகளைகேழ்ப்பீராகில்அதுவெல்லாம் உங்களுடையதாகயிருக்கும் அப்போதுஹாத்திமானவர்கைகட்டிக்கொண்டிருந்த வணக்கத்துடனே சொல்லுகின்றார் தாங்கள் இவ்விதமாகச் சொல்லுகின்றீர் நான் தங்களுடைய அடிமையாகயிருக்குமானால் நான் தங்களை தகப்பனாகவும் தங்கள்பெண்ஜாதியைதாயாகவும் பாவித்திருப்பதால்தங்களுடையசிம்மாசனமும் ராஜாங்கமும் தங்களுக்கே தகுமல்லாமல்வேறேயாருக்காவதுதகாது எனக்கொரு வாக்கிருக்கின்றதென்றுஞ் சொல்ல ஹாரிஸ்பாத்துஷாவானவர் சொல்லுகின்றார் ஆண்டவனுக்காகசுருக்கில் அதைச்சொல்லவேண்டுமென்னுடைய மனங்கலங்குகின்றது அது என்னவென்று கேழ்க்க நல்லது நீங்களெனக்குஒரு வாக்குத்தத்தவங் கொடுப்பீரா

கில் நான் அதைச்சொல்வேனென்றும்அவர் சத்தியஞ் செய்துகொடுக்கஹாத்திமானவர்சொல்லுகின்றார்ஹமாம்பாத்கர் என்னுமிடத்துக்குப்போய்பார்க்கவேண்டுமென்றுஎனக்குஆசையாக யிருக்கின்றது தங்களுடைய உத்தரவானால் நான் அதைப்போய் பார்த்துக்கொண்டும் வருகின்றேனென்றமொழியை பாத்துஷாகேட்டு மிகுந்த மனவருத்தமடைந்து தன்தலையைக் கீழே போட்டுக்கொண்டு சும்மாயிருந்தார் அப்போது ஹாத்திமானவர் பாத்துஷா இவ்விதமாக யிருப்பதைப்பார்த்து நீங்கள் பலவிதமாக விசனப்பட்டுக்கொண்டு ஏனிருக்கின்றீர்கள்எவ்விதத்திலும்தங்களுடையஉத்தரவுபோல் நான் நடக்கப்பட்டவன் தங்களுக்கு சந்தேஷமாக யிருக்குமாகில் அதுபோல் நான் நடப்பேன் அப்போது பாத்துஷாவானவர் தலையையுயர்த்திப்பார்த்துசொல்லுகின்றார்.

ஓ, என் பிரியமானவனே எனக்கு பலவிதமானயெண்ணம் நீங்கினைக்கும்படிக்கு செய்துவிட்டாய் எவ்விதமெனில் உன்னுடையயெண்ணம் எனக்குத்தெரியாமல் முதலே நான் உனக்குசத்தியஞ்செய்துகொடுத் திருக்கின்றேன் (௧-வது) யாதாமொருவரை ஹமாம்பாத்கற்குப்போகவொட்டாமல் காவல் வைத்திருக்கின்றேன் அப்படிக்குஉன்னை அனுப்பாம லிருப்பேனாகில் என்னுடைய சத்தியமாறிப்போகின்றது(௨-வது)எப்படியெனில் சந்திரனைப்போலொத்த அழகும் சவுந்தரியமுள்ள வாலிபனைதன்கையால் தன்னுயிரைபோக்கடிக்கும்படிக்குநான் உன்னையெவ்விதமாகஅவ்விடத்துக் கனுப்புவேனென் மனந்துணிந்துவரவில்லையேஆனால்அதுகெட்டயிடமாகஇருக்கும் (௩-வது)உன்னைப்போல்இதுவரையிலும்என்னிடத்திலொருவரும்வரவில்லை(௪-வது)உன்னையனுப்புவேனாகில்உன்னைவிட்டு நான்பிரிகின்றதுக்கமான துயரத்தைப்பொறுக்க என்னாலெவ்விதமாகும்(௫-வது) உனக்கு உத்தரவுகொடாம லிருப்பேனாகில் நான் சொன்னவாக்குமாறிபொய்யனாகி விடுகின்றேன் இவ்விதமான குணங்கள் பாத்துஷாக்களுக்கு தகுந்ததல்ல எவ்விதமெனில் நான் வாக்குமாறுவேனாகில் அந்த மொழியானது வெளிப்படும்ஒருவரும் என்னுடைய வாக்கையும் கவுல்களையும் சத்தியத்தையும் நம்பமாட்டார்கள் என்ராசாங்கத்துடையவேலையில்குற்றம் வந்துநேரிடும்அப்போது ஹாத்திமானவர் சொல்லுகின்றார் எவ்விதமெனில் நான்ஆண்டவனையே நம்பி யிருக்கின்றேன் (இன்ஷா அல்லா) குருக்காக என்னை தம்முடைய சமு



கத்துக்கு யாதொரு குற்றமில்லாமல்கொண்டுவந்து சேர்ப்பான் தாங்கள் மனதில் சந்தேகப்பட வேண்டியதில்லை யாதொருதடங்கலில்லாமல் உத்தரவுகொடுக்கவேண்டும் பாத்துஷாவேநான்சொல்வதைதாங்கள் உண்மையாகக்கேழ்க்கவேண்டும்அதுஎவ்விதமெனில்முனீர்ஷாமியென்பவன்(கார்ஜம்முடைய) பாத்துஷாவின் குமாரனாக யிருக்கும் அவன்பற்ஜக்கு வர்த்தகனுடையமகள்ஹசன்பானுவென்பவள்பேரில்ஆசைகொண்டுபோயிருக்கின்றான் அந்தபெண்ணானவள் (௭)சவால்கள் சொல்லுகின்றாள் அந்த சவால்களை முனீர்ஷாமி யென்பவனால் சொல்லக் கூடாமையால் மிகுந்த மனவருத்த மடைந்துகொண்டிருக்கின்றவனைப் பார்த்து நான் அவனுக்காக மனமிரங்கி அந்தசவால்களை நான் ஒப்புக்கொண்டு (௬) சவால்கள் அவளுக்குசொல்லிவிட்டேன் இன்னமொருசவால் (௭-வது) குறைவாகயிருக்கின்றது ஆண்டவன்பேரில் அதைச் சுட்டியிருக்கின்றேன் அவ்விடத்தில் போய்சேர்ந்து ஹமாம்பாத்கருடையஎல்லா விபரங்களையும் அறிந்து ஹசன்பானுவென்பவளிடத்தில் அறிவித்து முனீர்ஷாமிக்கு அவளைக்கலியாணம் முடித்துவிடுவேன்அவன்நெடுநாளாக ஆசைகொண்டவனுடைய எண்ணத்தை நிறைவேற்றுவேனென்ற சொல்லைபாத்துஷாவானவர் கேழ்விப்பட்டு ஓ, வாலிபனே இந்தவல்லமைதனம்உனக்கே தகுமென்றும்உன்னுடையதைரியத்தைஇன்னவிதமென்றுநான் சொல்லவென்னால் கூடாது.

ஆகையால் ஆண்டவனுடைய றகமத்தும் கிருபையும் உனக்கிருக்கவும் உன்னுடையதாய்தகப்பன்பேரில ஆண்டவன் கிருபையுண்டாகவும் ஆனால் நீ அன்னியர்க்காக வேண்டி இவ்விதமான வருத்தமும் துன்பங்களு மெடுத்துக்கொண்டும் தன்னுடைய மரணத்தையும் பெரிதென்றெண்ணாமல் இதுவரையிலும் வந்து சேர்ந்தாய் இதற்காகவேண்டி அவ்விடம் போனவர்கள் அனேகபாத்துஷாவின் குமாரர்களும் சவுதாகர்களுடைய குமாரர்களும்இவ்விதமென்று மதிக்கக்கூடாது அதில் ஒருவரும்திரும்பிவந்தவர்களுமில்லை அந்தபின்னைகளுக்கெல்லா மவன்தான் அனுப்பியதுபோல் தோனுகின்றதுநல்லதுநீர் எவ்விடத்திலுள்ளவர்உம்முடைய தகப்பனார்பேரென்னதம்முடைய பேரெதுவாகஇருக்குமென்றுபாத்துஷாகேழ்க்கஅம்மொழியைஹாத்திமானவர்கேட்டுசொல்லுகின்றார் ஓ,பாத்துஷாவே என்னுடையபட்டணம் (எமன்)ஆகயிருக்கும் என்தகப்பனார்பேர்(தை)ஆனமயபூஹாத்

திம்)ஆக்கிருக்குமென்றுசொல்ல அம்மொழியை ஹாரிஸ்பாத்துஷா
கேட்டவுடனே சிம்மாசனத்திலிருந்து கீழேயிறங்கிகட்டியணைத்து
தன்னோடு சிம்மாசனத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகின்றார்
ஓ, ஹாத்திமே உம்முடைய நெற்றியைப் பார்த்தவுடனே எனக்கு
குறிப்புதெரியவந்தது நீர் பாத்துஷாவாக விருக்கும் உம்முடை
ய நன்மையான பேரும் கீர்த்தியும் லோகத்திலெங்கும் பிரசங்க
மாக விருக்கின்றது ஆனால் நான்செய்த நன்மையால்தம்மை கா
ணும்படிக்கு ஆண்டவன் எனக்குகிருபைசெய்தான்இன்னம் தம்
முடையபெருங்கீர்த்தியும் லோகமுள்ளவரையிலும் சந்திரன் சூரிய
ன்பிரகாசம்போல் விளங்கி நீடித்திருக்கும் இன்னம் உன்னைப்போ
லொருவர்பிறந்தபோதிலும்தங்கள்பேர்விளங்கியதுபோல்விளங்காது
என்றுசொல்லிதன்னுடையமந்திரியை அழைத்துச்சொல்லுகின்றார்
ஹாத்திமானவர் ஹமாம்பாத்கருக்குப்போகும்வரைக்கும்வேண்டியசா
மான்களும் வழிக்காகவேண்டியசாமான்களும் தயார்செய்துகூடதுணை
யாக சிறிதுஜனங்களையும் அனுப்பும்படிக்கு உத்தரவு செய்ய அது
போல்தயார் செய்துகொடுத்து பாத்துஷா யெழுந்துகட்டித்தழுவி
யணைத்துக்கொண்டு மிகுந்ததுக்கமாக ஒரு பெருமூச்சுவிட்டு முக
த்தைப்பார்த்து சொல்லுகின்றார் ஓ,என்பிரியமாகிய ஹாத்திமேஎன்
மனது எப்போதும்விசனப்படும்படிக்கு நீ செய்துவிட்டாய்இப்போ
து உன்னை விட்டு நான்பிரிந்து எவ்விதமாகச்சகித்திருப்பேன்ஆனால்
ஆண்டவன்கிருபையால் நீர் அவ்விடம்போய் யாதொரு தீங்குகள்
நேரிடாமல்அவன் காப்பாற்றிக்கொள்வானென்று மிகுந்தவருத்தமா
கமனஸ்தாபப்பட்டுதன்னுடையவஜீருக்குஉத்தரவுசெய்தார் அவ்விட
த்திலுள்ளபடைக்குசர்தாரான (சாமான் அறக்)என்பவருக்குஒருகடி
தமெழுதிக்கொடுமென்றுசொல்லிதன்ஜனங்களுக்கு தாக்கீதுசெய்து
அனுப்பிவிட்டுஹாத்திமானவர்போகின்றதை ஒரேபார்வையாகப்பார்
த்துக்கொண்டுநிற்கின்றார் எதுவரையிலானால் ஹாத்திமுடைய சிரசு
மறைவானவுடனே பாத்துஷாவானவர் மிகுந்த விசனமும் துக்கமு
மாகத்தம்முடைய மஹாலுக்குப்போய்விட்டார்ஹாத்திமானவர்அந்த
ப்பட்டணத்தைவிட்டுநீங்கி அப்புறம் தன்னோடுவருகின்றவர்களையும்
சேர்த்துக்கொண்டு காடுமலைகள் வனாந்திரங்களையெல்லாம் தாண்டி
க்கொண்டு(பதினைந்துநாள்) வரையிலும்நடந்துபோகின்றவேளையில்
ஹமாம்பாத்கர் என்பது காணவந்தது அப்போது ஹாத்திமானவர்
அவர்களைமுன்னால் தெரியவருகின்றது மலையா அல்லது கோட்



டையா வென்றுகேட்க்க அப்போதவர்கள்சொல்லுகின்றார் முன்னால்
தோற்றியதுஹமாம்பாத்கருடையவாசற்கதவாகவிருக்கும் அதினருகி
ல் நாம்போகஏழுநாள்செல்லும்பார்வைக்குஅருகாமையாகத்தோணு
கின்றதென்றுஅவர்கள்சொல்லஅவ்விதமாகநடந்துஏழாநாளவ்விடம்
போய்சேர்ந்துபார்த்தால்அவ்விடத்தின்மலையினருகாமையில் அநேக
ம் படைகளிருக்கஇந்தபடைகள்யாருடையதாகயிருக்குமென்றுஹாத்
திம்கேழ்க்கஅப்போதவர்கள் சொல்லுகின்றார் இந்த ஹமாம்பாத்கர்
என்ற குளத்துக்குகாவலாக யிருக்கப்பட்டவர்களானபடைகளாகவி
ருக்குமென்றுசொல்ல அம்மொழியை ஹாத்திமானவர் கேட்டு வந்த
வர்களும்தானும் அந்தபடைக்குள்போய் சேர்ந்தார் அப்படையிலுள்
ளவர்கள்இவர்களுடைய இனத்தார்கள்பார்த்துகேழ்க்கின்றார்நீங்கள்
இவ்விடத்துக்குஎதுக்காகவந்தீர்களென்றுசொல்லநாங்களிந்தயமன்
வாலிபனோடு பாத்துஷாஅனுப்பியிருக்கின்றார் அவருக்குஒருகாகித
முமெழுதிக்கொடுத்திருக்கிறார்ஹாத்திமானவர்சாமான் அறகுடைய
அரையில்போய் அந்தகாகிதத்தைக்கொடுக்க வாங்கிப்பார்த்த வுட
னே பாத்துஷாவின் முத்திரையைக்கண்டு கண்ணிலும் தலையிலும்
ஒத்திக்கொண்டு அக்காகிதத்தைபிரித்துப்பார்க்கஅதிலிவ்விதமாக எ
ழுதியிருக்கின்றது எவ்விதமெனில் இந்தவாலிபன் எமன்தேசத்தான்
கூட நான்வாக்கு தத்துவந்த செய்திருந்தேன் அதற்காகஅங்கேஅனு
ப்பியிருக்கின்றேன்ஆகையால்அவனையெவ்விதத்திலும்தாங்கள் சமா
தானஞ்செய்துபின்னால் திருப்பிவிடவேண்டியது அப்போது நான்
மிகுந்த சந்தோஷமடைவேன் உனக்குவேண்டியவஸ்துகொடுப்பேன்
அதினால்நீபெருமையடைவாய்ஆனால்அவர் எவ்விதத்திலும் சமாதா
னமாகாவிட்டால்அந்தஹமாம்விடமாக அனுப்பிவிடுங்கள் உங்களால்
கூடியமட்டும்அவர் திரும்பும்படிக்கு எத்தனம்பண்ணிப்பாருங்களெ
ன்றுஇவ்விதமாக எழுதியதைப் பார்த்தவுடனே எழுந்துநின்று கொ
ண்டு ஹாத்திமானவர்க்குமிகுந்தவணக்கஞ்செய்துநாற்காலிகொண்டு
வந்துபோட்டு அதிலிருக்கும்படி செய்து விருந்தளித்து வேண்டி
ய பெருமைகள் செய்து பாத்துஷாவினுத்தரவுபோல்சிலநாள் அவர்க
ளால்கூடியமட்டும் சமாதானஞ்செய்தபோதிலும் கேழ்க்காமல் அவ
ருக்குஹாத்திம்சொல்லுகின்றார் நீங்கள் எனக்குசமாதானஞ்செய்ய
என்னுவதை விலக்கிவிடுங்கள் பாத்துஷாவின் மொழியை கூட
நான் கேழ்க்கவில்லையே உங்களுடையசொல்லை நான் எவ்விதமாகக்
கேழ்ப்பேன்ஆகையால் என்னை தொந்தரவுசெய்யாமல்சுருக்காஅவ

விடத்துக்கு அனுப்பவேண்டுமென்று சொல்வதை சாமர்ன் அறக் என்னும் சர்தார்கேட்டு நாமென்ன சொன்னபோதிலும் இவர்சுத்தமாகக்கேழ்க்கின்றதில்லையென்று யோசித்துஹாத்தி முடையசங்கதிகளைக்குறித்து பாத்துஷாவுக்கு அர்ஜியெழுதுகிறவிபரம் இந்த மனிதன் தான் பிடித்த பிடியை விடுகிறதில்லை யாரென்னசொன்னபோதிலும் அவர் கேழ்க்கிறதில்லை ஆகையால் தங்களுடையஉத்தரவுபோல் நடக்கின்றேனென்று எழுதிய அர்சியைபாத்துஷாவானவர் பார்த்து மிகுந்தமனவருத்தமடைந்து கண்ணீர்சொரிந்துஜவாபு எழுதினு ரெவ்விதமெனில் அவர் ராசியாகாவிட்டால் நீங்கள் தடங்கல் செய்யவேண்டாம் போகவிடுங்கள் அவருடைய ஆயிசெல்லா முடிவாகிவிட்டதென் றெழுதினார் அப்போது பாத்துஷாவுக்கு எழுதிய அர்சியின்வழியை அந்தசர்தார் பார்த்துக்கொண்டிருக்கையில் பாத்துஷாவுடைய ஜவாபும்வந்து சேர்ந்தது அதை அவிழ்த்துப் பார்க்கும்போதில் எழுதியிருக்கின்றது எவ்விதமெனில் நீங்கள் அவரைதடங்கல் செய்யவேண்டாம் நீங்கள் போகும்படிவழியை விட்டுவிடுங்கள் அப்படிக்கவர்போனால் போகட்டுமென்றெழுதியகடிதத்தைப்பார்த்து வேண்டிய புத்திகளையுஞ்சொல்லி சொல்லுகின்றார் என்னுடைய தோழனே உங்களுக்கு நன்மையாக எதுசொன்னபோதிலும் நீர் கேழ்க்கின்றதில்லை உங்களுக்கு லோகத்தினுசையிருக்குமாகில்நீர் திரும்பிப்போகலாம் அப்படிநம்முடையசொல்லைத்தட்டிபோவீராகில் அவ்விடத்திற்போய் மிகுந்த துன்பத்தையடைவதுமல்லாமல் உம்முடைய உயிருக்கு பின்னமாகிவிடுமென்றுஞ்சொல்ல அப்போது ஹாத்திம்சொல்லுகின்றார்நீங்கள்சொல்வதெல்லா நன்மைதான் ஆனாலெனக்கு சரியானதல்ல. ஆண்டவனுக்காக என்னை அவ்விடமனுப்புங்களென்றுசொல்ல அப்போதவர்கள் விசனப்பட்டு கூடாமையால் கடைசியில்சாமான் அறக்சர்தாரானவர் எழுந்துநின்றுக்கொண்டுஹாத்திமைகூட்டிக்கொண்டுகுளத்தின்வாசற்படியினருகில் கொண்டுபோய்நிறுத்தி வெகுதூரம்வரையில் சமாதானஞ்செய்தார் யாதொன்றும்கேழ்க்கவில்லை அப்போது அந்தசர்தாரானவர் மிகுந்த மனவருத்தமடைந்து கண்ணீர்சொரிந்து தன்னுடைய ஜாகைக்குப்போய்விட்டார்பின்புஹாத்திமானவர் அங்கேநின்றுக்கொண்டுபார்த்தார்தம்முடைய ஆயிசிலும் இவ்விதமான கதவுபார்த்ததில்லைதலையைஉயர்த்திமேலேபார்க்கும்போதில் அவ்விடத்திலொரு பலகையில் (சுரியானிபாஷை)யாலெழுதிகட்டியிருக்கின்றது எவ்விதமெ



னில்இது(திலிஸ்மாத்து)என்றமந்திரகுறினல்(கியோமறஸ்)பாத்துஷாவுடையநாளில்செய்திருக்கின்றது அதினுடைய அடையாளம்வெகுதூலமாகயிருக்கின்றது ஆனால்யாதாமொருவன் அந்த (திலிஸ்மாத்து) வித்தையைபார்க்கப் போவானுகில் உயிர்தப்பிவெளியில் வரமாட்டான் அப்படிபோனவன்பரிதாகத்தால்வெகுதுன்பப்பட்டுக்கொண்டிருப்பான் அவனுடையஉயிரிருக்குவேண்டுமாகிலவ்விடத்தில் ஒருகனிவர்க்கமுள்ள தோட்டமானது காணப்படும் அதுகளைத்தின்றுக்கொண்டுஅவனுயிருள்ளவரையிலுமிருப்பான்அவன்எப்போதும்வெளியேவரமாட்டா னிவ்விதமாக எழுதியிருக்கின்றதை ஹாத்திமானவர்படித்துப்பார்த்துமனதிலெண்ணுகின்றார் அதினுள்ளிருக்கிறவிபரங்களையெல்லாமெழுதி வாசற்படியில் கட்டி யிருப்பதால் அதை பார்த்தோம் உள்ளேபோக வேண்டிய நிமித்திய மொன்று மில்லை பின்னால் திரும்பலாமென்று யோசித்துக்கொண்டு நிற்கையில் இன்ன மொரு நினைவு வந்தது எவ்வித மெனில் அந்த ஹுஸன்பானுவென்பவள்நீ உள்ளேபோய் அதினுடைய ரகசியத்தைபார்த்தையாவென்றுகேட்டால் அதற்குநாமென்ன ஜவாபுசொல்வோம் நாம் பார்க்க வில்லையென்று சொன்னால் வெழ்க்க மடைவதாயிருக்குமென்று யோசித்தார் நாமிவ்வளவுகஷ்டப்பட்டுவந்தும்அதைப்பார்க்காமல் போவது நலமல்லவென்றெண்ணி ஆண்டவனுடையசெயலுள்ளதுபோலிருக்குமானால் எவ்விதமானபோதிலும்நாம்உள்ளேபோகவேண்டுமென்று மனதைதைரியப்படுத்திக்கொண்டுதன்னுடன்வந்தவர்களையெல்லாம்போகும்படிக்குஉத்தரவுகொடுத்துவிட்டுதான்ஒண்டியாகஉள்ளே(௰-௰௨)அடிவைத்துப்போய்திரும்பிப்பார்க்கையில் அந்தமனிதர்களையும் அந்த வாசற்படியையும்யாதொன்றுங்காணுமல் மறைவாகப்போய்தான் ஒண்டியாகஒருபெரியவனாந்திரமானகாட்டில்நிற்கக்கண்டதேயல்லாமல் வேறேயாதொரு வஸ்துவையும் காணும்படிதெரியவில்லை அப்போது மிகுந்த மனவருத்த மடைந்துசொல்லுகின்றார்.

இப்போது பத்து பனிரண்டு அடிவைத்து உள்ளேவந்ததில்இவ்விதமான கோலமாகி யிருப்பதால் இன்னங்கொஞ்சதூரம் நடப்போமாகில் என்னென்னகோலங்கள் விளையுமோவென்றும் அந்தகதவும் அவ்விடமும் மறைவாகிப்போனதையும் பார்த்து அதிக ஆச்சரியப்பட்டு இனி நாம் திரும்பிப்போகலாமென்றால் அந்தகதவினுடைய அ

டையாளமும் அதின்வழியும் தெரியவில்லைநாம் எந்தவழியைப்பிடித்துக் கொண்டு தேடிப்போகலாமென்னும் மனங்கலங்கிஅவ்விடம் விட்டுவெளியில் புறப்பட்டு அந்நாள்முழுதும் அதைத் தேடிக்கொண்டு அதுவே வேலையாகத்திரிந்தார் அந்த வாசற்படியானதுதெரியவில்லை அப்போதுமனதில்எண்ணுகின்றார் ஹமாம்பாத்கர் என்பது இதுவாகவிருக்கும் இந்த இடத்தில் கால்வைத்தவுடனேதலையெழுத்தின்படி அதிலகப்பட்டுக்கொண்டோம் ஆனாலிப்போது நம்முடையவுயிர்வீணாகப்போகும்போல்தோணுகின்றதென்று இடதுவலதுபக்கமாகவும்பார்த்துக்கொண்டு அவ்விடம் விட்டுநடக்கின்றார் அங்குமிங்கு நான்குதிக்குகளிலும் பார்த்துக்கொண்டுஓடிஓடித் திரிந்துக்கொண்டிருந்தார் அப்படிசிலநாளைக்குப் பின்பு ஒரு வழிகாணப்பட்டது சிலதூரம் போகையில் அவ்விடம்ஒரு மனிதனைப்பார்த்து மனதில் எண்ணுகின்றார் முன்னால் ஊர்களிருக்கும்போல் தோன்றப்படுகிறதென்று அவ்வழியைப் பார்த்துக்கொண்டு போகும்போதில்அந்தமனிதனும் எதிரில்புறப்பட்டுவருகின்றான் அவனருகாமையில் போனவுடனே அவன் கண்டு சலாம்செய்து கம்கட்டிலிருந்து ஒரு கண்ணாடியை யெடுத்து ஹாத்திமுடைய கையில் கொடுத்தான் அவர் அதை வாங்கிக்கொண்டு தன்னுடைய முகத்தைப் பார்த்து அவனைக்கேட்டார் ஹமாம் என்றகுளம் இன்னம் இட்டே யிருக்கின்றதா நீ அம்மட்டனா வென்றும் கேழ்க்க நான் அம்மட்டன் தானென்று சொன்னான் அப்போதுஹாத்திம் அவனைக்கேழ்க்கின்றார் நீ அந்தஹமாம் என்றகுளத்தைவிட்டுயெங்கேபோகின்றாயென்றுசொல்லஅப்போது சொன்னான்நான் தலைமுழுக்காட்டப் பட்டவன் யாரைப் பார்க்கின்றேனோ அவர்களை யழைத்துக் கொண்டுபோய் தலைமுழுக்காட்டி அவர்களிடத்தில் நான் இனாம்வாங்கிக் கொள்ளப்பட்டவன் தாங்கள் என்பேரில் கிருபைவைத்து வருவீராகில் தங்கள்மனம்போல் நான் வெகுவருத்த மெடுத்துக்கொண்டு தலைமுழுக்காட்டி தங்களிடமாக நானி இனாம்பெற்றுக் கொள்வே னென்றுசொல்ல அப்போது ஹாத்திமானவர் சொல்லுகின்றார் மெத்தநல்லதுவெளிப்பயணத்தினால்என்னுடையசிரேகத்தில் அழுக்குகள் நிரம்பியிருக்கின்றது அதை துப்பரவுசெய்துக்கொள்ள எனக்கிஷ்டமாகயிருக்கின்றது என்னைசெம்மையாக முழுக்காட்டவேண்டியது ஆனால்நீ ஒருவன் தானா அல்லது உன்னோடுவேறேயாராவதிருக்கின்றார்களா வென்றுகேழ்க்க அப்போதவன் சொல்லுகின்



றான் இன்னமிருக்கின்றார்கள் ஆனால் இன்றையதினம் தங்களுடைமையானவனுடைய முறையாக யிருக்குமென்றுஞ்சொல்ல ஹாத்திமென்பவர் முன்னாலும் அந்த முழுக்காட்டப்பட்டவன் பின்னாலும் சந்தோஷமாக நடந்துபோகின்றார்கள் இவ்விதமாக (உ-ங) கோஸ்தூரம்போகையில்ஒரு (குப்மஸ்) என்ற மண்டபம்வானத்தையளாவிக்கொண்டு நிற்கின்றதைப்பார்த்துஹாத்திமானவர் அதினருகில்போனார் அந்த அம்மட்டனானவன் ஹமாமுக்குள்ளேபோய்ஹாத்திமை கூப்பிட்டவுடனே அவர்உள்ளேபோனபின்பு அதின்கதவுகள்மூடிக்கொண்டது அப்போது ஹாத்திம் அச்சமடைந்து பின்னால் பார்த்தால் எல்லாவிடமும் பந்தாகிப்போய்விட்டது ஆனால் கொஞ்சம் வெளிச்சமாகக் காணுகின்றது புதினுடையஎண்ணத்தால் பின்னால் போகலாம்அப்படிபோனால்வெளிப்படுமென்றெண்ணங்கொண்டுநிற்கும்போதில் அந்த அம்மட்டனானவன் ஹாத்திமைஅழைத்துக்கொண்டு அந்தகுளத்தினிடமாகக் கொண்டுபோய் சொல்லுகிறான் இந்த குளத்திலிறங்கினால்உன்னுடையஉடம்பை துப்பரவுசெய்வேனென்று சொல்லஹாத்திமானவர் நானெவ்விதமாக இறங்குவேன் எனக்குவேறே உடுமானமில்லையேயென்றுசொல்லஅந்தஅம்மட்டன்நல்லதுஉங்களுடுப்பைகழற்றிவையுங்கள் உடுத்திக்கொள்ள நான்வேறே (லுங்) என்றதோவத்திதருகிறேனென்றுநல்ல விலைபெற்றதாகஒருதோவத்திகொடுக்கஹாத்திமானவர் அதைவாங்கி உடுத்திக்கொண்டு தன்னுடைய உடுப்பைக்கழட்டிஅப்புறம்வைத்துவிட்டுஅந்த(ஹவுஜ்)என்றகுளத்திலிறங்கினார்அப்போது அந்த(ஹமாமி)ஒருகல்லிழைத்தபாத்திரத்தில் வெந்நீரை நிரப்பி அவர் கையில் கொடுத்தான் அதைவாங்கி தலையிலூற்றிக்கொண்டார் (உ-வது)தடவைஅதுபோல்செய்தார் மூன்றுவதுதடவையும் அதுபோல் வெந்நீர் கொடுக்க அதையும் தலையில்வார்த்துக்கொண்டவுடனே அவ்விடத்தில்நின்றும்ஒருபெரியசத்தம்அகோரமானதாக உண்டாகிஉடனே இருளாகிவிட்டதுபின்னொருநிமிஷத்தில் அந்த இருள் நீங்கிப்போய் விடபார்த்தால் அந்த அம்மட்டனையும் அந்த ஹவுஜென்றகுளமும் யாதொன்றுங்காணவில்லை அதற்குபதில் ஒருபெரிய மண்டபம் எனக்குத்தெரியவந்தது அதின்வாசலில்தண்ணீர் நிறைந்து நிற்கின்றதுபோல் தோற்றியது அப்படியிருக்க ஒரு மூச்சுவிடுமுன்னே தண்ணீர் முழங்கால்வரையிலும் வந்துவிட்டது அப்போது ஹாத்திமானவர் காபருப்பட்டு நான்குதிக்கிலும்பார்த்துக்கொண்டுநிற்கின்றார் பின்பு

தண்ணீர் இடுப்புவரைக்கும் வந்து நிரம்பி விட்டது அப்போதவர்
மிகுந்த அச்சமடைந்து ஆண்டவனே வரவர தண்ணீர் அதிகமாகி
பெருகி வருகின்றது நாமிதைவிட்டு வெளிப்படும் படியான வழி
யாதொன்றுந் தெரியவில்லை பார்த்தா லிதிலே எழுதியிருக்கும்படி
க்கு நேரிட்டுதென்றுமெண்ணி வாசற்படிபக்கமாகப் போனால் வழி
தெரியாமல் நான்கு பக்கத்திலும் தலையைமோதிக்கொண்டு திரிந்
துதிரிந்தும் அதைக் காணவில்லை பின்னையும் தண்ணீர் அதிகமாகப்
பொங்கிவர அதிலொழுகிப்போய் தடுமாறிக்கொண்டு முழுகிமுழுகி
யெழுந்துக்கொண்டு நிற்கும்போதில் எண்ணுகின்றார் இந்தமுழுக்கு
முழுகும்படியான யிடத்துக்கு வந்தவர்கள் பின்னால் திரும்பாமல்
முழுகிமுழுகி அவஸ்தைப் பட்டு இவ்விதமாக இறந்துபோ யிருக்
கின்றார்கள் தவிர வேறில்லையென்றும் இப்போது நாமும் கைகால்க
ளை ஆட்டி கூடியமட்டுந்திரிந்து அசந்துபோய் இந்ததண்ணீரில்முழு
கி யிறந்துபோவோமே யல்லாமல் வேறில்லைநாம்வெளியேபோகலா
மென்றுபார்த்தாலும் பின்னையாதொருவழியும் தோணவில்லை யெ
ன்றுபலவிதமாக வெண்ணிமனஞ் சலித்துச்சொல்லு கின்றார்ஹாரி
ஸ் பாத்துஷாவென்பவர் முன்பு சொன்னமொழிகளை நான் கேழ்க்
காமல் போனபடியால் இப்போது(ஹறுமான மவுத்து)வந்துநேரிடும்
என்றுமனதில் நினைத்து விசனப்பட்டு எண்ணுதெல்லா மெண்ணி
மனங்கலங்கி நிற்கின்றபோது பின்னையுமொரு நினைவு நினைத்துமன
தை தைரியப் படுத்துகின்றார் அது எவ்விதமெனில் ஓ, ஹாத்திமே
நீ ஏன் அச்சப்படுகின்றாய் இப்படி படுவது உன்னுடைய யோக்கி
யத்துக்கு தகாது ஆனால் உன்னையுண்டாக்கிய ஆண்டவன் ஒருவனே
உண்மையானவன் இருக்கின்றான் அவனிருக்க உனக்கென்ன அச்ச
மும் பயமுமிருக்கின்றது உன் விதியிலிருப்பது போலிப்போது
நடப்பதல்லாமல் வேறொன்றுமில்லை நீ உன்னுடைய சொந்தவேலை
க்காகவேண்டியும் அல்லது பொருள்களின் இச்சையாலாவதுநீஇப்
பேர்ப்பட்ட உழப்பும் வருத்தமுமெடுக்கின்றதில்லை நீ ஒருவனிறந்
து போகின்றதைபிழைக்கும்படிக்கு நன்மைக்காகவேண்டி இவ்வ
ளவு துன்பமெடுத்துக் கொள்ளுகின்றாய் ஆகையால் நீ ஆண்டவ
ன்பேரால் உன்னுயிரைக் கொடுத்ததினால் உனக்கொரு குறைவுமி
ல்லையென்று இவ்விதமாகத் தன்மனதை தைரியப் படுத்திக்கொண்
டிருக்கின்றார்முன்போல்தண்ணீர்பின்னும்வந்துநிரம்பிவிட்டதுஅப்
போது ஹாத்திமுடைய சிரசானது அந்த கும்பஸ்மேல் போய்பட்



டது அப்போதுஇவர்மெத்தவும்அவஸ்தையாய் அதிகஅடிபட்டுபலமி
ல்லாமல்தடுமாறிக்கொண்டுகால்கைகள்சந்துபோய்தண்ணீரில் முழு
கிஇறந்துபோகும்படியானவேளையாயிருந்தது அப்போதந்தவேளையில்
அவ்விடத்தில் ஒரு இரும்புசங்கிலிகட்டித்தொங்கியிருந்தது ஹாத்தி
மானவர் அதைக் கண்டவுடனே தனக்கு உயிர்வந்தாப்போலெண்
ணி அந்தச் சங்கிலியைஇருகரத்தாலும் கெட்டியாகப்பிடித்துக்கொண்
டுதல்லதுஒருநாழிகைபாவது இளைப்பாறலா மென்றெண்ணி நிற்கை
யில் அந்த கும்பசிலிருந்துமுன்போல் ஒருசத்தம்வந்தது உடனேபார்
த்தால்அதைவிட்டு நீங்கிஒருவனாந்திரமானகாட்டில்தானிருக்கும்படி
க்கு காணுகின்றார் அப்போது நான்குதிசையிலும் பார்த்துக்கொண்
டு நிற்கின்றார்கள் எங்கேபார்த்தாலும் ஒரேமயிதானமானவெளியாக
யிருக்கின்றதேதவிரவேறொன்றுங் காணவில்லை அப்போது மனதில்
கொஞ்சம் சந்தோஷமடைந்துஇந்தபெருங்கேடானசலத்திலின்றும்
நான் வெளிப்பட்டு நன்மையடைந்தது போதுமென்றும் அப்புறம்
மூன்றுநாள் வரையிலும் ஓடி திரிந்துக்கொண் டிருக்கும் போதில்
ஒரு பெரியமஹாலானது மிகுந்தஒளிவுபிரகாசமாகக்காணப்பட்டது
அப்போது எண்ணினார் இவ்விடத்தில் மனிதாளிருப்பிடம்போல்
தோணவருகின்றது அவ்விடத்தை பார்த்துக்கொண்டு நடந்துஅரு
கில் போய்ச்சேர்ந்துபார்த்தால்அவ்விடத்தில்மிகுந்தபெருமையும்சந்
தோஷமுமடையும்படியானஒரு தோட்டமிருக்கின்றதைக்கண்டுமன
திலெண்ணுகின்றார் இப்பேர்ப்பட்ட பெருமையுள்ள தோட்டமும்
பங்களாவும் கட்டி யிருப்பதால் அதினருகில் எவ்விதமும் ஒரு
ஊரிருக்க வேண்டுமென்றெண்ணி மனதை தேறுதல் செய்து
கொண்டு அந்த தோட்டத்தின் வாசற்படியினருகில் போகஅதின்
கதவு திறந்திருந்தது அதைப்பார்க்கலாமென்று உள்ளே நுழைந்து
கொஞ்சதூரம் நடந்துபோய் பின்னால் திரும்பிப்பார்க்க தான் வந்த
வழியும் அந்த கதவினடையாள மொன்றுங் காணப்படவில்லை அப்
போது மிகுந்த மனவருத்தமடைந்து இதென்ன பலாவான மேடையா
கயிருக்கும் நாமெத்தனையோ துன்பங்களடைந்து வந்திருந்து இன்ன
ம் நம்மை பிடித்தபீடை விடவில்லையென்றும் மனங் கலங்கிப்பட்டுக்
கொண்டுமுன்பாகப்போகின்றார் அவ்விடத்தில்விதவிதமான கனி
வர்க்கங்களுடைய விருட்சங்கள்குலைகள்தொங்கும்படியாக இருக்கக்
கண்டும் பசிதாகத்தால் மிகுந்த வேதனைப்பட்டிருந்தபடியால் அக்க
னிகளைப் பறித்துத்தின்றுகொண் டிருக்கின்றார் எவ்வளவு கனிக

ளைப்பறித்து தின்றபோதிலும் வயிறுநிறையவில்லை நான் தின்றகனி
கள் கணக்கைப் பார்த்தால் (நாலுமணங்கிருக்கலாம்) அப்படி தின்
றுமெனக்கு தெகட்டவில்லைநான் அந்தத்தோட்டத்தைச்சுற்றித் திரிந்
துக்கொண்டுஒருபாறுதரிமஹாலினருகில் போய்ச்சேர்ந்தார்அதைச்
சுற்றிலும் அநேகமனிதர்கள்கல்லாகப்போய்நிற்கின்றார்கள்உடம்பில்
யாதொன்றுமில்லாமல்இடுப்பில்ஒவ்வொருதோவத்திகள்கட்டியிருக்
கின்றார்கள் அதுவும்கல்லாகயிருக்கின்றது அதைப்பார்த்துமிகுந்த ஆ
ச்சரியப்பட்டு இதென்னகாரணமானரகசியமாகயிருக்கும் இதினுடை
யசங்கதிஎவ்விதமாகஅறியலாமென்றுஇவ்விதமான எண்ணங்கொண்
டிருக்கிறபோதில்ஒரு கிளிப்பிள்ளையானது சத்தம்போட்டுசொல்லு
கிறது ஓ, வாலிபனே நீயேன் நிற்கின்றாய் இவ்விடத்துக்கு வந்த
வர்கள் தங்களுடைய உயிரை வீணாக இழந்து போயிருக்கின்றார்
கள் இவ்விதமான சத்தம்வந்ததைக்கேட்டு தலையை உயர்த்திமேலே
பார்க்கும்போதில் ஒருகிளியானது ஒரு கூண்டுக்குள்ளாக யிருக்கக்
கண்டு இன்னம்அந்தமஹாலின்மேல்ஒரு பக்கம் எழுதியிருந்தது அதி
ன்விபரமெவ்விதமெனில் ஓ, ஆண்டவன் படைப்பிலுள்ள மனித
னே இந்த ஹமாம்பாத்கர் இடத்துக்கு வந்து தன்னுடையஉயிரை
மீண்டுபோக மாட்டான் எவ்வித மெனில் இந்த தில்சிமாத்துஎன்ற
மாயவித்தையானது (கியோமறஸ்) பாத்துஷாவின்வேலையாகயிருக்கி
றது அவர் ஒருநாள் வேட்டைக்காக இவ்விடத்துக்கு வந்திருந்தார்
அப்போது இவ்விடத்திலொரு விலைமதிக்காத இரத்தினங்கிடப்பதை
ப்பார்த்து அதையெடுத்துநிறுத்துப்பார்த்தால்(முன்னூறுமிஸ்கால்)எ
டைசரியாகயிருந்தது அதைப்பார்த்துமிகுந்தஆச்சரியப்பட்டுதன்னோ
டிருந்த(ஹக்கீமென்ற) ஆயுள்வேதபண்டிதர்களைக்கேட்டார் இதைப்
போலொத்தமுத்து அகப்படுமோயில்லையாவென்றுகேழ்க்க அப்போத
வர்கள்சொல்லுகிறார்ஆதம் அலைகிஸ்ஸலாமுடையநாள்தொடுத்து இ
துவரையிலு, மொருவர் இதைப்போலொத்த இரத்தினத்தை பார்த்த
துமில்லை கேட்டதுமில்லையென்றுசொல்லஅப்போதுபாத்துஷாசொ
ன்னார் அப்படியிருப்பதால்இந்தமுத்தைநான்எவ்விதமானஇடத்தில்
வைப்பேனானால் யாதொருவருடையகையில்அகப்படாமலும்இம்மொ
ழியை உறுதிப்படுத்திக்கொண்டுஇந்தஹமாம்பாத்கர்தில்சிமாத்தென்
னுமந்திரவித்தையால்செய்துவைத்து அந்தகிளியைமந்திரத்தாலுண்
டாக்கிஅதின்வயிற்றில் அந்த விலைமதிக்காதின்ற இரத்தினத்தைவை
த்து ஒருபெரியகூண்டில்போட்டுஇவ்விடத்தில்கட்டிதொங்கவைத்து



இரத்தினத்திகளா லிழைத்த நாற்காலி வைத்திருக்கிறது அதின்மேல்
அம்புவில்லும்வைத்திருக்கின்றது அதுக்காகவெளியாதாமொருவர்
இந்த தில்சிமாத்தென்ற மந்திரத்தின் வித்தையிலகப்பட்டு வெளி
யேபோகஎண்ணங்கொண்டுவாராகில் இந்த அம்பையும்வில்லையு மெ
டுத்துக்கொண்டு இக்கூட்டிலிருக்கிற கிளியின்தலையைப்பார்த்துஒரு
அம்புஎய்துவிட்டால் உடனேஇந்தகூதானயிடத்திலின்று வெளிப்
படுவார் அந்த இரத்தினமும் அகப்படும் அப்படிக்கந்த கிளியின்த
லையிலம்புபடாமற்போனால் அவன்கல்லுருவாகிப்போவான் இவ்வித
மாக எழுதியிருக்கிறதை ஹாத்திமானவர்வாசித்து அந்தகல்லுருவங்
கள் அசையாமல் நிற்கிறதைப்பார்த்து மனதில்சந்தேகப்பட்டு தா
ன்சொல்லுகிறார் ஓ, ஹாத்திமே! இந்ததில்சிமாத்தென்னும்வித்தை
யில் நின்றுவெளிப்படாமற்போனால் இவர்களைப்போல்நீயும் நிற்கு
ம்படிக்குநேரிடும் ஆகையால் இப்போதுசீக்கிரத்தில்தன்னை தப்பித்
துக்கொள்ளும்படியாகயோசனைபண்ணுமில்லாவிட்டால்உன்னுடை
ய உயிரிழந்து அதிக வருத்தப்பட்டுக் கொண்டிருப்பாய் ஆகையா
லெவ்விதத்திலும் நீ வெளிப்படாதே போவாயாகில் முனீர்ஷாமி
யென்பவர் உன்னைவிட்டுப்பிரிந்துவேறுபட்டு உன்னுடையவழியைப்
பார்த்துக்கொண்டு விசனமடைந் திருப்பாரென்றும்இப்பேர்ப்பட்ட
துன்பத்திலிருந்து நாம் வருத்தமடைவதைப்பார்க்கிலும்இவர்களோ
டெல்லாஞ்சேர்ந்துபோனால்நலமாகயிருக்குமென்றும் நம்முடையவ
ருத்தம்தங்கடமெல்லாந்தீங்கிப்போய்விடுமென்று மனவருத்தமடைந்
துக்கொண்டு நல்லதுஆண்டவன்செயல்போல் நடக்குமென்று மன
துநிச்சயப்படுத்திக்கொண்டு அந்த இரத்தினமிழைத்த நாற்காலியி
டமாகப்போய்ஆண்டவனை மிகுதமாகப்போற்றிவாழ்த்தி (பிஸ்மில்
லாவென்று) அந்தஅம்புவில்லைகையிலெடுத்துகுறிப்பாக அந்தக்கிளி
யைப்பார்த்து ஒரு அம்புஎய்தார்,

அப்போதுஅந்தஅம்புகிளியின்மேல்படாமல் அக்கூண்டின்து
வாரத்தில்பட உடனேஹாத்திமானவர்முழங்கால்வரையிலும்கல்லா
கிவிட்டார் அந்தக்கிளியானது எங்கேயிருந்துதோ அங்கேவந்துஉ
ட்கார்ந்துசொல்லுகின்றது ஓ, வாலிபனே நீஇவ்விடத்தி லிருந்துபோ
இந்தயிடம் உனக்குலாயக்கல்லவென்று சொல்ல அவர் அதைவிட்
டெழுந்து அம்புவில்லெடுத்துக்கொண்டு பாய்ச்சல்பாய்ந்து கொண்
டுநூறடி தூரத்தில்போனார் அவ்விடம்நிற்கக்கூடாமையால் கால்கள்

அவ்வளவுபாரியாகிவிட்டதுநடக்கக்கூடவில்லை இவ்விதமாகஇருப்ப
தை நினைத்து மனஸ்த்தாபப்பட்டு சொல்லுகின்றார் இதென்னகெடு
திலாக இருக்கின்றது நாம்எவ்வளவோ பாடுகள்பட்டு இதுவரையில்
வந்து சேர்ந்தோம்ஆனால் இப்பொழுதுஎலும்புகள் நரம்புகளெல்லா
மற்று நாம் இவ்விதமாக இறக்கவேண்டியதாய் நேரிட்டிருப்பதால்
நானும் இந்த வுருவங்கள்போல் ஆகவேண்டுமேதவிர வேறில்லையெ
ன்றெண்ணி இன்னமொரு அம்புவிடலாமென்று ஒரு அம்பை எய்
தார் அதுவும் தப்பிப்போய்விட உடனேதொப்புள் வரையிலும்
கல்லாகிவிட்டது அப்போதந்தக் கிளியானது சொல்லுகின்றது ஓ,
வாலிபனே அழகனே இவ்விடம்விட்டுபோ இந்தயிடமானது உனக்
கு தகுந்த தல்லவென்று சொன்னதைக்கேட்டு ஹாத்திமானவர்த
ன்னால் கூடிய பலத்தையெல்லாம்போட்டு குதிகுதித்துக் கொண்டு
பின்னால் இருநூறடியுள்ள அந்த கல்லுருக்கள் நிற்கின்ற இடமா
கப்போய் விழுந்து கண்ணீர் சிந்தும்படியாக அதிக விசனத்தை
யடைந்து எண்ணுகின்றார் என்னைப்போலொத்த மனிதன் ஒரு
வரு மில்லை நீ. செய்கின்ற வேலை யாதொன்றுக்கு மாகாதென்று
மன வேதனையால் பெருமூச்சிட்டு சொல்லுகின்றார் ஓ, ஹாத்
திமே நீ இறந்துபோகின்றதை உன்கண்ணால் பார்க்கக்கூடாதுஆகை
யால் நலமாகவிருக்கும் உன்னுடைய கண்ணைகட்டிக்கட்டிக் கொ
ண்டுஇன்னமொருஅம்புஎன்னிடமாக இருப்பதாலதையும் நீஎன்னை
த்திருக்கின்றாய்இப்பேர்ப்பட்ட உயிர்மீண்டிருப்பதைப்பார்க்கினும்
இறந்துபோவதேநலமென் றெண்ணி அந்த வில்லைபூட்டி அம்பை
தொடுத்துகண்ணில்பட்டிகட்டிக்கொண்டு அந்தக் கிளியைகுறிப்பார்
கண்ணில்படும்படியாக தன்னுடைய புத்தியை திறப்படுத்திக்கொண்
டுகுறிபார்த்து(அல்லாஹு அக்பர்)என்று ஆண்டவனுடைய பேரைநி
னைத்துக்கொண்டு அம்பைவிட்டார் அப்போதந்த அம்பானது அந்தகி
ளியின் கண்ணில்தைத்து உயிர்போய் அந்தகூண்டிலிருந்துவெளிப்ப
ட்டு விழுந்தது உடனே இருள்வந்து மூடிக்கொண்டு நான்கு திசைக
ளும் திரும்பும்படியாக காற்றுமின்னல்இடி முழக்கங்களுமாக எங்கு
மோரே இருளாகச்சூழ்ந்துக்கொண்டது கண்கொண்டு பார்க்கக் கூ
டாமல்போய்விட்டது இரைச்சலும் சத்தங்களும்இவ்விதமென்றுசொ
ல்லக் கூடாது அப்போது ஹாத்திமானவர் தன்னைமறந்துசற்றுமாறி
க் கிடக்கிடந்து எண்ணுகின்றார் நாமும் கல்லுருவமாகிப்போனோ
மென்றெண்ணி கிடக்கின்றபோதில் சிலநேரம்பொறுத்துக் கண்ணை



த்திறந்துபார்க்கும்போதில்இருள்கள்கருமேகங்களு மிரச்சலான சத்
தங்களும் நீங்கி சூரியன்பிரகாசித்து எங்குமோரே வெளிச்சமாகவும்
தன்னைப்பார்த்தால் அந்த கல்லுருவுகள்கூடகிடக்கக்கண்டார் பின்
புங்கொஞ்சநேரம்பொறுத்து தனக்கு அறிவாகாரம் செம்மையாகிய
பின் பார்த்தால் அந்த ஹம்மாம்என்றகுளமும் அந்ததோட்டமும்நாற்
காலியும் அம்புவில்லுமந்த கூண்டுங்கிளியும் யாதொன்றுங் காணப்ப
டவில்லை நிலத்தில் அல்மாஸ்என்ற இரத்தினமானது ஓரே பிரகாச
மும் ஒளிவாகவும்கிடக்கின்றதுஹாத்திமானவர்நிறம்வேறுகிளப்போ
தும்போல் எழுந்துநின்றுஓடிப்போய் அந்த இரத்தினத்தைஎடுத்துக்
கொண்டு ஆண்டவனை வணங்கி தோத்திரம் சிஜ்தா செய்து பார்க்
கும்போதில் அவ்விடத்தில் கல்லுருவாகி நின்றவுருவமெல்லா மனித
வுருவமாகி நிற்கின்றார்கள் அப்பேருகவர்கள் ஹாத்திமைப் பார்த்து
சொல்லுகின்றார்கள் ஓ, வாலிபனே நீ இவ்விடத்தில் எவ்விதம்உயிர்
தப்பிசலாமத்தாகஇருந்தாய் இவ்விடமிருந்ததோட்டமும் ஹம்மாம்என்
றகுளமும் மற்றவஸ்துகளெல்லாம் எங்கேபோய்விட்டது யாதொன்
றையுங்காணோமேயென்றும்கேழ்க்க ஹாத்திமானவர்நடந்தசரித்திரத்
தை அவர்களுக்குஆதிமுதலந்தவரையில் தெரியப்படுத்தினார் அதைக்
கேட்டவுடனே எல்லபேருமாக ஓடிவந்து ஹாத்திமுடைய காலில்வி
ழுந்துசொல்லுகின்றார்கள் இன்றுதொடுத்து தங்களுடைய அடிமை
யாகிப்போனோ மென்னுடைய துன்பத்தையும் கால்களின்விலங்கு
களையும் கைதியிலிருந்து நீர் இன்றையத்தினம் நீக்கிவிட்டீர்களென்
றும் அனேகமாகப்போற்றிவாழ்த்திக்கொண்டுநிற்கின்றார்கள்ஹாத்தி
மானவர் பார்த்து அவர்களுக்கு வேண்டியதைரியப் படுத்தி யவர்களு
க்குசமாதானமுஞ் சொல்லி எல்லபேரையும் தன்னோடுகூட்டிக்கொ
ண்டுஷாஹ்மறைத்தான்தேசத்துக்குப் போகவேண்டி பயணப்பட்டார்
கள் ஆனாலவர்கள் எந்தவழி போறோமென்றும் யாதொன்றுந்
தெரியவில்லை சுத்தான் தேசம் எந்தமூலையி லிருக்கின்றதென்று
தெரியாமல் ஒருவழியைத் தொடர்ந்து நடந்துபோகின்றார் அப்ப
டி கொஞ்சதூரம் நடந்து போகிறார்கள் ஆண்டவனவர்களை
நேர்வழியாகக் கொண்டுபோய் வந்தவாசற்படி காணப்பட்டது
அதைப்பார்த்துக் கொண்டுபோகையில்சாமான் அறக்கனன்பவருடை
ய படைகள் இறங்கியிருக்குமிடங்காணப்பட்டது அந்தப்படைகளை
பார்த்துக்கொண்டு அவருடைய கூடாரத்தில்போய் சேர்ந்தார்
அவனைக்கண்டவுடனே சாமான் அறக்கனமுந்துநின்றுக்கொண்டிருந்

ந்த வணக்கத்துடனே தாஜீம்செய்து நாற்காலியின்பேரில் உட்கார வைத்துவேண்டியமரியாதிகள் செய்துவிருந்தளித்துதாம்பூலமுதலா இய்சத்தினம் பன்னீர்களும்பூசியபின்புஹாத்திமென்பவர் தான்போய் வந்தஇடத்தின் சங்கதிகளையெல்லாம் தெரியப்படுத்தினார் பின்புஅவ் வீட்டில் மூன்றுநாள்குநாளிருந்தார் சாமான் அறக் என்பவர் சிறிது ஜெனங்களை கூட்டிகூட்டிஷஹெரகத்தானுக்குஅனுப்பி விட்டு சில நாளைக்குப் பின்புஅந்த தேசத்துக்குப்போய்சேர்ந்தார் ஹாரிஸ்பாத்துஷாவைக்கண்டார் அவர்ஹாத்திமைக்கண்டவுடன் அதிக அன்போடெழுந்துகட்டித்தழுவிகையைப்பிடித்து தன்னுடைய சிம்மாசனத்துக்கழைத்துக்கொண்டுபோய் வந்தசங்கதிகளைக் கேழ்க்க ஹாத்திமானவர் நடந்தசேதிகளெல்லாம் விபரம் விபரமாக வரன்முறையாகச்சொல்லி தான் கொண்டுவந்த இரத்தினத்தை எடுத்துமுன்னால் வைத்து இது தங்களுக்கு நஜராக இருக்குமென்று சொல்லியின்னும் சொல்லுகின்றார் அந்த ஹசன்பானு வென்பவளுக்கு இந்த இரத்தினத்தை ஒரு தடவை காண்பித்தால் அவளுக்கு நிச்சயப்படும்பின்பு தங்களுடைய சமூகத்துக்கு அனுப்பி வைப்பே னென்று சொல்லபாத்துஷாவானவர்மிகுந்தபூரிப்புடனேசந்தோஷமாகிச் சொல்லுகின்றார்(பாரகல்லா) ஆண்டவன்கிருபையால் தங்கள்மனம் போல் செய்யவாமென்றும் சொல்ல பாத்துஷாவைப்பார்த்து ஹாத்திமானவர் சொல்லுகின்றார் என்கூடி வந்த மனிதர்கள் அவ்விடத்தில் கல்லுருவாகியிருந்தார்கள் அவர்கள் பெரியசீமான்கள் வர்த்தகர்கள் பாத்துஷாக்களுடையபிள்ளைகளுமாகயிருக்கிறார்கள் இப்போது அவர்கள்தங்கள்சீமைகளுக்குப் போக வழிச்செலவுகளுக்கில்லாமல் சிறுமைப்படுகிறார்கள் அதற்காக நான் கேட்டுக்கொள்ளுகிறே னிவர்களுக்கு ஆளுக்கொவ்வொரு குதிரையும் வழிச்செலவுகளுக்காக கொடுக்கும் படிக்குத்தரவாக வேண்டுமெவர்கள் சந்தோஷமாக தங்களூருக்குப் போய்ச்சேர்ந்து தங்களை துவாசெய்வார்க ளென்றுசொல்ல அதுபோ லவர்களுக்கு கொடுத்து தங்கள் தங்கள் தேசங்களுக்குப் போகும்படிக்கனுப்பிவிட்டார்பின்புதானும் உத்தரவுகேழ்க்க பாத்துஷாவானவர் வேண்டியசாமான்திறுகளும் வெளிப்பயணத்துக்காகவேண்டி பெருமையாக சிலஜனங்களைச்சேர்த்து அனுப்பிவிட்டார்.

இவ்விதமாக இவர் சிவனான் வெகுபெருமையுடனே ஷஹாதேரஹா பட்டணம்போய்ச்சேர்ந்தார் உடனே அவ்விடத்திது



ள்ளவர்களறிந்துஹசன்பானுவுக்குதெரிவித்தார்கள் அந்த மனிதன் ஹமாம்பாத்கருடைய செய்தியையறியப்போயிருந்தாரே அவர்மிகுந்த பெருமையாகவும் சந்தோஷமாகவும் வந்திருக்கின்றாரென்றுசொல்ல ஹசன்பானு அம்மொழியைக் கேட்டு தன்னுடைய மனிதரிடமாகச்சொல்லி யனுப்பினாள் நீங்கள்போய் என்னுடைய சலாமவருக்கு சொல்லி அவருக்குதேகாவது வருத்தமில்லாவிட்டால் நம்முடைய மஹாலுக்கு நேராக வரலாமென்று இவ்விதமாகச் சொன்னதுபோல் அவர்களோடி ஹாத்திமுக்கு சலாம்சொல்லிசங்கதிதெரிவித்தார்கள் அம்மொழியைக்கேட்டுஹசன்பானுவுடைய மஹாலினருகில்போனவுடனே அவள்தன் வழக்கம்போல் உள்ளழைத்து அவரை இரத்தினமிழைத்த நாற்காலியி லிருக்கும்படிக்குச்செய்து போய் வந்தசங்கதியைக்கேட்டாள் அப்போதவர் ஆதிமுதலந்தவரையில் நடந்தசங்கதிகளை விபரவிபரமாகச்சொன்னார் அதைக் கேட்டவுடனே மனங்கலங்கி குன்றுபோனாள் பின்புஅந்த அம்மாதுளை நிறத்தினத்தை எடுத்துக்காண்பித்தார் அதை அவள் பார்த்துதலையைக் கீழபோட்டுக்கொண்டு வெழுக்கமடைந்துபோய் உடம்பெல்லாம் வேர்வையாகி உடுத்தியிருந்தபோர்வைகளெல்லாம் நனைந்துவிட்டது மனந்சோர்ந்து யாதொன்றும் பேசாமலிருக்கின்றாள் அப்போது ஹாத்திமானவர் ஓ, ஹசன்பானுவே உன்னுடைய சவால்களை ஆண்டவனருளுடையால் நான் நிறைவேற்றிவிட்டேன் ஆகையால் உன்னுடைய வாக்கையும் நிறைவேற்றவேண்டிய தென்றுசொல்ல அப்போது ஹசன்பானு முகத்தைப்பார்த்துபேசாமல்தலைகுனிந்துகொண்டுசொல்லுகின்றாள் வல்லமைசாலியாகிய ஹாத்திமானவர் தன்னுடைய [illegible]குதவறாமல் லோகத்திலபடாத பாடுகளையெல்லாம் பட்டுத்தீர்த்தீர் அதுபோல்நான் என்வாக்கும் ஒருபோதும் தவறமாட்டேன் இப்போது உம்முடைய அடிமையாகிவிட்டேன் நீர் மனதுபோல்செய்யலாம்நீர் யாருக்குவேண்டுமோ என்னை அவர்களுக்கு கொடுக்கலாம் நீரென்னை தம்மிடத்தில்வைத்துக்கொண்டாலும் நீர் மனம்போல் செய்யலாமென்று சொல்ல அம்மொழியை ஹாத்திமானவர்கேட்டு சொல்லுகின்றார் எவ்விதமெனில் நீ சொன்னது சரிதான் பிசகில்லை ஆனால் நிச்சயங்கொண்டு நான் இவ்வளவு வருத்தமும் அன்பமுமெனக்காகவேண்டி நானெடுத்துக்கொள்ள வில்லை ஆண்டவனுக்காகமுனீர்ஷாமி பாத்துஷாவின் குமாரனுக்காகவேண்டி எடுத்தேனேயல்லாமல்வேறில்லை ஆகையால் நீ அவரையுண்மை [illegible] ராஜியா

கவேண்டும் அவர் வெகுநாளாக உன்னுடைய ஆசையினால் அவமூது தன்னுடைய உயிரைப்போக்கடித்துக் கொள்ளும்படிக்கு உன்னைவிட்டு நீங்கி அந்த வேதனையால் தன்னுயிரைப் போக்கடித்துக்கொள்வதாக யிருக்கின்றார் ஆகையா லந்தவருத்தமும் தங்கடமும் நீங்கும்படியாக உன்னாசையென்ற மோகமான அமுர்தபானக்கமாகிய ஷர்ப்பத்தென்பதை நீகுடிப்பாட்டினால்சுகமாகயிருக்கும்அதை குறைவுசொல்லுகிறது ஆண்டவனுக்குஏற்றதல்ல அம்மொழியை ஹசன்பானோகேட்டு சொல்லுகிறாள் எவ்விதமெனில் இப்போதுநீர் என்தகப்பனுக்குபதிலாக தாங்களிருப்பதால் என்பங்கில் தங்கள்மனதுக்கு சரிவருகிறதைச்செய்யுங்கள் ஆனாலவர் எனக்கு லாயக்கானபுருஷனிருந்தால் அதைக்குறித்தெனக்கு யாதொரு குறைவுமில்லை இம்மொழியைக் கேட்டவுடனே ஹாத்திமானவர் முனீர்ஷாமிபாத்துஷாவின் குமாரனுக்குமேன்மையான உடுப்புகள்கொடுத்துசொல்லியனுப்பினார்நீர்இந்தஉடுப்பையுடுத்திக்கொண்டுவெகுசிங்காரத்துடனே சிங்காரித்துக்கொண்டு மேன்மையாகவரவேண்டுமென்று சொல்லியனுப்புவதுபோல் அந்தபெருமைபெற்றஉடுப்புகளுடுத்திசிங்காரித்துக்கொண்டு வெகு பெருமையாக ஹாத்திமிடமாகவர அவரை இரத்தின மிழைத்த நாற்காலியில் தன்னருகிலிருக்கும்படியாக வைத்துக்கொண்டார் அப்போது ஹசன்பானோ பர்தாவி னுள்ளேயிருந்துமெள்ள எட்டிப்பார்த்தாள் உடனேசஞ்சிரமுயிராக முனீர்ஷாமியின்பேரில் ஆசையாகி விட்டு தலையைக்கீழே குனிந்துக்கொண்டு வெட்கித்துட எழுந்துவேறொரு அரைக்குள் போய் விட்டாள் பின்பு ஹாத்திமானவர் முனீர்ஷாமியை அழைத்துக்கொண்டு கார்வான்ஸராவுக்கு வந்துவிட்டார் அன்றிரவு அவ்விடத்திலிருந்து பொழுதுவிடிந்தபின்பு ஹசன்பானோவென்பவள் ஒருபெரியமஹாலை தயார்செய்துசிங்காரித்துவைக்கஉத்தரவுசெய்துஹாத்திமுக்குசொல்லியனுப்பினாள் அவ்விடத்திலிருக்கிறதுதங்களுக்குதகாது உங்களுக்காக ஒரு மஹால் தயார்செய்திருப்பதால்அதில் வரவேண்டுமென்று சொல்லியனுப்ப ஹாத்திமானவர் முனீர்ஷாமியையழைத்துக்கொண்டு அம்மஹாலில்வந்திருந்தார்கள் கலியாணத்துடைய வேலைதுவக்கஞ்செய்துவுப்த்துகாராக்கள்வைத்து நல்லநாள் பார்த்துபந்தக்காலிட்டார்கள்பின்புநாலாபக்கங்கள் (ரொக்கா)என்றகலியாணச்சீட்டுகளனுப்பி பெரியமனிதர்களையெல்லாம் வரும்படிக்கு சேகரஞ்செய்து பெருங்கூட்டமாகவுஞ்சேர்ந்துகலியாணத்தில்நடக்கிர நலங்கள்செய்



துபாத்துஷாக்களுடையகோலமாகவும் வேண்டியவிருந்துகளுஞ்செய்து ஏழைமிஸ்கீன்களுக்கும் அன்னதானமும் சொர்ணதானமும் பண்ணிட்டு இவ்விதமாக சிலநாள் அநேக திரவியங்கள் செலவுபண்ணினார்ஒருபெரிய பந்தல்போட்டுசிங்காரித்துஅதில்அநேக குளோப்புகளும் லஸ்தர்களும் வால்ஷேட்டுகளும் நிரப்பி வெளிச்சம்போட்டு வழிகள்தோறும் கம்பங்கள் நட்டு வேண்டிய லாந்தர்கள் கட்டி கணக்கில்லாத பாணவேடிக்கைகளும் செய்தார்கள் தங்களுடைய மஹாலில்விதவிதமான விரிப்புகள்விரித்து அநேகமேளதாளங்கள் ராகங்கள் ஆடல்பாடல்செய்து மாப்பிள்ளை யிருக்குமிடந் தொடுத்துதன்னுடைய மஹாலுவரையில் ஒரு பெரிய பந்தல் போட்டு அதினுள்ளாக ஊர்கோலம் போக அலங்கரித்து வேண்டிய வினோதமான சிங்காரஞ்செய்து பட்டுசித்தனப்பாய்கள்போட்டு பந்தலுக்குள்ளாகவழிமுழுதும்பூத்தெளித்தார்கள் ஈரான்இஸ்தம்போல்அத்தர்களையள்ளித்தெளித்தார்கள்வாத்தியங்கள்வெளியில்நவுபத்துகாருக்கள்வைத்தார்கள் அநேகவிதமான திவட்டிகள்மத்தாப்புகள் அதிக பிரகாசமாக வெளிச்சங்களும்வேண்டியசவார்கள் காலாள்களும் பலபல விருதுகளுடனே சிங்காரஞ்செய்தார்கள்முனீர்ஷாமி பாத்துஷாவின்குமாரனுக்குவேண்டிய சிங்காரஞ்செய்து மாப்பிள்ளைகோலமாக குதிரைக்கும் அநேகவிதமான சிங்காரஞ்செய்து அதின்மேலே மாப்பிள்ளைசவாராகி ஊர்கோலம் போனவிதத்தை இன்னவிதமென்றும் நாவினால்சொல்லமுடியாதுகலமினால்எழுதக்கூடாமையாயிருக்கின்றது அவ்விதமானகோலமாகப்பெண்வீட்டுக்குவந்துசேர்ந்தார் உடனே மாப்பிள்ளையைகீழேயிறக்கி கையைப்பிடித்துக்கொண்டுசிம்மாசனத்தின்பேரில் கொண்டுபோய் உட்க்காரவைத்தார்கள் அநேகம்பெண்கள் ஹசன்பானோவைச் சிங்காரித்து சம்பங்கி யெண்ணெய்கொண்டு தட்வி மயிரைச்சீவி ஒவ்வொருமயிருக்கும் ஒவ்வொருபூவிதமும்பொன்னிதழும் பூட்டி யலங்கரித்தார்கள் மாதாபு சார்சிபி சரிகைவேலைசெய்த உடுப்புகளால் சிங்காரித்து தலைதொடுத்து கால்வரையில் விலைபெற்ற நகைகளால் ஜோடித்திருந்தார்கள் அவ்விடத்திலிருக்கிறமஜாலிஸ்லின்றசபை இன்னவிதமென்றுசொல்லக்கூடாது ஆடல் பாடல் மேளதாளம்பறைகொட்டுவாத்தியங்களும் முபபக்கிரண்டாகங்களுமாக அநேக வேடிக்கைகள் நடக்கிறது அப்போது ஹாத்திமானவர் மாப்பிள்ளையினருகில்போய் மஸனத்தன்றதில் மிகுந்தசந்தோஷத்துடனே உட்கார்ந்தார் அப்போது (காஜியானவர்) வந்த உட

னே கொத்பாவோதி விக்ராழுடிந்தபின்பு பாத்திஹாவோதி அவ்விட
த்திலுள்ள அனைவர்களும் ஆமீனும்மென்று சொன்னபின்பு கற்கண்டு
கொடுத்தார்கள் நான்குபக்கங்களிலும் தட்டு தட்டாக வெறிந்தார்கள் பின்பு
எல்லபேர்களுக்கும் தாம்பூலம் பூவுகளின் மாலைகளும் போட்டு பன்னீர்
கள் தெளித்து அத்தர்களும் பூசினார்கள் முனீர்ஷாமி யெழுந்து எல்
லபேருக்கும் தாஜீமாக ஸலாம்செய்து வணக்கத்துடனே சிறிதுபோ
து மாப்பிள்ளையைவைத்துசென்ற பெண்கள்வந்து பிஸ்மில்லாவென்று
முனீர்ஷாமியைக் கூட்டிக்கொண்டு ஹசன்பானுவென்பவளிருக்கும்
டத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் உட்காரவைத்தார்கள் அப்போ
து ஹசன்பானுவென்பவள் தான் விலைமதிக்காத நவரத்தினங்களிழை
த்த போர்வையுடுத்திக்கொண்டு திரேகங்கொள்ளாத விதவிதமான
மதிப்புக் கடங்காத நவரத்தினங்களின் நகைகளைப் பூண்டுக்கொ
ண்டு அத்தர்களில் முழுகி பூவுகளால் நிரப்பிக்கொண்டு தன்னை
மிகுதமாக சிங்காரித்துக்கொண்டு இருந்ததை மாப்பிள்ளையாகிய
முனீர்ஷாமி பாத்துஷாவின் குமாரன் கண்ணால் அழகையும் சவுந்
தரியத்தையும் பார்த்தவுடனே தன்னை மறந்து மயங்கி சோபப்பட்டு கீழே
சாய்ந்துவிட்டார் அப்போது தோழிப்பெண்களெல்லோரும் பயந்து
திடுக்கிட்டெழுந்து இதென்னகாரணமென்று ஓடி அவருக்குள்போய்
பன்னீர்களைக்கொண்டுவந்து திரேகமெங்கும் தெளிக்கசிலநேரஞ்செ
ன்று உஷாராகி அறிவாகாரம்வந்து ஆண்டவனை மிகுதமாகப்போற்
றிவாழ்த்தி இரண்டு கையேந்தி ஷுக்குறுன தொழுதுகொண்டு ஹாத்
திமுடைய வல்லமையும் இம்மத்தையும் தனக்காகவேண்டி சொல்மா
ருதல் நடந்த சங்கதிகளை யெண்ணி புகழ்ந்து போற்றினார் பின்பு அவர்
கள் மற்றசடங்கு சாஸ்திரங்களும் செய்து மிகுந்த சந்தோஷத்துடனே
அவ்விடமிருந்து பெண்ணை மடியின் தூக்கி பல்லக்கிலுள்ளே கொண்
டுபோய் வைத்து பர்தாமூடி தானும் குதிரைசவாரியாகி அனேகவிரு
துகளுடனே சகலமேளதாளங்கள் தகுமவுத்துடன் ஆடல்பாடல்
களுடனும் அனேகவிதமான கோலங்களுடனே தானிருக்கும் மஹாலு
க்கு பெண்ணைக்கொண்டுவந்து சேர்த்தார் பெண்ணும் மாப்பிள்ளையும்
வந்தவுடனே அவ்விடத்தில் செய்யவேண்டிய திஷ்டிபரிகாரஞ்செய்து
பெண்ணையும் மாப்பிள்ளையும் ஓரிடம்சேர்த்துவைத்தார்கள்.

அந்தமாப்பிள்ளையாகிய முனீர்ஷாமி மஹாலைவிட்டு (௮) நாள்வரையிலு
ம் வெளியே புறப்படவில்லை இதுந்தகாலஞ் ஹாத்திமை பார்த்து அவருடை



ய காலில் விழுந்தெழுந்தவுடனே அவரை மார்போடணைத்து முப்பாரக்கு
பாதிகொடுத்து தான் ஊருக்குப்போக உத்தரவுகேட்க முனீர்ஷாமி
அவரை யின்னம் நாலுநாள் வரையிலுமிருந்துபோகலாமென்று சொல்
லிவேண்டிய விருந்துகள் ஹசன்பானுவைச் சேர்ந்த ஜனங்களுக்கும் மெத்
தபெரியபெரிய மனிதர்களுக்கும் ஏழையெளியோர்களுக்கும் மனப்பூரிப்
பான சியாமத்தான சமையல்கள் செய்து மனங்கொண்டவரையிலும் சாப்
பிட்டு தாம்பூலம்புஷ்பம் சந்தனங்கள் கொடுத்தனுப்பியபின்பு ஹாத்
திமானவர் முனீர்ஷாமியைப்பார்த்து ஓ என்பிறவியே இப்போது நா
ன்போக உத்தரவுகொடுக்கவேண்டுமென்று கேழ்க்க முனீர்ஷாமியெ
ன்பவர் அச்சொல்லைக்கேட்டவுடனே மனவருத்தமடைந்தார் ஹாத்தி
மானவர் இனி உனக்கென்ன குறைவிருக்கின்றது உன்மனம்போல்
ஆண்டவன் கிருபைசெய்தானானாலும் என் பெண்சாதிதாய்தகப்பனிட
மாகப்போகவேண்டும் இனி நான் தங்கக்கூடாதென்று சொன்னவு
டனே முனீர்ஷாமி யாதொருதடங்கலில்லாமல் உத்தரவுசெய்தார்
ஹசன்பானுவுக்குதெரியப்படுத்த அவளும் மிகுதமாகப்போற்றிவாழ்த்தி
இசவார்களும் காலாள்களுமாகவேண்டிய சிறப்புசெய்து உத்தரவு
கொடுக்க ஹாத்திமானவர் மிகுந்த சந்தோஷத்துடனே எமன்தேச
த்தைநோக்கி நடந்து சிலநாளைக்குப் பின்பு பட்டணத்தினருகாமையி
ல் போனவுடனே (தை) பாத்துஷாவுக்கு தெரியவந்து தன்னுடைய ம
ந்திரிபிரதானியுடன் படைகளையும்கூட்டியனுப்ப அவர்கள் போய்மிகுந்
த வணக்கமாகவும் அதிக பெருமையாகவும் ஹாத்திமானவரையழைத்
துக்கொண்டுவந்து பாத்துஷாவின் சமுகத்தில் கொண்டு போய்விட
ஹாத்திமானவர் தகப்பனார் காலில்விழுந்தார் உடனேகையைப்பிடித்
து தூக்கி மார்போடணைத்து நெற்றியைமுத்தமிட்டார் பின்பு அந்
தமனைக்குள்ளே போய் தாயைக்கண்டு காலில்விழுந்து தஸ்லீமாத்து
செய்பதாய் தலையிலிருந்துகால்வரையில் தன்கையால் தழுவி தன்
தலையில் இருகைகளையும் வைத்து நெட்டி முறித்து மகனைப்புகழ்ந்
து வாழ்த்தி மார்போடணைத்து முத்திகொடுக்கும் குழந்தாய் பின்பு ஹா
த்திமானவர் தாயாருக்கு தஸ்லீம்செய்துவிட்டு மஹாலுக்குள்ளே போ
னார் உடனே அவ்விடத்திலுள்ள ஆண் பெண்கள் பந்துகளெல்லோ
ரும் ஹாத்திமைகண்டவுடன் அனேகவிதமாகப் போற்றிவாழ்த்தினார்
கள் பின்பு அனேகவிதமாக சந்தோஷங்கொண்டாடி ஆண்டவனைப்
புகழ்ந்தார்கள் பட்டணங்கள்தோறும் வீட்டுக்கு வீடு கலியாணக்கோ
லமாக அனேகவிதமான மேளதாளங்களுடனே [illegible]

க்கமாகயிருக்கையில் பாத்துஷாவானவர் பட்டணத்தி லுள்ளவி
யோர் பெரியோர்களுக்கு தகுந்தபடி யாதொரு குறைவில்லாம
லுன்காப்புகள்சரிகைகள்விதவிதமானஉடுப்புகளும் அனேகஇரத்தின
நகைகளுமதிரவியங்களும் இனும்கொடுத்து ஏழைகளை சீமானுக்கி
னூர்பின்புஹாத்திமானவரை (மலிக்காஜரீன்போஷ்)கூடகலியாணமுடி
த்தார்பின்புஎல்லோரும்ஆண்டவனிடமாக துவாசெய்துதங்கள்தங்க
ள் இஷ்டம்போல்சந்தோஷத்தை யடைந்திருந்தார்கள்தேசங்களெல்
லாம்செழித்து சந்தோஷத்தை யடைந்து சீமான்களும் ஏழை யெளி
யோர்கள் சந்தோஷத்தையடைந்து பெருமைப்பட விருந்தார்கள் அ
ப்போது பாத்துஷாவானவர் சிம்மாசனத்தில்போயிருந்துக்கொண்டு
மந்திரிபிரதானிமற்றுமுள்ளபெரியமனிதர்களைப்பார்த்து சொல்லுகி
றார் இந்தலோகத்திலே மனிதர்களுண்டாஅன்னியர்க்காகவேண்டித
ன்னுடையஇன்பசுகத்தையெல்லாமிழந்து அவர்களுக்காகவேண்டிய
வேலைக்குதான்படாத வருத்தமும் துன்பமுமெடுத்துக்கொண்டு அ
னேக நாளாக காடுவனாந்திரத்தில் திரிந்து தன்னுடையஉடலையும் உ
யிரையும் பெரிதென்றெண்ணுமல் திரிந்துவந்தவர்யாராவது உண்டா
பெரியோர்களால்கேள்விப்பட்டவர்களுண்டாஇப்பேர்ப்பட்டபேரும்
கீர்த்தியும்லோகமழிகிறவரையில்நிலைநிற்கப்படும் இவ்விதமாகசிறிது
நல்மொழிகளைபாத்துஷாவானவர்மந்திரிபிரதானிகளுக்குசொல்லி அ
ந்தசிம்மாசனத்தில்தன்பிள்ளைஹாத்திமுக்குபட்டாபிஷேகஞ்செய்து
வைத்துவிட்டுதான்ஆண்டவனைவணங்கிக்கொண்டுஒரு அறையிலிருந்
துவிட்டார்முன்றல்ஹாத்திமானவர்தன்தேசத்தைவிட்டு முனீர்ஷா
மிக்காகவேண்டிசகலசீமைகள் தோறும்திரிந்து-ம-வருஷம் -எ- மாத
மும்-கூ-நாளில்ஹாத்திமானவருடைய(எ-சபர்) முடிவாகிவிட்டுமு
னீர்ஷாமிதன்னுடையயெண்ணம்போல்நிறைவேறிக்கொண்டார் இ
ந்தலோகத்தில்ஹாத்திமானவரும்முனீர்ஷாமிஹசன்பானுஇவர்களி
ருந்தார்களப்போதிருந்தவர்களாராவது இப்போதிருக்கின்றார்களாகட
சியில் அதுவுமிதுவும்ஒன்றுமில்லாமலிப்போதிருந்ததுஹாத்திமுடை
யசரித்திரந்தான்சொல்லவும்கேட்கவும்நிலையாகயிருக்கின்றதுபாருங்க
ள் இவ்வுலகத்திலுள்ள நற்குணமும்கல்வியும் அயிஸ்வரியமுள்ளவர்க
ளோதிரேகமும் அயிஸ்வரியமும் ஆயுசுநிலையுள்ளதா பொய்யானலோ
கத்தை மெய்யென்று அவா கபுல்யென்ற ஆசையால் தன்மனம் கொ
ண்டதுபோல்இவ்வுலகையாண்டிருந்திறந்துபோனபாத்துஷாக்களும்
ராஜாக்களும்சீமான்களும்இவ்வண்ணமென்றுமதிக்காதவர்கள் அவர்கள்



தில் ஏதாவது கூட கொண்டுபோனர்களா யாராவதுபா
ர்த்தது உண்டா கேள்விப்பட்டதுண்டாஇல்லையே அவர்களோடுபோகி
ன்றது தாங்கள் தாங்கள் செய்த நன்மைதுன்மைதவிரவேறில்லைஆத
லால் கல்விசாலிக ளறியவேண்டியது தங்களுடையதிரேகத்தில்உயிரு
ள்ளபோதே தங்கள் தங்கள் கையால்சகாவத்தென்னுந்தருமங்களாகிய
அன்னதானம் சொர்ணதானம் பரோபகாரம்சத்திரம்சாவடிகுளங்கள்
கிணறுகள்வெட்டிவைப்பதும்அவனிறந்துமிறக்காதவன்போல்இவ்வு
லகமுள்ளவரையிலும்ஹாத்திமுடையகீர்த்தியைப்போல்விளங்கிவரு
ம்யாதொன்றும்செய்யாமல்தாங்கள்தேடியபொருள்களைவெகுசாக்கிர
தையாக விர்த்தி செய்து பத்திரப்படுத்தி வைத்தால் அப்பொருளை
தன்வசப்படுத்திக் கொண்டு பின்னும் இவ்வுலகில் வந்திருப்பவர்கள்
போல்என்றுமின்றவர்களுடைய புத்தியும்அறிவாகாரமும் எப்பேர்
ப்பட்டது இன்னம் தாங்கள் உயிரோடிருக்கும்போதில்தங்கள்கையா
லும்மனதாலும்உண்மையாகக்கொடுக்கின்றதிருதம்மடியான துலக்கூ
ரூபாய்க்கீடாகவிருக்கும் அவனிறந்துபோனதின்பின் அவனுக்காகசி
லவுசெய்கின்ற கைகூமானது தம்பிடிக்குசரியானதல்லவென்று நம்மு
டைய தீன்மார்க்கத்தில் சொல்லிவருகின்றது ஆகையால் நீங்கள் நல்
வழியாகியசுவர்க்கத்தைஇருலோகத்திலும் பெறவேண்டுமாகில்தாங்க
ளிருக்கும்போதே செய்கின்றவைபானதருமமானது அதிகஎத்தமான
தாகவும்நன்மையாகவுமிருக்கும் ஆகையால்இம்மொழிகளையும்ஹாத்தி
முடையசரித்திரவிர்லாத்தையும் நன்றாய்யுணர்ந்துதங்கள்புத்தியைத்தி
றப்படுத்தி நல்வழி பெறும்படியாகவும் ஏழைகளிலு மேழையாகிய

## தஞ்சாவூர்அக்கீம்முஹம்மதுஇஸ்மாயீல்

இந்த ஹாத்திமுடைய சரித்திரமான இந்தியாஷையை தமிழ்ப்ப
டுத்தி யிருப்பதால் இதை இன்பங்கொண்டு படிப்பவர்களும் அதைக்
கேட்பவர்களும் கிருபைசெய்து இந்த ஏழையின்பேரில் சுகசவுக்கி
யத்துக்கு துவாசெய்யுங்கள் அவர்கள் பேரில் ஆண்டவன் கிருபை
செய்வாருகவும்.

ஆமீன் ஆமீன் யாரப்பில் ஆலமீன்

அராயஸ்மஹறமில் என்றும்

## ஹாத்திம்தையுடையகிஸ்ஸா

முற்றுப்பெற்றது.

# அறிவிப்பு.

சகலரு மறியும்பொருட்டு தெரிவிப்ப தியாதெனில், தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டிருக்கின்ற இந்த ஹாத்திமுடைய சரித்திரத்தை ஆந்திர பாஷையாகிய தெலுங்குபாஷையில் வல்லவர்களாகிய சிலபண்டிதர்களைக்கொண்டு மேற்படி பாஷையில் மொழிபெயர்த்து வருவதால் அதை விரைவில் அச்சிடப்படும் ஆகையால் அவ்விரண்டு பாஷையிலுமுள்ள சரித்திரத்தை வேறுமொழியால் சொற்களைப்பிரட்டி மாறுபாடாக வித்தியாசப் படுத்தி அச்சிடுவார்களானால் அச்சிட்டவர்களும் அச்சுக்கூடத்தலைவர்களும் சட்டப்படி இதனடியிற் கண்டிருக்கின்றவருடைய நஷ்டத்துக்கேதுவாவார்க ளென்றறியவும்.

இங்ஙனம்

ஹக்கீம்

இஸ்மாயில்சாகிபு.